அறிஞர் அண்ணாவின் கட்டுரைகள்

தொகுதி ஒன்று

ஏந்தல் ஜீயும் நமக்கு வேண்டாம்

எந்த ‘ஜீ’யும் நமக்கு வேண்டாம்

அறிஞர் அண்ணாவின் கட்டுரைகள்

தொகுதி ஒன்று

பொருளடக்கம்

1. பொங்குக புதுமை!
2. நமது செல்வம்
3. இலட்சார்ச்சனை!
4. புத்தர் புன்னகை
5. கிட்கிந்தையில் கிரிப்ஸ்
6. "ஹிந்துஸ்தான் ஹமாரா!"
7. இந்து இட்லரிசம்!
8. ஆளுக்கொரு துப்பாக்கி!
9. அந்தோ நெஞ்சு வேகிறது!
10. புன் சிரிப்பு!
11. வந்தேனே! நானே!!
12. கனவில் கண்ட கன்னிகை!
13. எனது ஆசிரியரை இழந்தேன்!
14. சங்கராச்சாரி பதவி தற்கொலை!
15. தீட்சிதர் வீட்டில்...!
16. தேன்சுரக்கப் பேசி..!
17. காந்திஸ்தான் மர்கயா!
18. நச்சுப் பொய்கை
19. அவர் அவ்வளவு முட்டாளல்ல!
20. பெரியார் - ஆச்சாரியார் சந்திப்பு!
21. ஆண்டவனை அழைக்கிறார்!
22. ஐயன் சிங்காரங்களைப் பாரும்!
23. எதிரொலி
24. லண்டனில் லெனின்
25. தூக்குவீர் கத்தியை!
26. இஃதன்றோ தோழமை!
27. மணி மறைந்தார்
28. பாகிஸ்தான்! 24 - ஆண்டுகளுக்கு முன்பு!!
29. தேனுடன் வேம்பு!
30. எந்த 'ஜீ'யும் நமக்கு வேண்டாம்

31. கடல் கடக்கும் கண்கள்
32. இரண்டு மூளைகள்!
33. சீறு சில்லறைகள்
34. கேய்ரோவில் கழுகு!
35. பிராயச்சித்தம்
36. ஆறுமுகமும் அழுகுரலும்
37. பலி பீடம்!
38. ஆசிரியர் கடிதம்
39. கூண்டிலிருந்து வெளியேவாருங்கள்!
40. அந்தராத்மாவே அவருக்குக் கூறு!
41. ஆங்கிலர் மீது பாயுமுன் ஆரியரே இதை அறிமின்! பெரியார் படை திரட்டுவார்
42. கண்ணன் காட்டிய வழி!
43. இருவீரர் - ஒருதாசர்!
44. முத்தமிழ் கற்றோரே!
45. அச்சு முறிந்த வண்டி!
46. வார்தா முனிவர் யாகம் செய்தால்...!
47. மானங்கெட்டது!
48. ஊரார் உரையாடல்
49. புலியூர் புகுவதா!
50. இஞ்சிபத்தனே மேல்!
51. 24 மணி நேரத்தில் சுயராச்யம்!
52. 1942-ல் மாஸ்கோ!
53. குளிர்ந்த காற்று!
54. ஐந்து அரசுகள்

பொங்குக புதுமை!

ஞாயிறன்று பொங்கல்! அதனைத் தமிழர் திருநாளெனக் கொண்டு போற்றி வாழுபவர். தமிழரெல்லோருக்கும் நாம் பொங்கல் வாழ்த்து அனுப்பக் கடமைப்பட்டுள்ளோம். அனுப்புகிறோம் அன்புடன். தமிழர் வாழ்வே, நம் வாழ்வு எனக் கொண்டு பணியாற்றி, தமிழ் வாழத் தமிழர் வாழ்வர், தமிழர் வாழத் தமிழ்நாடு தழைக்கும் எனக்கூறி அதற்கெனப் பாடுபடும் நாம் தமிழரின் திருநாளன்று நமது அன்பு மொழியைத் தமிழர் இல்லந்தோறும் அனுப்பித் தமிழர் உள்ளமெல்லாம் செல்லச் செய்ய அவாவுகிறோம்.

தமிழரின் களிப்பைக் கண்ணாரக் கண்டால், வேண்டிய காட்சியைக் கண்டு தீர்ந்துவிட்டது என்று உள்ளூர எண்ணும் நாம், இவ்வாண்டுப் பொங்கற் புதுநாளன்று பொன், மணி தர முன்வரவில்லை! தமிழர் அதனை நாடார்; தேடார்; பிறர் கைநோக்கி நிற்கார்; ஆனால், நாம் நமது அன்பையே பொங்கல் வாழ்த்தாகத் தருகிறோம்.

சென்ற ஆண்டும் பொங்கல் வந்தது. இவ்வாண்டு வருவது போன்றே! ஆண்டுதோறுந்தான் பொங்கல் வந்து போகிறது. அந்நாள் புனலில் குளித்து, புத்தாடை உடுத்தி, பூரித்த உள்ளத்

துடன், இல்லந்தோறும் இன்பத் தமிழரோடு, தமிழர் இருத்தலே முறை.

ஆனால், சென்ற ஆண்டு பொங்கலின்போது இன்பமா இருந்தது? இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டதற்காகக் காளைகளும், காரிகையரும் கடுஞ்சிறையில் கஞ்சியும் கூழும் உண்டு, கல் தரையில் படுத்துருண்டு, காய்ச்சலைத் தோழமை கொண்டு, கல் உடைத்து, கட்டைவெட்டி, நீர் மொண்டு நிலம் பெருக்கி, நிந்தை கேட்டுச் சிந்தை நொந்து வாழ்ந்தனர். அவர்கள் உள்ளம் உறுதிதான். ஆனால், திரேகம் அப்படியல்லவே! அவர்கள் பெற்றோரும், ‘பெறற்கரிய பேறு பெற்றான் எம் மகவு’ என்றுதான் உள்ளத்தில் கருதினர். ஆனால், தம்மனையில் பொங்கி,

பொங்கற் புதுநாளன்று இருக்கவேண்டிய சிங்கமனையார், தமிழரைப் பங்கப் படுத்துவதையே தமது பணியெனக் கொண்டு வாழ்ந்த ஆட்சியினரின் - படுத்துவதையே தமது பணியெனக் கொண்டு வாழ்ந்த ஆட்சியினரின் கொடுஞ்செயலால், சிறைப்பட்டு, சோர்ந்து இருப்பதை எண்ணி, வாடினர்.

எத்தனை எத்தனை பிரிவுகள்! எங்கெங்கு வாட்டம்! இன்று எண்ணினாலும் ஏக்கமே வரும்.

அந்த ஆண்டு போயிற்று! அந்தப் பொங்கல் போய்விட்டது. இவ்வாண்டுப் பொங்கலில், இல்லம் தோறும் இன்பம் இருக்கவே மார்க்கம் கிடைத்தது.

ஆனால் இன்பம், பூரணமானதா? இல்லை! தமிழரின் இல்லங்களில், தமிழ் வாழ்வு பொங்குமா? இல்லை! தமிழ்நாட்டில் தமிழர் தழைக்கவா மார்க்கமிருக்கிறது! இல்லை! தமிழ்நாட்டில் தமிழர் வாழவா வழி பல இருக்கின்றன? இல்லை! இல்லை! ஆட்சி தமிழரிடமா? காணோம்! தமிழ்நாடு தமிழருக்கா? இல்லை! இப்போதுதான் அந்த மூலமந்திர முழக்கம் கிளம்பி இருக்கிறது. தமிழ்நாட்டில் இனி சாந்தி, சமாதானம், அமைதி, மனத்திருப்தி ஏற்படக் கூடிய விதத்திலே அரசியல் நடப்பு உள்ளதா? காணோம் அதுவும்!

எனவே, பூரணமான இன்பத்துக்கும் இடமில்லை இவ்வாண்டு. ஆனால், சென்ற ஆண்டு சிந்தை நொந்து வாழ்ந்ததைப் போல இருக்க வேண்டியதுமில்லை.

ஆனால், சென்ற ஆண்டுக்கு இவ்வாண்டு தமிழர் முன்னேற்றம் அடைந்துள்ளார்கள் என்பதிலே சந்தேகமில்லை.

எங்கு நோக்கினும் தமிழர் வாழ்க! தமிழ் வெல்க! தமிழ்நாடு தமிழருக்கே! என்ற பேரொலி கேட்கிறோம்.

யாரைக் கேட்பினும் —“ஆம்! நான் தமிழனே!” எனப் புன்சிரிப்புடன் மார்தட்டிக் கொண்டு கூறக் கேட்கிறோம். நாள்தோ-றும் ஊர்தோறும் தமிழர் கூட்டங்கள், தமிழர் பரணி, தமிழர் முழக்கம் நடந்தபடி உள்ளன. தமிழரின் தலைவர் தமிழர் உள்ளமெல்லாம்

கொள்ளை கொண்டுவிட்டார். தமிழர் தம்மை உணரத் தொடங்கிவிட்டனர். தம்மவரைத் தழுவத் தொடங்கி விட்டனர். தம் நாட்டில் தமது மொழியைக் காக்கத் தொடங்கிவிட்டனர். தம் நாட்டில் பிறனுக்கு ஆதிக்கமேன் எனக் கேட்கத் துணிந்து விட்டனர். தம் நாட்டில் தாமே வாழவேண்டும். அரசு தமதே ஆட்சி தமதே எனக் கூற உறுதி கொண்டு விட்டனர். தமிழர் விடுதலைப் போரிட முனைந்து விட்டனர்.

எனவே, இவ்வாண்டு பொங்கலன்று வீடுதோறும் செந்நெல் மணி வாடையுடன் செந்தமிழின் மணமும் சேர்ந்து கமழும் என நம்புகிறோம்.

அந்த நம்பிக்கையே நமது இன்பத்துக்குக் காரணம்.

பொங்கல் புது நாளின் கருத்து மிக அழகியது. பொருள் ததும்புவது.

ஆரியர் கொண்டாடும் ஆபாசப் பண்டிகைபோல எதிரியை எப்படியோ வதைத்து விட்டதற்காகக் கொண்டாடும் நாளன்று! ஆரியர் பண்டிகை, வெறியாட்டம்! அவை சூதும் சூழ்ச்சியும் வீரத்தை வாட்டி வதைத்ததை விளக்கும் பண்டிகைகள்; பொங்கற் புதுநாள் அத்தகைமைத்தன்று.

பாடுபட்டால் பயன் உண்டு! உழைத்தால் வாழ்வுண்டு! என்ற மூலக் கொள்கைக்கு ஏற்ற நாள் அது.

காட்டைத் திருத்தி, நிலமாக்கி, மேட்டை அகற்றிக் குளமாக்கி, கரடுமுரடைப் போக்கி வாய்க்கால்களாக்கி, வயல்கள் பலவும் அமைத்து, வரப்புகள் தொகுத்து, உழுது நீர்பாய்ச்சி, களை எடுத்துக் காப்பாற்றி, முற்றிய கதிரை அறுத்து வந்து முற்றத்தில் கொட்டி, அளந்து எடுத்து ஆனந்தத்துக்கு அடிகோலும் நாளாகும் அந்நாள்.

உழைப்பின் பயன் இதுவென உணர்ந்து, மகிழ்ச்சி பொங்குகிறது என்பதை மனத்தில் இருத்த வேண்டி, பாற்பொங்கலிட்டு, “பொங்கலோ! பொங்கல்!” எனத் தீந்தமிழ் மொழி புகன்று, தித்திக்கும் பண்டமுண்டு திருநாள் கொண்டாடும் நாளாகும்.

அந்நாள், தமிழர் தமது உள்ளத்தில் ஒரு விஷயத்தை நினைவிலிறுத்துவர் என நம்புகிறோம்.

திருந்தாத வயலில் உழவு இல்லை. நம்நாடு திருந்தாத வயலாகவே இன்னமும் உள்ளது. எனவேதான் இங்குத் தன்னாட்சி முளைக்கவில்லை.

வரம்பு கட்டாவிடில் வயலுக்கு வயல் வம்பு வளரும். அஃதே போலத்தான், தமிழர் தம்நாட்டின் வரம்பு கட்டத் தவறி, அதாவது தமிழ்மொழி, கலை, மார்க்கம் ஆகியவை ஆரியத்தால் சிதைக்கப் படாதிருக்க வேண்டித் தன்மானம் எனும் வரம்பு கட்டத் தவறியதால் இன்று நமது நாடு பிறருக்கே சந்தையாகிவிட்டது.

உழுது நீர்ப்பாய்ச்சிக் களை எடுக்கா முன்னம், பச்சைப் பயிர் பார்க்க முடியுமா? செந்நெல் தேட இயலுமா? நாம் இங்கே நம் நாட்டுக் களைகளைப் போக்கினோமா! இல்லையே! அதோ தீண்டாமை எனும் கோரமான களை இருக்கிறது. பார்ப்பனியம் எனும் பண்டைப் பயங்கரப் பாசி அடிமுதல் நுனிவரை படர்ந்திருக்கிறது. பித்தலாட்டக் கொள்கைகள் எவ்வளவு! பாமரர் ஏய்க்கப்படுவது எத்துணை. குருட்டுக் கொள்கையும், முரட்டுப் பிடியும், வரட்டு வீரமும், கிழட்டுப் போக்கும், பகட்டுப் பேச்சும், இங்கேயுள்ள களைகள்! இவை போக்கப்படா முன்னம், பயிர் எது? இவற்றைக் களைவதன்றோ, பண்ணையில் அக்கரை கொண்டோரின் கடன்.

எனவே, இவ்வாண்டு பொங்கலன்று, தமிழர் உள்ளத்திலே புதுமை பொங்கவேண்டும். தமிழரின் வாழ்வுக்கு எதிரிடையாக உள்ளவை யாவும் மங்கும்படி செய்தல் வேண்டும்.

ஒன்று மங்கிவிட்டது. மறுபிறப்பு எடுக்க எண்ணுகிறது. எனினும், மீண்டும் வரினும், மிக விரைவில் பங்கப்பட்டுப் போகும் என்பதிலே சந்தேகமில்லை.

ஒழிந்து போன காங்கிரஸ் ஆட்சியைத்தான் நாம் குறிப்பிடுகிறோம்.

உழவரையே பெரிதும் ஏய்த்து ஓட்டுப்பெற்ற ஆட்சி உழவர் சார்பில் ஒரு சிறு நலனும் செய்யவில்லை.

வரி எல்லாம் போகும் என்று கூறியவர்கள், வரிபல போட்டு வாட்டினர். நிலவரிவஜா விஷயத்தில் ஏதோதோ கூறினர். ஏதும் செய்ய இயலவில்லை எனக் கூறிவிட்டுப் போயும் விட்டனர். பள்ளிகள் மூடினர். மருத்துவ சௌகரியத்தை மாய்த்தனர். பண்டங்களின் விலை ஏறும்படி விற்பனை வரிபோட்டு ஏழைகளை வாட்டினர். தொழிலாளர் துயரம் பெருகிற்று. வகுப்புக் கலவரம் வளர்ந்தது. தீண்டாதார் துயரம் அதிகரித்தது. அப்பா! அவர்கள் ஆட்சி! “இன்னும் எத்தனை நாள்?” இன்னும் எத்தனை நாள்?” என்று கேட்டபடி இருந்தனர் தமிழர். இன்று இல்லை அவர்கள்! ஒழிந்தது அந்த ஆட்சி! தீர்ந்தது அவர்களின் தர்பார்! நாடு பூராவும், அவர்கள் போனதற்குப் புலம்பவில்லை. பூரித்தது, விடுதலை விழாக் கோண்டாடி, “போனாயா, ஒழிந்தாயா” என்று கூறி விட்டது.

எனவே, தமிழருக்கு ஆபத்தாக வளர்ந்த ஆட்சி மங்கி மடிந்தது.

பொங்கற் புதுநாளன்று, இச்சிந்தனையொன்றே தமிழரின் செந்தேனாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

அம்மட்டோ? அந்நாள், ‘இழந்த இடத்தை’ மீண்டும் பிடிக்க, எவ்வளவு இழிந்த செயலில் இறங்கவும் அவர்கள் இறங்கிவிட்டார்கள் என்பதை எண்ணி, அத்துடன், வந்த பதவியை வேண்டாம் எனக் கூறிய தமிழர் தலைவரின் தீரத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால், தமிழரின் நெஞ்சில் ஏன் துன்பம் பெருகாது எனக் கேட்கிறோம்.

அதோ அந்தக் கும்பல் இன்னமும் அலைந்து திரிகிறது அதிகாரத் துண்டுகளுக்கு. இதோ தமிழர் தலைவர், “எமக்கேன் இது, எமக்கு வேண்டியது தமிழ்நாடு” “தமிழ்நாடு தமிழருக்கே” என முழக்கம் செய்கிறார்.

ஆங்கிலக் கவி ஷேக்ஸ்பியர் கூறியபடி, “அந்தப் படத்தையும் பாருங்கள், இந்தப் படத்தையும் பாருங்கள்” என்று நாம் கூறுகிறோம்.

பொங்கற் புதுநாளன்று தமிழரின் மனக்கண் முன்பு இக்காட்சி தோன்றட்டும்.

தமிழ்நாட்டில் ஒற்றுமை பொங்குகிறது. தமிழரின் எதிரிகளின்

கோட்டையில் புரட்சிச் சங்கமே ஓங்குகிறது.

தமிழர் கட்சியில், மேலும் மேலும் பலர் வந்து அணிவகுப்பில் நான் முன்னே நீ முன்னே என்று சேருகின்றனர். தமிழரின் எதிரிகளில், “போடாபோ, நரிமகனே எட்டிநில் நீ கவிழ்க்கப் பட்டாய்’ என்ற தண்டனைத் தாக்கீதுகள் பொங்கி வழிகின்றன.

காங்கிரஸ் ஆட்சி ஒழிந்ததற்குத் திருநாள் காந்தியார் வாழும் இடத்திலே நடந்தது. தமிழரின் தலைவர் பெரியார் தமிழ்நாட்டைத் தாண்டிச் சென்று, பம்பாய் மாகாணத்தில் தமிழர் இலட்சிய விளக்கம் செய்தார்.

“காங்கிரசிடம் நம்பிக்கை இல்லை, நாம் கூடி முடியாது, நம்பமாட்டோம்” என முஸ்லிம் லீகும், ஆதி திராவிடர்களும் கூறி விட்டனர். தமிழர் தலைவருடன் அளவளாவிப் பேசி, ஒத்துழைப்பதாக உறுதி கூறி, அகில இந்திய முஸ்லிம்லீக் தலைவர் ஜனாப் ஜின்னாவும், ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களின் அண்ணல் டாக்டர் அம்பேத்கரும் வாக்குக் கொடுத்தனர்.

புத்துலக வாழ்வுக்கு முட்டுக் கட்டையாக உள்ள காங்கிரஸ் என்னும் கூட்டத்தின் கொட்டத்தை அடக்க மூவரும் ஒன்று கூடியுள்ளனர்.

எனவே, தமிழருக்கு இனி இன்பம் பொங்க மார்க்கமேற்பட்டு விட்டது.

தமிழர்கள் யாவருக்கும் இனிப் புத்துலக வாழ்வு நிச்சயம். அதற்காகப் போரிட வேண்டும்; பாடுபட வேண்டும். களை எடுக்க வேண்டும். இக்கருத்தையே பெரிதும் உள்ளடக்கிய பொங்கற் புதுநாளன்று தமிழர்கள் உள்ளத்தில் இவ்வெண்ணங்கள் பொங்க வேண்டுமென விரும்புகிறோம்.

உமது இல்லந்தோறும், உள்ளம் தோறும் பொங்குக புதுமை என அன்புடன் வாழ்த்தி, உமது இன்பமே, எமது குறிக்கோள் என்பதை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

வாழ்க தமிழர்!

வாழ்க தமிழ்நாடு!!
புதுமை பொங்குக!!!
தமிழ்நாடு தமிழருக்கே!!!!

(விடுதலை, 13-1-1940 ப.2)

நமது செல்வம்

‘முகிலைக் கிழித்து வெளிக்கிளம்பும் ஒரு முழு மதி’ போலவும் - முள்ளை எதிர்த்து முன் வந்து நாம் நுகர வீசும் மலர் மணம் போலவும் - தகுதி உடையாருக்குத் தடைகள் என்னதான், எவ்வளவுதான், யார்தான், எத்தனை நாட்களுக்கு விதிக்கினும் - அவர்களின் கீர்த்தியை மறைக்க முடியாது; அவர்தம் நிலையைக் குலைத்துவிடவும் இயலாது.

எவ்வளவுதான் நிந்தனையும், பழியும் சுமத்தப்பட்டாலும் - மாற்றார் எவ்வளவுதான் தாக்கினாலும் - தவறான பிரச்சாரம் செய்து வந்தாலும் - நீதிக்கட்சி மணிகளின் ஒளியை மங்க வைக்க முடியாது.

அத்தகைய மணிகளில் ஒன்றுதான் - பெரியார் அவர்களின் பேரன்புக்குப் பாத்திரமான ‘தமிழர் எழுச்சியின் சித்திரம்’ - ‘திராவிட ரத்தினம்’ - சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்கள்.

இலண்டனில் உள்ள (பிரிட்டன் அமைச்சரவையில் இடம் பெற்று இருக்கும்) இந்திய அமைச்சரின் ஆலோசனையாளராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார். 1940 மார்ச்சு 11ஆம் தேதி பதவியை ஏற்றுக்கொண்ட அவர் பணியாற்றத் தொடங்குவார்.

நமது சர். செல்வம் பொறுப்புள்ள பதவிக்கு அழைக்கப்பட்டு இருக்கிறார்; ஆனால், பொறுப்புள்ள நிருவாகம் அவருக்குப் புதிதல்ல.

அவர், “எனக்கு வாதாடத்தான் தெரியுமேயொழிய, நாடாளத் தெரியாது” எனக் கூற வேண்டிய நிலையில் உள்ளவர் அல்லர்;

சர். செல்வம் வாதாடியுள்ளார்! நாம், அவரது பிரபல வழக்கறிஞர் வாழ்வை மட்டுமே குறிப்பிடவில்லை; அவர் தமிழருக்காக வாதாடி வந்ததைத்தான் பெரிதும் குறிப்பிடு

கிறோம்.

அவர் நாடாண்டும் இருக்கிறார்!

நாட்டைத் திறம்படவும் அவர் ஆண்டு இருக்கிறார்!

நாட்டை ஆண்டதுடன், நம்மவர் உயரும்படியான நன்முறையில் ஆண்டுள்ளார்!

தமிழர் செல்வம்

போர்க்குணமும், தமிழர் வாழ்வுக்காகப் பணியாற்றும் திறனும் படைத்த சர். செல்வம் - புதிய களம் சென்று, புது முறையில் போர் புரிந்து, தமிழரின் கீர்த்தியை நிலை நாட்டுவார் என்பதில் தமிழ்நாடு நம்பிக்கை வைக்கிறது: “வாழ்க செல்வம்!” என்று வாயார, மனமார வாழ்த்துகிறது.

தஞ்சையில் சிறந்த வழக்கறிஞராகவும் பிறகு ‘பப்ளிக் பிராசிகூட்டர்’ ஆகவும் இருந்து புகழ்பெற்று, பொதுமக்கள் தொண்டில் புகுந்து, தஞ்சை நகரசபை, ஜில்லா போர்டு, கல்விக் கழகம் ஆகியவற்றில் தலைமை பூண்டு நடத்தி - இலண்டனில் முன்னர் நடைபெற்ற வட்ட மேசை மாநாட்டில் பிரதிநிதியாகச் சென்று நம்மவர் சார்பாகப் பேசி, சென்னை அரசிலே நிருவாக அதிகாரியாக வீற்றிருந்து - சர். செல்வம் பலப்பல துறைகளில் பணியாற்றியுள்ளார்.

எனவே, பொறுப்பும் புகழும் பொருந்திய பதவி அவருக்கு வழங்கப்பட்டு, அவர் இங்கிலாந்து சீமை சென்று, இந்திய அமைச்சரின் ஆலோசனையாளராக வீற்றிருக்கப் போவது கேட்டு நாம் மிகமிக மகிழ்கிறோம்.

சர். பன்னீர்செல்வம் - தமிழரின் வெல்வம். அவருக்குக் கிடைத்துள்ள பதவி, தமிழருக்கு அளிக்கப்பட்ட பதவி; அவர் உயர்வு. தமிழர் உயர்வு; அவர் மகிழ்வு, தமிழர் மகிழ்வு!
எனவே, அவரை வாழ்த்துகிறோம் எனில், அது தமிழ் நாட்டவரை வாழ்த்துகிறோம் என்று பொருள்.

சர். செல்வம் சாய்வு நாற்காலியில் படுத்துறங்கிக்கொண்டு இருந்தவர் அல்லர்; போரில் பங்கெடுத்துக் கொண்டிருந்தவர்!

சர். செல்வம் வயது முதிர்ந்து வேலை ஏதும் செய்ய இயலாது எனக் கருதப்படும், வேலையை விட்டு விலகியவர் அல்லர்; வேலை பல புரியும் விறுவிறுப்பான பருவத்தில் உள்ளவர்!

வானுலகில் வசிக்கும் வாய் வேதாந்தி அல்லர் அவர்; செய்தி ஞானத்துடன் உலக அனுபவம் பெற்றவர்!

‘விடுதலை – நாளிதழ்: 20.1.1940

இலட்சார்ச்சனை!

கேசவாய நம! கோவிந்தாய நம!... ஸ்ரீ வைகுண்டாய நமஹ! ஏன், ஓய் சிங்கு பட்டரே ஆகட்டுமே காரியம் என்று அர்ச்சகர்கள் பேச, பக்தகோடிகள் தரிசனத்துக்கா ஒருவரை ஒருவர் தள்ள, பஜனைக் கோஷ்டிகள் பாட, பட்டுபபுடவைகள் நடமாட, வாலிபக் கண்கள் தாண்டவமாட, ரசமான காட்சி, இன்று ஸ்ரீரங்கத்தில் நடக்கிறது. இந்த வைபவத்தைக் கண்டு, தங்கர், படுக்கைவிட்டு எழுந்திரார். அங்ஙனம் எழுந்திருப்பது சினிமாவில்! வையகத்தில் நடப்பது வேறு!! உண்மையை உரைத்தால் உறுமும பேர்வழிகள், நாம், நிந்தனை செய்வதாகக் கூறுவர். சிந்தனைக்கு விடுகிறோம்.

நம் தேசத்திற்கு இதர தேத்தவர்களால் ஆபத்துக்கள் ஏற்படுமோ என்கிற பீதி உண்டாகியிருக்கிறது. நம் தேசத்திலுள்ள எல்லா ஷேத்திரங்களையும், நம்மையும் எந்த விதமான ஆபத்துக்களும் வர ஒட்டாமல் தடுத்துக் காப்பாற்றும் பொருட்டு, ஸ்ரீரங்கஷேத்திரத்தில் ஸ்ரீரங்கநாதனுக்கு இலட்சார்ச்சனை, மாசி மாதம் 29ந்தேதி ஆரம்பித்து பங்குனி 2ந்தேதி (15.03.42) முடிவடையும்படி நடத்துவதாக ஏற்பாடு செய்யப்படிருக்கிறது என்ற அறிக்கை வெளிவந்தது. அதன்படி இலட்சார்ச்சனை நடக்கிறது.

இந்த இலட்சார்ச்சனை மூலம் சங்கராதராலயத்து ஊழியர்களுக்கும், புரோகிதக் கூட்டத்துக்கும், ரகங்களுக்கும் இலாபந்தான்! ஆனால் நாட்டுக்கு என்ன இலாபம்? ஆபத்தைப் போக்க இதுவா வழி?

ராபர்ட் கிளைவ் வந்தகாலத்திலே, இலட்சார்ச்சனைகள், அபிஷேகங்கள், ஆராதனைகள், நடத்தினோமே, கண்டதென்ன! கிளைவின் கல்லறைமீது இந்தியாவை வென்ற வீரன் என்று பொறிக்கப்பட்டிருக்கிறது! அந்த பிரிட்டிஷ் வல்லரரை இன்று ஜப்பான் சில இடங்களிலே தோற்கடித்தது, அர்ச்சனைகளின் பலனாலா? யாயோகம் செய்தா? அவை ஆத்மார்த்தத் துறையின் பணிகள், பரலோக யாத்திரைக்குப் பிறகு பலன் வேண்டிச் செய்யப்படும் பழைமைகள்!

ரங்கூன் பிடிபட்டதா? சரி! படைகளை, பசீன்

பிரதேசத்துக்கு அனுப்பு

படேவியாவைப் பிடித்தாகிவிட்டதா? பாண்டியாங்கை ஒரு கை பார்க்கட்டும் படைகள்

நியுகினி மீது படைகளை ஏவு! அந்தமானைத் தாக்கு! ஐராவதி நதி தீரத்தை அடக்கு! இது ஜப்பான் செய்து கொண்டிருக்கும் இலட்சார்ச்சனை!

சோடசோபசாரம் சமர்ப்பயாமி! என்று இங்கு இன்றும் கூறிக்கொண்டிருக்கின்றனர். சப்மெரைன், விமானம், தளவாடம் இவைகளை ஜப்பான் தனது சேனைகளுக்கு சமர்ப்பித்தவண்ணம் இருக்கிறது. பொன்னம், பொருளும், நேரமும, நினைப்பும், போருக்குச் செலவிடவேண்டிய இந்தப் பயங்கரமான வேளையிலே, வெண்பொங்கலும், சித்ரான்னமும உண்ண, ஒரு சாக்குக்காக இலட்சார்ச்சனை செய்யுங்கள், ரங்கநாதர் இரட்சிப்பார் என்று புரோகிதக் கூட்டம் கூறி, மக்களின் பணத்தையும் நேரத்தையும் பாழக்குகிறதே, இதை என்னென்பது!

ஐராவதி நதி முகத்துவாரத்தை முற்றுகையிட்டுக் கடாரம் என்று அக்காலத்தில் அழைக்கப்பட்டு வந்த பார்மாவை வென்று, அதைத் தனது சாம்ராச்சியத்தில் ஓர் அங்கமாக்கிக் கொண்ட தமிழ் மன்னர் வாழ்ந்த தமிழகத்தில் நாம் இருக்கிறோம். இந்த வீரச்செயல்பற்றி உள்ள வரலாறுகள், சிவனால் நள்ளிரவில் நந்திக்குக் கூறி நந்தி நாரதருக்குக் கூறி, நாரதர் நரி முக ரிஷிக்குக் கூறி, அவர் அதனை ஏட்டில் எழுதிப் பர்ணசாலையில் வைத்ததை அந்தக் கோத்திரத்தில் அவதரித்த அர்த்தநாருசுர சர்மா புத்தக ரூபமாக வெளியிட்ட புராணத்தில் காணப்படுபவையல்ல! சரித்திரம்! ஆராய்ச்சி! அறிவுடையோர் மறுக்கொணா அக்கால நிகழ்ச்சிகள்.

கி.பி.1013 முதல் 1044 வரை அரசோச்சிய இராஜேந்திர சோலுன் அடைந்த வெற்றிகளைச் சரித ஆராய்ச்சிக்காரர் கூறுவர். அத்தகைய தமிழர், வீடிழந்து வீதியில் திரிகின்றனர், வேற்றூர் சென்றனர், அங்கும் மாற்றான் மருட்ட, காடுமறை கடந்து, எலும்புந் தோலுமாக இங்கு வந்து கொண்டுள்ளனர். நொந்தோம்,

இங்கு வந்தோம் என்று அவர்கள் கூறி முடிக்கா முன்னம் இங்கு வந்தோம் என்று எதிரியின் படைகள் எக்காளமிடும்போல் தோன்றுகிறது. என் செய்வது? எதை எண்ணி விம்முவது? நாட்டிலே ஒற்றுமை காணோமே என்பதை எண்ணியா? நாடாள வந்த ஆங்கிலேயர் தக்கார் தகவிலர் என்பதைத் தேரிந்துகொள்ளாது பேயினரே என்பதை எண்ணியா? சோர்வும் சோகமும், பிணக்கும் தாண்டவமாடுவதை எண்ணியா? எதை எண்ணுவது, எதை மறப்பது? என்ன எண்ணி, மன உறுதி பெறுவது. முல்லைச் சிரப்பால் முப்புரமெரித்தார் முக்கண்ணனால், அவரிருக்க நமக்கென்ன பயம் என்று எண்ணி உறுதி பெறுவதா?

ஜப்பான் பெற்றுவரும் வெற்றிகள், ராணுவத் தலைவர்களையும் ராசதந்திரிகளையும் திணற வைக்கிறது, மக்களைத் தத்தளிக்கச் செய்கிறது. பிரதேசங்கள் பல பிடிப்பட்டனவென்று நாம் மனமுடையவில்லை. பிடிப்பட்டவை மீட்கப்படக்கூடும். ஆனால் நேசநாடுகள் அடைந்த தோல்விகளால், தகுதியான தளங்கள் தகர்ந்துவிட்டனவே அது குறித்தே நாம் கவலைப்படுகிறோம்.

ஜப்பானிய வெடிகுண்டு வீச்சுக்குப் பன்முறை ஆளான மார்ஸ்பீ துறைமுகத்தை நோக்கி ஜப்பானியக் கப்பல் கூட்டம் போகிறேதாம். மெல்போர்ன், சிட்னி ஆகிய இடங்களில் கடுமையாகக் குண்டுவீசிவிட்டு, இரண்டு வராங்களில், ஜப்பான் ஆஸ்திரேலியாவைத் தாக்குமென்ற ரால்ப் ஜஎர்டன் கூறுகிறார். ஒரே சமயத்தில் இந்தியா ஆஸ்திரேலியா, இரண்டையும் தாக்க, ஜப்பானியருக்குப் பலம் இருக்கிறதென்று ஹாரோல்டு காட்டு என்பவர் தெரிவிக்கிறார். சீனப் பிரசார மந்திரியான டாக்டர் வாங் நேசநாடுகள் தளங்கள் பல இழந்துவிட்டன வாகைபால், இனி, மேலபர்மா, கிழக்கிந்தியா, தென் மேற்கு சீனா, ஆஸ்திரேலியா ஆகிய பிரதேசங்கள் அடங்கிய வட்டாரத்தைத் தளமாகக் கொண்டு, எதிரியைத் தாக்கவேண்டுமென்று யோசனை கூறுகிறார்.

பிரிட்டிஷ் படைகள் போரிட்டன இராணுவ இலக்குகளை அழிததன - பிறகு பின் வாங்கி வேறிடம் சென்று அணிவகுத்துள்ளன - என்ற மாமூல் மறைதொழி வேண்டும். உடைந்த உள்ளம், மிகவும் ஆபத்தானது. மக்களின் உள்ளத்தை இனியும் உடைய வைக்காதிருக்கவும், உளறுவாயர்களை

ஊமைகளாக்கவும் வேண்டும். அது, சீன அதிகாரி கூறியபடி, முன்னேறித் தாக்குவதால் தான் முடியும். அதனையும் விரைவினில் செய்தல் வேண்டும்.

மாட்ரிடில் உள்ள ஜப்பானிய ராஜ தந்திரிகள், பசிபிக் போர், ஏப்ரல் மத்திக்குள் முடிந்துவிடுமென்றம் பிறகு ரஷியாவைத் தாக்க நேரம் கிடைக்குமென்றும் கூறினராம். விரைவில், ஜப்பான், ரஷியா மீது பாயும் என்று ஏற்படுகிதன அங்காரா ரேடியோ கூறுகிறது.

மஞ்சூரிய பகுதியில், ஜப்பான், படைகளை ஏற்கனவே குவித்து வைத்திருக்கிறது.

வசந்தகாலம் பிறந்ததும், நாஜிப்படைகள் ஒரு புறமும், ஜப்பான் படைகள் மற்றோர் புறமும் ரஜியாவைத் தாக்கக்கூடும் என்பதைப் பல நிபுணர்கள் எடுத்துக் கூறுகின்றனர்.

மலாய், ஜாவா, சிங்கப்பூர், இரங்கூன் ஆகியவை இனி எதிரிக்குத் தளங்களாகும். இவ்விடங்களில் இருந்துகொண்டு, ஜப்பான், இந்தியா, ஆஸ்திரேலியா ஆகிய இரு இடங்களில் ஏதாவதொன்த் தாக்க முடியும், இரண்டையும் ஏககாலத்திலும் தாக்க முற்படவுங்கூடும். இலங்கைமீது பாய்ந்து, அங்குள்ள திரிகோணமலையைத் தளமாகக்கொண்டு தமிழகத்தின்மீது தாவக்கூடும்!

பேராசிரியர் புரோடாக்ஸீ, இதுவரை உலகு கண்டறியாத உக்கிரமான போர், வசந்தகாலம் பிறந்ததும், ஆரம்பமாகப் போகிறது என்று கூறுகிறார்.

வசந்தகாலம், வசீகரமான பெயர்! ஆனால் இந்த வசந்தத்தின் போது, தடாகத்தின் அல்லியைத் தொட்டு வண்டு முத்தமிடுவதைக் காண்பதற்கில்லை. எங்கும் இருள்! எப்பக்கத்திலும் வேட்டுச் சத்தம்! எந்த இடத்திலும் இரத்தம்! இந்த வசந்தகாலம், கழுகுக்கும் நரிக்கும் வேட்டைக்காலம் ஆகுமென்று கூறுகின்றனர்.

இந்தப் பயங்கரமான நிலைமையில், இங்கோ, தேரும திருவிழாவும் ஆடலும் பாடலும், விருந்தும் வேட்டையும், கட்சிப் பூசலும் கசடர் ஏசலும், கொச்சைக் கருத்தினரின் குளறலும்,

ஓயக்காணோம்.

இவை நீங்கி, எதிரிவரின், எதிர்த்து நிற்கும் வகையான புதுமுறுக்கு நாட்டு மக்களிடம் தோன்ற வேண்டும். நேரமும் செல்வமும், திரண்டு போர் முனைக்குப் பயன்படும் பிதமான உதவிகள் உருவாகத் திரளும் வகை ஏற்படவேண்டும். இல்லையேல், ஒன்று ஊராள வேண்டுமென்று உரக்கக் கூறுவோரின் குரல் அழு குரலாக மாறுமோ, அன்றி அன்றொரு நாள் என்ற அட்டவணைக்குச் சேருமோ நாமறியோம். உடலுக்குள் கிருமி, கருவிகளை அரித்துக் கொண்டிருக்கையில், உயிர் மங்கிக் கொண்டிருக்கையில், உணராது, உல்லாசமாக உலவிக்கொண்டிருக்கும் நோயாளிகள் மருத்துவரிடம் போகும் வழியிலே மரித்ததுண்டு. நாட்டுக்கு ஆபத்து எவ்வளவு வந்துள்ளது என்பதை உணராமல், இலட்சார்சனை, இரகுராம பஜனை, சுயராச்ய போதனை ஆகியவற்றில் ஈடுபடுபவர்கள் இங்குள்ளவர்கள். நாட்டை வேட்டினின்றும் முதலில் முட்கட்டும, பின்ர், நாடாள நான், நீ என்ற போட்டிக்கு வரட்டும, என்று கூறுவோம். எல்லாம் எமக்கே, எவர்க்கும் மேலோர் யாங்களே என்றுரைத்துக்கொண்டு காங்கிரசார், ஆட்சிப்பீடத்தில் அமரவேண்டி, அரசியல் சூதாட்டமாடுவதைக் கண்டு கவலைப்பட்டோ சலித்தோ, கண்துடைக்கவேண்டுமென்றோ பிரிட்டிஷ்காரர், புதுமுறை வகுக்கப் புகந்தால், குளிக்கப் போனவன் சேறு பூசிக்கொண்ட கதைபோலாகும். ஆகவே, நாட்டிலுள்ள கட்சியினரின் ஏகோபித்த ஆதரவி பெறத்தக்க விதமான அரசியல் மாற்றங்களைச் செய்தலே அறிவுடைமை, அதனைவிடுத்து எவர் மனங்கோணிலென்ன, இரைச்சலிடுவோருக்கு இரண்டொன்று தருவோம் என்ற பிரிட்டிஷ் ஆட்சி எண்ணுமாயின், அது நாட்டிலே கொந்தளிப்பை உண்டாக்கும். நாடு இன்றுள்ள நிலையில் கொந்தளிப்பு கூடாது. யுத்த ஆதரவு முயற்சியை வலுப்படுத்தும் வகையும் அதுவல்ல, ஆகவே சர்ச்சில் கூறுவதுபோல் இங்குவரும் சர்.ஸ்டாபோர்டு கிரிப்ஸ், நாட்டு நிலையை நன்குணர்ந்து நல்லதோர் திட்டம், நாட்டிலுள்ள கட்சிகளின் ஆதரவைப் பெறக்கூடிய முறையில் வழங்கப்படும் என்பதை விளக்கி உரைப்பார் என்று நம்புகிறோம்.

நாட்டுக் இன்று, ஒற்றுமை, ஒற்றுமை என்ற இலட்சார்ச்சனை தவிர வேறொன்றும் தேவையில்லை.

அதனை மக்கள் ஒவ்வொருவரும் செய்தல் வேண்டும், இன்றே செய்தல் வேண்டும். ரங்கார்ச்சனையோ, கிரிப்சார்ச்சனையோ பலிக்காது.

(திராவிடநாடு - 15.03.1942)

புத்தர் புன்னகை

தோழன்:- சித்தார்த்தரே! உமக்கென்ன குறை? நீரோ, கீர்த்தி வாய்ந்த மன்னனின் மகன் - சாம்ராஜ்ய சித்திரயம்; உமக்கு மனோ ரம்மியமான மாளிகை இருகிகிறது; சிங்காரத் தோட்டமிருகிறது; அதோ பாருர் - நீலப் பட்டாடை அணிந்த மயிலாள் பச்சைச் சம்பளிமுது நடனமாடுகிறாள்; குயில் கூவுகிறது; மயிலின் சாயல் - குயிலின் இனிய குரல் - தென்றல் போன்ற குணம் கொண்ட தர்மப் பத்தினியும், செல்வக் குழந்தையும் உமக்கு உள்ளனர்; இவ்வளவும் இருக்க, நீர் ஏன் முவாட்டத்துடன் இருக்கிறீர்? சந்திரனுக்கும் களங்கம் உண்டு - உமக்கு அதுவும் இல்லை; ரோஜாவில் முள் உண்டு - உமது வாழ்க்கை, முன் இல்லாத ரோஜாவாயிற்று; சுருதியுடன் சேர்ந்த சங்கீதம் போன்றுள்ள உமது வாழ்க்கையில் வசீகரம் இருக்கக் காரணமிருக்கிதே தமிர, விசாரத்துக்குக் காரணமில்லையே; அரண்மனை உம்மை அழைக்கிறது; மணிமுடி உமக்குச் சித்தமாக இருக்கிறது கொலு மண்டபத்திலே மந்திரிப் பிரதானிகள். இளவரசர் என்றையத் தினம் சிம்மாசன்ம் ஏறுவார் என்று ஆவலோடு காத்துக் கொண்டிருக்கின்றனர்; வலிய அணையும் சுகத்தைப் பெற்றும் வாட்டம் உமக்கு ஏன்?

சித்தார்தர்:- நண்பா! என் சிந்தனையைக் கெடுத்துவிட்டாய்; நீ விரித்த வசீகரங்கள், என்னை வாத்சல்யத்துடன் வரவேற்கின்றன; குதூகலமூட்டப் பலருண்டு; ஆனால், சந்திரனைக் கருமேகம் பிடித்து மறைந்திருப்பதுபோல, என் வாழ்க்கை வசீகரத்தை ஒரு வாட்டம் வதைக்கிறது; சந்திரன், மேகத்தை விரட்டி அடித்துவிட்டு மினுக்கிக் கொண்டு வரக் கண்டிருக்றேன்; ஆனால் நானோ, வாட்டத்தினின்று விடுதலை பெறுவது முடியாத காரியம்!

தோழன்:- இளவரசே - சோகத்தின் காரணம் என்ன? மன்னிக்க வேண்டும்; மதனனின் கணைகள் . . .
சித்தார்த்தர்:- சீச்சி! என் மனைவியின் அன்பு எனும் கேடயத்தின் முன் அக் கணைகள் சூர் மழுங்கிக் கீழே விபம்; என்னை வதைப்பது அதுவல்ல!

சித்தார்த்தன்:- மல்லிகையும் - மனோரஞ்சிதமும் தூவித்தான் இருக்கிறது - பஞ்சணையின்மீது தென்றல்

வீசுகிறது: நிலவு நடனமாடுகிறது; யாழ் ஒலிக்கிறது; ஆம் - இவ்வளவையும் நுகர்ந்து இன்பத்தில் ஈடுபட ஆவரோடு பஞ்சணைக்கு அருகில் சென்றால், மலரணைமீது மங்கை இல்லை - சீறும் நாகம் இருக்கிறது; என் வாழ்க்கைப் பஞ்சணையில் சீறும் நாகத்தை நான் கண்டேன்; கலக்கம் ஏற்படாதோ - கூறு!

தோழன்:- சீறும் நாகம் எங்கே?

சித்தார்த்தர்:- எங்கேயா? எங்கும் அதனைத்தான் காண்கிறேன்; சுகம் - போகம் - ஆட்சி - அன்பு - இவைகள் தவழும் வாழ்க்கைப் பஞ்சணையில் படுத்துக் கொண்டிருக்கிறது. வறுமை - மப்பு - நோய் - மரணம் எனும் நான்கு தலைகள் கொண்ட நாகம்; அதனைக் கண்ட பிறகு, எனக்கு வாழ்க்கைப் பஞ்சணையில் படுக்க மனமில்லை!

தோழன்:- இதைத்தான் கூறினீரா? நன்று, நன்று; பால் போல் காயும் நிலவும் சில நாள் தேயும் இருளும் ஒளியும், இன்ப துன்பமும் இயற்கைதானே? இதனை மாற்ற நாமா அதிகாரிகள்? சுகம் கிடைக்கும்போது அதனை நுகருவது - துக்கம் நேரிடுங்காலையில் சகித்துக் கொண்வது - என்பதைத் தவிர, வேறு வழி ஏது?

சித்தார்த்தர்:- புது வழி காண்பேன்; போகங்களைத் துறந்து - அரசசை விட்டு நீங்கி - அலைந்து திரிநது - இன்பமும் துன்பமும் பிணைந்துள்ள முடியை அவிழ்த்துவிடும் வித்தையைக் கற்பேன்; அந்தப் புரத்து அலங்காரியும் வேண்டாம் - அரச போகமும வேண்டாம்; உண்மையை உணரும் வேலையில் ஈடுபடுவேன்; உத்தமரிகளை நாடுவேன்; யோகங்களைப் புரிவேன்; தவசிகளை அடுப்பேன் - அவர்தம் கருத்துக்களைச் செவிமடுப்பேன்; நாலு தலை நாகத்தை நசுக்குவேன்!

புத்தருக்கும் - அவரது தோழருக்கும், மேலே தீட்டியுள்ளதுபோன்ற பேச்சு நடந்திருக்கக்கூடும்!

இளவரசர் துறவியாவதற்கு முன்னர், தமது தோழருடன் கலந்து பேசியிருப்பார்; இல்லையேனும் - அவருடைய மனத்திற்குள்ளாகவேனும் இத்தகைய கருத்துப்போர்

நடைபெற்றுத்தானிருக்கும்!

இருதியில் சித்தார்த்தர், துறவுக்கோலம் பூண்டார் புத்தரானார்!

கருணை ததும்பும் பார்வையால் அவர், கசடர்களின் கல் மனத்தையும் கரைத்தார்; புன்சிரிப்பால் - புரோகிதரின் பொச்சரிப்பைப் பொசுக்கினார்!

அன்பினால் - ஆரியப் புரட்டர்களைப் புறமுதுகிட்டு ஓடச் செய்தார்! கொலையை, வேள்வி என்றும் - குருட்டுத்தனத்தை, சாத்திரம் என்றும் - ஆபாச ஆட்டங்களை, ஆண்டவன் பணி என்றும், சாதி சனியனை, கடவுள் கட்டளை என்றும் கூறி மக்களைச் சிறைப்படுத்திய பார்ப்பனீயத்தைப் புத்தரின் புரட்சி, மூலைக்கு விரட்டிவிட்டது! புத்த மார்க்கம் வஞ்சக வர்க்கத்தவரை வீழ்த்திற்று; ஆனால் . . .

இந்தியாவில் தோன்றிய புத்த மார்க்கம், இந்தியாவில் இல்லை - சீன நாட்டில் இருக்கிறது!

புத்தரின் மறைவுக்குப் பிறகு புதருக்குள் மறைந்திருந்த ஆரிய அரவம் வெளிக் கிளம்பி மீண்டும் தனது விஷப் பல்லுக்கு வேலை தேடிக் கொண்டது.

புத்த மதம் இந்தியாவிலே இடம் பெற்றிருந்திருப்பின், நாட்டு நிலையும் - மக்கள் நிலையும் இப்போதிருப்பதைப்போலவா இருந்திருக்கும்?

சுதோசமித்திரன் (மர்ச்சி 1-ஆந் தேதி) எழுதுகிறது - பாரத் தாய் ஈன்றெடுத்த புத்த பகவான் உபதேச மொழிகளே சீனர் பின்பற்றும் மதம். என்று!

கோபாலகிருஷ்ணரின் பிருந்தாவன லீலைகளுக் மதிப்புத்தரும் மித்திரனுக்கு இந்த வாசகத்தை எழுதும்போது, துக்கமோ - வெட்கமோ ஏற்பட்டிருக்காது; பெருமையும் பூரிப்பும்தான் ஏற்பட்டிருக்கும்.

பித்தரின் புரட்சி வேகத்தை நாடு கடத்தியவர்கள் நமது மூதாதையர் என்ற எண்ணம் ஆசிரியருக்குப் பூரிப்பையும் - பெருமையையும் அளிக்கும்; ஆனால், பார்ப்பனீயத்தால் பாழான

நமக்கோ - படிக்கும்போது வெட்கமும், துக்கமும் பிறக்கிறது!

ஆரியச் சேற்றில் ஒரு சீரிய செந்தாமரை பூத்தது; அது, சீனச் சீமைக்குச் சென்றுவிட்டது! பூத்த இடத்தில், மீண்டும் ஆரியச் சேறே இருக்கிறது!

புத்த மார்க்கம் காட்டிய வழி செல்ல மறந்தோம்! வெட்கம்! துக்கம்!

புத்தர், தமது அரசைத் துறந்தவர் மட்டுமல்லர்; அவரது மார்க்கமும், அவரைப் போலவே இந்தியாவை விட்டு வெளியேறிச் சீனம் சென்றுவிட்டது!

இன்று, பாரதத் தாயின் பிள்ளையான புத்தர் தந்த பொன் மொழியைச் சீனர், போதனையாகக் கொண்டு வாழ்கின்றனர் என்ற கூறும் மித்திரன், அந்தப் பொன்மொழிகள், பிறந்த நாட்டிலே ஏன் நிராகரிக்கப் பட்டுவிட்டன என்பதற்கக் காரணம் கூறுமா?

காசிக்கு அருகே சாரநாத் என்ற இடம் இருக்கிறது; அழகிய பாட்டை; வழியில் பெரும் பகுதியில் ஒரு வேப்பமரம்; அதன் பக்கத்திலே ஒரு மாமரம்; உலகில் கசப்பும் - இனிப்பும் ஒன்றையொன்று பின்னிக்கொணடு நிற்பதைப் புத்தர் கண்டாரல்லவா?

சாரநாத்தில் உள்ள புத்தர் தோட்டத்திற்குச் செலும் பாட்டையில், இதனை நமக்கு எடுத்துக் கூறுவதுபோல் வேம்பும் - மாவும் ஒன்றன் பக்கத்தில் ஒன்றாக நின்று காட்சி தருகின்றன!

கோட்டத்தை நெருங்குகையில், வேம்பு இல்லை - மாமரங்களே உள்ளன; சித்தார்தர், இன்பமும் - துன்பமும் கலந்த வாழ்க்கைப் பாதையைக் கடந்து அறிவு உதயம் பெற்றதும், துன்பம், துடைக்கப்பட்டு, ஈடில்லா இன்பம் பெற்றார் என்ற கூறுகிறார்களே - அதைச் சித்தரிப்பதுபோல, புத்தர் கோட்டத்தை அணுகும்போது பாட்டையில் இனிய மாமரங்கள் மட்டுமே உள்ளன!

புத்தர் கோட்டத்திலே, ஜப்பான் அரசு தானாகவே தந்த மணி

தொங்குகிறது!

கோட்டத்தை அடுத்தாற்போல், சீனச் செல்வர் ஒருவர் புத்தர் கோட்டம் ஒன்று புதிதாக அமைத்துக் கொண்டிருக்கிறார்; அங்கு புத்த விக்கிரகம், சீன உருவத்துடன் காணப்படுகிறது!
சாரநாத்தில் சாந்த புத்தர், போதனை பல பிரிந்தார்; ஆனால், இன்று சாநாத், பக்தகோடிகள் தேடிச் செல்லும் இடமாக இல்லை; அதை அடுத்துள்ள காசியே புண்ணிய ஷேத்திரமாக இருக்கிறது!

பாரதத் தாய் ஈன்றாள் - பராமரிக்கவில்லை; நான் வேறு வீடு சென்றேன் என்று சாரநாத்திலுள்ள புத்த உருவம் கூறுவதுபோல் - இந்த அநீதியைக் கேட்க ஆண்மை இல்லையே உங்களுக்கு என்று கேலி செய்வது போல் - புன்னகை புரியக் கண்டேன்!

அரச குடும்பத்தினர் நீர் - புத்தரானீர்; உம்மையே இப்பாடுபடுத்திற்றே பார்ப்பனீயம் - என்னை அது என்ன செய்யுமோ? என்று புத்தரிடம் கூற எண்ணினேன்!

பரியார் ஈ.வெ.அஇராமசாமி அவர்கள் என்னுடன் இருந்தார்; நேரமாகிவிட்டதை உணர்ந்து, தமது கைத் தடியைக் கீழே தட்டினார்; சிந்தனையில் ஆழ்ந்திருந்த நான் விழித்துக்கொண்டேன்; சாற்று அடித்துக்கொண்டிருந்தது; அந்த வெண்ணிறத்தாடி அசைந்துகொண்டிருந்தது!

மீண்டும் புத்தரை நோக்கினேன் - உம்மைப் பார்ப்பனீயம் நாடு கடத்தி இருக்காது; ஆனால் அன்று நர் மூட்டிய புரட்சியை அடியோடு ஆரியம் ஒழித்துவிடவில்லை; இதோ பாரீர் - பார்ப்பனீயத்தின் வைரி என்று பூத்தரிடம் பெரியாரைப் பற்றி நான் கூறவில்லை - என் மனத்தில் எண்ணிக்கொண்டேன்!

அதையும் அறிந்து, நன்று; நீதி நின்று வெல்லும் - ஆனால், நிச்சயம் வெல்லும் என்று என்னை நோக்கிச சாரநாத் புததர் கூறியது போலிருந்தது - அந்தப் புன்னகை!

(திராவிடநாடு - 15.03.1942)

கிட்கிந்தையில் கிரிப்ஸ்

மரக்கிளைகள் முறிந்தன! கனிகள் கசக்கிப் பிழியப் பட்டன! காய்கள் கடித்தெறியப்பட்டன! துளிர்கள் துவைத்து மிதிக்கப்பட்டன! ஒரே ரகளை! கூத்தாட்டம்.

மற்றோர் புறத்திலே, மதுமயக்கத்தால் மல்லாந்து படுத்தும், புரண்டுகொண்டும் குளறிக்கொண்டும பல குடிவெறியர்கள் இருந்தனர்.

சாலை ஓரத்திலும், மாவிலை மெத்தைமீதும், மரப்பொந்துகளிலும் மலைச்சாரலிலும், சல்லாபங்கள் சொல்லொணாக் கோலாகலத்துடன் நடந்து கொண்டிருந்தன. களியாட்டம், வெறியாட்டமாகிவிட்டது. குதூகலம், ஆர்ப்பாட்டமாகிவிட்டது. குதூகலம் மிதமிஞ்சிவிட்டால், மனிதர்களிற் சிலரையே குரங்குச்சேட்டையில் கொண்டு போகிற தென்றால், குரங்குகளுக்குக் குதூகலம் பிறந்துவிட்டால், அவைகளின் கும்மாளத்தைக் கூறவும் வேண்டுமா! கிஷ்கிந்தையில், வானரங்கள், மனம்போனபடியெல்லாம், ஆடின, பாடின, மது குடித்துப் புரண்டன, மரங்களின் மீது குதித்தன. மலைகள் மீது தாவின!

வானர அரசன், தனது குடிமக்களின் கோணல் சேட்டையை அடக்கமுடியவில்லை. முயற்சிக்க முன் வரவுமில்லை. ஏன்! அரசனே அந்தப்புரத்தில் காமமும் கள்ளம் கலந்து பருகியதால், கட்டுக்கடங்காது ஆடிக்கிடந்தான்!

பிறக இலட்சுமணன் வந்து கடிந்துரைக்கத் தெறிந்தான் சுக்ரீவன், வானரர்களும் வழிக்குவந்தனர் என்று வால்மீகி, கிஷ்கிந்தையில் நடந்த ரசமான ரகளைபற்றி வரிணித்திருக்கிறார், இராமாயணத்தில்.

மேடை முறிந்தது! ஒலிபெருக்கி கெட்டுவிட்டது! ஆரவாரம் கிளம்பிற்று! ஆவேசமாகப் பேசினார்! என்று இரண்டு வாரங்களாக ஆசசாரியார் சுற்றுப் பிரயாண சம்பவம் பற்றிப் பத்திரிகைகள் எழுதுகின்றன.

சென்னை, திருமயிலையில் (திரு உபயோகித்தற்காக, தோழர் பக்தவச்சலம் கோபித்துக்கொண்டு ஸ்ரீமயிலையில் என்ற கூற

முன்வரவுங்கூடும்) சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு வந்து பேசினபோது ஆச்சாரியார், நான் விரைவில் வடநாடு போகப் போகிறேன். எனது கிஷ்கிந்தையில் வானரசைன்யம் தயாராக இருக்கிறது என்று அங்குள்ள சசோதரர்களுக்குச் சொல்லலாமா, என்று கேட்டார்.

இது என்ன பரதா! துண்டு துண்டாக ஏதேதோ கூறுகிறாய், சம்பநதம் என்ன என்ற கேட்பீர்கள். சரி, சரி, இன்னமோர் துண்டு சேர்த்துககொள்ளுங்கள், பிறகு தொடுத்துப் பார்ப்போம்.

சர், ஸ்டாபோர்டு கிரிப்ஸ், இந்தியாவுக்கு வர இங்கிலாந்திலிருந்து புறப்பட்டுவிட்டார்!

வால்மீகி வர்ணித்த கிஷ்கிந்தை, ஆச்சாரியாரின் சுற்றுப்பயணம், அவரது மயிலைச் சொற்பொழிவு, கிரிப்சின் வருகை, இவைகளைத் தொடுத்து, நான் முதலிலே கொடுத்துள்ள தலைப்பு இருக்கிறதே, கிஷ்கிந்தையில் கிரிப்ஸ் என்பது, அதைப் பொருத்திப் பாருங்கள், பொருள் விளங்கிற்றா? விளங்காதவர்கள், கேளுங்கள், விளங்கிக்கொண்டவர்கள் நான் கூறுவது சரிதானா என்பதைக் கவனியுங்கள். இராமாயண காலத்திலே, இராமருக்கு உதவி செய்வதாகக் கூறிய வானரப்படையும், அரசரும், ஆனந்த அமளியில் ஈடுபட்டு, குடித்து வெறித்துக் கூத்தாடினதாக வால்மீகி கூறியுள்ளார். பிரிட்டிஷாருக்கு இப்போது உதவி செய்வதாகக் கூறிக் கிளம்பியுள்ள ஆச்சாரியாரின் பிரயாணம், பிரசங்கம், ஆங்காங்கு நடந்த சம்பவங்கள், ஆகியவை எனக்கு, வால்மீகியின் வர்ணனையைக் கவனப்படுத்தின. வாலி கொல்லப்பட்டு, கிட்கிந்தையின் முடிதனக்குத் தான் என்பது ஏற்பட்டுவிட்டதும், சுக்ரீவன், சுந்தராங்கிகளின் சுகுணத்தைச் சுரிதியாக்கொண்டு ஆடினான்! வானரர்களில் சுந்தராங்கிகளா? என்ற என்னைக் கேட்காதீர்கள். வால்மீகியின் வாழையடி வாழையாக வந்தோரைக் கேளுங்கள். சுக்ரீவன் ஆடியபடி, இங்கும் நடக்கிறது போலும், நாட்டுக்கோர் புது அரசியல் தருகிறோம்

என்பது வெளிப்படையாகக் கூறப்பட்டு நம்பினோர்க்கு நிரிவாக சபையிலே பதவி கிடைக்கும் என்று ஜாடைமாடையாகக் கூறப்பட்டும வருவதால், ஆச்சாரியார் அன்று கிட்கிந்தையில் வானர அரசன் அடைந்ததுபோன்ற ஆனந்தங்கொண்டுள்ளார் போலும் என்று கருதினேன். பெளியே கூறவில்லை. ஏதோ ஒரு ஊரில் அவர் சகாக்களுடன் அமர்ந்திருக்க பிரசங்க மேடை கூடமுறிந்து விழுந்ததாகப் பத்திரிகையிலே படித்ன். உடனே கிட்கிந்தையில் மரக்கிளைகள் முறிந்தன என்று வால்மீகி கூறினாரே அது நினைவுக்கு வந்தது. அன்று கிட்கிந்தையில் நடந்ததுபோல் இன்று இங்கு நடக்கிறது என்று எண்ணினேன். எண்ணினதை எடுத்துரைத்தால், ஆசசாரியாரையும் கிட்கிந்தா வாசியையும் ஒன்றாக்கிப் பேசுகிறாயா என்று கேட்க பாரத மாதாவின் பிள்ளைகள், கண்கள் சிவக்க (கோபத்தால் தான்!) கைகால் துடிக்க (ஆத்திரத்தால்!) கிளம்பிவிடுகிறார்களே என்றெண்ணி, மனமே பொறு என்ற கூறி என்னை நானே சமாதானப்படுத்திக் கொண்டேன். சில சமயங்களில் மெளனம், பேச்சைவிட சிலாக்யிமல்லவா! ஆனால், அன்பர் ஆசசாரியார், தாமாகவே, வலிய நான் கூற எண்ணியதைக் கூறிவிட்டார். மயிலாப்பூரில் பேசுகையில், எனது கிஷ்கிந்தையில் வானர சைன்யம் தயாராக இருப்பதாக நான் வடநாட்டாருக்குக் கூறட்டுமா என்று கேட்டாரல்லவா? தமிழகம், அவரது கருத்தின்படி கிட்கிந்தை! தமிழ் நாட்டவர் (நானும் நீங்களுமல்ல, ஆச்சாரியாரின் திருவடிகளே சரண அடியேன் கூறினதல்ல இப்போது சொல்லுங்கள். ஆச்சாரியாரின் பிரயாணப் பிரபாவத்தைக் கண்டதும் எனக்கு கிட்கிந்தைக் காட்சி பற்றிய கவனம் வந்தது தப்பா!ஆச்சாரியாரே கூறிவிட்டாரே, தமிழகம் கிட்கிந்தை என்று, தமிழர் வானரர் என்று, சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ், இங்கு இன்னம் சிலநாள்களில் வரப்போகிறார் ஆகையால்தான், கிட்கிந்தையில் கிரிப்ஸ் என்ற தலைப்பிட்டேன்.

வருகிற சர். ஸ்டாபோர்டு கிரிப்ஸ், ஆச்சாரியார் திரட்டிவைத்துள்ள வானர சேனையைக் கண்டு, கண்டேன், அதை வேண்டேன் என்று சொல்வாரா, என்பது அரசியல் ஆரடக்காரருக்குத் தெரியும். நமக்கு அந்த ஆரூடத்தில் நம்பிக்கை கிடையாது.

போர் சம்பந்தமாகத் தாங்கள் பரிபூரணமாக ஒத்துழைக்கத் தயார் என்பதையும், போர் ஆதரவுப் பிரச்சாரத்தை மக்களிடம்

செய்யத் தயார் என்பதையும், பணம் திரட்ட, பட்டாளத்துக் ஆட்கள்சேர்க்க, பீதிகளைத தடுக்க, எதிரியின் கேடான குணங்களை எடுத்துரைக்கத் தாங்கள் தயார் என்பதை, வருகிறவருக்கு முன்கூட்டியே தெரிபிக்கிறார். வசிஷ்ட வர்க்கத்தவர்! இவ்வளவு செய்ய நாங்கள் சம்மதிக்கிறோம். செய்துகொண்டும் இருக்கிறறோம். இத்தகைய ஊழியர்களை வேலைக்க அமர்த்திக்கொள்ள வேண்டும தரையே என்று சர்ச்சில் சர்காருக்குக் கூறுவதே ஆச்சாரியாரின் பிரசார நோக்கம்.

ஜப்பானிய படை எடுப்பினால் இந்திய பெரிதும் பதிக்கப்படுமே

ஆமாம்! அதைத்தானே நான் மாகாணமெங்கும் சுற்றுப்பயணம் செய்து மக்களுக்கு விளக்கிக்கொண்டிருக்கிறேன்

கட்டுப்பாடாக மக்கள் இருக்கவேண்டும். பீதி கூடாது தைரியம் வேண்டும்

அதேதான் சார். நான் சொல்லிவருகிறேன்.

எதிரியைத் தடுக்க, வீட்றகொரு ஆள் கிளம்பவேண்டும்

போதாது துரையே! இதோ பாருங்கள், பத்திரிகையை, பதினைந்து நாள்களுக்கு முன்பு மயிலாப்பூரில் பேசினேன் என்ன சொன்னேன். படியுங்கள். இதோ நானே படிக்கிநேன். வீட்டிற்கொரு இராமனும், இலட்சுமணனும் கிளம்பவேண்டும். வீட்டிற்கு இரண்டுபேர் தேவை ஒருவலல்ல!

ரொம்பசரி! ஆனால் இந்த அஹிம்சை, அஹிம்சையென்று கூறிவந்தீர்களே!

அதுவா! அதுசும்மா தந்திரத்துக்காக. எங்கள் ஜனங்கள், ஜாதிமதபேதம், வறுமையாகிய கொடுமைகளால் எங்கே கிளடம்பி விடுகிறார்களோவென்று அடக்கிவைக்க அந்தப்போதனை செய்துபார்த்தோம். அதைவிட்டு விட்டேன். இதோ கேளுங்கள். ஹிம்சை என்ற மதுவைப் பருகியுள்ள

எதிரியை நாம் அஹிம்சை ஆயுதத்ததைக்கொண்டு தடுக்க முடியாது. என்று மயிலைப் பேச்சில் இருக்கிறது ஜப்பானியன் இம்சைக்காரன் அவனிடத்தில் நமது அஹிம்சை பலிக்காது என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்.

அதுதான் சரியான பேச்சு! யாரே, இனி இதர கட்சிகளுடன் ஒரு சமரசத்திற்கு வரவேண்டியதுதான் பாக்கி, வந்ததும் உமது மனு கவனிக்கப்படும்.

இவ்விதமானதாகத்தான், சர், கிரிசுக்கும் ச.இராஜகோபாலாச்சாரியாருக்கும் சம்பாஷணை இருக்க முடியும்! இவ்விதம், தமது பிரிட்டிஷ் பக்தி, போர் ஆர்வம், ஆகியவற்றை விளக்க, ஆதாரங்கள் திரட்டுகிறார், அலைந்துதிரிந்து. அந்த ஆதாரங்களான, பத்திரிகைகளுடன், சர்.கிரிப்சைக் கண்டு பேசுவார் ஆச்சாரியார் சைமன் சிரிப்பார்!

கிஷ்கிந்தையில் சகலமும் தயார் என்ற ஆச்சாரியார் கூறினதும், ஆமாம் என்ற சுர்.கிரிப்ஸ் நம்பிவிடுவாரானால், அது அவருடைய அவசரப் போக்கைக் காட்டுவதாகுமே தவிர, அறிவின் பக்குவத்தைக் காட்டுவதாகாது. தயாராக வானரவேனையை வைத்துக் கொண்டிருப்பதாக ஆச்சாரியார் கூறுவதை சர்.கிரிப்ஸ் நம்புமுன்னம், லிபியாவில், பர்மாவில், மலேயாவில், சிங்கப்பூரில், இரத்தஞ் சிந்தி, தங்கள் உடலங்களைக் கழுகுக்கும், கடலில் நடமாடும் சுறாமீனுக்கும், மண்ணுக்கும் இறையாகப் போட்ட வீரர்கள், ஆச்சாரியார், போர் எதிரிப்பு செய்தபோது சிறையில் சிங்காரமாகப் படித்துகொண்டிருந்தபோது, திரட்டப்பட்டவர் என்பதையும், இதுவரை போருக்காக நடந்த பிரசாரமும், குவிக்கப்பட்ட பணமும், ஆச்சாரியாரும் அவரது வானரவேனையும் வழிமறித்து வம்புசெய்துகொண்டிருந்த நேரத்தில் இதரர்கள் செய்தது என்பதையும் கவனத்தில் வைக்கவேண்டும் இல்லையேல், அந்த அஇதரர்களின் கவனம், செய்ந்நன்றி கொன்றவர்கனை என்னசெய்வது! ஏன் அவர்களுக்கு இன்னமும் இதவுவது? என்ற விபருதமான வழியில் திரும்பிவிடவுங்கூடும்!

போர் துவக்கப்பட்டபோதே, இதரகட்சிகளக்கு, இந்தியாவுக்கும் ஆபத்து விளையக்கூடும், ஆகையால் இந்தப்போரில் நேக சாட்டினரை முழுமனத்துடன் ஆதரித்து, எதிரியின் இடுப்பை முறிக்கவேண்டும

என்பது தெரிந்துவிட்டது. தெருக்கோடியில் பிடித்த தீ நம் வீட்டிற்கும் வரக்கூடும் என்று தெரிந்துகொண்டவர்கள், தீ அணைக்கத் தாமாக ஓடோடி வந்தனர். அன்று தீர்த்தமாடி, திருநாமமிட்டு திருப்பல்லாண்டு பாடிக் கண்டிருந்தவர்கள் இன்று உதவிசெய்கிறோம் என்று கூறிவிட்டால் அதைக்கண்டு மலைத்துவிடுவது மடமையின் அறிகுறி வீட்டிற்கொரு இராம இலட்சுமணர்களைக் கேட்கும் இந்த மாம்பல மாவீரர், எந்த ஞானோதயம் பெற்றதாகக் கூறுகிறாரோ, அதனை வெகுநாள்களுக்கு முன்னதாகவே இதரகட்சித் தலைவர்கள் பெற்றதனால்தான், போர் மூண்டது. வருகிறது ஆபத்து, வரிந்துகட்டுங்கள் கச்சையை என்று மக்களிடம் கூறினர். அந்த நேரத்தில், வாதுஞ் சூதும் பேசியவர் ஆச்சாரியார். இன்று தத்தோம் எனத் தாண்டவமாடுகிறார்! ஏன்? போரை எதிர்த்து சிறை சென்றவர், இன்று போருக்கு ஆட்கள் திரட்ட முன் வருகிறாரே, இது ஏன்? என்ற சந்தேகம் எல்லோருகும் ஏற்பட்டிருப்பதைத் தெரிந்துகொண்ட ஆச்சாரியார், தமது நெல்லைப் பிரசங்கத்திலே நான் மந்திரியாவதற்கு இந்தப் பிரசாரம் செய்வதாக கெடுதலான் எண்ணமுள்ள சிலர் நினைத்துக்கொண்டிருக்கலாம் என்ற கூறினார்! நான் குடித்துவிட்டுப் பேசுவதாக இவன் எண்ணுகிறான். நானா குடித்தேன் என்று குளநாத குடியன் கிடையாது!

நான், போன வாரமும் சொன்னேன், அதற்கு முந்திய வாரமும் சொன்னேன். ஆச்சாரியாரின் இந்தச் சுற்றுப்பிரயாண நோக்கம், பதவி பெறுவதற்குத்தான் என்று. இது கெடுதலான எண்ணத்தால் சொன்னதல்ல! ஆச்சாரியாரின் அந்தரங்க ஆசைகள் அவரது சொற்பொழிவிலே அவ்வப்போழுது வெளிப்படுகிறது. அதைக்கண்டு நான் சொன்னதாகும். இப்போதும் சொல்கிறேன். பதவிக்காகத்தான் இந்தப் பிரசாரம்! இல்லை என்றால் ஆச்சாரியார், யாரோ மந்திரிகளாக இருக்கட்டுமூ, எனக்கு அக்கரை இல்லை, ஜப்பானிய ஆதிக்கம் கூடாது, அதைத் துடுக்கவேண்டும்,

போரியவேண்டும், அதற்காக மக்கள் கிளம்பவேண்டும் என்று கூறட்டுமே பார்ப்போம். யுத்த ஆதரவுதேட, சர்வகட்சித் தலைவர்களும் கொண்ட ஒரு பிரசாரசபை நிறுவட்டும், அது நியாயம். ஆனால், யுத்த ஆதரவு பெருகவேண்டுமானால், தமக்குப் பதவி கிடைக்கவேண்டும் என்று கருதினால், அதை யார் ஒப்புக்கொள்ளமுடியும்? பதவி வேண்டாமே! என்றுகூற அவருக்குத் துணிவில்லை. அப்படித்தான் வைத்துக்கொள்வோம், நான் மந்திரியாகிவிடுவதால் உங்களுக்கு ஏற்படும் நஷ்டம் என்ன? என்று கேட்கிறார் ஆச்சாரியார். என்ன நஷ்டம்? கேளும் ஓய், நீர் மந்திரியாகிவிட்டால், போர் ஆதரவு குறையும், காரணம், உமது ஆட்சி இந்த மாகாணத்துத் திராவிட மக்களால் வெறுக்கப்பட்டது. மீண்டும் உமக்க முடி சூட்டுவார்களேயானால், இஸ்லாமியர், திராவிடர் ஆகிய இரு இனமக்களுக்கும் மனம் புண்படும். இவரியந்தானா ஆட்சி போகிறது என்று இருதய வலியுடன் கேட்பார்கள். உமது யுத்த ஆதரவுப் பேச்சு, மனப்பூரிவமானதுதான? மாற்றானிடம் நீர் மண்டியிடாது எதிர்த்து நிற்பீரா? மகாத்துமாவின் பேச்சைக் கேட்டு, மண்டலத்டிதை மாற்றானிடம் விடடு விடுவீரானால் என்ன கதி? என்ற எண்ணங்கள் தோன்றக்கூடும். இத்தகைய எண்ணங்கள், எதிரியைத் தலைவாயிலில் காணும் நேரத்தில் மக்களுக்கு இருப்பது மகா ஆபத்தானதாகும். இதுதானய்ய, நீர் வருவதால் ஏற்படக் கூடிய நஷ்டம். பயங்கரமான நஷ்டம், சர்.ஸ்டாபோர்டு கிரிப்ஸ் முன்பு இந்தியா வந்த போது, காங்கிரஸ் தலைவர்களுடன் கூடிக் குலாவினார். காந்தி ஆசிரமத்தில் தங்கினார். அத்தகையவர், இப்போது இதர கட்சிகளுக்கு நம்பிக்கை பிறக்கக்கூடிய விதத்தில் தமது விசாரணையை நடத்தவேண்டும். பூர்வாஸ்ரம யோசனைகள், பூசுரர் சேர்க்கையால் வரும் புளகாங்கிதம், ஆகியவைகள் சர்.கிரிப்சுக்கு இருக்கும். ஆகவே அவரைச் சரிப்படுத்திக்கொள்ளலாம் என்று காங்கிரசார்

கருதுவர். அங்ஙனம் நடக்கும் என்று, சர்.கிரிப்ஸ் தமது பேச்சாலோ, போக்காலோ காட்டிக் கொண்டால், இந்த நாட்டுப்பழங்குடி மக்களின் பாசத்தைப் பாழாக்குவதாக முடியும்.

பெர்லின், டோக்கியோ, ரேடியயோக்கள், இந்தியாவிலுள்ள பெரிய கட்சியாகிய காங்கிரஸ் பிரிட்டனை ஆதரிக்கவில்லை என்று விஷமப் பிரசாரம் வெய்கின்றன. அதை அடக்க, ஏதாவது செய்து காங்கிரசை யுத்த ஆதரவில் சேரும்படி செய்ய வேண்டும் என்பது பிரிட்டிஷ் சர்க்காரின் நோக்கம் என்ற காங்கிரஸ் வட்டாரத்தில் கூறப்படுகிறது. பிரிட்டிஷ் இந்தக் கருத்தோடு, காங்கிரசைத் தட்டிக் கொடுக்கத் துணிந்தால், அதனால், இஸ்லாமியரும் திராவிடரும் மனம் நொந்து கொள்வர் என்பது திண்ணம், அது, பெர்லின், டோக்கியோவுக்கு எட்டமற்போகாது. அப்போது, பெர்வின், டோக்கியோ ரேடியோக்கள், பிரிட்டிஷார் கைராட்டினத்தைக் கட்டிக்கொண்டு அழுகிற காந்திக் கட்சியுடன் குலவுகின்றனர். அதனால் இஸ்லாமியரும் திராவிடரும் மனம் புழுங்கி உள்ளனர். அவர்கள் பிரிட்டிஷாரின் போக்கை ஆதரிக்க மறுக்கிறார்கள் என்று பேச எவ்வளவு நேரமாகும்? என்பதைப் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் யோசித்தே தீருவார்கள். ஆச்சாரியாரிடன் ன்புகொண்டு ஆங்கிலேயர், பிறரைப் புறக்கணித்தால் அது பெருமையையோ, பலனையோ பிரிட்டிஷாருக்கு அளிக்காது. எட்டுகோடி முஸ்லீம்கள், ஏனோ தானோ வென்று இருக்கிறார்கள். காங்கிரசாரும் பிரிட்டிஷாரும் கூட்டாகிவிட்டனர் என்பதனால், முஸ்லீம்கள் மனமுடைந்துவிட்டனர் என்ற செய்தி, இந்தியாவில் மட்டுமல்ல. எல்லைப்புறத்திலிருந்து துவங்கி, ஆப்கன்நாடு, பெர்ஷியா, சிரியா, அரேபிய, துருக்கிவரை, துடிதுடிப்பை உண்டாக்கம். சர்கிரிப்ஸ், கிட்கிந்தா காட்சியைமட்டுமூ கண்டு, முடிவு செய்யமாட்டார், செய்தால், அந்தமுடிவு, மற்றோர் ம்யுனிச்சாகவே இருக்கும்!

ஜீவமரண போராட்டத்தில், மந்திரிப் பதவி சர்வசாதாரண விஷயமாகும், இதையே நினைத்துக்கொண்டிருப்பவர்கள் மதியீனர்கள்! மதியீனர்களுக்கு அரசியலில் இடம் இல்லை இது ஆச்சாரியார் பேசியது. காங்கிரஸ் வட்டாரம் இதை மறவாதிருக்கவேண்டும் என்பது எனது விருப்பம்! எங்கள் ஆச்சாரியார் மந்திரியாகப் போகிறார்! ஜவஹர் மந்திரியாகப் போகிறார், என்ற மார்தட்டிக்கொண்டு காங்கிரஸ் தோழர்கள் பேசக்கேட்டிருக்கிறேன். அவர்களை, ஆச்சாரியார், எந்தப் பட்டியில் சேர்த்திருக்கிறார் என்பதைக்

கவனிக்கவேண்டுகிறேன்!

(திராவிடநாடு - 22.03.1942)

"ஹிந்துஸ்தான் ஹமாரா!"

‘பாகிஸ்தானை நல்லறிவு படைத்த வர்கள் வெறுத்துத் தள்ளிவிட்டனர். பஞ்சாப், வங்காளம் ஆகிய இடங்களிலுள்ள முஸ்லீம்கள் கூட பாகிஸ்தானை நிராகரித்து விட்டனர். பாகிஸ்தானால் பயன் இல்லை!’ தெரிந்ததா?

இது தெரியாமல் இத்தனை நாட்களாக இருந்து விட்டோம்! இதோ, தோழர் சத்தியமூர்த்தியார் புது டில்லி நகரில் மார்ச் 18-ந் தேதி, இந்த அறபுதமான உண்மைகளைக் கூறியுள்ளார். பாகிஸ்தானை முஸ்லீம்கள் நிராகரித்து விட்டன ராம்!

தீர்மானங்கள் உண்டா? கிடையாது! லீக் தனது கொள்கையை விட்டுவிட்டதா? இல்லை! ஜனாப் ஜின்னா, வார்தாவுக்கு அடிமையானரா? ஒருக்காலும் இல்லை!

எனினும் மூர்த்தியார், பெயர் சத்தியம் என்றிருக்கும்போது, நமக்கென்ன பயம் என்று துணிந்து கூறுகிறார், பாகிஸ்தானை வங்க, பாஞ்சால முஸ்லீம்கள் நிராகரித்து விட்டனர் என்று. என்ன துணிவு! எவ்வளவு பதட்டம்! நிராகரித்து விட்டனராம்! இழந்த கண்களை மீண்டும் பெற்றவன் எனக்கு இவை வேண்டாம் என நிராகரிப்பான் போலும்! வலிய வணைந்த சுகம், புதையல் எடுத்த தனம், நள்ளிரவில் ஒளி, நட்டாற்றில் தோணி, நோய்க்கு மருந்து, நொந்தவனுக்கு ஆறுதல், இவை கிடைக்கப் பெற்றோர், வேண்டாமென்று கூறி நிராகரிப்பரோ! வங்க முஸ்லீம்களும், பாஞ்சாலத்து இஸ்லாமி யரும் பாகிஸ்தானை நிராகரித்து விட்டனர் என்று பச்சைப் புளுகு பேசும் பார்ப்பனத் தலைவர், யாரை ஏய்க்க இங்ஙனம் கூறுகிறார்!

எப்படி நிராகரிப்பார்கள்? அந்த வங்க, பாஞ்சால முஸ்லீம்களுக்கு, கண்ணும் கருத்தும் இல்லையா? சிந்து மாகாணத்தை வென்ற முஹமத் பின் காசீம் எனும் வாலிப வீரனின் சரிதத்தை மறப்பரா? கோரி, கஜனி, கில்ஜி, லோடி வம்ச சுல்தான்கள் ஆண்ட தரணியில், இன்று, கிளிமார்க், குயில் மார்க், `பீடிகளைச் சுற்றும் பிழைப்பிலும், பில்லை சேவகமும், பிடி ஆள் உத்யோகமும் இல்லையேல், காந்தியாருக்குச் சமரசம்

வீசும் `கண்ணியமான' வேலையிலும் ஈடுபட்டுக் கொண்டு, வர்hணஸ்ம வல்லரசின் முன், வளைந்த முதுகினராய், இளைத்த மனத்தினராய், தடித்த தாசராய் இருக்கவா, அவர்கள் விரும்புவர்? அலாவுதின் கில்ஜி எனும் அஞ்சா நெஞ்சன், அணிவகுத்த பட்டாளங் களைத் தலைமை தாங்கி, தில்லியிருந்து துவங்கி, ஓவ்வோர் சிற்றரசனாகப் பணிய வைத்து, மண்டலங்களைப் பிடித்து, சென்றவிடமெங்கும் வெற்றிக்கொடி நாட்டி, மதுரையையும் தாண்டி முன்னேறி, காயல்பட்டிணம் வரை புகுந்து மீண்ட, மாலிக்கபூர் என்ற வீரத் தலைவரின் வெற்றி வரலாறுகளை அவர்கள் மறந்துவிடுவார்களா?

சரிதம் பயில அவர்களுக்கு நேரமும், வசதியும் கிடையாது போகலாம். ஆம்! இன்று அவர்களுள்ள ஏழ்மை நிலையில், அவை கிடைப்பதுமில்லை. ஆனால், அவர்களின் மூதாதையர், கட்டியகோட்டை கொத்தளங்கள், காலத்தால் கலனாக்கப்பட்டிருப்பினும், காண் போரின் கலமான கருத்தையும் கனமாக்குமே! அடிமையாக இருந்து அரசனான குத்புதீன் அன்று எழுப்பிய குதுப்மீனார் இன்று, அரசியல் ஆணவத்தால் கண்மங்கிக் கிடக்கும் மூர்த்தி யாரின் கண்களுக்குத் தோன்றுமே! அதனை இஸ்லாமியர் மறப்பதெப்படி முடியும்? மேதினி யெங்கும் ஜோதி வீசும் புகழுடன்விளங்கி, ஆரிய இதிகாச வர்ணனைகளையும், வெட்கமுறச் செய்யும் வனப்புப் பொருந்திய தாஜ்மஹாலைக் கண்ட பின்னர், தாசர்களாக வாழ அவர்கள் துணிய முடியுமா?

டில்லியில் நின்று கொண்டு தோழர் சத்தியமூர்த்தி இங்ஙனம் பேசினது கேட்க, நாம் பெருவியப்படைகிறோம். வியப்பு மட்டுமல்ல, திடுக்கிடுகிறோம், அலைச்சல் இவ்வளவு அதிகமாக அவரது அறிவைச் சூறையாடி விட்டிருக்கும் என்று நாம் எதிர்பார்க்கவே யில்லை.

வங்க முதல் மந்திரி மௌலவி பஜுலுல் ஹக் ஜனாப் ஜின்னாவுக்கு விரோதமாகக் கிளம்பினார் என்பதுண்மையே. ஆனால், எதன் பொருட்டு? பாகிஸ்தானை எதிர்த்தா? இல்லை! அகில இந்திய முஸ்லீம் லீக் மாநாடு, பாகிஸ்தான் தீர்மானத்தை நிறைவேற்றுகையில், கனம். ஹக் அதை ஆதரித்தார். பின்னர், அனேக முறை ஆதரித்துள்ளார். அவருடைய

மனதில் பதவிக் கும், பக்திக்கும் இடையே மூண்ட போரில், அவர் பதவியின் பக்கம் நின்றுவிட்டார். சர். சிகந்தரும், பாகிஸ்தானை நிராகரித்தார் என்று எவரும் கூற முடியாது. லீக் கட்டளையை மதித்து, வைசிராய் பாதுகாப்பு சபையில் அவருக்களிக்கப்பட்ட பதவியையும் வேண்டாம் என வெறுத்தொதுக் கிய பாஞ்சால வீரர், பாகிஸ்தானை எதிர்ப்பவ ரல்ல. பாபர், அக்பர், அவுரங்கசீப் போன்ற மன்னாதி மன்னர்கள், அஹ்மத்ஷா அப்தாபலி போன்ற அஞ்சா நெஞ்சு படைத்த தலைவர்கள், ஆகிய யாரை மறப்பர்? ஏன் நிராகரிப்பர் அவர்கள் ஆண்ட தரணியை, மீண்டும் பிறைக் கொடியின் பெருமித ஆட்சியின் கீழ்க் கொண்டு வரும் பாகிஸ்தானை! நல்லறிவுள்ளவர்கள் பாகிஸ்தானை நிராகரிப்பார் என்றுரைப்பது சாதாரண அறிவுக்கும் பொருந்தாத பேச்சு. நல்லறிவு என்பதற்கு, ஆரிய அறிவு என்று மூர்த்தியர் பொருள் கொள்கிறார் போலும்! ஆரிய அறிவு, அகில உலகிலும் காணற்கரியது. காணாத லோகங்களைக் கணக்கெடுக்கும், ஆபாசத்தை அருள் என்றுரைக்கும், ஜாதிச் சனியனை சாத்திரத் தீர்ப்பென்றுரைக்கும். கோத்திரம் குலம் என்று கோள் மூட்டும், கோயில் குளத்தைக் காட்டி ஏமாற்றும், திதி திருவிழா என்றுரைத்த திமிர் வாழ்வுக்கு வழி தேடும், தேவர் என்றும், கின்னரர் என்றும் கூறி தெகிடுதத்தம் பேசும், ஆரிய அறிவு இதில் முதல் தரமானது. ஈடு எதிர்ப்பில் லாதது! ஆனால் சுய அறிவுள்ள எந்த முஸ்லீமும் பாகிஸ்தானை எதிர்க்க மாட்டாரென்பது உறுதி. சுந்தர விலாசத்துக் கந்தரனுபூதியார், விந்தையான சிந்தனையை விட்டுவிடச் கோருகிறோம். பிடிவாதஞ் செய்வது, பெரு நெருப்புடன் விளையாடும் பேதையின் நிலைக்கு அவரைக் கொண்டு போய்ச் சேர்க்கும்.

``ஜனாப் ஜின்னா தேசாபிமானி! அவர் நாட்டைக் காட்டிக் கொடுக்க மாட்டார்! நெருக்கடி யான இந்த நேரத்தில் அவர் முன் வந்து நாட்டை நடத்திச் செல்ல வேண்டும்'' என்று தோழர் சத்தியமூர்த்தி வேண்டுகோள் விடுத்துள்ளார். பாகிஸ்தானை எதிர்த்துப் பேசி விட்டு, அதை ஆதரிப்பவர் அறிவிலிகள் என்ற பொருள்பட அகந்தையைக் கக்கிவிட்டு, பிறகு, ஜனாப் ஜின்னாவை, ```அரசே! வாரிர்! அண்ணாவே வாரீர்!'' என்று அழைப்பது, விஷமங் கலந்த வினயம்!

``கர்னல் அமெரியோ மிஸ்டர் சர்ச்சிலோ அவர்களுக்குப் பாகிஸ்தானைத் தரமுடியாது'' என்று மூர்த்தியார் கூறுகிறார்.

உண்மை! அந்த பிரிட்டிஷ் பிரமுகர்கள், எப்படிப் பாகிஸ்தானைத் தர முடியாதோ அதுபோலவே சுயராஜ்யத்தையுந் தர முடியாது! நாட்டுக்கு இனி, எதிர் காலத்தில் எத்தகைய நிலை ஏற்படும் என்பது இங்குள்ளவர் கள் கூடிக் கலந்து பேசி, செய்யும் முடிவைப் பொறுத்திருக்கிறதேயொழிய, கையைக் காட்டியோ, கண்ணைக் காட்டியோ, மிரட்டியோ மயக்கியோ, பிரிட்டிஷாரிடம் பெறும் காகிதச் சுருளையைப் பொருத்தில்லை என்பதைக் கனபாடிகளின் பிரதிநிதி கவனத்திலிருக்கட்டும்.

போர் முடிந்த பின்னர் இந்தியாவுக்குப் பாகிஸ்தான் திராவிடஸ்தான் திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட புது அரசியல் திட்டம் வகுக்கப்பட வேண்டும். போர் முடியுமட்டும், அது பற்றிய விவாதத்தை நிறுத்திவிட்டு, போர் சம்பந்தமாக சகல கட்சிகளும் ஒன்றுபட்டு உழைக்கக் கூடிய ஒரு திட்டம் ஏற்படுத்த வேண்டும். இதனை டில்லி சட்டசபைக் கூட்டத் தில், 17ந் தேதி, நவாப் ஸர்டா லியாகத் அலிகான், ``பிரிட்டனுக்குத் தொந்தரவு ஏற்பட்டுள்ள இந்தச் சமயத்தில், அதனிடமிருந்து வசதிகளைப் பிடுங்கிக் கொள்ள லீக் ஒருநாளும் உத்தேசிக்க வில்லை. வருங்கால அரசியல் திட்டத்துக்குப் பாதகமில்லாமல் தற்போதைய அரசியல் திட்டத்தின்படி அரசாங்கத்தில் உண்மையான, சரியான பங்கு கிடைக்குமானால், முஸ்லீம் லீக் இந்தியப் பாதுகாப்பின் பொறுப்பை ஏற்றுக் கொண்டு தனியாகவோ, மற்றக் கட்சிகளுடன் சேர்ந்தோ ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது'' என்று கூறிவிட்டு, வருங்கால அரசியல் திட்டத் திலே பாகிஸ்தான் மட்டுமல்ல, திராவிடஸ்தானும் இடம் பெற வேண்டுமென்பதை எடுத்துரைத்துள் ளார். ``திராவிடஸ்தான் கோரிக்கையை லீக் தலைவர் ஆதரிப்பதாக சென்ற வருடம் சென்னையில் கூறியுள்ளார்!'' என்று லிலியாகத் அலிகான் கூறினார். சென்னைப் பார்ப்பனப் பத்திரிகாசிரியர்களும், பார்ப்பனத் தலைவர் களும், திராவிடஸ்தான் கிளர்ச்சியை மௌனத் தால் முறியடிக்கலாம் என்று எண்ணினார். இதோ, டில்லி சட்டசபையில், கிளம்பி விட்டது, திராவிட நாட்டுப் பிரிவினையின் எதிரொலி! இந்த அரிய சந்தர்ப்பத்தில், திராவிடருக்காக, லியாகத் அலிகான் செய்த சேவையைத் திராவிட நாடு மறக்காது. திராவிடர் சார்பாக நாம் அவரை மனமாரப் பாராட்டுகிறோம்.

இதே டெல்லியில், கடந்த ஜெர்மன் சண்டையின்போது, 1918ம் ஆண்டு மகா கனம் சீனுவாச சாஸ்திரியார் சட்டசபையில் பேசுகை யில், ``பார்ப்பனரல்லாத மக்கள் பிரிட்டிஷ் ஆட்சி

போய் பார்ப்பனராட்சி வருவதானால், பார்ப்பன ராட்சியின் கீழ் இருக்க இசைவார்கள்'' என்று பேசினார்.

மகாகனத்தின் மனப்பான்மையையும் லியாகத்தின் மனப்போக்கையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

இப்போது அவசரமாகக் கவனிக்கப்பட வேண்டியது, போரை வெற்றிகரமாக எப்படி நடத்துவது என்பதாகும். இதற்கு, போர் ஆதரவைப் பூரணமாகத் திரட்ட லீகும், நமது கட்சியும் தயார்! திரட்டிக் கொண்டு வந்திருக்கி றோம். இதுவரை தெருவில் திரிந்தவர்கள், ``இப்போது, தாங்களும் அந்தத் திருத் தொண்டில் பங்கு கொள்ளவருவதானால், தாராளமாக வரட்டும், ஆனால் அதற்காக, மற்றவர்களின் உரிமைகளைத் தன்னிடம் அடகு வைக்க வேண்டுமென்று பிரிட்டிஷாரை வற்புறுத்தினால், அது கொடுமை என்போம். நமது உரிமைகளை அங்ஙனம் அடகு வைக்க பிரிட்டிஷாருக்கு உரிமை கிடையாது. அவசரமான தேவைக்காக, குடும்பத்தைப் பரிபாலிக்கும் கார்டியன், `சொத்துக் களை' சொந்த உபயோகத்துக்காக அடகு வைத்தாலோ விற்றாலோ, அஃது கடுங்குற்ற மாகும். அத்தகைய நடவடிக்கை செல்லாது என்று மறுத்துரைக்க சொத்துக்குரியவர்களுக்குச் சட்டப்படி உரிமையுண்டு. சாதாரணச் சொத்துக்கே இத்தகைய நிபந்தனைகள் என்றால், பல கோடி மக்களின் எதிர்கால வாழ்க்கையை துச்சமாக மதித்து `துரைமார்' ஏதோ செய்வார்களாயின், அது நம்மை கட்டுப்படுத்தாது என்பதை எடுத்துரைத்து, நமது சொத்துக்களை நாம் மீட்டுக் கொள்ள நமக்கு தைரியமும் உண்டு, நம்பிக்கையும் உண்டு. போர் முடிந்ததும், நாஜிவசம் சிக்கிய நாடுகள் விடுதலை பெற்று, அதே நேரத்தில் இங்கே நாம், ஓர் வணாஸ்ரம வல்லரசுக்குத் தட்சணையாகத் தரப்பட்டுள்ளோம் என்பதை உணர நேரிட்டால், அது உள்நாட்டிலே, இதுவரை ஏற்பட்டிராத கொந்தளிப்பை உண்டாக்கும் என்பது திண்ணம்.

``பாகிஸ்தானுக்கு இணங்கினால், இந்துக் களில் சிலர் ஜப்பானியருடந் சேர்ந்துவிடும்!'' ஆகவே நாம் பாகிஸ்தானை ஆதரிக்கக் கூடாது'' என்று லண்டன், நியு ஸ்டேட்ஸ்மன் அண் நேஷன் ஓர் நூதன வாதம் புரிகிறது. அந்த வாதம் நமக்கு விலா நோகும் சிரிப்பைத் தருகிறது. பாகிஸ்தானை ஆதரித்தால் இந்துக்கள் ஜப்பானி யரை ஆதரிப்பர் என்று வாதமிடுகிறதே இந்த ஏடு, பாகிஸ்தானை மறுத்தால் முஸ்லீம்கள் ஜப்பானியருடன் சேர்ந்துகொள்ளக் கூடும் என்று வேறொருவர்

வாதிட முன்வந்தால், இந்த ஏடு என்ன பதில் கூறுமோ தெரியவில்லை! லண்ண்டனில் நாஜி வெடிகுண்டுகள் கட்டிடங் களை மட்டுமே இடித்தன என்று படித்தோம், சில இடங்களில், அறிவையும் அவை இடித்து விட்டன போலும். நாட்டு நலம் கோருவோர், நாளைய அரசியலை நமக்குள் முடித்துக்கொள் வோம் என்று முதலில் தீர்மானித்து விட்டு, இன்றைய ஆபத்திலிருந்து தப்ப, யாவரும் ஒன்று சேர்ந்துழைக்கத் திட்டமிட வேண்டும். அதை விட்டு, பாகிஸ்தான் பயனற்றது என்று பேசினால் உனது சுயராஜ்யம் சூதானது என்று பதில் கிடைக்கும், வாதம் வளரும். பிடிவாதம் மிகக் கொடிய நோய்! மூர்த்தியாரின் பேச்சு அதன் சேட்டைதான் என்று கருதுகிறோம்.

இந்தியாவைப் பாதுகாக்க வேண்டியது, நமது மகத்தான கடமை. இதனை நாம் செய்யத் தவறினால், பிறகு சுதந்திரம் என்ற சொல்லை நாம் வாயால் உச்சரிக்க ஒரு நூற்றாண்டு பிடிக்கும்.

எனவேதான், ஆபத்தான இந்த வேளை யில், எதிர்கால அரசியல் திட்டம் பற்றிய முடிவுகளைச் செய்யாமல், போரில் நாம் வெற்றி பெறும்வழி வகுக்க வேண்டும் என்று கூறுகி றோம். காங்கிரசார், நெருக்கடியைச் சாக்காக வைத்துக்கொண்டு எதிர்காலத் திட்டத்தை இப்போது ஏற்படுத்த முனைந்தால், இதனை மனதில் இறுத்தட்டும். மறப்பது ஆபத்து என்று எச்சரிக்கிறோம்.

இஸ்லாமிய உலகுக்கு புத்துணர்ச்சி யூட்டிய கவிமர்ஹும் இக்பால், ``ஹிந்துஸ்தான் அமாரா!'' என்று பாடினார். இஸ்லாமியர் அதனை மறக்க முடியாது. ``தமிழ்நாடு தமிழர்க்குத் தமிழர் நாட்டில் சனியாக வந்துள்ள ஆரியர்கள் நமரல்லர்'' என்று நமது கவி பாரதிதாசன் கூறியுள்ளார். நாம் மகிழ்ச்சியோடு இருந்த நேரத்திலல்ல, மன்னன் பன்னீர்ச் செல்வனை ஓமான் கடலுக்குப் பறிகொடுத்துவிட்டு, உள்ளம் ஒடிந்துகிடக்கும் வேளையில்! அன்று சோகத்தை யும், கவி தந்த சொல்லையும் கலந்து நெஞ்சி லிட்டோம்! நாம் கொண்டுள்ள உறுதியை, மூர்த்தியார், அறியமாட்டார். அது அவர் குற்ற முமல்ல! இன இயல்பு!

(திராவிடநாடு - 22.3.1942)

இந்து இட்லரிசம்!

பரதா! இதோபார், நீ இனிமேல் இந்திரன், வருணன், வாயு அக்கினி, முலிய தேவாதிகள் இல்லை என்று கூறிக்கொணடிராதே என்று ஒரு நாள் நக்கீரன் கூறினார். இந்த வெடிகுண்டு வீச்சு என்னைத் தூக்கி வாரிப்போட்டுவிட்டது. நமது தோழர்களிலே நான் எத்தனையோ வகையானவர்களைக் கண்டிருக்கிறேன். அபிப்பிராயங்கள் அந்தர்பல்டி அடிக்கடிக் கண்டிருக்கிறேன். நமது தோழர்களிலே, நிழலைக்க்ணடு மிருளுவோர், நெருப்புடன் விளையாடுவோர், நேர் வழி மறந்து நிந்தனையால் சிந்தனையைச் சித்தரிப்போர்கூட உண்டு. ஆனால் நக்கீரன் இங்ஙனம், தேவாதிகளுக்காக வக்காலத்து வாங்கிக் கொண்டு பேச முன்வருவார் என்ற எதிர்பார்க்வேயில்லை. நான் கேட்டேன, என்ன நக்கீரரே! புத்தம்பிதிதாகப் பேசுகிறீர். புதுமை எது கட்டூர்? தோவிதிகளின் திருக்கடாட்சம் எவ்விதத்தால், எப்போது தங்கட்குக் கிடைத்தது?

தயவு கிடைத்ததாகவோ, தயவுகிடைக்கவேண்டுமென்று எதிர்ப்பார்த்தோ, நானா பரதா! பேசுபவன் என்று நக்கீரன் அறையவே அங்ஙனமிருக்க அக்னி முதலான தேவர்கள் சார்பாகத் தாங்கள் பேசக் காரணமென்ன? என்று மீண்டும் கேட்டேன்.

கேள் இதைப் பரதா! இந்திரன் முதலான தேவர்கள் நந்தமிழ் மக்களில் பெரும்பாலானவர்களிடம் தோழமையுடன் இருக்கக் கண்டேன். நமது தோழர்களின் ஆடையைக் கண்டீரன்றோ, ஆயிரம் பொத்தல், கண்ணாயிரமுடைய இந்திரனின் கடாட்சமன்றோ அது! ஏழைமக்களின் வயிற்றிலே, சதா, மூண்டிருக்கும் பசித்தீயை என்னென்று கூறுவது, அது அக்னியின் அன்புப் பெருக்கன்றோ! பெரும்பாரான பஞ்சை மக்களின் உணவு, காற்றுத் தானே பரதா! வாயுவின் வாஞ்சனையல்லவா அது! தரித்திரத்தில் புரளும் மக்களின் கண்களைக் கண்டிருப்பீர், வருணன் பிரத்யட்சமல்லவா! இதுபோல், அந்தத் தேவாதிகள் காட்சிதருவதால்தான், நான் அந்தத் தேவாதிகளைக் குறைகூறாதீர் என்றுரைத்தேன் என்று முடித்தார் நக்கீரன்.

நான் அவரது நகைச்சுவை பொருந்திய பேச்சைக்கண்டு

சிரித்தேன். அவர் கூறினது, முன்னாளில், கவிகாளமேகம் பாடிய ஓர் பாடலின் சாசயல்கொண்டது. இத்தகைய வேடிக்கைக்குத் தேவாதிகளின் கதை பயன்படுகிறதேயல்லாமல், சுவைக்கு உதவுகிறதா! இவ்வளவு ரட்சகர்களை ஏட்டில் எழுதிவைத்துக்கொண்டு, கஷ்டத்திலேயே புரளும் மக்கள் இங்கிருப்பதுபோல் வேறெங்கும் கிடையாது என்னலாம். அற்புதக் கதைகளைக் காதுகுடையும் அளவுக்குக் கூறிட புராணீகர்கள் எவ்வளவு, இந்நாட்டில் வாழ்க்கையில் குடைச்சலோடு வதையும் மக்கள் எத்தனை கோடிபேர்! எவ்வளவு மகேஸ்வரர்ககளை, இந்துமதம், நம்முன்னால் கொண்டுவந்து நிறுத்துகிறது, எவ்வளவு விமரிசையான விழாக்கள் நடத்திவைக்கிறது, விதவிதமான ஆராதனைகள் செய்யத் தூண்டுகிறது, இருந்துமென்ன, இருதயவலியில்லாத மக்கள் எங்கே இருக்கிறார்கள்? பாதிக்குதே பசி என்றுரைத்தால் செய்த பாபத்தைக் காரணம் காட்டுவார் . . . வேறென்ன நடக்கிறது, கூறுங்கள் யோசித்து! அந்தக் குருடன், இந்த முடவன், அதோகிடந்து இருமும் நோயாளி, துடிக்கும் கிழம், துவண்டுபோகும் குழந்தை, தோல் பொம்மையான மாது, தொப்பென வீழ்ந்து மாயும் பஞ்சை, மாடிபக்கும் வண்டியை, மண்டையை முட்டுக்கொடுதத்துத் தள்ளும் பாட்டாளி, மார் வெடிக்கத் தன் மக்கள் துடிப்பரே என்றெண்ணி மனம் வெடிக்க மூட்டை தூக்கிக் கட்டைவெட்டி கக்கூஸ் கழுவி, கால்கை பிடித்து வாழும் கூலிக்வட்டம் - இந்த உருவங்களின் புலம்பலுக்கு, கேள்விகளுக்கு, குமுறலுக்கு, எங்கே ஐயா, பதில் கிடைக்கிறது! எங்கே ஆறுதல்! அவனைவன் செய்த வினையை அவனவன் அனுபவிக்கிறான் என்றும் என்றெழுதியதை அழித்தா எழுதமுடியும் என்றுங்கூறுவதைத் தவிர வேறு பேச்சுக் கிளம்பிற்றா!

வினை, எழுத்து, விதி, சோதனை இவைகள் தூளாயின தெரியுமோ, சம்மட்டியும் அரிவாளும் ஆளம் சஷியநாட்டிலே, அன்று எழுதியதை லெனின் அழித்து எழுதிக்காட்னார். அவதியுற்றோரை வாழச்செய்தார். அருள் மொழியால் அல்ல, தேவாலயஞ் சுற்றியல்ல, தமது தீரத்தால் வீரத்தால், நெஞ்சுறுதியால்!!

பாதிக்குதே பசி என்றுரைபோரும், அது உன் பாபம் என்று பதிலுரைப்போரும் அங்கு இல்லை! மத ஓடத்திலேறிய மாந்தரே பலி பீடத்தில் சாய்ந்தீரே! ஆம்! வைதீக வீடத்துக்கு நீங்கள் இங்கு பலியானீர்கள்! வாழ்வெனுங் கடலைக் கடக்க மதமெனம்

ஓடமேறினீர். பார்ப்பனியமெனும் சண்டமாருதம், அந்த ஓடத்தை, வைதீகம் எனும் பாறைமீது மோதச்செய்தது, இந்தப் பலிபீடத்திலே சாய்ந்தீர்; இரத்தந் தோய்ந்த அந்தப் பலிபீடத்தை மனக்கண் படைத்தோர் காண முடியும்!

அந்தப் பலிபீடத்திலே சாய்ந்தவரின் தொகை கணக்கினில் அடங்காது!

அந்தக் கடலைக் கடந்தாக வேண்டுமென்பதற்காக மத ஓடமேறியவர்கள் பலிபீடத்திலே சாய்ந்தனர். வேறுசிலர, ஓடத்தில் ஏறாது, கடலை நீந்திக்கடக்கத் துணிந்து, சுறாவுக்கும், சுழல் அலைக்கம், விஷப்பூச்கிளுக்கும் இரையாவதுபோல், களவு, கொலை, கடுந்தொழில், ஆகிய காரியங்கள் செய்தேனும் பிழைப்போம் என்று ஆரம்பித்து, தண்னையும் நிந்தனையும் பெற்றுத் தலைசாய்ந்தனர். இத்தகைய பல எண்ணங்களை, என் மனத்திலே எழுப்பின, நக்கீரனின் பேச்சு, இந்து மார்க்கத்தில் கிடந்துழலும் மக்களக்கு ளீமார்க்கம் கிடைக்கவேண்டும்.

சர், ஸ்டார்போர்டு கிரிப்சோ, மிஸ்டர் சரிச்சிலோ, தாமாக மனமுவந்தோ, நம் நாட்டுத் தலைவர்களின் கூட்டு எச்சரிக்கையைக் கேட்ட பிறகோ, இந்தியாவை, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியப் பிடியிலிருந்தும், பிணைப்பிலிருந்துங்கூட விடுவித்துவிடலாம்.

ஐரோப்பியாவில் அதிவேகமாகப் பரவிவிட்ட ஹிட்லரிசத்தை, ஜனநாயகக் கோட்பாடுடைய நாட்டுப் படைகள், ஜெர்மனியிலிருந்தே விரட்டிவிடமுடியும்.

ஹிந்து ஹிட்லரிசத்தை, பார்பனிய பாசீசத்தை, ஆரிய ஏகாதிபத்தியத்தை, சர்.கிரிப்சாலும், இந்நாட்டிலிருந்து தொலைக்க முடியாது, ரூஸ்வெல்ட்டாலும் இயலாது.

அட்லாண்டிக் சாசனத்தினால், ஆரிய ஆதிக்கம் அகற்றப்பட வழி ஏற்படாத, ஹிந்து ஹிட்லரிசத்தை, இந்நாட்டுடப் பழம்பெருங்குடி மக்களாகிய நாம் முனைந்தால்தான் முறியடிக்க முடியும்.

ஹிந்து ஹிட்லரிசத்துக்கு வீட்டுக்கு வீடு, ஐந்தாம் படை

இருக்கும். தகப்பனாரோ, தயாயாரோ, தாய் மாமனோ, ஹிந்து ஹிட்லரிசத்தின் ஏஜண்டாக இருந்துகொண்டு, அந்த ஹிட்லரிசத்தை எதிர்க்கம் தோழரகளைத் தொலைத்துவிடவும் தயாராக இருப்பர். நட்டுக் உண்மையான விடுதலை வேண்டுமென்றால், இந்த ஹிந்து ஹிட்லரிசத்திலிருந்து நாம் தப்பவேண்டும்.

ஹிட்லரிசம் சாந்தம் சமாதானம் சுபீட்சம் என்று பேசிக்கொண்டே சமரிலும், சதியிலும் சித்திரவதையிலும் இரண்டறக்கலப்பதுபோம், ஹிந்து ஹிட்லரிசம், பக்தி, பரமன், அருள் என்றுரைக்கம் ஆனால், உள்நோக்கம், அடிமைத்தனத்தைப் பெரும்பாலான மக்கள் மீது சுமத்தவேண்டும் என்பதுதான். ஹிந்து ஹிட்லரிசத்தால், உள்நாட்டில் குழப்பம், பிளவு, பேதம், அன்று தொட்டு இன்றவரை இருக்கிறது. ஒரு குலம், மற்ற குலத்தை, மங்கி மடியச் செய்கிறது.
உழைப்பிலே செக்க மாடுகள், உணர்ச்சியிலே செம்மறியாடுகள், என்று கூறத்தக்க விதத்தில் தமிழர உருமாறிப்போனது, ஹிந்து ஹிட்லரிசத்துக்கு அடிபறிந்த காரணத்தாலேதான்.

புரி என இருந்தோர் இன்று பலர் முயலென வாழ்கின்றனர். வெகுசிலர் ஆமைபோல், (தீரத்தை) தலையை நீட்டுவதும், ஆளரவங்கேட்டதும் உள்ளுக்கு இழுத்துக் கொள்வதுமான உள்ளனர். ஹிந்து ஹிட்லரிசத்தால், ஒரு குலம், உழைக்கவேண்டிய அவசியமற்று, பிறரின் உழைப்பை உறிஞ்சும் கூடடமாகிவிட்டது. இதனால், அக்குலத்துக்கும் மற்றைய குலத்துக்கும் பகைமை மூண்டது. சிற்சில நேரங்களில் கவரை தென்படுகிறது. பிறசமயத்தில் கனல் வீசுகிறது, மூடபக்தி எனும் மூடுபனியால், சில சமயம் இந்தப்பகைமை, நீறுபூத்த நெருப்பெனக் காணப்படுகிறது. ஆனால், தீப்பொறிகள் திக்கெங்கும் கிளம்பிவிட்டன. தீயணைக்கம் படையின் திறமை நெடு நாள்களுக்க உபபோகமாகாது.

இத்தகைய ஹிட்லரிசத்தை, வெறுத்துக் கண்டித்து வேரறக் களைய வேண்டிய முழுப்பொறுப்பு, தமிழருடையது. முஸ்லீம்கள், அதன் முடிவணங்க மறுத்து மூலப்போருளைச் சேவிக்க இந்த சால வித்தைகள் ஏதுக்கு? என்று கூறிவிட்டனர். அவர்களை, ஹிந்து ஹிட்லரிசம், மதத்துறையில் ஏதும் செய்யமுடியாது. அஃதேபோல் கிறிஸ்தவர்களிடமும், இந்து ஹிட்லரிசம் நடவாது. மதத்துறையில் இஸ்லாமிய கிறிஸ்தவத் தோழர்கள், ஹிந்து

ஹிட்லரிசத்திடமிருந்து தப்பிவிட்டனர். அரசியல் துறையில் அன்னாரை, சிதைக்க வைக்கும் சூதுதான், காங்கிரசின் கூட்டுறவுடன் ஹிந்து ஹிட்ரரிசம் செய்யக் கருறுகிறது. ஜனாப் ஜின்னாஸ் அத்தகைய நிலை கூடாது எனபதற்காகத்தான், தனி ஆட்சித் திட்டம் வகுத்ததுள்ளார். நாமோ ஹிந்து ஹிட்லரிசத்திடம் சிக்கிக்கொண்டு, சிந்தை நொந்து வாழுகிறோம். இஸ்லாமியர் டிசாலேபோல், அரசு இழந்து இருப்பினும் ஆர்பம் இழக்காது உள்ளனர். நமது பிரமுகர்கள், ஆட்சியில் இருப்பினம் பெட்டெயின் போல், ஹிந்து ஹிட்லரிசத்தின் எடுபிடி ஆளாக உள்ளனர்.

ஹிந்து ஹிட்லரிசம் எவ்வளவு சாதாரண காரியத்திலும் தடை உத்தரவுகள் பிறப்பிக்கிறது தெரியுமோ, சென்ற வாரத்துப் பத்திரிகைகளில் ஒரு அரிய செய்திகண்டேன். அகோபிலமடம் ஜீயர் ஸ்வாமிகள், வைணவத் தோழர்களுக்கோர் தாக்கீது பிறப்பித்துள்ளார். கிராப்புத்தலை அநாசாரமாம், இனி, வைணர்கள், தலையில் குடிமிதான் வைக்கவேண்டுமாம்! கிராப்புத் தலைகளைக் காணச்சகிக்க வில்லையாம். இத்தகைய சாதாரண விஷயங்களில் கூட நுழைந்துவிடுகிறது ஹிந்து ஹிட்லரிசம். பார்ப்பனப் புரோகிதர்கள னைவரும் ஹிந்து ஹிட்லரிசத்தின் கெஸ்ட்டாப்போக்கள்! நமது பழமை விரும்பிகள் அனைவரும், அதற்கு ஐந்தாம் படைகள்! தோந்திகள் அதன் பாராசூட் படையினராவர்! ஏனெனில் அவர்கள் மாயத்தைப் பற்றிப்பேசிவிட்டு, மண்டல வாசிகளின் மனத்தில் பாரசூட் படையினர்போல குதித்து விடுகின்றனர். இவைகளைக் கடந்து முன்னேறும் விறுவிறுப்பான துருப்புகள் தேவை ஹிந்து ஹிட்லரிசத்தை முறியடிக்க பிரிட்டிஷார், இந்நாட்டு மக்கள், ஹிந்து ஹிட்லரிசத்திடம் சிக்கிகொண்டதைக் கண்டே, இங்கு ஆளமுடியும் எனத்துணிந்தனர். இல்லையேல் 40 கோடிமக்கள், உலகில் வேறு எங்காகிலும் அடிமைப் படிடிருக்கின்றனரா? புது அரசியல் திட்டம் வகுக்குங் காலங்களில், முஸ்லும்கள், இந்துக்கள் என்று பெரும்பிரிவுகளாக மட்டும பிரித்துப்பேசும், பேதமை பிரிட்டிஷாரை விட்டபாடில்லை. நாம் இந்துக்களல்ல! நாம் தமிழர்! நமக்குத்தனிப் பண்புகள் உண்டு! நம்மை இந்துக்கள் என்ற கூற அனுமதிப்பதால் நாம் நமக்கு எத்தகைய விடுதலையும் கிடைக்க ஒட்டாதபடி செய்துகொள்கிறோம்.

லீகின் சக்தி தளர்ந்ததற்குக் காரணம் இதுதான். முஸ்லீம்கள், தனி இனம் என்று உணர்ந்து, உரக்க உரைத்து, ஊராள்வோரின்

காதுகளில் உறுத்து மாறு செய்துவிட்டனர். ஆகவேதான் பிரிட்டிஷ் தூதர்கள், முஸ்லீம், இந்து என்று கூறுகின்றனர். நம்மை இந்து கோஷ்டியில் சேர்த்துவிடுகின்றனர். அந்தக் கோஷ்டியிலே நமக்கிருக்கும் நிலைமை, தாசர் நிலைதான்! சர் கிரிப்ஸ், நம்மை அந்த ஹிந்து ஹிட்லரிசத்திடமே ஒப்படைத்து விடத்துணிந்தால், தமிழர முழு மூச்சுடன் எதிர்க்கவேண்டும். எந்த ஆட்சியும், இந்து காலந்தொட்டு சவக்குழி புகுந்தபின்னரும், தமிழர் மீது அந்த ஹிட்லரிசம் ஆதிககம் செலுத்துகிறது. தமிழர் இதனை உணரவேண்டும். இதோ சர்.கிரிப்ஸ் வந்தார். முஸ்லிம்களின் பேச்சிலே ஒரு சக்தி, அவர்கள் பேச்சிலே ஒரு தீரம் இருக்கிறது. இந்தியாவின் பிரச்சினையைப்பற்றி யோசிக்க சர். கிரிப்ஸ் வந்திருக்கிறார், அந்த நேரத்தில் இதுதான் பிரச்சினை என்ற திட்டமாகத் தெளிவாக, தீரமாகக் கூற பாகிஸ்தான் வாரம் கொண்டாடப்படுகிறது. சர்.கிரிப்ஸ் தங்கியுள்ள மாளிகை உள்ள டில்லியில், ஜனாப். ஜின்னா, பாகிஸ்தானுக்காகப் போராடுவோம் என்ற முழக்கம் செய்கிறார். இதுதான் ஹிந்து ஹிட்லரிசத்திடம் சிக்காதிருக்க வழி.

இங்கே சர்.கிரிப்ஸ் காரியுமிழும்படி, கிராப்புத் தலைவேண்டாம். குடுமியே தேவை என்று ஹிந்து ஹிட்லரிசத்தின் அதிகார வார்க்கத்தவரில் ஒருவரான, அகோபில மடத்து ஜீயர் தாக்கீது விடுக்கிறார். நாம் இருக்கும் கேவலமான நிலைமைக்கு இதைவிட வேறு உதாரணம் வேண்டுமோ! நக்கீரரே, இந்து மதம் தமிழருக்கு ஆகாது என்பதை விளக்கித் தமிழருக்குக் கூற வேண்டும், என்று நான் கூறினேன்.

ஆகட்டும், அடுததவாரத்திலிருந்து அந்தப் பணியை நான் செய்கிறேன் என்று நக்கீரன் வாக்களித்தார். அடுத்த வாரம் அவரைச் சந்தியுங்கள்.

(திராவிடநாடு - 29.03.1942)

ஆளுக்கொரு துப்பாக்கி!

“மேன்மைதங்கிய வைசிராய் அவர்களே! நாட்டுப் பாதுகாப்புக்காக, நாங்கள் கஷ்ட நஷ்டமேற்கத் தயார். திராவிடர்கள் சாவுக்கஞ்சாதவர்கள், அவர்களிடம் ஆயுதங்கள் கொடுத்து, உள்நாட்டுக் கொந்தளிப்போ, வெளிநாட்டினரின் படையெடுப்போ நேரிட்டால் சமாளிக்கும் பொறுப்பைத் தாருங்கள். வீட்டிற்கொரு ஆள் கிளம்பத் தயார்! ஆனால் ஆளுக்கொரு துப்பாக்கி தேவை” என்று கடந்த வாரத்தில் சென்னையில் கூடிய ஜஸ்டிஸ் வாலிபர் மாநாட்டில் பேசப்பட்டது. உணர்ச்சியின் வேகமட்டுமல்ல, அந்த உரைக்குக் காரணம். வீட்டிற்கொரு ஆள்தேவை என்று சர்க்காரும், நாட்டுப் பற்றுக்கொண்டாரென்ற நல்விளம்பரம் பெற்றோரும் பேசுகின்றனர், ஆனால் ஆயுதமற்ற ‘ஆட்கள்’ காகிதச் சிப்பாய்கள் தானே! ஆகவேதான், அத்தகைய முயற்சி பயன்தரவேண்டுமானால், ஆயுதமளிக்க வேண்டும் என்று வாலிபர் மாநாட்டில் கூறப்பட்டது.

வீட்டிற்கொரு இராம இலட்சுமணர்கள் (சீதையின்றி என்று நாம் கருதுகிறோம்!) கிளம்பவேண்டும் என்று ஆச்சாரியார் கூறுகிறார். வில்லும் அம்புறாத் தூணியுமில்லாமல் கிளம்பிப் பயன் என்ன?

இதுபற்றி, ‘மெயில்’ பத்திரிகை யோசனை கூறுகையில், துப்பாக்கி முதலிய ஆயுதங்களைத்தர வகையும் வசதியுமில்லாது போயினும், இந்த நாட்டுக்காரருக்கு அரிவாள் கொடுத்துதவி, அதை உபயோகிக்கும்படியாகச் செய்யலாம் என்று எழுதிற்று. ஆகாய விமானங்கள் ஆயிரமாயிரமடி உயரத்தில் பறந்து போர் நடத்தும் 1942இல் அரிவாள் படையேனும் இங்கு இருக்கட்டும் என்று இந்த ஆங்கில ஏடுகூற முன்வந்தது காண மகிழ்கிறோம்.

ஆயுதமில்லாததால் இந்த அரிவாள் படைதிரட்டும் யோசனையை மெயில் கூறியிருக்கலாம், ஆனால் அரசாங்கத்தின் யோசனை வேறு விதமாகக் காணப்படுகிறது.

ராஜாங்க சபையில் இதுபற்றிய விவாதம் நடந்தபோது, ஆயுதங்களை மக்களுக்களிக்கும் ஏற்பாடு நடைபெற்றால், காலிகளிடம் ஆயுதம் சிக்கிக்கொள்ளும், காலிகள் இந்தச் சந்தர்ப்பத்தைப்

பயன் படுத்திக்கொண்டு, ஆயுதங்களைத் தாங்கள் பெற்றுவிடுவார்கள் என்று சர்க்கார் சார்பாகப் பேசப்பட்டது. ஆயுதந் தர மறுப்பதற்கு இஃதோர் காரணம். பிறிதொன்றும் கூறுவர் அரசாங்கத்தார். வகுப்புக்கலகங்கள் நேரிடுமாயின், அச்சமயத்தில் மக்களிடம் ஆயுதமும் இருந்தால், நிலைமை மோசமாகிவிடக்கூடும் என்பர்.

இரண்டும் ஒரு விதத்தில் உண்மையே. ஆனால் இருவிதமான சங்கடங்களும் நேரிடாதவகையில் போர் ஆதரவாளர்களைக் கொண்ட உள்நாட்டுப் படைகளை ஆங்காங்கேதிரட்டி, ஆயுதப் பயிற்சியைக் கூடுமான மட்டும் அளித்து, ஆயுதங்களை, ஒவ்வோர் ஊருக்கும் ஒரு ராணுவ அதிகாரியை நியமித்து அவர்வசம் ஒப்புவித்து, போர் நெருக்கடி, எதிர்பாராத விதமாக முற்றுமே

யானால், அந்தச்சமயத்தில், பயிற்சிபெற்றவர்களிடம் கொடுத்து, துணைக்குக் கொஞ்சம் அளவுள்ள ராணுவத்தினரையும் உடனிருக்கச் செய்யலாம்.

பிரிட்டனில், உள்நாட்டுப் பாதுகாப்புப் படை, மிகச் சாதாரணமான முறையிலே முதலில் துவக்கப்பட்டது. இப்போது ராணுவத்தினரும் புகழத்தக்க முறையிலே, அந்த உள்நாட்டுப் படை, பலமும் பயிற்சியும் பெற்றுவிட்டது.

திராவிட நாட்டைப் பொறுத்தவரையில், வகுப்புக் கலகங்கள் எழக்காரணமே இல்லை. இந்தப் பகுதிக்குத்தான் முதலில் நெருக்கடி ஏற்படக்கூடுமென்றும், இலங்கைத் தீவுமீது எதிரியின் நாட்டமிருப்பதாகவும், அங்கு எதிரி வெற்றிபெற்று விட்டால் தென்னாட்டின் மீது தாக்குதல் நடத்துவர் என்றும் சில ராணுவ நிபுணர்கள் கூறுகின்றனர். இந்நிலையில், இந்தப் பகுதிக்கேனும், சர்க்கார், ஆயுதங்கொண்ட உள்நாட்டுப் பொதுமக்கள் படையை நிறுவுவது மிகமிகப் பயன்தருமென்று நாம் திடமாக நம்புகிறோம்.

போர் மூண்டதும், காங்கிரசார், போர் ஆதரவு காட்ட முடியாதென்று புகன்றபோதே, சர்க்கார் போரை ஆதரிக்கும் கட்சிகளிடம், போர் ஆதரவு பிரசாரப்

பட்டாளத்தைப் பெருக்கும்பணி, பணந்திரட்டும் வேலை, உள்நாட்டுப் படைகள் அமைப்பது ஆகியவற்றை ஒப்படைத்து, உடனிருந்து உதவியிருந்தால் இன்று நாட்டின் நிலைமையே வேறுவிதமாக இருந்திருக்கும். தோழர் எம்.என். ராய், சிலமாதங்களுக்கு முன்பே, ஆங்காங்கு உள்நாட்டுப் பாதுகாப்புப் படைகளை சர்க்கார் ஏற்படுத்த வேண்டும் என்று எடுத்துக் கூறினார். அவரது கருத்துகளை ஒலிபரப்ப பத்திரிகைகள் கிடையாது. ஒலிப்பரப்பப்படாத கருத்துகள் சர்க்கார் செவியில் புகுவதுமில்லை! எனவே அந்தயோசனை கவனிப்பாரற்றுப்போய் விட்டது.

அரசியல் பிரச்சினையைத் தீர்க்க வந்திருக்கும் சர். கிரிப்சின் முயற்சி, எங்ஙனமாயினும், இந்தயோசனையை, நாட்டுத் தலைவர்களனைவரும், சர். கிரிப்சுக்குக் கூறி, விரைவில் ஆவனசெய்யின், நாட்டுக்கு ஈடில்லாத பணியாற்றினவராவர். அந்தமான் வீழ்ந்தது என்றதும், “ஐயோ! இனி என்னசெய்வது! அங்கிருந்து நமது நாட்டைத்தாக்க எதிரிக்கு முடியுமே” என்று திகில்படும் மக்களுக்கு, ‘ஆளுக்கொரு துப்பாக்கி’ இருக்கிறது என்றால், எவ்வளவோ நம்பிக்கையும் ஆறுதலும் உண்டாகுமன்றோ!

29.3.1942

அந்தோ நெஞ்சு வேகிறது!

நமது பேரன்பர், தமிழர் தளபதி குடந்தைத் தோழர் கே.கே. நீலமேகம் அவர்களின் துணைவியார் தோழியர் தனபாக்கியத்தம்மாள், திடீரென மறைவுற்றது கேட்க, நெஞ்சு வேகிறது. தோழர் நீலமேகம் எவ்வளவு மனமுடைந்திருப்பார் என்பதை நாம் எண்ணிப் பார்க்கும்போது, எரிகிற எண்ணெயில் வீழ்வதுபோல், நமது நெஞ்சு வேகிறது. இயக்கப் பணியாற்றிவரும் அவருக்கு, அவரது துணைவியார், மிக்க உதவியாக இருந்து வந்ததை நாம் அறிவோம். அவரது இல்லத்தில் சென்று தங்கி, உபசாரத்தை நேரில் கண்டவர், இச்செய்தி கேட்டுக் கலங்குவார், பெரியாருக்கு ஒரு நாகம்மையார் கிடைத்து, மறைந்தார், அன்று அவரது வாழ்க்கையிலே ஏற்பட்ட பள்ளம், காலத்தாலும் மூடப்படவில்லை. அதுபோல் தோழர் கே.கே. நீலமேகத்துக்குற்ற துணைவியாக இருந்து வந்த அம்மையாரின் பிரிவு, அவருக்கு, ஆறுதல் அளிக்க முடியாத கலக்கத்தை உண்டாக்கி விட்டிருக்குமென்பதை நாமறிவோம். நாம் வேதாந்தி யல்ல மாயவாதம்புரிந்து அவரைத்தேற்ற, மத உபதேசியல்ல, மறு பிறப்பு பற்றிப்பேசி அவருக்கு மன ஆறுதல்தர, நாம் கருதினாலும் அவர் அதனை ஏற்கார். அவர் ஓர் சுயமரியாதைக்காரர்.

ஆம்! ஆகவேதான், அவர் இந்தச் ‘சோதனை’யிலிருந்து தப்பி, தத்தளித்துத்தேறி, கொந்தளித்துக் குளிர்ந்து, கதறிஓய்ந்து, பின்னர், அஞ்சோம் எதற்கும்’ என்று உறுதிகொள்வார் என்று நம்புகிறோம். அவரது வாழ்க்கைக் கப்பலின் எதிரிலே, பெரும்பாறை தட்டுப்பட்டு விட்டது. அதனைக்கடந்து, மரக்கலத்தைத் தோழர் கொண்டு செல்வார் என்று நம்புகிறோம்.

இத்தாலிய விடுதலை வீரர், காரிபால்டி, தனது, பிரிய மனைவி இறந்தபோது, “ஆம்! என்மனைவி இறந்தார், ஆனால் என் மனைவி மீது நான் கொண்ட அன்பு அணையாது. அந்தஒளி இன்னமும் இருக்கும், அதைத் துணைகொள்வேன், இத்தாலிய விடுதலைப் போரில் மேலும் ஈடுபடுவேன்” என்றுரைத்தாராம். போரிட்டார், வெற்றிகண்டார். தோழர் நீலமேகமும் அத்தகைய இயல்பு படைத்தவரே, இந்தநேரத்தில் அவருக்கும், அவரது மக்களுக்கும் நாம் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

29.3.1942

புன் சிரிப்பு!

வாதி: சொத்து என்னுடையது. முழுப்பொறுப்பும் என்னிடமே தந்துவிட வேண்டும்.

பிரதிவாதி: சொத்திலே எனக்குப்பாகம் உண்டு. அதைப் பிரித்துத் தந்துவிட வேண்டும். சொத்து நிர்வாகத்தை வாதியிடமே கொடுத்துவிட்டால், எனது பாகம் கிடைக்கமுடியாதபடி சூது நடத்தப்படும்.

நீதிபதி: பிரதிவாதிக்கு, சொத்திலே பங்கு உண்டு என்பதை வாதி ஒப்புக்கொள்கிறாரா?

வாதி: பங்குஉண்டு. ஆனால் சொத்தைப் பிரிப்பானேன். இருவரும் சேர்ந்து அனுபவிப்போம்.

பிரதிவாதி: வேண்டாம்! வேண்டாம்! அவர் டாம்பிகச் செலவாளியாகவும், நான் உழைப்பாளியாகவும், அவர் அதிகாரஞ் செலுத்தவும் நான் அடங்கி ஒடுங்கி இருக்கவும் நேரிடும்.

வாதி: அந்தப்பயம் வேண்டாம், நான் மிக நல்லவன். நானூறு நற்சாட்சிப்பத்திரங்கள் உள்ளன பாருங்கள்.

கோர்ட்டார்: சரி! இருவருக்கும் பங்கு உண்டு. பிரதிவாதி பிரிவினை கோருகிறார். சொத்துச் சீரழியும் என்று வாதி அஞ்சுகிறார். சொத்து, வாதியின் ஏகபோக அனுபோகமாகுமென்று பிரதிவாதி பயப்படுகிறார். இந்நிலையில், பிரித்துவிடுவது தான் முறை. ஆனால், இப்போது சொத்தின்மீது கடன் இருக்கிறது. அதைத்தீர்த்து, சொத்தைமீட்டுக் கொள்ளவேண்டும். அதற்காக, இருவரும் சேர்ந்து இன்னின்ன விதத்திலே ஒத்துழைத்து, சொத்தை மீட்டுக் கொள்ளட்டும். பிறகு பிரித்துக்கொடுக்க நான் இசைகிறேன். இடையே அவர்கள் பிரிவினை வேண்டாமென்று தீர்மானித்து விட்டாலும் எனக்குச் சம்மதமே.

பிரதிவாதிக்குப் புன்சிரிப்பு! வாதிக்கு வாட்டம்!

வஞ்சனையாக, சொத்து நிர்வாகமுழுவதையும் தான் பெற்றுக்

கொண்டு, பிரதிவாதிக்குப் பட்டை நாமமிட வாதி கருதியது ஈடேற வில்லை. நியாயத்தைக் காட்டிக்கேட்போம், நடப்பது நடக்கட்டும், ஒருகை பார்த்தே விடுவோம் என்பது பிரதிவாதியின் எண்ணம். வஞ்சனைக்கு இடங்கிடைக்கவில்லையே என்று வாதி வாட, நீதிக்கு இடமிருக்கிறது என்ற நம்பிக்கையால், பிரதிவாதி மகிழ, கோர்ட் கலைந்தது. வாதி காங்கிரஸ்! பிரதிவாதி முஸ்லீம்லீக்! சொத்து, இந்திய நிர்வாகம், கோர்ட், டில்லிமாளிகை, நீதிபதி சர். கிரிப்ஸ்!

முதலில் காங்கிரஸ் தலைவர் மௌலானா அபுல்கலாம் ஆசாத், சர். கிரிப்சைக்கண்டு பேசிவிட்டு வந்தார், முகத்திலே உற்சாகமே காணப்படவில்லை, என்றும், பிறகு, முஸ்லீம்லீக் தலைவர், ஜனாப் ஜின்னா, சென்று பேசிவிட்டு வந்தார், அவர் முகத்திலே புன்னகை ஜொலித்தது என்றும், பத்திரிகைகளில் வெளிவரக்கண்டோம், மேலே கூறிய, வழக்குரைக் காதை நினைவிற்கு வந்தது. நடந்தது அதுதானா? நாள் சில செல்லின், விளக்கமாகத் தெரிந்துவிடும்.

சொத்தை, சொந்தக்காரிடம் தருவதுபோல நாட்டுக்கு ஏற்ற எதிர்கால அரசியல் திட்டம் வகுப்பதென்றால், நமது பங்கு இதுவெனக் குறித்து தனியாக்கிக்கொடுத்து விடுங்கள். 4 மாகாணங்கள் எம்முடையது - என்று முஸ்லீம்லீக் கேட்கிறது. ஆனால் சொத்தின் மீது கடன் இருப்பதுபோல், நாட்டின் தலைமீது ஆபத்து இருப்பதால், எதிர்கால அரசியல் நிர்ணயம் பற்றிப் பிறகு யோசிப்போம், முதலிலே, சொத்தைக் கடன் காரரிடமிருந்து மீட்பது போல், எதிரியை விரட்டும் வேலையில் ஈடுபடுவோம், அதற்காக, வழக்கை ஒத்திவைத்துவிட்டேனும், ஒன்றுபட்டு வேலைசெய்வோம் என்றும் கூறுகிறது. கிரிப்ஸ் கோர்ட்டின் தீர்ப்பு, நாம் மேலே கூறியுள்ளபடி இருப்பின், சொத்துக்கும் சேதமில்லை, நீதிக்கும் நடுக்கமேற்படாது. பார்ப்போம் பொறுத்திருந்து, பிரபல பாரிஸ்டர், நீதிபதி ஸ்தானத்திலமர்ந்திருக்கிறார், அவர் வாதிடுகிறாரா, நீதியைத் தீட்டுகிறாரா என்பதை!

29.3.1942

வந்தேனே! நானே!!

“காக்கையே! சனிபகவானின் பிரதிநிதியாக, நீ கிளம்பு! சிவனாரின் பிரதிநிதியாக, காளையே நீ கிளம்பு. நாயே! நீயும் நட. வைரவருக்காக, உனக்கு வருகிறது யோகம்.

பழங்காலத்தை உருட்டும் பெருச்சாளியே! பதுங்காதே, வா வெளியே, கணபதியின் பிரதிநிதியாக நீ புறப்படு.

குப்பையில் புரண்டு கிடக்கும் கழுதையே! நீயும் புறப்படு, நீ தேவகானத்துக்குப் பிரதிநிதி என்று தெரிவித்துவிடு.

ரயில் பிரயாணத்திலே பெட்டியோ, கூஜாவோ, மூட்டை முடுச்சோ, திருடியவன், பிரயாணிகளின் பாதுகாப்புச் சங்கப் பிரதிநிதியாகக் கிளம்பட்டும்! உப்பு மூட்டையைத் திருடிவிட்டு, ஊராரிடம் உதைப்பட்டுக் கிடந்தவன் ஊர்காப்புச் சங்கத்தின் உன்னதப் பிரதிநிதியாகப் புறப்படட்டும். எட்டாவது கள்ள புருடனுக்காக, ஏழாவது பேர்வழியை ஏமாற்றியவள் கற்புக்கரசிகளின் கழகத்தின் சார்பாகப் பேசுவேன் என்று சொல்லிக்கொண்டு, சுழல் கண்ணும், “ஷோக்” நடையும், உடன்வரக் கிளம்பட்டும். உச்சுக் குடுமிகள் நவநாகரிகத்தின் பிரதிநிதிகளாகவும், ஊசல் ஊறுகாய்க்கு ஒரு காதம் ஓடும் பேர்வழிகள் வள்ளல்களின் வாரிசாகவும், கிளம்பட்டும். மூளையற்ற முத்தண்ணாக்களின் முழு அனுமதிபெற்ற ஏகப்பிரதிநிதி நானே என்றுரைத்துக்கொண்டு, பித்தன் புறப்படட்டும்,” என்று வேகமாகவும் உக்கிரமாகவும் கூறினான் நண்பன் வீரன்!

“வீரா! கோபம்வரக் காரணமென்ன? காக்கையும் கழுதையும், நாயும் நாசகாலியும், பெருச்சாளியும் பித்தனும், பிரதிநிதிகளாகக் கிளம்பட்டும், என்று கூறுகிறாயே, என்ன கருத்துடன் பேசுகிறாய், எனக்கும் பிறருக்கும் விளங்கக்கூறு. கோபத்தைக் குறைத்துக் கொள்” என்று நான் கூறினேன்.

“நண்பா, பரதா! நடந்தது என்னவென்று தெரியாதுபோலும். பத்திரிகைகளைப் பார்ப்பதில்லையோ?” என்று கேட்டான் வீரன்.

“பார்க்காமல் என்ன?” என்று பதில் கூறினேன் நான்.

“நீ பார்த்த இலட்சணம் தெரிகிறது. இதோபார். படி” என்று கூறிக்கொண்டே, சுதேசமித்திரன் பிரதியொன்றை என்னிடம் கொடுத்தான். படித்தேன்.

“ஸ்ரீமான் ராமஸ்வாமி நாயகருக்குக் கட்சியேதுமில்லை. அவரை ஆதரிப்பவரும் கிடையாது. தென்னிந்திய பிராமணரல்லாதாருக்கு அவரல்ல பிரதிநிதி. நானேதான்” - என்று ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டி மாஜித்தலைவர், ஸ்ரீமான் ஏ. குப்புசாமி முதலியார், சர். ஸ்டாபோர்டு கிரிப்சுக்குத் தந்தி கொடுத்திருக்கிறார்.” - என்று மித்திரனில் இருந்தது. வீரனுக்குக் கோபம் பிறந்ததன் காரணம், விளங்கிற்று. பார்ப்பனரல்லாதாருக்கு நான் பிரதிநிதி, என்று வேலூர் தோழர் குப்புசாமி கூறினதால், வீரன், காக்கை கழுதை, காலி கள்ளன், ஆகிய எதற்கும் பிரதிநிதி வேலைகொடுக்க முன்வந்தானென்பது விளங்கிவிட்டது.

உண்மைதானே! பார்ப்பனரல்லாதப் பெருங்குடி மக்கட்காக, தோழர் குப்புசாமி பிரதிநிதி என்று கூறத்துணியும்போது, அதிலும், பார்ப்பனரல்லாதாரின் கட்சியும், அதன் தலைவரும் இருக்க, அங்கு ஒண்டவோ, ஒதுங்கியிருக்கவோ, இடமும்பெறாது, அந்தக் கட்சியைக் கண்டபடி தூற்றிக்கொண்டு வாழும் ஒருவர், வெட்கமின்றி, நான்தான் பார்ப்பனரல்லாதாருக்குப் பிரதிநிதி என்று கூறுவது துடுக்குக் குணந்தானே! பிரிட்டிஷ் பேரறிவாளிகளைத் திணறும்படிச் செய்த திறமும் தீரமும் பெற்றிருந்த டாக்டர் நாயர் என்ன! திக்விஜயம் செய்துத்தமிழரைத் தட்டி எழுப்பி வெற்றிக்கொடி நாட்டி தமிழர் வெண்சாமரம்வீச கவர்னர் கைலாகு கொடுக்க ஆரியர் அஞ்சி ஒருபுறம் ஒதுங்கி நிற்க, அரசோச்சிய வீரத்தியாகராயர் என்ன! பாராளும் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் புகழத்தக்க ராஜதந்திர நிபுணராக விளங்கிய பனகல் அரசர் என்ன! இவர்கள் தோன்றிய கட்சியிலே, எட்டுமுறை சிறைசென்று, கொட்டு முரசு தமிழா! என்று முழக்கி, கோல்கொண்ட ஆச்சாரியாரின் கோல் விழச்செய்து, தூங்கிய திராவிடரை எழச்செய்து, குகையைவிட்டு, சிங்கம் கிளம்புவதுபோல், குடும்பங்களை விட்டுத் திராவிடத் தோழர்கள் வெளிவந்து, ஆள்வோரின் வெஞ்சினத்தைக் கண்டு கலங்காது, சிறைசென்று மீண்ட, ஆயிரவருக்கு மேற்பட்ட அருந்தொண்டர் படையைத் திரட்டி, வெற்றிகண்ட பெரியார் என்ன! அவருக்குக்கீழ் தளபதிகள் பலர் என்ன! இத்தகையோரைப் பெற்ற, திராவிடத் திருக்குலத்தாருக்கு, இந்த ஆரியப்

பாதந்தாங்கியா, பிரதிநிதி! நெல்லுக்குப் பிரதிநிதி பதரா! நீருக்குப் பிரதிநிதி சேறா? மலருக்குப் பிரதிநிதி கூளமா? தோழர் குப்புசாமியா, நமது சமூகப் பிரதிநிதி? என்ன நெஞ்சழுத்தம்! எவ்வளவு பித்தம். வீரன் கோபித்துக்கொண்டது தவறல்லவே. இந்தச் செய்தியைக் கேள்விப்படும், எவருந்தான் கோபிப்பர். நானும் கோபித்துக்கொண்டேன் முதலில், பிறகு, பரிதாபப்பட்டேன். ஆணவத்தின் ஆட்டத்தால், அவர் அதுபோல் கூறினார் என்றனர் நண்பர்கள். அது ஒரு நோய், என்று நான் கருதினேன், அவருக்காகப் பரிதாபமும் பட்டேன்.

வேப்பிலை எடுத்து அடியுங்கள்! மஞ்சள் நீரைத் தலையிலே கொட்டுங்கள்! சூட்டுக்கோலை எடுத்துக் காட்டுங்கள்! ஜாட்டை வாரை வீசுங்கள்! பாபம், அவரைப் பேய்பிடித்துக்கொண்டது. பித்தம் ஒரு பேய் போன்றதே! அதனிடம் சிக்கினோர், பிதற்றுவர், ஏதேதோ பேசுவர். இந்தவேளையில், எப்படி இருக்கிறாரோ தெரியாது. நிலைமை யாதாகி விட்டதோ! தலைகீழாக நிற்கிறாரோ? தத்தோமெனக் குதிக்கிறாரோ? நீரோடையில் புரள்கிறாரோ? நானறியேன், அவரது இப்போதைய நிலையை.

இவ்வளவு பித்த முதிர்ச்சியில்லாவிட்டால் கூப்பிடுவாரற்றுக் கிடக்கும் அவர், அழைப்பைப்பெற்று, நமது தலைவர், சர். ஸ்டாபோர்டு கிரிப்சைக் கண்டு பேசும் நேரத்திலே, பார்ப்பனரல்லாதாருக்கு நானே பிரதிநிதி என்றுரைப்பாரா என்பதை யோசித்துப் பாருங்கள்.

வீட்டிலே பலர் விருந்துண்ண, புறக்கடை மேட்டிலே பன்றிகள் மலந்தின்னும் காட்சிக்கும், டில்லி நகரிலே, பெரியார் ராமசாமியும், குமாரராஜா, சாமியப்பா, பாண்டியன் ஆகியோர், பார்ப்பனரல்லாதாரின் பிரதிநிதிகளாக, திராவிட நாட்டுத் தலைவர்களாக, சர். கிரிப்சிடம், பேசிக்கொண்டிருக்கும் நேரத்தில், வேலூர் வெத்துவேட்டு, வெந்ததைத்தின்றதற்கு வேலை வேண்டுமே என்பதற்காகப் பார்ப்பனரல்லாதாருக்கு நான்தான் பிரதிநிதி என்றுரைப்பதற்கும், அதிக வித்தியாச மில்லையல்லவா?

நரகல் நடையழகர், நடுங்கா நாக்கழகர், வேலூர் குப்புச்சாமியாரின் வாயிலிருந்து வெளிவந்த வாடைமிக்க வாசகங்கள் பல உண்டு. அவரது

சகாக்களின் செவிகளுக்கும் நாராசம் போலிருக்கும் நடையில் பேசும் பெருங்குணவான் அவர். பொது மேடைகளில் எதிர்க்கட்சியினரைத் தாறுமாறாகத் திட்டுவதற்காகவே பிறவி எடுத்ததாகக்கருதிக் கொண்டுள்ள இந்த நடமாடும் தப்பட்டையின் போக்கைப்பற்றி நான் பலர் கூறிக்கேட்டதுண்டு, ஆனால் ஆச்சரியப்பட்டதுமில்லை, ஆயாசமடைந்ததுமில்லை. நாடாள நாயை அமர்த்தினால், அது வருகிறவர் போகிறவரைக் கண்டு 'வள்' எனக் குரைத்து வெடுக்கெனக் கடிப்பதுதான் முறை என்று கருதும். கழுதைக்குக் கிரீடம்கட்டினால், அது காலால் உதைத்தும், கத்தியும், தனது ஆட்சியைச் செலுத்தும். படிப்பு, பயிற்சி, பண்பு, பழக்கம், ஆகிய எந்தவிதத்தாலும், நாகரிகம் பெறாதவர்களை மேடைவாசி களாக்கினால், அவர்கள் நரகல் நடையழகைத்தான் காட்டுவார்கள். அவர்களிடம் உள்ளது அதுதானே! தறுதலைத் தாண்டவராயனுக்குத் தர்பாரில் இடங்கிடைத்தால், முடிச்சவிழ்த்த முத்தன், குடித்துப்புரளும் கோவிந்தன், கன்னக்கோல் கந்தன், ஆகியோர் பிரதானிகளாகி விடுகிறார்கள்! இதிலே ஆச்சரியமென்ன இருக்கமுடியும்! இயல்புக்கேற்றபடி இடம் இருக்க வேண்டும். தவறினால், வேறுபல தவறுகள் தானாக வளரும்.

வேலூர்த்தோழர் விடுத்த தந்தியைக் கண்டதும், சர். கிரிப்ஸ், என்ன செய்தார்! "கூப்பிட்டு வாருங்கள் அந்தக் குப்புச்சாமியாரை! அவரேதான் பிரதிநிதி" என்று கூறினாரா? இல்லை! அவர் தமது ஆளைக்கூப்பிட்டார். அவன் அந்தத்தந்தியைக் குப்பைக்கூடையில் போட்டுவிட்டு வேறு வேலையைக் கவனித்தான். இத்தகைய முந்திரிக்கொட்டைகள் விடும் முடங்கலுக்கு வேறு என்ன கதி நேரிடமுடியும்!

பச்சைமுத்து, பவளம் பவுன் ஆகியவற்றைத் தூவிய பஞ்சணையில் சாய்ந்துகிடக்கும் சிங்காரச் சீமான், நானே தமிழரின் தலைவனாக வேண்டும் என்று கூறினாலும், நான் பாரிஸ்டர் படித்துத் தேறியவன், பல கலைவல்லவன், பட்டம் பல பெற்றவன், எனவே நானே தமிழரின் தலைவராக வேண்டும் என்று சொன்னாலும், தியாகத்தீயில் குளித்தெழுந்து, கஷ்டநஷ்டமெனும் கடலைக் கடக்கத்துணிந்து, மலைபோல் வரும் எதிர்ப்பை மலர்ச்செண்டுபோல் கருதி வரவேற்று, உழைத்து, உறுதிகாட்டி, ஊராள்வோரின் உபசாரமோ,

உல்லாசவாசிகளின் உரசலோ இடையே உறவு கொண்டாட முன்வந்தாலும், மயங்காது, மனங்குலையாது உள்ளவரே எமக்குவேண்டும் அவரே எமது தலைவர், என்று கூறும் தமிழரிடையே, எதிலும் ஏழாமிடமும் பெறாத ஒருவர், நான் உங்கள் பிரதிநிதி என்றுரைத்தால், தமிழர் அதைக்கேட்க மனம் ஒப்புவார்களா? வீதி வழியேபோகும் வசீகரக் கன்னிகையை நோக்கி, அந்த மங்கைக்கேற்ற மணாளன் நானே என்று ஒரு மடமன்னார்சாமி கூறினால், பற்கள், கீழே வீழாதா! பக்கத்திலே இருந்து கேட்பவர்கள், சும்மா இருப்பார்களா?

பார்ப்பனரல்லாதாருக்குப் பிரதிநிதிகளாக, பண்புள்ளவர்கள் வேண்டும்! பக்குவமுள்ளவர்கள் வேண்டும்! பதவியும் பட்டமும் பெற்றவர்களைக் கண்டதும், பத்தும்விட்ட பன்னாடைகள்போல் பராக்குக்கூறும் பேர்வழிகள், எப்படிப் பார்ப்பனரல்லாதாருக்குப் பிரதிநிதியாக முடியும்! எதைக்கண்டு இந்தக் குப்புசாமியாரை சர். கிரிப்ஸ் கூப்பிடுவார். இது காங்கிரசிலே ஒரு கொடி தாங்கி! கோபுரத்துப் பொம்மை!! தமிழரின் கோடரி! இதனை ஏன் சர். கிரிப்ஸ் கூப்பிடப்போகிறார்!

தென்னாட்டுக் காங்கிரசின் பிரதிநிதியாக, ஒரு ஆச்சாரியார் போகமுடிந்தது! பார்ப்பன சபை காங்கிரஸ், என்பதற்கு, பளிச்சென்ற உதாரணம் இது. தென்னாட்டுக்காங்கிரசிலே, வேறு எந்த 'தமிழர்' பிரதிநிதியாக மதிக்கப்பட்டார்? தென்னாட்டுக்கட்சியாகிய ஜஸ்டிஸ் கட்சிக்கு, 4 பேர் பிரதிநிதிகள்! நால்வரும் தமிழர்! காங்கிரசிலோ, தென்னாட்டுத் திருத்தூதராகச் சென்றவர் ஒரு பார்ப்பனர் மட்டுமே! ரோஷமிருந்ததா மற்றக் காங்கிரஸ் தமிழ்த்தலைவர்களுக்கு!! குமாரமங்கலம் ஜெமீன்தாரரைக் கூப்பிடுவார் இல்லை! ஒளி வீசும் வைரக்கடுக்கனை அணிந்து கொண்டு தஞ்சைத்தரணியில் காங்கிரசின் ஒளி வீசச் செய்வேன் என்றுகூறும் சீமான் நாடிமுத்து, சேலம் நாச்சியப்பர், கோவை ராமலிங்கர், கூடலூர் சீதாராம ரெட்டியார், மற்றும் முத்துரங்கம், வெங்கடசாமி முதலிய ஆழ்வாராதிகள், ஆகிய யாருக்காகிலும் அழைப்பு விடப்பட்டதா! கூப்பிடுவாருண்டா இந்தக் கூட்டத்தை! ஜஸ்டிசுக்கு 4 பேர் பிரதிநிதிகளாகப் போனார்களே, நமது தென்னாட்டுக் காங்கிரசுக்காகவும் நாலு பேரைக் கூப்பிடட்டுமே என்று கேட்கக்கூட ரோஷம் பிறக்கக்காணோம்.

“எங்கள் நாட்டிலே, காங்கிரசென்பது ஒரு பார்ப்பன சபை என்றுதான் நாங்கள் கருதியிருக்கிறோம்.”

“காரணம்?”

“காரணம் ஆயிரமுண்டு, ஒன்று பாருங்கள். தென்னாட்டுக் காங்கிரசுக்காக ஒரு ஆச்சாரியார்தானே இங்கு வந்தார்?

“ஆமாம்.”

“மற்றும், அதிலே எத்தனையோ தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் பார்ப்பன தாசர்கள்.”

பெரியாருக்கும், சர். கிரிப்சுக்கும் இதுபோன்றுதானே பேச்சு நடந்திருக்கும்! சர். கிரிப்ஸ், காங்கிரசில் பார்ப்பனியம் தாண்டவமாடுவதைத் தெரிந்து கொண்டிருப்பார் என்பது திண்ணம்.

இந்த இலட்சணத்திலே குமாரமங்கலம் ஜமீன்தாரும், மாஜி முதலமைச்சரும், பாரிஸ்டர் படிப்பும், மேனாட்டுப் பழக்கமும் பெற்ற சுப்பராயன் போன்றவர்களின் கதி இருக்கிறதென்றால், மற்றக் குப்பன் சுப்பனைக் கேட்பவர் யார்? எங்கே கிடந்தால்தான் என்ன? இதைக் கவனிக்காது, தோழர் குப்புச்சாமி, நான்தான் பார்ப்பனரல்லாதாருக்குப் பிரதிநிதி என்று கூறுகிறாரே, இந்தப் பித்தத்தைத் தமிழரே, தயவு செய்து தெளியவைக்க வேண்டாமா!

‘மதனகாமராஜன்’ என்ற தமிழ் படத்திலே, ஹாஸ்ய நடிகர் தோழர் துரைராஜ், தாண்டவன் என்ற பாத்திரமாக நடிக்கிறார், பார்த்திருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். தோட்டத்திலே வேலை செய்யும் தாண்டவனை, திமிர்பிடித்தக் குறும்பனொருவன், “நீர் ஓர் மன்னன் முற்பிறப்பிலே, இப்போதும், உனது நாட்டுமக்களும் உனது மாஜிபட்டமகிஷியும் உன்வரவுக்காகக் கார்த்துக் கொண்டிருக்கின்றனர்” என்றுகூற, தாண்டவன் அதை நம்பி தலையிலே பாகை சுற்றிக்கொண்டு, மண்வெட்டிக் காம்பை, செங்கோல் எனக்கொண்டு, ராஜநடை நடந்து, ராணியைக் காணச் செல்கிறான். தோழர் குப்புசாமியும், இனி, சர். கிரிப்சுக்குத் தந்த தந்தியைக் கையில் பிடித்துக்கொண்டு, “வந்தேனே! நானே! வண்மைத்தமிழரின்

பிரதிநிதிதானே” என்று பாடிக்கொண்டும், வருவார்போலும்!! யார் கண்டார்கள் இன்னம் என்னென்ன நடக்குமோ!

5.4.1942

கனவில் கண்ட கன்னிகை!

“சிற்பிகள் தமது சிந்தனையைச் சித்திரமாக்கியதுபோல் சமைத்த ஓர் சிங்கார நிலையம். நிலா காய்கிறது! வாரிவீசுகிறது ஒளியை! முல்லைச் சிரிப்புடன், முற்றத்திலே ஓர் மங்கை நின்று கொண்டிருக்கிறாள். அவளது ரூபலாவண்யமோ, வர்ணனையைக் கடந்தது. என்னைத்தனது கண்களால் அழைத்தாள். மதனனே! வா! என்று பாடினாளா? இல்லை! ஏன் பாடவேண்டும்! அவளது பார்வை, பல்லாயிரம் பாடல்களின் கருத்தைத் தெரிவித்தன. தென்றல் எனைத்தழுவிற்று. தேன் குடத்தை நாடிநான் நடந்தேன். பூங்கொடியின் புன்னகை எனை இழுத்துச்சென்றது. கிட்டே சென்றேன்! தொட்டேன் கரத்தை! மட்டற்ற மகிழ்ச்சியுடன், அவளது கண்ணாடிக் கன்னத்தில், முத்தமிடத் துடித்தேன். நெஞ்சு நெகிழ்ந்தது! ஆனால்...”

“பிறகு என்ன நடந்தது?”

“திடீரென்று நான் விழித்துக் கொண்டேன்.”

“விழித்துக்கொண்டாயா! அப்படியானால் நீ இதுவரை கூறிவந்தது, கனவில் நடந்த விஷயமா?”

“ஏன் கேட்கிறாய் அந்த வெட்கக்கேட்டை. கனவில் கண்டேன் அந்தக் கண்கவரும் கன்னிகையை. விழித்தேன் திடீரென்று. மாளிகை ஏது! மங்கை ஏது! அவளது சதங்கை ஒலி ஏது! எல்லாம் போயின. ஏக்கமே நின்றது.”

“அட துர்ப்பாக்கியமே; விழித்ததும் சர்வமும் சூன்யமாயிற்று போலும்.”

“அதுபோன்றிருந்தாலும் கவலை அதிகமிராதே. கனவில் நான் கண்டதோ ஓர் கட்டழகியை. ஆனால் விழித்துக்கொண்டு பார்க்கிறேன், யாரைக் கண்டேன், என்று எண்ணுகிறாய்? விளக்குமாறும் கையுமாக வேலைக்காரி வீராயி நிற்கக்கண்டேன். வீடு கூட்ட வேண்டும், வெளியே போய்ப்படுங்கள்” என்று உத்திவிட்டது, அந்த உருவம். கனவில் கண்டதற்கும்

கண்ணெதிரே நிற்பதற்குமுள்ள வித்தியாசத்தைக் கண்டு கலங்கினேன்! என்று கனவில் தான் கண்ட கன்னிகையைப் பற்றி ஒரு வாலிபன் தனது நண்பனிடம் கூறும் கதைபோலாயிற்று, காங்கிரசாரின் நிலைமையும்.

கனவில் ஓர் கடைக் கண்ணழகியைக் கண்டதுபோல், இந்தியாவுக்கு வந்த சர். ஸ்டாபோர்டு கிரிப்ஸ்மீது புகழ்பாடி, பூரித்து, கேட்டதைத்தருவார் என்று நம்பி மகிழ்ந்தனர், ஆனால், விழித்துக் கொண்டவன் விம்மியதுபோல், இன்று சர். கிரிப்ஸ் தந்த திட்டத்தைக் கண்டு, கைப்பிசைந்து நிற்கின்றனர். சர். கிரிப்சை நம்பியது, கனவில் கண்ட காட்சிபோலாயிற்று அவர்களுக்கு.

கிரிப்ஸ் எமது நண்பர். காந்தியாரின் சீடர். ஜவஹரின் தோழர். அவரும் ஒரு மகாத்மா! அவர் இனி நாட்டுக்கு நாம் கோருவதைத் தருவார், என்று காங்கிரசார் வாயாறப்புகழ்ந்தனர், வந்துவிட்டது யோகம் என்றனர். கிரிப்சின் உடை, அவரது நடை, அவரது பேச்சு, மூச்சு, புன்சிரிப்பு, புதுப்பார்வை, முதலியன பற்றி வர்ணித்தனர். அவர், கதர் சட்டை அணிந்திருந்தார், காந்தியாருக்குக் கதவண்டை வந்திருந்து கைலாகு கொடுத்தார், ஜவஹருடன் விருந்துண்டார், பிர்லா மாளிகைக்கு வந்து போனார். அவர் காங்கிரசுக்குத்தான் கடாட்சிப்பார், என்றுரைத்தனர், பூரித்தனர்.

இந்த எண்ணம் வீண்கனவாயிற்று! முன்பு, காந்தியாஸ்ரமத்தில் வந்து தங்கிய கிரிப்ஸ், இம்முறை வைசிராய் மாளிகைக்குச் சென்றார். முன்பு காங்கிரஸ்காரருடன் மட்டுமே பழகியவர், இம்முறை எல்லாக் கட்சித்தலைவர்களையும் கண்டு பேசினார். அந்தக் கிரிப்ஸ் வேறு, இந்தக் கிரிப்ஸ் வேறு என்பதைக் காங்கிரசார் உணரும்படியாயிற்று.

முஸ்லீம் லீகோ, நந்தம் கட்சித்தலைவர்களோ, சர். கிரிப்ஸ் வந்தபோது, “எந்தன் இடது தோளும், கண்ணும் துடிப்பதென்ன?” என்று பாடி ஆடிடவில்லை. வருகிறவரிடம் நமது குறையையும் கோரிக்கையையும், முடிபுகளையும் முதுமொழிகளையும் எடுத்துரைத்து நீதிவழங்குமாறு கேட்போம். தந்தால் பெறுவோம். இல்லையேல், போரிடுவோம், என்று மட்டுமே

தீர்மானித்தனர். எனவே, சர். கிரிப்சின் வருகைக்குப்பிறகு, காங்கிரசார் .... நாமிருக்கக் காரணமில்லை. நாம் அதிகமாக ஏதும் எதிர்பார்க்கவில்லை. அரசியலில் ஏமாளியாக இருக்க நமது கட்சி என்றைக்கும் இசைந்ததில்லை, இசையப்போவதுமில்லை. நமது கட்சி, கானலை நீரெனக்கருதி அலையாது, மயக்குபவரைக்கண்டு மலைக்காது.

காங்கிரசாருக்கோ, திடீர்க்காதல் ஏற்படும், உடனே மனமுறிவு உண்டாகும், காமமேலீடுகள் எழும். உடனே வேதாந்த விசாரம் உண்டாகும், இத்தகைய குணாதிசயங்களைக், காங்கிரசின் கொள்கை மாற்றங்கள், திட்டங்கள் தீக்கிறையானது ஆகியவை களைக் கவனிப்போர் உணர்வர்.

எனவே, அவர்கள், சர். கிரிப்ஸ் வரப்போகிறார் என்ற செய்தி வெளிவந்ததும் ஆனந்தத்தாண்டவமாடினர். அதுகண்டு நாம், இது இப்போது, பிறகு யாது நடக்கிறதோ பார்ப்போம், என்று கருதினோம்.

லீக், திராவிடக்கட்சி, ஆதிதிராவிடச்சங்கம், ஆகிய எதையும் சர். கிரிப்ஸ், ஆதரிக்கமாட்டார். காங்கிரசே இந்தியாவின் ஏகப் பிரதிநிதி என்றுரைப்பார். சீமையிலேயே நமக்காகப் போராடினவர், இங்கு வந்தால், கைமேல்கனி கிடைக்குமென்று கூறினர். இப்போது?

சர். கிரிப்ஸ், சிரித்துக்கொண்டே நம்மைச்சித்திரவதை செய்துவிட்டார். நாட்டைத் துண்டாடும் திட்டத்தை நீட்டுகிறார். பொறுப்பைத்தர மறுக்கிறார், இவரது புன்சிரிப்பு யாருக்கு வேண்டும்? இந்த இலட்சணமான திட்டத்தை எடுத்துக்கொண்டு இங்கு ஏன் வந்தார். போய்வரட்டும், கிரிப்ஸ்துரை! போதும் அவரது உறவு! என்றும், மற்றும் பலவும் பேசுகின்றனர், தேசபக்தியை, அறிவைவிட அதிக சக்திவாய்ந்ததெனக்கருதும் காங்கிரசார்.

சர். கிரிப்ஸ், வருவதற்குள், நாட்டிலே பல கட்சிகளும் கலந்து பேசி, ஒரு பொதுத்திட்டத்தைத் தயாரித்திருந்தால், இன்று கிரிப்ஸ் திட்டம் குற்றுயிராகக் கிடக்க நேரிடாது, காங்கிரசும், கண்கலங்க நேரிட்டிராது. பேராசை பெருநஷ்டம் என்பது பெரியோர்களின் வாக்கு. அதை மறந்தது காங்கிரஸ்.

கிரிப்ஸ் திட்டம், நமக்கோ, முஸ்லீம் லீகுக்கோ, பூரணத் திருப்தி அளித்துவிடக்கூடிய தென்று நாம் கூறவில்லை.

சர்க்கசிலே, கம்பிமீது நடக்கும் வித்தைக்காரர்போல், சர். கிரிப்ஸ், இந்திய அரசியல் சிக்கலின்மீது நின்று கொண்டு தாண்டவமாடுகிறார். மற்றவர்களைவிடச்சற்று சாமர்த்தியமாக இவர் ஆடுகிறார்! ஆனால் சிக்கல்தீரா முன்னம், இந்திய அரசியல் நல்லமுறையில் இராது.

காங்கிரஸ் காரியக்கமிட்டி, இப்போதைய கிரிப்ஸ் திட்டத்தை ஏற்க மறுத்துவிட்டதாம்.

எதிர்கால அரசியல் திட்டம் எங்ஙனமிருப்பினும் இப்போது, இந்தியப் பாதுகாப்புப் பொறுப்பை, இந்தியரிடம் ஒப்புவிக்க வேண்டுமாம். இந்தமாற்றம் நேரிட்டால், காங்கிரஸ் இணங்குமாம். சர். கிரிப்சும், இன்னும் சில தினங்களில், சிக்கல்கள் தீர்ந்துவிடுமென்று கூறுகிறார். நம்பிக்கை நல்லதோர் மருந்து என்பதை நாமறிவோம். நடப்பது எதுவெனக்கண்டு, பிறகு நமது கருத்தை வெளியிடுவோம். நமது தலைவர்கள், சர். கிரிப்சினிடம், திராவிட நாடு தனிநாடாக அமைதல் வேண்டுமென்பதை வற்புறுத்தி உரைத்தனர் என்பது கேட்டுப் பெருமகிழ்வடைகிறோம், நமது தலைவர்கள் செய்யும் முடிவு, திராவிடச் சமுதாயத்துக்கு ஏற்றதாகவே இருக்கும், அந்த முடிவு தெரிந்து, திராவிடர், திரண்டெழுந்து, தலைவரின் ஆணைப்படி நடப்பர் என்பதில் நமக்குச் சந்தேகமில்லை. நமது எதிர்கால வாழ்வுபற்றி இன்று போரிடும், நால்வரும், நாடெங்கும் சுற்றுப்பயணம் செய்து, சர். கிரிப்சிடம் பேசியதும் பிறவுமாகியவைகள் பற்றிப்பிரசாரம் புரியவேண்டுகிறோம். தமிழகம், நால்வரின் நாதத்தைக் கேட்டு இன்புற, எழுச்சிபெறத் தயாராக இருக்கிறது.

சர். கிரிப்சின் திட்டத்தை ஏற்பதும் ஏற்காததும், கட்சியின் தீர்ப்பைப் பொறுத்திருக்கிறது. ஆனால், எது எப்படி யிருப்பினும், சர். கிரிப்ஸ், மூன்று அடிப்படையான உண்மைகளை உணர்ந்து உரைத்திருப்பது கண்டு மகிழ்கிறோம்.

(1) இந்தியா ஓர் உபகண்டம்.

(2) இங்குபல இனமக்கள் வாழ்கின்றனர்.

(3) கூட்டாட்சியில் சேர எந்த மண்டலமேனும் மறுத்தால், அது தனிநாடாக அமைதலே முறை என்ற இம்மூன்று அடிப்படை உண்மைகள் மறுக்கவோ, மறைக்கவோ முடியாதபடி வெளியாகி விட்டன.

சர். கிரிப்சின் திட்டத்தின்படி திராவிட நாடு நமக்குக் கிடைப்பதாயின் பொன்னேபோல்போற்றி வரவேற்போம். இல்லையேல், நமது இன எழுச்சியை உலகு அறியும் வண்ணம், வீறுகொண்டு மிளிரச்செய்வோம். நமது இனத்தின் முற்காலச் சிறப்புகளின் மறுபதிப்புகள் இயற்றுவோம். கிரிப்சுகள் பலர்கூடி நின்று தடுத்தாலும் நில்லோம். பகைவெல்வோம். பார்புகழ், திராவிட நாட்டை அமைத்தே காட்டுவோம்.

இரண்டாண்டுகளுக்கு முன்பு, நமது பிரிவினைத் திட்டத்தைப்பற்றி ஏளனம் செய்தனர் ஏமாளிகள்! கண்டித்தனர் கசடர்கள்! எலிவளை எலிகளுக்கே என்று குறும்பு மொழிந்தனர்.

இதோ காணீர் அந்த எலி, இரண்டாண்டுகளுக்குள், புலியெனப் பாயத்தொடங்கி விட்டது. இரண்டே ஆண்டுகளுக்குள் அதற்கெனப் பிரத்தியேகப் பிரசாரமோ, படைதிரட்டவோ இல்லாமற் போயுங்கூட திராவிடநாடு தனிநாடாக அமைதல் வேண்டும் என்ற நமது கோரிக்கை, பிரிட்டிஷ் தூதராலும் ஓரளவு ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டது. சர். கிரிப்ஸ், ஜஸ்டிஸ் கட்சிக்கு நண்பரல்ல! ஆனால் அவர் நீதிக்கு விரோதியாக முடியாது! நீதியின் வழி நிற்கவிரும்புவோர் நமது உரிமையை மறுக்கத் துணியார்.

பாகிஸ்தான்-திராவிடஸ்தான்-இடையே ஆரியஸ்தான் என்று மூன்று மண்டலங்கள் அமைவதே, நாட்டின் எதிர்காலத்தில் அமைதியை நிலைநாட்டும். பிறதிட்டங்கள், அமளியைத் தூண்டிவிடும். நாட்டின் எதிர்காலம் இவ்விதமான மூன்று தரணிகள் கொண்ட முறையாகவே இருத்தல் வேண்டும். நமது நாட்டை நாமாள விரும்புவது நமது பிறப்புரிமை. அதை மறுக்க யாருக்கும் உரிமை இல்லை.

போரின் போக்கு பயங்கரமானதாகிக்கொண்டே வருகிறது! வீரரஷியர்களை வசந்தகாலத்தில் வாட்டி வதைக்க, வன்னெஞ்ச நாஜிப்படைகள் வண்டி வண்டியாகச் செல்கின்றன.

கருங்கடலைக் கடக்கவும், காகசஸ் கரையோரம் சேரவும், நாஜிகள் தமது ராணுவத்தையும் ராஜதந்திரத்தையும் ஏவுகின்றனர். பல்கேரியா, ருமேனியா, துறைமுகங்களில் அச்சுநாட்டுக் கப்பல்கள் அணி அணியாக உள்ளனவாம். கடற்கோட்டைகளான மால்ட்டா, ஜிப்ரால்டர், ஆகியவைமீது நாஜி விமானங்கள் குண்டுமாரி பொழிகின்றன. எகிப்திலும் சிரியாவிலும் நாஜிகள் தமது படைகளை ஏவதிட்டமிட்டுள்ளனர் என்றும், டார்டனல்ஸ் ஜலசந்தி வழியாக அச்சுக்கப்பல்கள் போக அனுமதி தரும்படி, வான்பேபன், துருக்கி சர்க்காரிடம் காவடி எடுப்பதாகவும், இதற்கு 'இலஞ்சமாக' கிரீசில் சில பிரதேசங்களைத் துருக்கிக்குத்தர இசைவதாகவும் தெரிகிறது.

மேற்கே இதுவெனில், கிழக்கிலோ, ஜப்பானின் வேகம் குறையக்காணோம். பர்மாவில் ஜப்பானியப் படைகளைச் சீனர் எதிர்த்துநின்ற போதிலும், ஜப்பானிய முற்போக்கு குறையக் காணோம். அந்தமான் வீழ்ந்துவிட்டது. தென்னிந்தியா பூராவும் திகில்கொண்டு வதைகிறது. இத்தகைய நிலைமையில், நாட்டுப் பாதுகாப்புக்காக, பிரிட்டிஷார், ஒரு கட்சியின் தனிநபரை அதிகாரியாக்குவதைவிட, சகலகட்சிகளின் தலைவர்கள்கொண்ட, நாட்டுப்பாதுகாப்புக் கழகத்தை உடனே அமைத்து, அந்தக் கழகத்தின் பொறுப்பில், படைதிரட்டுவது, உள்நாட்டுப் பாதுகாப்பு, பணந்திரட்டுவது பீதியைத் தடுப்பது ஆகிய பணிகளை ஆற்றும் பொறுப்பை ஒப்படைத்தலே முறை.

இடைக்கால இடரைப்போக்க, இம்முறையில் ஜனாப் ஜின்னா, பெரியார், டாக்டர் அம்பேத்கார், பண்டித ஜவஹர், எம்.என். ராய், சர். சண்முகம், சர். கே.வி. ரெட்டி ஆகியோர் கொண்ட நாட்டுப் பாதுகாப்புக் கழகத்தை சர்க்கார் அமைத்துவிட்டு, போர் முடிந்ததும், முஸ்லீம்களுக்குப் பாகிஸ்தான், திராவிடருக்குத் திராவிடஸ்தான், ஆரியருக்கு ஆரியஸ்தான் அமைத்துத் தரப்படும் என்று வாக்குறுதியும் தந்துவிட்டு சரிதம், இலக்கியம் ஆகியவற்றைச் சாட்சியாகக்கொண்டு, மூன்று மண்டல அமைப்பு ஏற்படச் செய்தால், என்றென்றும் பிரிட்டிஷ் புகழ் மங்காதிருக்கும். காங்கிரசின் கண்சிமிட்டலையோ, கைப்பிசைவதையோ கண்டு, பிறகட்சியினரை ஒதுக்கிவிட்டு, ஆரிய- ஆங்கிலேய ஆலிங்கனம் நடைபெற்றால் நாடு தாங்காது, அன்று ஏற்படக்கூடிய கொதிப்பை; சர். கிரிப்ஸ், நெருப்புடன் விளையாட மாட்டார் என்றே நம்புகிறோம். காங்கிரசார், கனவில் கண்ட கன்னியைக் காணோமே என்று கலங்குகின்றனர். ஆனால் அவர்கள், எந்த நேரத்திலும்

வளைந்துகொடுக்கும் வகை கற்றவர்கள். எனவே, பிரிட்டிஷ் சர்க்கார், ஏமாறாமல் இருக்கவேண்டும். இல்லையேல், இஸ்லாமியர், திராவிடர் ஆகியோரின் அன்பை இழக்கவேண்டி நேரிடும். அதுபோய், மற்றதெது விருப்பினும், நீரில்லா ஆறு, நிலவில்லா வானம், உப்பில்லாப் பண்டம், போன்றதே யாகும்!

5.4.1942

எனது ஆசிரியரை இழந்தேன்!

தமிழரின் பூந்தோட்டத்தில், மணம் வீசும் மலர்களைத் திடீர் திடீரென, காலமெனுங் கள்ளன், பறித்தழிக்கிறான். அந்தோ, மனதை மலரச் செய்யும் மாண்புகள் படைத்த நமது நண்பர்களை நாம் இழக்கும் கொடுமையில் அடிக்கடி சிக்கி அவதியுறுகிறோம். தமிழரின் நறுமணச் சோலை வேலியற்றதோ! ஏதோ, காலக் கள்ளனின் கன்னெஞ்சத்தின் காரணம்! பெறற் கரியவர்களைப் பெற்று, இனி நமக்கென்ன குறை என்று தமிழன் இறுமாந்திருக்கும் வேளையில், ஆரிய நச்சரவம் புற்றில் பதுங்கவில்லையேல், தலை போகும் என்று பயப்படும் நேரத்தில், எப்படியோ, இடர் நம்மைத் தாக்கி, நமது இன்ப எண்ணங்களை அழித்தொழிக்கிறது. இதனை என்னென்போம்!

திருச்சியில் தோழர் சுந்தர நாடாரைச் சூறையாடிச் சென்ற மரணம், தனது பசி அடங்கப் பெறாமல் சின்னாட்களுக்கு முன்பு, சிரித்த முகத்தழகன், சீர்மிகு குணக்குன்று, பொறுமையின் இருப்பிடம், பொன்னான பண்புகளின் தங்கு மிடம், மாணவர்களின் மனதை மயக்கி, அன்பால் பிணைக்கும் அருங்குண அண்ணல், தோழர் திருவேங்கிடசாமியையும் திருடிக் கொண்டு போய் விட்டது. திடுக்கிட்டேன் செய்தி கேட்டு. நீர் சுரக்கும் கண்களுடன் இங்குமங்கும் நோக்கினேன், ஏதேதோ எண்ணினேன், என் செய்வேன், இன்னமும், குழம்பிய சிந்தையில் தெளிவு ஏற்படவில்லை, கசங்கிய கண்கள் பழகிய நிலை பெறவில்லை, துடித்த நெஞ்சு துடித்தபடி இருக்கிறது.

தோழர் திருவேங்கிடசாமி அவர்கள், எனக்கு இன்டர்மீடியேட் வகுப்பில் ஆங்கில ஆசிரியர்! ஆனால் அன்று முதல், நேற்று வரை அவர் எனக்கு, வாழ்க்கையின் பல துறைகளுக்கும் ஆசிரியராக இருந்து வந்தார். நான் அவரிடம் வகுப்பிலே கற்ற பாடங்களை மறந்து விட்டேன், ஆனால், அவருடனிருந்த நான், கல்லூரிக்கு வெளியே இருந்தும், கல்லூரியை விட்டு நான் நீங்கிய பிறகும் பெற்ற பாடங்களை மறக்க வில்லை- மறக்கவும் மாட்டேன். பொல்லாங்கு எண்ணுவோரைக் காணும் போதும் புன்னகை செய்- கடமையைச் செய்யக் கலங்காதே-

காலத்தை அறிந்து உதவி செய் - தமிழரிடம் பற்றுக் கொள்- அவர்களுக்காகப் பாடுபடுவதைப் பெரிய தோர் பண்பு எனக் கொள்- பார்ப் பனரிடையே உள்ள ஒற்றுமையைப் பார், அதுபோல் தமிழரிடை உண்டாக்க வேலை செய்- என்பன போன்ற அரும் பெரும் பாடங்களை எனக் களித்த ஆசிரிய, நண்பரை, தோழரை, இழந்தேன். தமிழர் ஒரு சிறந்த ஊழியரை இழந்தனர். சென்னை ஓர் சிங்கார புருடரை இழந்தது. பச்சையப்பன் கல்லூரி தனது பரிவுள்ள பரிபாலகரைப் பறிகொடுத்து விட்டது. தோழர் திருவேங்கிடசாமி மாரடைப்பினால் திடீரென மரணமடைந்தார். தமிழரின் திருவிளக்கொன்று அணைந்து விட்டது. என் செய்வது.

அவர், பச்சையப்பன் கல்லூரித் தலைவ ராக நியமிக்கப்பட்டபோது நான் கொண்ட மகிழ்ச்சி சொல்லுந்தரத்த தன்று. அவரது ஆட்சியின் கீழ் எனது கல்லூரி தமிழருக்கு அறிவூட்டும் ஊற்றாக விளங்கும என்றெண்ணிப் பூரித்தேன். அவருடைய தமிழ்ப் பற்றும், பகுத்தறிவுத் திறனும் கண்டு களித்த நான், அவரது புகழை மாற்றாரும் உரைக்கக் கேட்ட காதுகளில், அவரது மரணச் செய்தியைக் கேட்கும் துர்பாக்கியம் பெறுவேன் என்று எண்ணவில்லை. கண்ணால் கனியைக் காணும் நேரத்திலேயே, கல்லடிபட்டுக் கனி கீழே வீழ்ந்தது போல், அவர் மறைந்தார்.

சென்னைக்கு நீர் ஊற்றாக இருக்கும் மாதவரம் ஏரிக்கரை மீது, பெரியார் தடியை ஊன்றிக்கொண்டு நடக்க, அவர் பக்கத்தில், தோழர் திருவேங்கிடசாமி அவர்கள் நடந்து கொண்டு தமிழருக்குக் கல்வித் துறையில் உள்ள குறைபாடுகள் பற்றி விளக்கிக் கூறிக் கொண்டு வர, அக்காட்சியைக் கண்டும், பேச்சைக் கேட்டும் மகிழ்ந்து நான் நடந்து சென்றதும்பின்னர் அவரது விடுதியில், பெரியாருக்குவிருந்தளிக்கப்பட்டதும், அதுபோது நானும் அவருடனிருந்து உண்டதும், பின்னர், கல்லூரி மாணவர்களின் ராணுவப் பயிற்சிப் படையின் விழாவுக்கு அவர் எம்மை அழைத்துச் சென்றதும், இப்போது தான் நடப்பது போல், என் மனக் கண் முன் தோன்றுகிறது. அது நாள் `விடுதலை'யை விட்டு விலகிய மறுநாள் நடந்தது. அதற்கு மறுநாள், எனது ஆசிரியர் என்னைத் தமது இல்லத்திற்கு வரவழைத்து, `விடுதலை'யை விட்டு விலகியது ஏன் என்று

விசாரத்துடன் கேட்டு, பற்பல புத்திமதிகள் புகன்ற காட்சி,இதோ என் எதிரே சித்திரம் போல் நிற்கக் காண்கிறேன்.

ஆனால் அவர் மறைந்துவிட்டார். அவரது மறைவால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்ய முடியாது என்றுரைப்பது சம்பிரதாயத்தைக் கடந்த பேச்சு.

அவரது குடும்பத்துக்கு என் ஆழ்ந்த அனுதாபத்தை, வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். காலத்தை எண்ணி, மிகக் கலங்கு கிறேன். என் நிலை இதுவெனில், அவரது குடும்பத்தினரின் நிலைமையாதாயிருக்கும், நினைக்கவும், நெஞ்சு வேகிறது.

(திராவிட நாடு - 12-4-42)

சங்கராச்சாரி பதவி தற்கொலை!

திடுக்கிடவேண்டாம்! அழ ஆரம்பித்து விடாதுர்கள்! அவர் செய்து கொள்வது பதவித் தற்கொலையேயொழிய, உயிரைப் போக் கடித்துக்கொள்ளும் செயலல்ல. இந்த நேரத்தில், சங்கராச்சாரியார், அரைப்படியை ஆழாக்காகக் காய்ச்சிய பாலிலே, சீனியும் குங்குமப் பூவும் கலந்து, சாரையும் பாதாமும் சேர்த்து நாதன் மீது பாரத்தைப் போட்டுவிட்டு, பாலைப் பருகி, பஞ்சணை மீதுள்ள மான்தோலாசனத்தில் சாய்ந்துகொண்டு, மாத வரவுக் கணக்கையும் பாதக்காணிக்கை வருவாயையும் கொண்டு, மாத வரவுக் கணக்கையும் பாதக்காணிக்கை வருவாயையும் பிரதானியர் கூறக்கேட்டு, எம்பெருமான் திருநாமம் என்றென்றும் வாழ்க, என்று பூரிப்போடு கூறிக்கொண்டிருப்பார். ஆகவே, அவருக்கோராபத்துமில்லை. ஆனால், மன்னார்குடியில் ஏப்ரல் 11-ந் தேதி மாலை பேசிய ஜகத்குரு சங்கராச்சாரியார், பிறருக்குக் கூறிய யோசனையின்படி பேசிய ஜகத்குரு சங்கராச்சாரியார், பிறருக்குக் கூறிய யோசனையின்படி அவரே நடப்பதாக இருப்பின், பல்லாக்கும் பரிவாரமும், பாதக்காணிக்கையும், பட்டணப் பிரவேசமும, பணியும் பட்டாடையும், பேழையும் பிறவும் விடுத்து, துறந்து வெளியேறிவிட வேண்டிவரும். அது சங்கராச்சாரியார் என்ற பதவிக்குத் தற்கொலை செய்துகொள்வது போன்றதாகும். அக்கருத்தினைக் கொண்ட இந்தலைப்பு அமைந்துள்ளதாதலின், அவரின் அடியார்கள், அழுத கண்களைத் துடைத்துக்கொண்டு, மேலும் படிக்கக் கோருகிறோம்.

ஏப்ரல் 11ந் தேதி, மன்னார்குடியில் ஜகத்குரு சங்கராச்சாரியார் பேசியுள்ளார் அவரது சொற்பொழிவிலே காணப்படும் சில கருத்துகள், பிறருக்கு உபதேசமாக இருத்தலுடன், அவருக்கே, சட்டதிட்டமாகவும் அமைவதாயின், அவரது பதவியைத் துறந்து, பாதசாரியாகி, பாட்டாளியாகி, பாராருக்குழைக்கும் பண்பினராகி அவர் வெளிவந்துவிடுதல் வேண்டும்.

நீதி கெட்டது, கெடுக என் ஆயுள் என்றான் தமிழ் மன்னனொருவன். இதோ சங்கராச்சாரியார் அதுபோல், தமது பதவியினால் வரும், பதங்கள், பாசங்கள், பார்கெடவே உள்ளனவென்பதைத் தமது சொற்பொழிவால் விளக்கிவிட்டார். எனவே, அவர் மறத்தமிழ் மன்னன் போல், கெடுக என் பதவி என்று கூறத் துணிவாரா என்று கேட்கிறோம்.

பயங்கரமான இந்தப் போர், பலரைப் பல கூற வைக்கிறது. சிலரை, நேற்றொன்றும் இன்றொன்றும் இனிவேறொன்றும் பேசவைக்கிறது. இந்த இயல்பு படைத்ததாலேயே காங்கிரசார், முன்பு அகிம்சை என்றனர், இன்று ஆயுதம் என்கின்றனர். சங்கராச்சாரியார் தாமும் சில கூறலே முறை என கருதினார் போலும், அவர் சொன்ன சொற்கள் இவை.

இவ்வருஷம் மிராசுதாரர்கள் தங்களுடைய நியாயமான செலவு போக எஞ்சியிருக்கும் பணத்தை ஏழைகளுக்கு அன்னமிடுவதில் செலவு செய்ய வேண்டுமென்றும் வீடு கட்டுவதோ, நிலம் வாங்குவதோ, ஆபரணங்கள் செய்வதோ, பாங்கியில் போடுவதோ, கூடாதென்றும், வியாபாரிகளும் இதரர்களும் அதோ மாதிரி இவ்வருஷம் கிடைக்கும் லாபத்தை மேற்சொன்ன வழியில் வினயோகிக்க வேண்டுமென்றும், அந்தப் பணத்தைத் தன்னுடைய குடும்பச் செலவுக்கு உபயோகப்படுத்தாமல் அதை விஷமாகப் பாலிக்கவேண்டுமென்றம், ஸ்வாமிகள் கூறினார், என மித்திரன் தெரிவிக்கிறது.

ஈட்டிய பொருளில், வாழ்க்கைக்குத் தேவையானது போக, மீதிறை சொத்தாகவும் சுகபோகக் கருவியாகவும் மாற்றாமல், ஏழைகள் உய்யச் செலவிட வேண்டுமென்ற உருக்கமான இந்த உபதேசம், துறவு நிலைபீண்டுள்ளவரால், இல்லறவாசிகளுக்க எடுத்தோதப்படுகிறது. மிகச் சரி! ஆனால், ஸ்வாமிகளின் நிலைமை என்ன? அவர் வாழ்க்கை இருக்கும் விதம் எப்படி? மேனி வாடாது, பாடுபடாது, பல்லக்குத் தூக்கிகள் வேகமாகச் செல்லவில்லையே, பக்தகோடிகள் மேலும் மேலும் பணந்தரவில்லையே. சூடிய பூ, வாடிற்றே, பட்டாடையின் பளபளப்பு மங்குகிறதே. பணியின் மெருகு குலைகிறதே, பஞ்சணையில் மல்லிகையின் காம்பு உறுத்துகிறதே என்ற கவலைகள் தவிர வேறு கவலையற்று, பாதத்தைப் பலர் தடவிக் கண்களில் ஒத்திக்கொள்ள, பரமனின் பிரதிநிதி நான் என்று கூறிக்ககொண்டு, கரி பரி காவலருடன் காடு உலவி வரும் ராஜபோகமன்றோ சங்கராச்சாரியாருடையது. முதலில்லா வியாபாரம்!

சோகமில்லா வாழ்வு! உழைப்பு கிடையாது! உல்லாசத்திற்குக் குறைவு கிடையாது! இங்ஙனம் இவர் வாழ்ந்துகொண்டு, மிராசுதாரர், வியாபாரி, மற்றவர் ஆகியோருக்கு இதோபதேசமம் புரிவது, ஏதேனும் கொருளுடையதாகுமா! கன்னக்கோலான் களவின் கேடுபற்றியும், காம உள்ளத்தான், ஒழுக்க போதனையும், கசடன் கற்றதனாலாய பயனையும் எடுத்துக் கூறுவது, எள்ளி நகையாடக் கூடியதன்றோ! சாமரம் வீச, சல்லாபிக்க, சோபித வாழ்வுக்குச் சொத்துத் தர, பரிவாரம் பெற்றுள்ள சங்கராச்சாரியார், வாழ்க்கைக்கு நியாயமான செலவு போக, மீதியை ஏழைக்களிக்கவேண்டும் என்று கூறுகிறார் இந்த ஏட்டுச் சுரையைக் கண்டு எவரே போற்றுவர்! யாரை ஏய்த்துவிட முடியுமென்று இவர் கனவு காண்கிறார் என்று கேட்கிறோம்.

இல்லறவாசிகள், நியாயமான செலவு போக, மீந்த பணத்தை விஷம் எனக் கருதவேண்டுமென்கிறார் வேத விற்பன்னர்; வெகு நன்று. நாம் இல்லறவாசிகள், இன்னின்னவற்றையே நியாயமான செலவாகக் கொள்ளல் வேண்டும் என்றுங்குறிப்பிடத் தயார்! விஷம், அவர்களிடம் கூடாது என்று விளம்பத் தயார். ஆனால் ஸ்வாமிகாள்! தங்கள் விஷம் என்ன? தங்களுக்கு உலகமே மாயை என்ற தத்துவாசிரியருக்கு, துறவுக்கு மடம் ஏன், சொத்து சுகம் எதுக்கு, பணம் பரிவாரம் ஆகுமா? விஷமென்று எந்தப் பணத்தைக் குறிப்பிடுகிறீரோ, அதனைத் தாங்கள் பருகியபடியே தானே இருக்கிறீர்? மற்றவர்களாவது, ஓரளவுக்கேனம் உழைத்து, தமது திறமையையும் காட்டிப்பொருள் ஈட்டுகின்றனர். தாங்கள் உழைப்பதுண்டா? உடலில் உழைப்பு தரும் ஓய்ச்சல் என்ற அனுபவம் தங்கட்குத் தெரியுமா? உழைத்தும பயனில்லை என்ற நிலையில் உண்டாகும் சலிப்பு என்ற அனுபவம் தங்களுக்குண்டா? பசியை நீரறிவீரா! பஞ்சத்தில் அடிபட்டதுண்டா? இல்லையே! உழைக்காமல், ஊரார் உழைப்பில் உபாதானம் பெறுகிறீர். தங்களின் வாழ்க்கையின் வசீகரம், தங்கள் திறமையால் கித்ததுமல்ல! பிறரின் மடத்தனத்தால், தங்கட்குக் கிடைப்பது. இத்தகைய வாழ்விலே இருப்பது நியாயமா? பிறருக்கு நீதி புகட்டும் பெரியோய், உமது வாழ்க்கையின் நியாயம் யாது என்றுரைக்க முடியுமா - என்று சங்கராச்சாரியாரை நாம் உறைகூவி அழைத்துக் கேட்கிறோம். அவரோ, அவரது அதிகாரம் பெற்ற

வேறு யாரேனுமோ கூறட்டும் கேட்போம்.

வாழ்க்கைக்கு நியாயமான செலவு போக, மிகுவதை ஏழைகளுக்குத் தரவேண்டுமென்று இவர் மொழிகிறார். இவர் துறவியினுடைய நியாயமான செலவு போக, மேலும பணம் குவிப்பானேன்! இவரது இன்றைய வாழ்க்கை நியாயமான செலவினங்கள் கொண்டதுதானா!

துக்கஞ் சுகமான கட்டறிவு கெட்டவர்க்குத் திக்குண்டோ வெங்குஞ் சிவாலயமா - மக்கினிக்குப் பிச்சைப் பொதுநீழனீர் பேரிதுவே பேசார்தம் மிச்சையிருப் பேகாந்தத் தே துறவியின் இலக்கத்தை இங்ஙன முரைக்கிறார் கண்ணுடைய வள்ளலார், ஒழிவிலொடுக்கமெனும் நூற்கண்.

பசித்தால் புசிப்பது, இருத்தல் பொதுச்சாவடியோ, மரநிழலோ, தாகச் தணிய நீர், ஏகாந்தத்தில் இச்சை, இவையே துறவியின் இலக்கணமாம். இத்துடன், சங்கராச்சாரியாரின் இன்றைய வாழ்க்கை முறையைச் சற்று ஒப்பிட்டுப் பாருங்கள்! நியாயமா அவர் வாழும் முறை? எவ்வளவு சுகானுபவம்! உபதேசம் ஊராருக்கு, இவர்க்கோ உல்லாசம்! இது நீதிதானா? என்று கேட்கிறோம்.

அரச உரிமையை, அந்தப்புரத்தை, அழகு மனைவியை, கொஞ்சும் குழவியைத் துறந்தார் புத்தர். அவர் துறவி, இவர், மடம், மட ஊழியர், மதியிழந்தோர் தரும் தனம், அத் தனத்தாற் பெறும் இன்பம். இவற்றிலே நீந்துகிறார். இவர் உபதேசிக்கவும் முன்வருகிறார்! ஊராரும் கேட்கின்றனர்! அதிலும் எந்த இடத்தில் தமிழகத்தில்! அரச போகத்தைத் துறந்த இளங்கோவடிகளென்ன. காதலையும் கருந்தனத்தையிந் துறந்த மணிமேகலையென்ன, மற்றும் பலரும் வதிந்த இங்குத் துறவுக் கோலமும் துரைமார் வாழ்புக்கு மேற்பட்டதான வாழ்வும் பெற்றுள்ள ஆரியத் தலைவர், உபதேசம் செய்கிறார்.

துறவியோ, தவம்புரிவோர் தவத்தின் இயல்போ எப்பொருளிடத்தும் பற்றிலாமை பொருளோ, பற்று உண்டாக்கும், மோக முறச்செய்யும். எனவே, பற்றற்ற பண்பு வேண்டினோர் உடைமை வேண்டா, என்றார் வள்ளுவனார்.

இயல்பாகு நோன்பிற்கொன் நின்மை யுடைமை

மயலாகு மற்றும் பெயர்த்து

எனவே, சங்கராச்சாரியார் சாற்றியபடி தாம் நடக்க முன்வரவேண்டும். உழைத்து வாழ, ஊராரின் உபதேசகராக இராமல், பாடுபட முன்வரவேண்டும். மடத்தை விடவேண்டும். மாநிதி துறக்கவேண்டும் இதந்தேடல் கூடாது. இனத்தாரை வாழவைக்கும் இயல்பினை நீக்கவேண்டும். மனிதராக வேண்டும். மனதுமறுபிறவி எடுக்குமா!!

மற்றொன்று கூறுகிறார். ஆஸ்திகமும் அறியாமையும் ஒன்று. இதுவரை பகவானைத் தொழவில்லை என்பது மற்றொன்று. இடருற்றபோது ஈசனை வழுத்தினால் போதும் என்பது இரண்டும், எத்துணை மடமையின் சிகரம் என்பதை நாம் விவரிக்கத் தேவையில்லை. மக்கள் இன்றுவரை, பகவானை மட்டுமல்ல. அவரது பிரதிநிதியென்றுரைக்கும் பரப்பிரம்ம சொரூபிகளையும் தொழுது வந்தனர் வருகின்றனர். கண்ட பலன் என்ன? இதோ குண்டுவீச்சு! கடலில் கொந்தளிப்பு!! உள்ளத்திலே பதைப்பு!! இதுவரை தொழாதவர் போலவும், இன்றெனும் தொழுது பாருங்கள் என்று. கெஞ்சும் முறையிலும் சங்கராச்சாரியார் பெசுவதன் சூதை உணருங்கள். சண்டை நேரத்திலே, மக்கள் உயிரையும் உடைமையும், ஊரையும் உற்றாரையும் காப்பாற்றும் வேலையிலே இருந்துவிட்டுக் கோயிற் பெருச்சாளிக்குக் பொழுப்பேற்றும் வேலையைச் செய்ய மறந்துவிட்டால், ஆரிய இனம் இளைக்குமே என்றெண்ணியே போர் முடியுமட்டேனம் ஆண்டவனைத் தொழுவீராக என்று கூறினார்.

இத்தகைய பேச்சு, பாமரரை மேலும் மடத்தனத்தில் ஆழ்த்தும் சூது என்று நாம் கூறுகிறோம். இவரது உபதேசத்தின்படி, முதலிலே, இவர் தமது சொத்து சுகத்தைத் துறந்து, பாடுபட்டுழைத்து, பசித்தால் புசித்து.) வியர்த்தால் குளித்து வாழும் வாழ்க்கையை மேற்கொள்ளட்டும. பார்ப்போம். சங்கராச்சாரியார் என்ற பதவியைத் துறக்கத் தயாரா? என்று கேட்கிறோம் உண்டா பதில்! ஊரார் கேட்பரா!

(திராவிட நாடு - 19.04.1942)

தீட்சிதர் வீட்டில்...!

தீட்சிதர் வீட்டிலே ஆதித் திராவிடருக்குக் கலியாணம்!

நிசமாகவா? எங்கே? எப்பொழுது நடந்தது? என்று என்னைக் கேட்காதீர்கள். தேழர்களே! எனக்குத் தீட்சிதர் வீட்டு வைபவம் எதுயும் தெரியாது. சந்தர்ப்பம் ஏற்பட்டதில்லை. விரும்பினதுமில்லை. பலப்பல கேள்விப்பட்டிருக்கிறேன். நெற்றியில் விபூதி விளங்க மார்பிலே நூலாட, மனத்தில் மமதையாட, துட்சிதத் திருக்கூட்டம் தெருவில் நடக்கக் கண்டிருக்கிறேன். மேனியின் பளபளப்பு, வாழ்க்கையில் உள்ள சுகத்தைச் சித்திரிப்பதைக் கண்டிருக்கிறேன். முல்லை முறுவலும் திருவிழித் திருகலும், கொண்ட தீட்சிதத் திருமதிகளைக் கண்டுள்ளேன். அவர்களின் ஆடை அணி அலங்காராதிகள், கண்காட்சியாக இருக்கக் கண்டிருக்கிறேன். வேறொன்றுமறியேன் பராபரமே! துட்சிதர் வீட்டுக்குள் உமாநாதர் இடபாருடராக வருகிறாரோ, மயில் மீதேறி மால்மருகன் வருகிறாரோ, பாரிஸ் மைனர் மோடாரில் மருகர் வருகிறாரோ, யாதோ அறிகிலேன். சூனால் அவர்கள் நிம்மதியான வாழ்க்கையை நடத்திக்கொண்டு நேத்திரானந்த ரூபர்களாக இருக்கக் கண்டுள்ளேன். யாரின் கடைக்கண் கடாட்சமோ யாரறிவார்!

அவை தவிர, வேறு வைபவம் என்ன ஆங்குளதென்பதை நானறியேன். ஆகவே தீட்சிதர் வீட்டிலே ஆதித்திராவிடருக்குக் கலியாணம் என்று நான் சொன்னதும் எங்கே நடந்ததென்று என்னைக் கேட்காதீர்கள். அது என் வாசகமல்ல!

தோழர் எஸ்.வி. லிங்கம் தெரியும் உங்களுக்கு, காலமும கட்சிப் பணியாற்றியதால் உண்டான கஷ்டமும் சேர்ந்து கரியநிறத்தையும், கவலை உள்ளத்தையும் காலில் சக்கரத்தையும், தரப்பெற்று, தமிழகத்தில் மாநாடு விழா நாள் அறிக்கை வெளியிடுதல் முதலியவற்றைச் செய்வதிலே தனிருசியுடன் விளங்ககம் தேழர் அவர் சொன்னால் தீட்சிதர் வீட்டிலே சூஆதித்திராவிடருக்கு கலியாணம் என்று!

தோழர் லிங்கம் பேச்சு அலாதியானது! சரளமான ஹாஸ்யம், சமயத்திலே வீரம் சுருக்கென்று தைக்கும்

சொல்லம்பு, இவற்றுடன் அபூர்வமான வியாக்யானங்களைச் சில சமயம் கூறுவார் தோழர் லிங்கம். அவருடைய ஹாஸ்யம், சிரிப்பை மட்டவேண்டு மென்பதற்காகச் சிலர் சொற்றொடர்களை வைத்தடுக்கிக் காட்டுகிறார்களே, அது போன்றதல்லஹ திரும்பத் திரும்ப ஒரே விஷயத்தைக்கூறி, அதிலே உள்ள ஹாஸ்யத்தைப் பொதுமக்கள் கண்டுகொள்ளவில்லையே என்று கவலைப்படும் பேச்சல்ல. சிரிக்கவைக்க வேண்டும் என்பதற்காகவே, சிரமப்பட்டு சில கூற முற்படுபவரல்லர் லிங்கம். சகசமாக, இயற்கையாக வரும் அந்த ஹாஸ்யம், சினிமாவிலே தோழர் என்.எஸ்.சிருஷ்ணன் எங்ஙனம ஹாஸ்யத்தை அரியமுறையில் வெளிப்படுத்தக் காண்கிறோமோ, அதுபோல் தேழர் லிங்கம், அவரது பேச்சின் ருசி வரவரக் குறைகிறதோ என்று அஞ்சவேண்டிவருகிறது. அதற்குக் காரணம் அவரல்லலே. இயக்கம் அரைச் சரியாகப் பயன்படுத்தாததுதானே என்பதை எண்ணும்போது வருத்தமும் பிறக்கிறது. நமக்கோ, அஞ்சவும் வருந்தவும் முடிகிறதே தவிர, ஆறுதல் கூறவோ, குறைகளையவோ, சக்தியில்லை மனம் இருக்கிறது மார்க்கம் இல்லை!

சிதம்பரத்தில் 11, 12ஆம் தேரிகளில் ஜஸ்டிஸ் சுயமரியாதை மாநாடுகள் மிக விமரிகையாக நடைபெற்றன. வந்தனம் கூற வந்தார் லிங்கம். மாநாட்டின் அருமை பெருமைகளைச் சீர்சிறப்புகளை, முக்கியத்துவத்தை விளக்க அவர் முக்கால்மணி பேச முற்படவில்லை. மூதுரை, சிறுகதை ஓதவில்லை. நாலே வார்த்தையில் நகைச்சுவையும் பொருட்சுவையும் அடைத்து வீசினார், மாநாட்டிலே.

சிதம்பரத்திலே, ஜஸ்டிஸ் சுயமரியாதை மாநாடு நடப்பதென்றால், அது துட்சிதர் வீட்டிலே ஆதித்திராவிடருக்குக் கலியாணம் நடப்பதுபோன்றது என்றார். ஆனந்தமும் ஹாஸ்யமும் அழகிய கருத்தும் அந்த ஒரு டசன் பதங்களிலே எவ்ளவி சமணீயமாகப் பொதிந்துள்ளன பாருங்கள்! ஐந்தாறு நிமிடங்களாயின கரகோஷம் அடங்க!!

இத்தகைய முடிவுரையின், முன்னுரை, இலேசானதல்ல!

இரண்டாண்டுகளுக்கு முன்பு, வடாற்காட்டிலே வடசேரியிலே, வாலிபவீரர் தோழர் சபாரத்தினம் நடாத்திய ஜஸ்டிஸ் மாநாட்டிலே தலைமை வகித்துவிட்டுப்பிறகு,

வெளிக்கிளம்பாமல் இருந்து வந்த தோழர் டபிள்யு.பி.ஏ. சௌந்தரபாண்டியன் அவர்ளின் தலைமையிலே ஜஸ்டிஸ் மாநாடு நடைபெற்றது. என்றால் அதில் சர்.கிரிப்சிடம் பேசிவிட்டு வந்த நமது இயக்கத் தூது கோஷ்டியில் ஒருவரான பாண்டியனாரின் தலைமையில், வைதிகக் கோட்யிலே மேற்படி மாநாடு நடப்பதென்றால், இலேசான காரியமென்று கூற முடியுமா!

தில்லை மூவாயிரவர் தலத்திலே திராவிடர் ஐயாயிரவருக்கு மேலாகவே கூடி, ஆரியவேதமோதிடும் வீதிகளிலே தமிழ் வீரமுழக்கம் செய்துகொண்டு, நடராசர் நடனமாடும் பதியிலே நாட்டுத் தலைவர்கள் பாட்டு மொழியிலேபரணியுரைத்தனரெனில் அஃகு இலேசானதாகுமா!

சிதம்பரம் மாநாடு கூடும் அத்தினம் காலைவரையிலே காங்கிரஸ் உலகமே களிப்பெனும் கடலிலே மூழ்கிக்கிடந்தது பிற்பகலில்தான், அக்கடலிலே செய்திச்சுறா கிளம்பி, அவர்களைச் சிதைத்தது பத்திரிகைகளிலே முழுப்பக்க முந்திரிக் கொட்டை எழுத்தலங்காரங்களென்ன, முறுவலும் கண்சிமிட்டலுமென்ன, முகமனும் முரசுமெவ்வளவு, அடடா, ஆனந்தத் தாண்டவமாடினர் காங்கிரசார். . மானாட, மழுவாட, மங்கை சிகாமியாட என்று பாடுவார்களே அதுபோல் டில்லி நிருபர்கூற, மித்திரன் இந்து எடுத்தோத, அக்கிரகாரம், ஒலிபரப்ப, அடியார்கூட்டம் தமுக்கடிக்க, அற்புதமான சுயராச்யம் வந்துவிட்டது கிரிப்ஸ், நாம் கோரிய வரத்தைக் கொடுத்தேவிட்டார் என்ற மங்களம் பாடினால் காங்கிரசார். ஜவஹர் நாணுவமந்திரி! ஆச்சாரியார் அடுத்த மந்திரி! மாகாணங்களிலே மந்திரி சபைகள்! இனி ஆட்சி காங்கிரசாரிடந்தான்! என்று கூறினார். ஆடினர். இனிமேல் லீகும் ஜஸ்டிசும் என்னசெய்யும் என்று இரங்கினவர் போல் கேட்டனர். தலையங்கங்கள்கூட வெளிவந்துவிட்டன.

இந்தா விபீஷணா இலங்காபுரி ராச்யம், இந்தா, இந்தா, இந்தா! என்று கிரிப்ஸ்துரை, காங்கிரசாரிடம் பாடி, முடிசூட்டிவிட்டார் என்று முற்றுமுணர்ந்தவரெனக் கூறிடும் முத்தண்ணாக்கள் மோனம் பாடினர் இந்நிலையில், சிதம்பரம் ஜஸ்டிஸ் மாநாடு ஆரம்பமாயிற்று.

இதுகளுக்கு மாநாடு ஒரு கேடாக்கும். கிரிப்ஸ் சுயராச்யம் கொடுத்தான பிறகு இதுகள் கூச்சலிட்டு வறளுவானேன் என்று அக்கிரகாரம் கேலிசெய்தது.

எல்லாம் எதுவரையில்? பிற்பகல் 2 மணிவரை! 2 மணிக்கு வந்தது இழவோலை. அமங்கலகீதம், ஒப்பாரி! கிரிப்ஸ்திட்டம் கை கூடவில்லை துரைகப்பலேற வேண்டியதுதான் பாள்கி, என்று ரேடியோ தெரிவித்தது மோகனம், முகாரியாகி, ஆனந்தபாஷ்யம் கண்ணீராகி, காங்கிரஸ்காரர் களிப்பை இழந்து, தலை கவிழ்ந்தது. எதிரேவரும் ஜஸ்டிஸ்காரரைக் காணவெட்கி, வீடு சென்ற விசாரத்துடன் வீழ்ந்துவிட்டனர். ஜவஹர், ஆச்சாரியார் ஆகியோருக்கு ராணுவ உடை போட்டு, இவர்கள் மனத்திலே சித்தரித்த உருவங்கள் அழிக்கப்பட்டுப போய்விட்டன. சிரித்த முக்ததோடு வெளி வந்துபொண்டிருந்த கிரிப்சின் படங்கள், சிந்தனையில் ஈடுபட்ட முகமுடைய போட்டோவாக மாறி வெளிவந்துவிட்டன.

சுற்றிவந்த சித்தப்ப! சோறிருந்தால் போடு அப்பா என்றானாம் ஒரு ஆண்டி மற்றநோர் ஆண்டியைப் பார்த்து. வந்த ஆண்டி சொன்னானாம், சுற்றிவந்தேன் முத்தப்பா சூனியங் கண்டேன், போடாப்பா என்று சோகித்துக் கூறினானாம், அந்த ஆண்டி. உலகம் கெட்டே போச்சப்பா! உறங்குவதே மேல் நடந்திடப்பா என்றிருவரும கூறிக்கொண்டு, சாவடி சென்றனராம். அதுபோல காங்கிரஸ் தலைவர்கள், கிரிப்சின் பங்களாவை, வலமாகவும் இடமாகவும் சுற்றி, வாழ்த்தி வரங்கேட்பதுகண்ட வாலர்கள், இனி அடிக்கும் பிரைஸ் என்று எண்ணிப் பீரித்தனர்., கிரிப்ஸ் தந்ததிலே தமக்கென்ன கிடைக்குமெக் கேட்க, ஆவலுடன் இருக்கும் வேளையில், வெறுங்கையுடனும் விம்மலுடனும், வீடுவந்த சேர்ந்துவிட்டனர் காங்கிரஸ் தலைவர்கள் அலுத்த ஆட்டியன் கதை போலாயிற்று அவர்கள் விஷயம் சேச்சே! இந்தப் பிரிட்டீஷார் ரொம்ப கெட்டவர்கள்! ஏன் இப்படி ஆசையைக் கிளப்பவேண்டும் பிறகேள், அவர்களின் மனமுடைய்ச் செய்யவேண்டும். பரிதாபமாக இல்லையா! அதிலும் இந்த சர். சிரிப்ஸ், இளையாளிடம் கொஞ்சும் நரைத் தலையன் போல் காங்கிரசரிடம் கொஞ்சினார். அவர் தமது சொக்குப்பொடியில் சிக்கிவிட்டார் என்ற காங்கிரசார் நம்பிவிட்டனர். கடைசி நேரத்தில் கைவிட்டாரே அவர். இது எவ்வளவு பரிதாபம் பாருங்கள்!

எம்பிரான்கள் ஏமாந்தது இரண்டு மணிக்கு நாம் கூடியதோ காலையிலே. அந்த நேரம், வருகிறது வரிசைஇ வாரி முடித்துக்கொள் சடையை என்று

காங்கிரசார் தமது மனமெனும் மங்கைக்கக் கூறிக்கொண்டிருந்த சமயம். இரண்டுமணி நேர ஊர்வலம், தலைவர் பாண்டியனின் சட்டையை ஈரமாக்கிவிட்டது. மேலே இருந்த சாயம்போன சாயத்துணியை இழுத்துப் போர்த்துக்கொண்டு, பாண்டியனார், கிரிப்சிடம் சென்றதில் நமக்கொன்றும் அனுகூலமேற்படவில்லை என்று தமது தலைமையுரையிலே வறிவிட்டார். ஆனந்தம் அங்கே! விசனம் இங்கே!! வெற்றி, நூலணிவோர்க்கு! வீழ்ச்சி நம்மவருக்கு!! என்று மாநாட்டில் கூடிய நமது தோழர்கள் எண்ணிக்கொண்டனர். இத்தகைய சுற்றுச்சார்பு, மாநாட்டின் சோபிதத்தையோ சுறுசுறுப்பையோ கெடுக்கவில்லை. வெளி ஜில்லாக்களிலிருந்ததும பல தோழர் கள் வந்திருந்தனர். கோர்வடைய ஓட்டாதபடி, இனிய கீதங்கள் கிளம்பின. மாநாட்டைத் திறக்க வரவேண்டிய பெரியார் வரத் தாமதமாகவே, வாலிபத் தோழர், இஸ்லாமிய எறு தோழர் திருப்பூர் மொய்துன், மாநாட்டைத் திறந்துவைத்தார். ஆதிலட்சுமி அம்மையால் கொடிஏற்றுவித்து, குனிந்த உள்ளத்தையும் நிமிரச்செய்தார்! பாண்டியனால், தமது தலைமையுரையில் பல கூறினார், பரணியே அது!

பெரியாரும் வந்துவிட்டார். வேகமாக நுழைந்தால் கொட்டகையில், தாகத்தோடிருந்த தோழர்களுக்குச் சொற்பொழிவுச் சாற்றைத் தந்தார். பருகினர், பூரித்தனர்.

எது வந்தாலென்ன! எது போனாலென்ன!

மெய்க்காதல் ஒன்றிருக்கும்போது

என்று ஓர் பாடல் உண்டு, சினிமாவில். அதுபோல், கிரிப்ஸ் எதைத் தந்தாலென்ன, தாராமற் போனாலென்ன, தடிதாங்கிய தலைவர் இருக்கும்போது நமக்கென்ன குறை என்று தோழர்கள் எண்ணி மகிழ்ந்து, கைதட்டிக் களித்து, காவல்புரிவோம் திராவிடக் கோட்டையை என்று உறுதி உரைத்திருந்தனர்.

கிரிப்சால் பயன் ஏற்படவில்லை! காங்கிரசார் கோரியத அவர்களுக்கு கிடைத்துவிட்டது, என்ற நிலையிலும், நம்மவர்

நெஞ்சில் இவ்வளவு ஆர்வம் இருக்கிறதென்றால், வெற்றியுங் கண்டால், எங்ஙனமிருக்கும் அவர் தம் உணர்ச்சி என்பதை எண்ணிப் பார்த்தல் வேண்டும். எதிர்கால வாழ்க்கையை இன்னொருவர் சித்தரிப்பானேன், நாமிருக்கையில், பயமேன்! என்று உள்ளத்தில் திடங்கொண்ட தோள் வலிமைத் தோழர்களை நமது இயக்கம் பெற்றிருக்கிறது.

1000 மைல்களுக்கு அப்பால், டில்லி நகரிலே ஆரியர்கள், தமது இயல்பை, குரோதத்தை, விழமத்தை மாற்றிக் கொண்ணாமல் இருக்கின்றனர். என்பது, என்ற தலைமையுரையில் வெளிப்பட்டது. பாண்டியனால் கூறினார். அவ்வளவு தொலையிலே வடநாட்டால் என்ற பாகுபாடு மட்டுமே இருக்கும் என்று எண்ணினேன். ஆனால், அங்கே இருந்த பார்ப்பனருக்கு, ஆரிய உணர்ச்சியும் அகம்பாவமுமே இருக்கக் கண்டேன் என்றுரைத்தார்.
சர்.கிரிப்சின் மாளிகையில், போட்டோக்காரர்கள் தங்கியிருந்தனராம் கிரிப்சைக் காண யார் வந்தாலும், உடனே போட்டோ எடுத்துப் பத்திரிகைகளக்கனப்பும் பணி அவர்களுடையது. சிரிப்பு, கைகுலுக்குதல், காரில் ஏறுதல், இறங்குதல், முதலிய பலகாட்சிகளைப் படம் படித்துவந்த அந்த போட்டாக்காரர்கள், பெரியாரும் அவரது சகாக்களும், மாளிகைக்குள் நுழைந்ததும் ஓடிவந்தனராம்! கண்டனராம், உடனே படமெடுக்காது, பழையபடி தமது தங்குமிடத்துக்கே சென்றுவிட்டனராம்.
இதனைப் பாண்டியனால் கூறினார். ஆத்திரத்தால் தோழர்கள் துள்ளினர் எவ்வளவு குரோத மனப்பான்மை பாருங்கள் அந்த போட்டோக் காரர்களுக்கு! ஏன் அது பிறந்தது எனில் அவர்கள் பரப்பிரம்ம சொரூபிகள், பார்ப்பனர்கள், ஆரியர்கள். ஆகவே, நமது தலைவர்களின் உருவைக்கண்டு உதாசீனம் செய்யத் துணிந்தனர். இத்தகைய குருரமான மனப்பான்மை ஆரியருக்கிருப்பதை, நமது கோடரிகள், கோணங்கிகள், மரமண்டைகள், தெரிந்துகொள்ளாது இருக்கின்றனவே.
இதனை பாண்டியனார் கூறினார். ஆத்திரத்தால் தோழர்கள் துள்ளினர். எவ்வளவு குரோத மனப்பான்மை பாருங்கள் அந்த போட்டோக்காரர்களுக்கு! ஏன் அது பிறந்தது எனில் அவர்கள் பரப்பிரம்ம சொரூபிகள், பார்ப்பனர்கள், ஆரியர்கள், ஆகவே,

நமது தலைவர்களின் உருவைக்கண்டு உதாசீனம் செய்யத் துணிந்தனர். இத்தகைய குரூரமான மனப்பான்மை ஆரியருக்கிருப்பதை, நமது கோடரிகள், கோணங்கிகள், மரமண்டைகள், தெரிந்துகொள்ளாது இருக்கின்றனவே.

பெரியார் தமது சொற்பொழிவிலே இதுபற்றி வேடிக்கையாகக் கூறினார். எனது தாடியையும், பாண்டியனின் கரிய நிறத்தையுங் கண்டதும், பறந்தேவிட்டனர், அந்தப் பார்ப்பனர்கள் என்றார்.

தலைவரே தாம் கூறியதுகேட்டு, நாங்கள் சிரிக்க மறுக்கிறோம். சீற்றம் எம்மைப் பிரியமறுக்கிறது. அவர்களின் இறுமாப்பின் இடுப்பொடிவது எந்நாறோ என்றே ஏங்குகிறோம். எவ்வளவு துவேஷமிருக்கிறது அந்த சவுண்டிகளுக்கு! படமெடுக்கது ஓடிய அந்தப் பார்ப்பனர்கள், கூளம் பறப்பதுபோல் தமிழரின் படைதிரண்டால், திக்கெட்டும் பறந்து போவாரல்லவா! குப்பைமேட்டுக்குப் போய்ச் சேரவேண்டியதைக் கூடத்திலே வைத்திருந்தால், வீட்டுக்கு அழகாகுமா! அதுபோல், பிச்சைபுகவேண்டிய நச்சுக் கூட்டத்தை நாடாளும் இடத்திலே அண்டவிட்டதால், இந்த அனர்த்தமும் வரும், இதற்கு மேலும் வரும். நாயைக் குளிப்பாட்டி நடு வீட்டில் வைத்தாலும் வாலைக் குழைத்துக்கொண்டு வண்டுருட்டும் பழுமே நாடிச்செல்லுமாம். அதுபோல்இ இந்தச் சோற்றக்காகச் சுற்றித்திரியும் சொரூபிகளை, டில்லி மாளிகையில் வைத்தாலும், உடம்போடு உண்டான குணம் மாறுமா! பேய்ச்சுரைக்குத் தேன்பெய்தும் பயனென்ன!! அதுபோல் ஆரியருக்கு நாம் எதுசெய்து என்ன? அவர்கள், சமயத்தில் நமது இனத்தைக் கெடுக்கவே துணிவர் என்று மாநாட்டில் இருந்த தோழர்களிற் பல் கொதித்துக் கூறினர்.

ஆரிய ஏடுகள் என்ன செய்தும் ஆரியத் தலைவர்கள் காரியக் கூத்தாடியும், கண்டபலன் சூன்யமே என்பது பிற்பகல் விளங்கிற்று. கிரிப்ஸ் திட்டம் தோற்றுப்போனது கேட்டு இம்மாநாடு வருந்தவில்லை என்ற துர்மானத்தைப் பெரியார் பிரேரேபிக்க, தோழர் அண்ணாத்துரை ஆதரித்துப் பேசிய பிறகு, திராவிட நாட்டுப் படத்தைத் திறந்துவைத்தார்.

திராவிட நாடு தனிநாடாக இமைந்துவிட்டால், தீட்சிதர் வீட்டுக் இன்றுள்ள மகிமையும், ஆரித் திருக்கூட்டத்துக்குள்ள திமிரும், அக்கிரகாரத்துக்குள்ள ஆணவமும் இருக்க முடியுமா? போரில்

சிக்கிக்கொண்ட தமிழகத்திலே, இன்ற காணப்படும் கோழைத்தனம் இருக்குமா? எதிரிக்கு உளவுசூறும் உலுத்தர்களம், வம்பர்களும் விலுவாயர்களும், பீதி கிளப்பும் பேதையரும், இருக்கமுடியுமா? போர் புரளும் நேரத்தில் அரசியல் பேரமாநடக்கும்! கும்பாபிஷேகமும் கோயில் குதர்க்கமுமா இருக்கும்! படை ஒலியன்றோ கேட்கும்! பட்டாளத்தில் சேர, இளையோரு, அவரை இடித்துத் தள்ளிக் கொண்டு முன்வரிசை எமக்கு என்றுரைக்கம் முதியோரும், படைக்கலத்தை எடுத்துத தந்திடும் பதுமையரும், நிரம்பியவோர் நற்காட்சியன்றோ இங்கிருக்கும். காட்டரணும் கடலரணும் பதியரணும் இருப்பதுடன், மனை அரணும் மன அரணும் இருச்திருக்கும். இன்றள்ள விதியும், சரியும், இருக்குமா! சிங்கங்கள் கிளம்பிவிட்டால், நரிக்கூட்டம் நிற்குமா! புலிபாய்கையில் னையா தடுக்கும்!திராவிடர் கிளம்பிடின், ஆரியரோ ஆர்ப்பரிப்பர்! திராவிடநாடு ஆரியரின் வீடாக இருத்தலால், நமது தலைவர்கள், வடநாடு செசன்ற காலையும், செள்ளையர் முன்னிலையிலும் அவமதிப்பா, ஆரியர்களால் நடத்தப்படுகின்றனர். அதனை நமது தலைவர்கள் நமக்குக் கூறுகின்றனர், நாம் கேட்கிறோம், நமது செவிகள் ஆறுக்கப்படவில்லை!

தமிழரைத் துச்சமாகப் பேசினர் கனகவிசயன் எனும் ஆரிய அரசர், என்று பாணர் கூறக்கேட்ட சேரன் செங்குட்டுவன் படைகடலெனத் திரட்டி மலை பல கடந்து, மாநதிகள் தாண்டி, காடுபலகடந்து வீடு மறந்து வெஞ்சமர் புரிந்து, ஆரிய அரசரை முடிறயடித்து அவர் தம் தலையிலே கல்லைச் சுமந்து வரச்செய்தான், என்றுரைக்கும் சிலப்பதிகாரத்தைச் சுமை தாங்கிபோல் சுமந்துகொண்டிருக்கும் நாம், டில்லி நகரில் ஆரியர் திராவிடத் தலைவர்களை, ஒரு பெரியாரை, ஒரு சிறறரசரை, மற்றோர் மிராசுதாரை, மற்ரோர் மலை காடு மண்டலம் படைத்த மன்னர் வழிவந்தோரை மதியாது நடந்த மமதையைக் கேட்கிறோம். இனி நமகேன் சிலப்பதிகாரம்! தெந்தமிழர் எனும் பெயர் ஏன்?

இவை போன்ற இன்னலும் இழுக்கும் இனியும் நமக்கில்லமற்போக வேண்டுமாயின், சிம்பர மாநாட்டிலும், அதபோன்ற மாநாடுகளிலும் நாம் கூடுவதும் பேசுவதும், பிரிவதுமாக இருக்கும் முறை மாறி, கட்டுப்பாடுண்டாக்கி, கருமமே கண்ணாகி,

கோட்டைகள், கட்டும் பணியில் இறங்கியாகவேண்டும். இல்லையேல் வாழ்வு இல்லை. தோழர்கள் கே.கே.நீலமேகம், ஏ,கே.தங்கவேலர், கே.ஆர்.ஜி.பால், நீடாமங்கலம் ஆறுமுகம், மன்னார்குடி பாபு செட்டியார், வேலூர் சின்னராஜி, திருப்புர் மொய்தீன் மற்றும் பலப்பலர் பேசினர் மாநாட்டில். தீப்பொறி பறந்தன! தேன் மொழி வழிந்தது பயன் என்ன? தென்னாற்காட்டில் இந்த ஆண்டு முடிவதற்குள் எத்தனை ஆயிரம் அங்கதினர்கள் ஜஸ்டிஸ் கட்சியில் சேருகின்றனர். என்பதைப் பொறுத்திருக்கிறது, பயன். எரவேற்புக் கழகத்தலைவர் கோபாலகிருஷ்யப்பிள்ளை, கடலூர் தெய்வசிகாமணி, நெசனூர் ராமசாமி செட்டியல், குச்சிபாளையம் துரைசாமி ரெட்டியார், விழுப்புரம் கோவிந்தராஜலு நாயுடு, விருத்தாசலம் முனுசாமி, புவனகிரி நமசிவாயம் , ராமலிங்கம், சிதம்பரம் கலியாணசுந்தரம் அன்பழகன், மற்றம் பலப்பல வீரர்கள், மாநாட்டுக்காகப் பலநாள் உழைத்து, வெற்றிகரமாக நடத்தினர். இவர்களின் உழைப்பு கட்சியின் உருப்படியான வேலைகளுக்காகவும் இருப்பின், நமது நிலை எவ்வளவு உயரும் என்பதை எண்ணிப் பாருங்கள். திராவிடர், தீர மற்றவர்கள், திறமற்றவர்களா! கூனிய உள்ளமும் குனிந்த வாழ்வும் கொண்டவர்களா! தனமற்றவர்களா, வகையறியதவர்களா! எல்லாம் உண்டு. ஒன்றுதானில்லை. தொடர்ந்து பணியாற்றுவதில்லை. அது இருப்பின், நம்மை வெல்பவர் யாருமில்லை, ஜஸ்டிஸ் மாநாட்டிலும், மறு தினம் நடந்த சுயமரியாதை, யுத்த ஆதரவு மாநாடுகளிலும், எவ்வளவு உத்வேகம்! காட்டு வெள்ளம் கரை புரண்டோடுகிறதே, அணைகோலி அமைப்பு ஏற்படுத்துவாதைத் தானே காணோம். அது தானே, ஆரியருக்கு இன்னமும இடந்தர ஏதுவாகிறது. என்று தணியுமிந்தச் சோகம்! எவர் போக்குவார் இந்தப் பரிதாபத்தை!! சுயமரியதை மாநாட்டிலே தோழர் அழகிரிசாமி தலைமை தாங்கி இரண்டு மணிநேரத்துக்குமேல் ஆற்றிய ஆவேச இரையை, என்னென்பது! சுயமரியதைச் சுடரொளிபறக்க, வீரம் வீறிட்டெழ, நகைச்சுவை நடனமாட,

அறிவுத் தென்றல் அனைவர் உள்ளத்தையும் கவர, அழகுவழிய, உவமையும் கதையும், மேற்கோளும் மதுரையும், கம்பன் கவிதையும் வள்ளுவன் குறளும் துள்ளிட, தோழர் அழகிரிசாமி, வறுமை, வாட்டம், வாழ்க்கையில் சுமை ஆகிய பட்டம் பதவிகள் மட்டுமே பெற்ற அழகிரி, அன்று பேசியதையோ, வியாபார உலகிற்காணும் நறக்கமான கருத்துடன், வாழ்க்கைக் கல்லூரி தரும் பாடங்களுடன், சேர்த்துரைத்த தோழர் தங்கவேலரின் உரையாடலையோ, இறந்தது என் மனைவி, கட்சிப்பற்றல்ல, என்று மார்தட்டி நின்ற குடந்தைத் தோழர் கே.கே.நீலமேத்தின் முழக்கத்தையோ, கேட்டவர் தில்லைத் தீட்சிதரின் திருப்பாதந்தாங்கிகளாகத் தமிழர கூட்டம் இருப்பதை இனிக் காணவே சகியார்! தமிழரின் கோட்டை எழுத்செய்வர் என்பது திண்ணம்.

மூடச்சடங்குகளை ஒழி! கோயில் வருவாயைப் பொதுப்பணிக்கெனச் செலவிடு! ஆரியத்தை அழிக்க முற்படு! இவைகள் சுயமரியாதை மாநாட்டுத் தீர்மானங்கள்! இவை நாட்டு நடப்பிலே காணப்பட்டுவிட்டால், இடரும் இழிவும், நமக்கேன் இருக்கும்! தமிழர் அதைக் கவனித்து ஆவன செய்தல் வேண்டும், இன்றே செய்யத் தொடங்குதல் நன்று என்பேன்.

தீட்சிதர் வீட்டுக்குள் ஆதிதிராவிடருக்குக் கலியாணம் நடப்பதுபோல், வைதீகக் கோட்டையில், நமது மாநாடுகள் நடைபெற்றுவிட்டன, ஆனால் மாநாடு, முதல் அத்தியாயமே தவிர, முடிவுரையல்ல என்பது தென்னாற்காட்டுத் தோழர்களுக்கும், தமிழர் யாவருக்கும் நினைவிலிருக்கவேண்டும்.

ஜஸ்டிஸ், சுயமரியாதைக்காரர்கள், கனவுலகவாசிகளல்லர், கற்பனாலோகத்தில் குறட்டை விடுபவரல்லர். நாடு இன்றுள்ள நிலை அவர்களுக்குத் தெரியும். ஆபத்துச் சூழ்ந்திருப்பதை அவர்கள் அறிவர். எதிரிகள் எக்காளமிடுவதை அவர்கள் மறக்கவில்லை. இன்று மக்கள் மனத்தை மருட்டும போர்பற்றி அவர்கள் தெரிந்துகொள்ளாமலில்லை. போரில் நாம் வெற்றி பெற்றால்தான், எதுவும் ஈடேற வழிபிறக்கும் என்பதையும் மறக்கவில்லை. எனவேதான், யுத்த ஆதரவு மாநாடு, தோழர் முத்தையய முதலியார் தலைமையில் ஆங்கு அடைபெற்றது.

அண்ணாமலப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் பி.வி.நாராயணசாமி நாயுடு திறப்புவிழாவாற்றினார். சர்.கே.வி.ரெட்டி நாயுடு அவர்கள் சர்.செல்வத்தின் படத்தைத் திறந்து வைத்தார். நேசநாடுகள் வெற்றிபெற வேண்டும் அதற்கான உதவிகளை மக்கள் செய்யவேண்டும் என்ற தீர்மானங்கள் நிறைவேறின. எனவே, போர் சம்பந்தமாக நமது கருத்தென்ன, நாட்டு அரசியல் சம்பந்தமாக நமது எண்ணம் யாது, சமுதாய சம்பந்தமாக நமது திடடம் என்ன, என்ற இம்மூன்றையும் மூன்று மாநாடுகள் மூலம் விளக்கி விட்டனர் நமது தோழர்கள். இனி, வேலை துவங்க வேண்டியதுதான்! நீங்கள் செய்யப்போவது என்ன? சொல்லுங்கள், கேட்போம்.

(திராவிடநாடு - 19.04.1942)

தேன்சுரக்கப் பேசி..!

எதிரியின் குதிரைப்படை கிளப்பிய தூசி, கோட்டையின் சுவரில் படியத் தொடங்கிற்று. கோட்டைக்குள்ளே இருந்த மன்னன், “கூப்பிடு மந்திரியை” என்று கூவினான். “மகாராஜ்! மந்திரி, மகள் வீட்டுக்குப் போய்விட்டார்” என்றான் சேவகன். “சேனாதிபதி எங்கே?” என்று சீற்றத்துடன் கேட்டான் மன்னன். “மாமி வீட்டுக்குப் போயிருக்கிறார், மனைவி மக்களுடன்” என்று பயத்தோடு கூறினான் சேவகன். “துரோகிகளே! என் உடை வாளெங்கே! அதையேனும் கொடு இப்படி” என்று கர்ச்சித்தான் அரசன்.

“அரசே! துருப்பிடித்துப் போயிருந்தால், சாணைபிடிக்க அனுப்பினார் அரசியார்” என்று மெல்லிய குரலிற் கூறினான் சேவகன்.

“நீயாவது வா. இருவரும் போவோம் படைகளுடன்” என்று கூறிக்கொண்டே அரசன் எழுந்தான். “வரவிருப்பந்தான் வேந்தே! ஆனால் வயிற்று வலி பொறுக்கமுடியவில்லை. வைத்தியரிடம் போய் மருந்து சாப்பிட்டுவிட்டு, வந்துவிடுகிறேன் விநாடியில்” என்றான் சேவகன். தலைமீது கைவைத்தான் மன்னன்!

இதுகதை! எங்கே நடந்தது என்கிறீர்களா? எல்லாக் கதைகளும் நடந்ததுபோல், இதுவும் ஒரே ஒரு ஊரில் ஒரு இராசா இருந்தானாம், அவன் நாட்டின்மீது பக்கத்து ஊர் இராசா படை எடுத்தானாம் - என்ற கதைதான். கதை சொன்னது பொழுது போக்குக்காகவல்ல. கருத்து வேறே! கேளுங்கள் தோழர்களே, இந்த இராசாவின் கதை இருக்கும் விதத்தை ஏறக்குறைய ஒத்திருப்பதுபோல், சென்னையிலே சம்பவம் நடந்திருக்கிறது. அதைப்படித்ததும், இந்தக்கதை நினைவிற்கு வந்தது, உங்களிடம் சொன்னேன்.

சென்னை வட்டாரத்தில், யுத்த ஆதரவுப் பிரசாரத்துக்குக் கமிட்டிகள் உண்டு, தலைவர்கள் உண்டு, காரியதரிசிகள் உண்டு. பிரசாரம் செய்து, பீதியைத் தடுக்க, மக்களுக்கு உண்மை விளங்கச் செய்ய, மக்களை வீரர்களாக்க, படை பலத்தை எடுத்துக்கூறி பயங்கொள்ளித்தனத்தைப் போக்க,

சென்னை மாகாண யுத்தப் பிரசாரக்கமிட்டி ஒன்றுண்டு. ஆனால்...! அதுதான் வேடிக்கை! எங்கே, அந்தப் பிரசார நிர்வாகிகள் என்று, கதையிலே கூறப்பட்ட போல், யாரேனும் கேட்டால், இராசாவுக்குக் கிடைத்த பதில்தான் கிடைத்து விடும்.

சென்னை மாகாண யுத்த ஆதரவுப் பிரசார சப் கமிட்டி எங்கே? சென்னையில் இல்லை! மதனப்பள்ளிக்கு மாற்றப்பட்டு விட்டது!! அந்தக் கமிட்டியின் தலைவர் எங்கே? தஞ்சாவூர் போய்விட்டார்! மேற்படி சப் கமிட்டியின் காரியதரிசி எங்கே? சேலம் சென்றுவிட்டார்.

சண்டைசெய்து, இரத்தம் சிந்தி, எதிரியின் படை எண்ணற்ற அளவுள்ளதாக இருக்கக்கண்டு, பின்வாங்கிய பிரிட்டிஷ் படைகளைக்கண்டு கேலிசெய்த “பெருங்குணவான்கள்,” குண்டுவிழாத சென்னையிலே, யுத்தப் பிரசார வீரர்கள், ஆளுக்கொரு மூலையாக, அவிழ்த்துவிட்ட அசுவங்கள் மிரண்டோடுவதுபோல், ஓடிவிட்டதைக்கேட்டு, என்ன சொல்லப்போகிறார்கள் என்று கேட்கிறேன். இந்தத்தோழர்கள், ஆபத்தை வரவேற்க வேண்டும், குண்டுகளைச் செண்டுகளாகக் கொள்ளவேண்டும், என்று நான் கூறவில்லை. உயிர் விலை மதிக்க முடியாததுதான்! அதிலும் உல்லாசவாசிகளுக்கு, உயிர் வெல்லம்! எனவே அந்தத்தோழர்கள், வெளியூர் சென்று விட்டதற்காக அவர்கள் மீது வெகுண்டு வெடுக்கென்று கடிக்கவேண்டுமென்று நான் யாரையும் ஏவவில்லை. போகிற புண்ணியாத்துமாக்கள், சென்னையிலேயே தங்கியிருக்கும் வேறு சிலரிடம் மேற்படி “வேலைகளை,” “கடமை களை” ஒப்புவித்துவிட்டுப் போகக்கூடாதா? கிலி வேண்டாம்! பீதி அடையாதீர்! எதிரியைக்கண்டு மிரளவேண்டாம்! கோழைத்தனம் கூடாது! என்று பேசிவந்தவர்கள், பேசவேண்டியவர்கள், தங்கள் செயலால் செய்யும் பிரசாரம் எவ்வளவு மோசமாகிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டாமா?

எண்ணிப்பார்த்து, “எம்மால் முடியாது இந்த வேலை, இதோ ராசிநாமா” என்று கூறிவிட்டு, கண்ணியமாக, “கடவுள் புண்ணியத்தால், தலைதப்பிற்று” என்று கந்த கோட்டத்தானையோ, காமாட்சியையோ கும்பிட்டுவிட்டு, வெளியே போயிருக்கக் கூடாதா, என்றுதான் கேட்கிறேன். தோழர்களே! இத்தகையவர்கள் துரைமார் சர்க்காரிலே எப்படியோ இடம் பெற்றுவிடுகிறார்களே அதுதானே ஆச்சரியமாக இருக்கிறது. கடலிலே செல்ல கப்பல் இருக்கிறது, அதற்குக் குடைபிடிக்க விமானமில்லை, விமான மிருக்கிறது. ஆனால் விண்ணின் நிலை சரியாக இல்லை, காலநிலை சரியாக இருக்கிறது. ஆனால், கருத்து தெளிவாகவில்லை, என்று இராணுவத் துறையிலே ஏதேதோ கூறக் கேள்விப் படுகிறோமே, அதைவிட கேலிக்கூத்தாக வன்றோ, இந்த பிரசாரக் கமிட்டி பிடித்தது ஓட்டம் என்ற செய்தி இருக்கிறது.

யார்போனாலென்ன! எவர் ஓடினாலென்ன? மாஜி முதலமைச்சர், மாம்பலமாவீரர் இராசகோபாலாச்சாரியார் இருக்கிறார், என்ற மனஆறுதல் உண்டாயிற்று எனக்கு. பத்திரிகையிலே படித்தேன், சென்னை மேயர் நிறுவிய பாதுகாப்புக் கமிட்டிக் கூட்டத்தில் அவர் பேசினார் என்று இருந்தது. மகிழ்ச்சியோடு படிக்கலானேன். ஆச்சாரியார் அஞ்சா நெஞ்சர்தான்! என்று பூரித்தேன். சென்னைப்பாதுகாப்புக்காக அவர், கச்சையை வரிந்து கட்டுவார், தோள் தட்டுவார், துரைமார்கள் கண்டும் வெட்கும்படி, வேதியகுலத்து வேவலாக வெளிவருவார், என்று மனதிலே எண்ணங்கள் எழும்பின. இந்தி எதிர்ப்புக்காலத்திலே இலட்சக் கணக்கான தமிழர்களின் எதிர்ப்பு, ஆயிரக்கணக்கான பொதுக்கூட்ட பாணங்கள், நூற்றுக்கணக்கான மாநாட்டு வாள் வீச்சுகள், கண்ணையும் கருத்தையும் தாக்கிய கருப்புக் கொடிகள், ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் அழுத கண்ணீரெனும் கூர்வாள், தாலமுத்து நடராசனின் பிணங்கள், அவை கொளுத்திய போது கிளம்பிய சுடுநாற்றம், தாலமுத்துவின் மனைவி அறுத்தெறிந்த தாலி, ஆகிய எதர்க்கும் அஞ்சாது, விந்தியத்துக்கு மேலிருந்து குலுக்கி நடந்துவந்த இந்தி மங்கையைக்குலவி வாழ்ந்த நெஞ்சுறுதி, இந்த நெருக்கடியான நேரத்தில் நின்று உதவும் என்றுநான் எண்ணினேன். எனவே

படித்தேன். படித்துமுடிந்ததும், என்னென்பேன் தோழர்களே, எனக்குமற்றோர் கதை வந்தது நினைவுக்கு.

மனைவிமீது மகா கோபங்கொண்ட ஒரு கணவன், வாய் வலிக்கத் திட்டிவிட்டு, வாருகோல் எடுத்து வாங்குவோம், அவள் முதுகில்என்று துடித்து, வாருகோல் தேடுகையில், வந்ததாம் ஒரு பாம்பு! குய்யோ முறையோவெனக் கூவினாள் மனைவி. குதித்தான் கணவன். "அடிமுட்டாளே! கூச்சலை இங்கே போடுகிறாயே தெருவுக்குப்போய் கூச்சலிட்டு யாராவது ஆடவர் போனால் அவசரமாக அழைத்துவா", என்றானாம் கணவன்! அதுபோல், ஆச்சாரியார், ஜப்பானியராவது இங்கு வருவதாவது? வந்தால்தான் என்ன? அவர்கள் என்ன செய்துவிடமுடியும்? செய்யத் துணிந்தால்தான் என்ன நாம் வீரர்களல்லவா? நாம் திரண்டெழுந்து தடுப்போம், நொறுக்குவோம் அவர்களை" என்று வீர முழக்கம் செய்தார் மேயர் முன்னிலையில். ஒல்லியான இந்த உருவம், பந்திக்கு ஓடிடவும், படைகண்டால் பதுங்கிடவும் பஞ்சாங்கம் ஓதிடவுமே பயின்ற இனத்தவர், இவ்வளவு வீரமாகப் பேசக்கேட்டு, மேயரும், கமிட்டி அங்கத்தினர்களும், ஆச்சரியப்பட்டே இருந்திருப்பார்கள். என்னை அந்தப்பத்து வரிகள் தூக்கிவாரிப் போட்டன. ஆனால்.....! அதுதானய்யா வேடிக்கை, கேளுங்கள், "கட்சிக் கட்டுதிட்டங்களின் காரணமாக நான் சென்னை நகர பாதுகாப்புப் பணியில் பங்கு கொள்ளமுடியாது. காங்கிரசல்லாத மற்றவர்களே! நீங்களேனும் சென்னை நகரைப் பாதுகாக்க முனையுங்கள்" என்று முடித்தார் முப்புரி நூலணிந்த முதியோர்! எப்படி அவர் வீரம்! பாம்புகண்ட கணவன், பார்த்துப் பிடித்துவா ஆண்பிள்ளையை என்று மனைவியைக் கட்டளை யிட்டானே அதற்கு, ஆச்சாரியாரின் "வீரம்" கொஞ்சமாவது குறைந் திருக்கிறதா கூறுங்கள். போரிட, நகரைப் பாதுகாக்க, ஆச்சாரியாருக்கு முடியவில்லை! காரணம், கட்சிக்கட்டுப்பாடாம்! அந்தக் கதையில்வரும் கணவன் கூடத்தான் கூறுவான், "பாம்பை அடிக்க எனக்கென்ன பயமா? இன்று அமாவாசை புண்ணியகாலம், பாம்பைக்கொன்றால், ஆதிசேஷனின் சாபம் பிறக்குமென்று அஞ்சினேன். சாபத்துக்கு அஞ்சினேனே யொழியே சர்ப்பத்துக்கு அஞ்சவில்லை. சாதாரண நாட்களில், சர்ப்பம் எனக்கொரு சருகு!" என்று கூறுவான் வாயாவலிக்கும்? கேட்டால் காதுதான் வலிக்குமா? இப்படி இருக்கிறது ஆச்சாரியாரின் அசகாய சூரத்தனம். கண்ணன் அவருக்குக் காட்டியவழி இதுதான் போலும், வேவல்களே! மாக் ஆர்தர்களே! ஆக்கின் லெக்குகளே! சியாங்கேஷேக்குகளே, ஸ்டாலின்களே, சற்றே விலகி நில்லுங்கள், வழிவிடுங்கள்,

எங்கள் “ராஜாஜி” வருகிறார், என்று காங்கிரஸ் தோழர்கள், கூறி வாழ்த்த இதுதான் சரியான தருணம். “இவ்வளவு வீரதீரவிற்பன்ன வேதியர் இங்கிருக்க, வேவல் இங்கு ஏன்” என்று வேலூர் வேட்டும், விருதைச் சிறுத்தையும், கோவைக் குதர்க்கமும், பேட்டை முதலியாரும், குமாரமங்கலப்பிரபுவும், கூறி, கொடிதாங்கி, கும்மிகொட்ட இதுதான் தக்க சமயம். இச்சமயம் தவறினால் மறுசமயம் வாய்ப்பதரிது! எடுங்கள் ஆரத்தி! விடுங்கள் வாணங்களை! வாத்தியங்கள் ஒலிக்கட்டும்! வந்தார் வீரர்!!

ஆச்சாரியார், அன்று சொன்னதுபோலத்தான் அவரின் மூதாதையர், நமது மூதாதையரிடம் முன்னாளில் கூறினர். இந்நாள் இவரது இயல்பு எதுவோ, எண்ணம் எதுவோ, அதுதான் அவரது மூதாதையர் பன்னெடுங்காலமாகக் கொண்டிருந்தது.

“காட்டிலே மிருகங்கள் தொல்லை! யாகத்தை அழிக்க இராட்சதர்கள் ரகளை! அந்த அரசன் ஆணவமாக எனக்குப் பிச்சையிட மறுத்தான், என்று இருடிகள், முனிகள், தபோதனர்கள், மன்னர்களிடம்கூறி மாநிதி, படை முதலியன பெற்றனர் என்று புராணங்கள் படிக்கிறோமே, அவைகளில் புதைந்து கிடக்கும் பாடம் இதுதான். சண்டைக்குத் தமிழர், இரத்தஞ் சிந்தத் தமிழர், போரிட்டுமாளத் தமிழர் பொன்தர புத்திரரை இரணகளத்தில் பலியிடத் தமிழர், உழைக்க உருக்குலைய தமிழர், ஊர்காக்க, படை நடத்த பகைவரை அடக்கத் தமிழர், வேதமோத தீமூட்டி திருமந்திரம் கூற, விருந்துண்டு வியர்வையைத் தடுக்கச் சந்தனம் பூசிக்கொள்ள, பூரிதட்சணைபெற, ஆரியர், பார்ப்பனர்! இது அன்று ஆரியர் வகுத்தனர். இன்று ஆச்சாரியார் மேயர் கமிட்டியிலும், அதே முறையில் தான் திட்டம் தீட்டினார். சிறுத்தையின் புள்ளி, செந்நாயின்வெறி, குரங்கின் குறும்பு, பூனையின் துடுக்குக்குணம், போகாது என்பார்கள்! ஆரியர்களின் குணாதிசயமும் அதுபோன்றதே. 1942ல் சென்னை இரிப்பன் மண்டபத்தில், மேயர் முன்னிலையில், ஆச்சாரியார், வீரமுழக்கம் செய்துவிட்டு, எதிரியைத் தடுக்க இனி நீங்கள் முனையுங்கள், எதற்கும் அஞ்சாதீர், எனக்கோ கட்சிக் கட்டுப்பாடு குறுக்கிடுகிறது என்று எங்கனமுரைத்தாரோ, அதுபோல், அந்நாளில் அரசசபைகளில் ஆரியர்கள் தமிழ் மன்னர்களிடம்

பேசினர், மண்ணில் நமது இனத்தவர் இரத்தத்தைச் சொரிந்தனர், நெருப்பில் ஆரியர்நெய்யைச் சொரிந்தனர், நமது மன்னர்கள் மாய்ந்தனர், ஆரியர்கள் வாழ்ந்தனர்!

நான் கேட்கிறேன், வீரம்பேசும் ஆச்சாரியார், நகரைப் பாதுகாக்க, மற்றவர்களைத் தட்டிவிடுகிறாரே தான்மட்டும் ஏன் தலைமறைகிறார்! கட்சிக் கட்டுப்பாடு என்ற சாக்குக்கூறி யாரை ஏய்க்க எண்ணுகிறார்? எதிரியை விரட்ட வேண்டியதைக் கடமையென ஆச்சாரியார் உண்மையில் கருதினால், குறுக்கே நிற்கும் கட்சிக்கட்டுப்பாட்டைக் குப்புறக்கவிழ்க்க மாட்டாரா, நாட்டுக்கு ஆபத்து, நாம் அஞ்சாது எதிரியை அடக்க வேண்டும் என்று ஆச்சாரியார் கூறுகிறாரே, அதைச் செய்ய ஒட்டாது கட்சிக்கட்டுப்பாடு தடுக்கிறது என்று கூறுகிறாரே, அதன் பொருள் என்ன? அவரது கட்சி, நாட்டைக்காப்பாற்ற ஒட்டாது தடுக்கும் துரோகச் சபை என்றுதானே அவர் பேச்சிலிருந்தே வெளிப்படுகிறது. அத்தகைய துரோக சபையிலே பந்தமும் பாசமும் இவர் கொண்டிருக்கிறாரே, இவரும் துரோகிகள் கூட்டத்தில் ஒருவர் என்று தானே பொருள்படுகிறது என்று கேட்கிறேன். அவரது அன்றைய பேச்சு, ஒன்று கோழைத்தனத்தை மறைக்க கட்சியின் பேரில் குறைகூறியதாக இருக்கவேண்டும் அல்லது தனது கட்சியின் தொழில் துரோகம் செய்வது என்பதைத் தம்மையும் மறந்து கூறியதாக இருக்கவேண்டும். முன்னையதானால், அவர் முகமூடி போட்டுக்கொள்ள வேண்டும், பின்னையதானால், அவர் சிறைப்பட்டிருக்கவேண்டும். நான் கேட்கிறேன் ஆச்சாரியாரை, நாட்டுப்பாதுகாப்பு பெரிதா? கட்சிக் கட்டுப்பாடு பெரிதா? எதை நீர் மேலென மதிக்கிறீர்? நாட்டைக் காக்கவேண்டுவதே மேல், என்று நாடிமுறுக்கிழந்த நடுக்கியுங் கூறுவான், நீரும் அக் கருத்தே கொண்டவரென்றால், நீர் இருக்கும் காங்கிரஸ் கட்சியை உதறித் தள்ளிவிட்டு, ஊரைக்காக்க

வீ று கொ ண் டெ ழ வேண்டாமா? நாட்டைக் காப்பாற்ற வேண்டுவதே முறை என்று கூறி, கட்சியைத் திருத்த முற்படுவது மேல்! அது முடியாவிட்டால், துரோகச் சபையிலே நான் இனி இரேன் என்றுகூறி, நாட்டுப் பாதுகாப்புக்காக ஆவனசெய்யல், இரண்டாந்தரமான நற்குணம். மூன்றாந்தரமானதல்ல, முழுமோசமானது, உமது இன்றைய போக்கு.
பள்ளம் என்று தெரிந்தும், விழச்செய்பவன் பித்தன்! நண்பன் என்று தெரிந்தும் ஏமாற்றுபவன் நயவஞ்சகன்! போதை என்று தெரிந்தும் பருகுபவன் குடியன்! நிரபராதி என்று தெரிந்தும், அடித்துத்துன்புறுத்துபவன் போக்கிரி! பிறன்மனைவி என்று தெரிந்தும் கூடுபவன் காமுகன்! நாட்டுக்கு ஆபத்து வருவதைத் தெரிந்து கொள்ளாதவன் ஏமாளி! அந்த நேரத்தில் நமக்குப் பயமில்லை என்று நர்த்தனஞ் செய்பவன் கோமாளி! விஷமப் பேச்சைப் பரப்புபவன் எதிரியின் உளவாளி! எல்லாம் தெரியும், எதிர்க்கத்தான் வேண்டும், எதிரியை அடக்க நீங்கள் முன்வாருங்கள், பயப்படாதீர்கள், என்றெல்லாங் கூறிவிட்டு, நான்மட்டும் வருவதற்கில்லை, காங்கிரஸ்காரர்கள் இதைச்செய்வதற்கில்லை, காங்கிரசல்லாத தோழர்களே! நீங்கள் இதைத் தயவுசெய்து செய்யுங்கள் என்று கூறும் ஆச்சாரியாருக்கு, நான் தரவேண்டிய அடைமொழி என்ன என்று உங்களைக் கேட்கிறேன். தோழர்களே! என்னென்று அழைப்பது அவரை!!
கள்ளப்புருடனிடம் மனைவி சரசமாடுவது எனக்குத் தெரியும். அவனையும் அவளையும், அடித்து வீழ்த்தத்தான் வேண்டும். அவளை விலக்கியாவது விடத்தான் வேண்டும். ஆனால் அவள் போய்விட்டால், எனக்கு உண்டியும் போய்விடும், ஒரோர்சமயம் கிடைக்கும் உல்லாசமும் போய்விடும், அதைப்பற்றித்தான் யோசிக்கிறேன், என்று எந்தக் கணவனாவது கூறுவானா!

நாட்டுத்துரைத்தனத்தார்போட்டுவைத்த அமைப்பும், நாடாண்ட கட்சியும், நாடாள நாக்கில் நீர்ஊற நிற்கும் கட்சியுமான காங்கிரசின் போக்கும் இருக்கும் விதங்கள் இவைகள், “காணக்கண் காட்சியே! கந்தன் காவடி மாட்சியே!! என்று ஏதாவதொரு பாட்டுப் பாட வேண்டியதுதான் போலும்! இத்தகைய இயல்பு படைத்தவர்களிடந்தான் சர். கிரிப்ஸ் நாட்டை

ஒப்படைக்க மறுத்தார்! தவறா அது? இத்தகையவர்கள்தான் இங்கு முதல்சாதி! யோக்கியமா அது? இத்தகையவர்கள் இங்கு, மற்ற மக்களை மடக்கி வைத்திருக்கிறார்கள் என்ற இரகசியத்தைத் தெரிந்துதான் ஜப்பான் துணிவாக இங்குபாய்கிறது. நான்தான் கேட்கிறேன் கூறுங்கள் பார்ப்போம், இந்த நாடு ஆண்டுதோறும் எவ்வளவு பாரம் பாரமாகக் கற்பூரம் வாங்குகிறது என்பது ஜப்பானுக்குத் தெரியாதா! இவ்வளவு கற்பூரம் வாங்கும் நாட்டிலே, காசும் கருத்தும் காலமும் எவ்வளவு விண்மீன் வலைக்குப் பயனாகிறது என்பதை ஜப்பானியன் தெரிந்து கொண்டிருக்கமாட்டானா? டார்ப்பிடோவுக்கும் சப் மெரைனுக்கும், விமானத்துக்கும் கப்பலுக்கும் மற்ற நாடுகள் பணத்தைச் செலவிட்டுக் கொண்டிருக்க, இங்கு கற்பூரத்துக்கு மட்டும் இவ்வளவு காசு செலவிடுபவர்கள், எவ்வளவு முரட்டுப் பிடிவாதமுள்ள குருட்டுக் கொள்கையில் சிக்கிக் கொண்டனர் என்பதுபற்றி ஜப்பானியன் எண்ணியிருக்க மாட்டானா? இவ்வளவு “மிருகப் பிராயத்தை” மக்களுக்குப் புகுத்திய ஓர் கூட்டம் இருக்கும் என்பதும், அந்தக்கூட்டம், மக்களைச் சிந்தனையில் சிதைந்தவர்களாய், செல்லரித்த முறைகளில் உழல்பவர்களாய், அடிமைகளாய், அஞ்சி அஞ்சிச் சாகும் அபலைகளாய், ஆக்கி வைத்திருக்கும் என்பதை அறியாமலிருந்திருப்பார்களா? அது தெரிந்துதான், ஜப்பானியர் துணிந்து பாய்கின்றனர்! அந்த வேளையில்தான் இங்கு நீளப்பேச்சும் கோணற் திட்டமும், சூன்ய ஞானமும், சூட்சித்திறனும், தாண்டவமாடுகின்றன.

சஞ்சீவி பர்வதத்தின் சாரலிலே, நோகாமல் முத்தங்கள் நூறுகொடுப்பேன் என்றுரைத்த வஞ்சியிடம், கொஞ்சியகுப்பன் உலகக் காட்சிகளை உணர்த்திவிட்டு இந்நாட்டைப்பற்றி வெளிநாட்டார் விளம்புவது என்னவென்பதைக் கூறிடுங் காலையில்

“கட்டிச் சழகத்தின் கண்ணவித்துத் தாழண்ணக்
கொட்டி அளக்கும் குருக்கள் கணக்கற்றார்
தேன்சுரக்கப்பேசி இந்துதேசத்தைத் தின்னுதற்கு
வான்சுரரை விட்டுவந்த பூசுரரும் வாழ்கின்றார்

இந்த உளைச்சேற்றை, ஏறாத ஆழத்தை
எந்தவிதம் நீங்கி நமை எதிர்ப்பார்?”

என்று கூறினான், என்று தீட்டுகிறார் தீந்தமிழில் கவி பாரதிதாசன்.

அந்தக் குருக்கள் கூட்டத்தின் கருதந்த கருந்தனந்தான், காதும் கண்ணும் பழுதானது மட்டுமின்றி, கருத்தும் பழுதானதோ என்று நானும் நீங்களும் எண்ண வேண்டிய நிர்ப்பந்தத்தை உண்டாக்கும், சொல்லையும் செயலையும் காட்டிவரும் ஆச்சாரியார்!

26.4.1942

காந்திஸ்தான் மர்கயா!

அந்தக் குதிரை மிகப்பொல்லாதது! ஏறிவந்தவர் சிறிது சிரமபரிகாரம் செய்துகொள்ள கீழே இறங்கினார், அங்கு மிங்கும் பார்த்தது, கனைத்தது, காலை உதறிற்று. வாலைத்தட்டிக்கொண்டு பிடித்தது ஓட்டம்! கூப்பிடுகிறார் குதிரையை, வந்தால்தானே! மிரட்டுகிறார், சட்டைசெய்தால் தானே! பரிவுடனழைத்தும் பரிவரக் காணோம். பாகையிலே நின்று பதறுகிறார், பக்குவிமிழந் தோமே என்று பரிதவிக்கிறார். ஆற்றுவார் இல்லை, தேற்றுவார் இல்லை, அலறுகிறார் அந்தோ!

யார் அவர்? என்பது பிறகு கூறுவோம், ஒரு குதிரையை இழந்ததற்காகவா இவ்வளவு சோகம் பிறந்தது என்றெண்ணிச் சந்தேகிப்பவருக்கு முதலிற் சில கூறுவோம். இந்தியாவைத்தாக்கிய கிரேக்க வீரர் அலெக்சாண்டர், ப்யூசிபாலெஸ் என்ற மதிநுட்பமும் வலிவும் பெற்ற வனப்பான குதிரையிடம் அதிகமான பரிவு கொண்டவர். அது இறந்ததும், உலகை ஒரு குடைக்கீழ் ஆள வேண்டும் என்ற அவருடைய இலட்சியமே இறந்தது. அவர் சித்தரித்த மண்டலங்களிலே கிரேக்கராட்சியே கவிழ்ந்தது. ஒரு குதிரையை இழந்தார், அவரது குறியே கெட்டுவிட்டது! அத்தகைய சரித்திர கீர்த்திவாய்ந்த குதிரைகள் பலப்பல! தேசிங்குராசனின் பாராசாரிக் குதிரை, பாமரரும் தெரிந்துக் கொள்ளும்படியான பிரக்யாதி பெற்றுவிட்டதல்லவா! சரித்திரத்திலோ, கவியின் கற்பனையிலோ இடம்பெற்று விட்டால், மண்ணோ மலரோ, கரியோ, பரியோ, காடோ, மேடோ, எதுவும், மக்கள் உள்ளத்திலே இடம்பெற்று விடுகிறது!

முன்னால் இருவர் தொட்டிழுக்க, பின் இருந்து சிலர் தள்ள “மாதங் காதவழி” சென்ற காளிங்கராயன் குதிரையப்பற்றிக் கவிகாளமேகம் கூறினார். இன்றும் அக்கவிதை அறிந்தோர் கண்முன் அக்காட்சி நடப்பது போலத் தோன்றும். யுத்தகளத்திலே பிரிட்டிஷ் மன்னனொருவன், தனது குதிரை இறந்துபட, மேலும் போரிடப் புரவி மீதேறத் துடித்து, “ஒரு குதிரை! ஒரு குதிரை! ஒரு ராஜ்யத்துக்கா ஒரு குதிரை தேவை” என்று கூவினான் இதோ கவி ஷேக்ஸ்பியர் கூறியுள்ள வாசகம், படித்தோ வாசித்து, கேட்டோர் களித்து போற்றும்.

புலவர்கள் சிந்தனையில் நின்ற புரவிகளைக் காட்டிலும் நாம்

மேலே கூறியுள்ள புரவி, முக்கியமானது. இப்புரவி, கற்பனை. கதை கூறுவதில் கைதேர்ந்தவரென, கட்டியங்கூறுவோர் கூறும், கனமாக இருந்த ஆச்சாரியாரின் உவமை உரையில் உற்பத்தியானது! நந்தம் நாட்டு அரசியலில், நாம் மறக்கமுடியாத நகைச்சுவை நல்கும் புரவி!

கேண்மின், விளக்கம். ஆச்சாரியார், பதவியைவிட்டு வெளிவந்ததும், பேசுகையில் சொன்னார், “நாங்கள் பதவியை மீண்டும் பெறமாட்டோம் என்று எண்ணிவிடாதீர்கள். குதிரை மீதேறிக் கொண்டு போகையில், இளைப்பாற, சமையல் செய்துண்ண வேண்டி, கீழே இறங்கி இருக்கிறோம். குதிரை கூப்பிட்ட உடனே வரும். மீண்டும் சவாரி செய்வோம்” என்று.

ரசமான கற்பனை! பதவி ஓர் குதிரைக்கு உவமை. மந்திரி, அதன்மீதேறிடும் ஆணழகன்! கூப்பிட்ட நேரத்தில் குதிரை வரும் என்றதன் கருத்து, கேட்டதும், மீண்டும் மந்திரிப்பதவி கிடைக்கும் என்பதாகும். அவரது கற்பனை விசேடத்தைவிட, அவருக்கிருந்த ஆழந்த நம்பிக்கை கவனிக்கத்தக்கது. அப்போதுதான் அவரது இன்றைய இரங்கத்தக்கநிலைமை நன்கு விளங்கும்.

கூப்பிட்ட நேரத்திலே குதித்தோடி வரக்கூடிய குதிரை எங்கே? அதன் மீதேறி வந்த வீராதிவீரர் எங்கே? வீரர் விம்முகிறார்! குதிரை, குறும்புத்தனத்தினால், நாலுகாற் பாய்ச்சலில் போயேவிட்டது. கூப்பிடுகிறார், புலம்புகிறார், வரக்காணோம் குதிரையை! இத்தகைய குதிரையையோ, இதன்மீதேறிவந்து, இடையே அதனை இழந்த இளித்தவாயரையோ, எங்ஙனம், அரசியல் வட்டாரம் மறக்கமுடியும்!

பதவியை விட்டதும், குதிரையைவிட்டுக் கீழே இறங்கியதும் ஆச்சாரியார் கொண்டிருந்த நம்பிக்கை அவலமாயிற்று. கோபக் குரலிற் கூப்பிட்டாலும், தாபக்குரலிற் கூவினாலும், சோகத்தோடு கூப்பிட்டாலும், சொந்தம் பாராட்டிக் கூப்பிட்டாலும், அந்தப் பொல்லாத குதிரை வரமறுக்கிறது. வாய்நோய் கொண்டு வதைகிறார் வகைமறந்த வேதியர்!

குதிரைவரமறுப்பது மட்டுமல்ல, வேடிக்கை! அதன்மீது வேறு ஆள் சவாரி செய்கிறார்! அவர் கீழே இறங்கவில்லை, இறக்கக் குதிரைக்கும்

விருப்பமில்லை. பதவி, கவர்னர் மன்றத்தாரிடம் இருக்கிறது, ஆச்சாரியாருக்குக் கிடைக்குமென்று ஆரூடம் கூற யாரும் முன்வரவில்லை. முன்னாள் முறுக்கு முறிந்துவிட்டது, இந்நாள் ஏக்கமே மேலிட்டு விட்டது.

கேளுங்கள் அவர் சென்னையில் 22-ந்தேதி பேசுகையில் கூறியதை! ஓர் ஆங்கிலேயர் தலைவர் அந்தக்கூட்டத்திற்கு. அதையும் பொருட்படுத்தாது ஆச்சாரியார், அடிவயிற்றில் அறைந்து கொண்டு அலறும் அம்மாமிபோல் பேசியுள்ளார், “அவர்கள் ஏறிய குதிரைகள் அவர்களை இறங்கவிடவில்லை. மதனப்பள்ளி போனாலும், சித்தூர் போனாலும், எங்குபோனாலும் குதிரை விடவில்லை” என்று ஆச்சாரியார் கூறுகிறார். அதாவது ஆங்கிலேய அதிகாரிகளிடம் போய்ச்சேர்ந்த மந்திரிப் பதவிகள், இவரிடம் மீண்டும் வரவில்லையாம்! எவ்வளவு பரிதாம் பாருங்கள்! கர்வபங்கம் எவ்வளவு நேரிட்டிருக்கிறது என்பதைக்கூர்ந்து நோக்குங்கள்! எந்தக்குதிரையை, கூப்பிட்ட உடனே வந்துசேரும் என்று ஆச்சாரியார், வீரரசத்துடன் கூறினாரோ, அந்தக் குதிரை, வேறு ஆட்களுடன் வேற்றூர்கள் போகவும் விரும்புகிறது, இவரைச்சட்டை செய்ய மறுக்கிறது, என்று இவரே கூறுகிறார்! இஃதன்றோ காலம் புகட்டும் கருத்துள்ள பாடம்! நீதி நின்று வெல்லும், ஆனால் நிச்சயமாக வெல்லும் என்றனர் ஆன்றோர். உண்மை! இதோ, ஆணவத்துடன், அநாயாசமாகக் கூப்பிட்டால் போதும் குதிரை ஓடிவரும் என்று கூறிய ஆச்சாரியாரே, கூப்பிட்டுக் கூப்பிட்டு அலுத்தேன், குதிரை வேறு ஆட்களை விட்டுப்பிரிய இசையவில்லை என்று கூறவேண்டி நேரிட்டது என்றால், நீதியின் வெற்றியல்லவா இது என்று கேட்கிறோம்.

இதுவரை, சற்று மறைத்துப் பேசிக்கொண்டிருந்த மாஜி முதலமைச்சர், இம்முறை, மிக வெளிப்படையாகப் பேசியும் பார்க்கிறார். வைத்தியரிடம் வியாதியின் மர்மத்தையும், வக்கீலிடம் வழக்கின் உண்மையையும் கூறிடவேண்டு மென்பார்கள், அதுபோல் வெள்ளையரிடம் பதவி விருப்பத்தைப் பளிச்சென‌த் தெரியப்படுத்தித்தான் விடவேண்டும் என்று ஆச்சாரியார் கருதினார் போலும்! இல்லையேல், இலஜ்ஜையை அவர் அவ்வளவு பகீஷ்கரித்திருக்கக் காரணமில்லை!!

இவை அவர் கூறியவை: “இங்கு (சென்னை மாகாணத்தில்) வேறு சர்க்கார் இருக்கவேண்டும்.

இதற்குமுன்பு இதை நான் சொல்ல வில்லை. இந்தியப் பிரச்னை தீரவேண்டுமென்றும், மத்தியில் தேசீய சர்க்கார் இருக்கவேண்டுமென்றும் சொன்னேன். பின்னர்தான் மாகாண சர்க்காரைப்பற்றி நான் ஆலோசித்தேன், இதைப்பற்றி நான் பேசும்போது, இது என் சொந்தவிஷயமாகக் காண்பதுபோலத் தோன்றுகிறது. நான் ஆளுவதற்கு ஆசைப்படுவதுபோல் நீங்கள் நினைக்கலாம், எனக்கு அந்த ஆசை இல்லை”

ஆசையற்ற இவர், அசுவம் அயலாரிடம்போனதுபற்றி ஆயாசப்படுவானேன்? அதை மீண்டும் தருக என்று ஆங்கில சர்க்காரிடம் அர்ச்சித்துக் கேட்பானேன்?

விஷயம் இது. முதலிலே பூரண சுயராச்யம் கேட்டார், பிறகு சுயராச்யம் தருவதாக வாக்குறுதி தருக என்று கேட்டார். பிறகு, போர்நோக்கம் புகல்க என்று கேட்டார், பிறகு சிறைபோகிறோம் என்றார், பிறகு வெளிவந்து வேண்டுகோள் விடுத்தார், அஹிம்சை ஆகாது என்றார், தேசீய சர்க்கார் கேட்டார், கூட்டு மந்திரிசபைக்குத் தூபமிட்டார். கிரிப்சிடம் காவடி தூக்கினார், இவை யாவும் இல்லை, இல்லை, என்றாகிவிடவே, இருந்த இடத்திலாவது மீண்டும் அமர்த்துங்கள் என்று இப்போது கெஞ்சுகிறார். எவ்வளவு பரிதாபகரமான வீழ்ச்சி! ஏனோ பதவிமீது இத்துணை பிரேமை! பத்தும் பறந்துவிட்டதே!!

குதிரை, இவ்வளவு “ஞானோபதேசம்” புரியக் கூடியதென்று நாம் எண்ணினதேயில்லை. ஆனால் இதோ காண்கிறோம், பதவிக் குதிரை அவரை எவ்வளவு பாடுபடுத்தி, பாடங்கற்பிக்கிற தென்பதை!!

“காங்கிரசே தேசம், தேசமே காங்கிரஸ்” என்று கனல்கக்கும் பேச்சுப்பேசிய ஆச்சாரியார், கண்ணீர் புரளக் கூறுகிறார், “காங்கிரஸ், லீக், ஜஸ்டிஸ் கட்சி, தாழ்த்தப்பட்ட லீக், இந்துமகாசபை, மகாராஷ்டிர லீக், கக்கார்கள், அஹ்ரர்கள், எல்லோரும் சேர்ந்து இந்த யுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாகக் கூறினால் ஒவ்வொருவரும் அதை நன்கு அறிந்து கொள்ளமுடியும். அப்போதுதான் ‘யுத்தம் மக்களின் யுத்தமாக மாறும்’

சர்க்கார், அறிக்கையல்ல, ஆச்சாரியார் சொற்பொழிவு! அவருடைய வாயிலிருந்து தான், மனதிலிருந்து வருகிறதெனக் கூற நமது மனம் இடந்தர மறுக்கிறது. லீக், ஜஸ்டிஸ் கட்சி, தாழ்த்தப்பட்டவர் லீக், என்ற இவைகள் கிளம்புகின்றன! நாங்களன்றி வேறுயாருக்கு நாடாளும் உரிமை உண்டு என்றுரைத்த உக்கிரசேனர், எவ்வளவு அடக்க ஒடுக்கத்துடன், பரிவு பாசத்துடன், நம்மவர்களையும் அழைக்கிறார் பாருங்கள்! அவருடைய கருத்து எதுவாகவேனும் இருக்கட்டும், சாணக்கிய சாத்திரப்படி சமயத்தில் சகலரையும் சரிப்படுத்த வேண்டும் என்ற சாகசமாக இருக்கட்டும், நமக்குக் கவலையில்லை, கவிழ்ந்த தலையும், நீர்மல்கும் கண்களும், கூப்பிய கரங்களும், குழையும் பேச்சுமாக அவர் நிற்கக் காண்கிறோமே, அதுபோதும் நமக்கு, வேளை நமக்களிக்கும் வெற்றி அது! எட்டு நாளில் சட்டம் செய்வேன் என்று அன்றுரைத்த ஆச்சாரியார் எங்கே? செல்வத்தையும் குமார இராசாவையும் கேலி செய்த கூட்டத்தைச் சட்ட சபையில் வைத்துக்கொண்டு பட்டங்கட்டியாண்ட பிரதாபம் எங்கே? சர்க்கார், காங்கிரஸ், இவை இரண்டொழிய வேறுகட்சிகளுக்கு இடமில்லை என்றுரைத்த இறுமாப்பெங்கே? எம்மை அசைக்க எவருளர் என்றுரைத்த வீறாப்பு எங்கே? பட்டத்துக்குரியவர்கள், இன்னும் பன்னெடு ஆண்டுகட்கு யாங்களே என்று பேசிய பூரிப்பு எங்கே? லீகும், ஜஸ்டிசும், இருக்கின்றன என்பதும், எத்தகைய ஏற்பாடு நடைபெறுவதாயினும், அவைகளின் ஆதரவு பெற்றாகவேண்டு மென்பதும், இன்றுணர்ந்தார் ஆச்சாரியார். இஃதுநமக்கோர் இணையற்ற வெற்றி என்போம். இதுமட்டுமன்று, மேலும் உண்டு.

பாகிஸ்தான் கோரிக்கையை ஏற்கமுடியாது. இந்தியா இந்தியருக்கே! பாகிஸ்தானுக்கு இணங்குவதைவிட சுயராச்யத்தை இழப்பதுமேல், கடைசி காங்கிரஸ்காரர் இருக்கும்வரையில் பாகிஸ்தானை எதிர்த்துப் போராடுவோம்.
பாகிஸ்தான்,

பாரதாமாதவை வெட்டுவதாகும்

பசுவை அறுப்பதாகும்

குழந்தையைக் கூறுபோடுவதாகும்

வீட்டைப் பிரிப்பதாகும்

அதற்கு ஒப்புக்கொள்ளமாட்டோம்.

இந்தியா, ஒரே நாடு, அதனைத்துண்டாடச் சம்மதியோம் என்று ஆச்சாரியார், இதுவரை பாகிஸ்தானைப்பற்றிப் பேசிப் பலமாகக் கண்டித்து வந்தார். ஜனாப் ஜின்னாவைப் பலமுறை தூற்றியிருக்கிறார். அறிவை இழந்து காயிதே அஃலம் பேசுகிறார் என்று இழிவாகப் பேசினார். அக்பரும் அவுரங்கசீபும் தோற்றுவிட்டனர், இந்த ஆசாமிமட்டும் ஜெயிப்பாரோ என்று கேலி செய்தார்.

லீகுக்குச் செல்வாக்குக் கிடையாது என்றுரைத்தார். முகமதலி ஜின்னாவை மெய்யான உபயதலைவரை விக்கித்திட்டசெய்தது, பாகிஸ்தானை வேண்டோம் என்று பேசச்செய்தார்! ஆயிரக்கணக்கான கூட்டங்களிலோ, அண்டம் அதிரக் கூறினார், பாகிஸ்தான் என்ற பேச்சைக் காதால் கேட்பதும் தவறு என்று! அதைக்கேட்ட அடியார் கூட்டம் ஆர்ப்பரித்து, முஸ்லீம் லீக் தலைவர்களை நாக்கில் நரம்பின்றித் தூற்றின. எவ்வளவு ஏளனம்! எத்துணை கண்டனம்! காந்திஸ்தான் தவிர வேறொன்றும் கூடாது என்று செய்த கர்ச்சனை எவ்வளவு!

இன்று இவையாவும், போயின! தூற்றியவர் தொழவருகிறார், கண்டித்தவர் கனிவுடன் பேசுகிறார், எதிர்த்தவர் சமரசம் கூறுகிறார், ஆச்சாரியார் பாகிஸ்தானை ஆதரிக்கிறார்! ஆதரித்துத் தீரத்தான் வேண்டும் என்று தமது சகாக்களுக்குக் கூறிவிட்டார். பாகிஸ்தான் திட்டத்தை ஒப்புக்கொள்ளும்படி காங்கிரசைக் கேட்டுக் கொள்கிறார், அதற்காகக் காங்கிரசில் போரிடவுங் கிளம்புகிறார்!

23-4-42 நமது நாட்டுச் சரித்திரத்தில் பொன்னாற் தீட்டப்பட வேண்டிய நாளாகும்! கருப்புக் கண்ணாடியாரின் கர்வபங்க நாளாகும் அது! பாகிஸ்தானை எதிர்த்த முண்டங்கள், முகத்தைத் தொங்கவிட்டுக் கொள்ளவேண்டிய நாளாகும். பிளாசி, பானிபட், வாடர்லூ, முதலிய பலப்பல சரித்திரப் புகழ்பெற்ற சம்பவங்கள் போன்றதாகும்.

வெள்ளைக்கொடி ஏந்தி வேதியர் வெளிவந்த நாள்! பூர்ண கும்பம் எடுத்துக் கொண்டு புறப்படுவோம் ஜனாப் ஜின்னாவை வரவேற்க என்று பூசரர் கூறிடவேண்டிய நிலைமையை உண்டாக்கிய நாள்! ஆணவம் அழிந்த நாள்! அன்பு உதயமான நாள்! ஆச்சாரியார், ஜின்னாமுன் மண்டியிட்டு நிற்கும் நாள்! பாகிஸ்தானாவது .... காங்கிரசாவது அதற்கு ஒப்புக்கொள்வது என்று எல்லாம் தெரிந்தவர்கள் .....திரிந்த இங்கிதந் தெரியா ஏமாளிகளே! வேதகால முதற்கொண்டு இராமர், அரிச்சந்திரர், பாண்டவர் முதலியவர்கள் காலத்திலிருந்து ஒரே நாடாக இருந்துவந்த பாரதபூமியைப்பங்குபோட யார் சம்மதிப்பார்கள் என்று புராணம் பேசிய புலவர்களே! முஸ்லீம்களும் அன்னியர்களே, அவர்கள் இங்கு ஆள இடந்தரோம் என்று பொச்சரிப்போடு பேசிய பேதையரே! மெஜாரடிதானே ஆட்சி செலுத்தவேண்டும், அதுதானே ஜனநாயகம், இந்து இனந்தானே மெஜாரடி, அதனிடந்தானே முஸ்லீம் மைனாரடி அடங்கி இருக்கவேண்டும் என்று அகந்தை கொண்டு ஆர்ப்பரித்த அசடர்களே! வாளெடுத்தும் போரிடுவோம், வழங்க மாட்டோம். பாகிஸ்தான் பூதம் பிரிட்டிஷாரால் சிருஷ்டிக்கப்பட்டது, அதைப் புதைத்துத் தீரவேண்டும் என்றுபேசிய ஆரிய தாசர்களே! ஜனாப் ஜின்னா, ஏகாதிபத்தியத்தின் ஏவலர், அவரை ஏற்கோம் என்றுரைத்த இஞ்சி தின்ற மந்தியென்று நின்றுலவிய பேர்வழிகளே! இதோ, உங்கள் தலைவர், ஆச்சாரியார், பணிந்து பயபக்தியுடன் நின்று, பாகிஸ்தான் கொள்கைக்கு ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும் என்று கூறிவிட்டாரே, உங்கள் முகத்தை எதனால் மூடிக்கொள்ளப் போகிறீர்கள். ஏதேதோ பேசிய உமது நாவை எதுகொண்டு சுத்தம் செய்து கொள்ளப் போகிறீர்கள், அவமானந் தாங்காது ஆளுக்கொரு முழக்கயறு எடுத்துக்கொண்டு மரக்கிளைகள் தேடுவதா, அல்லது ஆச்சாரியார் மீது பாய்ந்து அவரை வீழ்த்துவதா, என்ன செய்யப் போகிறீர்கள், எங்கே உங்கள் வீரப்பேச்சும், காரக் கண்டனமும், சூரச் சூளுரையும்!

23-4-42ஆம் தேதியில், சென்னை சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக்

கூட்டத்தில், ஆச்சாரியார் கொண்டு வந்து பேசிய தீர்மானத்தில், “ஐக்கிய இந்தியாவிலிருந்து சில குறிப்பிட்ட பிராந் தியங்கள் அந்த வட்டாரத்துக்குட்பட்ட மக்களின் சம்மதத்தின் பேரில் பிரிந்திருக்க உரிமை உண்டு என்பதை அங்கீகரிக்க வேண்டும். இதுவே முதல் நிபந்தனையாக இருக்கவேண்டும். என்று முஸ்லீம் லீக் வற்புறுத்துவதாலும் இந்தச் சமயத்தில் இந்திய ஐக்கியத்தைப்பற்றிய சர்ச்சையை வளர்த்துக்கொண்டிருப்பது மிகவும் புத்தித்தாழ்வான காரியமாதலாலும், இரண்டாம்படியான இந்தக் கெடுதலைத் தெரிந்தெடுத்து, லீகானது இந்தக் கோரிக்கையில் பிடிவாதம் காட்டியே தீருமாயின் அதற்கு விட்டுக் கொடுத்து, தற்போதைய நெருக்கடியைச் சமாளிக்க வேண்டும்” என்று இருக்கிறது. இதைக்குறித்து ஐந்துமணி நேரம் விவாதம் நடந்ததாம். தோழர் பிரகாசம் முதலிய சிலர் எதிர்த்தனராம். ஆச்சாரியார் அனைவரையும் அடக்கும் சொல்லம்புகளைச் சரமாரியாக விடுத்தார். “இத்தனை ஆண்டுகளாக லீகையோ, ஜனாப் ஜின்னாவையோ வீழ்த்தக் காங்கிரசால் முடியவில்லை. எனவே லீக் கோரிக்கைக்கு இணங்கித்தான் தீரவேண்டும்.” என்று கூறினாராம் ஆச்சாரியார். இந்தப்புத்தி வந்ததுகண்டு நாம் மகிழ்கிறோம்.

ஆச்சாரியார் இந்தத்தீர்மானத்தை அகில இந்தியக்காங்கிரஸ் கமிட்டி ஏற்றுக்கொள்வதற்றாகப் போரிடப்போவதாகவும், போரிட்டு வெற்றிபெற முடிவுமென்று உறுதி கூறியதாகவும் தெரிகிறது.

தீர்மானத்தை நிறைவேற்றிக்கொண்டார், உடனே, சம்பந்தி காந்தியாரைக்காண ஓடுகிறார்!

முஸ்லீம் லீகை இத்தீர்மானத்தின் மூலம் மயக்கி தேசிய சர்க்கார் அமைப்புக்கு இணங்கச்செய்து, பிறகு மெள்ள ஏதாவதோர் சூதுசெய்து லீகைக்கவிழ்க்கலாம் என்று சூட்சிசெய்ய ஆச்சாரியார் முற்படக்கூடும். ஆனால் கொள்கையை ஏற்றுக்கொண்டு, குனிந்து நிற்கிறாரே இன்று, அந்தக்காட்சி போதும், நமது கண்களுக்கும் கருத்துக்கும், விருந்தளிக்க!

திராவிடத்தலைவர்களே! தோழர்களே! மூன்றாண்டுகளுக்குள் முப்புரிநூலை முகமதலி ஜின்னா வீழ்த்திவிட்டார். பாகிஸ்தானை, பிரிட்டிஷாரும், காங்கிரசும் ஏற்றுக்கொள்ளச்செய்து விட்டார். என்னே அவரின் வீரம்!

திராவிடர்களே! இஸ்லாமியர் பெறும் இன்பம் நாமும்பெற, நாம் இனியாவது முனையவேண்டாமா? திராவிட நாடு, என்றென்றும் தனி நாடாக இருந்தது. இலக்கிய, சரித ஆதாரம் இருக்கிறது. இனி எழுமின் தலைவர்காள்! கூடுமின் தோழர்காள்! கொட்டுமின் முரசு! பாகிஸ்தான் ஜிந்தாபாத் என்று பாடுமின், திராவிட நாடு திராவிடருக்கே என்ற நமது முழக்கத்தையும் முப்புரி நூலோரும் ஆங்கிலேயரும் ஒப்புக்கொண்டே தீரவேண்டும் என்பதை எடுத்துரைப்பீராக! ஆரியம் அழிக! திராவிடம் வாழ்க!!

பார்ப்பனத்தலைவர் பறிகொடுத்த பரிமீது பரங்கி ஏறிச் சவாரி செய்வதைக்கண்டு பதைபதைத்தது, அதனைமீண்டும்பெற, ஆச்சாரியார், பாகிஸ்தான் ஜிந்தாபாத் என்ற நமது முழக்கத்துக்கு முடிவணங்க முன்வருகிறார்! அது நமக்கோர் வெற்றி. பாகிஸ்தானை ஒப்புக்கொண்டபிறகு திராவிட நாடு கூடாதென்றுகூற யாரே துணியமுடியும்! வாள் வலிவால் சித்திரித்த மண்டலத்தை, இழந்த இஸ்லாமியர் இன்று தமது கட்டுப்பாட்டினால், எழுச்சியினால், தலைவர் ஜின்னாவின் தீரத்தால், திரும்பப்பெற மார்க்கம் கிடைத்து விட்டது. பல வடநாட்டு வல்லரசுகளுக்குத் தலைவணங்காது வாழ்ந்த நாம், வஞ்சனைக்காரரிடம் வளைந்தோம், வாழ்வை இழந்தோம். பாகிஸ்தான் ஜிந்தாபாத் என்ற பாடலின், இரண்டாம் அடி, திராவிட நாடு வாழ்க, என்றுதான் இருக்க முடியும்! எனவே எழுமின், போரிடுமின், வெற்றிக்கொடி நாட்ட விரைமின் என்று திராவிடருக்கு நாம் கூறுகிறோம். காந்திஸ்தான் மர்கயா, என்பது இப்போது மிகத்தெளிவாகி விட்டது!

26.4.1942

நச்சுப் பொய்கை

பசி! பசி! பட்டினி! பஞ்சம்! - என்று அரண்மனைக்கு வெளியிலே ஆயிரம் ஆயிரம் மக்கள் அலறித் துடித்தழுகின்றனர்.

சுவை! சுவை! பண்டமும் பானமும்மிகச் சுவை! - என்று களித்துக் கூறுகின்றனர் ஒருசிலர், அரண்மனைக்குள்ளே.

பசியால் வாடி, பஞ்சத்தால் பதைத்து எலும்புந் தோலுமாக உள்ளனர், அரண்மனைக்கு வெளியே இருந்து அழும் மக்கள்.

பொன்னோ, பூங்கொடியோ, மின்னலோ, கன்னலோ, என்று உள்ளனர் உள்ளே இருக்கும் உல்லாசிகள். வெளியே பெரும்பாலோர் - உள்ளே சிறுகூட்டம்!

பிரான்சு நாட்டிலே இக்காட்சி நடந்தது - மக்களின் புரட்சிப் புயல், மாடமாளிகைகளையும், கூடகோபுரங்களையும் ஆங்கு குடியிருந்து கொண்டிருந்த மமதையாளர்களையும் கவிழ்க்கா முன்னம்.

“ஏன் இதுகள் இப்படிக் கத்துகின்றன” என்று பிரான்ச்சு அரசியார் கேட்டார். தோழியர் “ரொட்டி கிடைக்கவில்லையாம், அதற்காக அழுகிறார்கள்” என்றுரைத்தனர். அரசி கைக்கொட்டி நகைத்துவிட்டு, இதற்காகவா இவ்வளவு ஆர்ப்பரிப்பு? ரொட்டி கிடைக்காவிட்டால், பிஸ்கட் சாப்பிடக் கூடாதோ” என்று கேட்டார்களாம். பஞ்சம், பசியறியாத பரிமளவல்லிக்கு ரொட்டி வாங்கித் தின்னவே காசின்றிக் கதறும் மக்களிடம் பிஸ்கட் வாங்கப் பணம் ஏது என்பது தெரியாது. வெளி உலகில் உள்ள வேதனையைத் தெரிந்த கொள்ளாமல், அரண்மனைக்குள்ளே வாழ்ந்த வனிதைக்குப் பலகோடி மக்கள் படும் கஷ்டம் தெரியாது.

இத்தகைய மனப்பான்மை, பிரான்சுப் புரட்சியினால் சிதறடிக்கப்பட்டது, ரஷிய புரட்சியினால் அழிந்தொழிந்தது என்று கருதிக்கொண்டிருந்தேன், இன்றும் இத்தகைய உலகமறியாத, உழைப்பாளரின் பெயர் தெரியாத, தெரிந்தாலும் தெளிவு பிறக்காத, பேர்வழிகள் உண்டென்பதைச் சென்னை மெயில் விளக்குகிறது.

வெள்ளைக்காரர்கள், திராவிட இனத்தினிடம் அக்கரை கொண்டழைத்தவர்களல்ல. கடந்த 150 ஆண்டுகளாக அவர்கள் ஆண்டு வந்தவிதம், மடிந்து கொண்டிருந்த ஆரியத்துக்கு மறுமலர்ச்சி தந்ததே ஒழிய, திராவிட மக்களை ஈடேற்றியதாக இல்லை என்பதை நான் கூறத் தேவையில்லை. அண்டம்புகழும் ராசதந்திர ஆங்கிலேயர் திராவிடரின் துயர்தீர மார்க்கமெது வென்பதையோ திராவிட மக்கள் முன்னாளில் வாழ்ந்தவிதம் பற்றியோ சிந்தித்ததே கிடையாது. யார் தங்களின் அடிவருடிகளாக இருப்பர், யார் சரியான தரகர்களாக இருப்பார்கள், யாரிடம் நாலு இரண்டு வீசினால் நடுங்கி ஓடுங்கி நடப்பார்கள் என்றதனையே குறிக்கோளாகக்கொண்டு இதுவரை ஆட்சி செய்து வருகின்றனரேயன்றி, இந்நாட்டுப் பழங்குடி மக்களிடம் பரிவு காட்டியதாகவோ, புதுநீதி வழங்கியதாகவோ எனக்குத் தெரியவில்லை. தெரிந்தவர் கூறட்டும் கேட்போம். நமது இனத்திலுள்ள தரித்திரம், தற்குறித் தன்மை, தன்மான மங்குதல், ஆகியவைகள், 150 ஆண்டுகளாகக் குறையக்காணோம். மூலைக்குச் சென்றிருந்த ஆரியம் முடிசூட்டிக்கொண்டு இன்று வெளிவரக்காண்கிறோம். வேதனை நமக்கு! வருத்தம் நம்மவருக்கு! ஆரியரும் ஆங்கிலேயரும், ஆலிங்கனம் செய்துகொண்டே வாழ்கின்றனர். இடையிடையே சிறு ஊடல்கள் நடக்கின்றன. ஆனால் உரசலுக்கும் உல்லாசத்திற்கும் முடிவு ஏற்படுவதில்லை. இனம் இனத்தோடு தானே!

மெயில் பத்திரிகை இதனை மெய்ப்பிக்கும் விதத்திலே, 29ந்தேதி ஒரு தலையங்கம் தீட்டியிருக்கிறது. அதிலே, நமது இயக்கத்தை வகுப்புவாத இயக்கமென்றும், நமது தலைவர், வகுப்புவாத விஷத்தைப் பெய்பவரென்றும் கண்டிக்கிறது. நமக்குப் புத்திகூறவும் முற்படுகிறது. அதற்காகச் சில காரணங்களையும் கட்டிக்கொண்டு வருகிறது. அதற்கு ஏற்பட்டுள்ள குழப்பத்தைப் போக்க வேண்டாமா! பாவம்! நல்ல மனிதருக்கு, திடீரென்று காக்காய்வலிப்பு வந்து, நடுரோட்டில் வீழ்ந்து விட்டால், நாலுபேர் நின்று ஏதாவது சிகிச்சை செய்யத்தானே வருவார்கள். மெயில் பத்திரிகை, மேதாவிகளால் நடத்தப்படுவதாகவும், மேதினியின் விஷயம் பூராவும் தெரிந்தவர்கள் தீட்டுவதாகவும் கூறப்படும் ஏடு. அதுமிகச் சாதாரண மான பேர்வழிகளின் பாணியில் செல்வதைக் கண்டால், உள்ளபடி எனக்கு, கோபத்தைவிட பரிதாபந்தான் பிறக்கிறது.

திராவிடர், ஆரியர் பிரச்சினை இருப்பது தெரியாதவர்கள் சிலர்.

அவர்கள் மேல்மாடியை வாடகைக்கு விட்டுவிட்ட மெத்தாதிகள்! காலந்தான் அவர்களுக்குக் கருத்தூட்ட வேண்டும். வேறுசிலர், ஆரியர் திராவிடர் பிரச்னையை மிக அலட்சியமாகத் தள்ளி விடுபவர்கள். இந்த ரகத்துக்கு, மூளை உண்டு, ஆனால், அதிலே வேண்டிய அளவு முதிர்ச்சி இருப்பதில்லை. இத்தகையவர்கள் இடிகிடைத்ததும், 'ஆமாம்' என்று கூறுவர். மற்றுஞ்சிலர், இந்தப் பிரச்னையை நாம் வேண்டுமென்றே கிளப்பிவிடுகிறோம் என்று பேசுவர். இந்தரகம், குதர்க்கத்தை நம்பி வாழுகிறது. மெயில் பத்திரிகை, இத்தரகங்களின் கூட்டுச் சரக்காகக் காணப்படுகிறது.

எதிரே இருக்கும் பள்ளத்தைக் காணமுடியாதவன் குருடன்! கண் இருந்தும் கருத்துக் குருடாகி, பள்ளமிருப்பதைக் கண்டும் அவ்வழி போய்க்கீழே உருள்பவன் போதையில் உள்ளவன். பலர் தடுத்தும், திமிரிக்கொண்டுபோய் அதிலே வீழ்பவன் பித்தன். அது போலவே ஆரிய திராவிடப் பிரச்னையைத் தெரிந்து கொள்ளாதவன் தெம்மாண்டை! தெரிந்து கொண்டும், அலட்சியப்படுத்துபவன் தெகிடுதத்தக்காரன். குற்றத்தைப் பிறர்மீது சுமத்தப் பார்ப்பவன் குறும்பன். மெயில் பத்திரிகையின் போக்கு, என்னை அகராதியைப் புரட்டிப்பார்க்கச் செய்தது. எந்த அடைமொழி கொடுத்து நான், அதன் இலட்சணத்தை உங்களுக்கு எடுத்துரைப்பது!

பெரும்பான்மையினரான நாம், சிறுபான்மையினரான பார்ப்பனரால் அவதிப்படுவதாகக் கூறுவது மெயிலுக்கு ஆச்சரியமாக இருக்கிறதாம்! இது பழங்கதையாம்!!

பிரான்சு நாட்டிலே பெரும்பாலான மக்கள் வாடி வதங்கியது சிறு கூட்டமான செருக்குப்பிடித்த சீமான்களால், என்பதை துரைமாரின் காகிதத் துப்பாக்கி மறந்துவிட்டது.

சிறு ரோம்பட்டாளம் பெரிய பிரிட்டனை அடக்கி ஆண்ட கதையை ஆங்கில ஏடு அறியும், ஆனால் நாம் அறியோம் என்று எண்ணுகிறது.

"அவர்கள் மிகச் சிறுகூட்டம்! நாமோ மிகப் பெருங்கூட்டம்" என்று ஆங்கிலக்கவி ஷெல்லி கூறிய அழகிய வாசகத்தை மெயில் மறந்துவிட்டது.

இவ்வளவையும் மறந்தபோதிலும், 40 கோடிபேர் வாழும் இந்தப்பெரிய உபகண்டத்தை, மிகச்சிறு கூட்டமாகிய பிரிட்டிஷார் 150 ஆண்டுகளாக ஆண்டு வருவதை, மெயில் பத்திரிகை மறந்துவிட்டதென்று கூறமுடியாது.

இந்திய உபகண்டத்தில் சிறு ஆங்கிலேயக்கூட்டம் ஆதிக்கம் செலுத்துவதற்கு, துப்பாக்கி எனும் ஆயுதம் பயன்படுகிறது. பெரும்பான்மையினரான திராவிடரை, சிறு ஆரியக்கூட்டம் அடக்கி ஆளுவதற்கு, தர்ப்பை ஆயுதமாக உபயோகமாகிறது. இதனை அறியாத ஆங்கில ஏடு, ஏன் சிறுகூட்டத்திடம் பயப்படுகிறீர்கள் என்று அறிவுக்களஞ்சியம்போல் நம் எதிரே நின்று கேட்கிறது.

பெரிய பட்டணங்களைப் பிணக்காடாக்கும் பிளேக் வருவது எலிகள்மீது சவாரிசெய்யும் சிறு பூச்சிகளினால்! காலராகிருமி கண்ணுக்குத் தெரியாத அளவுள்ளது, ஆனால், ஆறடி ஆளையும் அக்கிருமி சாகடித்துவிடும்.

மாபெருங்கூட்டம்! பெரியார் கேட்பவர்மனதை ஆவேசமுறச் செய்யும் பேச்சுப் பேசுகிறார். ஆர்வம் ததும்புகிறது. ஆரியர் வெதும்புகின்றனர். வெண்தாடி காற்றிலே ஆடுகிறது! ஆரஞ்சு நிறச் சால்வை கீழே புரளுகிறது. கூட்டத்திலே நிமிடத்துக்கொரு கரகோஷம்!

வந்ததய்யா ஒரு கேள்வித்... 100-க்கு 97 பேராக இருக்கும் திராவிடர்கள் 3 பேராக உள்ள ஆரியர்களிடம் பயப்படுவது, வெட்க மில்லையா? இது கேள்வி. கேட்ட ஆள்தன்னை மிகமேதாவி என்று எண்ணிக்கொண்டிருந்திருப்பான். “இதிலென்ன ஆச்சரியமப்பா, பத்தாயிரம் பேர் கூடும் சந்தையிலே, முடிச்சவிழ்க்க 10 பேர்தான் வந்திருப்பார்கள். இந்த 10 பேருக்குப் பயந்துகொண்டுதான் 9990 பேரும் சர்வசாக்ரதையாக, தமது பணத்தை ஜேபியிலே வைத்துக் கொண்டு, அடிக்கடி தொட்டுப் பார்த்துக்கொண்டு, இருக்கிறார்கள். அதுபோலத்தான் இங்கு நாம் 97 பேராக இருந்தாலும், நமது இனத்தை நெடுநாட்களாகச் சுரண்டிக்கொண்டிருக்கும் 3 பேராக

உள்ள கூட்டத்திடமிருந்து தப்பித்துக்கொள்ள, தக்க பாதுகாப்பு முறை தேவை என்கிறோம். இதிலே என்ன வெட்கம்!" என்று பதில் கூறினார். பொதுக் கூட்டம் பூராவும் களிப்புக்கடலில் நீந்திற்று. கேள்வி கேட்டவரின் முகம் மூன்றாம் பேஸ்த்தாகிவிட்டது.

அத்தகைய கேள்விகேட்ட கூட்டத்தில் மெயிலையும் சேர்க்கவேண்டி வருகிறது. மெயில் பத்திரிகைக்கும் இதே சந்தேகம்! பெருவாரியாக உள்ள பார்ப்பனரல்லாத இனம், சிறு கூட்டத்திடம் அஞ்சிப் பாதுகாப்புக் கேட்பது விசித்திரமல்லவா? என்று மெயில் கேட்கிறது! என்ன அறியாமை பாருங்கள்!

வானைத்தழுவும் அளவு உயர்ந்த வனப்பும் வலிவும் பொருந்திய கோட்டை கொத்தளங்களைத் தவிடுபொடியாக்கும், "பாம்" கட்டடத்தின் அளவுடன் ஒப்பிட்டால் எவ்வளவு சிறியது! கடற்கோட்டை போலுள்ள பெருங்கப்பல்களை உடைத்தெறியும் டார்ப்பிடோவை ஏவும் சப்மெரைன், கப்பலைவிட மிகச்சிறியது! பிரின்ஸ் ஆப் வேல்ஸ், பிரம்மாண்டமானது, அதனை வீழ்த்திய குண்டுகள், மிகச்சிறியன! இவைகள், நேற்று நடந்தன, நினைப்பு மாறுவதற்கில்லை. என்றாலும், மெயில் கேட்கிறது, பெரிய வகுப்பு, சிறிய வகுப்பிடம் அஞ்சுவானேன் என்று!

உலக சாம்ராச்யங்களிற் சிறந்த ஆங்கில அரசு, வியாபாரத்துறையில் விற்பன்னத்துடன் விளங்கும் ஆங்கில அரசு, விஞ்ஞானத்துறையில் விசேட இடம் பெற்றுள்ள ஆங்கில அரசு, திடீரென ஒருநாள், நீக்ரோக்களால் தோற்கடிக்கப்பட்டு, ஆங்கிலமக்கள், நீக்ரோக்களின் ஆட்சியில் வாழவேண்டியும், நீக்ரோக்கள், தம்மை உயர்ந்த இனமென்றும், ஆங்கில இனம் அடிமை இனமென்றும் கூறி, அதற்கேற்ற கட்டுத்திட்டம், சட்டம் ஏற்படுத்தி விடுகிறதென்று வைத்துக்கொள்வோம். அப்போது, பூர்வபெருமைகளை உணர்ந்த ஓர் ஆங்கிலேயனின் மனம் எவ்வளவு துடிக்கும்! எவ்வளவு பதைக்கும்! அத்துடனில்லாது, நீக்ரோக்கள், ஆண்டவனுக்கு நாங்களே பிரதிநிதி என்றுகூறி, செயின்ட் பீடரின் கையில் இன்று இருப்பதாகப் பைபிள் கூறும் மோட்சலோகத்

திறவுகோல் எம்மிடமிருக்கிறது என்றுரைத்து, மோட்சம் புக வேண்டுமானால், எமக்குக் காசுகொடுத்து, காலில் விழுந்து கும்பிட்டு, காலைக்கழுவி அந்த நீரை பயபக்தியுடன் பருகவேண்டுமென்று ஏற்பாடு செய்தால், ஆங்கிலத் தோழர்களே, அரை நிமிடம் அதனை நீங்கள் தாங்குவீர்களா! ஓர் இனமக்கள், பலஜாதிகளாகப் பிரிந்து, சின்னாபின்னப்பட்டு, ஒன்றை ஒன்று பகைத்துக்கொண்டு செத்தவாழ்வில் இருக்கச் சம்மதிப்பீர்களா! இந்த ஏற்பாட்டை உண்டாக்கிய "கடவுள்கள்" என்று விக்ரகங்களைக் காட்டினால், அவைகளை உடைத்துத் தூளாக்க மாட்டீர்களா? இத்தகைய ஏற்பாட்டின் இருப்பிடமாகக் கோயில்கள் இருப்பின், அவைகளைக் குப்பைமேடாக்க மாட்டீர்களா! போப் ஆண்டவரின் போக்கை ஆதரிக்க மறுத்து, புரட்சி செய்தீர்கள்! மமதையோடிருந்தான் என்பதற்காக ஒரு மன்னனை மாளிகைக்கு எதிரே தூக்கிவிட்டீர்கள், மற்றோர் மன்னனை நாடு கடத்தினீர்கள், மகுடாபிஷேகத்திற்கு முன்னாள், ஒரு மன்னனின் காதலுக்கும் கட்டுப்பாடு விதித்தீர்கள்! இத்தகைய நீங்கள், எங்களைப்போல், நடமாடக் கூடாத நாயாடிகளாய், சஞ்சரிக்கமுடியாத செரமர்களாய், தீண்டப்படாத வர்களாய், சூத்திரராய் வாழ்ந்துகொண்டு, ஒரு குலத்தின் பொதிமாடுகளாய், சனாதனத்துக்குச் செக்கு மாடுகளாய், இருக்கச் சம்மதிப்பீர்களா! என்று கேட்கிறேன்.

மாட்டுக்கு மூக்கணாங்கயறிட்டு வேலைவாங்குவதுபோல், குதிரைக்குக் கடிவாளமிட்டு உழைக்க வைப்பதுபோல், யானையை, சிறு அங்குசத்தால் குத்தி அடக்கிவைப்பதுபோல், ஆரியம் எங்களை, பாவபுண்ணியம், மோட்சம் மறுஜென்மம், உயர்ந்தவன் தாழ்ந்தவன், தேவன் மானிடன், என்று பல கற்பனைகளைக்கூறி அவைகளால் எமது இனமக்களின் மனதில் தளை பல பூட்டி அடக்கி ஆளுகிறது. காட்டு அரசனாம் சிங்கம் கூட்டிலடைபட்டால், என்ன செய்யும்! நாங்கள், ஆரியச்சிறையில் இருக்கிறோம். அவதியுறுகிறோம்! வெளியே நின்று வேடிக்கை பார்க்கும் வெள்ளைக்காரர்கள், குறும்பன்கோல் கொண்டு சிங்கத்தைக் குத்திப்பார்ப்பதுபோல், கேலியும் கண்டனமும் செய்கிறார்கள்! சிங்கத்தின் சீற்றம் அதிகரிக்கிறது! காலத்தின் வேகத்தால் கூண்டின் கம்பிகள் துருப் பிடித்துள்ளன! ஒரு பெறுமுயற்சிதான் தேவை, கம்பிகள்

தவிடுபொடியாக, சிங்கம் வெளிக்கிளம்ப! வெளிவரும்போது, தயவுசெய்து துரைமார்களே, எதிரே நின்று இரையாகாதீர்கள். ஒதுங்கி நில்லுங்கள், ஓய்யாரம் பேசியது போதும்.

சர்வதேச சங்க இலட்சியங்களென்ன, ஜனநாயக நாடுகளின் கூட்டுறவு என்ன, உலக சகோதரத்துவமென்ன, இத்தகைய ஏட்டுச்சுரைக்கு எண்ணாயிரம் வியாக்கியானம் எழுதும் மெயில், இந்த மாகாணத்திலுள்ள, பார்ப்பனர் அல்லாதார் பிணக்குப்போக, இதுவரை அன்போடு அறிவுங்கலந்த உரை எழுதியதுண்டா? இங்கு சேரியில் சிதையும் மக்களிடம் சிரத்தை காட்டிற்றா! ஜாதி அகம்பாவத்தைக் கண்டித்ததுண்டா! எங்கிருந்தோ ஒருமேயோ வருவதும் எள்ளி நகையாடுவதும், அதைக்கண்டு, என்செய்வது இங்கு நிலைமை அப்படித்தான் இருக்கிறது. அதனைச்சரிப்படுத்தவே ஆங்கில அரசு இருக்கிறது என்று கூறிக்கொண்டு, கூடாரமடித்துக் கொண்டிருக்கவும் தெரிகிறதேயொழிய, பிணக்கும் பேதமும், பூசலும் ஏசலும், ஏன், எப்படி எப்போது ஏற்பட்டது என்று எடுத்துரைத்து, அவைபோக வழி கூறியதுண்டா?

ஆச்சாரியாரின் அதிகார மோகம் அனைவரும் அறிந்தது! அவரது சகாக்களும் தெரிந்து கொண்டனர். பசித்தவன் புசிக்க பாயாசமா வேண்டும்? எச்சில் இலைமீதும் தாவுகிறான். ஆச்சாரியாரின் பதவிப்பசி அவரைப் பத்தையும் மறக்கச் செய்து விட்டது. எப்படியேனும் பதவியில் அமரவேண்டு மென்பதற்காக ஏதேதோ திட்டம் தயாரிக்கிறார். அதிலே ஒன்று, பாகிஸ்தானை ஆதரிப்பதாகக் கூறும் பசப்பு மொழி. இதுபற்றிப் பெரியார் ஒரு அறிக்கை வெளியிட்டார்! வேதியர் கூட்டம் சும்மா இருக்கிறது, வெள்ளை ஏடுதான், வெடுக்கெனக் கடிக்க ஓடிவருகிறது. கேளுங்கள் தோழர்களே, “வகுப்பு வாதம், விஷயத்தைப் பரிசீலித்து முடிவு செய்யும் பண்பையும் பாழாக்கிவிடுகிறது என்பதற்குப் பெரியாரின் அறிக்கை ஓர் எடுத்துக்காட்டாம். விஷநீர் பெருக்கெடுத் தோடுகிறதாம் நமது கட்சியில். பார்ப்பனரிடம் பார்ப்பனரல்லாதாருக் குள்ள சந்தேகங்களை பெரியாரின் அறிக்கை மீண்டும் கிளறி விடுகிறதாம், வகுப்புப் பூசலுக்குத் தூபமிடுகிறதாம், 3% மக்கள் 97% மக்களை அடக்கி ஆளும் பழையகதை மீண்டும் பேசப்படுகிறதாம். இவைகள் காலத்துக்கேற்றதல்லவாம். பெரியாரின் அறிக்கை பிறிதோரிடமிருக்கிறது, படித்துவிட்டு, பேதமை ஆங்கில ஏட்டைத் தோழமை கொண்டிருப்பதைக் காணுங்கள். ஆச்சாரியார், பதவி பெறுவதற்காகவே புதியதோர் சூழ்ச்சி

செய்கிறார் என்று பெரியார் கூறியிருக்கிறார். மாமனைத் திட்டினால் மார்தட்டிக் கொண்டு சண்டைக்குக் கிளம்பும் மருகன்போல, மெயில் இதற்காகச் சண்டைபிடிக்கிறது. பதவி வேட்டைக்காக ஆச்சாரியார் இப்படிச் செய்தார் என்று எப்படிக் கூறலாம், என்று கொக்கரித்துவிட்டு, பதவிக்காகத்தான் இதனைச் செய்கிறோம் என்று ஆச்சாரியாரின் கூட்டமே கூறிவிட்ட பிறகு, நீங்கள் ஏன் குத்தலாகப் பேசுவது என்று மெயில் கேட்கிறது. உள்ளதைச் சொன்னால், யாருக்கோ கோபம் வரும் என்பார்களே அதற்கு இதோ மெயிலின் வாதம் சிறந்த உதாரணம்!

இந்த நாட்டிலே ஒரு விஷநீர் ஊற்று இருக்கிறது. அதனைப் பருகிப்பருகி, பரம்பரை பரம்பரையாக மக்கள் பாழாகின்றனர், அந்த மாற்றுதான் ஆரியம். அதைச்சுற்றி அமைக்கப்பட்டுள்ள வேலிதான் ஆங்கில அரசு! இதனை எடுத்துரைத்து எச்சரிப்பவரே பெரியார்! விஷயம் வெளியாகி விட்டதால் விபரீதம் நேரிடுமோ என்று வெகுண்டதே மெயில் பத்திரிகையின் பதட்டத்துக்குக் காரணம்.

பார்ப்பனரல்லாதாருக்குப் பாதுகாப்பு இல்லாததால், சட்டசபையிலே 7 ஸ்தானங்களே பெற்றிருக்க வேண்டிய பார்ப்பனர் 49 ஸ்தானங்களைப் பெற்றனர், 10 மந்திரிகளில் நால்வர் அவர்களாயினர், என்று பெரியார் எடுத்துரைத்திருக்கிறார். இதற்கோர் நொண்டிச் சாக்குக் கூறுகிறது இந்த நோய்வாய்! பார்ப்பனர்களிடம் விசேஷ நம்பிக்கைதோன்றி, பார்ப்பனர்களே காரியவாதிகள் என்பதை உணர்ந்து, 49 ஆரியரை பொதுமக்கள் தெரிந்தெடுத்தனராம். நாலுபேர் பார்ப்பனர் மந்திரிகளானதற்குக் காரணமும், அவர்களே வேலைக்குத் தகுந்தவர்கள் என்று பெருவாரியான சட்டசபை மெம்பர்கள், பார்ப்பனரல்லாதார் எண்ணினதேயாம்! வாதத்தின் போக்கைக் கவனியுங்கள்! கடந்த தேர்தல், பார்ப்பனர் ஆள்வதா, ஆளும் தகுதியுடையவர்கள் பார்ப்பனரா, நாமா, என்ற திட்டத்தின்படி நடக்கவில்லை. மனதார பார்ப்பனரின் நோக்கம் எப்படியேனும் ஆரிய அரசை அமைக்கவேண்டும் என்பதே என்ற போதிலும், வெளியே

அவர்கள் பேசியது வெள்ளைக்கார ஆட்சியை ஒழிக்கவேண்டும் என்பதுதான். இதனை நம்பியவர்களிடம், “ஆளைப்பற்றி யோசிக்காதே, காங்கிரசைக் கவனி! காங்கிரசின் பேரால், கூனோ குருடோ, செவிடோ முடமோ, குதிரையோ பிறவோ, எதுநின்றாலும், ஓட்ட் தருக” என்று கூறினர், ஏய்த்தனர். எனவே இந்தத்திரை மறைவிலே 49 பார்ப்பனர் சட்டசபை புகமுடிந்தது. இதனை, மக்கள் அவர்களிடம் நம்பிக்கைவைத்து, வேலைக்குத் தக்கவர்களென்று தீர்மானித்துத் தெரிந்தெடுத்தனர்” என்று மெயில் கூறுவது, அறியாமை என்று நான்கூறினால் நீங்கள் திருப்திப்படமாட்டீர்கள். வேறு கடுமையான பதத்தைத்தேட எனக்கு அவகாசமில்லை, நீங்களே தேடிக்கொள்ளுங்கள். ஆல்கபோன் அமெரிக்காவில் கொள்ளையிட்டான், பொருள்களுக்கு அவனிடம் ஆசை அதிகரித்து, அவனிடம் போய்ச் சேர்ந்தன, என்றுரைக்க, மெயில் முன் வந்தாலும், நாம் எப்படி இனி ஆச்சரியப்பட முடியும்! ரஸ்புடின் ராஜ குடும்பங்களில் ரசாபாசம் செய்தான் என்றால் அவனுடைய ரமணியத்தில், ராஜகுடும்பங்கள் மோகங் கொண்டன, எனவே ரஸ்புட்டின் மீது தவறில்லை என்று வாதிட மெயில் முன்வரக்கூடும்! ஆல்கபோன் களவில் கைகாரன், ரஸ்புடீன் வேடமணிந்து மக்களை மயக்குவதில் சமர்த்தன், ஆனால் அவர்களின் செயலைக் காலம் கண்டிக்கிறது. ஆரியர், தந்திரத்தில் சமர்த்தர்கள். அதனாலேயே, வெள்ளையரைத் தூற்றுவதாக வெளியே பேசிவிட்டு சட்டசபைக்குள்ளே புகுந்து கொண்டனர், இதனால், மக்கள் அவர்களிடம் நம்பிக்கையும் ஆசையுங் கொண்டனர், என்றுரைப்பது மன்னிக்க முடியாத அளவு வளர்ந்துவிட்ட மமதையின் அறிகுறி என்பேன். நான் கேட்கிறேன் மெயிலை, 49 பார்ப்பனர் சட்டசபை புகுந்தது மக்களின் ஆதரவால். ஆகவே குறைகூறலாகாது என்றுரைக்கும் போது, 8 மாகாணங்களிலே, மக்கள் காங்கிரசைத்

தெரிந்தெடுத்து அதன்மூலம் ஆங்கில அரசு கூடாது, தன்னரசு வேண்டுமென்ற தமது விருப்பத்தைக் காட்டினார்கள் என்றுரைப்பது தவறாகாதே! மக்களின் விருப்பத்தை தெரிந்துகொண்டும், ஏன் பிரிட்டிஷ் ஆட்சியை இந்தியாவில் விட்டுவைத்து அதற்கு வேளைக்கோர் சமாதானங் கூறுகிறீர், வெட்கமில்லையா!

பார்ப்பன ஆதிக்கம் என்றால் உடனே பரங்கி, உத்தியோகத் திலே, நாம் பங்கு கேட்கிறோம் என்று குள்ளக்கருத்துடன் கூத்தாடு கின்றனர். பார்ப்பன ஆதிக்கம் என்றுரைக்கும்போது உத்தியோக மண்டத்திலே அவர்கள் ஆட்சி செலுத்துவதை மட்டுமல்ல, நாம் குறிப்பது.

ஜாதியிலே உயர்வு, சமயத்திலே தரகு, சமுதாயத்திலே பாடுபடாத வாழ்வு, பொருளாதாரத்திலே சுரண்டல் கொள்கை, மதத்துறையிலே மடமையை வளர்க்கும் கொடுமை, கல்வித் துறையிலே கற்றோரையும் கசடராக்கும் குரூரம், அரசியலிலே ஆங்கிலரை மாற்றுவதாகக் கூறிக்கொண்டு பேரம்பேசும் போக்கு, வாழ்க்கைத்துறையிலே, இதம், பரம் என்று பிரித்துப் பேசி, உலகம் மாயை என்றுரைத்து வாழ்வு அநித்தியம் என்று வேதாந்தம் போதித்து, மக்களை, எருமை இயல்பு, கொண்டோராக்கும் கோரம், இன்னோரன்ன பிறவற்றையே நாம் குறிப்பிடுகிறோம். உத்தியோக மண்டல விஷயம் இதிலே ஓர் ஒதுக்கிடம், முழுவதும் அதுவல்ல. ஊராள்வோரின் உறவினரான மெயிலுக்கு, உத்தியோக விஷய மட்டுமே கண்ணை உறுத்துகிறது, பிறவற்றைக்காணக் கண் இல்லை.

ஆரியம் ஒரு நயவஞ்சக நாசீசம், பசப்பும் பாசீசம், ஜாலம் பேசிடும் ஜார், சீலம் என்றுரைத்துத் தமிழ்ச்சீமை ஆண்டவரைச் சிதைத்த சதி, வஞ்சக வல்லரசு, இளித்த வாயரை உற்பத்தி செய்து அவர் மீதேறிச் சவாரிசெய்யும் ஏகாதிபத்தியம், தாசர்கூட்டத்தை உண்டாக்கி, அதற்குத் தரகுத்தொழில் செய்யும் தந்திர யந்திரம்!

ஓர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், என்று அட்டவணையைப் போட்டுப்பாருங்கள், தெரியும் ஆரிய ஆதிக்கம் எவ்வளவு மறுமலர்ச்சியுடன் இருக்கிறதென்பது! இந்த நேரத்திலே மெயில் கூறுகிறது, உத்தியோக மண்டலத்திலே ஆரிய ஆதிக்கம் படிப்படியாகக் குறைகிறதாம்!

போதாக்குறைக்கு மற்றோர் வாதத்தையும் நீட்டுகிறது மெயில். உத்தியோகத்துறையிலே நம்மவருக்கு விருப்பம் இல்லையாம், வியாபாரம் தொழில் முதலிய துறைகளில் புகுந்து விடுகிறார்களாம்!

வியாபாரம், என்ற உடனே, வேதனையே வளருகிறது எனது உள்ளத்திலே. எங்கே இருக்கிறது வியாபாரம்! நமது ஆடைகள் பிர்லா மில்லில் தயாராகிறது, நமது இரும்புச் சாமான்கள், டாடா கம்பெனியுடையது, நமது சுதேச மருந்துகள் ராய் கம்பெனியுடையது, தாதா கம்பெனியார் விற்பது, கப்பல் கட்ட ஒரு லால் சந்து ஹீராசந்து, வைர வியாபாரத்துக்கு சுராஜ்மல் லல்லுபாய், தங்கம் வெள்ளிப்பணிகளுக்கு பாபாலால், பண்டங்களுக்கு குப்தா ஸ்டோர்ஸ் ஆடைக்குச் செல்லாராம், சிற்றுண்டிக்கு ஆரியபவன், சினிமாவுக்கு ஒரு ராம்லால் நந்தலால், தமிழ் பத்திரிகைக்கு ஒரு கோயங்கா, ஏழைகளை இரட்சிக்கும் வட்டித் தொழிலை வாஞ்சனையுடன் நடத்தவோ, வண்டி வண்டியாக மார்வாடி, குஜராத்திகள், என்று இங்ஙனமிருக்கிறதே வியாபார நிலைமை, தொழில்துறை, இதனை உணர மெயிலுக்கு ஏன் நேரமில்லை என்று கேட்கிறேன்.

ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள், சொல்லின்படி செயல் அமைந்திருந்தால், நிலைமை மிக நன்றாக இருந்திருக்கும் என்று மெயில் கூறுகிறது. பார்ப்பனரல்லாத வியாபாரிகள், தமது நிலையங்களிலே ஏராளமாகப் பார்ப்பனரை வேலைக்கு அமர்த்திக் கொள்ளவில்லையா? பார்ப்பன வக்கீல்களை நாடவில்லையா? பார்ப்பனருடைய யோசனையைத் தேடவில்லையா? அவர்கள் பார்ப்பனரல்லாதவருக்கே வேலை கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்து நடந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும், என்று மெயில் கேட்கிறது.

எனது கருத்தையோ, உங்கள் எண்ணத்தையோ வெளிப் படுத்த, ஒரு பெருமூச்சு விடுவதைத்தவிர வேறென்ன செய்வது. மெயில், யோசனைகூறும் அளவுக்கு, நிலைமை இந்தத்துறையிலே இருக்கிறதென்பதை நான் மறுக்கமாட்டேன். உங்கள் எண்ணமும் அதுதான் என்பது எனக்குத்தெரியும். ஆரியத்தால் நசுக்கப்பட்டு, ஆங்கிலரால் அலட்சியம் செய்யப்பட்டு, திராவிடச் சீமான்களால் கைவிடப்பட்டு, கலங்கித் தவிக்கிறோம். ஆனால் கலக்கத்தைக் கண்டு கேலிசெய்வது, காருண்ய மற்றது மட்டுமல்ல, மிக்க ஆபத்தானது.

வேதனைப்பட்ட உள்ளம் வெடிமருந்துச்சாலைக்குச் சமம்! வெள்ளை ஏடும் எள்ளி நகையாடும் நிலை, தீக்குச்சியைக் கிழித்துக் காட்டுவதாகும்!

“கார் நிறக்கோதையும் மதிபொருவு வதனமுங் கச்சடங்காத தனமுங் கமல வழியுங்கொண்ட” பேர்வழியாக இருப்பினும், உதட்டில் கனிவும் உள்ளத்தில் கட்டாரியுங் கொண்டிருப்பின், மருவிடச்செல்பவன் மாள்வதில் ஆச்சரியமில்லை. அதுபோல், ஆரியம், சாகசமேனியும், சந்தனவாடையும், தெந்தினப்பாடலுங் கொண்டு, கொஞ்சிட வந்தாலும், அதனை ஒரு நச்சுப்பொய்கை என்றுணர்ந்து, வெறுத்தொதுக்கும் வீரம், திராவிடத்தோழர்களுக்கு உண்டாகவேண்டும். அந்த வீரம் உதிக்குமானால் திராவிட நாடு உதயமாகும் என்பது திண்ணம். இடைக்காலத்திலே இங்கிதந்தெரியாத ஏடுகள் எது வேண்டுமானாலும், எழுதட்டும், எதற்கும் அஞ்சோம்; கண்துஞ்சோம் பகைவெல்வோம், வாகை சூடுவோம்!

(3.5.1942)

அவர் அவ்வளவு முட்டாளல்ல!

ராஜபார்ட்டுக்கு வேண்டிய கெம்பீரம் இல்லை! ராஜபார்ட்டுக்குத் தேவையான சோபிதம் இல்லை. .....சத்துக்கோ உருக்கும் குணமில்லை. எந்த வேடத்தில் தோன்றினாலும், கல்மாரி காண முடிகிறதே யொழியே, மலர்மாரி காணமுடியவில்லை. எதோ கொஞ்சம் காசு கிடைக்கிறது, என்றாலும், நடிகர் உலகிலே இடமில்லை. காரணம் கம்மலான சாரீரம், தாளமோ பூஜ்யம், சரீரத்திலோ தளர்ச்சி, நினைப்போ நடிப்பின்மீது செல்வதில்லை. இத்தகைய நடிகர், நாலாறு மாதங்களோ, ஆண்டுகளோ, "சங்கீத விற்பன்ன கோலாகலர்" என்ற பட்டத்தைச் சுமந்து கொண்டிருந்து விட்டுப், பிறகு, அவன் அனுமந்த வேடத்துக்குத் தானே பொருத்தம். அவன் பாடுவதைக் கேட்டால் கழுதை கெட்ட வண்ணான் பழுமிதுடுத்தோடி வாரானோ" என்று ரசிகர்கள் கண்டிக்கக் கேட்டு, மூலையில் உட்கார்ந்துதீர வேண்டிவரும். நடிப்புத் திறமை இல்லை என்றதும் நாடகமேடைக்கும் நமக்கும் பொருந்தாது என்று சென்றுவிடுதல் புத்திசாலித்தனமே யொழியே, 'அந்தப்பார்ட்' முடியாவிட்டால், 'இன்னொரு பார்ட்' போட்டு ஆடிப்பார்ப்போம் என்று எண்ணும் நடிகன், நாட்டுக்கே வேம்பாவான்!

அரசியலில் ஆச்சாரியாரின் கதி அதுதான், என்பதை நாம் முன்கூட்டியே கூறிவிடுகிறோம். அவரது அடியார்கள் துடிக்கலாம், ஆனால் உண்மையை உரைக்கிறோம், காலம் தீர்ப்பளிக்கட்டும்.

இந்திய உபகண்டத்து விடுதலைப் போரை நடத்த, வீரமும் விறுவிறுப்பும், அஞ்சாத நெஞ்சமும் அணையாத ஆர்வமும், ஜாதி குலம் குடும்பம் ஆகியவற்றைக் கடந்த உள்ளமும், எத்தகைய கஷ்ட நஷ்டத்துக்கும் ஆள்படும் சித்தமும், எவ்வித மோகனாஸ்திரத்துக்கும் மயங்காத மனப்பான்மையும் கொண்டவர்கள், அரசியல் யூகம் அறிந்தவர்கள், சரிதத்தைச் சான்றாகக் கொண்டவர்கள், கொதிக்கும் குருதி, முறுக்கேறிய நரம்பு கொண்டவர்கள். உலகப் போக்கை உய்த்துணரும் பண்பினர் வேண்டும். செப்புமொழி, பஞ்சாங்கப் பேச்சு, ... கொண்டோர், பலநாளோ சிலநாளோ படாடோபமாக உலவலாம், ஆனால் அவர்கள் இலட்சியம் வெற்றிபெறாது.

ஆச்சாரியார் அறிவாளி. ஆனால் காலதாமதமாகியே அவருக்கு அறிவு உதயமாவது வாடிக்கை! அஹிம்சை

காலத்துக்கேற்றதன்று என்ற அறிவு அவருக்கு இன்று இருக்கிறது. ஆனால் அது சரியான நேரத்தில் தோன்றிற்றா! இல்லை! ஜப்பான் முதலிய நாட்டார் இங்கு நடமாட விடக்கூடாது என்ற அறிவு அவருக்கு இன்று இருக்கிறது. ஆனால் அது எவ்வளவு காலதாமதமாகித் தோன்றிற்று! நாட்டைப்பாதுகாக்க, போரில் உதவிசெய்ய வேண்டும் என்ற அறிவு போர்தொடங்கிய மூன்றாமாண்டன்றோ இம்முதியோருக்குதித்தது! நாட்டிலே உள்ள பலகட்சிகளும் கூட்டாக ஆள்வதே முறை என்ற அறிவு உதயமாகி இருக்கிறது. ஆனால் நினைப்பிலே இதுநிலைக்க எவ்வளவு காலம் பிடித்தது! முஸ்லீம்களைச் சமரசப்படுத்தாமுன்னம், சாந்தியும் சக்தியும் பிறக்காது என்ற அறிவு உண்டாகியிருக்கிறது. மிக்க மகிழ்ச்சிக்குரிய செய்தி! ஆனால், அது 1935 முதல் இருந்திருந்தால் நாட்டின் நிலைமை இன்று எப்படி இருந்திருக்கும். காங்கிரசைவிடத் தேசமே முக்கியம் என்று நேற்று பேசுகிறார். கோகலே மண்டபத்தில், ஆனால் காங்கிரசே தேசம், தேசமே காங்கிரஸ் என்று எவ்வளவு பிதற்றியிருக்கிறார், பேதமையுடன் எவ்வளவு காலம் புரண்டு கொண்டிருந்தார்! கோகலே ஹாலிலே, கூச்சலும் குழப்பமும் உண்டானதும், அபிப்பிராயத்தை எடுத்துரைக்க உரிமை உண்டு என்று கூறினார். ஆனால் இதே விதமான உரிமையைக் கோரிய நரிமனை நசுக்க கரேயைக் கவிழ்க்க, ராயை விரட்ட, சுபாஷைப் பொசுக்க, இவர் எவ்வளவு துடைதட்டிக்கொண்டு கிளம்பினார். “தனிஆளாக இருப்பினும், காங்கிரசிலிருந்து விரட்டப்பட்டாலும், எனது அபிப்பிராயத்தை நான் அடுத்தடுத்துக் கூறிக்கொண்டுதான் இருப்பேன்” என்று வீரம் பேசுகிறார் இன்று. ஆனால் இவ்விதமான உரிமையைக் கேட்டவர்களைப்பற்றி ஊரெங்கும் தூற்றி, உறுமி, வீண்கலகம் விளைவித்தார். பாகிஸ்தான் ஆதரிப்பைக்கேட்டு இமயம் முதல் குமரிவரை உள்ள முஸ்லீம்கள் சந்தோஷப்படுகிறார்கள் என்று இன்று கூறுகிறார். ஆனால் நேற்றுவரை, இமயம் முதல் குமரிவரை உள்ள முஸ்லீம்களை இவர் எவ்வளவு கண்டித்தார், ஏளனம் செய்தார், எதிர்த்தார்! இஸ்லாமியருக்கு பாகிஸ்தானே மணம், முஸ்லீம் வீணைக்கு பாகிஸ்தானே நாதம், என்ற அறிவு, பாகிஸ்தான் கிடைத்தால்தான் முஸ்லீம்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்ற அறிவு அவருக்குப்பிறக்க, எத்தனை ஆண்டுகள் ஆயின!

இன்று தோன்றியுள்ள காங்கிரசைவிடத் தேசம் பெரியது, காங்கிரசின் கட்டளையைவிட நாட்டின் அழைப்பு

முக்கியமானது, கட்சி முன்னேற்றத்தைவிட மக்களின் ஒற்றுமையே முக்கியமானது, முஸ்லீம்களைச் சரிப்படுத்துவதே ராஜதந்திரம் என்ற இந்த அறிவு, ஆச்சாரியாருக்கு, உதயமானது மகிழ்ச்சிக்குரியதே, ஆனால் எவ்வளவு காலதாமதாகிப் பிறந்தது என்பதை எண்ணிப்பாருங்கள்.

போர் துவங்கியதும் இந்த அறிவுடன் ஆச்சாரியார் முனைந்திருந்தால், இன்று நாட்டின் நிலை எப்படி இருந்திருக்கும்! காலை 8 மணிக்குப் புறப்படும் இரயிலுக்கு 10க்கு வீட்டைவிட்டுப் புறப்படுகிறார் நல்ல சகுனம் பார்த்துக்கொண்டு! இரயில் கிடைக்கவா போகிறது! அதிலும் அவர் டிக்கட் வாங்கி எடுத்துச்செல்லும் பணம், செல்லுபடியாகாது!!

திராவிட நாட்டுப் பிரிவினையை இன்னமும் அவர் மௌனத்தால் மாய்க்கலாம் என்ற கள்ளக்கருத்து கொண்டிருக்கிறார். பாகிஸ்தான் வழங்குவதன் மூலம் திராவிடஸ்தான் கிளர்ச்சியைக் கருவித் தவிர்க்கலாம் என்பது அவரது எண்ணம்.

ஆனால் இந்த விஷயத்திலும் அவருக்கு இன்று தோன்றா விட்டாலும், அறிவு சற்று காலதாமதமாகியாகிலும் தோன்றும்.

அவர் கேளாக்காதர், சுலபத்திலே அவர் செவிக்கு விஷயம் புகுவதில்லை! கருப்புக் கண்ணாடியார், பார்வையில் பொருள்கள் சரியாகப்படுவதில்லை. ஆனால், இப்போது பாகிஸ்தான் சம்பந்தமாக அவருக்குப் பக்குவமான அறிவு தோன்றியிருப்பது போல், சற்று காலதாமதமாகி, திராவிடநாடு தனிநாடாக வேண்டியதன் அவசியமும் அவருக்குப் புலப்பட்டே தீரும். அந்த அறிவு பிறக்காமுன்னம், செல்லாக்காசு எடுத்துக்கொண்டு இரயிலுக்குச் செல்லும் சிதைந்த சிந்தனைக்காரரின் நிலைமைதான் அவருக்கு இருக்கமுடியும்.

தான் சொன்னதைத் தானே மறுக்கவும், தனது கொள்கையைத் தானே கொளுத்தவும், தனது கட்சியைத்தானே கண்டிக்கவும், தனது சீடர்களிடமிருந்துதானே தொல்லை பெறவுமான, இத்தகைய நிலை அவர் பெற்றுவருவதற்குக் காரணம், அவர், சரியான காலத்திலே கருத்தைக் கூராக்கிக்கொள்ளாத காரணத்தால்தான். அவருடைய 'இனம்' அவரைக் காப்பாற்றியிரா விட்டால், அவர் மூலைக்குச் சென்று

நெடுங்காலமாகி இருக்கும்.

இப்போதும் கேட்கிறோம், பாகிஸ்தானை ஒப்புக்கொண்டு திராவிடநாட்டுப் பிரிவினையைப் பற்றி மௌனம் சாதிப்பது, அறிவாகுமா? ஆச்சாரியார் என்ன எண்ணுகிறார்? பாகிஸ்தான் ஆதரிப்புக்காக இனி அவர் திரட்டித் தீரவேண்டிய காரணங்கள், சக்திகள், பாகிஸ்தானின் தோழமைக் கொள்கையாகிய திராவிட நாட்டுப் பிரிவினைக்குப் பக்கபலமாகாமலா போகும்! ஏன் இதனை முன்கூட்டியே உணர்ந்து, இன்றே அவர் திராவிட நாட்டுப் பிரிவினையை ஒப்புக்கொண்டு கண்ணியமாகக் காலங் கழிக்கக் கூடாது என்று கேட்கிறோம். பாகிஸ்தான் கொடுத்துவிட அட்டியில்லை என்றபிறகு, திராவிட நாட்டை மறுக்க, எந்தமானமுள்ள, அறிவுள்ள, நெஞ்சில் ஈரமுள்ளவன் முன்வர முடியும்!

பாகிஸ்தான், இந்தியாவில் மூன்றிலோர் பாகம், வடமேற்கு எல்லைப்புறம், பஞ்சாப், சிந்து, வங்காளம் அசாம் பகுதிகள் கொண்ட வட்டாரம். இன்று ஆச்சாரியார் ஒப்புக்கொள்கிறபடி, இந்த மூன்றிலோர் பாகம், பிறைபறக்கும் பிரதேசமாகி, மூன்றிலிரண்டு பாகம் இந்து ஆட்சியில் இருக்கும்! இது அவரது நினைப்பு! மூன்றிலொன்று போனாலும், மூன்றிலிரண்டு பாகமாவது இந்து ஆட்சியில் இருக்கட்டும் என்று தந்திரமாகத் திட்டமிடுகிறார்.

இது ராஜதந்திரம் என்று அவர் கருதலாம். இது அறிவின் கூர்மை என்று அவரது அடியார் கூட்டம் கூறலாம்.

நாம் கூறுகிறோம், இதைப்போன்ற எதிர்காலத்தை முன்கூட்டி உணரமுடியாத போக்கு வேறு இருக்கமுடியாது. இந்தியாவில் மூன்றிலோர் பாகம் முஸ்லீம் ஆட்சியிலும், மூன்றிலிரண்டு பாகம் இந்து ஆட்சியிலும் இருக்குமானால், இந்திய கண்டத்தில் சிறு பாகம் முஸ்லீமிடமும், பெரும்பாகம் இந்துவிடமும் இருக்குமானால், சர்வதேச விவகாரங்களிலும், கண்டத்துக்குள்ளாகவே தோன்றக் கூடிய விவகாரங்களிலும், பாகிஸ்தானுக்கு ஏற்படக்கூடிய மதிப்பைவிட, செல்வாக்கைவிட இந்துஸ்தானுக்கே அதிகம் ஏற்படும்! இதனை முஸ்லீம் ஆட்சியினர் விரும்பமாட்டார்கள்!! விரும்புவது ராஜதந்திரமுமாகாது, ஏனெனில், இந்துஸ்தானம் ஒரே

வட்டாரமாக இருந்தால் அங்கு ஆரிய ஆட்சிதான் இருக்கும்! ஆட்சி இந்திய கண்டத்தில் சக்திப்போட்டியான அமைப்புடன் இராது. இதற்காகவேண்டி பாகிஸ்தான், ஆப்கனிஸ்தான், ஈராக், ஈரான், சிரியா, அரபு, துருக்கி ஆகிய வட்டாரத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டு, ஆசிய கண்டத்து இஸ்லாமிய கூட்டாட்சி அமைத்துக் கொள்ளவேண்டும் என்ற முடிவுக்கு வரவேண்டியதாகிவிடும். அதன் பலன்கள் என்னவென்று எண்ணினாலும் ஆரியர் அஞ்சி அஞ்சிச் சாவார்!!

முஸ்லீம்கள் அங்ஙனம் செய்துகொள்ள வேண்டிய அவசியம் பிறக்குமா என்று கேட்டால், பாகிஸ்தான் இந்துஸ்தான் என்ற இரண்டே வட்டாரம் இந்தியாவில் அமைந்தால், நிச்சயம் அந்த நிலைமை உண்டாகியே தீரும், ஆரிய ஆட்சி வீரத்தை நம்பாது சூட்சியில் நம்பிக்கை கொள்ளும்.

மெஜாரடி ஸ்தானங்களை குறுகிய புத்தியுடைய லீகர்களுக்குக் கொடுப்பதைவிட பிரிட்டிஷ் ஆட்சி இந்த நாட்டிலே இருப்பதே மேல்.

லீகர்களுக்குத் தேசபக்தி கிடையாது.

இந்தியாவைத் தாய் நாடென்று அவர்கள் சொல்வதில்லை.

இவை மே 15-ல் தினமணி எழுதியவை! இத்தகைய நினைப்புதான் ஆரிய ஆட்சியில் இருக்கும். எனவே பாகிஸ்தான் மட்டும் ஏற்பட்டு, இந்தியாவில் பெரும் பகுதி இந்து ஆட்சியில் இருந்தால், விரைவில் நாட்டிலே ரணகளம் ஏற்படும். ஆனால் மூன்று வட்டாரமாக, பாகிஸ்தான், ஆரியஸ்தான், திராவிடஸ்தான் என்று பிரிந்தால், சக்திகளின் சமத்துவம் ஏற்படும், சமர் எழக் காரணமேற்பட பாகிஸ்தான் ஏற்பட்டு, இந்தியாவின் மற்றப்பகுதி ஆரிய ஆட்சியில் இருந்தால், அங்குள்ள முஸ்லீம்கள் நிம்மதியாக வாழமுடியாது! அவர்கள் கொடுமைப்படுத்தப் படுவார்கள். ஏனெனில், பாகிஸ்தானைவிட இந்துஸ்தான் பெரிது என்ற மமதையும் இந்துமதத் திமிரும் ஆரிய ஆட்சியாளரிடம் இருக்கும். திராவிட நாடு தனிநாடானால் அங்கு முஸ்லீம்கள் சரிசமமாக வாழமுடியும்! ஏனெனில், அவர்களின் திராவிட இனத்தேசத்தவர்களுடன் இணைந்து, திராவிடஸ்தான் ஏற்பட்டே தீரவேண்டும். இதனை ஜனாப் ஜின்னா அறியாமலில்லை! ஆச்சாரியார் இதை இன்றே உணருதல்

நன்று!!

பாகிஸ்தான் பிறந்துவிட்டால், ஆரியவேட்டைக்காரர்களுக்கு அங்கு இடமிருக்காது. ஆகவே வடநாட்டு முதலாளிகளின் படை திராவிடநாட்டில் பெருவாரியாகப்புகுந்து, வியாபாரத்துறையில் மேலும் ஆதிக்கம் செலுத்தும். மார்க்கட் சுருங்கிவிட்டால், திராவிடநாட்டைப் பூராவும் பண்ணையாக்கி, வடநாட்டார் வியாபார மிராசுதாரர்களாகத்தானே வாழப்பிரியப்படுவார்கள். அதனைச் சகிக்கவோ, தாங்கவோ திராவிடரால் முடியாது. எனவே பாகிஸ்தான் பிரிந்து திராவிடஸ்தான் ஏற்படாது போனால், திராவிடர் தத்தளிக்க வேண்டும். எனவே அவர்கள் திராவிடநாடு பெற, உயிரைப் பணயமாகவைத்து உக்கிர விளையாட்டு நடத்தியே தீருவர்.

இவைகளை முன்கூட்டியே ஆச்சாரியார் உணருவது நல்லது. “பதவியில் அமரேன் நான் அவ்வளவு முட்டாளுமன்று, கெட்டவனுமன்று” என்று கோகலே மண்டபக்கூட்டத்தில் ஆச்சாரியார் கூறியுள்ளார்.

பதவியில் அவர் அமரட்டும், அமராமற் போகட்டும் நமக்குக் கவலையில்லை. ஆனால் பாகிஸ்தானுக்கு இணங்கி திராவிட நாட்டுக்கு மறுப்பதென்றால், “அவர் அவ்வளவு அறிவாளியுமன்று, நல்ல வருமன்று” என்று திராவிடநாடு தீர்ப்பளிக்கும் என்பது நிச்சயம்.

17.5.1942

பெரியார் - ஆச்சாரியார் சந்திப்பு!

வாங்கோ! வாங்கோ! வணக்கம்! சங்கரய்யா, அந்த மாலையை எடு இப்படி!

அதெல்லாம் வேண்டாம் சௌக்யிந்தானே! உடம்பு இளைத்த மாதிரி இருக்கே என்ன விஷயம்?

ஒன்றுமில்லை வெய்யில் கஷ்டந்தான்! காப்பி சாப்பிடுங்கோ முதலிலே, கோயம்புத்தூரிலிருந்துதானே வருகிறீர்.

ஆமாம்! நல்ல கூட்டம் என்னால் முடிகிறதா பேச நீங்க ஆர்குமெண்டாகப் பேசுவீர்கள்
ஆர்குமெண்ட் பூராவும், நீங்கள் ஏற்கனவே தயாரித்ததுதான், புதுசா ஒண்ணுமில்லை

பத்திரிகையிலே படிச்சேன்

நான் பேசினது சரிதானே, குடுமபத்திலே சொத்து பிரித்துககொள்ள வேண்டுமென்று பிள்ளை சொன்னால், பிரிக்காமே இருக்க முடியுமோ. இது தெரியாமே இந்த சத்தியமூர்த்திக் கூட்டம் எதிர்க்கிறது

இதென்ன எதிர்ப்பு! உங்கள் பேச்சு, இந்து, மித்திரன், கல்கி இவ்வளவு பத்திரிகைகளின் ஆதரவு இவைகளை எதிர்த்து அவர்கள் என்ன செய்ய முடியும்?

என்னத்தைச் செய்வா! ஜவார்லாலை அழைப்பா, அவன் வந்து கத்துவான் வேறே என்ன நடக்கும் பாயிண்டுகளுக்குப் பதில் கூற முடியுமோ அவாளாலே!

எப்படி முடியும்? இந்தச் சமயத்திலே, பெரிய மனுஷனாகலாமென்று அவர்களுக்கு ஆசை. அதற்காக எதிர்க்கின்றனர்.

அதுதான் சூஷமம்! நான் கூடத்தான், முதலிலே பாகிஸ்தானை எரிர்த்தேன் பஞ்சமா பாதகம் என்று பயங்காட்டினேன் அந்த

பழஞ்சோற்றை எடுத்துக்கொண்டு, பலதுகள் பேசுகின்றன. நான் என்ன பேசியும் என்ன முடிந்தது? ஜின்னா, கிகிடுவென உச்சஸ்தானத்துக்குப் போயேவிட்டார். அந்த ஆசாமியைச் சரிப்படுததாமே, ஒரு காரியமும் செயய முடியாது.

கட்டாயம் முடியாது நான் அதைத்தானே மூன்று வருஷமாகச் சொல்லிக்கொண்டு வருகிறேன்.

நானும் அந்தப்பாவிகளுக்குச் சொல்லிப் பார்த்தேன். கேட்கவில்லை. பாகிஸ்தான் கொடுத்விட்டால், முஸ்லீம்கள் ஆப்கனிஸ்தானோடு சேர்ந்து கொள்வார்களாம்!

நல்லபதில் கொடுத்திருந்துர்களே, மித்ரனிலே படித்தேன். பாகிஸ்தான் கொடுக்காவிட்டாலும் இது நடகுமே, என்று சரியான சூடு கொடுத்திருக்கிறீர்கள்

எல்லாம், பழய விடுதலை தான்!

ரொம்ப சந்தோஷம்! எவ்வளவோ காரணங்கள் சொல்லியிருக்கிறேன் பிரிவினைக்கு, நீங்கள் பார்த்தால் தெரியும்

பார்த்துக்கொண்டுதான் வருகிறேன். சாரணங்கள் மணி மணியாக இருப்பதால்தான், நன் உள்பட காங்கிரஸ் பூராவும் எதிர்த்தும், இந்துமித்ரன் உதிர்த்தும், பாகிஸ்தான், முஸ்லீம்களை வசியப்படுத்திவிட்டது. அந்தந்த இனம் சுதந்திரமாக வாழவேண்டுமென்று விரும்புவதுதானே இயற்கை, அதுதான் சுய நிர்ணயம். முஸ்லீம்கள் அதைத்தான் கேட்கிறார்கள், அதை எப்படித் தடுக்க முடியும்?

ஒருக்காலும் முடியாது! இன எழுச்சி உண்டாகிவிட்டது. அதைத் தடுக்க முடியவே முடியாது கொஞ்ச நாளைக்கு மூடிவைக்கலாம். ஆனால் வெள்ளம் கரையை உடைத்துக்கொண்டு ஓடிவருவதுபோல இனஎழுச்சியும் பெருகிவிடும் நான் பார்க்கிறேனே கண்ணாலே ஆயிரம் அபுல்கலாம் அஜாதும் சரி, ஒரு ஜின்னாவும் சரி, முஸ்லீகள் உயிர் பூராவும் ஜின்னாபேரில் வைத்திருக்கிறார்கள்.

வாஸ்தவமான பேச்சு! அபுல்கலாம் அசாதையே நான் கேட்டேனே, முஸ்லீம்கள் இவ்வளவு பேர், லீகில் சேராதபடி ஏனய்ய உன்னாலே தடுக்க முடியவிலிலை, என்று கேட்டேன்.

என்ன பதில் சொன்னார்?

பதில் என்னத்தைச் சொல்கிறது. பேந்தப் பேந்த விழித்தார்

ஜவர்லால் கொஞ்சம் எதிர்ப்பார் போலிருக்கு!

ஜவர்லால் எதைத்தான் எதிர்க் மலிருந்தார்? எதை எதிர்த்தபோதுதான் ஜெயித்தார்? மந்திரி சபையே கூடாது என்று கூவினார். என்ன நடந்தது?

அவர் தங்கைக்கே ஒரு மந்திரிவேலை கிடைத்தது

அவ்வளவுதான்! உடனே மந்திரி சபையைத் திட்டாதே, என்று பாடிக்கொண்டு கிளம்பினார். ஜவர்லாலைப்பற்றி என்க்குப்பயமில்லை. இந்துவும் மித்திரனும் இனிமேல், அவரை ஒழித்துவிடும்.

இப்போ கவனம் வருதுங்க மித்திரனிலே, ஜவர்லாலை முன்னே சரியாத் திட்டியிருந்தது நான் சொன்னேன் இந்த ஆள் ஒரு புத்தகப் பூச்சி கதைக்குதவமாட்டான் என்று அதேபோல் சீனுவாசன் எழுதினார் மித்திரனிலே

ஆமாம்! மித்திரன் முன்யோச னையுடன் எதையும் செய்யுமே இன்று இங்கே கூட்டம் நடக்குதோ?

ஆமாம்! ஈரோட்டுக்கு வந்து கூட்டம் போடாமல் போகலாமா! முன்னே, ஜெயிலுக்குப் போவதற்கு முன்பு இங்கு வந்துதானே போனேன். அப்போ மாலைபோட்டு, மனத்தை மாற்றியேவிட்டீர்கள்.

நான் நினைச்சதுண்டுங்கோ! பிரிவினைக் கொள்கையை மறுக்க முடியாதே, எதற்காக இவர் பாரதமாதாவை வெட்டாதே, பசுவை அறுக்காதே, வீட்டைப் பிரிக்காதே, குழந்தையைக் கொல்லாதே

என்று கொல்கிறார் என்று யோசித்ததுண்டு எதிர்த்தால், அடங்கிவிடும் என்றுதான் பார்த்தேன். முடியவில்லையே! பாரதமாதாவை வெட்டினால் என்ன என்றுகூட ஜனங்கள் பேசத் தொடங்கிவிட்டனர். நான் விடுதலையிலேதான் படித்தேன், எட்டு கோடி முஸ்லீம்களையும் ஆறுகோடி ஆதித்திராவிடரையும் மற்றவர் கொடுமை வெய்வதைக் கண்டும் சும்மா இருக்கிற பாரதமாதாவை, ஒரு வெட்டா, ஓராயிரம் துண்டுகளாக வெட்டினால்தான் என்ன பாபம் என்ற பேசியிருக்கிறீர்கள் ஒரு இடத்திலே ஞாபகசக்தியோடு கொல்கிறீர்களே! ஆமாம்! பொள்ளாச்சியிலோ, கோயம் புத்தூரிலோ, பேசினேன்

நேரமாகிறது. நான் போய்வரட்டுமா? உடம்மை ஜாக்கிரதையாகப் பார்த்துககொள்ளுங்கள், நமஸ்காரம்

ரொம்ப சந்தோஷம் நீங்கள் வந்தது. வண்டி தயாராக இருக்கா! போய்வருகிறீர்களா! வணக்கம்.

இந்த மாதம் 29-ஆம் தேதி மாலை 3 மணியிலிருந்து 6-மணிக்குள், ஈரோட்டில், பெரியார் மாளிகையில், பெரியாருக்கும் தோழர சி.ராஜகோபாலாச்சாரியாருக்கும், நான் மேலே தீட்டியுள்ள விதமான சம்பாஷணை நடந்தால், நான் ஆச்சரியப்படமாட்டேன். அத்தகைய சந்திப்பும் சம்பாஷணையும் நடக்கலாம் என்று நான் எதிர்பார்க்கிறேன். அனேகமாக நான் எதிர்பார்ப்பது நடக்காமல் போகும் வழக்கமுங் கிடையாது!

ஆச்சாரியார், யுத்தத்தை எதிர்த்துச சிறை செல்லுமுன் ஈரோடு சென்றபோது, பெரியரைக் கண்டு பேசினார், இப்போது (மந்திரிசபையில் அமருவதற்கு முன்) பெரியாரைக்கண்டு பேசுவார் என்று எண்ணுவது தவறல்ல!

இம்முறை ஆச்சாரியாரின் சுற்றுப்பிரயாணம், போர் தொடகி, மூன்றாவது.

முதல் முறை, பதவியைவிட்டு விலகியதும், வீராவேசத்துடன் தமிழகத்திலே சுற்றினார்.

இந்த யுத்தம் எகாதிபத்திய யுத்தம். இதில நமக்கு வேலை இல்லை. கோரமான யுத்தத்தை அஹிம்சாவாதிகளான நாம் ஆதரிக்க முடியாது. சுயராஜ்யம்ய கிடைக்கா முன்பு நான் பிரிட்டனை ஆதரிசக்க முடியாது என்ற கர்ஜிததார். சுக்ரீவனுக்குப் பட்டங்கட்டினால்தானே வானரவேனை தயாராகும் - என்று குட்டிக் கதைகளையும் புராணங்களையும் கொட்டினார்.

வீரம் அவரைச் சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றது. அங்கு அவர் இராமாயணத்தை ஊன்றிக் கவனித்துப்படித்தார். அதிலே காணப்படும், ஆரிய தந்திரங்கள், அரசியல் தந்திரங்கள் அவர் மனத்தில் ஆழப் பதிந்தன.

இராமனிடத்து பக்தி கொண்டதாலும், சற்குணவானானாலும், வேத விற்பன்னனான படியாலும், விபீஷணன் அண்ணனைவிட்டுப் பிரிந்து இராமனை வந்தடுத்தான். விபீஷண சரணாகசி, இராம இலட்சுமணர்களுக்கு விசேஷமான மகிழ்வைத் தந்தது, என்ற இந்த ஒரு சம்பவம் மட்டும, ஆச்சாரியாரின் மூளைக்கு எவ்வளவு வேலை கொடுத்திருக்கும் என்று எண்ணுகிறீர்கள்.

அண்ணனைக் கெடுகசத் துணிந்த துரோகி விபீஷணன் என்று நாமும், மகா பக்திமான் ஆகவேதான் ரகுராமனைச் சரண்புகுந்தான் என்ற வைதிகர்களும் இந்தச் சம்பவத்தைப் பற்றிப் படித்து கருத்துக்கொள்கிறோம்.

ஆச்சாரியார், இந்தச் சம்பவத்திலே இருக்கும் அரசியல் தந்திர நுட்பத்தையே அதிகமாகக் கவனித்திருப்பார்.

அண்ணனைக் கெடகவேண்டு மென்பதே விபீஷணனின் எண்ணமாக இருந்தால், அதனை அவன் இராமன் வருமளவும் செய்யாமல் காத்துக் கொண்டிருக்கவேண்டியதில்லையே! இராவணனைக் கவிழ்க்க, உள் நாட்டிலே சதி செய்திருக்கலாம். அது முடியாது போயினும், வெளிநாட்டு வேந்தர் எவரையேனும் தூண்டியிருகலாம். இராவணனை எதிர்க்க எவர் உளர் எனில் இராவணன் அஞ்சும் படி விரட்டிய வாலி கிஷ்கிந்தையில் வீரமாக ஆட்சி செலுத்திக்கொண்டிருந்தான். அவனிடம் விபீஷணன் ஏற்கனவே ஏற்பாடு செய்திருக்கலாம். இவைகள் ஏதும் செய்யாது, இராவண தர்பாரில் விபீஷணன் வீற்றிருந்தான். எனவே, துரோக சிந்தனையால், இராமனிடம் வந்தான் என்றுரைப்பது முற்றிலும பொருந்தாது.

அதுபோலவே, சற்குண சம்பன்னன், வேத விற்பன்னன் பக்திமான் ஆகவே, இராமனை விபீஷணன் அடுத்தான் என்ற வைதிகவாதமும் பொருந்தாது, ஏனெனில், இவ்வளபு நற்குண நாயகமாக விபீஷணன் உள்ளபடி இருப்பின் இராவண ஆட்சியல இருந்திருக்கவே சம்மதிக்க மாட்டான். இராவணனின் ஆட்சி முறையைக் கண்டித்து, தண்டனை பெற்றிருப்பன், அல்லது, இலங்கையை விட்டே வெளியேறி இருந்திருப்பன். இமன வருமளவும், இந்த சர்குண சீலர் இராவணதர்பாரில் வீற்றிருந்ததால், வைதிக வாதம் பொய்யென்றே கொள்ளவேண்டும்.

ஆசசாரியார் இந்த இருவாதங்களையும் தள்ளிவிட்டு அரசியல் சூஷமத்தைத்தான் கவனித்திருப்பார். ஏனெனில் இராமாயணத்திலே பல அரசியல் சூழ்ச்சிகள் உள்ளன. ஆச்சாரியார் இராமாயணத்திலே உள்ள வைதிகத்தைப் பாமரரிடம் வீசிவிட்டு, அதிலே உள்ள அரசியல் யூகங்களைத் தமது சொந்த உபயோகத்துக்கு எடுததுக்கொள்வார். திருப்பதி வெங்க்டேஸ்வர், நம்மவர் தலையைத்தானே மொட்டையாக்கி பட்டை நாமம் சாத்தி, வீயிற் புரளவைக்கிறார்! பார்ப்பனரை, அர்ச்சகராக்கி, அவர்களது அணங்குகளுக்கு சிந்தாமணிச் சேலையும் சீமைக்கமல ஓலையும், மங்களூர் வளையும் மரகத்த் திருகும், குங்கும நிற ஜாக்கட்டும கொண்டைக்குச் செண்டும் அளிக்கிறார். ஆரியமுறை அது! அதுபோலத் தான் ஆச்சாரியாரும் விபீஷண சரணாகதியிலே, வீணருக்குப் பக்தி பிரபாவத்தைத் தந்துவிட்டு, காரியத்துக்கு உதவும் கருத்தைத் தமக்கெடுத்துக்கொண்டார்.

இலங்கை, சொர்ணபுரி! தங்கக் கலசமுள்ள போபுரங்கள், மரகதமணி பொதித்தமாளிகைகள், பொன் இழைத்த படிக்கட்டுகள் கொண்ட தடாகங்கள், திரு தாண்டவமாடும தேஜோமயமான தேசம், இயற்கையழகும், செயற்கைச் சிறப்பும் சேர்ந்து அந்தத் துவை அலங்கரித்தது. அத்தகைய ராஜ்யத்துக்கு ஆபத்து நெருங்குகிறது! எண்ணித் துர்க்க முடியாத பெருஞ்சேனை! வில் வீரன் இராமன்! அவன் தனது சொந்த சேனையை அழைத்து வந்தானில்லை. இரவல் சேனை. அது முழுவதும் அழியினம் கோசல நாட்டுக் கோமானுக்கு நஷ்டமில்லை எனவே, இராமன், கோடிக் கணக்கான வானர சேனைகளைப் பிணமாகக் குவிக்க முடியும்! அவ்வளபி உக்கிரமான சண்டையில் இலங்காதிபதி வீழ்ந்தே தீருவான். இராவணன் வீழ்ந்தால், அரசு, இராமனுக்கோ, இராமனுக்குதவிய

வானரரில் யாருக்கேனுமோ பேய்ச் சேரும். இராட்சத குலத்துக்கு இருந்த அரசு, போய்விடும். இந்த மாபெரிய நஷ்டத்தைத் தவிர்க்கவேண்டும். இதற்கென்ன செய்வது என்று யோசித்த விபீடணன், இராவணன் மாண்டாலும், இலங்கை மாளாதிருக்க, அண்ணன் முடியிழப்பினம் அயலார் முடிதர்க்காதிர்கக, தந்திரங் கண்டறிந்தான். ரகுபதே, நான் தங்கள் தாசன் தமியேனைக் காத்தருள்க! என்று கூறிக்கொண்டு, எதிரியை நேசனாகக் கொண்டான் போரில், இராவணன் வீழ்ந்தான், சிதறிய முடி, விபீடணன் சிரம் சென்றது. இலங்காதிபதியாக தம்பி வந்தான், அண்ணன் மாண்டபின்!

இதைவிடச் சிறந்த ராஜதந்திர முறை அந்தச் சமயத்துக்கு வேறு எவரும் வெய்திருக்க முடியாது இதைச்செய்த விபீடணன், வீணனல்லன், துரோகியல்லன் வைதீகப் பித்தனுமல்லன், காரியவாதி, தந்திரசாலி, அரசியல் யூகமுள்ளவன் இந்த ரசத்தைத்தான் ஆச்சாரியார் பருகிப் பரமானந்தம் அடைந்திருப்பார் அந்தச் சிறைச்சாலையிலே.

ஆகவேதான் அவர் சிறையைவிட்டு வெளிவந்ததும், அஹிம்சையை அழித்தார், காந்தியாரைத் துறந்தேனென்றார். நான் அவரைக் காந்தியாருக்குச் துரோகி என்றோம், ஆனால் விபீடண வேதியர், பிரிட்டிஷ் பக்தி காரணமாகவோ, காந்தியார் மீது துவேஷங்கொண்டோ, சரணாகதி அடையவில்லை. விபீடணன் இலங்கையைப் பெறத் தந்திர முறையைக் கையாண்டது போலவே, ஆச்சாரியார், பதவியைப்பெற, இந்தப் பாசாங்கு செய்தார். பலிக்கவில்லை.
உடனே இரண்டாம் முறை தமிழகத்தைச் சுற்றினார். பழைய பேச்சை விடுத்தார். புதுப்பாடலைத் துவக்கினார்.

இதோ இப்போது மூன்றாம் முறை நடக்கிறது சுழல் சுற்றுப் பயணம்.

காங்கிரசைவிட தேசம் பெரிது

அஜாதைவிட ஜின்னா பெரியவர்

ஜப்பானியரைவிட பிரிட்டிஷார் நல்லவர்கள்

லீகை எதிர்ப்பது கூடாது

பாகிஸ்தான் மறுப்பது பேதைமை

கூட்டாக ஆள்வதே முறை

காங்கிரசையும எதிர்ப்பேன்

காலத்துக்கேற்றபடி கருத்தை மாற்றவேண்டும்

காரியம் பலிக்க, வீரியம் பேசிப் பயனில்லை.

- இவைகள் இம்முறை ஆச்சாரியார் திருவாய் மலர்ந்தருள்பவை!!

விபீஷணன் என்ன? இராவணனே வந்தாலும் நான் ஏற்றுக் கொள்வேன் என்று ஸ்ரீராமச்சந்திரர் கூறினார், என்ற பக்திமான்கள், கண்களில் நீர்மல்கக் கூறுவர். கண்களில் நீர் ஊறும் அளவுக்குக் கருத்தில் பகுத்தறிவு சுரப்பதில்லை அவர்களுக்கு. இராமன் விபீடணனை வரவேற்றது மற்றோர் ராஜதந்திரம்.

புத்தம் பிதியகளம், மாயாஜாலப் போராட்டக்காரர் இராவணாதியர், அவர்களின் போர்முறையும் தந்திமும் புகல, விபீடணனை விட வேறு யாரால் முடியும்! அத்தகைய உளவாளி - மன்னனின் தம்பி கிடைக்கிறதென்றால், பேர் பெற்றிகரமாக முடியும், என்பது இராமனுக்குத் தெரியும். குவிஸ்லிங் கிடைத்ததும் நார்வேநை நாசமாக்க ஹிட்லரால் முடிந்தது! இலங்காதிபதியின் வீழ்ச்சிக்கான வழிகளை விபீடணனிடம் தெரிந்து கொள்வோம் என்றே இராமன் விபீடணனை வரவேற்றான். காங்கிரசைச் கருவறக்க, காந்தியாரைக் கவிழ்க்க, போர்முறைகள் என்ன தந்திரங்கள் யாவை என்பதை, ஆச்சாரியாரைத் தவிர வேறு யாரால் திறம்படி எடுத்துரைக்க இயலும்! எனவே காங்கிரசல்லாதாருக்கு ஆச்சாரியார், நன்கு பயன்படுவார் - சரியானபடி உபயோகித்தால்!!

வடநாடு வேறு, தென்னாடு வேறு, என்பதை ஆச்சாரியர் நன்குணர்ந்துள்ளார். தென்னாட்டில் உலவும் ஆரியத் திருப்பிரம்மங்கள், திராவிட இனத்தை அடிமைகளாக்கியுள்ளதும் அவருக்குத் தெரியும்.

பாகிஸ்தானுக்கு இணங்குவதனால், ஆரியருக்கு நஷ்டம் இல்லை. ஆரியரின் செல்வாக்கு முஸ்லீம்களிடையே கிடையாது. இஸ்லாம் என்ற கோட்டைமீது ஆரியம் மோதி, மண்டை சிதறி, மண்ணில் ருதி கொட்டி, பின்வாங்கி உயில்பிழைத்து இருக்கிறது. ஆரியத் தரகு, ஆரியப்பிரோகிதம்,

ஆகீய எதுபும் இஸ்லாமியர் இருக்கும் திக்கையும் திரும்பிப் பார்ப்பதில்லை. எனவே பாகிஸ்தான் கொடுத்துவிடுவதனால், ஆரியருக்கோர் நஷ்டமும் கிடையாது. திராவிடஸ்தான் கிடைத்துவிட்டால் மட்டுமே, ஆரியருக்கு இன்றுள்ள, உயர் ஜாதி நிலைமை, ஊர் உழைப்பை உறிஞ்சும் உரிமை, உன் மத்தராக்கும் மதத்தைப் போதித்து ஊராண்ட கூட்டத்தை அடிமையாக்கும் கொடுமை ஆகியவைகள் அடியற்ற பனைபோல் சாய்ந்துவிட, ஆரிய ஆதிக்கம், மடுவைவிட்டு வெளிவந்த முதலை மக்களால் அடித்துக்கொல்லப் படுவதுவோல் மாண்டொழியும்.

இதைத் தெரிந்துதான் ஆச்சாரியார், பாகிஸ்தான் வேண்டுமானால் தருவவோம், திராவிடஸ்தானைப் பற்றி மூச்சம் விடக்கூடாது என்று தீர்மானித்திருக்கிறார்.

ஆனால் அவர் ஏமாறுவார்! நாலாவதொருமுறை அவர் நாட்டிலே சுற்றி, ஆரியர் மீது திராவிடருக்கு, யூதர் மீது ஜெர்மானியருக்கு உண்டானதைப் போன்ற துவேஷம் வளருமானால் ஆபத்தாக முடியும். எனவே திராவிடநாட்டுப் பிரிவினையை நாம் எதிர்க்கலாகாது. இந்த நாடு உண்மையில் திராவிடருடையது, நாம் இங்கு குடிபுகுந்த கூட்டம் என்பதில் சந்தேகமில்லை. இத்தனைகாலம் எதை எதையோ கூறி ஏய்த்தோம், கொடிகட்டி ஆண்டோம் தேவர்கள் மந்திர ஆதீனத்தில் இருக்கிறது. எனக்கு அந்தப் பிராமணரே கடவுள் என்று கண்ணன் கீதையிற் கூறியதாகக் கூறினோம் இப்போது அதைக் கேட்பாரில்லை ஆகவே நமது நிலையை உணர்ந்து நாட்டினருக்கு அடங்கி இருப்போம் என்ற தமிழகத்தில் ஆச்சாரியார் பேசுங்காலம் பிறக்கப்போகிறது.

நாற்பது நாள்களுக்கு முன்வரை, பாரதமாதாவை வெற்ற ஆச்சாரியார் சம்மதிப்பார் என்று காங்கிரஸ் கூட்டத்திலே யார் எண்ணியிருக்க முடியும்! ஆச்சாரியார், அவிபக்த குடும்ப சொத்துப் பிரிவினைப் பற்றியும், அபுல் கலாம் ஆஜாதின் செல்வாக்கு சூன்யம் பற்றியும், பாகிஸ்தான் விளக்கம் பற்றியும், காங்கிரசைவிட தேசம் முக்கியம் என்பதைப் பற்றியும், பேசுவதை இப்போது அந்தக் காதுகள் கேட்கவில்லையா! இன்னமும அந்தச் செவிகளுக்கு, திராவிடநாடு என்றதும் தீப்போல் இருக்கலாம். நினைத்தால் நெஞ்சு எரியலாம்! அவர்களுக்கு ஆச்சாரியார் பேச்சிலே ஒருபாகம், பரிசு தருகிறேன். கொட்டை எழுத்திலே எழுதிவைத்துக்கொண்டு, நித்திய பாராயணம் செய்யக் கோருகிறேன்!

சில பதார்த்தங்களைச் சில சமயங்களில் பிரிக்கலாம் சிலவற்றை எப்போதும் பிரிக்க முடியாது இதோ கடிகாரமிருக்கிறது. இதைப் பிரித்தால் கெட்டுபிடும. வேறு சில பொருள்களைப் பற்றி அப்படிச் சொல்வதற்கில்லை.

பிரித்துத் தீரவேண்டும் என்றால் பிரித்துத்தான் ஆகவேண்டும். எல்லாம் சமய சந்தர்ப்பங்களைப் பொறுத்தது

இது ஆச்சாரியார், மே 17ல் சென்னை புது காங்கிரஸ் மாளிகையில் பேசியது.

இவர் கிடக்கிறார் சார்! இவரைவிடக் காங்கிரஸ் பெரிது! அது எதிர்க்கிறது பாகிஸ்தானை என்று கூறும் சில கதர் சட்டைகள்!

கேளுங்கள் தக்ளி தாசர்களே, உங்கள் தலைவர் காங்கிரஸ் பெரிது, நீ பிகஸ்பதியானாலும் பெரிசல்ல என்று சிலர் சொல்கிறார்கள். அந்தக் காங்கிரசை எனக்குத் தெரியும் என்று கூறுகிறார்.

காந்தியார் இருக்கிறார்! அவரே பெரியவர் என்று கூறுவர் சிலர் ஆச்சாரியார் காந்திஜி கெட்டிக்காரர் நானும் கொஞ்சம் கெட்டிக்காரன்தான் என்று கூறுகிறார்.

தலையிலே வைத்துள்ள கையைக் கீழே இறக்கு காங்கிரஸ் தோழ! கண்களைத் துடைத்துக்கொள், நெஞ்சிலே கை வைத்துச்சொல், திராவிடநாடு வேண்டுமா, வேண்டாமா! காங்கிரசும் காந்தியும் எம்மாத்திரம் என்று துணிந்து கூறும். அந்த ஆரியத் தலைவரின் பேச்சைக் கேட்டுக்கொண்டு, ஜனாப் ஜின்னாவைத் தூற்றினாய், வீணாகப் பழித்தாய், பாகிஸ்தானை எதிர்த்தாய், காங்கிரசே போயில, காந்தியே கடவுள், ஆச்சாரியே பிரதம பூசாரி என்று பிதற்றினாய், பார் இப்போது, காந்தியும் காங்கிரசும் ஆச்சாரியார் கொடுக்கும் உதையிலே கரணம் போடுவதை! என் மீது போபியாதே தம்பீ! ஆச்சாரியாரே கூறுகிறார் காங்கிரசை அடித்தால்கூட என்னால்தான் அதற்கு உதவி. விஷ்ணுவை ஒரு பக்தன் உதைத்தான் அதனால் மார்பு கரையாயிற்று, அதைப் பெருமையாக மதித்து மஹாவிஷ்ணு அந்த கரையைக் காப்பாற்றி வருகிறார். ஆரியர், காங்கிரசை உதைக்கலாம், ஊராள அதுசெய்ய வேண்டுமானால் நீ என்னப்பா,

அங்கோர், கொடி தூக்கியாக இருக்கிறாய், வெட்கம் இல்லையா உனக்கு! வாவெளியே!

காங்கிரசை மட்டுமல்ல, கதரணிந்த தோழனே, கடவுளைக்கூட ஆரியர், எது வேண்டுமானாலும் செய்வர், அந்தக் கடவுணம், அவர்கள் எது செய்தாலும், அவர்களைத்தானப்பா காப்பாற்றுமாம். அது அவர்கள் புராணம்.

தனது இரு கண்களையும் பெயர்த்தெடுதது, இரத்தம் இலிங்கத்தின் மீது சொட்டச் சொட்ட நின்றார் கண்ணப்பர்! கண்ணிருந்த இடத்திலே புண்ணிருக்க, கரையும் உள்ளத்தோடு நின்றபோது சிவனால் கூறினாராம், நில்லு கண்ணப்பா! நல்லு கண்ணப்பா! என்று. அப்பா என்று கண்ணப்பதையும், அம்மே என்று காரைக் காலம்மையாரையும், சிவனால் அன்பு ததும்ப அழைத்தார். இருவரும் உண்டானதில்லை, என்று முருகன் சந்தம் பாடிடும், மாஜி சுய மரியாதைச் சிந்துக்காரத் தொழரொருவர் கூறினார், தோழனே! நான் வியந்தேன், உன்னைப் போலவே, பிறபே யோசித்தேன்! காரைக்காலம்மையார், உடலும் எலும்பும் தேய உருண்டு பெற்ற அந்த அருளை, கண்ணப்பர் கண்ணைப் பிடுங்கிக் காணிக்கையாகத் தந்துபெற்ற கருணையைஒரு பார்ப்பனர், மிகமிக எளிதிலே பெற்றார் என்ற திருவிளையாடற் புராணம் கூறுகிறது.

குலோத்துங்க பாண்டியன் நாளாம்! அவந்தி நகர் பார்ப்பனனொருவன், அடாதன செய்தானாம். யாதோ அஃது? களவா? அதைவிடக் கொடிது? கொலையா? அதனினும் கொடிது. கள்ளுண்டானா? மிகமிகக் கொடியது. மாதாவைப் புணர்நதான்! பிதாவைக் கொன்றான்!! பாலூட்டிய தனத்தைப் படுக்கைக் உபபோகித்த பாதகனை, சிவபெருமான், மீனாட்சியம்மையுடன் வேட வடிவு தாங்கிக்கொண்டு, மதுரையில் வந்திருந்து, வைகறைத் துயுலெழு, பசுவுக்குப் புல்லிடு, திருக்கோயிற் குளத்தில் துர்த்தமாடு, 108 முறை நம்மை அங்கப் பிரட்சணம் செய், இம்மாபாதகம் தீரும் என்றருளிச் சென்றார். மூன்றே மாதம், தோழா, இந்தப் பார்ப்பனன் சிவன் கூறியன செய்து, மாபாதகம் நீங்கித் தெய்வப் பிராமண வடிவானானாம்!!

இக்கொடும் பெரும் பாவிக்கா இவ்வருள் என்று மீனாட்சியம்மையும் கேட்டனராம். கருணையின் காசி

கூறினாராம், நீ அறியாய் மீனாட்சி! இத்தகையோனைக் காப்பதே காப்பு என்று!

ஆமாம்! தோழனே! காங்கிரசோ, அந்தக் கடவுள்களோ, எல்லாம் ஆரியசிருஷ்டி! ஆகவே அவர்களுக்கு அவை பயன்படும். உனக்கு ஏனப்பா அவை!!

எல்லாம் சமய சந்தர்ப்பத்தைப் பொறத்தது என்ற ஆச்சாரியார் கூறியிருப்பதன் கருத்தை உணரு. சமயம் வந்தால், காந்தி, காங்கிரஸ், கற்பனைக் கடவுள், சாத்திரம், மதம், எதையும் அவர்கள் தூக்கி எறிவர். எதற்கும் நீ சுமை தாங்கி! இந்நிலை போகத்தான், திராவிடநாடு தேவை என்கிறேன். இப்போதும் காரியம் மிஞ்சிவிடவில்லை, நன்றாக யோசித்துப்பார்!

யோசித்தால், நீ திராவிடக் கட்சிக்கு வந்தே சேருவாய். உன் போன்றாரும் வந்துவிட்டால், பிறகு திராவிடநாட்டுப் பிரிவினைப் பிரச்சனை மிகமிகப் பலமடையும். சமய சந்தர்ப்பம் தெரிந்த ஆச்சாரியார், அந்நாளில் பெரியாரைச் சந்தித்து, திராவிடநாட்டுப் பிரிவினைக் கொள்கை சரியானதே. அதை நான் மறுக்கவில்லை. ஆனால் ஆரியர்கள், திராவிட நாட்டிலேயே இருக்கக்கூடாது என்ற சிலர் கூறுவதைக்கேட்டு என் மனம் துடிக்கிறது. அதை மட்டும், விட்டுவிடச் சொல்லும் என்று கேட்க ஆஹா! ஆகட்டும! ஆரியார்களும், உழைத்து உண்டு, எல்லோருடனும் சமமாக இருந்து வழட்டும் என்று பெரியார் அபயங்ககூறக் கேட்டுக் களிப்புறுவோம்.

எப்போது அந்தக் காட்சி கிடைக்கும் என்று என்னைக் கேட்காதுர்கள். காட்சியை நான் துட்டினேன் வருடம், மாதம், தேதி தீட்டவேண்டியது நீங்கள்! ஆம்! இரத்தத்தை மையாக்கித்தான் தீட்டவேண்மென்றாலும் தயங்கக் கூடாது!

(திராவிடநாடு - 24.05.1942)

ஆண்டவனை அழைக்கிறார்!

“கண்ணீரைத் துடைத்துக்கொள்ளுங்கள்! கஷ்டநஷ்டத்தைக் கண்டு கலக்கமடைய வேண்டாம். சோகமும் சலிப்பும் வளர விடவேண்டாம். ஆண்டவன் நமது அடால்ப் ஹிட்லரை ஆசீர்வதிப்பார்” என்று கொயபிள்ஸ் ஜெர்மன் மக்களுக்கு ஆறுதல் கூறுகிறார். ஜெர்மன் நாட்டிலே பிரிட்டிஷ் குண்டு மாரி பொழிந்தபடி இருக்கிறது, துறைமுகங்களிலே, கப்பல்கள் தலைகாட்ட முடிவதில்லை, தொழிற்சாலைகளிலே பொருள்கள் பொடியாகின்றன, வாலிபர்கள் வதைகின்றனர். பிரான்சைப் பணியவைத்தோம், செக்கோவைச் சிதைத்தோம், நார்வேயை நாசமாக்கினோம் என்று சொல்லிச்சொல்லி, ஜெர்மன் மக்களை வெறியர்களாக்கிய நாஜித் தலைவர்கள், இன்று, ரஷியாவில் படும் அவதிகண்டு மக்கள் மருள்வதைக்கண்டு, ஆறுதல்கூற முன்வருகின்றனர். அத்தகைய நிலைமையை, வீரரஷியர்கள் உண்டாக்கி விட்டனர். 1942ல் நாஜிகளை முறியடிக்கக்கூடிய சக்தியைச் சிகப்புப் பட்டாளம் பெற்றுவிட்டது என்று மாஸ்கோ ரேடியோ தெரிவிக்கிறது. எத்தகைய உற்சாகமான பேச்சு! எந்த மாஸ்கோவில், மூன்றே வாரத்திலே சுவஸ்திகக் கொடியைப் பறக்க விடுவேன் என்று ஹிட்லர் கொக்கரித்தாரோ, அதே மாஸ்கோவில், எந்த மாஸ்கோவைச் சுற்றி வளைத்துக்கொண்டு படுசூரணமாக்கி விடுவதாக நாஜிப்படைகள் மிரட்டினவோ, எந்த மாஸ்கோமீது வட்டமிட்டு நாஜி விமானங்கள் குண்டுவீசினவோ, எந்த மாஸ்கோவைவிட்டு, ஸ்டாலின் ஓடிவிட்டார் என்று நாஜித் தலைவர்கள் புளுகினரோ, அந்த மாஸ்கோ, முற்றுகையிட்ட முரடர்களை மூலையில் ஓடச்செய்துவிட்டு, வீரத்தோடு கூறுகிறது, நாஜிகளை நாசமாக்குவோம், நாளும் பிறந்துவிட்டது, நமது சக்தியும் பெருகிவிட்டது என்று உறுதி மாஸ்கோவில், அழுகுரல் பெர்லினில்! ஆட்களால் இனிஒன்றும் நடப்பதற்கில்லை என்று, ஆண்டவனை அழைக்கிறார் கொயபிள்ஸ்! ஆண்டவன், “அங்கே என்னை அழைத்துப் பயன் என்ன? நான் பகீஷ்கரிக்கப்பட்ட இடம் மாஸ்கோ! என்னையே விரட்டியவர்கள், இறுமாப்புடன் சென்ற உங்களை விரட்டுவதா கஷ்டம்” என்று கூறுவார்!

கடவுள்பற்றிய கற்பனை போன்றதே, நாஜிகளை நசுக்க யாருளர் என்ற பேச்சும், அது ரஷிய களத்திலே பொய் என்று விளக்கப்பட்டு விட்டது. கொயபிள்ஸ் தேறுதல் கூறவேண்டிய அளவுக்கு, பெர்லினில் பீதியும் துக்கமும்

இருக்கிறது, ஏன் இருக்காது! 200,000 ஜெர்மானியருக்கு மேலாகவே (குளிர்காலத்திலே) கடந்த 4 மாதங்களிலே ரஷியாவில் மாண்டனர்! கைகால் போயும், கண்ணிழந்தும், மண்டை உடைந்தும், மனமுடைந்தும், காய்ச்சல் கண்டும், கஷ்டத்தை அனுபவிக்கும் நாஜிகளின் தொகை 1000,000 பேருக்கு மேலிருக்குமாம். இவர்களின் வேதனைக்குரல், எத்தகைய நாஜி போதையையும் தெளிய வைத்திருக்கும். மாஸ்கோவை நெருங்கினதும், நெருப்புடன் விளையாடியவர்கள் சூடுண்டு ஓடிவிடுவதுபோல், சுவஸ்திகச் சூறாவளிப்படை பிடரியில் கால்பட பின்வாங்கி விட்டது! பிடித்த கோட்டைகளிலே, பிணமலை குவித்தும் பயன்காணாது, ரஷியரிடம் விட்டு விட்டு நாஜிப் படைகள் ஓடிவிட்டன. கடந்த நாலுமாதங்களிலே, மொஜாய்ஸ்க், ராஸ்டாவ், ட்ரோபெட்ஸ் முதலிய இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை, ரஷியர்கள் திருப்பிப் பிடித்துவிட்டனர். வசந்தகாலப் போரும், வாட்டத்தையே நாஜிகளுக்குத் தருகிறது. நாலுமாதத்திலே 300,000 நாஜிப்படை மோட்டார்கள் நாசமாயின, சேதமானவை அந்தத் தொகை யிருக்குமாம்.

இதே காலத்திலே, 50 புதிய பட்டாளங்களைத் திரட்டி விட்டனர் ரஷியர்! அந்தப்படைகள், கையிலும் கருத்திலும், தினவெடுத்துக்கொண்டு, பாயும் வேளையை எதிர் பார்த்துக் கொண்டுள்ளன. நாஜிகளின் நினைப்பு நாசமாகிவிட்டது. மாஸ்கோவைச் சுற்றியிருந்த தளவாடத்தொழிற்சாலைகளை, உள்பக்கமாகக்கொண்டு, போய்விட்டனர். இனிச்சில ஆயிர மைல்கள் நாஜிகளிடம் சிக்கினாலும், தளவாட உற்பத்தி பாதிக்கப்படாது. அந்த முன்னேற்பாட்டையும், சோவியத் செய்துவிட்டது. ஜெர்மன் சோகத்துக்குக் காரணம் இவையே!

ஹிட்லர் கிளம்பியதும் எங்ஙனம் முசோலினியின் புகழ் புகைந்து போயிற்றோ அதுபோல், ஜப்பான் கிளம்பியபிறகு, ஹிட்லரின் ஆவேச ஆட்டத்தை இலட்சியஞ்செய்ய அச்சு உலகிலே ஆள் இல்லை. ஆகவே, எத்தனை இலட்சம் ஜெர்மானியரைப் பிணமாக்கியாவது, ஒரு புகழ்மாலை போட்டுக்கொள்ள வேண்டுமென்று ஹிட்லர் துடிக்கிறார். ஆனால், ஹிட்லரின் இறுதிநாட்கள் நெருங்கிவிட்டன!

நேசநாடுகள் நிமிர்ந்து நிற்கின்றன. மடகாஸ்கரைப் பிடித்ததும், டோக்கியோவைத் தாக்கியதும், ஜெர்மன் தொழிற்சாலைகளைத் தவிடுபொடியாக்கியதும், மால்ட்டாவிலே நாஜிவிமானங்களை நொறுக்கித்தள்ளுவதும், வடஅயர்லாந்திலே அமெரிக்கத் துருப்புகள் மேலும் மேலும் வந்து குவிவதும், இதனை விளக்குகின்றன. ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனையை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை ஒப்புக்கொண்டு, மேஜர் அட்லியும், சர். ஸ்டாபோர்டு கிரிப்சும், பேசியிருப்பதும் கூர்ந்து நோக்கத் தக்கசம்பவம். நார்வேயிலே நாஜிகளுக்கு எதிர்ப்பு அதிகரித்து விட்டது. டென்மார்க்கிலே பிரிட்டிஸ் பாரசூட் படையினர் இறங்கினர் நாஜிகளிடம் சிக்கிக் கொள்ளவில்லை. இவைகள் ஜெர்மனிக்கு நேரிட இருக்கும் கதியை முன்கூட்டிக்காட்டும் அறிகுறிகள் என்போம். இந்தநேரத்தில், நிலைமையில், கொயபிள்ஸ், ஆண்டவனைக் கூப்பிடுகிறார் அடால்பைக் காப்பாற்ற! வோல்கா நதியே செந்நீராக மாறும் விதத்திலே மூண்ட புரட்சியின்போது, ஜார்கூட, ஆண்டவனைத் துணைக்கழைத்தான்! சிறைக்கூடத்தைத் தூளாக்கி, மாளிகைகளைத் தரைமட்டமாக்கி, அரண்மனையை நோக்கி, ஆவேசத்துடன் மக்கள் கடலென வந்தபோது, பிரன்ச்சு நாட்டரசன்கூட, 'ஆபத்பாந்தவனை' அன்போடு அழைத்துத்தான் பார்த்தார்! வாடர்லூ சண்டையின்போது நெப்போலியன் 'தேவனை'த் துதிக்காமலில்லை! கெய்சர் கடவுளைத் தொழாமலில்லை! ஆனால், அவர்களின் முடிவுயாதாயின! கடவுள், மதம், கற்பனை, முதலாளித்துவம், உலக வல்லரசுகளின், விரோதம் ஆகிய எதையும் பொருட்படுத்தாது பாட்டாளி மக்களின் படைதிரட்டி, பாரோர் கேட்டிராத விதமான பயங்கரப் புரட்சி நடத்தி வெற்றி கண்ட லெனின் வாழ்ந்த இடத்திலே, நாஜிகளின் நினைப்பு நடக்குமா, பலிக்குமா! ஹிட்லரின் சவக்குழி, சிகப்புபூமியாளத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது. சவக்குழிக்கு அருகே இருந்து ஆசீர்வதிக்க ஆண்டவனும், அங்கு அனுமதிக்கப்படமாட்டார். ஆண்டவன் சென்றால், அங்குள்ள, மக்கள் "சர்வவல்லமை படைத்தவரென ஆஸ்தீகர்களால் துதிக்கப்படுபவரே, எங்கள் இரத்தவெள்ளத்தைப் பெருக்கியன்றோ இவனைச் சாகடித்தோம்.

இதுவரை எங்கே சென்றிருந்தீர்! ஏன் இத்தகைய தீயோனைத் தோன்றச் செய்தீர்!” என்று கேட்பர். ஆண்டவன், சர்வமும் தெரிந்தவராமே! அவர் என் அங்கே செல்லப்போகிறார்!! அங்கு போகாமலேயே, அவரும் ஆறுதல் அடைவார். “ஒழிந்தது சனியன்! இந்த ஹிட்லரின் கொடுமைக்கு ஆளான மக்கள், ஆண்டவனே உனக்குக் கண்ணில்லையா! என்று விநாடிக்கோர் முறை கேட்டுக்கொண்டிருந்தனர், இனி நமக்கு அந்தத் தூற்றுதல் இராது” என்று கருதி மகிழ்வார்!

24.5.1942

ஐயன் சிங்காரங்களைப் பாரும்!

செருப்புகள் பறந்தன! கற்கள் கடுவேகமாகச் சுழன்றன! கூச்சலோ சொல்லி முடியாது! ஒழிக, ஒழிக, ஒழிக, என்ற கூச்சல்! ஓடு, ஓடு, விடு, விடு, பிடிபிடி, என்ற கூக்குரல். கையை ஒருவர் பிடித்திழுக்க, காலை ஒருவர் தட்டிவிட, கழுத்தை மற்றொருவர் தட்ட, தலைமீது மண்விழ, தத்தளித்தார் தலைவர்! சட்டையைச் சுக்குநாறாகக் கிழித்தெறிந்தனர் ஆத்திரங்கொண்ட மக்கள். கேள்விக்குப் பதில் சொல்! ஓடி ஒளியாதே நில்! நாட்டைக் கெடுக்காதே. நயவஞ்சகம் பேசாதே! குட்டிக்கதைகளைக் கொட்டாதே. குதர்க்கம் பேசாதே. பதவிவேட்டை ஆடாதே. பார்ப்பன புத்தியைக் காட்டாதே! கேள்விக்குப் பதில் கூறாமல், ஏன் ஓடுகிறாய் என்று ஆளுக்கோர் பேச்சு, எங்கும் அலங்கோலமாச்சு!

எங்கே? யாருக்கு நேரிட்டது இந்தக் கண்றாவி? மதுரையம் பதியிலே, மாபெருந்தலைவர், ராஜகோபாலாச்சாரியாருக்கு! ஏன் நடந்தது? பட்டினத்தடிகள் கூறினார், தன்வினை தன்னைச்சுடும், ஓட்டப்பம் வீட்டைச் சுடும் என்று. அதுபோல், ஆச்சாரியார் இரண்டு ஆண்டுகளாக, சீடர்களை, சீறிவிழுந்து பாரதமாதாவை வெட்டுவதைத் தடுமின், பசுவைக் கொல்லப் பார்த்துக் கொண்டிராதீர்கள் என்று கூறிவைத்தார். இப்போது அவர் பாகிஸ்தானை ஆதரிக்கிறார், அவரிடம் பாடங்கேட்ட “பக்த கோடிகள்” கொதித்து இத்தகைய கோலத்தைக் காட்டினர்.

ஐயன் சிங்காரத்தைப் பாரும்! அவரடைந்த அலங்கோலமதை நீர்கேளும்! பொதுமக்களை எப்படி வேண்டுமானாலும், வளைய வைக்கலாம் என்ற எண்ணங் கொண்டுள்ள தலைவர்கள், இக்கதிக்கே ஆளாகின்றனர். ஆச்சாரியாருக்கோ, யாருக்கும் இதுவரை ஏற்பட்டிராத கௌரவம், கிடைத்திருக்கிறது! எந்தத் தலைவருக்குத்தான், அவரது சொந்தக்கட்சியிலே இத்தகைய சோடசோபசாரங்கள் நடந்தன! தலைவரின் போக்கு தொண்டர்களைத் துடிக்கச்செய்கிறது, தொண்டர்களின் ஆத்திரம் தலைவரைத் திணற வைக்கிறது. இத்தகைய தலைவரையும் தொண்டரையும் கொண்ட கட்சிதான் பரிசுத்தமான கட்சியாம்! இவ்வளவு தத்தளிக்கும்! தலைவர்தான், தேசிய முன்னணியை அமைக்க தேசீய சர்க்கார் ஏற்படுத்த வேண்டுமென்று தேசபக்தி மேலிட்டு தெருவிற் திறிகிறாராம்! மதுரைக் கூட்டத்திலே நடந்த மரியாதையைக்

கேள்விப்பட்டபிறகு, ஆச்சாரியாருக்கிருக்கும் செல்வாக்கு இவ்வளவுதானா, என்று கண்டு ஜனாப் ஜின்னா கைக்கொட்டி நகைப்பார்!

24.5.1942

எதிரொலி

“வெள்ளையர் ஆதிக்கம் என்னும் “விஷம்” முற்றிலும் அழிக்கப்படும் வரைக்கும், ஜனநாயகத்தைக் காப்பாற்றுவது, நாகரிகம், மனித சுதந்திரம், ஆகியவற்றைக்காப்பது என்று பேசுவதற்கு அவர்களுக்கு (வெள்ளையர்களுக்கு) உரிமை கிடையாது”

- காந்தி.

அதுபோலவே திராவிட நாட்டில் ஆரிய ஆதிக்கம் என்னும் “விஷம்” முற்றிலும் அழிக்கப்படும்வரைக்கும், தமிழகத்தைக் காப்பாற்றுவது, நாகரிகம், மனித சுதந்திரம், மக்களின் நலன்களைக் காப்பது என்று பேசுவதற்கு ஆரிய ஆச்சாரியாருக்கோ, சத்தியமூர்த்திக்கோ அல்லது வடவருக்கோ உரிமை கிடையாது. திராவிடர்களுக்காகத் திராவிடத் தலைவர்கள் பேசட்டும்.

ஃஃ ஃஃ ஃஃ

“முஸ்லீம்கள் அதை விரும்பினாலும், இந்த உலகத்தில் எந்த சக்தியும் அவர்கள் அதை அடை

வதைத் தடுக்க முடியாது என்பதை நான் மீண்டும் கூறுகிறேன். ஏனெனில் மறுப்பதற்கான நிபந்தனை சண்டை போடுவதாகத் தானிருக்கும்.”

- காந்தி.

திராவிடர்கள் சம்பந்தமாகவும் தாங்கள் இம்மாதிரி அனுபவ அறிவுரைகள் சொல்ல அதிக காலமாகாது, திராவிடஸ்தான் முழக்கம் கேளாக்காதரையும்கூட பதைக்கவைத்துத் தமிழ்நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்யக் கிளப்பிவிட்டது!

ஃஃ ஃஃ ஃஃ

“நாயக்கர் கேட்கும் திராவிடஸ்தான் கொடுத்து

விடலாம் என்று வட இந்தியர்கள் சொன்னால் தமிழ் நாட்டவருக்கு எப்படியிருக்கும்?”

- என். அண்ணாமலைப் பிள்ளை

உண்மைத் தமிழன் களிப்படைவான். உரிமையோடு ஊராள்வான். சூத்திரநிலை, அடிமை வாழ்வு விரும்பும் பார்ப்பனப் பாதந்தாங்கிகள் திகைப்படைவர்; தில்லுமுல்லு பேசுவர்!

ஃஃ ஃஃ ஃஃ

“இந்தியாவிலுள்ள மற்றப் பகுதியினருக்குள்ள சுயநிர்ணயாதிகார உரிமை முஸ்லீம்களுக்கும் வேண்டும்.... முஸ்லீம்களை தங்கள் விருப்பத்திற்கு மாறாக நம்முடன் வசிக்கக் கட்டாயப்படுத்துவது பலாத்காரமாகும்!”

- சி. இராஜகோபாலாச்சாரி.

அம்மாதிரி சுயநிர்ணயாதிகாரம் வேண்டுமென்பதே திராவிட மக்களின் கோரிக்கை! திராவிடர்களை விருப்பத்திற்கு மாறாக அடிமையாகவும், இழிந்த குலத்தவனாகவும் “இந்து” என்றதரித்திரப் பெயர் சூட்டி இறுகப்பிணைத்து ஆரியத்தின் காலடியில் வாழச்செய்வது பலாத்காரமல்லாது வேறென்ன?

24.5.1942

லண்டனில் லெனின்

“வள்ளி! என்ன கோபம், ஏன் இந்த வாட்டம்? நான் தேனும் தினைமாவுங் கேட்டேனே, தந்தாயா? தெவிட்டாத ரசமே, குறையாதமதியே, குன்றாத ஒளியே, ஏன் என்னை இப்படி வாட்டி வதைக்கிறாய்?

போதும், போதும் உமது பவிஷுக்கு, சரசம் வேறு ஒரு கேடா? கன்னல் மொழிமாதே, எட்டிக்காய் மொழியால் பதில் உரைக்காதே! என் பவிஷுக்கு என்னடி!

ஒருமுகமா, ஆறு இருக்கின்றன! இருந்தும் பயன் என்ன? ஆறுமுகங்களுக்கும் ஏதேதோ வேலைகளை அமைத்துக் கொண்டீரேயன்றி, நமது சொத்துக்களைக் களவாடும் கயவரைக் கண்டுபிடித்துத் தண்டிக்க, ஒருமுகத்துக்கேனும் வேலை தரலாகாதா? உமது சூரத்தனத்தை விளக்கும் சுந்தர க்ஷேத்திரமான திருப்போரூரிலே, உமது தங்கவேல், களவு போயிற்று.

ஆஹா! என்ன அக்ரமம். இப்படியுமா நடப்பது?

ஏன் நடக்காது! நீர் என்னைத் தினைப்புனத்திலே களவாடினீர். உமது பக்தர்கள், உமது பொருளைக் களவாடுகிறார்கள்! ஆண்டவனுக்கேற்ற அடியார்கள்!!

கேலிசெய்ய இதுவா சமயம், வள்ளீ! நான் கேலிசெய்வதுதானா உமக்குத் தெரிகிறது. சுயமரியாதைக்காரர்கள் பூராவும், முருகனின் மூர்த்தி கரத்தைப் பாருமய்யா, கோயிலிலே புகுந்து கள்ளன் கொள்ளை கொள்கிறான், கோழிக்கொடியோன் கண்டுபிடிக்கவில்லை, தடுக்கவில்லை, என்று கூறி இதுதான், இந்தத் தெய்வங்களின் இலட்சணம், என்று கேலி செய்கிறார்கள். அதைக்கேட்டு, சோகமடைவதைவிட, சொரணை பிறந்தால் மேல் என்பேன்.

சு.மா,க்களா! அவர்கள்தான் ‘நானே’ கிடையாது என்பவர்களாச்சே!

உம்மை மட்டுமா? உமது அப்பாவைக்கூட அவர்கள்

அவ்விதந்தான் சொல்கிறார்கள்.

அவர்கள் கிடக்கட்டும் அன்னமே! இப்படி நமது பொருள் களவு போய்க்கொண்டேயிருந்தால் நமது கதி என்னாவது? எந்தப்பாவி, எந்தப் பாதகன், இத்தகைய தீயசெயல் புரிந்திருப்பான்?

சர்வமும் தெரிந்தவராமே நீர். தந்தைக்கே உபதேசித்தீராமே, இந்தச் சாதாரணச் சங்கதி தெரியவில்லையா!

தெரிந்தால் சும்மா இருப்பானா! நேராகப் போலீஸ் ஸ்டேஷனுக்குப்போய், கம்ப்ளெயின்ட் கொடுத்து கள்ளனைக் கையும் பிடியுமாகப் பிடித்துக் கூண்டிலடைக்க மாட்டேனா!

இங்ஙனமாக, திரிபுர மெரித்தவரின் திருக்குமாரர், ஆறுமுக வடிவேலருக்கும், அவர் தினைப்புனத்திலே தேடிப்பிடித்த தத்தை மொழியாள் வள்ளிக்கும், கைலாயத்திலே ஒரு பக்கத்தில், உரையாடல் நடந்தது, ஊடல் வளர்ந்தது. பிறகு வழக்கப்படி “கூடலில்” குமரப்பெருமானும் குறக்குலவள்ளியும் ஒன்றுபடவே, சண்டை சரசமாயிற்று, பக்த கோடிகளின் உள்ளம் குளிர்ந்தது. சதிபதிகளின் சண்டை தீர்ந்ததேயொழிய களவாடப்பட்ட தங்கவேல், கிடைக்கவில்லை.

உடனே, பெரிய எழுத்தில் பத்திரிகையில் பிரசுரிக்கவும், என்று வீரன் குறிப்பெழுதி, மேலே உள்ள கட்டுரையைத்தந்தான் என்னிடம். வயிறு குலுங்க நகைத்தேன். வீரா! குறும்பு கொடி கட்டிப் பறக்கிறதோ என்று கேட்டேன். கைலாயமாவது, அங்கே முருகன் வள்ளி சண்டையாவது, அதை நீ கண்டதாவது என்னப்பா அளக்கிறாய், என்று கேட்டேன். வீரன், விறுவிறுப்புடன், ‘ஆமாப்பா! நான் சொன்னால் தானப்பா இத்தனை சந்தேகம் உனக்கு. நீறு பூசி, உருத்திராக்கம் அணிந்து எவனாவது இதுவன்று, இதைவிட நம்ப முடியாததைச் சதகமாகப் பாடினால், நம்புவாய், நமச்சிவாயா என்பாய், நான் சொன்னால்மட்டும் சிரிப்பாய்’ இதை நம்ப இஷ்டமில்லை உனக்கு. மேருவைச் செண்டாலடித்ததை நம்புவாய், கடலைக் குடித்த கதையை நம்புவாய். கல்லானைக்குக் கரும்பு தந்த கதையைக் கேட்பாய், காரைக்காலம்மை பேயுருக்கொண்ட கதையை நம்புவாய், வெள்ளை யானைமீது சுந்தரர்கைலாயம் சென்றதைக் கேட்பாய். நான் கைலாயத்திற்கச் சென்று வந்ததைக் கூறினால் மட்டும் நம்பமாட்டாய்! இது முறையா”

என்று வீரன் கேட்டான்.

“அவர்கள் பக்தர்கள். அவர்கள் அதனையுஞ் செய்வர். அதற்குமேலும் செய்வர்... என்று நான் விளக்கங் கூறலானேன்.

நானும் பக்தன் தான். எந்த அரன் அருளால், தாய் பிடித்துக்கொள்ளத் தந்தையே வெட்டிக் கறியாக்கிச் சமைத்து, சோற்றுடன் இடப்பட்ட, சீராளன், உயிர் பிழைத்தெழுந்தானோ, எந்தச் சிவசக்தி முதலையுண்ட பாலனை வரவழைத்ததோ, எலும்பைப் பெண்ணுருவாக்கிற்றோ, எந்த முக்கண்ணனின் அருள், நாற்பது வேலி நிலத்தை ஒரே இரவிலே மணி சாயும் மாநில மாக்கிற்றோ, அதே “அருள்” அடியேனைக் கைலாயம் சென்று, கந்தனுக்கும் வள்ளிக்கும் நடந்த சண்டையைக் கண்டு, உன்னிடம் விண்டிட வைத்தது. நம்பு, சுகம் உண்டு. நம்பாவிடிலோ, நரகம் நிச்சயம் - என்று வீரன் கூறினான்.

வெகு நேரத்திற்குப் பிறகே வீரன், விளையாடுகிறான் என்பதை ஒப்புக்கொண்டான். நெடு நேரம், கைலாயமே சென்றுவந்தவன் போலவே பேசினான்.

தொடர்ந்தாற்போலப் பல திருட்டு நடந்துவருகிறதல்லவா! கடந்த வாரத்திலே திருப்போரூர் கோயிலிலே களவு என்று பத்திரிகைகளில் நானும் கண்டேன். அவைகளைக் குறித்துத்தான் வீரன் இவ்வளவு கேலி செய்தான்.

அண்டசராசரங்களையும் ஆக்கி ஆதரித்து அழிக்கும் வல்லமை கொண்ட கடவுளின் கோயில்களில், இத்தகைய களவுகள் நடக்கக் காணும் எவரும், வீரன் என்னிடம் கேட்டதுபோல் இந்தச் சில்லறைச் சேட்டைகளைக் கூடத் தடுக்க முடியாத தெய்வங்கள், இருந்து என்ன பயன்! இவைகளுக்குத் தேரும் திருவிழாவும், ஏன் செய்யவேண்டும்? சர்வ வல்லமை படைத்தவரின் பொருள் களவு போனால், சாதாரண போலீஸ் கண்டுபிடிக்கிறதேயொழிய “கடவுள் சக்தி” பயன்படக் காணோமே என்று யோசிப்பர் என்பது திண்ணம். அந்த யோசனையை மக்களிடை கிளப்பி, பகுத்தறிவு சுரக்கச்செய்ய, இந்தக் களவுகள் பயன்பட்டால் நான் களிப்படைவேன்! ஆனால், இத்தகைய களவுகள், மக்களின் பகுத்தறிவுக் கண்களைத்

திறப்பதற்குப் பதிலாக, பக்தர்களின் பணப்பெட்டியைத் திறந்துவிடுகிறது. திருடுபோன வேலுக்குப் பதிலாக, வேறு வேல் செய்யப்படுகிறது!

கடந்த வாரத்திலே களவுபோன கோயில்களின் குருக்களும் தர்மகர்த்தாக்களும், இதற்குள் "தர்மப் பிரபுக்களை"த் தேடிப்பிடித்து "புண்ணிய கைங்கரியம் புரியுங்கள்" என்றுரைத்து, பணம் திரட்ட முனைந்துமிருப்பர்!

நாட்டுக்கு வந்துள்ள பேராபத்தைப் போக்க, நமக்குப் போதிய விமானங்களில்லை, என்கிறோம், சீரங்கம் அரங்கநாதருக்குச் சென்ற வாரத்திலே, தங்க விமானம் தயாரிக்கப்பட்டு விட்டதாம், செலவு ஐம்பதாயிரத்துக்குமேலாம்! நமது போர் வீரர்களுக்குத் தக்க ஆயுதம் தேவை என்று துடிக்கிறோம், அமெரிக்காவை இரவல் கேட்கிறோம், அரங்கநாதருக்கு அபயஸ்தம், வைரத்தால் இழைத்தார்களாம். அதற்கும் பெருந்தொகை செலவாம்! நமது இராணுவத்திற்குக் கவசங்கள் தேவை காசு இல்லை வாங்க. ஆனால் அரங்கநாதருக்கோ முத்து அங்கி தயாரித்து விட்டார்கள் மொத்தத்தில் ஒரு இலட்சத்துக்குமேல் செலவு. ஆனால் அவர், முத்தங்கி அணிந்து, அபயஸ்தத்

துடன், விமானமேறி, ஜப்பானியரை எதிர்ப்பேன், ஒழிப்பேன் என்று கூறிக்கொண்டு போர்முனைக்கா போவார்! அன்றோர் நாள் படுத்த ஆபத்பாந்தவர், எத்தனையோ ஆபத்துகளை நாடு கண்டு கலங்கினாலும், படுத்தவர் பதைத்தெழுந்திருக்கப் போவதென்னமோ கிடையாது! பயனற்ற செலவு செய்யும் பக்தகோடிகள், பகுத்தறிவைத் துணைகொள்வதுங் கிடையாது. இங்ஙனம் பழைமைப்புழு நெளிகிறது, பாழான இந்நாட்டிலே, பக்தர்கள் கொண்டாட, பாவாணர்பாட பாவையர் ஆட, பால்பழமேந்திப் பார்ப்பனர் பூரித்திட பட்டாடை உடுத்தி, பலமாலை அணிந்து, பணிபல பூண்டு, பல்லக்கு ஏறி பார் வேட்டையாடும் பரந்தாமன் திருக்கோயில்களிலே, கன்னக்கோல் கொண்டு கள்ளர்கள் தமது கைத்திறன் காட்டி, கம்பீநீட்டிய கதை இன்று நேற்று நடப்பதல்ல! பல நூற்றாண்டுகளாக நடைபெற்று வருகின்றன. தாலிகள்

களவாடப்பட்டுள்ளன, தங்கக்கிரீடங்கள் பறிபோயின, வாகனங்கள் வெட்டி எடுக்கப்பட்டன, வளையும் தோடும், பொன்தட்டும் வெள்ளி வட்டிலும், விதவிதமான ஆபரணங்களும், பலப்பல களவு போனதாக அவ்வப்போது, செய்திகள் வருகின்றன! விக்கிரகங்களே களவாடவும் படுகின்றன.

கிருஷ்ணதேவராயரின் கொலு மண்டபத்திலே ஒருநாள், கிளி ஒன்று திடீரெனப் பறந்துவந்தது. அரச அவையினர் அதிசயித்தனர். வந்த கிளி, வாய் திறந்தது, அரங்கா! என்று கூவுமோ, இராகமாலிகை பாடுமோ, என்று கொலுவிலிருந்தோர் யோசித்தனர். மன்னன், கிளியின் மொழியாது என்று கேட்க ஆவலுற்றவனானன். கிளி, சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, ஒரு பாடலைப் பாடிற்று!

“முன்னாளறுபத்து மூவரிருந்தா ரவரில்
இந்நாளிலிரண்டு பேரேகினார் - கன்னான்
நறுக்குகின்றான் விற்றுவிட்ட நாகரச நம்பி
இருக்கின்றான் கிட்டினராயா!”

அறுபத்து மூன்று நாயன்மார்கள் உண்டு. அவர்களிலே இன்று இருவர் காணோம், காணாமற்போன இரண்டு விக்கிரங்களையும் கன்னான் நறுக்குகிறான். அந்த விக்கிரகங்களைக் கன்னானுக்கு விற்ற நாகரச சம்பி என்பான் இருக்கிறான், மன்னா! என்ற பொருள்பட, கிளிபாடிடவே, ஆச்சரிய முற்ற அரசன், “சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை என்பார்கள், எனவே இந்தப் பாடலை கிளிக்குச் சொல்லிக் கொடுத்து அதன்வழியாக, செய்தியைத் தெரிவித்தனர் என்று யூகித்தறிந்து, ஒற்றரை ஏவினான். அவர்கள் திருவாரூர்க் கோயிலிலே, இருந்த அறுபத்து மூவரிலே, இரு விக்கிரகங்களை, கோயில் அர்ச்சகன் நாகரச நம்பி என்பான், களவாடிச் சென்று, கன்னானிடம் விற்றுவிட்டான் என்பதைக் கண்டறிந்து காவலனிடம் கூறினான். கடுங்கோபங் கொண்ட கிருஷ்ண தேவராயர் தக்க தண்டனையை அந்தத் திருட்டு அர்ச்சகனுக்குத் தந்தான் என்றோர் பழங்கதை உண்டு! கொடுக்கும் சொத்து பரிபாலிக்க முடியாது போனால், மேலும் அந்த ஆசாமியிடம், சொத்துத்தர யாருக்கும் மனமிராது, மதியிருந்தால்! வழுக்கும் என்று தெரிந்தபிறகு அவ்வழியிலேயே போகிறவன், வகையறியாத வக்கிரந்தானே! அதுபோல் திருக்கோயில்களில், களவு

நடந்தும், கண்திறந்து பார்த்துக் கையும் பிடியுமாக பிடித்துத்தந்தோ கண்களை அவித்தோ, கை கால்களை மடங்கிடச்செய்தோ, கல்லாய்ச் சமைத்தோ, அத்தகைய கள்ளர்களைக் கடவுளர் அவ்வப்போதே தண்டித்து விட்டிருந்தால், சொத்து சேதமாகாது, வீரன் கேட்டது போன்ற கேள்விகளும் பிறக்காது.

பலமான கோயிலைக்கட்ட, மண்மேடுகளை மண்டபமாக்க, பாழுங்கிணறுகளைப் புதுப்பிக்க, பந்து விளையாட்டு, பஞ்சணைப் பிரவேசம், முதலிய உற்சவாதிகள் நடத்த, சித்திரான்னமும் சர்க்கரைப் பொங்கலும், சீனிக்குழம்பும் படைத்திட, வேத அத்யயனம் செய்யும் முப்புரி நூலோருக்குக் கைப்பொருள் தர, கண்ணாடிப் பல்லக்கும் கருடவாகனமும், கருநாக வாகனமும் கரிபரி வாகனங்களும் வகை வகையாகச் செய்து தர, சீமான்கள் சிரித்த முகத்துடன் முன்வருகின்றனர். தீ பிடித்தது, குடிசை சாம்பலாயிற்று, என்று கூலிமக்கள் கூவுவர், காடுமேடு சென்று, கையைத் தலையணையாகக்கொண்டு, கதி இலையே என்று அழு.

31.5.1942

தூக்குவீர் கத்தியை!

கெர்ச் பிரதேசத்தைக் கசக்கிப்பிழிந்து விட்டோம் என்ற கர்வம் ஒருபுறம் இருப்பினும், கார்காவ் முனையில், மார்ஷல் டிமோஷெங்கோ, மாபெரும் படையுடன், பலத்த எதிர்ப்பையுஞ் சமாளித்துக் கொண்டு முன்னேறியபடி இருப்பது கண்டு ஹிட்லரின் நெஞ்சு துடிக்கிறது. போர் முனையிலுள்ள தளபதிகளோ, ஹிட்லரின் ஏதேச்சாதிகாரத்தைக்கண்டு முணுமுணுக்கிறார்களாம். எனவே ஹிட்லர் போர்முனைக்கு விரைந்தோடியிருக்கிறார். கார்காவில் நடக்கும் கடும்போரில் களத்திலே ஜெர்மன் பிணங்கள் குவிகின்றன. புதிய ஆயுதமொன்றை உபயோகிக்கிறோம், என்று பெர்லின், பீதிகிளப்பப் பேசுகிறது. டோனெட்ஸ் பகுதியிலே பாய்ந்துவரும் டிமோஷெங்கோவின் படைகளை பயமுறுத்தவே இதுபோல் பெர்லின் செய்தி கிளப்பியிருக்கிறது. மாஸ்கோ வாயிலிலே வந்துநின்று மிரட்டியபோதே கலங்காத ரஷியர், இந்த மிரட்டலுக்கா இப்போது பயப்படப் போகிறார்கள்! ஏராளமான துருப்புகளை அணிவகுத்துக் கொண்டிருக்கிறது சோவியத் சர்க்கார்! வட ஆப்பிரிக்காவிலே போர் வலுத்துவிட்டது. கார்காவ் முனையிலே கடும்போர் நடக்கிறது சீனாவைச் சிதைத்து விடுவதென்று சீறி ஜப்பான் ஆங்கு பெரும்போர் நடத்துகிறது. ஆஸ்திரேலியாவிலே, ஆசியா கண்டத்திலே புதிய அமைப்பு ஏற்படப்போகிறது, அதிலே சேரப்போகிறாயா இல்லையா என்று ஜப்பானியப் பிரதமர் டோஜோ கேட்கிறார், மிரட்டுகிறார். இங்ஙனம் போர் பயங்கரமானதாகிக் கொண்டே போகிறது. உள்நாட்டிலோ, பஞ்சமும் வேலையில்லாக் கொடுமையும், பயமும் பதைப்பும் மிகுந்து வருகிறது. ஹர்கொள்ளைக்காரரின் அட்டூழியங்கள் ஓர் புறம்! வேலை நிறுத்த வேதனை மற்றோர்புறம், விலைவாசி உயர்வு வேறோர்புறமும் வாட்டுகிறது. இந்தியத் தளபதி ஜெனரல் வேவல், பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் இந்தியாவின் பாதுகாப்புக்காக, ஏராளமான தளவாடங்கள் வந்து குவிந்தபடி இருப்பதாகவும், குறிப்பாக, விமான எதிர்ப்பு ஆயுதங்கள் வந்திருப்பதாகவும் கூறியுள்ளார். இது கேட்டு ஆறுதல் மட்டுமல்ல, உற்சாகமும் நம்பிக்கையும் கொள்கிறோம்.

சிங்கப்பூரில் இருந்ததைவிட பலமான பாதுகாப்புகள், இங்கு, கொழும்பிலும், கல்கத்தாவிலும் செய்து வைத்திருப்பதாகக் கூறுகிறார். படைபலமும்

ஆயுதபலமும் இருப்பினும், இந்தப் போரிலே மக்களின் மனஅரண் மிக முக்கியம். இதனைத்தான் சீனாவும், ரஷியாவும் நமக்கு விளக்குகின்றன. போர்முனை எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம், உள்நாட்டிலே மக்கள்முனை. இக்கருத்துக் கொண்டே தேசியப் போர்முனை இயக்கத்தை இங்கு துவக்கியுள்ளனர், சென்னை மாகாண கவர்னர் தேசியப் போர்முனை துவக்கவிழாவில் சொற்பொழிவாற்றுகையில், சகல ஜாதி, மத, கட்சியினரும் ஒன்று சேருமின் என்று கனிவுடன் அழைத்தார். மாகாணத்தின் பல நகர்களில் இவ்விழா நடைபெற்றது. தேசியப் போர்முனை அமைப்பில் அதிகாரிகளாக, பல தோழர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மக்களைப் போர்முனை மனப்பான்மை கொண்டோராக்குவர், அதற்கான பிரசாரமும் செய்வர். ஆனால், மக்களிடையே ஓரளவு ஆயுதபலமும் இருக்கத்தானே வேண்டும். நேசநாடுகளிடம் நம்பிக்கை இருக்கிறது. ஜப்பானி யரிடம் வெறுப்பு இருக்கிறது. இதுபோதுமா! அமளி என்றதும் ஆயுதம் எங்கே என்றுதானே எவரும் கேட்பர். இச்சமயத்தில், இராணுவத்தினருக்கு மட்டுமல்ல வேலை! நாட்டு மக்கள் யாவருக்குமே வேலை! அவர்கள், ஓரளவு பயிற்சி பெறவேண்டும். ஓரளவு ஆயுதந்தாங்கும் உரிமை தரப்பட வேண்டும். கடலோரப் பிரதேசத்திலே எதிரிகள் எங்கா வதோரிடத்தில் காலடி வைத்தால், அவர்களை எதிர்க்க வேண்டுமே! எதைக்கொண்டு எதிர்ப்பது! இதை உத்தேசித்தே பிரிட்டனில், உள்நாட்டுப் பாதுகாப்புப் படை என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தினர். (பிஷீனீமீ நிதணீக்ஷீபீ) இது இப்போது மிகப்பயன்படுகிறது! விமானத்தின் மூலம் பிரிட்டனில் வந்து குதித்த ஹெர்ஹெஸ் ஓர் உள்நாட்டுப் படையினரிடந்தானே சிக்கினார்! அது போன்றதோர் அமைப்பு இங்கு வேண்டும்.

போர் மனப்பான்மையை வளர்த்து, எதிரியை எத்தகைய கஷ்டமனுபவித்தேனும் முறியடித்தே தீருவோம் என்ற நெஞ்சுறுதி இருக்க வேண்டுமானால், சாதாரண காலத்திலே மக்கள் இருப்பதற்கும் போர்க்கால மக்களுக்கும், பார்த்ததும் விளங்கிக் கொள்ளக்கூடிய வித்தியாசம் இருக்கவேண்டும். ஒவ்வோர் நகரிலும், நகர மக்களின் எண்ணிக்கைக்குத் தக்கபடி, உள்நாட்டுப்

படைகள், தேசியப் போர்முனை அமைப்பாளர்களால், நிறுவப்பட்டு, அந்தப் படைகளுக்குச் சிறிது பயிற்சியும், கட்டாரியோ, கத்தியோ, தாங்கும் உரிமையுந்தரப்பட்டு, அவர்கள் உலவிக்கொண்டிருந்தால், உணர்ச்சி எங்ஙனமிருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டுகிறோம், போர்முனையிலே இராணுவம் இருக்கிறது எதிரியை முறியடிக்க, நமது நகரிலேயே, உள்நாட்டுப் படை இருக்கிறது, பயம் என்ன இனி! என்று மக்கள் நம்பிக்கையும் தைரியமும் பெறுவர். கூர்க்கா வீரர்களுக்கு இருப்பதுபோன்ற கத்தியோ, கட்டாரியோ, இத்தகைய உள்நாட்டுப் படைக்குத் தரப்படவேண்டும். நாட்டுக்கு ஆபத்து என்றதும், "தூக்குவீர் கத்தியை!" என்றதும் நகருக்கு நகர், கிராமத்துக்குக் கிராமம், உடைவாளை உருவிக்கொண்டு உணர்ச்சியோடு கிளம்பும் வீரர்களைப் பெறமுடியும்! சர்க்கார் விரும்பினால், நீதிக்கட்சி இத்தகைய உள்நாட்டுப்படைக்கு, அஞ்சா நெஞ்சர்களாக, ஆயிர மாயிரம் வீரத்திராவிடர்களைத் தரத் தயாராக இருக்கிறது. தோள்வலிவும், மனவலிவும், போர்ப் பரம்பரைக் குணமும், அறப்போருக்காக ஆவியை அர்ப்பணம் செய்யும் ஆற்றுதலும் கொண்ட வீரவாலிபர்களை, நீதிக்கட்சி, அணிவகுத்து நிறுத்திக் காட்டமுடியும். சர்க்கார் சம்மதித்துப்பார்க்கட்டும்.

"தூக்குவீர் கத்தியை" என்று கூறட்டும், பல இலட்சம் கரங்களிலே வாள் விளங்கும், வீரம் ததும்பும், வெற்றிமலரும்! சர்க்கார் இதைக்கவனிப்பார்களா! பிரிட்டனிலே உள்நாட்டுப்படை அமைப்பில் பங்கு கொண்டவரும், ரஷியாவிலே, கொரில்லாப் படைகளை நேரில்கண்டு பல நுட்பங்களைத் தெரிந்து கொண்டவருமான விட்டிங்டன் என்ற நிபுணர், விரைவில் இந்தியா வரக்கூடுமென்றுரைக்கப் படுகிறது. அந்தச் சமயத்தைப் பயன்படுத்தி, சர்க்கார், இதனைச் செய்ய வேண்டுகிறோம்.

31.5.1942

இஃதன்றோ தோழமை!

பாகிஸ்தானை ஒப்புக்கொள்வதாகப் பாசாங்கு செய்து, லீகினரை மயக்கி, திராவிடரைத் தட்டிவிட்டு, சர்க்காரைத் தழுவலாம் என்று ஆச்சாரியார் மனப்பால் குடிக்கிறார். ஆச்சாரியாரின் சுழல் சுற்றுப்பயணம், கனல் கக்கும் பிரசங்கம், அறிக்கைகள், முதலியன கண்டு, இன்றுவரை, ஜனாப் ஜின்னா மௌனம் சாதிக்கிறார். கக்சார்களின் தலைவர் எழுதிக் கேட்டதற்கும், கடிதத்திலே இதுபற்றி விவாதிக்க இயலாது என்றுரைத்துவிட்டார். ஜனாப் ஜின்னா, ஆச்சாரியாரின் போக்கைக் கண்டு ஆனந்த மடைந்ததாகவோ, பரவசமுற்றதாகவோ, ஒரு குறிப்பும் காட்டிக்கொண்டாரில்லை. பெருங்குணம் படைத்தோரின் இயல்பே அதுதான். தூற்றினால் துடிப்பதில்லை, போற்றினால் பூரிப்பதில்லை! கடமையைச் செய்வர், கலங்கமாட்டார்! கஷ்ட நஷ்டமேற்பர், கண்பிசைந்து கொள்ளார்! ஜனாப் ஜின்னா, ஆச்சாரியாரை ஓடோடிவந்து ஆலிங்கனம் செய்துகொண்டு, “ஆச்சாரியாரே! உமது உதவிக்கு எமது வந்தனம்” என்று கூறமாட்டார். அவர் அல்லா பக்ஷல்ல, அற்ப சந்தோஷப் படவோ, அலறவோ, ஆனந்தத்தாண்டவமாடவோ, தேவையில்லை. அவர், அரசியல் ஊஞ்சலாடுபவருமல்ல, ஆச்சாரியாரைத் துணைகொள்ள, கவி இக்பாலின் கனவு, இன்று ஜனாப் ஜின்னாவின் திட்டம் பாகிஸ்தான் திட்டமாக வெளிவந்து இருக்கிறது. கவி இக்பாலின் கனவு, காலத்தினால் கலனாகாத, நவீன நாகரிகத்தினால் போட்டியிட முடியாத, உலக விற்பன்னர்களால் வியக்கப்படும் தாஜ்மஹால், அதிலே உலவிய மன்னர்களின் சரிதை, ஆகியவற்றால் உண்டான உணர்ச்சி! இத்தகைய பாகிஸ்தானுக்கு ஒரு பார்ப்பனரின் ஆதரவு கிடைத்தாலென்ன, கிடைக்காமற் போனாலென்ன! அதிலும் இன்று ஆதரவு காட்டும் ஆச்சாரியார், நேற்றுவரை ஜனாப் ஜின்னாவைத் தூற்றியவர், நாளை மீண்டும் தூற்ற ஆரம்பித்தால் நாம் ஆச்சரியப் படமாட்டோம். எனவேதான் ஜனாப் ஜின்னா இதுவரை, மௌனமாகவே இருக்கிறார்.

திராவிடரும் இஸ்லாமியரும் தோழர்கள், கூட்டுப் படை அமைத்துப், போர்நடத்தி வெற்றிக்கொடியை நாட்ட வேண்டியவர்கள். இந்தத் தோழமையை, முஸ்லீம் லீக்கினால் நிறுவப்பட்ட தேசப் பாதுகாப்புச் சபையின் அங்கத்தினரும், பிரபல தலைவருமான ஜனாப் கலிகுஸ்மான், அண்மையில் கள்ளிக்கோட்டையில் பேசுகையில் அழகுறக் கூறினார்.

“தென்னாட்டு ஆட்சி திராவிடரிடமே இருத்தல் வேண்டும். திராவிடர்களுக்குத் திராவிடஸ்தானம் தேவை. அவர்கள் இனி ஆரிய ஆட்சியிலே இருக்கச் சம்மதிக்க மாட்டார்கள்” என்று அன்பர் கலிக்குஸ்மான் கனிவுடன் கூறினார். தமக்குச் சாதகமான, பாகிஸ்தான் ஆச்சாரியாரால் ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டது என்பதற்காக அவர் தென்னாட்டு அடிப்படைப் பிரச்னையாகிய, திராவிடநாட்டுப் பிரச்னையை மறந்தாரில்லை. அதை மறந்து பேசும் ஆச்சாரியாருக்குச் சரியான சவுக்கடி தருவதுபோல், ஜனாப் கலிக்குஸ்மான், பேசியுள்ளார். இஃதன்றோ தோழமை!

ஆனால் ஆச்சாரியார், இதனை உணருவாரா! நமக்குச் சந்தேகமே. நல்ல மாட்டுக்குத்தான் ஓர் அடி! நல்ல மனிதருக்கு ஒரு சொல்! ஆச்சாரியார், லீகரும் திராவிடரும் சேர்ந்து அடிமேல் அடி தருவதுபோல், செய்த பிரசாரத்துக்குப்பிறகு, மூன்றாண்டுகளுக்குப் பிறகு, பாகிஸ்தானை மட்டும் ஒப்புக்கொண்டிருக்கிறார். இனி திராவிட நாட்டுப் பிரிவினைப் பிரச்சினையையும் ஒப்புக் கொள்ளச் சிலகாலம் பிடிக்கும். நமது கட்டுப்பாடான பிரசாரமே அந்த நிலைமையை உண்டாக்கும். திராவிடத் தோழர்களே! எங்கே உங்கள் சங்கநாதம்!

31.5.1942

மணி மறைந்தார்

தோழர் நாகைமணி இறந்துவிட்டார்! “மிகவும் இளைத்துப் போனார், என்ற போதிலும், குணமடைந்து வருகிறார்,” என்று சென்றவாரம் தெரிவித்தனர். 29-5-1942, சென்னையிலிருந்து, நமது சிந்தையைக் கலங்கவைக்கும் தந்தி வந்தது, நமது தோழர் இறந்தார் என்று. தோழர் மணி சின்னாட்கள் நோய்வாயுற்றிருந்தார், சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வந்தார். எவ்வளவோ முயன்றாலும், அவரது மறைவைத்தடுக்க முடியவில்லை.

தோழர் மணியின் கட்சித்தொண்டுகளைக் கண்டோ கேட்டோ இராத தமிழர் யார்! அந்தச் சிவந்த மேனியன், சிரித்த முகத்துடன் உபசார மொழி பேசி உற்சாக மூட்டக் கேட்காத தமிழர் எவர்? தமிழரின் எதிரிகள் விரண்டோடும்படி, தூக்கித் துரத்திய அந்தக் கைகள், தமிழர் தலைவருடன் தமிழகத்திலே நடமாடிய அந்தக்கால்கள், தமிழருக்காக உழைத்து உழைத்து உருமாறிய அந்த உடலம், இன்று, மண்ணில் சேர்ந்து விட்டது. அவரது உணர்ச்சியும், அந்த உணர்ச்சியை எதிர்ப்போரைக் கண்டதும் அவரடையும் உக்கிரமும், தமிழரில் யார் முன்னேற்ற மடைந்தாலும், கண்டு பூரிக்கும் இயல்பும், நாமறிவோம், அறிந்ததாலேயே இன்று கசங்கிய கண்களுடன், கை நடுக்குற, நெஞ்சுர பதைக்க நிலைதடுமாறி, இந்தச் சோகச் செய்தியை எழுதுகிறோம். பெரியாரின் சுற்றுப் பிரயாணங்களிலே பலமுறை அவர் கலந்துக்கொண்டு, பல மாநாடு, பொதுக்கூட்டங்களில் பங்குகொண்டு தமிழரின் மணியாகத் திகழ்ந்தார். அத்தகைய மணியை இழந்தோம், என்செய்வோம். தமிழரின் வீரத்துக்கும், வாலிப உணர்ச்சிக்கும், இலாபநோக்கமற்ற கட்சிப்பற்றுக்கும், நடமாடும் உதாரணமாக இருந்த நமது நண்பரை இழந்தோமே, நாம், உய்யும்வகை குறைந்தோமே, என்றெண்ணிக் கலங்குகிறோம். அவருடைய உடலம் சுடலை செல்லுகிறது.

தோழர்களிடை உரசி, எதிரிகள்மீது மோதி, தமிழரின் இயல்பை எடுத்துரைத்த உடலம் சுடலை செல்லுகிறது! தமிழரின் அன்பும், மரியாதையும், அவருக்குப் பரிசாகத் தந்தது இயக்கம். பதவியல்ல, பணமல்ல, பட்டுப்பணியல்ல! அவருடைய வியர்வையும், இரத்தமும் கட்சிக்கு அவரளித்தார், இன்று அவரது சவத்தைத் தமிழர் தமது கண்ணிராற் கழுவுகின்றனர். மலர்முகம் படைத்த மணியே நீயோ மறைந்தாய், எம்மைப்பிரிந்தாய்;! மணி மறையினும் மணியின் புகழ் ஒளி தமிழகத்திலே நின்றுலவி, நமக்கு வழிகாட்டுமாக. அவரது குடும்பம் நெஞ்சங்குமுறி நிற்கும், நாம் என்ன கூறுவோம் அவர்களை ஆற்ற, தேற்ற அவர்களுக்கு நமது ஆழ்ந்த அனுதாபத் தைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவர்களின் துக்கத்தைத் தமிழகம் பங்கு கொள்கிறது. இறந்தது அவர்களின் மணியல்ல, தமிழரின் மணி! எங்ஙனம் தாங்குவோம் துக்கத்தை! என் செய்வோம்!

31.5.1942

பாகிஸ்தான்! 24 - ஆண்டுகளுக்கு முன்பு!!

கூண்டிலடைபட்ட பஞ்சவர்ணக்கிளிக்கு, பழமுதிர்சோலை, பசும்புற்றரைக் கடுத்த பரிமளச்சாலை, பழைய கட்டடத்தின் சாளரம், தளிர், பூ, செங்கனி, ஆகியவற்றின்மீது தானே கருத்து இருக்கும்! சிறகை அடித்தடித்து கூண்டுக்குள் பறந்துவிழும் தத்தை நித்தநித்தம் தான் பிடிபடுமுன் குலவிய இன்பக்காட்சிகளைக் காணவேண்டுமே என்பதை எண்ணியே எங்கும் கொவ்வைக் கனியும் சுவைமிகு பண்டமும் தந்து, பாவையர் அதனெதிர் நின்று முல்லைச்சிரிப்புடன் கொஞ்சிடினும், கிளியின் கருத்து அந்தக்காட்சியிலே இலயிக்காது, பழய நினைவுகொண்டு பதறும், துடிக்கும், விடுதலை என்றோ என்று ஏங்கும். துஷ்டமிருகங்களோ கூட்டிலடைபடினும், காட்டிலே உலவிக்கண்டபடி போரிட்டு, இரத்தத்தைக்குடித்து வெறி பிடித்தாடியதை எண்ணியும், எதிரே தோன்றுவோர்மீது பாய்வதற்கின்றி பாழான இரும்புக்கம்பிகள் தடை செய்கின்றனவே என்று கலங்கியும் பற்களைக்காட்டி வாலைச்சுழற்றி அடித்து, வளைந்தும் நிமிர்ந்தும் ஓடியும் உலவியும், தமது குரூரகுணத்தையே காட்டும். தையலர் மகிழ்ந்திடும் தத்தையும், மானிடர் மருண்டிடும் கொடுமை செய்யும் துஷ்டமிருகங்களும் இங்ஙனம் கூண்டிலடைபட்டபோது இருக்கும். நரியின் நிலை எனில்! கூண்டிலிருக்கையில் தந்திரத்தால், வஞ்சணையால், தான் வலிவுள்ள மிருகங்களையும் ஏய்த்து பாடுபடாது ருசியுள்ள இறைச்சியை உண்டு மகிழ்ந்ததை எண்ணி ஏக்கமுற்று, சூதும் பசியும் சுடர்விடும் கண்களுடன், பரமசாதுபோல் பாசாங்கு செய்து கொண்டு, “என்னை ஏனோ வீணாகச் சிறையிலேயிட்டீர்கள். நான் என்ன கொடுமை செய்யவல்லேன். எளியேனைச் சற்றே வெளியே விடுமின்” என்று கெஞ்சுவதுபோல், கூண்டுக்கு வெளியே நிற்போரை நோக்குவதைக் காணக்கூடும். சிறையிலே அடைபட்ட மிருகங்களின் சிந்தனையும் செயலும் இருக்கட்டும், மனிதர்களின் நினைப்பும் நடவடிக்கையும் எப்படி இருந்திருக்கும்.

அமாவாசை! சிறுதூறலும் பெய்கிறது! அந்த நேரத்திலே, சிறையிலே இருக்கும் கருப்புக்குல்லாவின் கவனம், தோட்டத்தில் புகுந்து, தூறல் சந்தடியோடு கலந்து சுவரேறிக் குதித்து, கன்னமிடும்

செயலிலேதானே போகும்! முடிச்சவிழ்ப்பவனோ, தூறல் வந்து விட்டதால் துரிதமாக நடந்து வீடு செல்வோமென்று செல்வோரைப் பின்தொடர்ந்து மெல்ல மோதி, முடிச்சை அவிழ்க்க இது சரியான சமயம் என்ற எண்ணமே கொள்வர். கியற்கைதிகளோவெனில், “அடுத்த ஆறாம் மாதம் விடுதலை, அதற்கடுத்த ஆறாம் மாதம் ஜில்லாபோர்டு மெம்பர்ஸ்தானம் நமக்குத்தான் கிடைக்கும்” என்ற மனப்பால் குடிப்பர்! மாஜி மந்திரிகள், மீண்டும் மந்திரிகளாகும் மார்க்கம் வகுப்பர்! மாசு நீக்கிக்கொள்ள மக்களிடமிருந்து தலைமறைவாகச் சின்னாட்கள் இருந்துவிட்டால், மீண்டும் புகழுடன் விளங்கலாம் என்று எண்ணுபவருண்டு. இந்த ஆறுமாத காலத்திலே, இன்னின்னாரைப் பிடித்து இத்தனை இத்தனை “கண்டிராக்டுகளை” எடுத்துப் பணம் திரட்டிவிட்டிருப்போமே, அது கெட்டுவிட்டதே என்று மனக்குறைபட்ட மகானுபவர்கள் எனக்குத் தெரியும். மருந்துக் கடை நிலைமை, மளிகைக்கடை நிலைமை, புத்தக வியாபார நிலைமை, புதுக்கம்பெனி நிலைமை முதலிய வற்றினைப்பற்றியே எண்ணிக்கொண்டு, பாரதமாதா, சுயராச்யம், காங்கிரஸ், முதலியவற்றைப்பற்றியும் எண்ணாதிருந்த எத்தனையோ காங்கிரஸ் சிறைபுகுந்தோரைப்பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் சிலர், சிறைச்சாலையைப், படிப்பகமாக்கியுள்ளனர். ஆச்சாரியார், இராமாயணத்தைப் படித்துப்படித்து ரசித்தது அங்கு தான். பெரியார் ஜஸ்டிஸ் கட்சிக்குத் தமது வேலைத்திட்டத்தைத் தயாரித்தது சிறைச்சாலையிலேதான். புதிய பாஷைபயில, புதிய புத்தகம் படிக்க, புது உறவுகொள்ள, புதுப்பழக்கம்பெற, பலருக்குச் சிறைச்சாலை, ஆரம்பப்பள்ளியாக இருந்திருக்கிறது. சிறைச் சாலையிலே இருந்து, உலகுக்கு நன்மையும், நம்மவர் உள்ளத்திற்கு மகிழ்ச்சியும் தரும் உன்னதமான காரியத்தை ஒருவீர இஸ்லாமியத் தோழர் செய்தது பற்றிய சிறு குறிப்பை முஸ்லீம்லீகின் ஆங்கில வாரத்தாளாகிய டான் பத்திரிகையிலே நான் படித்துப் பரமானந்தமடைந்தேன். நீங்களும் மகிழ்வீர்கள் என்றே அதனையும் அது எழுப்பும் எண்ணங்களையும் உங்களுக்குக் கூறுகிறேன்.

டேராடன் சிறை, 22-8-1941.

அன்புள்ள அட்லி அவர்களே!

இத்துடன் இணைத்துள்ள கடிதத்தைத் தாங்கள் படித்துவிட்டு, சர்வதேச சமதர்ம சங்கத் தலைவரும், பெல்ஜிய நாட்டுப் பிரமுகரும், தற்போது பிரிட்டனில் உள்ளவருமான தோழர் காமிலி ஹ்யூஸ்மான்ஸ் அவர்களிடம் சேர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். பிரிட்டிஷ் சர்க்கார், மிஸ்டர் அமெரி, ஜனாப் ஜின்னா ஆகியவர்களின் நிலைமையை உள்ளபடி தெளிவாகத் இதனைத தெரிவிக்கிறேன். இந்தியாவிலுள்ள தனித்தனி பிரதேசங்களும் தத்தமக்கு ஏற்றதான அரசியல் அமைப்பை ஏற்படுத்திக்கொள்ள அனுமதிப்பதே, இந்தியப் பிரச்சனையைத் தீர்க்கும் வழியாகும்.

இங்ஙனம்

மகமத் அப்துஸ் சத்தார் கெயிரி

1941ஆம் ஆண்டு, ஆகஸ்ட்டு மாதம் 22ந் தேதி டோராடன் சிறைச்சாலையிலே, மேற்படி கடிதத்தை எழுதினார் ஜனாப் மகமத் அப்துஸ் சத்தார். அவர் பேராசிரியர், பலநாட்டு மனவளமறிந்தவர், சமதர்மி. எம்.ஏ. பிஎச்.டி, பட்டம் பெற்றவர், ஐரோப்பாவுக்குச் சென்றிருந்து நேரடியாக அம்மக்களின் நினைப்பையும், நிலைமை யையும் கண்டறிந்தவர். சமதர்மத்தின் பொருட்டே சிறைபுகுந்தவர். சிந்தனையைச் சிறைச்சாலை என்ன செய்யும்? இரும்புக் கம்பிகள், இருதயத்தை மாற்றிவிடாதன்றோ! சிறைப்பட்ட சிலர், வெளியே உள்ள மக்கள், விஷமப் பிரசாரமெனும் வெஞ்சிறையில் கிடந்துழலுவதுகண்ட உளம் வெதும்பி, இக்கடிதத்தை விடுத்தார்.

ஜனாப் ஜின்னா பேசும் பாகிஸ்தான், ஓர் பிரிட்டிஷ் சிருஷ்டி! என்று ஆச்சாரியார் உள்பட காங்கிரஸ் வாதிகள் அனைவரும் கர்ஜனை புரிகின்றனர். பத்திரிகைகளோ, இந்த விஷமத்தனமான பொய்யை, அலங்காரத்தோடு வெளியிட்டு, ஆணவத்தோடு ஆர்ப்பரிக்கின்றன. பாமர மக்களோ, பாகிஸ்தான் பிரிட்டிஷ் சூழ்ச்சிதான் போலும் என்று கருதி மனம் புழுங்குகின்றனர். ஜனாப் ஜின்னாவை, நாக்கைப் பறையாக்கி நடமாடும் பேர்வழிகள் தூற்றுகின்றனர். இத்தகைய இரைச்சல் வெளியே! உள்ளே, சிறையில் இருந்த ஜனாப் சத்தாருக்கு, இந்த இழிந்த பிரசாரம் எரிச்சலை உண்டாக்கிற்று. ஜனாப் ஜின்னாமீது வீண்பழி சுமத்துபவர்மீது கோபம் கொதித்தது. பிரிட்டிஷார் சிருஷ்டித்தது இந்தப் பாகிஸ்தான் திட்டம் என்ற

பெரும் புளுகு பேசிடுவோரின் போக்கிரித்தனத்தைப் போக்க விரும்பினார். அதற்காகவே இரு கடிதங்கள் விடுத்தார். ஒன்று பெல்ஜிய நாட்டவரும் பிரபல சமதர்மியுமான காமிலி ஹ்யூமான்ஸ் என்பாருக்கு. மற்றொன்று, அந்தக் கடிதத்தை அவரிடம் சேர்க்குமாறு மிஸ்டர் சி.ஆர். அட்லி அவர்களைக் கேட்டுக்கொண்டு எழுதப்பட்டது. அட்லி அவர்களுக்கு அனுப்பிய கடிதமே நான் முதலில் குறிப்பிட்டது. அத்துடன் இணைக்கப் பட்டிருந்ததும், காமிலிக்குத் தரப்பட வேண்டுமென்று குறிக்கப் பட்டதுமான மற்றோர் கடிதத்தின் சாரத்தைக் கீழே காணவும்.

* * *

அன்பரே! ஹியூஸ்மான்ஸ்!

இருபத்துநான்கு ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்தவோர் சம்பவத்தைத் தாங்கள் நினைவில் நிறுத்தியிருக்கிறீரோ யாதோ நானறியேன்.

கடந்த ஜெர்மன் சண்டையின்போது, சமாதானம் ஏற்படு மென்ற எண்ணம் எழுந்தபோது, சர்வதேச சமதர்மிகள் கூட்டம் ஒன்று எங்கேனும் நடைபெற்றது. அது பிரிது தீரே இருந்தார் சமதர்மிகள் கழகத்தின் பொதுக்காரியதரிசியாக இருந்தார். 1917ம் ஆண்டு. செப்டம்பரோ அக்டோபரோ, நினைவில்லை. இந்திய நாட்டபிமானிகள் கழகத்தினரான இரு இந்தியர்கள், உம்மைக் கண்டு கலந்துரையாடினர். நீர், அவர்கள் பேச்சை அக்கறையுடன் கேட்டுவிட்டு, ""உமது கருத்தைத் தெளிவாக, எழுதிக்கொள்வது" என்றுரைத்தீர். சின்னாட்களுக்கெல்லாம், நீர் கேட்டபடியே, அவர்கள், இந்தியப் பிரச்னையைத் தீர்க்க வழி யாது என்பதுபற்றி எழுதித் தந்தனர்.

இந்தியாவை; முஸ்லீம் இந்தியா இந்து இந்தியா என்று இரண்டு அரசுகளாகப் பிரித்து அமைக்கவேண்டும் - என்பதே அவர்கள் எழுதித்தந்த திட்டம். தாங்கள் அதுபோது அந்தத் திட்டத் தைக்கண்டு ஆச்சரியமுற்றீர். நினைவிற்கு வரும் என்று நம்புகிறேன்.

இந்தியாவைப் பிரித்து வைத்து ஆளவேண்டும் என்ற சூட்சிகரமான கருத்தோடு, பாகிஸ்தான் திட்டத்தைப் பிரிட்டிஷார், ஜனாப் ஜின்னாவுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள் என்று இங்கு பேசப்பட்டு வருகிறது,

இது ஓர் அபாண்டம், பெரும் புளுகு!

இதனைத் தாங்கள் விளக்கிவிட்டால், வீணாக வளர்ந்துள்ள ஒரு தப்பபிப்பிராயம் அகற்றப்பட்டுவிடும்.

இங்ஙனம்

அப்துஸ் சத்தார்

இந்தக் கடிதத்தை மிஸ்டர் அட்லி படித்துவிட்டு, தோழர் காமிலிக்கு அனுப்பிவிட்டு, கீழ்க்காணும் கடிதத்தை ஜனாப் அப்துஸ் சத்தாருக்கும் அனுப்பினார்.

11 டவுனிங் தெரு

ஓயிட்ஹால்

5-1-1942

அன்புள்ள பேராசிரியர் கெயிரி அவர்களே!

தோழர் காமிலி ஹ்யூஸ்மான்ஸ், தங்களுக்கும் தங்கள் சகோதரருக்கும் அனுப்புமாறு இக்கடிதத்தை எனக்கு அனுப்பியுள்ளார். பெற்றுக்கொள்க.

இங்ஙனம்

சி.ஆர். அட்லி.

* * *

மிஸ்டர் அட்லிமூலம், ஜனாப் அப்துஸ் சத்தாரிக்கு தோழர் காமிலி அனுப்பிய கடிதம் இதோ, காணவும்.

லண்டன்

5, ஹொபார்ட்பிளேஸ்

30-12-1941.

எனதருமை மந்திரியாரே,

இந்தியப் பிரதிநிதிகள் இருவர் விடுத்த கடிதத்தை எனக்கு அனுப்பினமைக்கு வந்தனம். அவர்கள் இருவரும், என்னைச் சந்தித்துப்பேசியது எனக்கு நன்றாக நினைவிலிருக்கிறது. பிரன்ச்சு மொழியில் நான், அவர்கள் குறிப்பிடும் ஸ்டாக்கோம் மாநாடு பற்றி எழுதியுள்ள புத்தகத்தில் 407-408ம் பக்கங்களில், அவர்கள் பேச்சு, திட்டம் ஆகியவற்றின் சுருக்கத்தைக் காணலாம்.

இந்தியாவை முஸ்லீம்நாடு. இந்து நாடு என்று இரு பிரிவுகளாக்க வேண்டும் என்றுதான் அவர்கள் திட்டத்திலே கண்டிருக்கிறார்கள். அவர் கடிதத்தில் குறிப்பிட்டிருப்பது உண்மையே.

நான் அந்தத் திட்டத்தைக்கண்டு ஆச்சரியமடைந்ததாக அவர்களுக்குத் தோன்றிற்று, ஆனால் நான் ஆச்சரியமடையவில்லை. நான், இந்தப் பிரச்னை, ஐரோப்பாவில் காணப்படும் சில பிரச்னையோடு, ஒப்பாக இருப்பதைக்கண்டு மட்டுமே ஆச்சரியமுற்றேன்.

அவர்களின் அறிக்கையைக் கண்டால்போதும், பாகிஸ்தான் பிரிட்டிஷ் சிருஷ்டி அல்ல என்பதைத் தெரிந்துகொள்ள. இந்த என் அறிக்கை, வீணாக வளர்ந்துள்ள தப்பெண்ணத்தைப் போக்குமென்று நம்புகிறேன்.

இந்தக் கடிதத்தை என் வாழ்த்துடன், அன்பருக்கு அனுப்பவும்.

இங்ஙனம்,

காமிலி ஹ்யூஸ்மான்ஸ்.

இருபத்திநாலாண்டுகளுக்கு முன்பு, அலைகடல்கள் தாண்டி, ஐரோப்பாக்கண்டத்திலே, அறிஞர்கள் முன்னிலையில், பாகிஸ்தான் திட்டத்தைப் பிரேரபித்த இரு முஸ்லீம் வீரர்களில் ஒருவர்தான், ஜனாப் ஜின்னாவின்மீது காங்கிரசார் சுமத்தும் வீண்பழியைக்கண்டு மனம் துடித்து, உண்மை வெளிவரட்டும் என்பதற்காக, மிஸ்டர் அட்லிக்கும் காமிலி ஹ்யூஸ்மான்சுக்கும் கடிதமெழுதினார்.

ஸ்டாக்கோமில் சர்வதேச சமதர்மிகள் மாநாட்டில் 1917ல் பிரேரேபிக்கப்பட்ட பாகிஸ்தானை இன்னமும் எதிர்க்கவும், அது பிரிட்டிஷ் சூழ்ச்சி என்றுரைக்கவும் முன்வரும் மரமண்டைகளுக்கு இந்தச் செய்தியை, மெள்ள மெள்ளவாகிலும் விளக்கிக் கூறுங்கள் தோழர்களே! யாரோ ஒரு சாயபு, கொரானிலே பாகிஸ்தானுக்கு ஆதாரம் இல்லை என்றுரைத்தாராம், அவருக்குக் கூறுங்கள், அவரைவிட தெளிவாக கொரானைப்படித்து, இஸ்லாத்தையும் உணர்ந்து மு ஸ் லீ ம் இன முன்னேற்றத்திலே அக்கரையுங் கொண்ட அறிஞர்கள் கூறும் ஆதாரம், பாகிஸ்தான், என்பதை!

இருவிழிகளும் கெட்டு, இஸ்லாமியரின் எழில் குன்றிவிட்டதே என்பதனால் மனஅமைதியுங்கெட்டு, பட்டுவரும் மரம்போல் இருந்த ஷா ஆலம், அதற்கு முன்பிருந்த அவரது மூதாதையர், முடிதரித்துச் ஜொலித்ததை எண்ணி, ""எவ்வளவு உச்சியில் இருந்தது பிறைக்கொடி! எவ்வளவு கீழே தாழ்ந்துவிட்டது இன்று" என்று ஏங்கி, தூங்குகையில் கனவுகண்டு கலங்கியிருப்பாரன்றோ. அதுபோல், ஷா ஆலமும் இன்றில்லை, ஆளும் இடமே இல்லையே என்று இன்று எட்டுக்கோடிக்கு மேற்பட்ட இஸ்லாமியத் தோழர்கள் ஏங்கித் தவிக்கின்றனர். இதனை அறியாது, பாகிஸ்தான் திட்டத்தை எதிர்ப்பது பேதைமை, பாதகம், அறிவீனம், ஆணவம்! இந்தக் கெட்ட குணங்களின் கூட்டுச் சரக்கு வெகுவிரைவிலே குப்பைக் கூடைக்குச் சென்றே தீரும், இதிலே சந்தேகம் வேண்டாம். இந்துக்கள் வேறு, முஸ்லீம்கள் வேறு என்ற கருத்தே காந்தியாருக்குக் கசக்கிறதாம்! இருவரும் ஒரே இனமாம்! உண்மையிலேயே இக்கருத்து, காந்தியாருக்கு இருக்குமேயானால், அவரது முதல் புதல்வன் ஹீராலால் காந்தி, இஸ்லாம் புகுந்தபோது, ஏன் அவ்வளவு கொதித்தார், குதித்தார், குளறினார்! இஸ்லாமியரானதும், ஏன் காந்தியார், காயவேண்டும்.

இஸ்லாமியர்மீது எவ்வளவு துவேஷமும், வெறுப்பும், கோபமும் இருந்தால், தன் மகன், முஸ்லீம் மார்க்கத்தைத் தழுவியதும் காந்தியார் தத்தோம் என்றாடி, தகாது, கூடாது என்று எதிர்த்திருப்பார் என்பதை எண்ணிப் பாருங்கள். இந்துவும் முஸ்லீமும் ஒரே இனமானால், ஏன், வட நாடு, இந்து முஸ்லீம் கலக இரணகளமாக இருக்கிறது? ஏன் இன்றும், இந்து உணவுச்சாலைகளிலே முஸ்லீம் வடநாட்டிலே நுழைய முடிவதில்லை? ஏன் இன்றுவரை, ரயில்வே நிலையங்களிலே, இந்துசாயா (டீ) முஸ்லீம்சாயா (டீ) என்று தனித்தனியாக விற்கப்படுகிறது! இந்துப்பானி (தண்ணீர்) முஸ்லீம் பானி (தண்ணீர்) என்று ஏன் தண்ணீர் தருவதிலேகூடப் பேதம் காட்டப்படுகிறது?

இந்தக்""கண்கண்ட கடவுள்" "" அரையாடை அண்ணல்""" அந்தராத்மாவின் அன்பர்" ""முனிபுங்கவர்" வாழும் வார்தாவிலேகூட இந்த வக்கிர புத்தி காட்டுகிறார்களளே, அது ஏன்? இவர்களைக் கேட்டால், பதில்கூற வக்கு இல்லை! அத்தகைய அதிகாரம் பெற்றுள்ள காந்தியார், ஏன் இந்தப் பேதத்தைப் போக்க முன்வரவில்லை. கையாலாக வில்லையா! கருத்து இல்லையா! ஏனய்யா, என்னால் இந்து முஸ்லீம் ஒற்றுமையை ஏற்படுத்தமுடிய வில்லை என்று இருகையை விரித்துக் கூறிவிட்டவர், இன்னமும், இந்து வேறு முஸ்லீம் வேறு அல்ல என்று சொல்கிறார், இது பொருந்துமா என்றுதான் கேட்கிறேன். இந்துவும் முஸ்லீமும் ஒன்றாக வாழவேண்டும் என்பதற்காக அக்பர் எவ்வளவோ அரும்பாடு பட்டார். ரஜபுத்திர ரமணிகளை மணஞ்செய்து கொண்டது மட்டுமல்ல. ரஜபுத்திர வீரர்களுக்குத் தர்பாரில், பலப்பல பொறுப்பான பதவிகள் தந்தார், படைத்தலைவர்களாக்கினார். கண்டபலன் என்ன? மொகலாய மன்னர்கள் சற்றுச் சோர்ந்து களைத்து உட்கார்ந்தால் போதும். இந்து சிற்றரசர்களும், சீமான்களும், மதாசிரியர்களும் கிளம்பி, கலகம் குழப்பம் விளைவித்து, மொகலாய அரசைக் கவிழ்க்கவே

ஆங்கலி ஆட்சி ஏற்பட்டதும், இந்துக்கள் அந்த நிழலின்கீழ் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டத்தானே பாடுபட்டு வந்தார்கள் - வருகிறார்கள். இந்துக் கூட்டம், முஸ்லீம்களை எவ்வளவோ தூற்றிக்கொண்டு வருகிறதே, காந்தியார், ஒரு வார்த்தை இதைத் தடுக்கக் கூறினாரா! ஏன், பாமரரைப் பதைக்க வைக்கும் பாதகக் கூட்டத்தைக் காந்தியார் தட்டிக் கொடுக்கிறார். இவைகளைக் கேட்டால், கோபம் பொத்துக்கொண்டு வருகிறது. ஆகவேதான், இனி இத்தகைய ஆட்சியிலே இருக்கமுடியாது என்று முஸ்லீம்கள் கூறிவிட்டனர். ஏன் அதை எதிர்க்கிறார்கள்? எதிர்த்து இந்த ஏமாளிகள் காணப்போவதென்ன! இந்துக்கூட்டமோ, எண்ணாயிரம் பிளவு, ஏழாயிரம் இழிவுகளைத் தாங்கிக்கொண்டு பலப்பல வகுப்பு, வகுப்புக்குள் வகுப்பு, பல குலம், என்று சின்னாபின்னமாகி இருக்கிறது. இந்து மார்க்கமோ, இன்னதென்று வரையறுத்துக் கூறமுடியாத குப்பைமேடு! அதிலே நெளிகின்றன புராணங்கள் எனும் புழுக்கள்! இந்தக்கூட்டம், ஏகதெய்வம், ஒரே நபி, ஒரே கொரான் கொண்டு, மேட்டுப்பாளையத்திலே இருந்தாலும் மெக்காவில் இருந்தாலும் ஒரே ஒற்றுமையுடன் விளங்கும் வீரக் கூட்டமான இஸ்லாமியரையா எதிர்க்கமுடியும்! முயல் கூட்டங்கள் முகாமிட்டு புலிக்கூட்டத்தைப் போருக்கழைப்பதுபோன்றதன்றோ இது. நாட்டின் நிலைமையை நன்குணரின், இத்தகைய நினைப்புகளைக் கைவிட்டு, நாட்டிலே உள்ள வீரமரபினரின் விரோதத்தைக் கிளப்பாமல் ஆரியர் இருப்பர். இன்றும் ஏதோ தங்களின் சூதும் வாதும் சூழ்ச்சியும் செல்லுபடியாகும் என்று கருதினால் ஏமாற்றமே அடைவர். வீர இனங்களாகிய இஸ்லாமியரும் திராவிடரும் விழித்துக்கொண்டனர், இனி அவர்கள் இலட்சியத்தைப் பெறும்வரை ஓயமாட்டார்கள். கடல் அலையைக் கைத்தடி கொண்டு தாக்கியவர்கள் காங்கிரசார், தமது பத்திரிகைகளில் இனிச்செல்லாது உமது செல்லா சாத்திரங்கள்! விலகி நில்லுங்கள், விடுதலைப் போர் கிளம்பிவிட்டது! பந்திக்கு முந்துவீர், படை எனிலோ பயந்தோடுவீர், சூது செய்யவல்லீர், சூரர் எதிர்ப்படின் சுலோகமுரைக்க அறிவீரேயன்றி சூளுரைக்கவுமறியீர், ஏன் வீணில், நெருப்புடன் விளையாடுகிறீர், என்று நான் எச்சரிக்கிறேன்.

சிறைச்சாலையிலே இருந்து சீலர்கள் வெளியிட்ட உண்மை, பாகிஸ்தான் என்ற கருத்து 24 ஆண்டுகளுக்கு முன்பே பிறந்தது என்பதை விளக்கிவிட்டது. இன்று அந்தப் போர்வீரன், 24 வயதுள்ள வாலிபன், வெளியே வருகிறான், வீறுகொண்டு! அவன்

கண்டது என்னை? எங்கும் முஸ்லீம்களின் உணர்ச்சி! அந்த வீரவாலிபனைக் கைலாகு கொடுத்து வரவேற்று, ‘ஆற்றல் படைத்த தோளுடைய அருமை தோழா! அஞ்சாநெஞ்சு படைத்த குமாரா! பஞ்சாபும் சிந்தும், எல்லையும் வங்கமும், எங்கும் உனது எழிலாட்சி எழச்செய்வேன்," என்று ஜனாப் ஜின்னா கூறிவிட்டார்.

"இதோ காணீர் உமது ரட்சகனை! கேளீர் இவன் புகழை! இவன் கோரி கில்ஜி, லோடி, சையத், மொகல், ஆகிய நமது பரம்பரையிலு தித்தவன்! பாராளும் திறம்படைத்தவன்! படைக்கஞ்சான், பயங்கொள்ளான், பச்சை இரத்தம் பரிமாறவும் தயங்கமாட்டான். இந்தப் பாகிஸ்தான் வீரனுக்கு உமது வணக்கத்தைக் கூறுவீர்" என்று ஜனாப் ஜின்னா, முஸ்லீம்களுக்குக் கூறிவிட்டார். முஸ்லீம்களும், தமது கனவு நனவு ஆகும் காலம் பிறந்துவிட்டதென்று களித்து, தோள்கட்டி, கச்சையை வரிந்து கட்டிக்கிளம்பத் தயாராகிவிட்டனர்! ஆரியனே நீ தயாரா போருக்கு? முடியுமா உன்னால்! உன் சரிதத்திலே உண்டா, வீரத்துக்குச் சான்று. கிடையாது! முடியாது! எனவே, உன் நிலையை உணர்ந்து சற்றே விலகியிரும் பிள்ளாய் என்று ஆரியருக்கு நான் அறிவுறுத்துகிறேன். கேட்டால் பிழைப்பர், இல்லையேல் கெடுவர். இரண்டில் எது தேவையோ அதை அவர்கள் கேட்கட்டும்!"

(திராவிடநாடு - 7.6.1942)

தேனுடன் வேம்பு!

“அது சரி, ஓய் குப்பு ஜோஸ்யரே, மாப்பிள்ளைக்கும் சம்மதந்தானோ. நம்ம பெண் அவனுக்குப் பிடித்தந்தானோ” என்று பெண்ணின் தகப்பனார் கேட்க, கலியாணத்தரகர், குப்பு ஜோஸ்யர் “அதைக் கேட்கவே வேண்டாம். உம்மபெண்ணைத்தான் கலியாணம் செய்து கொள்ள வேண்டுமென்று பிள்ளையாண்டன் ஒத்தைக் காலில் நின்று தவங்கிடக்கிறான்” என்றுகூறிட பெண்ணின் தகப்பனார் மிக்க மகிழ்கிறார். கருத்தொத்து வாழுவர் மணமக்கள் என்று எண்ணி ஆனந்திக்கிறார். இவ்வளவு நல்ல செய்தியைக் கொண்டு வந்தவருக்குப் பாலும் பட்சணமும் பணமும் தாராளமாக.... காலையிலே இதுபெற்று, மாலையிலே மாப்பிள்ளை வீடு போகிறார் ஜோஸ்யர். மாப்பிள்ளை வீட்டாருக்குப் பெண் எப்படிப்பட்ட குணமுள்ளவளா வந்து வாய்க்குமோ என்பதிலே யோசனை. “வாங்கோ ஜோசியர்வாள்! பெண் வீட்டாரைக் கண்டு பேசினீளோ. பெண் எப்படிப்பட்டவள், குணம் எப்படி? குடித்தனத்திலே ஒழுங்காக நடக்குமோ?” என்று விசாரிக்கிறார் மாப்பிள்ளையின் தகப்பனார். “விவேகமான பெண்! குணவதி! தன் வீடு வேறு, மாமி வீடுவேறு என்று வித்தியாசம் பார்க்காமல், எல்லோரையும் ஒரே கண்ணால் கவனித்து நடப்பாள்” என்றார் ஜோதிடர். மாப்பிள்ளை வீட்டாருக்கு உள்ளம் குளிர்ந்தது.

முகூர்த்தம், விடியுமுன்! ஒரேகாலால் தவங்கிடக்கும் மாப்பிள்ளைக்கும் ஒரே கண்ணால் கவனிக்கும் குணவதிக்கும் திருமணம் நடந்தேறியது. கதிரோனும் கிளம்பினான். மாப்பிள்ளைக்கு ஒருகால் ஊனம், நொண்டி! பெண்ணுக்கோ கண் நொள்ளை! ஒரே கண் மட்டுமே சரியாக இருந்தது, நொண்டி மாப்பிள்ளைக்கு நொள்ளைக்கண் நாயகி! சம்பந்திகளுக்குள் சண்டை! இரு குடும்பத்தினரும் குப்பு ஜோதிடரைக் குட்டினர். ஜோதிடர், “நான் முன்னமேயே சொன்னேனே, மாப்பிள்ளை ஒரே காலால் நிற்கிறான் என்று” என்று பெண் வீட்டாருக்குக் கூறிவிட்டு, “பெண் எல்லோரையும் ஒரே கண்ணால் கவனித்துக் கொள்ளும் என்று நான் ஏற்கனவே கூறினேனே” என்று மாப்பிள்ளை வீட்டாருக்கும் சமாதானங் கூறினாராம்.

இத்தகைய குப்பு ஜோதிடர் நிலைமையிலே அன்பர் ஆச்சாரியார் இருக்கிறார்! தரகர்களின் தன்மையே தனிரகம்! அதை ஆச்சாரியாரின் பேச்சும் போக்கும் நன்கு காட்டுகிறது.

எந்தவிதமாகவது, கலியாணத்தை முடித்து வைத்தால் தனக்கு இலாபம் உண்டு என்பது தெரிந்து குப்பு ஜோதிடர் நடந்துகொண்டதைப்போல், எப்படியோ ஒருவிதத்தில், தந்திரமாக காங்கிரசுக்கும் லீகுக்கும், இடையே சமரசம் உண்டாக்கி வைத்தால் தமக்குப் பதவிப்பரிசு கிடைக்குமென்று ஆச்சாரியார் கருதுகிறார், எனவேதான் அவர் எப்படியோ தாலி கழுத்திலேறினால் தமக்குப் பணம் கிடைக்கு மென்று எண்ணிய தரகன்போல், இருசாரருக்கும், சமர்த்தான மொழி புகன்று ஜோடி சேர்க்கப் பார்க்கிறார்.

சஞ்சலப்படும் சகாக்களிடமும் சீறும் சீடர்கள் முன்னிலையிலும், “நான் பாகிஸ்தான் கோரும் உரிமை முஸ்லீம்களுக்கு உண்டென்பதைக் காங்கிரஸ், கால நெருக்கடியை உத்தேசித்து ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கூறுகிறேனே யன்றி, பாகிஸ்தான் தந்துவிட வேண்டுமென்று கூறவில்லை” என்று தந்திரமாகப் பேசுகிறார். லீகர்கள், திராவிடர்கள் கூடிக் கேட்கையிலே, “சுயநிர்ணய உரிமையை நான் மறுப்பேனா? உங்கள் கோரிக்கை பிரிவினை எனில், அதைப்பெற்றுக்கொள்ளுங்கள். நான் தடை செய்யேன்” என்று கூறுகிறார். தமது தந்திரப் பேச்சினால் இருசாரரையும் ஏய்க்கப் பார்க்கிறார். இறை கிடைக்குமென்று அலைந்து திரிகிறார். புதிய நண்பர்கள் கிடைக்கிறார்கள் என்று மிரட்டி பழைய தோழர்களைத் தமது பக்கம் இழுக்க முயற்சிக்கிறார். அதைப்போலவே, புதிய நண்பர்களைப் பெற, அந்தக் கூட்டத்திடம் புன்னகை புரிந்தும், புகழுரை வீசியும் பார்க்கிறார். இந்தப் போக்கு ஆச்சாரியாருக்கு ஆரம்பத்திலே பலன்தரக்கூடும் என்றாலும், வெகுவிரைவிலே இது ஆபத்தையே விளைவிக்கும். இருசாரரின் சந்தேகமும், எதிர்ப்பும் பலப்பட்டு, இடையே இவர் சிக்கிக்கொண்டு சிதைவார். எனவே இந்தத் தரகுநிலையிலிருந்து நீங்கி, உண்மை உணரச்செய்து, ஏதாவதோர் பக்கம் இறுதிவரை பார்ப்பதென்று நின்றுழைக்க வேண்டும். இல்லையேல், தர்மதுரை, ஆச்சாரியார் செல்லுமிடமெங்கும் தொடரும் என்று நாம் அஞ்சுகிறோம்.

எண்ணித்துணிக கருமம்! துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு என்பது வள்ளுவர் வாக்கு. ஆச்சாரியார், இப்போது கொண்டுள்ள அபிப்பிராயத்தைச் சமயம் கிடைத்ததும் மாற்றிவிடத் தயார் என்று தமது சகாக்களுக்குத் தேறுதல் கூறவே

இங்ஙனம் பேசுகிறாரா என்று நாம் கேட்கிறோம். அபிப்பிராயங்கள் மாறுவது இயற்கை மட்டுமல்ல, மனவளர்ச்சிக்கேற்றபடி அதுமுறையுமாகும். ஆனால் அதிலே உண்மை உறவாட வேண்டும், பாவனை பரதமிடுவது பாதகம். தெளிவு ஏற்படாததால், ஒரு கருத்தைக் கொண்டவர், பின்னர் தெளிந்து, அக்கருத்தை மாற்றிக் கொள்வர். இதை உலகிலே நாம் காண்கிறோம். இம்முறையிலே ஆச்சாரியார் தமது பழங்கருத்தை மாற்றிக் கொண்டிருப்பின் நாம் மகிழ்வோம், ஆனால் அவரது சொற்பொழிவுகளிலிருந்து நமக்குச் சந்தேகம் பலப்படுகிறதே யன்றி, அவரிடம் நம்பிக்கை உதிக்கவில்லை.

“பாகிஸ்தான் திட்டத்தைப்பற்றி நான் முன்பு தவறான கருத்துகொண்டிருந்தேன். அதனைப் பழித்தேன். அதனை ஆதரித்தோரை இழித்துப் பேசினேன். இன்றோ, அந்தப் பாகிஸ்தான் தேவையானதும் நியாயமானதும், தடுக்க முடியாததுமான ஓர் நீதி என்பதை உணர்ந்தேன், எனவே அதனை நான் ஆதரிக்கிறேன்” என்று ஆச்சாரியார் கூறினால், அவரது மனம் உண்மையிலேயே மாறிவிட்டதென்பதை யறிந்துநாம் மகிழ்வோம். ஆனால் ஆச்சாரியார் அதுபோல் பேசுகின்றாரில்லை.

சென்னை வாலிபர் மாநாட்டிலே கடந்த வாரம் பேசுகையில் ஆச்சாரியார், “பாகிஸ்தான் குழந்தையை வெட்டுவது போலாகும். தாயைத் தண்டிப்பது போலாகும் என்றெல்லாம் நான் கூறியது உண்மையே. இவ்விதம் நான் முன்பு சொல்கையில் பாகிஸ்தான் ஓர் அபிப்பிராயமாகவே இருந்தது. இப்போது அது உண்மை விஷயமாக மாறியிருக்கிறது. படித்தவர் படிக்காதவர்கள் முதலிய ஏராளமான பேர்கள் அதை உண்மை விஷயமாகக் கொண்டிருக்கிறார்கள்” என்று கூறிவிட்டு, “மீண்டும் பாகிஸ்தான் விஷயம் வெறும் அபிப்பிராய

மான நிலைமைக்கு மாறினால் நானும் பாகிஸ்தான் கெட்டது என்று சொல்லக்கூடிய நிலைமைக்கு மாறிவிடுவேன்” என்று சொல்கிறார்.

இந்தப் பேச்சிலே புதைந்துள்ள பயங்கரமான உண்மையைச் சற்று ஊன்றிப்பார்க்கும்படி தோழர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

எட்டினால் குடுமி எட்டாவிட்டால் கால் என்ற பழமொழிக்கும் ஆச்சாரியாரின் பேச்சிலிருந்து தெரியவரும் அவரது போக்குக்கும் என்ன வித்தியாசமிருக்கிறது என்று கேட்கிறோம்.

முன்பு பாகிஸ்தான் வெறும் அபிப்பிராயமாக இருந்தது என்று ஆச்சாரியார் கூறுவதன் கருத்து என்ன? அகில இந்திய முஸ்லீம்லீக் மாநாட்டிலே பாகிஸ்தான் தீர்மானமாகி, லீக் தலைவரால் விளக்கப்

பட்டு, முஸ்லீம்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டபிறகு, ஆச்சாரியார், அதனை “வெறும் அபிப்பிராயம்” என்று எப்படிக் கருதலாம்! வெட்டிப்பேச்சு பேசுபவரா ஜனாப் ஜின்னா! லீகின் மூலாதாரக் கொள்கையாக பாகிஸ்தான் அமைந்தது சென்னையில் நடந்த மாநாட்டிலே. அப்போதும் ஆச்சாரியார், பாரதமாதாவை வெட்டும் கதையைத்தான் பிதற்றினார். அவரது பிரசாரம், அவரது சீடர்களிடையே பேதமையையும் ஆணவத்தையும் வெறியையும் வளர்த்தது. இன்று ஆச்சாரியாருக்குப் பாகிஸ்தான் உண்மையான விஷயமாகத் தெரிகிறதாம்! ஆனால் இதுவாவது நிலைக்குமா என்றால், இல்லை, மீண்டும் பாகிஸ்தான் வெறும் அபிப்பிராயமாக மாறும்போது இவர் பாகிஸ்தான் கெட்டது என்று கூறும் நிலைமைக்கும் மாறிவிடுவாராம். எவ்வளவு மமதை! இவர் கூறுவதே வேதம், காட்டுவதே வழி, தீட்டுவதே திட்டம், எந்தெந்த நேரத்திற்கு எப்படி எப்படித் தோன்றுகிறதோ அவ்விதம் மாறுவார், மொழிவார், அதனையே மக்கள் கொள்ளவேண்டுமாம்! ஜார்கூட இங்ஙனம் கூறினானென்று சரிதம் சாற்றக்காணோம்.

காலையிலே நான் சாது, மாலையிலே சூரன், மீண்டும் பொழுது விடிந்ததும் சாது என்று கூறினானாம் குடியன். போதைக் கேற்ற போக்கு அவனுக்கு! அதுபோல் ஆச்சாரியார், தமக்குப் பதவி வேட்கை ஏற்படும்போது பாகிஸ்தானை ஆதரித்துப் பேசுவார், அந்த விடாய் தீர்ந்ததும், பாகிஸ்தானைப் பழிப்பார் என்றே தோன்றுகிறது.

ஆச்சாரியார், இதுபோல், எதற்கும் கட்டுப்படமாட்டார், தமது கருத்தையேகூட அவர் கவைக்கு உபயோகிக்கத் துணைகொள்வாரே யன்றி கருத்தைக் கடைப்பிடித்தே நடப்பார் என்றும் கூறமுடியாது.

திருச்சி தேவரை டாக்டர் ராஜன் முறியடித்தபோது, டாக்டர் ராஜனைக் கண்டித்த அதே ஆச்சாரியார், பதவியில் அமரும் சமயம் வந்தபோது அதே டாக்டர் ராஜனுக்கு மந்திரிவேலையை அளித்தார். அவரது மனம் அவ்வளவு வளையும் பக்குவம் பெற்றிருக்கிறது.

சட்டசபைப் பிரவேசமே கூடாது என்று சண்டமாருதப் பிரசாரம் புரிந்தவர், தாமும் தமது சகாக்களும் சட்டசபை நுழையமுடியும் என்று தெரிந்ததும், புது வேடம் புனையவில்லையா!

எந்த வெள்ளையரை மூட்டை முடிச்சுடன் விரட்டப் போவதாகக் கூறினாரோ, அவர்களையே, தமது பதவியை நிலை நிறுத்திக் கொள்வதற்காக, “வெள்ளையர் குரோட்டன்ஸ், குளிர்ந்த நீர் தெளித்தவண்ணம் இருக்கவேண்டும்” என்று கூறவில்லையா! எர்ஸ்க்கைன் பிரபுவின் பிரியத்தைப் பெறவில்லையா! தமது காரியம் பலிக்க, எதையும் செய்யவே ஆச்சாரியார் எப்போதும் தயாராக இருந்தார். இது அவரது சொந்த, தனிப்பட்ட இயல்பு அல்ல! இன இயல்பு! இதை மறப்போர், உண்மையை உணரார்!

பாகிஸ்தான் பிரச்னையை, காலநெருக்கடியுடன் சம்பந்தப்படுத்தி மட்டுமே பேசிவருகிறார் ஆச்சாரியார். இதிலேதான் ஆரிய சூட்சி ஆழப்புதைந்திருக்கிறது.

“ஜப்பானியரால் நாட்டுக்கு ஆபத்து நெருங்குகிறது. இந்த நேரத்திலே நாட்டிலே தேசீய சர்க்கார் வேண்டும். அதுபெற, லீகுடன் சமரசம் தேவை, லீகுடன் சமரசம்பெற, அது கோரும் பாகிஸ்தானை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும்” என்று மொழிகிறார் சாணக்கிய சந்ததியார்.

அவர் பாகிஸ்தானைவிட, காலநெருக்கடி பற்றியே அதிகமாக வற்புறுத்திவருவதன் கருத்தை ஆராய்ந்து நோக்காது அவசர ஆனந்தமடைவோர் பின்னர் கைபிசைந்துகொள்ள நேரிடும்.

ஏகாதசி விரதமிருப்பது துவாதசி விருந்துண்ணவே, ஏகபத்னி

விரதமிருப்பது குடும்ப பாரத்தைப் பெருக்காதிருக்கவே என்று ஆரிய சிகாமணிகள் வியாக்யானம் கூறுவர். அதுபோல், பாகிஸ்தானை ஒப்புக்கொள்வதாகக் கூறுவது பரிபாலனத்தைப் பெறவேயாகும், என்று ஆச்சாரியார் எண்ணுவார்.

தேசிய சர்க்கார் அமைத்து ஆண்டுவிட்டு, போர் முடிந்து புது அரசியல், வகுக்குங்காலை, பழையபடி பாகிஸ்தான் விஷயமாகப் பிரச்சனை கிளம்பியதும், காங்கிரசும் லீகும் மோதிக்கொள்ள நேரிட்டால், ஆச்சாரியார், அந்த நேரத்திலே, பாகிஸ்தானை எதிர்க்கத் தொடங்குவார். அவருக்கு அந்தத் துணிவு உண்டு.

இத்தனை நாளாக நாம் ஒன்றுகூடி ஆண்டுகொண்டு வந்தோமே" அதுபோல் இனியும் இருப்போம், பாகிஸ்தான் வேண்டாம். "மக்கள் பாகிஸ்தானை விரும்பவில்லை" நான் நெருக்கடியான நேரத்திலே வேதனைகூடாதென்பதற்காகப் பாகிஸ்தான் உரிமையை ஒப்புக்கொண்டேன். பாகிஸ்தான் கேட்கும் உரிமை உண்டென்பதை ஒப்புக்கொண்டேனேயன்றி பாகிஸ்தான் சரியானது என்று நான் ஒருபோதும் சொன்னதில்லையே" என்று கூறுவார். அதற்குத் தமது பழைய பேச்சை எடுத்துப் புதுவியாக்யானம் கூறிக்காட்டுவார், பாரதமாதாவின் படம் தீட்டுவார்!

உண்மையில் அவர் உளம்நிறைந்த அன்பும் தூய்மையும் கொண்டவரெனில், பாகிஸ்தான் திராவிடஸ்தான் கோரிக்கைகளை நியாயமானது என்று கூறவேண்டும், காலத்தின் நெருக்கடிபற்றியோ, தேசீய சர்க்கார் அமைப்பது பற்றியோ இதில் கலப்பது கூடாது. பிரிவினைத்திட்டம், காலம், அமைதியாக இருந்தபோதே பிறந்தது; போர்க்குழவியல்ல!

காலத்தின் நெருக்கடியைத் தீர்த்து எதிரியை முறியடிக்க இந்த வேதியர் தேவை என்று நாம் கருதவில்லை. டாங்கி, பீரங்கி, குண்டு, தளவாடங்கள், காலத்தின் போக்கை மாற்றியே தீரும், குட்டிக் கதைகள் தேவையில்லை. தேசிய சர்க்கார் என்பது விமானப்படையா, தரைப்படையா, கப்பற்படையா? இல்லை, பதவிப்படை! அதைக்கொண்டு எதிரியை விரட்டமுடியாது. அது இருந்தும் பிரான்சும் பிறவும் வீழ்ந்தன. போர்நிலைமை என்ன?

ரஷியகளத்திலே, ஜெர்மானியரின் திட்டம் குலைந்துவிட்டது. ரணகளச்சூரர் ரோமல் ஆப்பிரிக்கப்

பாலைவனத்திலே, திட்டம் தகர்ந்து திணருகிறார். சீனர்கள் இரத்த ஆற்றில் நீந்தி, ஜப்பானியப் பிணக்குவியலைப் பெருக்குகின்றனர். ஜெர்மனிமீதோ ஆயிரம் பிரிட்டிஷ் விமானங்கள் குண்டு வீசுகின்றன. சொலோன் நகரிலே கிளம்பிய ஜ்வாலை, ஹாலந்திலே தெரிந்ததாம். ஒரேநாள் குண்டுவீச்சு அங்கு, பல இலட்சம் ஜெர்மானியர், வேறு பட்டினங்களுக்கு ஓடுகின்றனர். எசென் மீதும் 1000 விமானங்கள் தாக்கின. இவையத்தனையும் பிரிட்டனிலேயே செய்யப்பட்ட விமானங்கள். இந்தப்படையுடன் அமெரிக்கப்படையும் சேர்ந்தால், நிலைமை என்ன ஆகும்! ஜெர்மனியின் கதி இதுவென்றால், ஜப்பானின் ஜம்பம் எத்தனைநாள் செல்லும். இலங்கை இருப்புக்கோட்டையாகி வருகிறது. அங்கிருந்து, பிரிட்டிஷார் ஜப்பானை எதிர்த்துத் தாக்கத் தொடங்கி, அந்தமானைப்பிடித்து, மலேயாவை மீட்டு, பர்மாவைப்பிடித்து, ஜப்பானியரை விரட்டியடிக்கப் போகின்றனர். இதற்குள் டோக்கியோ தூளாகும்படி அமெரிக்க விமானங்கள் குண்டுவீசும். இந்தக்கிலி கொண்டே, ஜப்பான் அலாஸ்காவிலே அமெரிக்க விமான தளத்தைத் தாக்கிற்று.

ரஷியக்களத்திலே பிணம் புதைக்கும் வேலை, ஜெர்மனியிலே ஏ.ஆர்.பி. வேலை, பிரான்சிலே புரட்சி வீரர்களிடமிருந்து தப்பிப் பிழைக்கும் வேலை, நார்வேயில் படை எடுப்பைத் தடுக்க அரண் அமைக்கும் வேலை, லிபியாவிலே தப்பி ஓட மார்க்கம் தேடும் வேலை, இவைகளே ஜெர்மனியின் இப்போதைய வேலைகள்!

இந்நிலையில், போர் என்ற பயங்காட்டி புது உறவு தேடி, பின்னர் அவர்களைக் கைவிட்டுவிடும் கள்ளக்கருத்துடன் ஆச்சாரியார் உலவுவதுகூடாது என்போம். உண்மையிலேயே பிரிவினைத் திட்டம் தேவை என்பதை அவர் ஒப்புக்கொண்டால், அதற்கான முயற்சிக்கு யாவரும் ஒரே முகாமில் கூடுவோம்! ஆச்சாரியார் அதற்குச் சம்மதிக்கிறாரா, அன்றி கலியாணத் தரகர்போல், ஒரு சொல் இரு பொருள் அமையும் மொழிபேசி காலந்தள்ள போகிறாரா என்று கேட்கிறோம்.

வேட்டையாடி களைத்து, இரத்தந் தோய்ந்த வாயுடன் விளங்கும் வேங்கைபோல், கருவிழியின் நீரும், மையும் கலந்து கண்ணாடிக்கன்னத்தில், உண்டாக்கிய கரையும், புரண்டுகிடந்த தால், சுருண்டுகிடந்த கூந்தலும், கோபமும் சோகமும் கூத்தாடியதால் பொழிந்த வியர்வையும் கொண்டு, கைகேயி

காணப் பட்டாள். அவளால் வீழ்த்தப்பட்ட வேந்தன், பஞ்சணைக்கருகே தரையிலே படுத்துக்கிடந்தான். நரையுந் திரையும் தெரியாதவிதமாக ஆனந்த வாழ்வு வாழ்ந்த தசரதன், கண்களில் நீர்புரள, மேல்மூச்சு வாங்கக் கீழே உருண்டிருந்தபோது, மந்திரி நுழைந்தார். மன்னனைக் கண்டார். “மயக்கமோ!” என்றார். “ஆம், சற்று சோகமும்” என்றாள் மதுரமொழி மாதரசி. பின்னர் வரவோ? என்று கேட்டான் மந்திரி. “வேண்டாம், மன்னன் ஆணையை நானே மொழிவேன், இராமன் 14 ஆண்டு காடேகட்டும், பரதன் முடி சூடட்டும் இதுவே சக்கரவர்த்தியின் கட்டளை” என்று சாற்றினாள் கேகயன் குமரி! இடிகேட்ட நாகமென்றானான் மந்திரி!

ஆரிய வீரனின் காதையாகிய இராமயணத்திலே இக்கட்டம் மந்தரையின் கலகம், கைகேயினுடைய மனமாற்றம், தசரதன் திகைப்பு, பட்ட மறுப்பு என்ற ரசங்களுடன் விளங்குவதைப் புராணீகர்கள் உரைத்து, உரைத்து அலுப்புதீர உருசியுள்ள பாலைப் பருகி, மேலும் பேசுவர் “இராமன் மரவுரி தரித்தான், சீதையும் புறப்பட்டாள், இலட்சுமணன் இங்கு இனி ஏன் நான் இருப்பேன் என்றான், மூவரும், காடேகினர்” என்று முடிப்பார். மக்கள் கண் துடைப்பர்!

“அந்த மந்திரி ஒரு மதியிலி!” என்றுரைப்பார் ஆச்சாரியார், எவரேனும் இந்தக் கட்டத்தைப்பற்றி அவரது கருத்து என்ன என்று கேட்பின்.

உண்மையில், சுமந்திரருக்குப் பதிலாக அன்பர் ஆச்சாரியார், கைகேயியின் பள்ளியறை சென்றிருப்பின் வேந்தன் விம்முவதைக் கண்டு வேல்விழியாள் விளம்பியதைக் கேட்டு, என்ன செய்திருப்பார் என்று எண்ணுகிறீர்கள்? சுமத்திரன்போல், இராமனைக் காடேற்றும் வேலையை விரைவில் செய்தா இருப்பார்! இல்லை! இல்லை!

“கேகய குமாரி! மெச்சினேன் உன்மதியை. பாராளும் திறன் படைத்தோன் பரதனே” என்றுரைப்பார்.

“மந்திரியாரே, மகிழ்ச்சி கொண்டேன். மன்னர், இதனை மறுத்து மெத்த வாதாடினார்” என்று கைகேயி கூறுவாள். “அன்பு, அவருக்குக் கருத்தை மறைத்திடும் திரையாயிற்று” என்பார் ஆச்சாரியார், சுமந்திரர் ஸ்தானத்திலே இருந்திருப்பின்.

“மன்னனை நான் தேற்றுவேன், மகாராணி தங்களுக்குச் சிரமம் வேண்டாம். மலர்ச்சோலைக்குச் சென்று உலவுங்கள் மனநிம்மதி ஏற்படும்” என்று கூறி, கைகேயியை அனுப்பிவிட்டு, தசரதனைத்தூக்கி நிறுத்தி, தலையை உயர்த்தி “மன்னா! மனவேதனையை விடும். கேகயன் மகளின் புத்திகூர்மை உமது ஆவியை அழிக்குமென்று அஞ்சாதீர். நான் இருக்கிறேன்.” என்று கூறுவார். “நீ இருக்கிறாயா? மிக நன்று. இராமன் போய், இங்கு எவர் இருந்தாலென்ன, இலாதொழியிலென்ன, நானே இருப்பேனோ இறப்பேனோ” என்று மன்னன் அழ, மந்திரி புன்சிரிப்புடன், மதியின் வழிசென்று மாதின் சதியை வெல்வோம். மன்னா கவலையுறாதே, பரதனே மன்னன் என்று புகன்றுவிடு. இராமன் காடு ஏகுவான் என்றும் கூறிவிடு. பரதனுக்குப் பட்டம்சூட்ட, முகூர்த்தம் குறிக்கவரும் முனிவரிடம் நான்பேசி பரதன் முடிதரித்தால், மண்டை ஆயிரம் சுக்கலாக வெடித்துவிடும் என்றோர் கிருஹதோஷமிருப்பதாகக் கூறச் செய்வேன். மகன் பிழைத்தால் போதும் மணிமுடி வேண்டாமென்று மான்விழியாள் கதறுவாள். வேண்டாம் வரம்! வேண்டாம் அரசு! என்று அலறுவாள்! என்று ஆச்சாரியார் யோசனை கூறுவார். “பெரும் புளுகு பேசுவதோ” என்று பேரரசன் கேட்பின் நீரோ கூறப்போகிறீர், அதற்கோர் பேர் வழியை அடியேனால் கொண்டுவர முடியும். புளுகியதற்குப் பின்னர் பரிகாரமும் தேடித் தருவேன் “அவனுக்கும்” என்று கூறி இராமாயணத்தின் போக்கையே மாற்றிவிட்டிருப்பார்.

ஆம்! ஆச்சாரியார் இதுபோது, அரசியலிலே நடத்தும் வியாக்யானங்கள் விளக்கங்கள், ஆகியவைகளையும்... அவருடைய போக்கையும் காணுவோர், அவரது புத்தி தீட்சணியம் தசரதனுக்குப் பயன்படுவதற்கின்றிப் போய்விட்டதே என்றும் வருந்துவர்.

தற்போது அவர் பிரசாரம் செய்வதிலே காணப்படும் மொழிகள் விதவிதமான வியாக்யானங்களுக்கு ஏற்றதாக, வேளைக்கோர் பொருள் தருவதாகவே இருக்கக் காண்கிறோம். திட்டமாக, தெளிவாக, பேச மறுக்கிறார். தேனையும் வேம்பின் ரசத்தையும் கலந்து குழம்பாக்குகிறார்.

7.6.1942

எந்த ‘ஜீ’யும் நமக்கு வேண்டாம்

“ஆகா! இதென்ன சோதி! கண்கூசுகிறதே! தலை சுழலுகிறதே! வானவீதி பூராவும் ஒளிமயமாகி விட்டதே, என்னால் இதைக்கண்டு தாங்கவும் முடியவில்லையே1 ஆ! ஆகா!”

டமாஸ்கஸ் நகருக்கருகே சென்று கொண்டிருந்த யூதர் சால். திடீரெனத் தோன்றிய வோர் சோதியைக் கண்டு, இங்ஙனம் கூவினார், கூவிக்கொண்டே உடல் பதறநின்றார், பதறியவரின் கண்கள் சுழன்றன மயக்க முற்றார், மண்ணில்புரண்டார், “உண்மை! உணர்ந்தேன்! உயர்ந்தேன்!” என்றுரைப்பவர் போல், முகமலர்ச்சி கொண்டார். செவியிலே, வானொலி கேட்கிறது ஏசுவின் விசுவாசிகளை, அவிவேகிகள்” என்று தூற்றி, அவர்களை அழித்தொழிக்கக் கங்கணங்கட்டிக் கொண்டிருந்த சால், டமாஸ்கஸ் நகரருகே, திடீரென ஓர் சோதியைக் கண்டாரென்றும், ஏசுவின் மகிமையைச் சோதியைக் கண்டாரென்றும், ஏசுவின் மகிமை கடவுள் அவருக்கு எடுத்துரைத்தார் என்றும், யூதர் அக்கணமே ஏசுவின் இணையடி தொழுவேன் என்று இயம்பினாரெனவும், உடனே டமாஸ்கஸ நகர் சென்று ஏசுவின் மார்க்கத்தைத் தழுவி, சால் என்ற பெயரை மாற்றிக்ஙண்டு, பால், என்ற புதுப்பெர் சூட்டப்பெற்று, பாரினோருக்கு கிருஸ்தவ மார்க்கத்தை போதிக்கும் பணியை மேற்கொண்டாரென்றும் கிருஸ்தவ வேதம்கூறும். மேனாட்டுப் பகுத்தறிவாகளர்கள், சோதிதோன்றியது, பரவசமானது, ஆண்டவன் மொழிகேட்து ஆகியவைகளை, வேறுவிதமாக விளக்கியுள்ளனர். பலமை படைத்த சால் என்நபடி யூதக்கெள்கையின் பயனாக ஏசுவை இகழ்ந்துரைத்து வாழ்ந்தார். டமாஸ்கஸ் போகையிலே ஓர் நாள் ஏதோ ஓர்விதவலிகண்டது. அதன்பயனாக அவருடைய சிந்தனைக் கருவிலே, மாறிவிட்டது. யார்மீது துவேஷங்ஙகட்ஙரோ, அதே ஏசுவின்மீது அவருக்கு அன்பு உண்டாயிற்-று. அதன்பயனாக அவசிந்தனைக் கருவியே, மாறிவிட்டது. யார்மீது துவேஷங்ககொண்டாரோ, அதே ஏசுவின்மீது அவருக்கு அன்பு உண்டாயிற்று. உடல் குலுங்கின்று, உள்ளமும் குலுங்கிற்று, உள்ளத்திலே ஊறிக்கிடந்த சோதி கண்டார் என்றுரைப்பதிலே அற்புதமில்லை. வின்னிலே பல விசித்திரங்கள் இயற்கைக் காரணமாக உண்டாகின்றன. அத்தகையது, உளிதோன்றி அதை மதத்தோடு பிணைத்தனர், என்றுரைப்பார்.

கால், பால், ஆனது, கருஸ்தவ மார்க்கம் கதிõ விட்டுப் பரவ உதவியாற்று. மனமாற்றம், மார்க்கத் துறையில் இதுபோல் பலப்பல ஏற்பட்டதுண்டு. சில மனமாற்றங்கள், மாறினோருக்கு மகத்தான இலாபத்øத் தந்ததுண்டு, சிலருக்கக் கஷ்டநஷ்டம் ஏற்பட்டதுண்டு. சால் என்ற யூகர் பால் ஆக மாறாதிருந்திருப்பின், கிறிஸ்தவ மார்க்கத்துக்கும், உலகுக்கும் எவ்வளவோ நஷ்டமன்றோ! இத்தகைய மாற்றங்கள் உலகத்தின் போக்கையே மாற்றிவிட்டது. சால், பாலாக மாறினது, சமணநிபுணர் சைவ நாயன்மாரானது, காளமேகம் வைணவத்திற்குச் சென்றது, திரை கடலோடித் திரவியம் தேடிய வியாபாரக் கோமான் பட்டினத்தடிகளாகி இனிக்கும் பேய்க் கரும்புக்குத் தேடி அலைந்தது, மந்திரிவேலையைத்துறந்து எங்கும் பிரகாசமாய் இருப்பவர் எவர்? என்று கேட்டுக்கொண்டு தாயுமானார் வெளிப்போந்தது, துடுக்குக் குணமுள்ளவர் விவேகாநன்தரானது, ஆகிய இத்தகைய மாறுதல்களை மகத்தான சம்பவங்களான்றோ!

அரலங் குமாரரான சித்தார்த்தர், புத்தராகமாறினது, உலகினுக்கு எவ்வவ்ளவோ நன்மை பயத்ததன்றோ” என்று தோழரொருவர் மாலைப் போதினிலே என்னிடம் மொழிந்தார். அவரது எண்ணம், பால், புத்தர், நாவுக்கரசர், தாயுமானார் ஆகியவர்கமீது பயந்ததற்குக் காரணம், நான் ஆச்சரியார், மாற்றத்தைக் குறித்து அவரிடம்பேசியதேயாகும். ஆச்சாரியாரின் மனமாற்றம், மகத்தான ஒரு சம்பவம், வரவேற்க வேண்டிய விஷயம், ஆதரிக்க வேண்டியதே என்று தோழர் வாதிட்டார். எனக்கென்ன கரும்புத்தின்னக் கூலியாவேண்டும்! ஆச்சாரியார், மனம்மாறி, திராவிட நாட்டுப் பிரிவினைக்கு இசைந்தால், பழமும் நழுவிப் பாலில், விழுந்தது என்று பரமானந்த மடைவேன். ஆனால், ஆச்சாரியார் மாறி இருக்கிறார் என்பது உண்மையே யொழிய. அது மனமாற்றமா, வேடமாற்றமா, என்பதிலேதான் சூட்சமம் இருக்கிறது. எனது தோழர் எடுத்துக்

காட்டிய மேற்கொள்ள உண்மையான மன ஊற்றங்களைக் காட்டுவனவாகும்! அதே ரகமானதுதானா,

ஆச்சாரியாருடையது? புத்தர், சித்தார்த்தராகிவிட வில்லை, பட்டினத்தடிகள் பட்டத்தரராகி விடவில்லை.

“இந்தத்தடவை அவர் பாகிஸ்தானைப் பற்றியும் திராவிடநாட்டுப் பிரிவினையைப் பற்றியும் பேசிக் கொண்டுவருவது, நமக்குச் சாதகமாக இல்லையோ” என்று கேட்டார் நண்பர்.

“சாதகந்தான், சந்தேகமில்லை, கொண்டையை வீசி விரால் இழுக்கிறார் போலிருக்கிறதே நண்பா. அவருடைய பேச்சு, வேதம், உபநிஷத்போல், விதவிதமான வியாக்யானத்துக்கு இடந்தருவதாகவன்றோ இருக்கிறது” என்று நான் கேட்டேன்.

“எது எப்படியிருந்தாலும், ஆச்சாரியாரின் மன மாற்றம் உண்மையோ, இல்லையோ, அவர் இப்போதிருப்பதைப்போல் என்றும் இருப்பாரோ அன்றி வேறுவிதமாக மாறிவிடுவாரோ, வாயாரக்கூறி மனமாற எண்ணாதிருக்கிறாரோ, அன்றி உள்ளும் புறமும் ஒத்து உரைக்கிறாரோ, அவைகள் ஒருபுறம் கிடக்கிட்டும். இப்போது அவர்செய்யும் பிரச்சாரம், நமக்கு ஆதரவுதானே!” என்றேன் நான்.

இரண்டு “ஜீ”க்களுக்கும் சண்டை! ஒருவரையொருவர் “சீ” சொல்லிக்கொள்ளவில்லை, “தூ” என்று உமிழ்ந்துõõகள்ள வில்லை. மற்றது நடந்துவிட்டது. இரண்டு ஆசிரமங்களிலும், ஆயாசம் மேலிட்டு விட்டது. குருவின் புத்தி கோணலாகி விட்டதென்று பிரதம சீடர் கூறுகிறார். பிரதம சீடருக்குச் சித்த சுவாதீனமில்லையென்று குரு கூறுகிறார். ஆசிரமத்திலே, இருவரையும் வாழ்த்தி வணங்கி வரங்கேட்டு நின்ற திருக்கூட்டம், திணறுகிறது. எந்த “ஜீ” சொல்வது சரி, எந்த “ஜீ”யின் பக்கம் சேருவது என்று தெரியாது திணறுகிறார்கள். தோழனே! இதைக் காணும் போதுதான் எனக்குக் கைகொட்டி நகைக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

எங்களைப் பிரிக்க முடியுமா? எமக்கள் பிளவுவருமா? நாங்கள் ஒன்றுபட்ட கருத்துடையவர்களாயிற்றே, என்று ஜம்பமாகப் பேசிக்கொண்ட கூட்டம் அன்பும், பாரதமாதாவினிடம் கொண்ட பக்தியும் வெள்ளையரை விரட்டவேண்டுமென்ற வைராக்கியமும் எங்களைப் பிணைத்து வைத்திருக்கிறது என்று பெருமை

பேசிக்கொண்ட கூட்டம், காரணமின்றி, இதோசர். சிகந்தர், ஜின்னாவைவிட்டுப் பிரிந்துவிடப் போகிறார். இன்னொரு பிரமுகர் லீகிலிருந்து பிரிந்துவிடுகிறார், என்று பேசியும் எழுதியும் பேதத்தை விதைந்து லீக்கைப் பிளந்துவிட முயற்சித்த கூட்டம், இன்று இருக்கும் நிலைமையைக் காணும்போதே எனக்கு மிகச்சிரிப்பாகத்தான் இருக்கிறது. அதிலும் எப்படிப்பட்ட நேரத்திலே இத்தகைய பிளவு! நாட்டுக்கும் உலகிக்கும் நெருக்கடி ஏற்பட்டிருக்கும் நேர்த்தில் யாராருக்குள் புளவு? அவல் காந்திக்கும் கேட்டா காந்திக்கும் பிளவு? அசல் காந்திக்கும் கேட்டா காந்திக்கும் பிளவு! எவ்வளவு பேதம் அவர்களுக்குள் வெண்ணெய்க்கும் சுண்ணாம்புக்கும் உள்ள பேதம் என்று காந்தியார் கூறுகிறார். இத்தகைய அவலட்சணக் காட்சியைக் இன்னமும் கட்டிஅழும் இங்கிதமில்லாதவர்களே, வாருங்கள் வெளியே, என்று அழைக்கிறேன்.

கூரையில்லா வீட்டிலே குடி இருக்கலாமோ குலராமன் தூதுவனிடம் கொஞ்சுவதோ, வேண்டாமப்பா, இவர்களின் உறவையே நீக்கிவிடு, தலைமுழுகி விட்டு, தமிழர் கட்சியிலேவந்து சேர், என்று தோழரை நான் அழைக்கிறேன்.

ஆச்சாரியார், இன்னமும், காங்கிரஸ்காரராக இருந்துகொண்டு, காங்கிரஸ்வாதிகளிடையே காங்கரஸ் இன்னவிதமாக நடந்துகொள்ள வேண்டுமென்று கூறிக்கொண்டு வருகிறாரேயன்றி, காங்கிரசை எதிர்த்தொழிக்க புது அமைப்பு ஏற்படுத்தும் நோக்கங்கொண்டாரில்லை. அத்தகைய புது அமைப்பு உண்டாக்கினால் அது போது நாம், ஆச்சாரியாருக்குத் தளவாடம் தருவோம், படை அளிப்போம், தோளோடு, தோள் நேரநிற்போம். இதற்கு ஆச்சாரியார் தயாரா? என்பதை நான் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

வடக்கே தோழர் M.N. ராய் காங்கிரசை எதிர்த்தோர் கட்சி அமைத்துள்ளனர். அதற்குப் பெரியோர் உபதலைவர்! ஜனாப் ஜின்னா, காங்கிரசைத் தாக்குகிறார், அவருடன் நாம் தோழமை கொண்டுள்ளோம். டாக்டர் அம்பேத்காரிடமும் அதுபோன்றே.

ஆச்சாரியாரின் நிலைமை இது போன்றதல்ல!

நட்புவேறு, கூட்டுவேறு! இருவிதமான, முரண்படும் கருத்துக்கொண்டோரும் நட்புடன் இருக்கமுடியும், ஆனால் அவர்கள் கூட்டாகவேலை செய்ய முடியாது. இரு இயல்பினர், ஒரேசமயத்தில், ஒருநோக்கங் கொண்டிருக்க வேண்டிய அவசியம் நேரிடும்போது அவர்களுக்குள் தொடர்பு உண்டாகிறது, தொடர்பு, நட்பல்ல, கூட்டுமல்ல, தனியானது. தொடர்பு நிலைத்தால் நட்பாகும். கூட்டு, என்றால், இருவரும் இன்ன காரியத்துக்காக ஒன்ற சேர்ந்துழைக்கவேண்டும் என்ற ஏற்பாட்டின் மீது இருவர் ஒன்றாகி, தமது பலத்தையும் திறனையும் கூட்டாகக்கி வேலைசெய்வது. எனவே நட்பு, தொடர்பு, கூட்டு, எனும் மூன்றனுள், பெரியாருக்கும் ஆச்சாரியாருக்கும் நட்பு இருக்கக்காண்கிறோம், ஆனால் இருதலைவர்களின் கட்சிகளிடையேயும் கூட்டோ, தொடர்போ ஏற்படவேண்டுமானால், ஆச்சாரியார். அச்சத்தைவிடுத்து, காங்கிரசுக்கு எதிரிடையான முன்னணியைத் துவக்கவேண்டும், அதிலே, லீகின் திட்டம், நீதிக்கட்சித் திட்டம், அமைதல்வேண்டும். பிறகு, கூட்டாக வேலைசெய்து கோரும் இலட்சியத்தை அடைய முடியும், கிருபளானிகள் சீறி, ஜவஹர்கள் குதித்து, காந்தியார்கள் பதைத்து எழுந்தாலும் கவலையில்லை. ஆச்சாரியார், இதனை விடுத்து, இன்றோர் "ஜீ" க்களின் போரை நடத்துவருவது, பயன் தராது! ஆசிரமங்களுக்குள் அமளி நடக்கிறதென்றால், நான்வேடிக்கை பார்க்காமல் வேறென்னசெய்வது! ஆச்சாரியார், திடீரென்று, காந்திபக்தராக இருந்தவர் மாறிவிட்டார் என்றுரைக்கும் தோழரை' நான் கேட்கிறேன். மாற்றம் என்ன விதமானது, பச்சை ஓணான், கலரை மாற்றிக் காட்டுகிறதே அடிக்கடி. அது போன்றதா, அல்லது சித்தார்த்தர் புத்தாரானாரே, அதைப் போன்றதா! காந்திஜீ, ராஜாஜீ, எனும் இரண்டு ஜீக்களும், ஆரியத்துக்கு உழைப்பவர்களே. இருவரின் போர்த் திட்டங்

களிலே மாறுபாடுகள் காணப்படலாம். நோக்கத்தில் அல்ல! ஆகவே நமக்கு இந்த இரண்டு ஜீக்களில், எந்த ஜீயும் வேண்டாம்.
(திராவிடநாடு - 14.6.1942)

கடல் கடக்கும் கண்கள்

“இடது காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமே!” என்று பாடி ஆடிடும் அணங்கு களுக்குக் குறைவா! அன்று அம்பலத்தில் அரன் ஆடினாராம் இடதுகாலைத் தூக்கி நின்று. இருந்தாலும் இந்தப் புதுக் குட்டியின் திறமை, அவருக்கு வருமா? பார், அவள் கண்கள் சுழல்வதை! கவனி, அந்தக் காலணி சதங்கை யின் ஓசையை! இடை, பிடிதான், அதுவும் வளைகிறது பார்- என்று ஆடிடும் அணங்கின் அங்கவர்ணனைகளைக் கூறி ஆனந்திக்கும் ஆணழகர்களுக்குக் குறைவு உண்டா?

``மகா சன்னிதானம், உமது கலையின் நேர்த்தியைக் கண்டு களித்தார்கள்” என்று நீறு பூசிய தூதுவன் கூற, நெடுநாளையக் கனவு பலிக்கும் வேளை பிறந்ததென்று கருதி, ``பகவத் சங்கற்பம்! பெண்சிறிசு அனுபவமில்லை” என்று தூதின் நோக்கத்தை உணர்ந்து தாய் கூறிவிட்டு, மகளை நோக்க, மகள் முகமலர்ந்து நிற்க, ``இவ்வளவு இளமையிலே இத்தனை சௌந்தர வதியாயும், சுகசாரீரியாயும், சொர்ண பிம்பமே உருப்பெற்றெழுந்து வந்து சோபிதமாக, சுகானு பவத்தை ஆடிக் காட்டுவது போலவுமிருந்தது நடனம். மிக நேர்த்தி! என்று தூதுவன் கூறிவிட்டு, தோடுடைய செவியன் விடை ஏறிச் சென்றால், இந்த வைரக் கடுக்கண் அணிந்த காதார், மோட்டார் ஏறிக்கொண்டு, ``முடிந்தது காரியம்” என்று கருதிற் கொண்டு செல்வதும், செல்கையில், சுந்தரருக்குச் சிவனாரே தூது சென்றாரமே, இதிலே தவறு என்ன? அன்பே சிவம்! தம்பிரான் தயவே யோகம்! என்று கூறிடும் காட்சிக்கு குறைவா?

இவ்வளவும் எங்கே நடைபெறும் காட்சிகள்? சமஸ்தானாபதிகளின் அந்தப்புரங் களிலா? இல்லை. பசு, பதி, பாசம் எனும் பொருளுக்கு விளக்கமும், சத்துக்கும், சித்துக்கும் உள்ள போதனையும், அண்ட சரா சரத்துக்கும் அகண்ட பரிபூரணனந்தத்திற்குமுள்ள அரிய தொடர்புக்கான விளக்கமும், ‘ஓம்’ என்பதற்கு ஒன்பதாயிரம் பொருளும், ஓங்காரம், அகங்காரம், மமகாரம் என்பவைகளுக்கு எண்ணாயிரம் கருத்துரைகளும், தேவார திருவாசகப் பாராயண மும் நடைபெறும். பூலோக கைலாயமாம் சைவமடாலயங்களிலேயும், அதைச் சார்ந்த மிராசுகிராமங்களிலேயும், பக்திப் பண்ணை களிலே நடைபெறும் காட்சிகளாகும்! இன்றும் நடைபெறுகிறது, இளித்த வாயராய், ஏமாளிகளாய், மக்கள் உள்ளனர்.

திருக்கைலாய பரம்பரை ``ஸ்ரீலஸ்ரீ மகா சன்னிதானம்'' திருவாவடுதுறைத் தம்பிரான் திருவீதியில் உலவும் திருக்கோலத்திற்கு, திருவா வடுதுறை இராசரத்தினமென்ன, திருவெண்காடு சுப்பிரமணியமென்ன, வீருசாமி என்ன, திருவீழி மிழலையார்களென்ன, இத்தனை நாதஸ்வரங்கள், ஜமாக்களுடன்! பல்லக்கிலே அவர்! அவர்மீது ஆபரணச் சுமை! அந்தச் சுந்தரச் சுமை தாங்கியின் சோபிதத்தைக் கண்டு சொக்கிடும் கூட்டமோ ஏராளம்! வைரத்தின் டாலிலே, பதக்கத் தின் பளபளப்பிலே, பட்டாடையின் பதத்திலே, பாமரர் மயங்காதிருக்க முடியுமா! மகாசன்னி தானத்தின் கடைக்கண் பார்வை வீழ்ந்தாலும் போதுமே கனகாபிஷேகங்கிடைக்குமே என்று கருதும் பேர்வழிகளுக்குப் பஞ்சமா! இத்தகைய கோலாகலக் காட்சிகள் மதத்தின் பெயரால் நடத்தப்பட்டு வருகின்றன. ஜீயர்கள் மகந்துகள், தம்பிரான்கள், ஆச்சார்ய புருஷாள் ஆகியோர் கள், சீமான்கள் சிற்றரசர்களுக்கு மேலாக ஆதிக்கம் செலுத்தி, நஞ்சை புஞ்சை, நகை நட்டு, பேழை பணம், தோட்டம் மடம், பல்லக்கு பரிவாரம், பட்டாடை, கொட்டுமுழக்கு, ரதம் வாகனம், சொர்ணாபிஷேகமும், பெற்று வாழும் இந்த சுரண்டல்காரர்களைக் காணவோ, கண்டிக் கவோ, இந்த முறை போகவேண்டுமென்று கூறவோ, மனமோ, நேரமோ இல்லாதவர்கள், மற்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு, பாசிச எதிர்ப்பு, வல்லரசு ஒழிப்பு, என்றெல்லாம் நடத்தும்போது, நமக்குச் சிரிப்பதா, சித்தஞ் சோர்வதா என்று தெரியவில்லை.

சோவியத் அன்பர்கள், பாசிச எதிர்ப்பாளர் கள், நாசிச ஒழிப்பாளர்கள் என்று நாமம் சூட்டிக் கொண்டு, தோழர்கள் மாநாடுகள் நடத்துந் தோறும், ``அந்தோ! கண்முன் காணப்படும் குப்பையைக் கொளுத்தாது. கடல் கடந்து செல்லத் தம் கருத்தை ஏவுகின்றனரே'' என்று எண்ணி நாம் ஏங்குகிறோம்.

தம்பிரான்கள் மீது நமக்குக் கோபமா! இல்லை! மகந்துக்கள் மீது துவேஷமா! இல்லை! அந்த முறை முறியாமுன்னம், மக்களின் வளைந்த முதுகு மட்டுமல்ல, குனிந்த உள்ளம் நிமிர மார்க்கமும் கிடையாது. இதனைச் செய்யத் செய்யாமுன்னம், வேறு ``எதிர்ப்புகள்'' ஏது பயனும் தரா.

அக்கிரமம், ஆபாசம் ஆகியவைகளின் இருப்பிடமாக, மதநிலையங்கள் உள்ளன வெனில், மதமயக்குற்றுக் கிடக்கும் மக்கள், மனத் தெளிவு பெறுவதேது.

சோவியத் அன்பர்களே! ஒன்று கூறுவோம் கேண்மின்! கடல் கடக்கும் கருத்தினோராக மட்டுமிராதீர், இங்கே உள்ள இழிவுகளைக் காண்மின், களையமுன் வருவீர், என்று கூறுகிறோம், அன்பு காரணமாக.

நமது மக்களிடம் புகுத்தப்பட்டுள்ள மதம், ஆபாசக் கதைகளுக்கு இருப்பிடம். மனிதாபி மானத்தை மாய்க்கும் படுகளம், குடி, கொடுமை, கொள்ளை ஆகியவற்றினுக்கு பயிற்சிக் கூடம், இத்தகைய குப்பையை மக்களிடையே விட்டு வைத்து, குன்றேறி நாம், ``மனித சுதந்திரம் சமத்துவம்'' என்றெல்லாம் பேசினால் பயன் ஏற்படுமா? நாலுதலைச் சாமியும், முக்கண் சாமியும், ஆயிரங்கண்ணனும், ஆனைமுகச் சாமியும், ஆளீவாய்ச் சாமியும், பருந்தேறுபவரும் பாவையரைத் தூக்கித் தலைமீது வைத்திருப்பவ ரும், ரிஷிபத்தினிகளிடம், ரசானுபவத்தை நாடி, நடுநிசியில் செல்பவரும், இத்யாதிதிருவுருவமும், திருக்கல்யாண குணங்களும் கொண்டு கடவுள் களை, மக்கள் `தொழ' வைத்துவிட்டு, `வீறு கொண்டெழுக! `தோள்தட்டி முன் வருக! முதலாளித்துவத்தை முறியடிமின்!' என்று கோஷமிட்டுக் காணப்போகும் பயன் என்ன?

சோவியத் அன்பர்கள் கூட்டத்திலே, வீர வாலிபர்கள் கூடுகின்றனர். மகிழ்ச்சிக்குரியதே, வாழ்க்கைப் பொறுப்பு வாட்டத்தைத் தராததால், வளையாத உள்ளமும், உடலும் பெற்று விளங்கி, எது எத்தகைய இடையூறைத் தருமோ என்ற அச்சமும் தோன்றாத பருவத்தினர், நரம்பு முறுக்கேறி, இரத்தம் கொதித்து, தோள் துடித்து, ஆவேசம் எழப்பேசும் இயல்பினர், ஆனால், அத்தகையவர், கண்முன் இருக்கும் காரியத்தைக் கவனியாது வேறு விஷயங்களிலே மனதைச் செலுத்துவதால், முரட்டுப் பேச்சும் வறட்டு ஜம்பமும், நெறித்த புருவமும், நீட்டிய கரங்களும், கொண்டோராய், உரத்த குரலால், உறுமல் மொழியால், உலகையே திருத்தி அமைத்து விடக் கூடும் என்று எண்ணும், எடுப்பார் கைக் குழவிகளாகி விடுகின்றனர்! வாலிபம், வீரம், வல்லமை யாவும் விழலுக்குச் செல்லும் நீராகிறது, காலக் கழனியோ காய்ந்து கிடக்கிறது. அன்பர்களே, உமது ஆற்றலை, சமுதாயத்துச்

சாக்கடையை ஒழிக்கச் செலவிட முன் வாருங்கள்! சாதிபேதச் சனியனைத் தொலைக்கச் சாதி ஆணவத்தின் இடுப்பை முறிக்க வைதீகத் தின் விலாவை நொறுக்க, மூடமதியின் முதுகை முறிக்க, வஞ்சகரின் வாழ்க்கையைக் குலைக்க, கொடுங்கோன்மை யாளரைக் குப்புறக் கவிழ்க்க முனையுங்கள். அதற்கு உமது அறிவும், ஆற்றலும், அன்பும், வீரமும் பயன்படட்டும்! புத்துலக சிற்பிகளாவீர், என்று சோவியத் அன்பர் எனும் சுந்தரப் பெயர் தாங்கிடும் தோழர்களுக்குக் கூறுகிறோம். நாடு இன்று ரசாபாசத்தின் மடமாக, வல்லரசின் வெள்ளாட்டியாக இருப்பதற்கு, ஜார் மட்டுமல்ல காரணம், ரஸ்புட்டீனும்தான்!

தோழரே, இதை உணர்மின், உலகு குளிரும்! அவனுடைய கைகால்களிலே சேறு! உடலிலே முடை நாற்றம். தலையோ கள்ளிபூத்த காடு! முகமோ, சோகத்தின் பிம்பம். வயிறோ ஒட்டி உலர்ந்திருக்கிறது. கண்களோ மங்கிக் கிடக்கிறது, ஆடை கந்தல்! உழைத்து அலுத்து வீடு திரும்புகிறான். மாலை மணி ஆறு இருக்கும், இந்நாட்டு உழவன் என்ற உருவம் அது. அவன், மகாசன்னிதானத்தை வணங்குகிறான். மடைத் தனக் கதைகளை மதமெனக் கொண்டுழல்கிறான், ஆபாசக் கதைகளை நம்பி நலிகிறான், கொடுத்து வைத்தபடிதானே கிடைக்கும் என்று பேசுகிறான், அஞ்சி அஞ்சிச் சாகிறான். ஆமை போல் நடமாடுகிறான், ஆற்றுவார் தேற்றுவாரற்று அவதிப்படுகிறான், வேதனை எவ்வளவிருப் பினும், விடுதலை இங்கில்லை, அங்கே மேலே என்று அண்ணாந்து நோக்குகிறான் ஆகாயத்தை! அவனிடம் போயன்றோ சோவியத் சோபிதத் தைப் பற்றிப் பேசுகிறீர்! பலிக்குமா? யோசித்துப் பார்த்து ஆவன செய்யுங்கள் அன்பர்களே!

(திராவிடநாடு - 14.6.1942)

இரண்டு மூளைகள்!

இருப்பது இரண்டு மூளைகள்! அதிலே ஒன்று உருகிவிட்டது, மற்றொன்று குழம்பிவிட்டது!! நிலைமை எப்படி என்பதை விளக்கவேண்டுமோ!

காங்கிரசிலே "பிரதான புருஷர்கள்" "ஜீகள்," இருவர். ஒருவர் காந்தியார், மற்றொருவர் ஆச்சாரியார். முன்னவருக்கு மூளை உருகிவிட்டது, மற்றவருக்குக் குழம்பிவிட்டது. நாமல்ல கூறுவது. இருவரையும் ஏத்தி ஏத்தித் தொழுதுவந்து, இதுபோது எடை போட்டுப்பார்த்துத் திருச்செங்கோட்டாரைவிட வார்தாவாசியே கனமிக்கவர் என்று கண்டு அவர் காலடி தொழுவதே ஜென்ம சாபல்ய வழி என்று கருதும், ஏடு கூறுவதை நாம் எடுத்துரைத்தோம், புனைந்தோமில்லை.

"இந்திய விடுதலைக்காக மகாத்மாகாந்தி இரவும் பகலும் தம் மூளையை உருக்கிக் கொண்டிருக்கிறார்."

* * *

குழம்பியிருக்கும் அவருடைய (ஆச்சாரியாருடைய) நுண்ணறிவுக்கு இனித்தெளிவு கொடுக்கக் கூடியவை கீதையும் உபநிஷத்துக்களும் தான்."

18-6-42ல் பாரததேவி, தீட்டியுள்ள தலையங்கத்திலே காணக் கிடைக்கும் தங்கமொழிகள். காந்தியாருக்கு மூளை உருகிக்கிடக்கிறது! ஆச்சாரியாருக்குக் குழம்பிவிட்டது!!

பரிதாபத்தைப் பாரீர், இரு தலைவர்களுக்கு இக்கதி எனில், இதை எண்ணி எண்ணி ஏங்கும் தொண்டர்களின் துயரம், எப்படியிருக்கும்! அந்தோ அவர்கள் கதி என்ன! வார்தா முனிவர், "போர்" என்கிறார், ஆச்சாரியார், "அமைதி" என்கிறார். முன்னவர் கருத்துக்கு முற்றிலும் மாறான கருத்துரை காட்டுகிறார், பின்னவர். சம்பந்திகளின் சமர், நகைச்சுவைக்கு நல்லதோர் எடுத்துக் காட்டாகிவிட்டது.

காந்தியாரின் புதுத்திட்டம் வெளிவந்ததும் ஆச்சாரியார் அதன் மண்டைமீது ஓங்கி அடித்துவிட்டார். காந்தியார்மீது மட்டுமா அடிவிழுந்தது? காங்கிரசும் தப்பவில்லை!

“காங்கிரசின் ஒரு கோஷத்துக்காகப் பணிந்து பிரிட்டிஷார் இந்த தேசத்தைவிட்டு அகன்றுவிடுவார்களென்று தோன்றவில்லை.” என்று ஆச்சாரியார் கூறிவிட்டார். காங்கிரசின் குரலே இந்தியாவின் குரல் என்று கூவியவர்தான், என்றபோதிலும், நாட்டிலே உள்ள நிலைமையை இனியும் மறைத்துப் பயனில்லை என்பதை உணர்ந்து, காங்கிரசின் ஒரு கோஷம் கிளம்பிப் பயனில்லை என்று கூறிவிட்டார். ஆம்! இவரது கேளாகக்காதையே, நமது இந்தி எதிர்ப்புக்கோஷம் துளைத்தது, பண்டித ஜவஹரின் காதையும் லீக்முரசு குடைந்தது, இனி மறைத்தால் பயனில்லை!

பிரிட்டிஷார் வாபிசானால், அந்த ஒவ்வொரு அங்குல நிலமும் ஜப்பானியாரிடம் பிடிபடும் என்று ஆச்சாரியார் கூறுகிறார். உண்மை!

நெடுநாட்களுக்குப் பிறகு உதித்த இந்த விளக்கம், ஆச்சாரியாருக்கு நின்று நிலைக்கவேண்டுமென்பதே நமது அவா!

காந்தியாரின் கருத்துகளுக்கு இதுவரை செவிலித்தாயாக இருந்துவந்த ஆச்சாரியார், இப்போது காந்தியாரின் கருத்து தொட்டிலிருக்கையிலேயே அதனைத் தொடமாட்டேன் என்று கூறிவிட்டு, தூர விலகி விட்டார். தலைவர்களின் இந்தப்போக்கு, ‘பாரத தேவிக்குப் புலம்பும் நிலைமையை உண்டாக்கி விட்டதைக்காண நாம் ஆச்சரியப்படவில்லை. ‘தேவி’யின் துயர் விரைவில் துடைக்கப்படுமென்ற நம்பிக்கையும் நமக்கில்லை.

நிற்க, பொதுவாகக் காங்கிரசின் நிலைமை பரிதாபத்துக்கும் பரிகாசத்துக்கும் உரியதாக இருப்பதைக் கண்டும், அதில் இருந்து கொண்டுள்ள தோழர்கள் இனியேனும் “வாபசாகக் கூடாதா!” என்றுதான் நாம் கேட்கிறோம்!

தோழர் சுபாஷ் சந்திரபோஸ், காந்தியாரிடம் முரண்பட்டதும், ஆச்சாரியார், போஸின் படகு ஓட்டைப் படகு என்றுரைத்து அதிலே ஏறாதீர் என்று எச்சரித்தார். இப்போது, காந்தியாரின் படகு, ஓட்டைப்படகு என்றுரைக்கிறார்! வாசகம் அதுவல்லவெனினும், கருத்து அதுவே! ஆச்சாரியாரின் “படகோ,” அடியிலே ஆயிரம் ஓட்டை என்று காந்தீயர்கள் கூறுகின்றனர். இந்த இரண்டும் வேண்டாம் தோழர்களே!

சுயமரியாதைக் கொடி பறக்கும், நீதிக்கட்சியின் மரக்கலம், சண்டமாருதத்தையும் சமாளித்துக்கொண்டு சமதர்மபுரியை நோக்கிச் செல்கிறது, அதிலே வந்து சேருமின், என்று காங்கிரசிலே உள்ள தமிழரைக் கனிவுடன் அழைக்கிறோம்.

அரும்பு கோணிடினும் மணம் குன்றாதன்றோ! கரும்பு கோணிடினும், சுவை கோணுமோ! இரும்பு கோணியே யானையை அடக்கும் ஆயுதமாக மாறுகிறது. அதுபோல் நமது கட்சிவிரிந்து பரந்த நிலையில் இல்லை எனினும் அதுசூறும் நீதி, நிலைத்தே நிற்கும். நிதி குறைந்திடினும், நமது நீதி குறையாது. நீளப்புகழ் பரப்பி, நெடுமரத்தில் கொடிகட்டி, நிகர் இல்லை என்று நிகண்டு நீட்டிடினும், நீதிமறக்கும் கட்சி, நின்ற சுவர் மாரியில் சரிந்து வீழ்வதேபோல், சடுதியில் சாய்ந்தே தீரும். ஜாரின் கட்சி, எவ்வளவு பெரிய கோட்டை கட்டி, வைரத்தால் வாயலமைத்து, அதை எதிர்த்தெவரும் வராதபடி, சுற்றிலும் ஆத்தீகமெனும் ஆழிஅமைத்து மதக்குருமார்களெனும் முதலைகளை அதிலே வளர்த்து, கோட்டைமீது பரம்பரை எனும் கொடிமரத்திலே. படாடோபம் எனும் கொடியைப்பறக்கவிட்டு, பார்ப்போர் கண்கூசும் பளபளப்புடன், கேட்போர் செவி சிதறும் அட்டகாசத்துடன், ஆண்ட ஜார், பகல் பட்டினிகளால், பஞ்சைப் பனாதிகளால், நொந்த உள்ளத்தவரால், தாக்குண்டு தகர்ந்து தரை மீதுருண்டது, புராணமல்ல, சரிதம்! சரிதம் சாற்றும் பாடத்தைச் சற்றே செவிமடுப்பீர், சாயும் உமது முயல் போக்கு, சீறி எழும், ரோஷமும், வீரமும், ஆவேசமும், ஆண்மையும். உம்மைநீர் உணர்வீர், உலகில் உமைத் தடுப்பார் இரார், இஃது உண்மை!

“சம்புவே என்னபுத்தி சலந்தனில் மீனைநம்பி
வம்புறு வடத்தைப்போட்டு வானத்தைப் பார்ப்பதேனோ?
அம்புவி மாதேகேளாய் அரசனை அகலவிட்டு
வம்பனைக் கைபிடித்த வாறு போலாயிற்றன்றே!”

மீன் துள்ளி விளையாடுகிறது, நரியின் நாக்கு துடிக்கிறது, அந்தத் துடிப்பிலே தன்னை மறந்தது நரி, வாயிலிருந்த இறைச் சித்துண்டு ஆற்றிலே வீழ்ந்து போயிற்று. அதேநேரத்தில் மீனும், பாய்ந்தோடி விட்டது. உள்ளதும் போயிற்றே என்று நரி வானத்தை நோக்கிற்றாம் வாட்டத்தோடு!

இதைக்கண்ட கன்னியொருவள், சம்புவே இதென்ன புத்தி? என்று கேட்டாளாம். அவள் விஷயம் நரிக்குத் தெரியும்! எனவே நரி “இது தெரியவில்லையா! மன்னனைவிட்டு பிரிந்து வம்பனை இழுத்துக்கொண்டு நீ திரிகிறாயே, அது போன்றதே” என்றுரைத்ததாம். அவள் அரசனைப் பிரிந்து கசடன் பின் செல்பவள்! வேடிக்கையான இக்கதையைக்கூறி பாடம் புகட்டும் பாடல், விளக்கும் நிலைபோன்றுளது காங்கிரசிலே இன்று!

“ஐயா! ஆச்சாரியாரே! இது என்ன புத்தி? இருந்த மந்திரி வேலையை, எங்கேயோ இருக்கும், வைசிராய் நிர்வாக சபை வேலையை மனதில் எண்ணிக்கொண்டு இழந்துவிட்டு, இன்று இரண்டுமின்றி ஏங்குகிறீரே” என்று மௌலானா அபுல்கலாம் ஆசாத் கேட்க ஆச்சாரியார், “இது தெரிய வில்லையா மௌலானாஜீ! நீர் உமது இஸ்லாமிய சமூகத்தைவிட்டுப் பிரிந்து, காந்திக் கூட்டத்தில் கலந்துவிட்டு, இன்று அந்தக்கூட்டத்திலே பலரே இஸ்லாமியரின் இலட்சியத்தை ஆதரிக்கத் தொடங்கியதால் இரண்டுங்கெட்டு இருக் கிறீரே, அது போன்றுதான்” என்று பதில் கூறுவதுமான, நிலைமை இருக்கிறது. நன்று, நன்று, இவர்தம் நிலைமை! நாட்டுக்கு நாயகம், என்றுரைத்தனரே இந்த ரசாபாச நடன சாலையை! காண்மின், ஆங்கு நடைபெறும், காட்சிகளை! இனியும் இந்தக் கூட்டத்திலே இருப்பதோ, இக்கூட்டத்தில் ஒரு பகுதியையோ, பிறிதொன் றையோ நம்புவதோ, நன்மை பயக்குமா பயக்காதா என்பது கிடக் கட்டும், நமது தன்மானத்துக்கு இது காப்பா, மூப்பா என்பதனைச் சிந்தித்துப் பாருங்கள் என்று கேட்டுக் கொள்ளுகிறோம். மிக முக்கிய மான சமயங்களிலே, காங்கிரசில் நட்பு முறிவதும் நயவஞ்சகமும் சகஜமாகிவிட்டது. நெருக்கடியான நேரத்திலே குரு சீட சம்வாதம் சந்தைக்கடைச் சந்தடியையும் மிஞ்சிடக் காண்கிறோம்.

இந்நிலையில், நமது கட்சியினர், காங்கிரசின் கோளாறான காட்சியை எடுத்துக்காட்டி, தமிழரை அதனின்றும் பிரித்து, நீதிக்கட்சியில் வருமாறு அழைக்கும் பணியை ஆற்ற வேண்டும் என்பதே நமது அபிப்பிராயம். ஆச்சாரியாரின் ஆதரவு, பாகிஸ்தானுக்கும், திராவிடஸ்தானுக்கும் கிடைக்கிறதென்று நாம் பூரிக்கத் தேவையில்லை.

நாட்டிலே, பிரிவினைக்கோர் கட்சி, அதை எதிர்க்க மற்றோர் கட்சி என்று அமையுமேல், ஆச்சாரியார், காங்கிரசைக் கைகழுவி விட்டு, பிரிவினைக்கோரும் கட்சியில் சேருவதாக

இருப்பின், அதுபோது அவர் நம் ஆதரவுக்கும் அன்புக்கும் பாத்திரமாவார். இதுபோது அவரது நிலைமை, அதுவல்ல.

நாம் ஜனநாயக வாதிகள், காங்கிரசோ பாசீச மனப்பான்மை கொண்டதென நாம் பன்னெடு நாட்களாகக் கூறிவந்துள்ளோம். இதே கருத்துடன் முன்னம் காங்கிரசிலே, தோழர்கள் நரிமன், கரே, ஆகியோர், போரிட்டனர். அதுபோது நாம் அவர்களின் வாதங் களையும், அவர்கள் காங்கிரசின் கோளாறை விளக்கினதையும் எடுத்துரைத்து, "இதுதான் காங்கிரசின் இலட்சணம்" என்று இடித்துரைத்து வந்தோமே யன்றி, நரிமனைத் தழுவினோமில்லை, கரேயிடம் கைகுலுக்கிக் கொள்ளவில்லை. அந்தப்போக்கே இச் சந்தர்ப்பத்திற்கும் ஏற்றது என்பதோடு, அத்தகைய போக்கினால் மட்டுமே, காங்கிரசின் யோக்கியதையை வெளிப்படுத்தவும், அவ்விதம் வெளிப்படுத்துவதன் மூலம், அதிலிருக்கும் நமது தமிழ்த் தோழர்களை நமது பாதைக்குத் திருப்பவும் வழியாகுமென்றே நாம் கருதுகிறோம். இந்தப் போக்கின்றி, ஆச்சாரியாரை நாம் நமது அன்பர் எனக் கொள்வது,, காங்கிரசின் அவலட்சணத்தை அறிந்து அதைவிட்டு நீங்க வேண்டுமென்று கருதும் தோழர்களையும், இனியும் அங்கேயே இருக்கும்படி செய்வதாக முடியுமென்பது மட்டுமல்ல, நம்மவரில் சிலரைப்பலி கொடுத்துவிட வேண்டி நேரிட்டுவிடவுங்கூடும் என்று நாம் அஞ்சுகிறோம்.

அவசர ஆனந்தமடைவோர் பின்னர் கைபிசைந்துக்கொள்ள நேரிடும் என்று நாம் முன்பு கூறினோம். ஜனாப் ஜின்னாவின் ஆதரவில் நடப்பதும், முஸ்லீம் லீக்கின் முரசுமான ஞிகிகீழி டான், 14-6-42ல் இதே கருத்தைத் தலையங்கத்திலே தீட்டியிருப்பது கண்டு, மிக மகிழ்கிறோம்.

டான் எழுதுகிறது "முஸ்லீம்களிலே ஒருசாரார் எளிதிலே எதிலும் திருப்தி அடைந்துவிடும் வாடிக்கைக்காரர்களாக உள்ளனர். பாகிஸ்தானை இந்துபிரசாரம் பலமாக எதிர்த்தபோது இந்த வகையினர் பீதி கொண்டு விட்டனர்.

பிறகு பாகிஸ்தான் பிரேமை இஸ்லாமியரிடையே அமோகமாயிற்று. உடனே இவர்கள் தமது சந்தேகத்தைத் துடைத்துக் கொண்டனர்.

"சிலகாலம் சென்றதும், தோழர் ராஜகோபாலாச்சாரி யாருடைய

சென்னைத் தீர்மானம் வெளிவந்தது. பாகிஸ்தான் தந்தாக வேண்டும் என்று அதன் மூலம் அவர் தெரிவித்தார். இது (எளிதாகத் திருப்தி அடைகிற) அவர்கள் எதிர்பார்த்ததைவிட அதிகம். எனவே அவர்கள் தோழர் ராஜகோபாலாச்சாரியாரை, தமது வீரர் என்று வாழ்த்தலாயினர். திடீரென தோழர் ராஜகோபாலாச்சாரியார் மனம்மாறி, பாகிஸ்தான் ஆதரவாளராகி விட்டார் என்று அவர்கள் எண்ணினர். ஆனால், அது மனமாற்றமன்று. அரசியல் சாணக்கியமே யாகும். ஓராண்டுக்கு முன்பும் தோழர் ராஜகோபாலாச்சாரியார், இந்துமகாசபைத் தலைவர்கள் போன்றே பாகிஸ்தானை எதிர்த்தார். பசுவை வெட்டுவது போன்றது பாகிஸ்தான் என்று கூறும் அளவுக்கு இருந்தார். அவர் இப்போது தீரமாக இருப்பதை அறிவாளிகள் போற்றவேண்டுமென்பதில் சந்தேகமில்லை, ஆனால், இது நமது பிரச்சினையைத் தீர்த்துவிட்டதாகாது. நமது இலட்சியம் இன்னொரு வரின் உதவியாலோ ஆதரவாலோ, கைகூடும் என்று கருதுவது, கானல் நீர் வேட்டையாகவே முடியும். நமது முயற்சி, தியாகத்தால் மட்டுமே நாம் நமது இலட்சியத்தை சித்தியாக்க முடியும்.

ஆரம்பத்திலே இந்து எதிர்ப் பிரசாரத்தைக் கண்டு, பயந்தது கோழைத்தனம். அதுபோலவே, இப்போது நமது உரிமையை தோழர் ராஜகோபாலாச்சாரியார் ஆதரிக்கிறார். ஆகவே பாகிஸ்தான் நமக்குக் கிடைத்துவிட்ட மாதிரிதான் என்று ஆனந்தப்படுவதும் அர்த்தமற்ற ஆபாசமாகும். பிரமாதமான நம்பிக்கையும், அவசர ஆனந்தமும், நம்மை வழிதவறிவிடச் செய்யும்.

நமது சக்தி, நமது அறிவு, நமக்குத் துணையாகுமேயன்றி, இன்னொருவரின் உதவிக்கரம் நமக்கு வெற்றி அளிக்காது!!

டான் கருத்தைப் போன்றதே நாம் தொடர்ச்சியாக இந்தப் பிரச்சினைபற்றி எழுதுகையில் வெளியிட்டுள்ள கருத்தும்.

நாடறியா நடராஜன், நமது தமிழ் காக்க நாமுழைப்போம் என்றுகூறி, நடந்தான் சிறைச்சாலை நோக்கி! நன்றே செய்தாய், சுகமே போய்வா, என்றுரைத்தார் தந்தை. பாழுஞ்சிறையிலே படுத்த படுக்கையிலே, பைந்தமிழ் வீரன் நோயுற்று நொந்தான். மரணம் நேர்வந்து நின்று, அணைத்தது. மணம் வீசும் புகழுடன் மைந்தன் வருவானென்று, மாடியில்லா மண்வீட்டில், மகிழ்விலாத

வயோதிகர் காத்துக் கிடக்கையிலே, பிணம் வந்துசேர்ந்தது! தமிழரின் கண்களிலே வெள்ளம் புரண்டோடி வழிந்தது.

தீரன் தாலமுத்து தீந்தமிழைத்தாக்க ஒரு தில்லுமொழி துணிந்ததா என்றுரைத்து நுழைந்தான் சிறைக்குள், பிணந்தானே வெளியே விசப்பட்டது! இளமையிலே, இன்னல்கண்ட, அவன் மனைவி, இனி உலகே எனக்கோர் சிறை, என்று சோகித்து அறுத்தெறிந்த தாலியைத் தன் திருக்கண்ணீரால் அபிஷேகித்து, அவர் சென்றிருந்த சிறையிலே நான் நின்று தவங்கிடப்பேன் என்றுரைத்து ஏகினரே!

மாதரும் சிறையோ! மக்களும் சிறையோ, மகனுக்கும் அதுவேதானோ! என்று துடித்தனவே தமிழரின் குடும்பங்கள்.

புதுச்சேரித் தேங்காய் பூக்காது காய்க்காது என்று புண்பட்ட தமிழரிடை புகன்றாரே முதன் மந்திரியார்.

அறுபதாண்டுப் பெரியாரை அக்கினிக்குப் பரிசளிக்க, பெல்லாரி அனுப்பினார், அண்ணல் பன்னீர்ச் செல்வம், “ஆகுமோ” என்று கேட்க, “வெப்பம் விருந்து” என்றுரைத்தாரே, பாராளும் மண்டபத்தில். பதைத்த மக்களைப் பார்த்து பார்ப்பன மந்திரியார் “பாலருக்குப் பால்வேண்டி பாவையர் சிறைபுகுந்தார்” என்றுரைத்து ஏளனம் செய்தாரே. இருபத்தி ஏழு மாதங்களிலே, ஆச்சாரியார் தமிழருக்கிழைத்த இன்னல்களை, நாம் மறக்கினும், நாமறக்க மறுக்குதே நாவடக்கினும், நமது நெஞ்சு பொங்குதே! துயர் முந்துதே! எங்ஙனம் அவருடன் தோழமை கொள்வோம்? ஏன் அத் தோழமை!

அவர் தமது பழைய கருத்தைப் படுகுழியிலிட்டாரா! பார்ப்பன வேடத்தை மாற்றிக் கொண்டாரா? பதைத்த தமிழருக்குப் பரிகாரம் தருவாரா! தாலமுத்துவின் மனைவியின் தாலி, அறுந்தது, அதன் முன்னிலையில், நாமும் அவரும், தழுவிக் கொண்டு நிற்பதா!

தமிழரின் ஆதரவு, தோழமையோ அவருக்குத் தேவை என்றால், தமது ஆட்சிக்காலத் தவறைத் தாம் உணர்ந்ததாக, தமிழருக்கிழைத்த தீங்குகளுக்காகத் தாம் மனம் வருந்துவதாக, ஆச்சாரியார் ஓர் அறிக்கை வெளியிடட்டும். கொட்டு முழக்குடன் கூடுவோம் அவருடன். இல்லையோ, அவர் வேறு,

நாம் வேறு, இடையே இடப்படும் பாலம், நிற்காது, நிலைக்காது!

21.6.1942

சீறும் சில்லறைகள்

பரதா! கட்டு மூட்டையை! புறப்படு போவோம்.

மூட்டை கட்டுவதா? நானா? ஏனப்பா? வெள்ளைக் காரரைத்தானே, காந்தியார் மூட்டைக் கட்டிக்கொண்டு சீமைக்குப் போகச் சொல்கிறார். நான் வெள்ளைக்காரனுமல்ல, அவர்களுக்கு வேண்டியவனுமல்லவே. நான் ஏன் புறப்படவேண்டும்?

புறப்படாவிட்டால், ஆபத்து. ஆமாம், நாமாகப் போகாவிட்டால், நம்மை வெளியே துரத்திவிடுவார்கள்

யார்? என்ன ஆபத்து? விமாத் தாக்குதலா?

இல்லை நண்பா! காத்தியாரின் வெடிகுண்டுக்கோ, பகைவரின் விமானத் தாக்குதலுக்கோ பயந்தல்ல. அகில இந்திய இந்து மகாசபைத் தலைவர்களுள் ஒருவர் மூஞ்சேயும், வாழ்ந்துகெட்ட வைத்தியர் வரதராஜுலுவும் வரிந்துகட்டுகிறார்கள் கச்சையை, வாள் எடுப்போம் என்றுரைக்கிறார்கள். நம்மை வாட்டுவராம், விரட்டுவராம். வந்ததே ஆபத்து. எனவே இன்றே கிளம்பு. எங்காகிலும் செல்வோம்

வெத்துவேட்டுக்கு இத்தனை பயமா உனக்கு? முதியோர் மூஞ்சேயும் வளையும் வரதரும் வாய்ப்பாணம் பூட்டினால், வாட்டமேன் நமக்கு? என்ன வந்துவிட்டது அவர்களுக்கு? யாது கூறினீர், கூறு குளறாது!

இந்நாட்டிலே யார் தம்மை இந்து இனமல்லவென்று கூறிக்கொள்கிறார்களோ, அவர்களுக்கு இந்த நாட்டிலே இடங்கிடையாதாம். மற்ற அன்னியர்கள்மீது போர் தொடுத்து அவர்களை விரட்டுவதைப்போல், இந்து அல்லாதவர்கள் அத்தனை பேரையும் விரட்டப் போகிறார்களாம். மூஞ்சேயுன் முஸ்தீப்பு, கோவைக் கூடாரத்தில் வல்லமைமிக்க வரதரின் மேற்பார்வையிலே

ஏற்பாடாகிவிட்டது. அறிக, அறிக!!

வீரன் விளம்பிய இவ்வுரை கேட்ட நான், விஷயமென்ன வென்று விசாரித்தேன். கோவையிற் கூடிய இந்துமகா சபை மாநாட்டிலே, முஸ்லீம்களைக் கண்டித்துப் பேசிய முப்புரி நூலோரின் அற்புதக் காப்பாளர் மூஞ்சே, முஸ்லீம்கள் தங்களைத் தனி இனமென்று கூறிக்கொள்கின்றனர். இந்து இனமல்லவென்று யார் கூறுகின்றனரோ, அவர்களை இந்நாட்டிலிருக்கவிடோம் என்று கூறினாராம். திருவாரூரில் கூடிய நீதிக்கட்சி மாநாட்டிலே ஏகமனதாக நிறைவேறிய துர்மானம். தமிழர்கள் இந்துக்கள் அல்ல என்பதாகும். எனவே தோழரகளே, நம்மை, இந்து இனமல்ல என்பதற்காக, இந்து மகாசபைக்காரர்கள் நாட்டைவிட்டு விரட்டப்போகிறார்களாம். நகைக்காதுர். நாடகங்களிலே பலவகை உண்டன்றோ, அதிலே இதுவோர் வகை! சல்லடம் கட்டட்டும, சமருக்கு நிற்கட்டும், நிற்குமுன்னம், அழியா ஆண்மையாளர்; அறப்போர்க்கஞ்சா நெஞ்சினர், ஆரிய வஞ்சனைக்கன்றி பறிதொன்றுக்கம் தலைசாய்த்தறியாத நன்மையினர், தமிழர், என்பதனைத் தெரிந்துகொண்டு, பின்னர் படை திரட்டி, தோள் தட்டி, வரட்டும், பார்ப்போம்! வம்புக்கு நாம் முந்தோம், வம்பரைக் கண்டால் வழி விட்டு வாடோம். சமர் வேண்டாம், சமர்வரின் சளைக்கவும் மாட்டோம்! நெடுநாட்களாயினவே போர்கண்டு என்று இளைக்குமாம், தமிழரின் தோள்! புலிக் குலத்திலே பூனை தோன்றியிராதன்றோ! நரிக்கூட்டம் நடமாடித் திரியும் நிலையும் மாறித்தானே தீர வேண்டும்! அதற்கே போலும் ஆரியத்தின் கங்காணிகள் ஆர்ப்பரித்தனர் கோவையிலே!

தமிழரே! கேண்மின்! ஒண்ட வந்த விடாரி ஊர்ப் பிடாரியை ஓட்டிற்றாம்! சேலை துவைக்க வந்த சேடி, மீட்யைக் காமாட் என்றுரைத்தாளாம்! அஃதேபோல், வயிரார உண்டுவாழ, வளமிக்க நாட்டிலே, வறியராய் நுழைந்த, வடக்கயறு அணிந்த வஞ்சனைக்காரர், வாழ்ந்து, இன்று வாழ்த்துவதைவிட்டு, நாட்டுக்குரிய நம்மவரை, நாக்கிலே நரம்பின்றி, ஏசிப்பேசியும், எதிர்த்தும் இடித்தும், ஏளனங்கூறியும் வருகின்றனர்! எற்றுக் உமது பண்டைப் பெருமை! ஏற்குமோ தமிழகம், மறக்குமோ மறத்தினை! அணைக்குமோ ஆரியத்தை! பணியுமோ பார்ப்பனீயத்தின் முன்பு!

இந்து மகா சபைக்காரர், தமிழகத்திலே இது காலை

பாகிஸ்தான் திராவிடஸ்தானுக்கு ஆச்சாரியார் மூலமாக இருந்துவந்த எதிர்ப்பு இருந்த இடத்தில் புல் முளைத்துப் போகக் கண்டு, பயங்கொண்டு, கங்கை நீரைமொண்டு, தண்டுகள்மீது தெளித்து, செண்டு சூடிடும் சேயிழையார்போல் ஓர் சமயம் சூளுரைத்தும், சுருதியில் சேராத சங்கீதம்போல், அறிவுக்குப் பொருந்தாத உரை புகன்று, போரிடவுந் துணிகிறோம் என்று கூறிடக் காண்கிறோமே! என்னே காலத்தின் கோலம்!

இந்து இனமல்லாதவர்கள் இங்கிருக்க லாகாதாம்! இருக்க இனி விடமாட்டார்களாம்! என்னே இவர்தம் மடமை!! யாருடைய நாட்டிலே, யாரைப்பற்றி யார் உரைப்பது இம்மொழி! திராவிட நாட்டிலே, திராவிடரை நோக்கி, ஆரிய வர்த்தகத்தில் அலைந்து திரியும், அங்கம் ஒடுங்கிய சனாதனச் சங்கச் சுவடிக்காரர் சூள் உரைக்கின்றனர்!

நாம் இந்துக்களல்ல, எதத் திருடினோம், அந்தப் பட்டத்தைச் சுமக்க! யாரிடம் தோற்றோம், அதனை ஏற்க! நாம் திராவிடர், திராவிட நாடு! இது, இங்கு இநதுவோர் சிறு கூட்டம். அது சனாதனச் சேரியிலே வாழுகிறது. நம்மீது இந்து ஆதிக்கம், இந்து மதம் சுமத்தப்பட்டன. நமது மக்கள் ஆரிய வஞ்சனையை அறிந்துகொள்ளாமல், அவர்கள் கூறினதை நம்பி நலிந்தனர், இதுபோது நம்மவர் துயிலுகின்றார்களில்லை! ஆச்சாரியார் இதனை உணர்ந்துகொண்டார், ஆகவே மாறிவிட்டேன் என்று மொழிகிறார்.

சக்தி சாய்ந்தாலும, யுக்தி சாயலாகாது! பல்லின் கூர்மையும், நகத்தின் கூர்மையும் மழுங்கி, பாயும் சக்தியற்று, தேயும் உடல் பெற்ற பின்னர் புலி, தன்னை கண்டதும் பிறருக்குக் கிலி இருக்குமே என்ற ஒரே எண்ணத்தை நம்பினால், வேலுக்கோ, வாளுக்கோ, தடிக்கோ இறையாகிவிடுமன்றோ! சக்திக்கேற்றபடி தானும் பக்திகூட! யுக்தியற்ற பேர்வழிகள் இதனை உணராது ஊராரின் சீ கேட்டு, உறுமிக் கெடுவர். ஆச்சாரியார் இந்த ரகத்தைச் சேர்ந்தவரல்ல! புலிபோல் பாய்ந்தார் முன்பு! இன்றோ வலி குன்றியதாலோ, வளங்கெட்டதை உணர்ந்ததாலோ, வருவது வந்தே தீரும் என்ற பாடங் கேட்டதாலோ சலசலப்பைப் காட்டாது. சாந்தோபதேசியாய், சமரச ஞானியாய், சத்வகுணபோதனாய் காட்சியாக இருந்துவிட்டு, கணத்திலே மறையும் வனவில் போன்றதோ!

சாணக்கியமோ! சதுரங்கமோ! யாதோ அறியோம்! எதுவாயினும், இன்று அவர், கனல் கக்கம் வழியிலே, கனிவுமொயி கண்டதைச் செப்பும் வாயினால் உண்மை உரைகளை மெள்ள மெள்ளப் பேசிக்கொண்டு உற்றார் உறவினரும், சீடரும் தோழரும எதிர்ப்பினும், பிடேன் என்றுரைக்கிறார்! வல்லரசர், வலிமைமிக்க தளபதியை நம்பி ஓர் வட்டாரத்தை ஒப்படைக்க, குழப்பமிக்க நேரத்தில் கொற்றவனின் கோல் தடுமாறக் காண்கையில், தளபதி, தன் ஆட்சியிலே விடப்பட்ட தரணிக்குத் தானே அதிபனாவது, சரிதத்திலே பலப்பல தேயங்களில் நடந்தன. காந்தியார், தமது தளபதியாக ஆச்சாரியாரைக் கொண்டார், இன்று தளபதியின் தனி அரசுரிமை கண்டு, தடுமாறகிறார், திளறுகிறார், மோசம் போனோமே என்று முகத்திலறைந்து கொள்கிறார். அவருடைய வார்சு காசியில் காலும் மாஸ்கோவில் மனமும் கொண்ட ஏட்டுச்சுரை வீரர், எதிர்ப்பில்லா நேரத்தில் எக்காளமிடுத்தீரர், நேரு, தனது பாத்யதையிலே, ஆச்சாரியார் குறுக்கிடுவதுகண்டு, கலங்கிக் கொதித்து, காய்ச்சல் கொண்டுக்குளநி, கட்கமெடுப்பேன் கவண் விடுவேன், கரிபரி திரட்டுவேன் கடல் கலக்குவேன் என்று கர்ஜனை செய்கிறார். இந்நிலையிலே, சில்லரைகள் சிந்து, சீறி, சில்லுண்டிக் குணத்தைக் காட்டி, சிந்து பாடிடும் சேட்டை கண்டு. சிரிக்கச் சிரிக்க, வயிறு நோகுதேயன்றி, நகைப்பு அடங்கவில்லை. அம்மியுங் குழவியும் ஆகாயத்திலே பறக்கும்போது . . . என்பார்களே, பழமொழி! அந்தக் கவனம் எனக்கு வருகிறது. சக்தியற்ற இந்தச் சில்லரைகள் சற்று யுக்தியாகக்கூடவா நடந்து கொள்ளக் கூடாது; அவர் போனாலென்ன? நாங்களில்லையா? சும்மா இருப்போமா, சோர்வு சொள்வோமா? என்று சொல்லித் திரிகின்றளர்.

ஆச்சாரியார் தாட்சண்யத்துக்குக் கட்டுப்பட்டு கைகளையும் வலையையும் கட்டிவிட்டாளே என்று கூறி, கொண்ட கொள்கையை, வகுத்துக் கொண்ட திட்டத்தை விட்டுக்கொடுப்பவல்ல என்பது எனக்குத் தெரியும். தோழமை, நேர்மை, நீதி முதலிய எத்தனையோ பந்தங்கள் குறுக்கிட்டும, ஆச்சாரியார், தாம் தேவை என்ற எதை விரும்புகிறாரோ, அதைப் பெற முயற்சி செய்வதில் மட்டும் தயங்குவதில்லை! நான் ஆள்வதா, இந்த இராமசாமி ஆள்வதா என்பதைத் தான் ஒரு கை பார்த்துவிட வேண்டும் என்று இந்தி எதிர்ப்புக் காலத்திலே, ஏறுபோல் கூறியவர், பின்னர், மாறுவேடம் அணியாமலே மனதிலிருப்பதைப் பற்றி பிற என்ன கருதுவர் என்பதைப் பற்றியும் கவலைப்படாமல் பெரியாரின் இல்லம் ஏகினால்! இது

பெருங்குணமாகவுங் கொள்ளப்படுகிறது!! பெருமையைக் காட்டுவதோ அன்றி சமயத்திற்கேற்ற சாகசம் தேவை என்ற ஆரியத்தைக் காட்டுகிறதோ என்பதை அராய்வது, இன்று, ஆச்சாரியாரையும் நம் கட்சியையும் சேர்த்துவைக்கும் நிலையைக் கெடுத்துவிடும் என்றும் அஞ்சும் நெஞ்சகர் உள்ளனர். நம்மிடையில், எனக்கென்ன ஆச்சாரியார் முது வீண் கோபமா! அவர் ஆதரவு தேவை என்று கருதும் உள்ளம் எனக்கு மட்டும் வராமற்போகுமா! நான் மட்டுமா! நீங்களுந்தான். நெஞ்சிலே கைவைத்துக் கூறுங்கள் உங்கள் மனதிலே, அந்நாள் நினைவுகள் உலவவில்லையா! அந்தக் காலம் மலை ஏறிவிட்டது! உண்மை ஆனால், மனதைவிட்டு அந்த எண்ணங்கள் அகலா!! அகற்ற முயற்சிகள் செய்வது எளிது. வெற்றி பெறுவது துல்லபம்! ஆண்டவனை நம்புங்கள் ஆனால் ஓட்டகத்தையுங் கட்டி வையுங்கள் என்ற இஸ்லாமிய மொழிபோல், நானுங் கூறுகிறேன். ஆச்சாரியாரின் பேச்சைக் கேட்டுப் பூரியுங்கள், நான் குறுக்கிடவில்லை, ஆனால், சற்று உஷாராகவும் இருங்கள் அவர் விஷயத்திலே என்று. இது நமது இனத்தின் எதிர்காலத்தின் பொறுப்பை உணர்ந்ததால் எழும் எண்ணம், ஏளனமல்ல! நமது கட்சிக்கும் ஆச்சாரியாருக்கும் இடையே மலைபோல் நிற்கும் வலிவுடையேன் அல்லேன், ஆனால் நான் குறுக்கிடாமலே, பெகு வெகு விரைவிலே அவரது பாதை வேறு, நமது பாதை வேறு என்பது விளங்கி விடத்தான் போகிறது என்ற துர்மான எண்ணங்கொண்டுள்ளேன்; என் எண்ணத்திலே தவறு இருப்பின் காலம் தீர்ப்பளிக்கட்டும் தேசத்தின் இடையே நான் தடையாக நில்லேன். ஆனால் தேசம் நீடித்து நிற்குமென்று சொல்லவல்லேன் அல்லேன் கூடி வாழ்வதைச் சொல்லேன். ஆனால் நீரும் பாலும் கலந்தும் பிரியும் தன்மையது என்பதை எங்ஙனம் மறப்பேன்!

ஆச்சாரியார், விஷயமாக என் போன்றார்க்கு தொண்டர் கட்கு - இத்தகைய யோசனைகளும், சந்தேகங்களும், சஞ்சலமும் இருக்க, காங்கிரசில் காத்தீய ஏடுகளும், நடமாடும் தம்பட்டங்களும், நமது கட்சியையும், தலைவரையும் தாக்க ஆச்சாரியாரின் புதுக் கருத்தையும் ஓர் சாக்காக்கிக் கொண்டு, சாக்குருவி வேதாந்தம் பேசித் திரிகின்றது!

உன் குரு நமது சீடன்! என்றானாம் வீரனொருவன். அதுபோல், இந்தச் சில்லரைகன் சிந்தனையில் விதை விதைத்து, கருத்திலே மூக்கணாங்கயிறிட்டு, இழுத்துச் சென்ற ஆச்சாரியாரே, இன்று, எதிர்த்து இளைத்து, கர்ஜித்துக கனைத்து, காவடி கவிழ்ந்ததால்

சலித்து, யுக்தியே இனி நம் சக்தி என்றுரைத்துக்கொண்டு, பெள்ளைக்கொடி ஏந்தி வீதிவலம் வருகிறாரே, அவர் சொல்லிக் கொடுத்ததைச் சொல்லிக் கொண்டு, அவர் கண்சிமிட்டுடியதும் கடுக அவர்பின் ஓடி, அவர் திருவடி தரிசம் திவ்யமான தேவப்பிரசாதம் என்று திருப்பல்லாண்டு பாடிக் கொண்டு திரிந்த கூட்டம், இன்னமும தில்லுமுல்லு பேசிக்கொண்டு, திரிவதைக் கண்டு, மண்டுகளே! பண்டு மொழிந்த பார்ப்பனர் கண்டுகொண்டாரே உண்மையை, உங்களின் மரமண்டைகளில் மட்டும் ஏனோ இன்னமும் உண்மை புகவில்லை என்று கேட்டிட என் மனம் துடிக்கிறது. அங்ஙனம் கேட்டால், அவர் மனம் புண்படுமே என்ற எண்ணம் மேலிட்டு, எனது ஆசையைத் தடுக்கிறது! இந்த சீறும் சில்லரைகள் சேட்டையை மூட்டைகட்டி வைத்துவிட்டு, நாட்டு நிலை உணர்ந்து, பாட்டுமொழித் தமிழரின் கேட்டுக்கோர் படையாக இருக்கும் பாதகராய், கருத்திழந்த காதகராய் இராது. கண்பெற்று, கருத்தும் பெற்று, காலத்தின் போக்கறிந்து நடக்க வேண்டுகிறேன். அதைப்போலவே தமிழரை இளித்த வாயராக எண்ணிக்கொண்டு, இந்து இனத்தின் வல்லமை பற்றிப் பேசிடும் இங்கிதமறியாதவர்களையும், இனி உமது எண்ணம் ஈடேறாது என்று கூறி எச்சரிக்கிறேன்.

எவ்வளவு துணிச்சல் இந்த தர்ப்பாசூரர்களுக்கு! இந்துக்கள் நாமல்ல, நம்மை ஓட்டிவிடுவராம்! நமது வீட்டைவிட்டு!! பேஷ்! பேஷ்!! திராவிட நாட்டிலே, ஆரியருக்கு ஏன் ஆதிக்கம் என்று மட்டுமே இன்றளவு வரை கேட்கும் திராவிடன், இனி, அவரவர் நாட்டுக்கு அவரவர் போதலே முறை என்று இத்திரவு பிறப்பிக்க முன் வந்தால் என்ன குற்றம் இருக்க முடியும் என்ற கேட்கிறேன்.

இந்துஸ்தானம் அல்லது ஆரிய வர்த்தம். இமயத்துக்கும் விந்தியத்துக்கும் இடையே உள்ள இடம். இருக்கு, யஜுர், சாமம், அதர்வனம் பயின்ற இருடிகளும், இராமர் முதலாய ஆரிய சிரேஷ்டர்களும், சாணக்கியன் போன்ற அரசியல் சூதுக்காரரும, காளிதாசன் போன்ற ஆரியக் கவியும் இருந்த இடமே அது. விந்தியத்துக்கும் குமரிக்குமிடையே உளது திராவிட நாடு. இங்குளோர் திராவிடர், இந்துவல்ல! இங்கு வந்து சிந்து நதிமிசை சந்தம் பாடி வந்த கூட்டம் கொக்கரிக்கக் காண்கிறோம், ஈதென்ன கொடுமை!

பர்மியர் இந்தியரைப் போவென்றுரைக்கவும், இலங்கையரும் அதுபோலவே கூறவும், வெள்ளையரைக் காந்தியாரும் அதுபோல்

கூறவும் கேட்ட தமிழர், ஆரியரை, வட நாட்டாரை, தமிழகத்திலே இனியும் என்ன வேலை என்ற கேட்கும் காலம் பிறக்கவே, மூஞ்சே, இங்ஙனம் நம்மவருக்கு ரோஷம் எழும் ரணகளப் பேச்சுப் பேசினர் போலும், டாக்டர் வரதராஜுலு போன்றவர்கள் தம்மை இந்துவென்று கூறிக்கொள்வர். அது அவர்களின் தடித்த தோலைக் காட்டும் தன்மையது! இந்து என்ற சொல், ஓர் ஆபாச அவியலைக் குறிப்பதாகும். கிறிஸ்தவர் எனில், ஒரே ஆண்டவன், ஏசு, ஓர் வழிகாட்டி, பைபிள் என ஓர் வேதம், உண்டு என வரையறுத்துக் கூறலாம். முஸ்லிம் எனில், நபிகள் நாயகத்தை வழிகாட்டியாகவும், கோரானை வேதமாகவுங் கொண்டு, உருவமற்ற ஏக தெய்வத்தை வழிபடுவோர் என்று கூறலாம். இந்து, என்றாலோ! யாரைக் குறிப்பது, எவ்விதம் விளக்குவது! இனமென்பதா? மதமென்பதா? இயல்பு என்பதா? உரைமின், சபையீரே! ஓய்! வைத்திய வரதராஜுலுலே, சொல்லும் நீர் யாரை இந்து என்கிறீர், எந்த ஆதாரத்தைக் கொண்டு? இந்துமதம் என்றால் எது? அதற்குக் கொண்கை கோட்பாடு என்ன? என்று கேட்டால், அவர் பாவம், எதைக் கூற முடியும்!

அகம் பிரம்மம் என்று கூறும் வேதாந்தியும், ஆண்டவன் அரூபி என்றுரைக்கும் தத்துவவாதியும், பசுபதிபாசம் பேசும் சைவசித்தாந்தியும், பக்திப் பிரபாவம் பேசிடும வைணவரும், ராமநாமமே கற்கண்டு என்று பாடி ஆடும் பஜனைக்காரரும், காளி, மகமாயி என்று உடுக்கை அடித்து, வேப்பிலை வீசும் காத்தவராயனின் திருக்கூத்தரும், திருக்கைலாய பரம்பதையிலுதித்த மடாதிபதிகளும், சங்கரர்ர வார்சுகளான சங்கராச்சாரிகளும், ஜீயர்களும், ஆழ்வார்களின் வாழையடி வாழைகளும், பிரம்ம, ஷத்திரிய, வைசிய, சூத்திர குலத்தவரும், இன்னமும, ஏதேதோ கூறிடும் பேர்வழிகளும் இந்துக்கள்; திட்டம் எல்லலை வரையறை கட்டு கிடையாது. தத்துவங்கள் கிடக்கட்டும இந்து மார்க்கத்தின்படி பேசப்படும கடவுளின் கதைகள் நம்மை இந்து என்று கூறிக்கொள்வதிலே பெருமை தரக்கூடியதாக இருக்கிறதா, வெட்கித் தலை குனிந்து மேயோவை எண்ணி மெய்சிரிர்த்து வாழும் நிலை தருகிறதா என்பதையும் இந்துமகா சபைக்காரர் எண்ணிப் பார்க்க வேண்டாமா! ஒரே ஒரு சாம்பிள்! பலகூறு கூசுகிறேன், குமட்டல் கொள்வீர் என்று அஞ்சுகேறேன். திருப்பாற்கடலிலே ஆதிஷேசயனனாக உள்ளாராமே மாவிஷ்1, அவர் விஷயம் அது. ஆத்திரப்படாமல் கேளுங்கள்!

விருந்தை என்றோர் அழகிய அரக்கப்பெண், சலந்திரன் என்பவனை மணம் செய்து கொண்டு வாழ்ந்தாள். சலந்திரன் இறந்தான், உடனே விஷ்ணுவிக்கு விருந்தையின் மீது விருப்பமுண்டாயிற்று. என்ன செய்தார் தெரியுமா? தூகணங்களைக் கூப்பிட்டு, புலி உருக்கொள்ளச் செய்து அழகி ருந்தையை மிரட்டச் செய்தார். அதே நேரத்திலே அவரே ஓர் சந்நியாசி வேடம் பூண்டு சென்றாராம். பயந்த பாவை, சாதுவிடம் தஞ்சமடைந்தான். விஷ்ணுவுக்குச் சந்தோஷம் சொல்லுந் தரத்ததா! சலந்திரனின் புணத்தைத் தருவித்து அதிலே புகுந்து கொண்டாராம், சர்ப்ப சயனர். சரசமும் சல்லாபமும் ஜாம்ஜாமென நடந்தேறின. பிறகோர் நாள் விருந்தை விஷ்ணுவின் சூதைத் தெரிந்துகொண்டு சபித்தானாம்! இந்து மகாவபை அன்பர்காள். இத்தகைய மதத்தை நம்பும் மடத்தனம் எமக்கு ஏன் என்று தமிழர் கேட்கின்றனர்.

கனியிருக்கக் காயும், கரும்பிருக்க இரும்பும், விளக்கிருக்க மின்மினியும், வேண்டுவரோ, விவேகிகள்? தமிழ் இருக்க, தமிழர் நெறியிருக்க, தருக்குமிக்க ஆரியமேன் எமக்கு! கிளியும் குயிலும், மாடப்புறாவும், மைனாவும் ஒரே சோலையிலே உல்லாசமாக வாழும், ஆனால் வல்லூறு வட்டமிடக் கண்டால், அதுவும் நம்மைப் போல் ஓர் பட்சிதானே என்று அவை கருதா, வட்டமிடும் வல்லூறு, நம்மை வதைக்கும் என்பதறிந்து! அதுபோலவே, திராவிடப் பெருங்குடி மக்கள் தம்மில் சிற்சில வேறுபாடு கொண்டாராக இருப்பினும், ஒரே வட்டாரத்திலே வாழ இசைவர். ஆனால் தமது சுயமரியாதையைச் சூறையாடும் ஆரியருடன் தோழமை பூண்டு வாழ இசையார். ஆயிரம் மூஞ்சேக்கள் ஆர்பரிப்பினும் நடவாது!

அறங்கிடந்த நெஞ்சும், அருளொழுக கண்ணும், மறங்கிடந்த திண்டோன் வலியும் கொண்ட தமிழர, ஆரியரின் ஆரப்பரிப்புக்கு அஞ்சார்! அதோ தெரிகிறதே சேரி! அங்குள்ள மக்களைப் பார்! அவர்களுடன் இருப்பது வறுமை, வாட்டம், பஞ்சம், பிணி, சே, செந்தேள், சிறகொடிந்த பறவைகள் போல், கண்ணிழந்த கன்றுகள்போல், குலர் இழந்த குழந்தைகள் போல் உள்ள அந்த மக்கள் - உன் அதிகாரப்படி, இந்து! ஆனால், இதோ இருக்கும் குளத்திலே அவர்கள் நீர் மொள்ளக்கூடாது. தெரு வழி நடக்காதே, தேவாலயம் குபகாதே, பஞ்சமனைத் தொடுவது மகாபாவம். ரவுரவாதி நரகமே சம்பவிக்கும், என்று ஈவு இரக்கம், நீதி நாணயமின்றி பேசிடும் இந்து தர்மம்! அதன்படி ஆட்சி நடப்பின், மக்கள் மாக்களாவதன்றி வேறென்ன நடக்கும்! இந்து

என்று தமிழர் ஒப்பினால், பார்ப்பனர் நீங்கலாக, பிறர் தாழ்ந்தோர், தமிழர் சூத்திரர்! இது தகுமா, முறையா, அறிவா!! நரைத் தலை, ஆனால் நகைத்த முகம், நெற்றியிலே திலம், தசையிலே சுருக்கம், மூதாட்டி, தன் கணவனின் கால் பிடித்துக்கொண்டே பேச, மூதாட்டியின் மகள் மூலையிலே விம்முகிறாள் விதவையாகி, மஞ்சளிழந்து மகிழ்விழந்து, மறுமணம் புரியலாமோ என்றால் மாபாதகம், சாஸ்திர விரோதம் என்று பாமரரைப் பாழாக்குகிறாயே நீயும் இந்து, உன் பேச்சைக் கேட்டு உன்னைத் தொழுபவனும் இந்து! ஈளை கட்டி, ஈ எறும்பு மொய்ப்பதுவும் தெரியாது கிடந்து, உயிருடன் கடைசிப் போர் நடத்தும் நோயாளியைக் கண்டு, விம்மி, கண்கசக்கி, பெண்டு பிள்ளையும் உற்றார் உறவின் முறையோரும் ஏங்கியிருக்கும் வேளையிலே, உடலைவிட்டு ஜீவன் பிரியாமுன்னம், ஓர் நல்ல பசுவைத் தானமாகத் தா, ஆதமா சாந்தியடையும் என்று கூறி, கட்கத்திலே பஞ்சாங்கக் கட்டுடன் தெருத் திண்ணையிலே உட்காரும் புரோகிதன், இந்து! மலைச்சாரலருகேயுள்ள மலர்ச்சோலை, அதன் மருங்கே ஓர் தாமரைத் தடாகம், மலர்கள் மரகதமணி போன்றுள்ளன. மணத்தைப் பரப்பி வருக! வஜக! என அழைக்கின்றன! வந்தோம், கண்டோம் என்று கூறிக் களிப்பன போல் குயில் கூவி, மயில் ஆடி, கிளி பொஞ்சிடுகிறது. அருவியின் பக்கமேளம்! மேலே விரைந்து செல்லும் மேகமும் மகிழ்ந்து, முத்து முத்தாக நீரைத் தெளிக்கிறது. பரிசாக, இத்தகைய தடாகத்திலே மூழ்குவதை விடுத்து, முட்புதருக்கருகே, கற்பாறைகள் நிலைந்த வழியிலே, காததூலம் கெட்டவாடை வீசும் சேற்றக் குபம்பாக இருக்கிறது ஓர் குட்டை. அதை நாடி, ஆடி அசைந்து வருகிறது எருமை. சேறு அதற்குச் சந்தனம்! இந்தச் சுபாவம், மக்களில் உண்டு என்பதற்கு எடுத்துக்காட்டாக இருப்பதுதான், இயற்கை அழகையும், உழைப்பின் உயர்வையும், சமத்துவத்தையும் சாகா இளமை உணர்ச்சியையும், அறத்தையும் மறத்தையும், அரிவையரின் அகத்தையும் ஆண்களின் போர்த் திறத்தையும் எடுத்துக் கூறும் தமிழ் இலக்கியங்களை விடுத்து, எருது ஏறுவோன், பருந்தேறித் திரிவோன், நாக்கிலே நங்கையை வைத்தோன், தபோதனர்களின பத்தினிகளை இச்சித்தோன் என்பனவான உட்கதைகளும், பாலும் பழமும் பாழக்கு, பல்லக்குத் தூக்கு, பார்ப்பனரின் பாதந்தாங்கு என்ற ஆழமிக்க கருத்துரைகளும், பெதமும பிளவும் போற்றுதற்குரியன என்ற போதனையும், வான் சுரரை விட்டே பூசுரர் வந்தார் என்றுரைக்கும், சாதனையும் சாற்றும் ஆரியக் கற்பனைகளைக் கற்றும், கேட்டும், நம்பி நம்மர் நலிவது இது இனி நடவாது.

வரட்டுத் தவளை கத்துவது வான்மதியின் போக்கை மாற்றாது! இடிந்த மண்டபத்திலே இருட்டு நேரத்திலே முரட்டுக் கள்வரே புகுவர்! பாழடைந்த மாளிகையில் பறக்குமாம் வவ்வால்! சரிந்த சுவற்றில் வளை அமைத்து வாழுமாம் பாம்பு! குப்பை மேடே தேடும் குக்கல்! குழியிலே நெளியும் தேள்! அதுபோலவே, ஆபாசக் கருத்துக்களில், அறிவுக்குப் புறம்பான புராணங்களில், இழுக்கைத் தரும் இதிகாசங்களில், புல்லரும், சுயநலமிகளும் புகுந்துகொண்டிருப்பர். இந்து என்பது அவர்கள் இட்டுக் கொண்ட பெயர். அது நமக்குப் பொருந்துமா! பழமுதிர்ச் சோலையும், பால்வண்ண நீரோடையும், பலவின் கனியும் மணமும் மாமணமும் வீசிடும் சாலையும் இருக்க, வேம்பும், எட்டியும் விண்முட்ட வளர்ந்திடும் பாழ்ர்ப்பாதை புகுவோர் பேதையரன்றோ!

அமைவுள்ள திராவிட நாட்டில் சற்றும்

ஆண்மையில்லாதவர் வந்து

நமர் பசிக்கொள்ள நம் சோற்றை உண்ண

நாக்கைக் குழைப்ப துணர்ந்தோம்

என்றார் கவி.

உயிர்க்கவி, தமிழரின் தூயமணியின் துந்துபி அது! (தூயமணி - சுப்பு ரத்தினம் என்ற பாரதிதாசன்) தமிழரின் உள்ளத்திலே மூண்டு விட்ட விடுதலைத் தீ, ஆரியத்தைக் கருக்கிவிடும்! சில்லரைகள் சினமும, இந்து சபையின் சீற்றமும் இதைத் தடுக்கா.

(திராவிடநாடு - 28.06.1942)

கேய்ரோவில் கழுகு!

வெஞ்சமரைத் தனக்கோர் விளையாட்டென்று கருதிய நெப்போலியன் உலகிலேயே எகிப்து நாட்டைப் போலவே, முக்கியத்துவம் வாய்ந்த நாடு வேறில்லை என்னலாம் என்று கூறினார். அந்த எகிப்துமீது, நாஜிகள் இதுபோது பாயத்துணிவு கொண்டு விட்டனர். நாஜிப்படைகள் நாகமெனச்சீறி, எகிப்து நோக்கிப் பாய்கின்றன. கெய்ரோ நகர்மீது கழுகுப் பாய்ச்சலில் சென்று தாக்கவும் கொயரிங்கின் விமானங்கள் விண்ணைநோக்கிச் செல்லுமென்று கூறப்படுகிறது. பிறைபறக்கும் இடத்திலே பெர்லின் பேயர்கள் சுவஸ்திகக் கொடியை நாட்டவும், எகிப்தை அடுத்துள்ள சூயசில் தமது ஆதிக்கத்தைப் புகுத்தவும் நெஞ்சில் நினைப்பு கொண்டுள்ளனர் என்று தெரிகிறது நிலைமை மிக்கப் பயங்கரமாகி விட்டது.

எகிப்து நாடு, எழிலும் திறனும், வளனும் வீரமும் செறிந்து, பாரோர் புகழும் பரூக் மன்னரின் பரிபாலனத்தின் கீழ பரிமளத்தோடு விளங்குகிறது. பன்னெடுங் காலங்கட்கு முன்னே, இன்று புகழுடன் விளங்குமிடங்கள் காட்டுமிராண்டிக் கூடாரங்களாக இருந்த காலையிலேயே தரணி எனும் கழனியிலே ஒரு கரும்புச்சோலையாக காட்சி தந்து வந்தது எகிப்து. பண்டையச் சாம்ராஜ்யங்களிலே எகிப்து, மிக்ககீர்த்தி வாய்ந்தது. பாலைவனத்துக்குப் பக்கத்திலே பால்வண்ண நீரைத்திரட்டிப் பெருக்கி ஓடும் பண்புடைய நைல் நதி தீரம் எகிப்து. அங்கு நாகரீக நங்கை நடமாடித் திரிந்தாள். அத்தகைய இடத்துக்கு இடரும் இடியும், இன்னலும் இழுக்கும், தேடித்தர ஹிட்லர் எண்ணுகிறார். இடையே நின்று நாஜிகளின் எண்ணத்தைத் தடுத்துவந்த கோட்டைகளை நாஜிப்படைகள் பிடித்துவிட்டன. பெங்காசி முதல் பார்டியா வரை பாதகரின் படை பரவிவிட்டது. டோப்ரூக் கோட்டையும் பிடிபட்டுவிட்டது.

டோப்ரூக் என்ற கோட்டையின் பெயரே போர்க்கால பழமொழியாக இருந்தது. எவ்வளவு பலமான தாக்குதல், முரட்டுப் பிடிவாதமான முற்றுகையையும் சமாளிக்கும் கோட்டையாக டோப்ரூக் விளங்கி வந்தது. எனவே விடாப்பிடிக்கோர் மறுபெயர், டோப்ரூக் என்றுங் கூறுவாராயினர். அத்தகைய டோப்ரூக் நாஜிப்படைத் தலைவன் ஜெனரல் ரோமலின் தந்திரப் பாய்ச்சலால்

22ந்தேதி வீழ்ந்துவிட்டது. நாற்பத்தி எட்டு மணிநேரமே போர் நடந்தது, நடுங்கா உள்ளம் படைத்த வீரர்கள் காவல்புரிந்தும், கடும் போரிட்டும் கோட்டையிலே இன்று, கொடிமரத்திலே சுவஸ்திகா பறக்கிறது. 32,000 பேருக்கு மேலாக நேசநாட்டு வீரர்கள், அச்சுநாட்டுப் படைகளிடம் சிறைப்பட்டு விட்டனர். திடீரென்று கோட்டை பிடிபட்டுவிடவே, தளவாடங்களும் எதிரிகளிடம் சிக்கிக்கொண்டிருந்து விட்டிருக்கும்.

22-6-42ல், ஜெனரல் ரோமலிடம் சிக்கிய இந்த டோப்ரூக், 24 மணி நேரத்திலே, இத்தாலியரிடமிருந்து பிரிட்டிஷாரால் 24-1-41ல் பிடிக்கப்பட்டது.

அக்காலை அங்கு தளபதியாக இருந்த ஜெனரல் வேவல், ஜனவரி 22ந் தேதி, டோப்ரூக் கோட்டையைத் தாக்கினார். 23ந் தேதி, பகலோன் புறப்படு முன்னம், வெற்றி வீரராக வேவல் வெளிவந்தார், டோப்ரூக் வீழ்ந்தது. கோட்டைமீது படைகள் தாக்கு முன்னம் 87 முறை பிரிட்டிஷ் விமானங்கள் ஆங்கு குண்டு வீசின. டோப்ரூக்கில் கிளம்பிய தீ, 80 மைல் தொலைவுவரை தெரிந்ததாம்! வேவலின் வெற்றி ஜனநாயக நாட்டினரின் உள்ளத்தில் உல்லாசத்தைக் கிளப்பிற்று. டோப்ரூக் கோட்டைக்குள் நுழைந்ததும் ஆஸ்திரேலியப் படை, கொடிமரத்திலிருந்து இத்தாலியக் கொடியை இறக்கிவிட்டு, தமது சோல்ஜரின் தொப்பியை அதிலே தொங்க விட்டனராம். இங்ஙனம் பிடிபட்ட டோப்ரூக். ஜெனரல் ரோமலின் உறுமலுக்கு அஞ்சாது தாக்குதலுக்குத் தளராது எட்டு மாதங்களுக்கு மேலாகத் தாக்குப் பிடித்தது. ஆனால், இம்முறை 48 மணி நேரத்திலே வீழ்ந்தது. சிந்தை நொந்தும், சினந்தும், சீறியும், பிரிட்டிஷ் பத்திரிகைகள் எழுதுகின்றன. பாராளுமன்றத்திலே பதைப்பு, மக்கள் உள்ளத்திலே திகைப்பு, நாஜி கூடாரத்திலே களிப்பு, ரோமலுக்குப் புதுப்பட்டமாம், அதைத் தாங்கிக் கொண்டு, ரோமல் தன் படைகளை, எகிப்து நோக்கிச் செலுத்துகிறாராம். கெய்ரோவில் கிலியும் கவலையும் தோன்றும்விதமானதாகி விட்டது, காலம்.

டோப்ரூக், இத்தாலியரிடமிருந்து, ஜெனரல் வேவலால் பிடிக்கப்பட்டபோது, இத்தாலிய டாங்கிகளை விட பிரிட்டிஷ் டாங்கிகள் மிக்க வலி உள்ளனவாக

இருந்தன. எனவே தான் டோப்ரூக் வீழ்ந்தது என்று இத்தாலிய தளபதி ஒருவர் கூறினார். இன்று அதுபோன்றே, பிரிட்டிஷ் டாங்கிப்படையைவிட ஜெர்மன் டாங்கிப்படை வலுவில் அதிகமானதாக இருந்ததுடன், வெளியே வீசும் தணல் காற்று உள்ளே உட்கார்ந்து டாங்கியைச் செலுத்தும் வீரனை வாட்டாதபடி உள்ளே குளிர்ச்சியாக இருக்குமாறு ஜெர்மன் டாங்கிகள் அமைக்கப்பட்டிருந்தன, ஜெர்மன் வெற்றிக்கு அதுவே காரணம் என்று பேசப்படுகிறது. ரோமலின் படைகள் களைத்துவிட்டனர். எனவே பெருந்தாக்குதலுக்கு முன்வாரார், என்று பிரிட்டிஷ் படைத்தலைவர் ஜெனரல் ரிட்சி கருதினாராம்! ரிட்சியின் படைகள் தோல்வி அடைந்ததின் காரணங்களை ஆராயப்போகிறார்களாம்! காரணம் எதுவாக விருப்பினும் காலம் பயங்கரமானதாக இருப்பதை நேசநாட்டினர் இதுபோது உணரவேண்டும்.

எகிப்து, சூயஸ் கால்வாயைத்தொட்டுத் தழுவிக் கொண்டிருக்கிறது. சூயசில் சுவஸ்திகா நாட்டப்பட்டால், சிரியாவுக்கு ஆபத்து, ஈராக்குக்கு ஆபத்து. அங்கிருந்து இந்தியாமீது பாயவும் வழி சுலபத்திலே கிடைத்து விடும். செங்கடலைக்கடந்து அரபு நாட்டுக்குள் புகுவரோ, சூயசைத்தாண்டி சிரியா செல்வரோ, நேரே கராச்சிக்கே தமது கணைகளைச் செலுத்துவரோ என்றெல்லாம், கவலைப்பட வேண்டியதாகிவிட்டது. எகிப்துக்கான போராட்டம் தொடங்கிவிட்டது என்கின்றனர் நிபுணர்கள். மேற்கே இதுவெனில், கிழக்கே, அசாம் எல்லையை ஒட்டி, ஜப்பானிய படைகள் குவிந்துள்ளன! மேற்கிலிருந்து நாஜியும் கிழக்கேயிருந்து ஜப்பானியப்படையும் ஏக காலத்திலே இந்தியாவின்மீது பாய்ந்தால், என்ன நேரிடும் என்பதை எண்ணவும் பயமே உண்டாகிறது. பர்மாவிலே குவிந்துள்ள ஜப்பானியப்படைகளைக் காண்கையில், இந்தியாமீது படை எடுக்க ஜப்பான் பெரியதோர் திட்டம் தயாரித்தக்கொண்டிருப்பதாகத்

தெரிகிறது என்று, கல்கத்தா அமிர்தபஜார் பத்திரிகை எழுதுகிறது! இந்தியாவின் சர்வாதிகாரி என்ற பட்டமிட்டு, சுபாஷ்போசை ஹிட்லர் தட்டிக்கொடுக்கிறார் என்று லண்டன் பத்திரிகையொன்று கூறுகிறது, கருப்பு உடையும் ராணுவ அங்கியும் பூண்டு, சுபாஷ்போஸ், காணப்பட்டார் என்று அப்பத்திரிகை எழுதுகிறது. இது வெறும் மனப்பிராந்தியாக இருக்கவேண்டுமென்று அவாவுகிறோம். இந்தியாவுக்கு இணை

யில்லா நெருக்கடி முற்றாதிருக்க வேண்டுமானால், எகிப்து நாடு எதிரிகள் வசம் சிக்காதிருக்கச் செய்ய வேண்டும். கத்தரிக்கோலிடையே சிக்கிய பட்டுத்துணிபோல், இந்தியா, மேற்கிலிருந்து நாஜிப்படையும், கிழக்கேயிருந்து ஜப்பானியப் படையும் தாக்கிடும் நிலையில் சிக்காதபடி தடுக்கவேண்டும். நாட்டினர், இத்தகைய கேட்டினைத் தவிர்க்க, தோள்தட்டி எழுந்து, கச்சையை வரிந்து கட்டவேண்டும்.

ரஷியக்களத்திலே, செபாஸ்டபூல் கோட்டை மூன்று வாரங்க ளாக, மூர்க்கத்தனமான நாஜித்தாக்குதலுக்கு ஆளாகிவருகிறது. கடைசிசொட்டு இரத்தம் சிந்தும்வரை, செபாஸ்டபூல் கைவிடப் படமாட்டாது, ஆனால் செபாஸ்டபூல் எதிரியிடம் சிக்கிவிட்டால் ஆச்சரியப்படமுடியாது. ஏற்கனவே மக்கள் அந்நகரை விட்டு வெளியேறி வருகிறார்கள். அரண்களைத் துளைத்துக்கொண்டு நாஜிப்படைகள் ஊடுருவிப்பாய்கின்றன. இந்நிலையில், இங்கும், நா ஜி யு ம் ஜப்பானியரும் இருபுறம் நின்று, ரஷியாவை இடுக்கிக்கொள்ள முயலுமெனத் தெரிகிறது. ரஷியகளத்திலே ஐரோப்பியபுறமிருந்து நாஜிபடை தாக்குகையில், சைபீரியா பக்கமிருந்து ஜப்பானியப்படை தாக்குமாம்! ஆகவே இரு போர்க்களமும், பயங்கரமானதாகக் காணப்படுகிறது.

நேசநாட்டினரின் கொடி தினம், சோவியத்நாள் முதலிய விழாக்கள் கொண்டாடி, நேசநாடுகள், தமது நெஞ்சிலிருக்கும் உரத்தைக்காட்டிக் கொண்டுள்ளன. அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட்டுடன் மிஸ்டர் சர்ச்சில் ஆலோசித்து, இரண்டாம் போர்முனை, சீனாவின் சஞ்சலம் ஆகியவைபற்றி முக்கிய

முடிவுகள் செய்துள்ளாராம். நேசநாட்டினர், இனி பிணமலை குவித்தேனும் எகிப்து எல்லையையும் ரஷியகளத்தையும் காப்பாற்றித் தீரவேண்டும்! இச்சமயத்திலே, திறமும் தீரமும்கொண்டு தாக்கினால், நாஜியின் நினைப்புச் சாய்ந்து சரியும், கனவு கருகும் என்பது திண்ணம்.

28.6.1942

பிராயச்சித்தம்

“கருமம் விடாது,” முற்பகல் செய்யின் பிற்கல் பிறையும்’ “பழித்தார்’ பழிக்கப்பெற்றோரின் வாயிலை நண்ணி அவர் தயவுக்காகக்கெஞ்சும் காலமும் வரும் “என்று சொல்லுவர். அத்தகைய நிலை தோழர் இராசகோபாலாச்சாரியாருக்கு இதுபோழ்து நேரிட்டுள்ளது. சென்ற 24.6.42ந் தேதி அவர் பம்பாயில் அகில இந்திய முஸ்லிம் லீக்தலைவர் ஜனாப் ஜின்னாபைப் பேட்டிகாகண்டு ஒன்றரை மணிநேரம் பேசிக் கொண்டிருந்தாராம். மறுநாளும் அவர் விக்தலைவரை சந்தித்து ஐந்துமணிநேரம் பேசினாராம். இந்து முஸ்லிம். ஒற்றுமை பற்றியே பேச்சுவார்த்தை நடந்ததாக அறிவிக்கப்படுகிறது. இந்தச் செய்தியைக் கேட்டதும் ஆச்சாரியார் தம் உத்தியோகபருவத்தில் செய்த கரு, மக்களுக்காக தற்போதைய உத்தரபருவத்திலே அவர் செய்யும் பிராயச்சித்தமா இது என்ற எண்ணம் தோன்றுகிறது.

“பாகிஸ்தான் திட்டத்தை எதிர்த்தே தீரவேண்டும். அது தாய்நாட்டைக் கூறுபோடுவதாகும், பாற் பசுவை வெட்டுவதாகும்” என்ற பொருத்தமற்ற கதைகள் கூறிக்கண்டித்த ஆச்சாரியார் இன்று சம்மந்தி காந்தியாரையும் எதிர்த்து பாகிஸ்தான் திட்டத்துக்கு ஆதரவுதரும் காட்சியைக் காண்கிறோம். பாகிஸ்தான் என்றால் பசுவை வெட்டுவதில்லை; நாட்டைக் கூறுபோடுவதல்ல; இந்தியா ஒரு கண்டம், அதில் பல தனி அரசு நாடுகள் இருக்கலாம் என்று நியாயம் பேசி ஜனாப் ஜின்னாவின் நட்பை நாடவேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டிருக்கிறது. முஸ்லிம் லீகை வகுப்புவாதக் கட்சி என்றும், லீக்தலைவர் ஜனாப்ஜின்னா கிடைக்க முடியாத காரியத்தைக் கேட்கிறார், அவருடன் சமரசம் பேச முற்படுவது வீண்வேலை என்று துச்சமாய் பேசிய அதே ஆச்சாரியார் இன்ற ஜனாப் ஜின்னாவைப் பேட்டிகண்டு பேசியிருப்பதை காலத்தின் கோலம் என்று சொல்லுவதா அல்லது இந்திய அரசியல் விந்தை என்று சொல்லுவதா என்று தெரியவில்லை.

இந்தப்பேச்சு வார்த்தையில் பாகிஸ்தான் திட்டம்பற்றியே முக்கியமாக விவாதம் நடந்திருக்கக் கூடும். இப்பொழுது இருதரத்தாரும் ஒன்றுபட்டு அரசாங்கத்தை ஏற்று நடத்துவோம்; யுத்தத்துக்கப் பின் பாகிஸ்தான் திட்டம்பற்றி ஆற அமரப்பேசி

முடிவுசெய்து கொள்ளலாம் என்று ஆச்சாரியார் கூறி இருப்பார். லீக் தலைவரோ அதுகேட்டு குறுநகை செய்து “இல்லை, நண்பரே அவ்வித ஏற்பாடு கவைக்கு உதவாது பாகிஸ்தான் திட்டத்தை நீரும் உம்மை ஆதரிப்போரும் மாத்திரமல்ல. காந்தியாரும் காங்ரசிலுள்ள மற்றெல்லாரும், இந்துசபையார் எனப்படுவோரும் இப்பொழுதே திட்டமாக ஒப்புக்கொள்ள வேண்டும். யுத்தம் முடிந்தபின் வேறு எவ்விதப் பேச்சும் ஆராய்ச்சியும் இல்லாமலே பாகிஸ்தான் திட்டம் அமலுக்க கொண்டுவரப்பட வேண்டும். இதற்கு இணங்கினால்தான் சமரச ஒப்பந்தத்துக்கு இடம் உண்டு” என்ற ஐயம் திரிபற எடுத்துக்கூறி இருப்பார். ஆச்சாரியார் மாயவலையில் விழ லீக்தலைவர் அவ்வளவு ஏமாந்தவரல்ல. “வந்தவர் அனுமாரா, விபீடணனா, அல்லது எடுத்த காரியத்தைத் தொடுத்து முடிக்க வல்லுநரா என்று தீர விசாரித்துத் தெரிந்து தான் உருவான காரியத்தில் ஈடுபடுவர் என்பது திண்ணம். பேச்சு முடிந்ததும் தோழர் ஆச்சாரியார் வாதாவுக்கு சம்மந்தி காந்தியாரைக் கலந்து பேசப்போயிரக்கிறாராம். காலம் முழுமூச்சாய் ஆச்சாரியார்மீது வஞ்சம் தீர்க்க தொடங்கி இருப்பதாக காணப்படுகிறது. காங்கிரசு ஆட்சியில் முதல் மந்திரியாய் இருந்த பொழுது எதிர்க்கட்சியாரைப் பொருட்படுத்தாமல் எதேச்சாதிகாரம் செலுத்தய வருக்கு இதுகாலை முன்பு புறக்கணித்த கட்சியின் நிழலிலே நின்று பிரசாரம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. திராவிடன்தான் என்பதை போக்கற்ற. பேச்சு என்ற உல்லங்கனம் செய்த ஆச்சாரியார் பெரும்பான்மை மக்கள் கேட்டால் திராவிட நாட்டையும் பேறுபிரித்து விடலாம் என்கிறார் இப்பொழுது. அந்று அரியணைமீது சில காலம் வீற்றிருந்த பொழுது அவர் கூறியுள்ள ஆனவப் பேச்சுகளை எல்லாம் இப்பொழுது திரும்ப எடுத்து வாயிலிட்டு விழுங்க வேண்டியதாகி விட்டது. அன்ற நமது நாட்டுக்கு பொதுமொழி வேண்டாமா என்று கூறி இந்தியை வலுக்கட்டாயமாக தமிழர்மீது சுமத்தி வீர இளைஞர்கள் தாலமுத்து, நடராசன் இருவரின் மாணங்களுக்கும் பொறுப்பாளி ஆனார். இன்று அதற்கு மாறாக சென்னை மாகாணத்தின் நிலையே வேறு ஆகையால் காங்கிரசார் உத்தியோகம் ஏற்றே தீரவேண்டும் என்ற பிரசாரம் செய்து வருகிறார் ஆச்சாரியாரின் நடத்தையைக் கண்டு உலகம் சிறு நகைகொள்ளுகிறது. இந்த நிலைமையில் ஆச்சாரியார் மனம் மாறிவிட்டார், இனி நிலைமாறார் என்று பரவசம் பட்டு, அவருக்கு துணை நிற்கவேண்டும் என்ற வீணாகப் பேச்சுப்

பேசுவதற்கு இடம் இல்லை. பிரயாசித்தம் இன்னும் பூர்த்தியாகவில்லை. காங்கிரசாட்சியில் தமிழர் பட்ட துன்பங்களுக்கும் வீரவாலிபர்களின் அகாலமரணங்களுக்கும் பிராயசித்தம் தேடவேண்டாமா? ஆரிய ஆதிக்கம் அடியோடு ஒழிவதற்கு ஆயிரக்கணக்கான தியாகங்களாலுமன்றோ அவை சரிப்படுத்தப்பட வேண்டும். காலமும் வீரத்மிழர்களின் ஆண்மையுமே அதற்கு வழிகோலட்டும் அதனிடையில், ஆச்சாரியாரின், பிராயச்சித்த பருவநிகழ்ச்சிகளை கண்டுகளிப்போம்.

திராவிட நாடு 28.6.1942

ஆறுமுகமும் அழுகுரலும்

ஐந்து வீரர்களும், ஒரு சூரரும் என்ற தலைப்புக் கொடுத்து, அடுத்த வீட்டுக்காரி பிள்ளைபெற, தான் அரசமரம் சுற்றி அடிவயிற்றைத் தடவியும் கருவுறாத காரணத்தால், சலிப்புக் கொண்டவள் குழவிக்கல் கொண்டு அடிவயிற்றிலே இடித்துக்கொண்ட கதைபோலே, தன் ஆசிபெற்றவர்களுக்கு, தன் ஆராதனைக்குரியவர்களுக்கு, வைசிராய் நிர்வாக சபையிலே இடம் கிடைக்காமல் வேறு யாராருக்கோ கித்துவிட்டது கண்டு, மனம் வெதும்பு அழுகுரலைக் கிளப்பியிருக்கிறது. பரிதாபத்துக்குரிய பாரததேவி! என் அனுதாபத்தை அதற்கு அனுப்புகிறேன். தேவி தேம்பாதே! உயர உயரப்பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாவதில்லை! ஆசை தாசில் செய்ய இருக்கிறது நிலைமையோ கழுதைமேய்க்க வைக்கிறது என்பார்களே அதைப் போலாயிற்று உன் அன்புக்குரியவர்கள் கதி என்ன செய்யலாம்? இனி ஒரு முறை, சர்க்காரை மிரட்டிப் போரிடுவோம், புறப்படுவோம் என்று புலம்பிப்பார். கினடைத்தால் பெற்றுக்கொள் என்று தேவிக்குக் கூறிட என் நெஞ்சு என்னைத் தூண்டுகிறது. வைசிராய் நிர்வாக சபைக்கு இப்போது புதிதாக ஆறு பிரமுகர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். அதிலே சர்.மகமது உசுமானுக்கம், டாக்டர். அம்பேத்காருக்கும் இடங்கிடைத் திருப்பதும், முக்கியமான இலாக்காக்கள் கிடைத்திருப்பதும், தேவிக்கு மிக்க துக்கத்தைத்தான் கொடுத்திருக்கும்! தீண்டாத ஜாதியார் என்றால் அவரை ஆரியரும் அவர் அடிவருடும் அஞ்ஞான சொரூபிகளும் தீண்டார். ஆனால், அவர்களுக்கு நாடாளும் நிலையத்திலே நடு நாயக இடங் கிடைப்பது கண்டு ஆரியர் மனம் அழியும், மமதை அழியும். ஆணமழிந்து ஆரியர், அன்றுபோல் இன்றில்லை. இன்றுள்ளதுமூ நாளை நில்லாது போலும் என்று இரங்கும் காலம் பிறந்து, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறது. இந்திரனைச் சந்திரனை, இருக்குவை யஜுரை, யாகத்தை, யோகத்தை, தசரத ராமனை, பலராமனை, கருடனை, கடுவனை, எதை எதையோ கூறி ஏய்த்துவந்த காலம் போச்சே என்று ஏக்கம் பிறந்துவிட்டது. பாபம்! மீசை நரைத்துப் போச்சே கிழவா, ஆசை நரைக்கலாச்சோ! என்று கேட்பதுபோல், ஆரியரே உமது காலம் மலையேறலாச்சே, களவு அழிந்தோழியலாச்சா என்று கேட்கவும் என்மனம் என்னைத் தூண்டுகிறது!

தாவிக்குதித்து, வாலைக் குழைத்து, வாயைத் திறந்து,

எகிரிக்குதித்தும, எட்டாததாலே, சரி கூறிற்றாமே, சீச்சீ! இந்தப் பழம் புளிக்கும்! என்று. அதுபோல், பாரததேவி போன்ற பஞ்சாங்கங்கள், நம்மவருக்குக் கிடைக்காததால், இந்த வைசிராய் நிர்வாக சபைப் பதவிகளைப் பயனற்றன. பசையற்றன என்று பல சொல்லித் தமது பதைப்பை ஆற்றிக் கொள்கின்றன. எதிர் வீட்டிலே கலியாணம், இங்கோ இவன் கணவன் இறந்த தினம், பிறந்தது. சிரார்த்தம், எதிலே, ஜடைபோட்டு மலர்சூட்டி, மங்கள ஸ்நானம் செய்து. மணவரையிலே, பெண் அன்னமென நடந்து, ஆணழகன் கைபற்ற, வெள்ளை உடையும், விம்மும் விழியும் மொட்டைத் தலையும், குட்டைக் கருத்துங்கொண்ட விதவை, அவர் ஆடினார், பாடினார், எனக்காபரணம் சூட்டினார், ஓடினார், உழைத்தார், எனக்கு ஒன்பது வேலி நிலந்தந்தார், படுத்தார் புரண்டார், பாவி என்னை விட்டுப்போனாரே! என்ற பிரலாபிப்பது போலே, ஜாம் ./ஜாமேன, வைசிராய் வரவேற்க, சர்க்கார் அதிகாரிகள் எதிரே சலாமிட்டு நிற்க, புதிய அங்கத்தினர்கள் வேலையில் அமரச் செல்கின்றனர். அது கிடைக்காததால் வீங்கிய மனதுடன் வேதனைப்படும் வீணர் கூட்டம், ஐந்து வீரர்களும் ஒரு சூரரும ஏன்று கிண்டல் பேசியாவது தமது துக்கத்தை மாற்றிகொள்ள முயலுகின்றன. ஐந்து வீரர்களும் ஒரு சூரரும் இவைகளைக் கவனிக்கவா போகிறார்கள்! கிழட்டுப் பிணங்களின் வாய் அசைபோடுவது கண்டு, முறுக்கு முத்தாயிகள், மூலைக்கா போயமர்வர்! யாரது, முன்பு சொன்னது குக்கல் குலைத்திருக்க, ஒட்டகம் வழிநடந்தே சென்றது என்று! ஆம! சர். சாமுவேல் ஹோர் கூறினார்! காங்கிரசைப் பற்றித்தான் முன்போர் முறை கூறினார். அந்த ஐவர் வீரராகவேனும், மற்றவர் சூரராகவேனுமிருக்கட்டும, அவர்களைக் குறை கூறும், இந்த தம்பட்டங்களின் தலைவர்கள் கூட்டத்தின் தன்மை என்ன! மூலவருக்கோ, சுயபுத்தி கிடையாது! உற்சவருக்கோ உண்மையை உணரும் திறமில்லை! பிரதம பூசாரியோ, பேதபுத்தியால், பிறிதோரிடம் புகுந்தார்! சேனாவீரருக்கோ சீற்றமிருக்கிறது. சமர் எழா முன்பு, சமர் என்றதும் சாந்தம் மேலிடுகிறது, இடையே நிற்கும் பக்திமான்களுக்கோ, சக்தியும் யுக்தியுமில்லை! இதுதானே தேவி! உன் தலைவர்கள் நிலை; இதைக்கண்டு முகத்தைத் தொங்கவிட்டுக்கொள்ளாது. திமிதிமி என்க் குதித்து, காகூவெனக் கூவி நிப்து ஏனோ, யோசித்துப்பார்.

மூலவர் என்று நான் குறிப்பிடுவது, யாரை என்பீர், காந்தியாரைத்தான் குறிப்பிடுகிறேன். அவர்தானே நாலணா

தந்தாலும் தராவிட்டாலும், கண்கண்ட தெய்வம்! அவரைச் சுயபுத்தி இல்லாதவர் என்று கூற எவ்வளவு துடுக்குத்தனம் இருக்க வேண்டும். பரதனின் பதட்டத்தைப் பாரூர், என்று கதர்ச்சட்டைகளே! பிறர் கருத்துக்குத் தாளம் கொட்டுபவரே! என்னைக் கோபியாதுர்! நான் துட்டத்தனத்தாலே, பதட்டச் சுபாவத்தாலோ கூறுவதல்ல. தயவு செய்து நம்புங்கள்!

கொண்டவன் குரங்கே என்றால், கண்டவன் திம்மான் என்பானாம் என்ற பழமொழியைக் கேட்டிருப்பீர்கள். அதுபோல், காற்தியாரைத் தமது தலைவராகக் கொண்டுள்ள தாசர் கூட்டத்தில் சிலரே, அவரைப் பற்றிய விஷயங்களை வெளியிட்டதால், நானோ பிறரோ காந்தியாரின் திருக்கலியாண குணத்தைக் காணீர் என்று எடுத்துக்காட்டி நகைப்பதிலே குற்றமென்ன! மேலும், உண்மையை உரைக்க அஞ்சுபவன், கோழை மட்டுமல்ல, நாட்டுக்குத் துரோகி, மக்களை மடத்தனத்தில் ஆழ்த்தும் பாதகன் என்பேன்.

கண்ணவிந்தவனைக் கண்ணாயிரமே என்றம், நடந்தாலே தடுக்கி விழுபவனைத் தாண்டவராயன் என்றும், திணறும் பேச்சுக்காரனை, நாவாயிரம் என்றும், கருத்தமேனியனைப் பொன்னி என்றம் கூறுவது பொருந்தாதன்றோ!

கோபத்தைக் குறைத்துக் கொண்டு, குமுறும் நெஞ்சை உம்மிடமே நிறுத்தி, கண்களைத் துடைத்துக்கொண்டு, நான் கூறுவதைக் கேளப்பா, தேசீயத் தோழா! காந்தியார் சொந்தப் புத்தி இல்லாதவர் என்று நான் கூறுவது, கல்கியின் ஆதராத்தின் மீதாகும்! கல்கியோ, காங்கிரஸ் ஏடு! ஜஸ்டிசை ஒழிக்க ஜல்லடம் கட்டிடும், சுயமரியாதையைப் பொசுக்கப் பறையடிக்கும், பார்ப்பனியத்தைப் பரப்பப்பாடும் பார்பபன ஏடு! அத்தகைய கல்கி காந்திக்குச் சுயபுத்தி இல்லை என்று எடுத்துக்காட்டி இருக்கிறது! உண்மையாகவா! என்று பதைபதைத்துக் கேட்வீர்! படியும், இதனை, பதற வேண்டாம் இனியும்.

மகாத்மா காந்தி அவதாரபுருஷர், சத்திய சந்தர், அஹிம்சா மூர்த்தி, அன்புன் உருவம். அவரைப்போன்ற தலைவர் கிப்பதற்கு நம் தேசம் எவ்வளவு பாக்கியம் செய்திருக்கவேண்டும் என்று கல்கி, 3 ஆம் தேதி எழுதுகிறது.

இது என்ன பரதா! கல்கி காந்தியாருக்குச் சுயபுத்தி இல்லை என்ற கூறினதாகச் சொன்னய். ஆனால் கல்கி எழுதியிருப்பதைக் கண்டால், அது காந்தியாரை அர்ச்சித்திருப்பதாகவன்றோ தெரிகிறது. இப்படியும் பச்சைப் புளுகு பேசுவதா? என்று கேட்பீர்கள். அவசரம் வேண்டாம் அன்பரே! இந்த அர்ச்சனை, அட்டவணைக்குக் கல்கி பேட்டுக் கொண்டது. பிறகு, காந்தியாரின் புதுப்போர்த் திட்டத்தைப் பற்றி எடுத்துககாட்டிவிட்டு, அதிலே முதலிலே ஒரு தவறு இருந்ததென்றும், பிறகு அதனைக் காந்தியார், பிறர் கூறக்கேட்டுத் திருத்திக் கொண்டார் என்றம் எழுதுகையிலேதான், அர்ச்சனையுடன் உண்மையை, நடிப்புடன் நிசத்தை மேல்பூச்சுடன் உள்ளக்கிடக்கையை எடுத்துக்காட்டி இருக்கிறது. அதைக் கவனியும் இதுபோது.

முன்னே எல்லாம் செய்ததுபோல் மகாத்மா இதை குறித்து ராஜாஜியிடம் கலந்து யோசித்திருந்தால் ராஜாஜி மேற்படி இடுக்கை, முதலிலேயே எடுத்துக்காட்டி அடைத்திருப்பார் என்று கூறுகிறது கல்கி.

கேளுங்கள் மூலவரின் யோக்யதையை! அவர் வெளியிட்ட திட்டத்திலே ஒரு இருக்கு, தவறு, இருந்தது, அதாவது அவர் தயாரித்த திட்டம் ஓட்டையுள்ளது. ஆனால் அந்த ஓட்டை அவருக்குத் தேரியவில்லை! பிறர் எடுததுக காட்டியபிறகு தெரிந்து கொண்டார். ஆனால், இத்தகைய ஓட்டை ஓடிசல் இல்லாத திட்டம் தேவை எனில், காந்தியார் முன்பெல்லாம் செய்ததைப் போலச் செய்திருக்கவேண்டும் என்று கல்கி யோசனை கூறுகிறது. இதற்க முன்பு காந்தியார் கையாண்ட முறையாதே என்பீர்! கல்கி கூறுவதைக் கேண்மின். ஆசசாரியாரை முன்பெல்லாம் காந்தியார் கலந்தா லோசித்ததுபோல் செய்திருக்கவேண்டுமாம்! எனவே, காந்தியார், இதுவரை ஆச்சாரியார் சொல்லிக் கொடுத்ததைக் கூறிவந்தார் என்பது தெரிகிறது. ஆகவே காந்தியாருக்குச் சுயபுத்தி இல்லை. ஆச்சாரியார் அருளும் அறிவை இரவல் கொண்டேதான் அவர் இதுவரை வாழ்ந்து வந்தார் என்பதும் தெரிகிறதல்லவா!

சுயபுத்தி இல்லாது, சூழ்ந்திருப்போரிடம் இரவல் வாங்கிப் பிழைக்கும் காந்தியார், அவதார புருஷராம்!

அவதார புருஷர்கள் அறிவை இரவல் வாங்கும் பேர்வழிகளாகவே இருப்பர் போலும்!

ஆச்சாரியார் போனாலென்ன, அபுல்கலாம் ஆஜாத் இல்லையா, அலகாபாத் பண்டிதர் இல்லையா, சர்தார் இல்லையா, சியாமளா தேவி இல்லையா என்று கேட்பீர்கள். இருக்கிறார்கள். பலர். இருந்துமென்ன! அவர்கள் சூன்ய மூனைகள்! அடியேன் கூறுவதல்ல கல்கியின் கருத்தே! படியும் இதனையும், தற்சமயம் மகாத்மாஜியைச் சுற்றி இருப்பவர்கள் பக்தி மட்டும் உள்ளவர்களாதலால்தான் மகாத்மா மேலும் மேலும் விளக்கம் கூறுவது அவசியமாகிறது என்று கல்கி எழுதிற்று. பக்தி உண்டு. யுக்தியோ, தவறைத் திருத்தும் சக்தியோ இல்லாத பல்லாண்டு பாடிடும் கோஷ்டியே இப்போது வர்த்தாவிலே காந்தியாரைச் சுற்றி வட்டமிடுகிறது என்பது குட்டிக் கல்கியின் கருத்து. கோழி பிடிக்கச் செல்லும் குள்ளநரி கள்ளநடை நடந்து கதவிடுக்கில் நுழைந்து போவதுபோல், காந்தியார் சுயபுத்தியற்றவர் என்பதைக் கூற, கல்கி, அர்ச்சனையைக் கலக்கி, பின்னர் உண்மையை, முக்காடிட்டுக் கொண்டுவந்து நிறுத்துகிறது நம் முன்பு! நடுக்கத்தால் பிறந்த அந்த நாசூக்கான முலாம் நீக்கிப் பாருங்கள். கல்கி கூறியதிலிருந்து, மூன்று தகவல்கள் தெரிய வருகிறதா இல்லையா.

1. காந்தியாருக்குச் சொந்தப்புத்தி இல்லை.

2. இதுவரை ஆச்சாரியாரைக் கேட்டு அவர் திருத்தியபடியே நடந்து வந்தார்.

3. இப்போது காந்தியாரைச் சூழ்ந்திருப்பவர்கள், சுத்த மண்டுகள்!
ஐந்து வீரரும ஒரு சூரரும் தென்படும் தேவியின் கண்களுக்கு, மதி இரல்பெறும் மகாத்மாவும், ஆட்டி வைக்கும் ஆசசாரியாரும், கையைக் கட்டிநிற்கும் கபந்தங்களும் இருத்தல் தெரியவில்லையா! ஏளனமாகக் கூறிவிட்டாளே தேவி, அதிகாரம் வகிக்கப்போகும் அறுவரை, அதே ஏளத்துக்காக நான், தேவியின் பூஜைக்குரிய திருக்கூட்டத்தைப் பற்றி, சூன்ய முனிவரும், அவரைச் சூழ்ந்துள்ள முண்டங்களும் என்று

எழுதினால் தேசீய திருக்கூட்டத்துகுக் கோபம் பொங்காதா என்ற கேட்கியேன். பாருங்கள் உமது மனக்கண் கொண்டு அந்தப் படத்தை இரவல் மதிவாங்கும் மகாத்மா, மறுமணத்துக்குத் தயாராகும் ஆசசாரியார், விஷயமறியாத வீணர்கள் இதுதானே வார்த்தாக் காட்சி கல்கியின் எழுத்தோவியத்தின் படி! இத்தகைய இடத்தை ஏந்தித் தொழும் தேவியும் பிறவும், பிறரைப் பற்றிப் பேச, நாக்கை நீட்டுகின்றனவே, சொரணை என்ற சாணைக் கல்லிலே, நாவை வைத்து தீட்டிக்கொண்டு, மானம் எனும் மருந்துண்டு, பேதைமை எனும் நோய் போக்கிக் கொள்ளக்கூடாதா? என்று கேட்கிறேன். வீரர், சூரர் என்று ஏளனம் புரியும் ஏடுகள் இந்தப் புரிதய நிர்வாகச் சபைனினர் வெறும் பெம்மைகளாக இருப்பர் என்றும், வைசிராய் ஒரு பொம்மைக் கொலு வைத்திருக்கிறார் என்பதும போக்கிரித்தனம் அன்றோ!

பொம்மலட்டத்திற் கைதேர்ந்தவர் காந்தியார். அவரது பொம்மைகள் பிறரைப் பொம்மைகள் எனக் கூறுவது. குடியனும் பித்தனும் மற்றையோரைத் தூற்றும் தன்மையது போன்றதாகும். குறும்புக் குணங்கொண்ட குரங்கு. தன் முகத்தின் அவலட்சணத்தையும், கோணற் சேட்டையையும் விறர் கண்டு பரிகசிப்பதைப் பற்றிக் கருதாது. அது பிறரை அழகு காட்டும்! அதுபோலிருக்கிறது காந்துயக் கொலுப்பொம்மைகள், கொடிதாங்கிகள் மற்றவரைப் பொம்மைகள் என்றுரைப்பது ஆச்சாரியார் ஆட்சியிலே ஆடிக்கிடந்தன இந்தப் பொம்மைகள். அசகாய சூரரென வெளியே ஆர்ப்பரித்தன. ஆனால் ஆட்சிமன்றத்திலே, ஆமைபோல் நுழைந்து, ஆந்தைபோல் விழித்து, மந்திபோல் இளித்துக் கிடந்தன என்று அக்காலை இடித்துக் கூறாதாரெவரே! கொட்டாவி விட்ட நேரந்தவிர, வாய் திறந்தறியாத வக்கிரங்களுக்கப் பிறரைப் பொம்மைகள் என்றுரைக்க வாய் உண்டா? எவ்வளவு தைரியம் பாருங்கள்! இந்தக் காங்கிரஸ் எம்.எல்.ஏக்களைக் கடிவாளமிட்டுக் கருப்புக் கண்ணாடியார் காடு மேடெல்லாம் இழுத்துத் திரிந்ததை இவர்கள் மறப்பினும் நாம் மறந்துவிட

முடியுமா! சட்டசபையிலே, கட்டுப்பாடாக மௌன தேவைனைத் தொழுது, சில வேளைகளில் நித்திராதேவியைத் தழுவி வாழ்ந்த இவர்கள் தாம் எந்தத் தொகுதிக்கு எம்.எல்.ஏ.வாகினரோ அந்தத் தொகுதிபற்றி வாய்திறந்து பேசியதுண்டா? அவர்கள் மறந்தது மக்களை! மறவாதது மாதம் 75 ரூபாயை!! இத்தகைய மண்ணாங் கட்டிகளைக் கொலுநிறுத்தி வைத்திருந்ததை நாடு மறக்குமா! இவைகளைத் தலைவர்களாகக் கொண்ட ஏடுகள், வைசிராய் நிர்வாக சபைக்குச் செல்லும் தலைவர்களைப் பொம்மைகள் என்றுரைப்பது பொச்சரிப்பினாலே அன்றி வேறென்ன காரணத்தால் என்று கேட்கிறேன். நான் காங்கிரசாரை எதிர்பபவன் ஆகையினோல், இந்தத் தலைவர்களைப் பொம்மைகள் என்று கூறினேன் என்று சவுண்டிகள் சரக்குக் கூறும். நான் கூறினதும் கூறுவதும் கிடக்கட்டும். இதோ! பாரததேவியின் புலம்பரைக் கேளுங்கள். சென்னையில் காங்கிரஸ் மந்திரிசபை இருந்தபோது கட்சி மெம்பர்கள் உயிருள்ள ஜீவன்களைப்போல் நடந்துக் கொண்டதாக நமக்கு ஞாபகமில்லை இது பாரததேவியின் 3-ந்தேதி தலையங்கமப்பா! உயிருள்ள் ஜீவன்களாக நடந்து கொள்ளவில்லை இந்தக் காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள்! தஞ்சைத் தரணியிலே தேசீயக் கொடி ஏந்தி, வைரம் டாலடிக்க, வட்டி வியாபாரம் பெருக்க, வாகனம் வண்டி குலுங்க வந்தார் தென்னாட்டு நேரு என்று தாகசாந்தி, தீர்த்ததால் திருப்திகொண்ட தொண்டர் குழாம் பராக்குக்கூற பவனிவரும நாடிமுத்து அவர்களே! தீப்பொறியோ, சுரங்கவெடியோ, எரிமலையோ பாயும்புலியோ என்று பலரும் பயந்து கூறும் வண்ணம், படபடவெனப் பேசிடுவீர், கடகடவென நடப்பீர், கனல் கக்குவிர், பொப்பிலியும் திப்பிலியும் எனக்கு நிகலல்லவே என்று குழங்குவீர், திருச்சி என் கோட்டை, நான் வகுப்பதே மற்றவருக்குப் பாட்டை, வீரர்கள் வலம்வருவர் என் வீட்டை, வீசுவேன் விரோதிகள்

மேல் சட்டை, எவரும் விரும்பார் என் விரோதமெனும் கோட்டை என்று கர்ஜிபபீரே, யை இரத்தினவேலுத தேவரே, ரணகளச் சூரரே! சேலம் ஜில்லாவிலே ஒரு ஜெயக்கொடி என் நாளிலே நாட்டுவேன், படை கூட்டுவேன், பகை மூட்டுவேன், தோள் தட்டுவேன், வெற்றி எங்கும் கொட்டுவேன் என்ற பாடும் வீராதிவீர வீரமார்த்தாண்ட நாச்சியப்பர் அவர்களே! பால் வடியும் முகஅழகரே பக்தவத்சலமே! வைத்திய சீனுவாசரே! வக்கீல் பாஷ்யம் அய்யங்காரே! சட்டநாதரே, சொக்கலிங்கரே, சுப்பையாவே, சுப்பிரமணியமே! காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களே, கண்ணியமிக்கவரே, கேளும், கேளும், நீங்கள் உயிருள்ள ஜீவனுகளாக நடந்துகொள்ளவில்லை என்று உமது கட்சி ஏடு, உண்மைக் கூறுகிறது. இதற்கென்ன கூறுகிறீர்? நீங்கள் சட்டசபையிலே, உயிருள்ள ஜீவன்களாக இல்லையாமே, ரோஷம் இல்லையா உங்களுக்கு, பாரததேவியின் இந்தப் பேச்சைக் கேட்டபிறகு, அந்த நாளிலே, சந்தர்ப்பம் இருந்தபோது நீங்கள் சட்டசபையிலே, மற்றக் கட்சியினர் ஆண்டபோது சட்டசபையினர் நடந்து கொண்டதுபோல், மக்களிடம் அக்கரை கொண்டு, மாம்பலத்தார் பின்னால் செல்வதைபிட, மதிவழி செல்வதே சரி என்று விஷயவிளக்கங்கூறி, விவாதத்திலே கலந்துகொண்டு, விவேகிகள் மற்றம் என்ற பெயர் சட்டசபைக்குப் பொருந்துமாறு செய்திருந்தால், இன்ற, உங்கள் கட்சி ஏடு, உங்களை உயிருள்ள ஜீவன்களாக நீங்கள் நடந்துகொள்ளவில்லை என்று இடித்துக கூறுமா? இந்த ஆலவட்டம் வீசப் பெற்றீரே, என்குக் வெட்கம் பிறக்கிறது, சொரணை பிறக்கவேண்டிய இடத்திலே காணோமே நான் என் செய்வேன். இந்த இலட்சணத்திலே, மற்றவர்களைப் பொம்மைகள் என்று கூறுவது எவ்வளவு துடுக்குத்தனம் என்பதைத் தொழர்களே, சற்று யோசித்துப் பாருங்கள்.

சினிமா வருவதற்கு முன்பு, பொம்மலாட்டம் நடப்பது வழக்கம் நம்நாட்டிலே. பெரிதும் அரிச்சந்திர நாடகந்தான் நடக்கும். பொம்மைக்குக் கயறுகள் கட்டிவிட்டு, பின்னாலே இருந்து ஆட்டி வைப்பார்கள். அதற்கும் சட்டசபையிலே நடந்ததற்கும் வித்தியாசமில்லை! கேளுங்கள். பாரததேவி இந்தப் பொம்மைகளைப் பற்றி மேலும் வர்ணித்திருபபதை. எதிர்க்கட்சியினர் சேவாட் கணக்கெடுக்கவேண்டுமென்று வற்புறத்தினால், அந்தச் சமயத்தில் கைதூக்கும் பொம்மைகளாய் இருந்ததைத் தவிர வேறெந்த உருப்படியான காரியத்தையும் செய்துவிடவில்லை கைதூக்கினவாம் இந்தப் பொம்மைகள்!

கைகூப்பின! கைதூக்கின! கைநீட்டின! - இன்று கை பிசைந்து கொள்கின்றன. சட்டசபையிலே ஆச்சாரியார் நுழைந்ததும் கைகூப்பவேண்டியது, வோட் கணக்கெடுக்கும் வேளையிலே ஆச்சாரியார் கண்சிமிட்டியதும் கை தூக்கவேண்டியது. மாதம் முடிந்ததும், 75க்குக் கை நீட்டவேண்டியது! இதுதானே இதுகள் செய்துவந்த காரியம். இன்று குறிப்பாக 75 இல்லையே என்று கைபிசைந்து கொள்கின்றன! சட்டசபைகளிலே இவர்களின் கை வண்ணமும், பொதுக் கூட்டங்களில் கேள்வி கிளம்பும் காலத்திலே இவர்களின் கால்வண்ணமும் கண்டோம், வேறென்ன கண்டோம்!

பாரததேவி இதைக் கூறிவிட்டுச் சும்மாவுமில்லை. மறுக்க ஆள் இல்லை என்றும் கூறியிருக்கிறது. இதை மறுக்கத் தினமணிக்குத் தைரியமுண்டா என்று கேட்கிறது பாரததேவி. மித்திரனையோ விகடனையோ கேளாமல், தினமணியை இந்தக் கேள்வி கேட்டதிலே ஒரு பொருத்தமிருக்கிறது! தினமணியின் ஆசிரியர் ஒரு எம்.எல்.ஏ. ஆகவேதான், தேவி கைரியமாகக் கேள்வி பிறப்பித்திருக்கிறது. ஆச்சாரியாரின் அதிகாரம் என்ற இரதத்தை இழுத்துச் செல்லப் பூட்டப்பட்ட புரவிகளிலே தினமணியும் ஒன்று. தினமணி பன்ற பெயர்கூட புராணத்தின்படி, ஒரு குதிரையின் பெயர் என்ற ஞாபகம்!! இது ஒரு பெரிய குற்றமா சார்! சட்டசபையிலே கட்சி ஒற்றுமை கருதி, சகலரும் தலைவருக்கு அடங்கி இருந்தனர். விவாதம் செய்து வீண்பொழுது போக்குவானேன் என்று இருந்தனர். விஷயம் பூராவும், கட்சிக் கூட்டத்திலேயே பேசி, விவாதிது முடிவுகட்டிக் கொண்டு, பிறகு மசோதாபாக சட்டசபைக்கு வருவது வாடிக்கை. ஆகவே காங்கிரஸ் எம்.எல்.ஏக்களுக்கு, சட்டசபையிலே விவாதிக்க வேண்டி அவசியமே இல்லை என்று அறிவாளிகளாகத் தங்கத் தாங்களே நம்பிக்கொண்டு உள்ள சில காங்கிரஸ் பிரகஸ்பதிகள் வாதாடுவர்!

அந்த வெட்கக் கேட்டையும், கேட்டுவிடுங்கள். கட்சிக் கூட்டத்திலேயும் இதே கதிதான்! சட்டசபை 10-ந்தேதி கூடுவதாயிருந்தால் 2-ந்தேதி அன்றுதான் கட்சிக் கூட்டம் கூட்டப்படு. எவ்வளவு பெரிய மசோதா வருவதாயிருந்தாலும முன்னதாக மெம்பர்களுக்குத் தகவல் கிடைக்காது. நாளை அசெம்பிளியில் இன்னின்ன விஷயங்கள் வருகின்றன என்ற தகவல் மட்டுமதான் மெம்பர்களுக்கு கொடுக்கப்படும் இதுவும், பாரததேவி வாக்கு! பார்த்துர்களா பாபம், இந்தப்

பரிதாபத்துக்குரியவர்களின் வாழ்வை! சட்டசபையிலே எப்படியோ, அதுவேதான் கட்சிக் கூட்டத்திலும் வெட்டிக்கு உலவினர் வீண்காலம் போக்கினர்.

உயிருள்ள ஜீவன்கள் இபபடி நடத்தப்படுவதற்குச் சம்மதித்திருப்பார்களா? என்று பாரததேவி கேட்கிறது. தேவர் முதலாய ஆச்சாரிய அன்பர்கள் பதில் கூறுங்கள்! பிணங்கள் என்று கூறுவதைவிட வேறு கடினமான கண்டனம் உண்டோ! உயிரிருக்கையிலே, ஒருவேளை சோறும் வயிறாரப் போடாது. செத்தவிறகு பனிநீரால் குளிப்பாட்டி பட்டாதை போட்டு, பல்லக்கில் வைத்து, பத்து ஜஜத மேளம் கொள்ள பைத்துப் பிணத்தைத் தூக்கிச் செல்லச் செய்கிறார்களே, அதுபோல் சட்டசபையிலே காவடி தூக்கியின் வாய்க்குச் சீலையிட்டதுபோல் இவர்களை இருக்கச் செய்துவிட்டு. பிறகு வெளியே இரண்டோர் வார்த்தை அவர்களைப் புகழ்ந்து பேசிவிடுவார் ஆச்சாரியார். அவ்வளவுதான். இவர்களுக்கு உச்சி குளிர்ந்துவிடும்! இத்தகைய திருமேனிகளின் கூட்டம் இன்று வைசிராய் நிர்வாக சபையிலே இருப்போரைப் பொம்மைகள் என்று கூறுவது மடத்தனத்தின் சிகரமல்லவா என்று கேட்கிறேன். போர்க்கலாத்திலே பிரிட்டிஷ் பார்லிமெண்டிலே. சென்ற வாரம், சர்ச்சில் மந்திரிசபையை எவ்வளவு காரமாகக் கண்டித்தனர். விவாதம் எவ்வளவு கடுமையாக இருந்தது. சாதாரண காலத்திலே சென்னை சட்டசபையிலே ஆச்சாரியார் ஆட்சியிலே பொம்மைகள் கொலு வீற்றிருந்தபோது எவ்வளவு மௌனம் குடிகொண்டிருந்தது என்பதை இந்த இரு சபைகளையும் ஒப்புட்டுப் பார்த்துவிட்டு காங்கிரஸ் தோழர்களே ஓராயிரம் தடவை கன்னத்திலே போட்டுக்கொள்ளுங்கள். பிரிட்டிஷ் எதேச்சாதிகாரத்தைக் குறைகூறினது தப்பு. தப்பு என்று வறி, ஆச்சாரியார் ஆட்சியின் எதேச்சாதிகாரம். அவர் கட்சி ஆட்களையே உயிருள்ள நீவன்கள் அல்ல என்று அவர் கட்சியை ஆதரிக்கும் பத்திரிகையே, எடுத்துக்காட்டிக் கண்டிக்கும் போக்கிலே இருந்தது. மற்றவவர்களைக் குறைகூற, இனி மானமுள்ள காங்கிரஸ் தோழன் முன்வரமாட்டான் என்று கருதுகிறேன்.

ஆறு பிரமுகர்கள் நியமனம் பற்றி அக்ரகாரம் அழுகுரலைத்தான் கிளப்பும். அதிலே ஆச்சரியமில்லை. நமது கட்சி, இதைப்பற்றி அக்கரை கொள்ளவில்லை. முஸ்லிம் லீக் இது குறித்து, முகாரி பாடாது. ஏனெனில்,

இது கால் இவ்விரு கட்சிகளும், இன எதிர்கால வாழ்வுக்கு அடிகோலும் ஜீவாதாரமான பணியில் ஈடுபட்டுள்ளன. ஆரியரோ, அக்கப்பட்டதைச் சுருட்டும் இயல்பை நெடுநாட்களாகப் பெற்றவர். எனவே வைசிராய் நிர்வாக சபைக்குப் பல புதிய மெம்பர்கள் நியமனம் என்றதும் நாக்கில் நீர் ஊறக் காத்துக்கிடந்தனர். ஏமாந்தனர். அதனால் உண்ட எரிச்சல் ஐந்துவீரரும் ஒரு சூரரும் என்று அழுகின்றனர். இந்த ஆறுமுகம், ஆரியரிடையே அழுகுரலைக் கிளப்பிவிட்டதற்குக் காரணம் என்னவென்பீர்கள். ஆரியருக்கு இவர்களில் பெரும்பாலோர் ஆகாதவர்கள். ஆனால் என்செய்வது? ஆரியரே, ஏறுமயிலேறி விளையாடுமுக மொன்றே என்ற திருப்புகழ் தெரியுமா? அந்த மெட்டிலே இந்தப் பாடல் உமக்காக ஸ்பெஷலாகத் தயாரித்தேன். அது உங்களுக்கு அர்ப்பணம். பெற்றுக்கொள்க!

ஆரிய வஞ்சனைதனை அழிக்குமுகமொன்றே

ஆண்மையொடு காந்தீயம் அழித்த முகமொன்றே
சபர்மதி சூரகுலம் சாய்த்தமுக மொன்றே

சட்டபரிபாலனம் சமைக்குமுக மொன்றே

பாராளும் பண்பினை பயக்குமுக மொன்றே

பகைத்தவர் நடுங்கிடப் பார்க்குமுக மொன்றே

ஆறுமுக மானவிதம் நீரறிதல் வேண்டும்

ஆரிய குலத்தவரே அழுகைவிட வேண்டும்

முதல் மூன்று முகம் நம்மவருக்க நன்கு தெரியும். ஆரிய வஞ்சனையை அழிக்கும் முகம் டாக்டர் அம்பேத்காருடையது. ஆண்மையோடு காந்தியத்தை அழித்த முகம் சர்.சி.பி.ராமசாமி ஐயருடையது. திருவாகூர் வராதே, உஷார்!! என்று சர்.சி.பி. கூறினதும் காந்தியார் அடங்கிய சம்பவம் நீங்கள் அறிந்ததுதானே. சபர்மதி சூரகுலம சாய்த்த முகம், சர். முகமது உஸ்மானுடையது சத்தியாக்கிரக காலத்திலே சாய்த்தாரே

சூரப்புலிகளை அதுவும் தெரியும் உங்களுக்கு. மற்ற முகங்கள் மற்ற மூவருடையது. அவர்கள் பாராளும் பண்பும், பகைவரை அடக்கும் திறனும், சட்ட அறிவும் பெற்றவர்கள், இந்த ஆறுமுகம் தோன்றியதைக் கண்டு, அழும் ஆரியருக்குத் தேறுதல் கூறவே, இத்தனையும் சொன்னேன்! தேறுவரா?

(திராவிடநாடு - 12.07.1942)

பலி பீடம்!

காந்தீயப் பலிபீடம், வழக்கம்போல் இவ்வாண்டும், குருதியில் குளிப்பாட்டுங்கள், ஊன் உணவு ஊட்டுங்கள் என்று கூவிற்று. இவ்வாண்டு, பிரதம பூசாரியையே பிடித்திழுத்ப பலியிட, உடுக்கை கொட்டுவோர் தமக்குள் தீர்மானித்துக் கொண்டனர். ஆனால் பலிபீடத்திலே தலை உருளும் முன்னம், பிரதம பூரியாகிய அன்பர் ஆச்சாரியார், கோயிலைவிட்டு வெளிஏறிவிட்டார்! காங்கிரஸ் பதவியை விட்டு, விலகிவிட்டார்!! காமராஜரின் காகிதக்கத்தி வீசப்பட்டதும், ஆச்சாரியார் அங்கு இருந்தால்தானே ஒழுங்கு நடவடிக்கை என்று கருதி உங்கள் உறவே வேண்டாம் என்று கூறிவிட்டு வெளியேறிவிடத் தீர்மானித்து விட்டார். காலைச்சுற்றிப் பின்னிக்கொண்டிருந்த கொடியை அறத்தெறிந்துவிட்டார். தாமே தேடிக்கொண்ட சிறையைவிட்டு வெளியேறி, வெளியே உலவக் கிளம்பிவிட்டார்.

காந்தீயப் பலிபீடத்திலே, 1938-ல் தோழர் சரிமன் 1939-ல் டாக்டர் கரே. 1940-ல் சுபாஷ் சந்திரபோஸ், 1941-ல் தோழர் எம்.என்ராய் ஆகியோர் சாய்ந்தனர். தோழர் எம்.என்.ராய் மட்டுமே தைரியமாகக் காங்கிரசை எதிர்க்கத் தொடங்கி, தனிக்கட்சி அமைத்துக் கொண்டார். தேசீய ஜனநாயகக் கட்சி எனும் அந்த கழகத்தில் நமது பெரியார் உபதுணைத் தலைவர். இதன் அடிப்படைக் கொள்கை காந்தியத்தை கருவறுப்பதேயாகும்.

பெரியார் அவர்கள் கூட காங்கிரசைவிட்டு வெளியேறியது காங்கிரசின் மூலம் நாட்டுக்கு நற்காரியம் செய்யமுடியாது என்பதைக் கண்டுகொண்ட பிறகுதான். அவர் விலகும்போது, இன்று ஆச்சாரியார், காங்கிரசில் எத்தகைய உயர்தரமான, செல்வாக்குள்ள பதவிகளை வகித்துவந்தாரோ, அதுபேன்றே ஒருந்தவர். இன்றைய காங்கிரஸ் தலைவர்களிலே பலர் அன்ற வெறும் கொடிதாங்கிகள்!

ஏன்? ஏன்? வேண்டாம், போகாதீர்! போய்விட்டால் நாங்கள் என்ன செய்வது? என்று பலர் கேட்டுக்கொண்டு இருக்கும்போது, பலர் கலங்க, சிலரின் கண்களில் நீர் குலுங்க இருக்கும்போது, பெரியார் காஞ்சிபுரத்திலே காங்ரிசின் கட்டை உடைத்தெறிந்துவிட்டு வெளியேறினர். முகிலைக் கிழித்து வெளிவரும் முழுமதிபோல் வெளியே வந்தார். தமிழர் வாழ்ந்தனர்.

இன்று விலகும் ஆச்சரியாரும் 30 ஆண்டுகள் உழைத்து அலுத்தவர். முடிசூடா மன்னராக இருந்தவர். மூலவரின் சுலோகங்களுக்கு வியாக்யான கர்த்தாவாக இருந்தவர். மூளைபலத்தை வடநாட்டுத் தலைவர்களுக்குத் தந்துதவியவர். தமிழரின் விரோதத்தையிம் பொருட்படுத்தாது வடநாட்டவரின் வாத்சல்யமே போதும் என்ற நம்பினவர். மோகனதாசகரம்சந்த் காந்தியை மகாத்மா காந்தியாக்கினவர். ஆகாத திட்டங்களை ஆஸ்ரமவாசி வெளியிட்ட போதெல்லாம், இவர் அவைகளுக்கத் தமது அறிவுமுலாம் பூசிப் பிரச்சாரம் செய்தவர். தென்னாட்டுக் காங்கிரசின் ஜீவசக்தி, விசை, ஆச்சாரியார் என்றால் அது மிகையாகாதது. ஆம்! அவ்வளவு அபாரமாக உழைத்திருக்கிறார் காங்கிரசுக்கு. ஆனால் காங்கிரசின் பாசீசம் அவரைச் சிதைக்கத் துணிந்தது. அதனிடமிருந்து தப்பினார், விலகிவிட்டார்.

விலகியவர், இனி என்ன செய்வார் என்பதைப் பொறுத்திருக்கிறது, விலகுவதால் உண்டாகும் பலன். ஆச்சாரியார் அயரமாட்டார் என்றே நாம் நம்புகிறோம்.

வயதேறி வருகிறது. ஆசைகளெல்லாம் அடங்கிவிட்டன என்று, மித்திரன் எழுதுகிறது ஆச்சாரியாரிப்பற்றி. உண்மை! ஆரியவர்த்தத்தின் ஆதரவைக் கொண்டு ஆச்சாரியார் எவ்வளவோ சாதிக்க முடியும் என்று நம்பினார். ஆவலாக இருந்தார். ஆசை அவலமாயிற்று. எனினும் அவர் மனம் உடைய மாட்டார் என்று நம்புகிறோம்.

நாட்டிலே காந்தீயத்தின் முன்பு தலைவணங்க மறுத்து, அந்தப் பலிபீடத்திலே கடா க்களாக இணங்காது. காந்தீயத்தின் கேடுகளைக் களைந்தெறிய வேண்டுமென்ப தற்காகவே மாபெறும் வீரர்கள், தியாகிகள், எத்தகைய கஷ்டநஷ்டத்துக்கும் கலங்கா உள்ளம் படைத்தவர்கள் தூவெனக் காரியுமிழ்ந்துவிட்டுக் காங்கிரசைவிட்டு வெளியேறிவிட்டனர். காங்கிரஸ் டயர்களின் ஜாலியன் வாலாக்களிலே சிறுண்ட தலைவர்களின் தலைகள் அனந்தம். காவியம் கற்ற கலியாணசுந்தரனால் கந்தரனுபூதி படித்துக் காலங்கழிக்கிறார்.

வைத்தியநாதரோ வாட்டம் தீர கங்கையில் மூழ்குகிறார். மற்றம் எத்தனையோ தலைவர்கள் தமது தலைதெறித்துவிடக் கண்டனர். இறுதிக் காலத்திலே உத்தம தேசபக்தர் வி.ஓ.சிதம்பரம்பிள்ளை அவர்களின் மனம் குமுறியதை யாரே அறியார்! சீர்குலைந்த வாழ்வு, வறுமைப்பிணி முதமைப் பருவத்திலே! யார் அவரை ஆதரித்தனர்! திருநெல்வேலிச் சீமையிலே தியாகத் தீயைமூட்டி அதிலே குளித்துக் குளித்தெழுந்த, குன்றான உள்ளம் படைத்த கோமான், மங்கி சுருண்டு, மறைந்தார். காந்தீயம் அவரை அங்ஙனமாக்கியது. மயிலை அய்யங்காரை மூலையில் மடக்கிற்று. காந்தீயக் கொடுநோய் சூறையாடிய செய்தி, சித்தத்தை நோகச் செய்யும் கேட்டால், செங்குருதியில் கொதிப்பேறும் சொன்னால்! ஆச்சாரியார், இவைகளை அறிவார். ஆனால் தமக்கு இது நேராதென்று கருதினார். உனக்கும் பெப்பே என்று வர்த்தா கூறிவிட்டது. உடனே ஆச்சாரியார், இனி உனது கூட்டுறவே வேண்டாம் என்று கூறிவிட்டு, வெளியேறிவிட்டார். பட்டதெல்லாம் போதும் பராபரமே என்ற நிலைக்கு வந்துள்ளார் ஆச்சாரியார். இனி, அவர் செய்யப்போவது என்ன?

1. காங்கிரசுக்கம் லீகுக்கும் சமரகம் உண்டாக்குவது.

2. நாட்டிலே தேசிய சர்க்கார் அமைப்பது

3. அச்சு அபாயத்தினின்றும் நாட்டைக் காப்பது எனும் இம்மூன்று காரியங்களைச் சுதந்திரத்தோடு செய்யவே, ஆச்சாரியார், காங்கிரசின் தொடர்பை அறுத்துக்கொண்டார். அவரது நோக்கத்திலே முதலாவது, இனி அவர் செய்யக் கூடிய காரியமல்ல! அவர் காங்கிரசை விட்டுப்பிரிந்த பிறகு, அதற்கும் லீகுக்கும் சமரசத்தை உண்டாக்குவதெப்படி சாயும்! காங்கிரசின் பிடிவாதத்தைப் பிளந்தெறிய, கபோதிக் கொள்கையைக் கண்டிக்க அவர் முனைய வேண்டும். விட்டகுறை தொட்டகுறை வேதாந்தம் இனிப்பலன் தராது. அவசியமும் இல்லை என்போம். ஆச்சாரியார் இல்லாக் காங்கிரஸ் நரம்பில்லா வீணை, கூலில்லாக் கத்தி, கவசமில்லா வீரன், அகழியில்லாக் கோட்டை இனி அந்த அலியின் அழகில் யார் சொக்கினால் சொக்கட்டும என்று கவலையுற்று. அழகில் யார் சொக்கினால் சொக்கட்டும் என்று கவலையுற்று, ஆச்சாரியார், நாட்டவரை உள் நாட்டு நாசீசத்தினின்றம்

விலகிவிடும்படி செய்ய வேண்டும். அங்ஙனம் செய்து, காங்கிரசின் செல்வாக்கு பூஜ்யமாயிற்றென்பதை விளக்கிவிட்டார். பிரிட்டிஷ் சர்க்கார், காங்கிரசின் பேச்சை ஒரு புறத்தே ஒதுக்கி வைத்துவிட்டு, பிற கட்சிகளைக் கலந்து பேசி, காரியத்தை நடத்த முன் வருவர்.

ஆச்சாரியாரே! இனி உமக்கோர் அரிய சந்தர்ப்பம் இருக்கிறது என்பதை அறிமின். தமிழ் நாட்டின் தீவிரவாதிகள் தங்களை இனி ஆதரிக்கத் தயார் என்பதைத் தெரிந்து கொள்மின். சமத்ர்மிகள், சுயமரியாதைக்காரர்கள், ஜஸ்டிஸ் யுவர்கள் ஆகியோர் காந்தீயத்தை அடியோடு வெறுக்கின்றனர். காந்தீயம் முதலாளித்துவத்தின் மழலை என்று அவர்கள் கருதுகின்றனர். அவர்கள் இதுவரைக் காங்கிரசைவிடடு வெளியே இருந்ததற்குக் காரணம், சிறைச்சாலைக்குப் பயந்தல்ல. அவர்கள் சிறைச்சாலையை மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எனக்கொளளும் மனப்பான்மையினர், பதவிப் பித்துக் கொண்டல்ல, பதவியை அவர்கள் மதிப்பதில்லை. பணக்காரரிடம் பாசம் கொண்டல்ல, பல வேலைகளிலே அவர்கள் பணக்காரரின் சீற்றத்தையும் சுடுசொல்லையுமே பரிசாகக் கொண்டு மகிந்தவர். அவர்கள் காந்தீயத்தை வளரவிடுவதனால், நாட்டிலே நாஜிசத்தை நடமாட வைக்கிறோம் என்று கட்டுகொண்டே காங்கிரசை எதிர்த்து வந்தனர். எவ்வளவு பலமான தாக்குதலையும் அவர்கள் சமாளிக்கும் சக்தியினர் என்பது தங்கட்கே தெரியும், அனுபவபூர்வமாக! எனவே அத்தகைய பட்டாளம் நாட்டிலே இருப்பதைக் கண்டு காந்தீயர்களின் தடபுடலுக்கு அஞ்சாது கலங்காது காந்தீயத்தை எதிர்த்துப் போரிட இன்றே புறப்படும் என்று ஆச்சாரியாருக்குக் கூறுகிறோம். பலிபீடத்தைவிட்டு விலகியவரை மகிழ்ச்சியே மேற்கொண்டு அவர் செய்யப் போவதென்ன என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

(திராவிட நாடு - 12.07.1942)

ஆசிரியர் கடிதம்

“தோழர்களே! ‘திராவிடநாடு’ பத்திரிகை கொந்தளிப்பிலே முளைத்தது. உமது ஆதரவால் வளர்வது. காலமோ நெருக்கடியானது. மார்க்கட் நிலவரமோ மனத்தை மருட்டுகிறது. காகித விலையோ கடு விஷமாகி விட்டது. கஷ்டமோ அதிகம்! உதவியோ, நானும் இதுவரை கேட்கவில்லை. மாடி வீட்டிலிருந்து கொண்டு, பொழுது போக்குக்காக நான் இப்பணியில் ஈடுபடவில்லை. குச்சு வீட்டை மச்சு வீடாக்க வருவாய் தேடவுமல்ல. இந்தப் பணியில் நான் இறங்கியது! வேறு ஒன்றும் அறியேன் பராபரமே என்ற நிலையிலுமல்ல, இதில் குதித்ததன் காரணம். உங்களோடு வாராவாரம் நேரில் வந்திருந்து பேச முடியாது - திராவிட நாடு நம்மைச் சந்திக்கச் செய்கிறது. கட்சிக்கு, இதுதான் சக்தி. இதற்கு நீங்கள் கை கொடுக்க வேண்டாமா? சந்தா அனுப்ப வேண்டாமா? விற்பனையை உடனுக்குடன் அனுப்பித் தந்தால் பளுவு குறையுமே! அது செய்யக்கூடாதா? உமது செல்வாக்கைச் செலுத்தி, விளம்பரங்கள் அனுப்பினால், இளைத்த உடலுக்கு டானிக் போல், பத்திரிகை விருத்தியடையும். தோழர்களே! அன்பு சில சமயத்தில் பணரூபத்தில் வரவேண்டும். அச்சமயம் இதுதான். எனது தோழர் டி.பி.எஸ். பொன்னப்பன் தந்து வரும் அரிய உதவியே இன்று பத்திரிகையை நடமாட வைக்கிறது. ஆனால், இதையே மட்டும் இறுகப் பிடித்திருக்க இயலுமா? சரியானதாகுமா? இவர் இயக்கத்துக்குச் செய்ய வேண்டிய வேலைகளை இது தடை செய்யுமல்லவா? இவற்றை யோசித்து, இன்றே உங்களாலான உதவியைச் செய்யுங்கள், உள்ளத்தைக் குளிரச் செய்யுங்கள்! திராவிடநாடு அபயக் குரலிடுவதைக் கேளுங்கள், ஆவன செய்யுங்கள்!”

“நாலுபேர் கூடி உரையாடும் மனைபோல் தோன்றுமேயன்றி, கிழமை இதழ், காரியாலயம் மற்ற இடங்களில் இருக்கும் முறுக்குடனும் மினுக்குடனும் இராது. ஒரு புறம், ஓட்டை ஒடிச்சலான ஈருருளை வண்டிகள் சாய்ந்து கிடக்கும்! வட்ட மேஜையும், அதைச் சுற்றி மர நாற்காலிகளும் காணப்படும். கோரம் பலகை ஒரு புறமிருக்கும்! பாயும் தலையணையும் ஒரு புறம் கிடக்கும்! பானையும் அதில் சில சமயம் நீரில்லா வறுமையும் மற்றொரு புறமிருக்கும்! காகிதக் குவியல்

ஒருபுறம்! கொட்ட மிருதங்கம் மற்றொரு புறம்! சத்தியாக்கிரகத்தைத் தழுவும் காலங்காட்டி ஒரு புறம்! ஏ.ஆர்.பி. படைக்கலன்களும் வீரரும் வேறொருபுறம்! குடியரசு நிலையம் புத்தகக்கட்டு பிறிதொரு புறம். ஒரு மூலையில் பாக்கு அரைக்கும் இயந்திரம், மற்றொரு புறம் குளிக்கும் அறை ஒரு பக்கம், கூட்டம் நடத்துவதற்கு ஒரு கூடம், கூடிப்பேச ஒரு சிறுபூந்தோட்டம், நல்லதொரு கேணி, நடுவிலே ஓர் அச்சுக்கூடம்! அதனை ஒட்டி ஒரு பழைய அறை! அதிலே புழுதிக்கிடையே மேஜை நாற்காலிகள், சுற்றியுள்ள சுவரெல்லாம் காகிதச் சுருளைகள்! இவற்றுக்கு இடையே நான்! என் மருங்கே, இளமையும் ஏழிலும், செல்வமும் சீர்மிகு குணமும் கொண்ட என் தோழர் டி.பி.எஸ். பொன்னப்பா! ஈழத்தடிகள்! என்ன கவலை? என்ன தேவை? இதோ கொண்டு வந்தேன், தந்தேன் என்று கூறி என்னைக் குளிர்விக்கும் இராசகோபால் என்று மற்றொரு தோழர், இது 'திராவிடநாடு' இதழ் வெளியிடும் நிலையத்தின் புறக்காட்சி! அகமோ?"

"கடமையால் பிறக்கும் துணிவின்றி, எனக்கு இந்த இதழ் வெளியிடும் வேறு வசதி கிடையாது. சீர்திருத்த ஏடு நடத்துவது, சொல்லொணாத் தாங்கொணாக் கஷ்டமே தரும் என்பதை நானறிவேன். எனினும், வாழ்க்கையில் வேறு எந்த இலட்சியமும் கொள்ள மறுத்தே, இத்துறை புகுந்தேன். இன்னலைத் தாங்கும் இயல்பு பெற்றேன். இதம் தேடும் ஆவலைச் சுட்டேன். என் கடன் இதுவே என் று தீர்மானித்து விட்டேன்."

"ஓராண்டுக்கு முன்பு. 'திராவிடநாடு' தொடக்கியபோது, பலத்த சந்தேகம்! நடத்த முடியுமா? நடுவிலே ஓடம் கவிழுமா என்று! நானிருக்கப் பயமேன் என்றுரைத்து நண்பர் டி.பி.எஸ். பொன்னப்பா பொருளும் இடமும், யோசனையும், நேரமும் இதற்காக மனமுவந்து செலவிட்டு, இதழ் நடந்து வரப் பேருதவி புரிந்தார். அவராற்றிய உதவி என் சொந்த நலனுக்கெனில், நான் அவருக்கு நன்றி கூறல் முறையாகும். அவர் ஆற்றிய உதவி, தமிழகத்துக்கு! எனவே, தமிழகத்திலுள்ள தன்னுணர்வாளர் யாவருமே, அவரை வாழ்த்த, வளம் பெருகிய அவர் வாழ்வு தமிழ் மணங்கமழ்ந்து வீசுதல் கண்டு பாராட்ட, தமிழர் நலங்கருதி நடத்தப்படும் ஏடு, அவரால் வளர்க்கப்படுதவதற்காக நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறார்கள்!"
(திராவிட நாடு 12. 7. 1942)

கூண்டிலிருந்து வெளியேவாருங்கள்!

காந்தியாரின் புகழ் உன்னத நிலையில் இருந்த காலத்தில் அவர் இறந்திருந்தால் அவரது வாழ்க்கை வரலாறு உலக சரித்திர ஏட்டில் மிகவும் பரிமளிக்கத் தக்கதாய் இருந்திருக்கும்; ஆனால் இப்பொழுதோ அவர் வெளியிட்டுவரும் முன்னுக்குப்பின் முரணான கோரிக்கைகளால் அவருக்கு ஏற்பட்டிருந்த மதிப்பை எல்லாம் இழந்துவிட்டார் என்று ஓர் அமெரிக்கப் பத்திரிகை குறிப்பிடுகிறது.

காந்தியாரும் காங்கரசும் தோன்றி இராவிட்டால் இந்திய மக்களுக்கு அரசியல் துறையில் இத்துணை கேடுபாடுகள் ஏற்பட்டிரா என்று நாம் பகலகாலும் வலியுறுத்திக்கூறி வந்துள்ளோம். இரண்டொரு நாட்களக்கமுன் 'அந்தராத்மா' வால் உந்தப்பெற்று வார்தா முனி வெளியிட்டுள்ள அறிக்கையும், அங்கு ஒன்பது நாட்களாக காங்கர சுக்கமிட்டி மலைகெல்லி ஆலோசித்து முடிவுசெய்த நெடிய தீர்மானமும் நமது கருத்தை வலுப்படுத்துகின்றன. பிரிட்டிஷார் இந்தியாவி

லிருந்து உடளே வெளியேறிவிட வேண்டும் என்று பிரிட்டிஷாருக்கு ஓர் அவசரக்கட்டளை. அந்தக்கட்டளைப்படி நடக்காவிட்டால் நாடெங்கம் பரந்த அளவில் பலாத்காரமற்ற போராட்டம் தொடங்கப்படும் என்று எச்சரிக்கை. இவைதான் காந்தியாரின் அறிக்கை, காங்கிரசின் தீர்மானம் இவற்றின் அடிப்படையான கருத்துகள். இந்தியாவின் தற்போதைய அரசியல் சமுதாய நிலைமைகளில் காந்தியாரின் கூற்றும், காங்கரசின் தீர்மானமும் இந்திய மக்களுக்கு மாபெரும் கெடுதி விளைக்கும் என்று அஞ்சவேண்டியிருக்கிறது. உலகம் எங்கும் காந்தியாரின் கூற்றையும் காங்கரசுத் தீர்மானத்தையும் கண்டு வியப்புடன் கலந்த அறுவறுப்பே ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இதுபற்றி பிரிட்டிஷ் அமெரிக்கப் பத்திரிகைகள் வெளியிட்டுள்ள

கருத்துகளை நமது நாட்டினர் கவனிக்கவேண்டுமாய் அவற்றை இங்கே எடுத்துக்கூற விரும்புகிறோம். காங்கரசின் தீர்மானத்தைப் பற்றி பொறுமையுடன் கருத்துக்கூறுவது கடினமாய் இருக்கிறது. காங்கரசுத் தலைவர்களுக்கும் இந்திய அரசியலின் உண்மை நிலைமைகளக்கும் சம்பந்தம் இல்லை என்றே இந்தத் தீர்மானத்தினால் வெளிப்படுகிறது என்று "மார்க்ஷயர் பொஸ்ட்" பத்திரிகை கூறுகிறது. உண்மையை ஒளிப்பு மறைப்பின்று கூறுவதாயின் இந்தியாவின் பொதுநலனுக்குமாறாக காங்கரசுக்கட்சியார் தங்கள் சுயநலத்துக்கு ஆக்கம் தேட முற்பட்டிருக்கிறார்கள் என்றே சொல்லவேண்டும். பிரிட்டிஷார் இந்தியாவிலிருந்து வெளியேற நேரிட்டால் காங்கரசுத் கட்சிக்கே மாபெரும் கேடு விளைகளையும் ஜப்பானின் ஆக்கிரமிப்பு கல்கத்தாவையும், ஏன் டில்லியின் வாயிலையும், அணுகியிருக்கிற இந்த வேளையிலே இவ்விதத் தீர்மானத்தை வெளியிட்டிருப்பது எவ்வளவு முட்டாள் தனம் என்று பாருங்கள் என்ற "பர்மீங்காம் போஸ்ட்" பத்திரிகை சடாவுகிறது இந்தியாவின் உண்மை நிலைபற்றிய அறிவு முழுவதையுமே காங்கரசுத் தலைவர்கள் இழந்து விட்டார்கள் என்று இதனால் தெரிகிறது என்று "லிவர்பூல் டெயிலி போஸ்ட்" குறிப்பிட்டுள்ளது.

பளீர் என்று அறைகொடுப்பது போல "லண்டன் டைப்ஸ்' பத்திரிகை கூறியிருப்பதைப் பாருங்கள் இந்தியா சம்பந்தமாக ஏதும் புதிய திட்டம் வெளியிடப்படும் என்ற பேச்சக்கே இடம் இல்லை. ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள திட்டமே மிக விரிவானதும் பூர்தியானதுமாய் இருக்கிறது. இப்பொழுது முஸ்லீம் லீகுடனும் மற்ற பெரிய சிறுபான்மைக் கட்சிகளுடனும் ஒப்பந்தம் செய்துகொள்வதே காங்கிரஸ்கட்சியார் செய்ய வேண்டிய முக்கிய வேலையாகும் என்று "டைம்ஸ்" பத்திரிகை யோசனை கூறுகிறது லண்டன் டைம்ஸ் பத்திரிகையை பிரிட்டிஷ் அரசினரின் வாய் என்று கூறுவதுண்டு. எனவே ரிட்டிஷ்ஷார் காந்தியாரின் இந்தப்புதிய கபட நாடகத்துக்கு இடம் கொடுக்கப் போவதில்லை என்று நம்ப இடமிருக்கிறது. சர் ஸ்டாபோர்டு கிரிப்சு அளிக்கச்சென்ற விடுதலைத்திட்டம் பற்றி காங்கரசுக்கு கவலையில்லை. தன் சர்வாதிகார

நிலைமையைப் பலப்படுத்திக் கொள்வதில் மாத்திரம் அது சிரத்தைகொண்டுள்ளது என்று “டேய்லி டெலிகிராப்” பத்திரிகை கூறுகிறது இனி, காந்தியாரின் விபரீதப்போக்கால் அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள மனப்பான்மையை விளக்க இரண்டொரு சான்றுகள் இங்கே தருகிறோம்.

“பிரிட்டிஷார் தவறுசெய்யவில்லை என்று சொல்ல முடியாதாயினும், இப்பொழுது காந்தியார் கேட்டப்படி செய்வார்களாயின் அவர்கள் முன்னிலும் அதிகமான தவறைச் செய்தவர்களாவர் என்று “நியூயார்க் டைம்ஸ்’ பத்திரிகை எழுதியுள்ளது. “வாஷிங்கடன் போஸ்ட்’ என்ற பத்திரிகையோ காந்தியாரின், பிடிவாதம் போக்கைக் கவனித்தால் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தை உணர அவருக்கு சக்தி இல்லையோ என்று சந்தேகம் உதயமாகிறது என்று குறிப்பிட்டுள்ளது இதுவரை இந்தியாவைப்பற்றி அமெரிக்க நாட்டினர் டை உண்டாகி இருந்த நன்மதிப்பெல்லாம் காந்தியார் காங்கரசு இவைகளுடைய தற்போதைய நயவஞ்சக திட்டத்தினால் அழிந்து பட்டதுமன்றி காங்கரசு தலைவர்களின் அரசியல் ஞானசூனியத்தைக் கண்டு அமெரிக்காவில் இகழ்ச்சியும் வெறுப்பும் துளிர்ந்துள்ளது என்பதை இதனால் தெரிந்து கொள்ளலாம். முன்பு காந்தியார் தோற்றுவித்த ஒத்துழையாமை வட்ட மறுப்புப் போன்ற இயக்கங்களுக்கு அவற்றின் புதுமையைக் கண்டு மதிமோசம்போய் பல்லாயிரம் மக்கள் ஆதரவு தந்தனர். இப்பொழுதோ அப்படியில்லை யுத்த நெருக்கடியும், யுத்தபீதியும் மக்களைப் பலவழிகளிலும் கலவரப் படுத்தி நிற்கின்றன. மேலும் காந்தியாரின் முந்தின இயக்கங்கள் ஒவ்வொன்றும் மிகவும் கேவலமான தோல்வியைப் பெற்று, நாட்டின் முன்னேற்றத்துக்கு குந்தகம் ஏற்பட்டதைக் கண்டு பொது மக்கள் இப்பொழுது கண்விழித்துள்ளனர். சிறுபானமைக் கட்சிகளும், முஸ்லீம்லீகும் காந்தியாரின் புதிய நாடகத்தை எதிர்க்க முற்பட்டு நிற்கிறார்கள். சர்க்கார் இந்த மிரட்டலுக்கு பணிந்து காங்கரசுத் தலைவர்களிடம் அரசாங்க அதிகாரத்தை ஒப்படைத்தால் நாட்டில் உள்நாட்டுக்கலகம் ஏற்படும் என்று முஸ்லீம்லீம் தலைவர் ஜனாப் ஜின்னா தெள்ளத்தெளிய எடுத்துக்

கூறி எச்சரிக்கை விடுத்துள்ளார். சென்னை சட்டசபை ஜஸ்டிஸ் கட்சித்தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான குமார ராஜா சர் எம்.ஏ. முத்தையா செட்டியார் காந்தியாரின் போலித்திட்டத்தை மாபெரும் முயற்சி என்பறு குறிப்பிட்டுள்ளார். நாட்டின் உண்மை நிலைமைகளை உணர்ந்து அவற்றுக் கேற்ப ஏற்பாடுசெய்ய காங்கரசுத் தலைவர்களுக்கு ஆற்றல் இல்லை என்பதுதான் காங்கரசு நிர்வாகக் கமிட்டி தீர்மானத்தால் வெளிப்படுகிறது. காங்கரசுயராஜ்யம் நிறுவுவதற்காக பிரிட்டிஷ் சர்க்காரை மிரட்டிப் பணியவைப்பது அதன் நோக்கம் என்று தெரிகிறத. ஆனால் உள்நாட்டுக் கலகம் ஏற்படுவதுடன் வகுப்புதுஷ்விஷமும் வீறுகொண்டெழுமே அன்றிவேறில்லை. நாடெங்கும் பொதுமக்களை சட்ட மறுப்புக்கு தூண்டிவிடுகிறது பெருங்குற்றமாகும் என்று அவர் கூறியிருக்கிறார் காங்கரசின் இறுதிக் காலம் தொடங்கிவிட்ட தென்றே இவைகளிலிருந்து ஊகிக்கக்கிடக்கிறது.

தோழர் இராசகோபாலாச்சாரியார் இரண்டொரு நாட்களுக்குமுன் சென்னை சட்டசபை காங்கரசுத்தலைவர் பதவியையும், சட்டசபை அங்கத்தினர் பதவியையும் ராஜிநாமா செய்தபொழுது தாம் கூண்டிலிருந்து வெளிவந்து விட்டதாகவும் சென்னை காங்கரசார் காந்தியாரின் திட்டத்தை ஆதரித்து தீர்மானம் செய்ததால் புதிய விலங்குகளை மாட்டிக்

கொண்டதாகவும் கூறினாராம். இந்திய சர்க்காரோ காந்தியாரின் புதிய இயக்கத்தைப் பற்றி அதிகமாய் கவலைப்பட்டுக்

கொண்டிருப்பதாய் தோன்றவில்லை. இந்த இயக்கம் சில இடங்களில் பரவினாலும் வெகுநாள் நிலைத்து நிற்காது என்று சர்க்கார் அதிகாரிகள் நினைக்கிறார்களாம். மேலும் அரசாங்கத்தார் எவ்வித நிலைமையையம் சமாளிக்கத் தயாராய் இருப்பதாகவும், காங்கரசுத்தலைவர் சட்டமறுப்பு தொடங்கினால் உடனே தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவார்கள்

என்றும் “மெயில்” பத்திரிகையின் நிருபர் புதுடில்லியிலிருந்து அறிவிக்கிறார். ஆகவே காந்தியாரின் புதிய இயக்கம் மூன்று நாளை வேடிக்கையாகவே முடியும் என்று தோன்றுகிறது. அவ்வித முடிவை உண்டாக்க மக்கள் எல்லாரும் காங்கரசுமோகக் கூண்டிலிருந்து வெளிப்பட்டு காந்தியாரின் புதிய காளியாட்டத்தை அடக்க அரசாங்கத் தினருக்கு ஆதரவுதர முன்வரவேண்டும்.

(திராவிட நாடு 19.7.42)

அந்தராத்மாவே அவருக்குக் கூறு!

உங்கள் கட்சியின் கொள்கை என்ன?

நீங்கள் அதுபற்றித் தெரிந்துகொண்டதைக் கூறுங்கள். பிறகு நான் மாற்றத்தை கூறுகிறேன்.

ஜாதி இல்லை, மதம் இல்லை, அதுஇல்லை, இது இல்லை என்கிறீர்களாம்.

ஆமாம்! மனிதனை மனிதன் அடிமைகொள்ளும் கொக்கூடாது, மக்களைச் சுரண்டும் மதம் உதவாது, அது, இது என்று கற்பனைகள் கூறுகிறார்களே அவை கூடாது. மாதர் விடுதலை, தாழ்த்தப்பட்டார் விடுதலை, முதலியன வேண்டும். இது எமது சுயமரியாதைக் கட்சியின் கொள்கை.

ஓகோ! ரொம்பச்சரி! உங்கள் கட்சியிலே பார்ப்பனர் இருக்கின்றனரோ?

கிடையாது, கிடையாது!

சரி, அப்படியானால், உங்கள் கட்சி உருட்டபடாது.

ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?

பார்ப்பனர் இருந்தால்தான், கட்சியைப் பலப்படத்த வெற்றிகரமாக நடத்திச் செல்வார்கள்.

அப்படியா? அவர்கள் இல்லாமலே நாங்கள் வெற்றி அடைய முடியும். இன்றில்லாவிட்டால் நாளை நடக்கும் பார்ப்பனர் உதவிகொண்டு வெற்றி தேவை இல்லை வெற்றி பெற நாங்களே போதும்.

அப்படி எண்ணிவிடாதீர். வெற்றிபெறும் ஜாடை தெரிந்தாலும் போதும், எங்கள் குலத்தவர் அந்தச் சமயத்திலே உங்கள் கட்சியிலே தோன்றி, அவர்கள் இருந்தாலேயே வெற்றி கிடைத்தது என்று மக்கள் நம்பும்படிச் செய்வோர்கள் பந்து கோல் (எணிச்டு) வருகிற சம்யம்பார்த்து, பார்ப்பனர் புகுவார்கள்.

பல ஆண்டுகளுக்கு முன்பு தோழர் வ.வே.சு. அய்யர் அவர்களுக்கும், தோழர் ஓ.அ.க. விசுவநாதம் அவர்களுக்கும் இதுபோன்ற சம்பாஷனை நடந்ததாம். தோழர் வ.வே.சு ஐயர் குறிப்பிட்டகாலம் இது தானோ? இதனால்தானோ, ஆச்சாரியார், பிரிவினைத்திடத்தை ஆதரிப்பதாக இப்போது முன்வருகிறார், என்று எண்ணுகிறேன், கலங்குகிறேன் என்று தோழர் விசுவநாதம், கோயில்பட்டி, விருதுநகர், ஆகிய இடங்கயில் பேசுகையில் கூறினதாகக் கேள்விப்பட்டேன். என்னை அந்தப்

பேச்சு தூக்கிவாரிப் போட்டு விட்டது, ஏனெனில் நானும் எதற்காக ஆச்சாரியார் திடீரென, தமது தீட்சணிய எதிர்ப்பைவிட்டு, தீப்பொறி வீசுவதை நிறுத்திக்கொண்டு, பிரிவினை கோருபவர்களைப் பித்தர், பேயர், என்று தூற்றியதைவிட்டு, தழுவிக்கொண்டு, உச்சிமோர வருகிறார், காரணம் என்ன, என்று யோசித்ததுண்டு. இப்போது நானும் எண்ணுகிறோன். வ.வே.சு. கூறினதுபோல், வெற்றி பிரிவினைக்காரருக்கு ஏற்படப்போகிறது என்பது தெரிந்துவிட்டால், சமயத்திலே சரசமாடு

வோம், சந்தன தாம்பூலாதி சோட சோபசாரமும், தட்சணையும் கிடைக்கும் என்று எண்ணிக்கொண்டு தான் ஆச்சாரியார் வருகிறார் போலும், என்று எண்ணுகிறேன். உங்கள் கருத்து என்ன? சுருக்கமாக “திராவிடநாடு’ பத்திரிகைக்கு எழுதி அனுப்புங்கள்.

பரிதாபம்! சந்தன தாம்பூலம் சாமரம் கிடைக்குமென்று கருதினார்; மதுரையிலே மல்யுத்தம், பம்பாயிலே தார்பூச்சு, வேலூரிலே கருப்புமாலை, கருப்புக் கொடி, கருப்புத் துணியால் மூடப்பட்ட எலுமிச்சம் பழம், கல்மண், இவ்வளவுமாம்!

“மஞ்சள் கருப்பாச்சுதே மரிக்கொழுந்து வேம்பாக்கதே” என்று புலம்புவரே சாவித்ரி, நாடகத்திலே, அதைப்போல், கல்வி முதலாய் கனபாடி ஏடுகள் கதறுகின்றன. நான் என்ன செய்வது, நீயுமா இன்னமும் ஆச்சாரியாரை எதிர்ப்பது? அவர்தான்

உங்கள் பக்கம் வருகிறாரே என்றோர் காங்கிரஸ் தோழர் கண்களில் நீர்புரளக் கேட்கிறார், கடுங்கோபங் கொள்கிறார். ஆச்சாரியார், காங்கிரசைவிட்டு விலகியது போதாது, அவரது போர் நோக்கம் தெரியவேண்டும், பிறகே அவரிடம் நம்பிக்கைகொள்ள முடியும். “அங்கேதான் ஆசை” என்று அவர் இன்றும் கூறுகிறார், தெரியுமோ “எங்கே இருந்தாலும் என் துரை, சாமிக்கு என் மீதில் பட்சம், இருக்குமடி, போடி!” - தலைவன் வேறோர் தையலைத் தேடிச்சென்றான் என்று கூறிய தோழிக்குத் தலைவி சொன்னாளாம், இக்கீதத்தை. காங்கிரஸ் தேவியும், ஆச்சாரியாரைப்பற்றி, இப்படித்தான் கூறும்போலும்! அவர் எங்கே இருந்தாலும், என்னை மறந்தவர்போல் காணப்பட்டாலும், அவருக்கு ஆசை என்னிடந்தான், என்று காங்கிரஸ் கருதுமென்றே நான் நம்புகிறேன். ஏனென்பீர்கள். ஆச்சாரியாரின் பேச்சைக்கேளுங்கள். “நான் காங்கிரசை விட்டுப் பிரிந்தாலும், என் ஆசை எல்லாம் அங்கேதான் இருக்கிறது” என்று கூறுகிறார் நாடகத்திலே பாடுவார்களே, “ஆசையும் நேசமும் ஆனந்தமும் அங்கே... பேசலும் பிதற்றலும், பிறவும் இங்கே...” என்று, அதைப்போலில்லையா, ஆச்சாரியார் பேச்சு! ஆசை அங்கேயாம், அவர் இங்கேயாம், அது என்னைநிலை? ஆணுமல்ல பெண்ணுமல்ல, அலிஎன்றாலோ கோபிப்பென் என்ற மொழிபோலிருக்கிறதே தோழர்களே. காங்கிரசைவிட்டுப் பிரிந்துவருக்கு, ஏதோ விட்ட குறை தொட்டகுறை போலிருக்கிறதோ என்றும் இவரது பேச்சைத்தள்ளி விடுவதற்கில்லை. ஏனெனில், “நான் காங்கிரஸ் என்ற வண்டியிலிரந்து கீழே இறங்கியது, உளைச் சேற்றிலே அகப்பட்டுக் கொண்டிருக்கும் அந்த வண்டியை சேற்றிலிருந்து வெளியே இழுத்து விடவதற்காகத்தான்” என்றும் கூறுகிறார். எனவே அவர், காங்கிரசைத் தலைமுழுகிவிட்டார் என்று சொல்ல முடியுமா!

இருந்து முகந்திருத்தி, ஈரோடு பேன்வாங்கி, விருந்து வந்ததென்று விளம்பினார் ஆச்சாரியார், ஆனால் காங்கிரசென்னும் அடங்காப்பிடாரியோ, ஆடினாள், ஆடிப்பழ ..... பாட்டைப் பூராவும் பிரசுரித்தால், பக்தகோடிகளின் கண்கள் குளமாகும், பாபம்! அதற்குப்பிறகும், ஆச்சாரியார் “என் ஆசை அங்கே தான்” என்று கூறுவது அர்த்தமுள்ளதா, அடுக்குமா அறிவுக்குப்பொருந்துமா, நீங்களே கூறுங்கள்

பார்ப்போடம். ஏன் இன்னமும் அவருக்கு இந்தச் சபலம் இருக்கவேண்டுமோ எனக்குத்தெரியவில்லையே. ஆச்சரியார், இத்தகைய துறவுக்கோலம் பூண்டது மூன்றாம் முறை. முதலிலே குருகுலப்போராட்டம், காங்கிரசில் பார்ப்பனீயம் இருப்பதை எதிர்த்து பெரியார், கலியாணசுந்தரனார், டாக்டர் வரதராஜுலு நாயுடு, ஆகிய மூவரும் முரசுகொட்டியபோது, காங்கிரசைவிட்டு வெளி ஏறினார். இரண்டாவதாக, திருச்சியிலே, தேவருக்கு எதிரிடையாக, டாக்டர் ராஜன் வேலைசெய்து தேவர் தோற்கச் செய்தபோது, "டாக்டர் ராஜனா இப்படிக் காங்கிரஸ் கட்டளையை மீறி கடப்பது" என்று கேட்டு, கைகளைப் பிசைந்துக்கொண்டு, மற்றோர்முறை மரஉரி தரித்தார். தோவலனைக் கொன்றது தவறு என்பதை உணர்ந்து பாண்டியன், "யானே கள்வள், கெடுக என் ஆயுள்" என்று கூறி வீழ்ந்தானோமே உயிரற்று, அதுபோல், "இனி எனக்கென்ன காங்கரசிலே வேலை" என்று கூறி, வெளியே போனார். இது மூன்றாம் முறை! முன் இரண்டு முறையும், துறவுக் கோலம் கலைக்கப்பட்டதுபோல், இம்முறையும் நடந்தால் யார் ஆச்சரியப்பட்ட முடியும், என்று கேட்கிறேன். அதற்கு வழிசெய்வதே, ஆச்சாரியாரின் பேச்சின் மர்மமும்.

வைதீகக்கலியாணத்திலே கண்டிருப்பீர்கள். தெருக்கோடிவரையிலே மாப்பிள்ளை போவான் காசியாத்திரை போவதாகக் கூறிக்கொண்டு! பெண்வீட்டார் போய்; அவனை அழைத்து, ஓர் கன்னிகையைத்தானம் செய்கிறோம், வருக, என்று அழைப்பர். மாப்பிள்ளை திரும்புவார். அதைபபோல், -"நான் காங்கிரசை விட்டுப்போகிறேன்" என்று ஆச்சாரியார் நடிக்கிறார் என்றே நாம் நம்புகிறேன். அவரது எதிர்கால நடிவடிக்கை என்னை ஏமாளியாகவோ; பொய்யனாகவோ ஆக்கும் என்று ஆச்சாரியாரின் அன்பர்கள் கருதுவர். சிலர் கூறுவர், பார்ப்போம் என்று நான் பட்டவர்த்தனமாகக் கூறுகிறேன். நான் கூறுவதே உண்மை என்பதை எதிர்காலம் நிச்சயம் நிரூபிக்கும்.

ஏசுநாதர் சிலுவையிலே அறையப்படவில்லையா! நபிகள் நாயகம் கல்லால் அடிக்கப்படவில்லையா! பாலன் கண்ணனைக் கண்டபடி திட்டவில்லையா! போல் ராஜாஜிக்கு வசை கிடைக்கிறது! ஆனால் தாரை ஊற்றி

உண்மையை மறைக்கமுடியுமா? என்று கல்கி கேட்கிறது. ஆஹா! தம்பி! இந்தப்புத்தி கொஞ்ச நாட்களுக்குமுந்தி வந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். பெரியார், சுயமரியாதை இயக்கத்தை துவக்கி, தமிழகத்தின் தனிக்குரலாக இருந்து போர் தொடுத்தபோது, காந்தீயர்கள் செய்த சேட்டைகள் இவ்வளவு அவ்வளவு என்று அளவிடமுடியுமா! எவ்வாளவு விஷமம்! எத்துணை காலித்தனம்! கல்அடியும் சொல்லடியும் எவ்வளவு! இவ்வளவு நடந்தபோது இன்று ஆச்சாரியாருக்கு நடக்கும் அலங்கோலங்களைக் கண்டு அழும் அம்மாமிப்பத்திரிகைகள், ஒருவார்த்தை, தங்கள் சீடர்களுக்கு ஒரு நல்லுபதேசம், ஒரு எச்சரிக்கை விட்டது உண்டா? மக்கள் ஆத்திரம் அடைந்தனர், ஈ.வே.ராவின் பேச்சு பிடிக்கவில்லை, என்று எழுதி காலித்தனத்தைத் தூண்டினரே, அதை மறக்கமுடியுமா! விதைத்தது வினை, தினை கிடைக்குமா தம்பி! படுகுழிவெட்டி அதைப்பச்சிலையால் மூடிவைத்தால், சிவமயம் வெட்டினவனே தன்னைமறந்து தடுமாறிக்குழியிலே வீழ்வதுண்டு. அதைப்போல அன்று ஆதரித்து வளர்த்த காலித்தனம், வளர்த்த கடா, மார்பிலே பாய்கிறது. வம்பைவிதைத்துப் பின்னர் கம்பு கேட்டுப்பயன் என்ன? என்று கசியும் கண்களுடன் விளங்கும் கல்கியைக் கேட்கிறோம்.

முஸ்லீம் லீகர்களும், திராவிடர்களும், இன்று ஆச்சாரியாருக்குத் தொல்லை தராமல், தூரநின்று வேடிக்கை பார்க்கின்றனர். அவர்களின் எதிர்ப்பு ஒன்றாகி, இன்றுள்ள ஆச்சாரியார் எதிர்ப்பும் சேர்த்துவிட்டால், தமிழகத்திலே தத்தளிக்கும் ஆச்சாரியார், தலைகாட்டமுடியாது, தக்ளியும் கையுமாக ஆசிரமத்திலே அமர்ந்து, பழங்களை எண்ணி பெருமூச்சுவிட்டுக்கொண்டு வாழவேண்டும். திராவிட இஸ்லாமியரின் பலம் ஆச்சாரியாருக்குக் கேடயமாக இருக்கும் என்று அஞ்சுவதால் மட்டுமே, ஆச்சாரியாரை எதிர்க்கும் கூட்டம், சற்று அச்சத்தோடு நடந்துகொள்கிறது. இதை ஆச்சாரியார் உணர்கிறாரா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். காந்தியரின் புதிய போர்த்திட்டம், நாட்டின் ரேதடிõரய கெடுக்கும், எதிரிக்கு இடமளிப்பதாக இருக்கும் யுத்த ஆதரவைக்குலைக்கும், என்பன ஆச்சாரியாருக்குத் தெரியும். இவைகளை ஆச்சாரியார் விரும்பவில்லை

நாட்டைத்தாக்க நயவஞ்சகத்திட்டமிடும் ஜப்பானியரை எதிர்க்க நாட்டவர் நாடிமுறுக்குடன் வெளிவரவேண்டும், படையில் சேரவேண்டுமென்று ஆச்சாரியார் முரசுகொட்டுகிறார். அவர் முரசு இதுபோலும் அவரது சம்பந்தியார் போக்கு, எதிர்க்குத் தாம்பூலம் தருவதாகவும் இருக்கிறது உண்மையில் ஆச்சாரியார் நாட்டுக்குப் பணியாற்ற விரும்பினால், காந்தியார் இந்தக் கபோதி திட்டத்தை மண்டைமீதடித்து, நொறுக்கவேண்டும். ஆனால் ஆசை அங்கே இருக்கும்போது அவர் இதனைச்செய்வாரா?

காந்தியாரே துடிக்கிறாராம், தத்தளிக்கிறாராம் அவதது உள்ளம், அக்கினிப்பிழம்பாகி விட்டதாக அவரைக் சுற்றிக்கொண்டுள்ள சுருதிப் பெட்டிகள் காந்தியார் போர்க்கோலம் பூண்டு வெளிவரத்தயாராகிவிட்டார், பிரிட்டிஷ் ஏகாத்திபத்தியமே பார்த்துப் பிழைக்கபார்த்தார்! என்று கூறுகின்றன. 1920ம் ஆண்டு நடை பெற்றது போன்ற பரிய போராட்டமாம்! காந்தியாரின் தலைமையாம்! கடைசிப் போராம்! காந்தியார் அவரது கடைசி சக்தியை இதற்காகவே சேமித்து வைத்திருக்கிறோம். அவரது பேச்சும் எழுத்தும் இசாரமாகிக் கொண்டே வருகின்றனவாம். வருகிறது புலி! என்று வரட்டுக் கூச்சலைக் கிளப்பிவிட்டன வகையறியாத கூட்டம்! நான், காந்தியாரின் திட்டத்தைக் கண்டித்தது கண்ட ஒரு கதர்ச்சட்டைக்கு கண் களிலே மிரட்சியும், கைகால்களிலே துடிப்பும், நெஞ்சிலே சோகமும் ஏற்பட்டுவிட்டது. புரட்சி ஓங்க ஏகாபதிபத்தியம் ஒழிக! என்று கூவி விட்டு, ஸ்ரீஜக் என்ற அடைமொழியை எனக்களித்துக் கடிதம் தீட்டிவிட்டது ஒரு காங்கிரஸ் கபந்தம். புரட்சி ஏன் ஓங்கும், ஸ்ரீஜத் என்ற வடமொழியிலே மோகம் இருக்கிற போது? புரட்சி ஓங்குக என்ற கருத்துக்கும் இந்த ஸ்ரீஜத் என்ற ஆரிய அடை மொழிக்கும் பொருந்துமா என்று கேட்கிறேன். கூட்டிலேசிக்கி; கோவைக்கனி தின்று, சொன்னதைச் சொல்லும் கிளிபோல், புரட்சி ஓங்குக என்று யாரோ சொன்னதை உருப்போட்டு, வாந்தி எடுக்கும் காந்தி பத்தரே உம்மைத் தான் கேட்கிறேன். உள்ளத்திலே உறுத்தினால் பதற வேண்டாம், ஜாதிமத பேதமெனும் பித்துப்பிள்ளை விளையாட்டை ஒழித்து கண்மூடி வழக்கமெலாம் மண் மூடிப்போகும்படி செய்து நாட்டிலே மக்களின் உரிமைகளை நர்த்தனமேடையாக்கிக்

கொண்டு ஆணவ நடனமாடும் கூட்டத்தின் கொட்டத்தை அடக்கி, சமத்துவம் நிலவும் சமுதாயத்தை நிறுவுவது, புரட்சி ஓங்வா? அந்தப் புரட்சி ஓங்குக என்று எங்கே சொல்லு பார்ப்போம். பழங்குடி மக்களை ஆரியம் என்ற பல்லக்குத் தூக்குபவராக்கி, அமர்ந்து பார்ப்போரும் புரட்சி அல்லவா? அமெரிக்காவிலே அடிமை வியாபாரத்தை அடக்கினார், ஆபிரகாம்லின்கன். இது ஓர் புரட்சி! இங்குள்ள பார்ப்பனரின் பாதங்தாங்கிகரைத் தமிழர் இன்றும் இருப்பதை மாற்றி, ஆரிய ஆதிக்கத்தை அழித்தொழிப்பது, புரட்சி அல்லவா! அதைவிட மிக்க அவசியமான வேறோர் புரட்சி இருக்கிறதா என்று கூறுங்கள் கேட்போம். கோபம் வந்து விடுகிறது. ஆவேசமாடுறாய் தோழனே! ஆனால் இதைப் படித்துப்பார்!

ரோம் தீப்பற்றி எரியும்போது பிடில் வாசித்துக் கொண்டிருந்த நீரோவுக்கும் உங்கட்கும் என்ன வித்தியாசம் தாங்கள் தீயை மூட்டிவிட்டு, அதை அணைக் ஆற்றலுமற்று தீ கொழுந்துவிட்டொரியும் போது சோவெ கிராமத்திலே உல்லாசமாக வாழுகிறீரே? இது தர்மமா? நீதியா? என்று ஒரு நிருபர், காந்தியாரைக் கண்டித்துக் கடிதம் விட, சாந்த சொரூபிக்கு கோபம் சண்ட மாருதம்போல் கிளம்பி, “என்னையா” நீரோவுடன் ஒப்பிடுகிறீர்! நான் என்னையே தீயில் சுட்டெரித்துக் கொள்ளப் போகிறேன் தெரியுமா! என்று காந்தியார் கடுமையான பதில் எழுதியிருக்கிறார்.

தன்னைத்தானே. சுட்டுத் தள்ளிக்கொள்ளப் போவதர்காக காந்தியார் பேசுவதும் எழுதுவதும் ஒருவித ஹம்பக்! உப்பு சத்தியாகக் கிரகத்தின் போது கூறி என் பிணம் அரபிக் கடலிலே மிதக்கும்” என்று அதைப் போல் இது ஓர் ஹம்பக்! இதையார் நம்பி, கண்களைத் துடைத்துக் கொள்ள கால்கஜம் துணி தேடப்போடுகிறார்கள்! கனல் கக்கும் காந்தியார் விரைவில் புனல் தொட்டியாவார் என்பது மக்களுக்குத் தெரியும்.

பொருளற்ற அவரது பாட்டுக்களைச் சிலர் புத்தமுது என்றனர், øகைத் தாளமிட்டனர். இருளுக்குள் ஒளி காண, தீயில் குளிர்ச்சிக்கான எண்ணினர். அந்தக் வட்டத்தின் தலைமை தாங்கி நடத்திச் சென்றவரே ஆச்சாரியார், எனவே அவர் இன்று அதே காந்தியாரின் திட்டங்களைக் கண்டிக்க முன்வர இலச்சைப்படுவார், பாவம். நீரோவுக்கும் உனக்கும் என்னய்யா

வித்தியாசம்? என்று கேட்க ஆட்கள் கிளம்பி விட்டது கண்டு கடுங்கோபம் கொண்ட காந்தியார், “என்னை இப்படிக் கூறுவதா! என்று கூறுகிறார். வேண்டாம், வேண்டாம், என்று நாட்டிலே உள்ளோர் வேண்டிக் கேட்டுக் கொள்வர் என்ற எண்ணம்போலும்! நிருபர் கேட்ட கேள்விக்கு நேரடியான ஒழுங்கான தக்க பதிலைக்கூற முடியாது தவித்து பள்ளிப்பிள்ளை கன்னாபின்னாவென்று கதறுவதுபோலன்றோ காந்தியார் பதில்கூறி இருக்கிறார். நீரோபோல, காந்தியார் இன்று இல்லை என்று கூறமுடியுமா? அழிக்க நகரங்கள், உடைந்த பாலங்கள், உயிரை இழந்த வீரர்கள், வீரச்சீனாவின் காட்சி இது. இரத்த ஆறு! பிணக்குவியல்! நொறுங்கிய டாங்கிகள் தூளான மோட்டார் சிதறிக்கீழே செங்குருதிச் சேற்றில் புதைந்துள்ள தலைகள், குடல்கள் கை, கால், முதலிய உறுப்புகள், இது வீர ரஷியாவிலே காட்சி! இத்தகைய கோரமும் கொடுமையும் தாண்டவமாடக் காரணமாக உள்ள அச்சு நாட்டிடம் கைக்கூலி வாங்கினவன், கடையன், மடையன், நெஞ்சிலே சூது எண்ணங்கொண்ட சடையன், சொல்லக் கூசும் சொற்களை காந்தியார் கூறுவதைக்கேட்டு அவரை நீரோ என்று யார், அழைக்காமலிருக்க முடியும்! எவ்வளவு பயங்கரமான நாட்கள்! எத்தகைய ஆபத்து சூழ்ந்திருக்கிறது! இந்த நேரத்திலே உள் நாட்டுக் குழப்பத்தை செய்யத் தூண்டுபவர் யாராயிருந்தாலும், மகாத்மாவாக இருந்தாலும் மகரிஷியாக இருப்பினும் மகந்து மடாதிபதியாக இருப்பினும் அவர்களை, மட்டந்தட்டி, மூலையில் உட்காரவைத்தாலன்றி, நாட்டைக்காப்பாற்ற முடியுமா என்று கேட்கிறேன்.

இரத்தத்தைத் தண்ணீர்போல் இறைத்து பணத்தை மண்போல் வாரி வீசி, பிரிட்டன் தனது சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்ளத் துணிகிறதே என்று அங்கலாய்த்துக்கொள்ளும் காந்தியார், இந்த நாட்டிற்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைத் தடுக்க மடத்தனத்தையா கேடயமாக உபயோகிப்பது என்று கேட்கிறேன். இந்தச் சமயத்திலே உள்நாட்டுக் கிளர்ச்சியைத் துவக்கினால், அது தீ மூட்டுவதாகும், அடக்கமுடியாத, மூட்டியவராலேயே அடக்கமுடியாத தீயைக் கிளம்பிபியாக முடியும். இத்தகைய தீயை மட்டிவிட்டு, வார்த்தாவிலே உல்லாசமாக வாழ எண்ணுகிறீரே வயோதிகரே, உமக்கும் நீரோவுக்கும் என்ன வித்தியாசம் என்று யாரோ ஒருநிருபர் கேட்டதிலே என்ன குற்றம் கூறுங்கள். பார்ப்போம். நீரோவைச் சரிதம் ‘டுகோலிட்டுக் காட்டுவதுபோலவே, காந்தியாரின் கதியுமாகும். ஆனால் அதனைச் செய்ய ஆச்சாரியார் முன்

வரமாட்டார், அவருக்குத்தான் ஆசை இன்னமும் அங்கே இருக்கிறதே!

காந்தியாரின் கபோதித்திட்டத்திற்கு ஜனாப் ஜின்னா சரியான சவுக்கடி கொடுத்தருக்கிறார். என்னென்பது அந்த எஃகு உள்ளம்படைத்தவரின் ஆண்மையை! பிõட்டிஷாரே வெளியே போ! என்று காந்தியார் கூறும் திட்டம், பிரிட்டனை மிரட்டிப் பயிணவைத்து, இந்துராஜ்யம் ஏற்படுத்தச் செய்யும் ‘ழ்ச்சியே என்பதை ஜனாப் ஜின்னா, இவ்வாரம் வெளியிட்டுள்ள அறிக்கையிலே தெளிவாகக் காட்டியுள்ளார். பிரிட்டிஷார் தாமாகவே இப்போது நாட்டைவிட்டு விலகிவிடவேண்டுமாம். இல்லையேல், காந்தியார் தமது கிளர்ச்சியைத் துவக்குவாராம். இந்த மிரட்டலைக் கேட்டுப் பிரிட்டன் பணியுமென்று கருதுவது, குதிரைக் கொம்புக்குத் தவங்கிடப்பதாகவே முடியும்.

சரி காந்தியாரே, இப்போது பிரிட்டிஷார், இந்தியாவைவிட்டுப் போய்விட்டால், நாட்டு ஆட்சி, யாரிடம் இருக்கும்? என்ற கேள்விக்கு, காந்தியார் கூறும் பதிலைக் கேளுங்கள்.

யாரிடமேனும் இருக்கட்டும். யாராரால், எங்கெங்கே, அதிகாரத்தை ஏற்படுத்திக்கொள்ள முடிகிறதோ, அவ்விதமே நடக்கட்டும்.

முஸ்லீம்கள் பாகிஸ்தானமும், இந்துக்கள் இந்துஸ்தானமும், சீக்கியர்கள் சீக்கிஸ்தானமும் அமைந்துக் கொள்ளட்டும். எதுவோ நடக்கட்டும், எப்படியோ, ஆகட்டும், பிரிட்டிஷார் போய்விடட்டும், என்று கூறுகிறார். இதுபொறுப்பு, நாட்டுப்பற்று தன்னம்பிக்கை, மனிதாபிமானம், சாந்தி, அமைதி, ஆகிய எதாவதோர் நற்குணத்தைக் காட்டுகிறதா என்று கேட்கிறேன், கலகம், குழப்பம், தொலை, குத்து வெட்டு, சண்டை சச்சரவு, தீமூட்டுதல், தெருச்சண்டை, காட்டு ராஜாக்கள் கிளம்புவது ஆகிய இத்தனையும் நடந்தாலும் பரவாயில்லை என்று கூறும் ஒருவø, பித்தரென்பதா, பேதையரென்பதா, சகலரையும் ஏய்க்கும் சித்தரென மனப்பால் குடிக்கும் மத்தரென்பதா, என்னவென்ற கூறுகூது? நாட்டிலே இன்றுள்ள கட்டும் காவலும் குலைந்து, சட்டமும் சாந்தியும் சரிந்து, இரத்தம் ஆறென ஓடி, பாகிஸ்தான், இந்துஸ்தான் ஆகிய

எந்தஸ்தானமேலும் ஏற்படட்டும், என்று கூறும் நெஞ்சிரக்கமற்றவர், குழப்பமின்றி, உள்நாட்டுக் கலகமின்றி, கத்தியின்றி புத்தியை உபயோகித்து பாகிஸ்தானை ஒப்புக்கொண்டு உள்நாட்டுக் குழப்பம் ஏற்படுவதையும் தடுத்து, வெளியாளையும் விரட்ட, அறிவும் ஆண்மையும் புடைசூழ பவனிவரக்கூடாதா! வார்தாவின் விபரீத விஷவாடை, நாட்டைப்பாழாக்கத் துணிவுகொள்ளும் கொடுமையைக் காணீர்! ஜனாப் ஜின்னா இதனைக்கண்டித்து "ஐயா காந்தியாரே! உமது வயது முதிர்ந்த இந்தப்பருவத்திலே நீர் நாட்டுக்குச் செய்யும் நற்காரியம் இதுதானா?" என்றுகேட்கிறார். நாக்கைப்பிடுங்கிக்கொள்வர் மற்ற ஆத்மாக்கள், இந்தச் சுடுசொல்கேட்டு, வெட்கி! ஆனால் அவர் மகாத்மா வல்லவா, வெட்கமும் மானமும், ரோஷமும்வார் தாவை அண்டுவதில்லை!!

"பாகிஸ்தான் என்றால் என்னவென்றே எனக்கு விளங்கவில்லை. பாகிஸ்தானிகள் எனக்கு விளக்கம் கூறி, திருப்திசெய்யட்டுமே என்று கேட்கும் காந்தியாருக்கு ஜனாப்ஜின்னா, கூடச்சுடத்தருகிறார் சாட்டை!

"ஐயா மகாத்மாவே! முஸ்லீம்களின் கோரிக்கை நியாயமானது என்று எடுத்துச்சொல்லி உம்மைத் திருப்திசெய்வதில் யாராலும் வெற்றிபெற முடியாது போல் தோன்றுகிறது. ஒருவேளை அந்தராத்மா வேண்டுமானால் அதைச் செய்யக்கூடும்" என்று ஜனாப்ஜின்னா கூறுகிறார். வெட்கம் பிறக்கவேண்டாமா, வேதியக் கூட்டத்துக்கு வேண்சாமரம் வீசும் வார்தர வாசிக்கு!

பிரிட்டிஷாரை நம்பி அவர்களின் உதவியைக் கொண்டுதானா, நீங்கள் பாகிஸ்தான் பெறப்போகிறிர்கள்? என்றுகேட்டு, கிண்டல்செய்யும் காந்தியாருக்கு, ஜனாப்ஜின்னா, தெளியும் தீரமும் தொனிக்க, உறுதியும் உணர்ச்சியும் ததும்ப, நம்பிக்கையும் ஆண்மையும் பொங்க, அழகிய, பதில் கூறுகிறார். கொன்தகட்டிலே வைரத்தால் இழைக்கப்படவேண்டிய வாசக மென்பேன் அதனை. பத்துகோடி முஸ்லீம்களின் இருதய கீதமென்பேன்! ஆயிரமாண்டுகள் இருந்த இஸ்லாமிய அரசசரி தக்கீர்த்தியின் பட்டயமென்பேன். அந்தப்பேச்சை பாருங்கள் அதன் அருமையை!

"பிரிட்டிஷாரின் உதவியின் பேரிலோ அல்லது அவர்களது பாதுகாப்பின் கீழோ எங்களுக்குப் பாகிஸ்தானில்

நம்பிக்கையில்லை. இந்திய முஸ்லீம்களின் நம்பிக்கைதான் பாகிஸ்தான். நாங்கள் இதை அடைய யாரையும் எதிர்பார்த்திருக்க வில்லை எங்களையே நம்பியிருக்கிறோம். இதற்கு இடையூராக எதிர்ப்பும் இடைஞ்சலும் எங்கிருந்து வந்தாலும் அதைச் சமாளிக்கவும் விருப்பத் துடனிருக்கிறோம்.

வார்த்தா, லண்டன், வாஷிங்டன், எங்கு இருந்து எதிர்ப்பும் இடைஞ்சலும் வரினும், ஒருகை பார்க்கத் தயார்! எங்களின் இலட்சியம் பாகிஸ்தான் அதை பெற நாங்கள் எங்களையே நம்பியிருக்கிறோம், எனும் இந்த மொழிகள், கோழைகளையும் வீரராக்கும்! இனத்தின் எழுச்சியைக்கண்டு, இனத்தின் நம்பிக்கையைப் பெற்று, இலட்சிய பூர்த்திக்காக எத்தகைய இடையூறு வரினும்சரி என்றுள்ள உறுதி கொண்ட உத்தம வீரர்கள் மட்டுமே இத்தகைய உயிர் வாசகத்தை உரைக்கமுடியும்!

அந்தராத்மாவே! அடிக்கடி காந்தியாரை ஏமாற்றி வருகிறாய். ராஜ்கோட்சம்பவத்தின் போது உன்னை நம்பிய “மகாத்மா” ரசாபாசத்தில் சிக்கிக் கொண்டு தவித்தார். ஆனால் இன்னமும் உன்னை தான் அவர் நம்புகிறாராம். தன்நிலை, நாட்டுநிலை முதலியன தெரியாது “உளுத்துப்போன பேச்சுப்பேசும் உன்மகாத்மாவுக்கு நீயாவது கூறு, “இனி பலிக்காது கடையைக் கட்டிவிடுவதே சிலாக்கியம்” என்று நாட்டிலே தோன்றியுள்ள இனஎழுச்சியை இனி அடக்கி ஆளமுடியாது என்பதை எடுத்துக்கூறு. அந்த இன எழுச்சி காரணமாகத்தான் கோட்டைகளின் சுவற்றின்மீது கமண்டைகள் மோத நேரிடினும், உடல் கழுகுக்கும் நரிக்கும் இரையானாலும், கவலையில்லை என்று வீரர்கள் வேலைசெய்தனர் என்பதை எடுத்துச் சொல்லு. ஏன் முஸ்லீம்களுடன், விண் மற்றும் காந்தியாரின் உள்ளத்திலே குடிபுந்துள்ள கபடத்தைத் தயவு செய்து கொல்லு! அவரைச் சூழ்ந்துள்ள மார்வார் குஜராத் முதலாளிகளைப் பிடரியைப் பிடித்துத்தள்ளு! நாட்டுக்கு நற்காலம் பிறக்கட்டும் என்றுபாடு, பள்ளு! விடிந்தது என்றெழுந்து துள்ளு!

ஆச்சாரியார், மஞ்சள் கருப்பாச்சுதே என்று மாறடித்துக்கொண்டு இருக்கிறார், எனவே அந்தராத்மாவே, நீயேனும் சற்று தெளிவுபடுத்து, காந்தியாருக்கு விஷயத்தைக்கூறு! இதைச் செய்யாமற்போனால் நம் மக்களின் சக்தி கிளம்பி,

உன்மகாத்மாவை வெகுபாகுபடுத்திவிடும், என்பதை நான் முன்கூட்டியே எச்சரித்து விடுகிறேன், கேட்டாலும் சரி, விட்டாலும் சரி, நாட்டு நிலைமையை நான் எடுத்துக்காட்டி விட்டேன், நடப்பன நடக்கட்டும் நான் என்ன செய்ய?

(திராவிட நாடு - 19.7.42)

ஆங்கிலர் மீது பாயுமுன் ஆரியரே இதை அறிமின்! பெரியார் படை திரட்டுவார்

பர்மாவிலே குழப்பம் ஏற்பட்டதும், இந்தியரை விரட்டி, கத்திகாட்டி மிரட்டி, பர்மியர் போ வெளியே! என்றுரைத்தனராம்.

இந்தியாவிலே, இதுபோது, கைகூப்பி நின்று, வெள்ளையரை நோக்கி, "போ உங்கள் ஊருக்கு" என்று கூறுமாறு காந்தியார் தமது சீடகோடிகளுக்குக் கூறுகிறார். இனி, நாம், கத்திகாட்டாமலும், கை கூப்பாமலும், இடுப்பிலே ஒரு கை இருத்தி, மார்பை நிமிர்த்தி, மற்றோர் கையால் வடநாட்டைச் சுட்டிக்காட்டி, வடநாட்டு மார்வாடி, குஜராத்தி, ஆரியர் ஆகியோரை, "பிழைக்கவந்து, இங்கு எமக்குள் பேதத்தைப்புகுத்தி, அடக்கி அடிமைகொண்டு, சக்கைகளாக்கிய சழுக்கரே, சமயம் பிறந்துவிட்டது! சரசரவெனக் கிளம்புங்கள் உங்கள் நாட்டுக்கு! போதும் உங்கள் உறவு" என்று கூறவேண்டி வரும்.

வெள்ளையரைப் "போ" என்றுகூறி போகச் செய்ய முடியுமானால், நாமும் ஆரியரையும் அங்ஙனமே ஏன் செய்ய முடியாது?

"போ வெளியே" என்று கூறும் இந்த முறை, மகா மேதாவித் திட்டமென்றால், அதேபோல் ஆரியரை அகற்ற நாமும் அதைப் போன்றே செய்வதில் தவறு என்ன இருக்க முடியும்?

போ வெளியே! என்று கூறிடும் கிளர்ச்சியை நடத்த, சர்க்கார், காந்தியார்களுக்கு இடமளித்தால், நமக்கும் அளித்தே தீரவேண்டுமன்றோ!

எனவே, காந்தியாரின் போருக்கு ஆள் திரட்ட இத்தமிழகத் திலே எவரேனும் முனைவரேல், பெரியார், படைதிரட்டி "ஆரியரே, உமது ஜென்மபூமி செல்லுங்கள்" என்று கூறிடச்செய்வார் என்பது திண்ணம்.

ஆரியர்கள் இதற்குச் சம்மதித்தால் தாராளமாக, காந்தியப் படைக்கு ஆள்திரட்ட முனையட்டும்! ஆங்கிலர்மீது பாய எண்ணுமுன்னம் ஆரியரே இதை அறிமின்!!

(திராவிடநாடு - 28.6.1942)

கண்ணன் காட்டிய வழி!

“குருக்ஷேத்திரத்தில் கர்னனின் ரதம் பூமியில் சிக்கிக்கொண்டு விட்டது. கர்னன் கீழே இறங்கி அதைச்செப்பனிடக் கொண்டிருந்தபோதும் அர்ச்சுனன் விடாமல் பாணங்களை வர்ஷித்துக்கொண்டேயிருந்தான். இது தர்மமா? என்று கர்னன் கிருஷ்ண பகவானைக்கேட்டான். “துர்யோதனுடன் சேர்ந்து கொண்டு நாள் தவறாமல் அதர்ம காரியங்களையே செய்து கொண்டிருந்த உனக்கு என்ன தர்மம் புரியும்” என்று பகவான் பதிலளித்தார்.”

‘பகவான்’ அளித்த இந்தப்பதில், ‘பாரததேவி,’ டெயிலி ஹெரால்டு என்ற, பிரிட்டிஷ் பத்திரிகைக்கு அளித்து, கர்னன் இது தர்மமா? என்று கேட்டது போல், ஹெரால்டு கேட்பதாகக் கூறுகிறது.

டெயிலிஹெராய்ல்டு, பிரிட்டிஷ் தொழிற்கட்சிப் பத்திரிகை. பிரிட்டிஷ் தொழிற்கட்சியைக் காங்கிரஸ் தூபதீப நைவேத்தியமிட்டுத் தொழுதுவந்தது. பிரிட்டிஷ் தொழிற்கட்சி மட்டும் அதிகாரத்தில் அமர்ந்தால், அடுத்த தபாலிலே, - விமானத் தபால்போலும் - சுயராச்யம் இந்தியாவுக்கு அனுப்பப்படும், முகவரி, காந்தி, வர்தா, என்றிருக்கும் என்று காங்கிரஸ் மனப்பால் குடித்துவந்தது. இப்போது அந்தப் பிரத்தம் தெளிய மருந்துகிடைத்திருக்கிறது. காங்கிரஸிதுவக்கப் போவதாகக்கூறும் சண்டித்தனத்தைக் கண்டித்து ஹெரால்டு எழுதியிருக்கிறது, காரசாரமாக, கனல் எழ! உங்களுக்காக வாதிட்டுவந்த எங்களைக் காட்டிக்கொடுக்கும் தோழர்களே! என்று அர்ச்சித்துவிட்டு, பாட்டாளி மக்களைப் பாழ்ப்படுத்தும் போக்கிலே, நாற்புறமும் ஆபத்து ‘ழ்ந்துள்ள வேளையிலே, நாட்டிலே குழப்பத்தை விளைத்து, நாசகால நாஜியருக்கும் ஜப்பானியருக்கும் நாட்டைக் காட்டிக்கொடுக்கத் துணிகிறீர்களே, இதுதர்மா? என்று ஹெரால்டு கேட்கிறது. இந்த இடி, தேவியின்

மூளையைக் குழப்பித்தான் விட்டது! எனவே, பாரதத்தைப் பரணையிலிருந்து எடுத்து, குருக்ஷேத்திர களத்தைக் தேடிப் பிடித்து, தேரைப் பழுதுபார்த்துக் கொண்டிருக்கும் கர்னனை, பாணங்களால் தாக்கிய பார்த்திபனும், அவளுக்குத்தேரோட்டிய கண்ணனும், கண்ணன் கர்னன் சம்வாதமும், கண்ணன் தந்த பதிலும், ஆகியவற்றினைக்கூறி, அன்று கர்னனுக்குக் கண்ணன் என்பதில் கூறினானோ, அதே பதில்தான் நான் உனக்குக் கூறுகிறேன் என்று தேவி கூறுகிறாள். கண்ன் காட்டிய வழி செல்வதே கடமை என்பது காந்தீயர்களின் கோட்பாடல்லவா! “தேவியும் அதிலேயே திருஷ்டி உள்ளவள்! காந்தீயர்களுக்குக் கண்ணன் காட்டியவழி பிடிப்பதிலே நமக்கு ஆச்சரிய மேற்பட்டதில்லை. கண்ணன் காட்டியவழி கவர்ச்சிமிக்கது. பாலபருவத்திலே பால் தயிர் வெண்ணைகளைப் பருவத்திலே கட்டழகினாளான கோபியர்கள் பிறக, ராஜதந்திர ரசக்கூடம், இவை அவர் காட்டிய வழிகள். பலருக்க ஆனந்தமே தரும் இந்த வழிகள் கூறும்போது, நாம் தாங்கொணாக கோபமே கொள்வோம். ஏன்? சூதுக்கும், அவர்கூறினதற்கும் சொல் அமைப்பிலே வித்யாசமுண்டேயன்றி, சூக்ஷமத்திலே வித்யாசம் கண்டோமில்லை.

களத்திலே தேர் கெட்டுவிட்டது! கர்ணன் தேரைச் செப்பனிடுகிறான். அந்தவேளையிலே அவன் மீது சணைதொடுக்கிறான். கன்னியர் வேட்டையில் கை தேர்ந்த அர்சுனன். இது ஆண்மைக்கு அத்தாட்சியா அன்றி விராடநகரிலே அர்ச்சுனன் அணிந்திருந்த பேடி உருவம் மாறியும், உள்ளம் அத்தன்மையாகவே, இருக்கிறது என்பதைக் காட்டுகிறதா என்று இதிகாசபுலமை மிக்கோரேனும் பதில்கூறமட்டுமே பார்ப்போமே. அத்தகைய செயலைக்கொண்ட கர்னன் கண்ணனைக் கேட்கிறான். இது தர்மமா என்று. அங்கே உள்ள வீரத்தைக் காண்மின். போரிடும் அர்ச்சுனனைக் கேட்டு வீரன் எதிரியிடம் வேண்டிக்கொள்வதாகும். ஆண்மைக்கு அது அழகாகாது என்று, நான் யாவருக்கும் பொதுமான சகல வேதமும் உணர்ந்தோன் என்று பேசிக்கொண்டிருக்கிறாயே, காண்ணா! இதுதர்மமா, நீயேகூறு, என்று கலங்கா உள்ளம் படைத்தவன் கேட்கிறான்.

நீ துரியனுடன் சேர்ந்து துர்க்கிருத்யங்கள் செய்து வந்தவன், உனக்குத் தர்மம் என்ன தெரியும் என்ற சொல்லாம்மை விடுகிறார் கண்ணன்! எந்தக் கண்ணன்? கர்ணன், பாண்டவ புதல்வன் என்பதைத் தெரிந்து அவனுக்கும் தெரிவித்து ஆனால் பாண்டவரிடம் அது பற்றி கூறாது மறைத்துவைத்த கண்ணன். வேதியவடிவோன அவனிடம் போய், கவசகுண்டலங்களைத் தானம் வாங்கிய கண்ணன், உனக்குத் தர்மம் என்னதெரியும் என்று தோழனுக்குத் தர்மம் என்னதெரியும் என்று தோழனுக்குத் துரோகம் செய்யேன்! கூடப்பிறந்தவருடன் இன்று கூடிக் கொண்டால், இதுவரை ஆதரித்த துரியனுக்குத் தீங்கிழைத்த
வனாவேன், அதுகூடாது கேட்போருக்கு இல்லையெனாது தருவேன், என்புன்னியம் வேண்டுமா கவசகுண்டலம் வேண்டுமா, எதைத் தருவதாக வாக்களித்தேனோ அதைத்தர அட்டியில்லை என்று கூறிடும், இத்தனை தர்மஙகளைத் தெரிந்து அதன்படி நடந்து, வீரர்க்கோர் விளக்கெனவும் நட்புக்கோர் எடுத்துக்காட்டாகவும், வள்ளல் தன்மைக்கு வைரமணிபோலும் விளங்கிய கர்ணன் போர்க்களத்திலே அதர்மமான முறையிலே கணைவிட்ட அர்சுனனுக்குத் தேரோட்டியதுடன் உனக்கு என்ன தர்மம் தெரியும்? என்று, கேட்டான் கண்ணன். இது மனித நீதிப்படி சரியா என்பதை நேயர்கள் யோசிக்கக் கேட்டுக்கொள்கிறோம், அன்று அவர் அளித்த பதில், நேரடியானதுமல்ல, நேர்மையானதுமல்ல, நெஞ்சில் இரக்கமற்றது. நயவஞ்சகம் குடிகொண்ட உள்ளத்திலிருந்து கிளம்பிய நச்சுமொழி அதனையே பாரததேவி, ஹொரால்டுக்கப் பதிலாக தருகிறது. வேறுஎப்படி இருக்கமுடியும்1 இனப்பற்று இலேசில் போகாது! அன்று தொட்டு இன்று வரை உள்ள ஆரியநோக்கு, அப்பழுக்கின்றின்தான இருக்கிறது. ஆனதுபற்றியே, ஆங்கில ஏடு, நாட்டுக்கு ஆபத்தைத் தேடுகிறாயே நண்பர், இது தர்மமா என்று கேட்க, உனக்கென்னதர்மம் தெரியும் என்று பாரத தேவி பதைத்துக்கேட்கிறது. பொருளுமில்லை அழிவுமில்லை, அதன் பதிலிலே! கேட்டகேள்விக்கு, வசையையே பதிலாக

அளிக்கிறது. தேம்புவதும் திட்டுவதும் தேவியின் திருக்குணம் போலும்!

ஹொரால்டுக்கத் தர்மம் தெரியவில்லை என்றே வைத்துக்கோள்வோம், கங்கிரஸின் காதலைப் பன்முறை பெற்றவராம், காந்தியாரிடம் இன்றும் மதிப்பும் கொண்டவராம், நளினி ரன்ஜன் சர்க்கார், அவர்கொடுத்திருக்கிறாரே சாட்டை அதற்கென்ன செவ்வாய் அம்மை அமெரிக்காவிலே அபிமானம் தோன்றினால், நாட்டுக்கு யோகம் சித்திக்கும் என்று கூறினாயே, இதுவே அமெரிக்கப் பத்திரிகைகள் அவ்வளவு காந்திய போக்கைக் கண்டித்து விட்டதுடன், இந்தக் குழந்தை நாங்கள் மன்னிக்கவே மாட்டோம் என்று ஏழுதி விட்டனவே, இந்த இடிக்கு எந்த மருந்துண்டு தேரபோகிறோம்! என்று கேட்கிறோம்.

முஸ்லீம் லீக்முரசு, டான் “காங்கிரசிலே ரஸ்படினிசம் (மாயாஜாலப் பரசிமனப்பான்மை) மேலோங்கி இருக்கும் வரையில், காங்கிரஸ் நன்னெறியைக் கடைப்பிடிக்குமென்றோ, யோக்கியமான வழியில் செல்லுமென்றோ நம்பிக்கை கொள்வதற்கில்லை காங்கிரஸ், மூடநம்பிக்கை, மோசடி, ஆகியவற்றினால் ஊட்டிவளர்க்கப்பட்டது. நயவஞ்சகமெனும் குருதியே அதன் நாடி நரம்புகளிலே ஓடுகிறது” - என்று 19-ந் எழுதுகிறது. இதுதான் சரியான, தெளிவான படப்பிடிப்பு! கண்ணன் கதையும் கர்னன் வதையும் கூறி கண்கசக்குவதை விட்டு, இந்தக் கண்டனத்தைக் கேள் தேவி, நெஞ்சில் வீரமிருப்பின் பதில் கூறு. ரஸ்புட்டீனிசம் காங்கிரசிலே குடிகொண்டில்லையா அவர் ஓர் அவதார புருஷர், ஆஸ்ரமத்திலேயே இருப்பார், ஆரஞ்சுரசமே பருகுவார், அணங்குகளே அந்த அரை ஆடை அண்ணலின் அருகிருந்து உபசகரம் செய்வார், அவரிடம் அந்தராத்மா வந்து வந்து பேசு என்ற இந்த வர்ணனைகளை, அவருடைய முகத்திலே யாரிடமும் காணமுடியாத தேஜஸ்தாண்டவமாடுகிறது, அவர் கண்களின் ஒளி பட்டதும் பாவங்கள் பஸ்மீகரமாகிறது, பாவையர் அவரிடம் காட்டும் பாசமோ சொல்லிமடியாது, பரமனின் பிரதிபிம்பமே அவர் என்று ஜார்காலத்திலே ரஸ்புட்டீனைப்பற்றி வாணி

சிரிக்கப்பட்டதற்கும், வித்யாசமிருக்கிறதா!

இந்தியரஸ்புடீனின் போக்கைக் கண்டிக்காதவர்யார். நூன் கொடுத்தார் சரியா னசவுக்கு! டாக்டர் அம்பேத்கார் காந்தியாட்டத்தைக் கண்டதுண்டமாக்குக என்று கர்ஜனை செய்கிறார், இந்த வீண்விளையாட்டை நிறுத்துமய்ய, விபரீதம் விளையுமுன் என்று ஜனாப்ஜின்னா எச்சரிக்கை விடுத்திருக்கிறார், வடநாட்டு முதலாளிகளின் கைப்பாவையின் இந்த கோணற்கூத்தை அடக்கியே தீரவேண்டும் என்று பெரியார் கூறுகிறார், இவர்கள், இனதர்மம் தெரிந்தவர்களே, உன் இனமும் அதன் இயல்பும், அன்று முதல் இன்றுவரை ஆரிய தினம் நாட்டுக்கோர் நெருக்கடி என்றதும், நரிக் குணங்களைக்கொண்டு, இரத்தம் உரிய நடமாடியவராலும் நன்கு அறிவர். அவர்களின் கேள்விகளுக்குப் பதில் கூறு பார்ப்போம், அதையுங் கேட்போம்!

பிரிட்டிஷ் சர்க்கார்மட்டும், அதன் ஈட்டிமுனைகளை உனக்கு அபயஸ்தமாக்காது இருப்பின், காங்கிரசே காந்தீயமே, உனது கல்லறைமீது புல்முளைத்துப் போயிருக்கும். இன்றுங்கூட, நாட்டுக்கே கேடுவரும் காரியத்தைச் செய்யத்துணியும் காங்கிரசை, உங்கள் இஷ்டப்படி அடக்கி, நாட்டை பஞ்சாங்கப் படையிடமிருந்து மீட்டுக்கொள்க, என்று ஒருவார்த்தை பிரிட்டிசர்க்கார் கூறி, நாட்டை உள்நாட்டுக்குழப்பத்தனின்று காப்பாற்றும் பொறுப்பை லீக்-திராவிட நாட்டுப் படையிடம் ஒப்புவித்துவிட்டால், நொடியிலே உன்கொட்டம் அடக்கப்பட்டு விடும், என்று காங்கிரசாருக்கு நளம் கூறுகிறோம்.

பிரிட்டிஷார் மீதுள்ள கோபம், இன்றைய காங்கிரஸ் 5 பட்டத்துக்கக் காரணமல்ல! நாட்டிலே, இன எழுச்சி ஏற்பட்டுவிட்டது. அதனைத் தடுக்கவேண்டும், பிரிட்டனை மிரட்டி இந்தக் காங்கிரசாட்சி நிறுவவேண்டுமென்பதே காங்கிரசின் நோக்கம். இது ஈடேறாது என்றபோதிலும், சலசலப்புச் செய்துபார்ப்போம், கிடைத்தவரையில் இலாபம் என்ற முறையிலே காந்தியார் கிளம்புகிறார், பார்ப்போம் அவரது ஆட்டத்தின் போக்கை.

(திராவிடநாடு - 26.7.1942)

இருவீரர் - ஒருதாசர்!

காந்தி, யார்? காந்தியார், யார் தெரியுமோ? தெரியார்.

ஒருவணாச்சிரம பித்தர் இந்துமத பக்தர் சாந்திர வெறியர் வைதீகப் பிரியர் கற்பனைக் கிறுக்கர் மனிதாபிமான எதிரி தொழிலாளர் துரோகி முதலிலாளித் தரகர் ஏகாதிபத்திய ஏவலர் தீண்டாதாரின் பகைவர் ஏழைகளின்வைரி பெண்சுதந்திர விரோதி என்ற வீரன் வெகுண்டுரைத்தான்.

“கோபம் வேண்டாமப்பா வீரா! நிதானம் எதிலும் பெரிது, பொறுமை வேண்டும்” என்றேன் நான்.

மிருகங்களிலே பொறுமையையே பூஷணமாகக் கொண்டுள்ள கழுதையைக் கண்டவர் அடிப்பர், கிட்டேவந்தால் கொலை என்று ரோஷத்தோடு உலவுகிறதே, புலி அது இருக்கும் திக்கையும் நெருங்குவதில்லை மக்கள். பொறுத்துப் பொறுத்து நாம் கண்ட என்ன தெரியுமோ, தோல் கடித்துவிட்டது! என்றால் வீரன்.” கடவுளைப் பற்றி எவ்வளவோ ஆபாசக் கருத்துகளைப் புராணீகன் கூறக்கேட்டும், நம்பி, மனதைக் கெடுத்துக் கொண்ட மக்கள், எதை நம்புவதும் ஆச்சரியமில்லையே தோழகர் எவ்வளவு மூடபக்தி இங்கு இல்லையானால் நாட்டு விடுதலைக்கு இந்தக் காந்தியார் கூறுவதும் கேட்டு மக்கள் நம்புவார்களா? நான் கேட்கிறேன் நீயேப் பதில் சொல்லு பார்ப்போம். காந்தியாருக்கு நாட்டிலே செல்வாக்குக் கிடைத்ததைப் போலே, எந்தத் தலைவருக்காவது கிடைத்ததா?” என்று கேட்டான் வீரன். “இல்லை!” என்றேன் நான் “இங்கு இல்லை! வெளிநாடுகளில்கூட காந்தியாருக்கு மக்கள் தந்ததைப்போல வேறு எந்தத் தலைவருக்கும், சுலபத்திலே அபாரமான செல்வாக்குக் கிடைத்ததில்லை.

உமைதான்! ஹிட்லர் முசோலினிகூட, தலைவராவதற்காகப் பட்ட கஷ்டங்களும், அடைந்த தொல்லைகளும் அபாரம். மேலும் அவர்கள் பலாத்காரத்தால் தலைவர்களானார்கள். காந்தியாரோ, கண்மடிக் கண்திறப்பதற்குள் தலைவரானார், சில மாதங்களுக்குள் மகாத்மாவானார், மக்களின் கண் கண்ட தெய்வமானர். அவர் வாக்கை வேதமெனக்

கொண்டனர். அவரை வழிபட்டனர். துதித்தனர். துதியாதவரைத் துரோகி என்றனர். பணம் எவ்வளவு! பரிவாரம் எவ்வளவு! பத்திரிகை பலம் எத்துனை! காந்தியாருக்கு வந்ததுபோல் செல்வாக்கு யாருக்கும் வந்ததில்லை. காந்தியார் அரசியலிலே நுழைந்தது இன்று நேற்றல்ல. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகிறது. அவர் பிரேவிக்கும் போது இங்கு இரு இயக்கங்களே உன்னதமான நிலைமையில் இருந்தன. ஒன்று நிவுணர்கள், சட்ட ஞானிகள், மேனாட்டவரைச் சரிசமமாக வாதிட்டு வெல்லக்கூடிய விற்பன்னர்கள், கொண்ட லிபரல் (ஃடிஞுஞுணூச்டூ) காட்சி. மற்றொன்று, வெளிநாட்டவனை விரட்ட, உயிரை இழக்கவும் சித்தமாகி, கொலை கொள்ள ஆகியவற்றுக்கும் துணிந்து, துப்பாக்கியும் கையுமாக மறைந்து திரிந்து, வெள்ளையார் உயிரைச் சூறையாடிய பயங்கர இயக்கத்தினர். (சூஞுணூணூணிணூடிண்t Mணிதிஞுட்ஞுணt) முன்னவரின் இடம் பாராளுமன்றம், பொதுமேடை பத்திரிகாலயம், மாளிகை, மண்டபம், கவர்னர் முதலியவர்களின் நிலையங்கள். புரட்சி இயக்கத்தவர் இரகசியமாக வேலைசெய்தனர். இன்ன அதிகாரியை இன்று இத்தனை மணிக்கு இன்ன இடத்திலே இன்னவர் துப்பாக்கியால் சுட்டு வீழ்ந்த்துவது என்ற இத்தகைய திட்டமே அவர்களுடையது. பெருவாரியான மக்கள் இந்த இரு இயக்கங்களிலும் சேரமுடியாது ஓதுங்கிநின்றனர். ஒன்றில் சேருவதோ உயிழிக்க நேரிடும், மற்றொன்றோ, மேதாவிகளின் கொலுமண்டபம்! எனவே, பாமரர் வாய்பிளந்து நின்றனர். படித்த கூட்டம் இருபிரிவாகி, இந்டீத இரண்டு இயக்கங்களிலும் வேலைசெய்து வந்தன.

வந்தார் காந்தியார் இரண்டிலும் சேரமுடியாது இருந்த கூட்டத்தைக் கூவி அழைத்தார், “மேதாவித் தனமும் வேண்டாம், உயிரை இழக்கும் ஆபத்தான போக்கும் வேண்டாம், என்னுடன் சேருங்கள், சுலபமான்வழி” என்று கூறினார், “படிப்பு வேண்டாம், பண்பு வேண்டாம், யுக்தி புத்தியுங்கூட வேண்டாம், என்னை நம்புங்கள் போதும்” என்றுரைத்தார். என்ன? என்ன? என்ற கேட்டனர் பாமரர். “பிரமாதம் ஒன்றுமில்லை. இதோ இந்தக் கைராட்டையைச் சுற்றுங்கள். வெள்ளையருடன் ஒத்துழைக்கவேண்டாம்” என்று கூறினார்.

லிபரல்கள் நுண்ணறிவுகேட்டனர், பயங்கர இயக்கத்தினர் உயிரை உயில் எழுதச் சொன்னார்கள்.

காந்தியாரோ, புத்தி, தீயாகம் இரண்டையும் கேட்கவில்லை, கூச்சலிடச்சொன்னார், ராட்டைச்சுற்றிச் சொன்னார், சிறைவாசம் செய்என்றார், இவ்வளவுதான் அவர் கேட்டது. பயங்கர இயக்கத்தில் இருந்தாலே, சிக்கிக் கொண்டால் தூக்குமேடை ஏறவேண்டும்! லிபரல் கட்சியிலிருந்தாலோ, சபை நடுவே நின்று சான்றோர் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷய விளக்கங் கூற வேண்டும். காந்தியக் கூட்டத்தில் சேருவதென்றாலோ, கைழதல் தேவையில்லை. யாரும் சேரலாம்! எவ்வளவு பாமரராக இருப்பினுஞ்சரியே! இந்தத்தந்திரமே காந்தியாருக்குக் கூட்டத்தைச் சேர்த்துக்கொடுத்தது.

இத்தகைய கூட்டத்தைச் சுலபத்திலே வசியப்படுத்தவும் அவரால் முடிந்தது. அதற்காக அவர் மதவேட மணிந்தார். அதுமக்களிடை மனமயக்கத்தை உண்டாக்கும் மார்க்கமாயிற்று. பார்ப்பனசமூகம், இவரைப் பயன் படுத்திற்று, இவரும் அதற்கு இணங்கினார். உடனே மோகனதாசர் மகாத்மாவானார், பத்திரிகைகள் பாடின, பிர்லா, பஜாஜ்கூட்டம் பணஉதவி செய்தன, நம் கண்முன்பாகவே புராணம் எழுதப்பட்டு, காந்தியார் கடவுளவதாரமாக்கப்பட்டார். ஆனால் இத்தகைய பணபலம், பார்ப்பன பலம், மதபலம், பத்திரிகை பலம், மகாத்மாபட்ட பலம், இவைகளுடன் ஆத்மசக்தி பெற்று, இருபத்தைந்து ஆண்டுகள் வேலைசெய்து, இலட்சக்கணக்கான மக்கள் கண்ணைமூடிக்கொண்டு பின்பற்றுகிறார்கள் என்ற பெருமையான பேச்சையும் பெற்று, ஆங்கில அரசாங்கமே அடங்குகிறது என்று ஜம்பம் பேசும் பூசாரிகளைப்பெற்று, காந்தியார் வேலை செய்து கண்டபலன் ‘ன்யம். சாதாரண ஆத்மாக்கள், இவ்வளவு அபாரமான செல்வாக்கோ, பணபலமோ, பெறாமல், கள்ளத்தனமாகப் பத்திரிகைகள் நடத்துவதும், காசுக்குவழியின்றித் திண்டாடுவதும், சர்க்கார் ஏவிய கொலையாளிகளிடம் சிக்குவதும் தப்பித்துக் கொள்வதும், வாழ்க்கையிலே சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டு, விரோதிகளின் வலையை அறுத்தெரிந்து கொண்டு, கூரியவாள், கொடியசதி, மரணதண்டனை, கடுஞ்சட்டம் கூட இருந்து குடிகெடுக்கும் துரோகிகள் தந்ததொல்லை, இவ்வளவையும், சமாளித்து, இரவுபகல் உழைத்து, வறுமையில்வாடி, பட்டினியில் பதைத்து,

நாடு கடத்தப்பட்டும், நள்ளிரவில் விரட்டப்பட்டும், மாறுவேடம் பூண்டுதிரிந்தும் பலப்பல ஆண்டுகள் கொடிய சிறையிலே ள்ளப் பட்டுக்கிடந்தும், பாடுபட்டு தமது இலட்சியங்களிலே பெற்றவெற்றியில், ஆயிரத்தில் ஓர்பங்கு, காந்தியார் பெற்றார் என்று, காந்தி பக்தர்கள், நெஞ்சிலே கை வைத்து, நேர்மையில் நாட்டம் வைத்து, கூறமுடியுமா என்று கேட்கிறேன்.

கடந்த ஜெர்மன் சண்டைக்குப் பிறகு, பலநூற்றாண்டுகளாக, அடிமைக்குழியிலே உழன்று, ஆபாசத்தின் இருப்பிடமாகி, மக்களைச் சித்திரவதை செய்யும் இடமாக இருந்த ரஷியாவை, சமதீர்மநாடாக்கி, “அன்று அவன் எழுதியது” என்ற அவலச்சொல்லை அழித்து, மக்களை ஒப்பப்பர் ஆக்கிய, வீரன் ங.ஐ.லெனின், சாதாரன ஆத்மா! அல்லலையே கண்ட ஆத்மா! ஆபத்தை அணைத்துக்கொண்டு வாழ்ந்த ஆத்மா! பசியும் பட்டினியும் அவனுக்குப் பரிவாரம்! அந்த “அன்னக்காவடி” செய்துகாட்டிய அற்புதத்தை ஆயிரம் மகாத்துமாக்கள் ஒற்றைக் காலால், ஊசிமுனைமேல் நின்று தவங்கிடந்தாலும் செய்து காட்ட முடியுமா? அத்தகைய லெனினுக்கு, அவரது வாழ்நாளிலே, காந்தியாருக்கு நமது மக்கள் தந்த அளவு ஆதரவு தரவில்லை! எங்கும் எதிர்ப்பு! எவ்வளவு அபத்து! ஜாரின் கொடுமை! பட்டாளங்களின் பதட்டம்! மதக்கிலுக்கர்களின் தொல்லை! சீமான்களின் சீற்றம்! தோழர்களின் சிலருடைய துரோகசிந்தனை! இன்னோரன்ன பிற இடையூறுகள்! தலைகாட்டினால், தண்டனை! பத்திரிகை வெளியிட்டால் சிறை! என்று கொடுமை இருந்தது.

இம்மென்றால் சிறைவாசம், ஏனென்றால் வனவாசம், என்றிருந்த ரஷியாவிலே, நெருப்பு மேடை மீது நின்று, முட்புதரிலே நடந்து, புரிக்குகையில் நழைந்து, பாம்புப்புற்றிலே கையை நுழைத்து இரும்பு முள்வேலியிலே, ஜாரின் ஆட்சியிலே, லெனின் வேலைசெய்து, உலகிலே உன்னதமான ஓர் புது அரசை மக்கள் மாட்சியை, நிறுவினார். லெனின் கண்ட ஆபத்திலே, கடுகளவும் காந்தியார் கண்டாரில்லை. அவர் கண்டதெல்லாம், 144! சிறை! சிறையிலே வழக்கமாக ஆரஞ்சுரசத்துக்கோ ஆட்டுப்பாலுக்கோ, நிலக்கடலைக்கோ, நேர்த்தியான படுக்கைக்கோ குறைகிடையாது. டாக்டர்கள் வருவர், பரிசோதிப்பர்,

சர்க்கார் அறிக்கை வெளியிடுவர்! கஸ்தூரிபாய் காண்பார், களிபார். பிர்லாவும் பஜாஜீம் போவார், பாதகாணிக்கை தருவர். இதற்கப் பெயர் சிறைவாசம்! இது காண்யார் கண்ட “தாங்கொணாக்” கஷ்டம்! லெனின் பட்ட கஷ்டத்தோடு இதனைச்சற்று ஒப்பிடுங்கள், நெஞ்சிருப்பின், நேர்மையிருப்பின், உண்மையை உரையுங்கள் இருவரிலே, எவரய்யா, கர்மவீரன், அஞ்சாநெஞ்சன் ஆற்றலுடையோன். பாதிரிகள் பயங்காட்டினர், பணகாரர் ஈட்டிகாட்டினர், லெனினுக்கு! இங்கே, மகாத்மாவே! என்று மதவாதிகள் மண்டியிட்டனர், சான்சொரூபியே என்று சீமான்கள் வாழ்த்தினர், இந்தியத் தலைவரே என்று சர்க்கார் அர்ச்சித்தனர். கலிகால அவதாரமே என்று மக்கள் பூசித்தனர்! மதவாதிகள் மண்டியிட, சீமான்கள் வாழ்த்த, சர்க்கார் அர்சிக்க மக்கள் பூசிக்க, கொலுவிற்றிருந்து, காந்தியார் கண்கள் பார்ப்போம். அதோ அந்த ரஷியாவை நினையுங்கள்! ரசாபாச மடம், நயவஞ்சகர்களின் நடனசாலை கொடுங்கோலனின் கொலுக்கூடம், மதக்கேடர்களின் -கூடாரம், மக்களைக் கசக்கிப் பிழியும் கவலைக்களம் ரஸ்புட்டினின் லீலாவிநோத கொலு மண்டபம், ஜாரின் தர்பார் கிரஹம்! ஒருலெனின் ஆத்மசக்தியோ, அந்தராத்மாவின் துணையோ பணமூட்டைப் பலமோ இன்றி உழைத்துக் கஷ்ட நஷ்டத்தைக் கனிரசம் சரும்ச்சாறு மெனக்கொண்டு பணியாற்றியதால், சமத்துவம் செழிக்கும் நாடாக்கி விட்டார், உலகம் பார்த்துக்கொண்டிருக்கையிலே! மலைபோல் திரண்டுகிடந்த மமதையைக் மாய்த்துச் சழுக்கரைச்சாய்த்து ஜாராட்சிசரியச் செய்து முதலாளித்வம் முறியச்செய்வது, புத்துலகு அமைத்துக்காட்டினார்! இவருடைய வெற்றி எங்கே! காண்யாரின் கதை எங்கே!! ஒப்பிட்டுப்பாருங்கள், உன்மை எதுவெனத் தெரியுங்கள்!

ஐரோப்பாவிலே ஓர் நோயாளியாக இருந்த துரக்கியை,

நொடியிலே வல்லரசாக்கினாரே முஸ்தபா கமால், அவர் ஆஸ்ரம வாசியா, அந்தராத்மா வந்து வந்து பேசிடும் பேர்வழியா! துருக்கி, முஸ்தபாவின் சொல்கேட்டு, காந்தியாரின் சொல்கேட்டு இங்கு மக்கள் சொக்கிவிட்டதைப்போல சொக்கிவிட்டனரா? காந்தி

யாருக்கு உடனடியாக ஆதரவுகிடைத்தது போல் முஸ்தபாவுக்கக் கிடைத்ததா! இல்லை எதிர்ப்பு! எதிர்ப்பு! ஆபத்து! கஷ்டம்! சங்கடம்! சஞ்சலம்! இவைகளைக்கடந்தே வெற்றிபுரி சென்றார் வீரத்துருக்கி வல்லரசை நிறுவிக்காட்டினார். இத்தகைய வீரர்களுடன், காந்தியாரின் கதையைச்சற்று ஒப்பிட்டுத்தான் பாருங்கள் தோழர்களே, உண்மை விளங்கும்.

காந்தீயம், தனது கடைசிச்சொட்டு விஷயத்தை கக்குகிறது, சரியான, நெருக்கடி முற்றியுள்ள நேரமாக்கப்பார்த்து! தோழர் சுபாஷ் சந்திரபோஸ், போர் ஆரம்பமானதும், ஒரு காலநிர்ணயம் செய்து இதற்குச் சுயராச்யம் தரப்போகிறீர்களா? இல்லையேல் நாங்கள் யுத்தத்தை எதிர்க்கட்டுமா என்று பிரிட்டிஷாருக்கு எச்சரிக்கை, இறுதி அறிக்கை விடவேண்டும் என்று கூறினார், கபோதித்தனம் அவரது சேனையிலே இருந்ததென்ற போதிலும் கொஞ்சம் கண்ணியமானது காணப்பட்டது. காந்தியார் இப்போது கூறுவதிலே, கபோதித்தனமிருப்பதுடன், கண்ணியம் சூன்யமாக இருக்கக் காண்கிறோம்.

ஜெர்மனி, ரஷியாவிலே இராணுவ. முக்கியத்துவமுள்ள இடங்களைப் பிடித்ததும், சைபீரியா மார்க்கமாக ஜப்பான் தனது படைகளைக் கொண்டு ரஷியாவைப் பின்புறமாகத் தாக்குவதென்ற இரகசிய ஏற்பாடு ஜெர்மனிக்கும் ஜப்பானுக்கும் இருப்பதாக ஒரு வெளிநாட்டுப் பத்திரிகை எழுதுகிறது. வெறும் சரசமாக இருக்கட்டும், யூகமாக இருக்கலாம். ஆனால், காந்தியாரின் திட்டம் ரஷியாவிலே நெருக்கடி இருக்கிற நேரமாகப் பார்த்துத் துவக்கப்படுவதைப் பார்த்தால் ஜெர்மனிக்கும் ஜப்பானுக்கும் இரகசிய ஒப்பந்தம் இருப்பதாக எண்ணுவதைவிட அச்சுநாட்டுக்கும் காந்தியாருக்கும் ஒப்பந்தம்

இருக்குமோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது. ரஷியாவிடம், கொஞ்சமும் அனுதாபமற்ற, ரஷியக் கோட்பாட்டை வைரிஎனக் கொண்டுள்ள சமதர்மிகளைப் பரமவிரோதிகளாகப் பாவிக்கும் ஒரு புண்ய புருஷர் இந்நாட்டிலே, காந்தியார் என்பது சகலருக்கு தெரிந்தே. காந்தியார் அதனை மறைக்கவுமில்லை, பெருமையாகவே பேசிக்கொள்கிறார். ஆகவே தான் அவர், இந்தச் சமயத்திலே "போர்க்" கோலம் கொண்டு வெளிவரப் போவதாகக் கூறினார். காந்தியாருக்கு ரஷியாவிடம் உள்ள கோபத்துக்கும் துவேஷத்துக்கும் காரணம், காந்தியார், இந்நாட்டு முதலாளித்துவத்தின் முதல் நம்பர் ஏஜண்ட், ரஷியக்கொள்கைகளுக்கு வைரி! எனவே, ஹிட்லருக்குள்ள கோபத்தைவிடக், காந்தியாருக்குச் சமதர்ம ரஷியாவிடம் கோபத்தைவிடக், காந்தியாருக்குச் சமதர்ம ரஷியாவிடம் கோபம் பொங்குகிறது, சிறுகிறார், துடிக்கிறார், தொல்லை கொடுக்க, குழப்பம் விளைவிக்க, தீவிரவாதிகளே! சமதர்மிகளே! பாட்டாளி மக்களே! உங்கள் கடமை என்ன ரஷியாவிலே நடக்கும் போர், உலக எதிர்காலத்தை நிர்ணயிக்கும் போரல்லவா! அங்கு இன்று சிந்தப்படும் இரத்தம், உலக எதிர்காலத்திற்காக! ரஷியர்கள் வீழ்ந்ததால், பாட்டாளிமக்களே! பலகாலும் நாம் பாடி ஆடிக் களித்த சமதர்மம் இல்லை! ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை என்றுரைக்கும் சக்தி இல்லை! ஒட்டப்பர் ஆவோம், இது உறுதி ஏழைகளின் இருதய ஒலிதானே சமதர்மம்! அதன் சித்திரமன்னோ சோவியத் ரஷியா! அதை ஒழிக்கவன்றோ சுவஸ்திகக் கொடியோன் துள்ளுகிறான் அவனை அடக்கவன்றோ நேசநாடுகள் முனைகின்றன. அவர்கள் நடத்தும் யுத்த முயற்சியைக் குலைக்க வன்றோ காந்தியார், இச்சமயத்திலே போர் தொடுப்பேன் என்று கூறுகிறார்! இது தகுமா? படுகுழியை வெட்டச் செய்து வெட்டுபவரையே அதில் விழவைக்கிறாறா! இதைக் கேட்பதா?

காந்தியாரின் புதிய போர்ப்பாட்டு, வெத்துவேட்டு என்பதைப் பற்றியோ, அது துவக்கினதும் துவண்டு போகும் என்பதையோ, நான் தெரிந்துகொள்ளாமலில்லை. சாதாரண காலத்திலேயே சரிந்துபோன அவரது சத்யாகரகம் சண்டை காலத்திலே பூத்ததும் கருகிவிடத்தான் போகிறது! நாட்டுக்கே காங்கிரஸ் ஒன்றுதான் ஜெநாயகம் ஆட்சி என்ற நாளிலேயே, அவரது போர், கலிந்து, மெலிந்துமாய்ந்ததுபோது, நாட்டுக்குரியவன் கானிருக்க, நடுவே வந்தவனே நீ ஏன் நாட்டிய மாடுகிறாயா?

என்று ஆரியக்காங்கிரசை முஸ்லீமும் திரரவனும் கேட்டும் இந்தநாளிலே, காந்தியாரின் சத்யாகிரக தத்தி விளையாடி, தலைகீழே சாய்ந்து விடும். கபடக்கருவிலே தோன்றி, கத்தியால் கீறி வெளியாக்கப்பட்டு, கீழே விழுந்ததும், முடமாகி, வளரும்போதே சவலையாகி, பார்த்துக்கொண்டிருக்கையிலேயே குழிபுகும் அக்குழந்தை, அதிலே என்ககுச் சந்தேகங்கிடையாது. ஆனால் காந்தியாரின் சுயசொரபம். வெளிபட்ட இது ஓர் சந்தர்ப்பமாக இருக்கிறது பாரிர் என்பதற்கே இதனைச் சொன்னேன், வேறில்லை.

(திராவிடநாடு - 26.7.42)

முத்தமிழ் கற்றோரே!

பார்வதீ! வா இப்படி! இதோ பார், உடனே உன் பிள்ளைகளை அனுப்பி, பூலோகத்தில் உள்ள புராணீகளை அழைத்துவரச் சொல்லு, வர முடியாது என்று சொன்னால், காதைப் பிடித்து இழுத்து வரச் சொல்லு என்று கடுங்கோபத்துடன் சிவபெருமான் கூறினது கேட்டு, பார்வதி பயந்து நிற்க, நாரதரின் தம்பூரு கீழே விழ, நந்தியின் வால் சுழல, கைலாயமே கலங்கிவிட்டது. மயிலேறி முருகள், ரோகம் சென்று புராணீகளை இழுத்து வந்து சிவனார் முன் நிறுத்த, சிவந்த கண்களுடன் கோபித்து நின்ற தோடுடைய செவியனைக் கண்ட புராணீகள் அப்பனே அம்மா! ஒப்பிலாமளியே என்று பதிகம் பாடலானான்.

நிறத்து உன் பாடலை என்றார் சிவனார்

என் மொழியும் வேம்பாமோ! என்று ஆரம்பித்தான் புராணீகன்.

வேம்பு மட்டுமா! காய்ச்சிய இரும்புபோல் பாய்கிறது என் காதிலே. என்னைப்பற்றி நீ தூற்றியதும், பழித்திருப்பதும், புளுகியிருப்பதும் இவ்வளவு அவ்வளவென்று கணக்கிடமுடியுமா! என்னை நம்பும்படி செய்ய என் குணத்தை, மணத்தை எடுத்துரைத்து, நன்னெறி போதிக்காது. என்னைக் காமுகன், பித்தன், கசடன், கபோதி, கொலைகாரன், பிச்சைக்காரன், பேயன் என்றெல்லாம் தூற்றின உன் நாவை இப்போதே துண்டித்து விடுகிறேன். மக்களுக்க என்னிடம் மதிப்பும், அன்பும் வருமாறு செய்வதைவிட்ட உன்னைக் கண்டு துண்டமாக்குகிறேன். விடுவதில்லை இனி உன்னை என்று வெகுண்டார்!

பொன்னார் மேனியனே! இது என்ன புதுமையான பேச்சு? நான் தங்களுக்கு பக்தகோடிகளைத் திரட்டத்தானே, பலப்பல புராணம் பேசினேன், என் பொருட்டா? என்று புராணீகள் பயந்து கேட்டான்.

என் பொருட்டா? பேஷ்! உன் பிழைப்பின் பொருட்டு என்றார் சிவனார்.

பிரபோ! இதே தொழிலில்தானே நான் பல காலமாக

இருக்கிறேன். இன்று கோபித்துக்கொண்டால் நான் என்ன செய்வேன்? அப்படி நான் என்ன உம்மை குறை கூறினேன்? நீரே சகலமும, சக்தியும் நீரே, சாரமும் நீரே, பிரம்மம் நீரே, பரப்பிரம்மம் நீரே, காரியம் நீரே, காரணம் நீரே, காரண காரியம் நீரே .... என்று புரளும் நீரைத் துடைத்துக்கொண்டே புராணீகர் கூற, சிவனார் குறுக்கிட்டு போதும் உன் பொருளற்ற பேச்சு, உன் பழங்கதைகளை, முன்பு, மக்களின் பகுத்தறிவு இல்லாதபோது சொன்னாய், கேள்வி கேட்பவர் இல்லை, உன் வயிற்றுப் பாட்டுக்கும் வந்த தில்லைத் தொல்லை. நானும் சும்மா இருந்தேன். இப்போது பகுத்தறிவு உதயமாகி, மக்கள் யோசனை பெற்றுவிட்ட பிறகும், மடத்தன முகாரியை நீ விட்டபாடில்லையே! என்னைப்பற்றி என்ன எண்ணுகிறார்கள் தெரியுமா! உன்னால் வந்த வினை எவ்வளவு! ஏ! புராணீகா, உன்னால் நான் பட்டதுபோதும் இனி படமுடியாது, என்னை சும்மா விடவும் முடியாது. இதோ திறக்கிறேன் முக்கண்ணை என்று முனிந்தார் சிவனார்.

புராணீகள் சிரித்துவிட்டு மகேசுவரா! முக்கண் என்பதும் நன் கட்டிவிட்ட கதைதானே! திறக்கிறேன் என்கிறீரே என்றான்.

பார்த்தாயா! உன் புளுகைக் கேட்டுக்கேட்டு நான் கூட ஏமாந்து விட்டிருக்கிறேன். மூன்று கண் இருப்பதாகவே நான் எண்ணிக்கொண்டேன். அது கிடக்கட்டும், என்னை நீ ஏன் தூற்றினாய்? அதற்குப் பதில் சொல்லு என்று கேட்டார்.

போற்றினேனேயன்றி தூற்றினேனில்லையே என்று புராணீகள் புலம்பினான்.

எவ்வளவு நெஞ்சழுத்தம்! நான் சின்னஞ்சிறு பாலகனைக் கொன்று என்குக் கறியாக்கி உணவளிக்கச் சொல்லி சிறுத்தொண்டனைக் கேட்டேன். அவனும் ஆர போலவே செய்தானென்று சொன்னாயே! அதுபோதாதா என்னைத் தூற்ற! நான் அவ்வளவு கொடியவனா, ஈவு இரக்கமற்றவனா, பேயா, பூதமா, சுசா, பிள்ளைக்குட்டி பெறாதவனா, பிள்ளைக்கறி கேட்டே னென்றாயே, அது கேட்ட மக்கள் என்னை எவ்வளவுக் கொடியவன் என்ற கருதியிருப்பார்கள், எவ்வளவு பயந்திருப்பார்கள்? என்று பரமன் பதறினார் கேட்டுகொண்டே.

சிராளா! சீராளா! என்று சிறுத்ததொண்டன அழைத்ததும்

பிள்ளை மீண்டும் உயிர்பெற்று எழுந்து வருவதாகத்தானே கடைசியிலே கதையை முடித்தேன் என்ற புராணீகர் சமாதானம் கூறினார்.

வெகுநன்று பிள்ளை உயிர்பெற்றது இருக்கட்டும், பிள்ளைக்கறி கேட்டதாகக் கூறினாயே, அது எவ்வளவு பேதமை! பக்தன் ஒழுக்கமுள்ளவனாக, பிறருக்குக் கேடு செய்யாதவனாக இருக்கவேண்டுமென்.று நான் கட்டளையிடலாம், அதன்படி பக்தன் நடக்கிறானா என்ற பரிசோதிக்கலாமேயொழிய, அவள் பிள்ளையை அறுத்துச் சமையல் செய்யும்படி கேட்பதா! நான் அவ்வளவு கொடுமைக்காரனா! அது மட்டுமா சொன்னாய், அறிவிலி! மற்றோர் பக்தனைப் பரிசோதிக்க அவன் மனைவியைக் கேட்டேன்று கூறினாள், அந்த வல்லாளனும் அனுப்பி வைத்தான் என்று கூசாது சொன்னாயே, இது தகுமா? நீ சரியா உன் கடைமையைச் செய்கிறாயா என்று பரிசோதிக்க வேண்டுமானால், நான் உன் கடமையை எப்படி நிறைவேற்றுகிறாய் என்று பார்ப்பேனா, உன் பிள்ளையை அறுக்கச் சொல்வதா, பெண்டைக் கேட்பதா! யாரோ ஒரு ராஜனுக்குப் பன்றிகளி மந்திரிகளாக்கினேன் என்றும் மந்திரிகளின் மனைவி மார்களைப் பன்றி மந்திரிகளுக்கு பெண்டாக்கினேனென்றம் சொன்னாய், இது எவ்வளவு அயோக்யதனம், அக்ரமம். இவ்விதமான சேட்டைகளா நான் செய்கிறேன்? இப்படி செய்பவர் எமது சிவனார், அவரை வளங்குங்கள் என்று சொன்னால், மானமும புத்தியும் உள்ள ஒரு ஆள் என்னை வணங்குவானா! என் விலாசத்தைத் தெரிந்துகொண்டு வந்து விலாவிலே குத்துவானே! என்றால் சிவனார்.

அந்த ஆயிரம் ஆண்டு விஷயத்தைக் கேளுங்கள் என்று பாரிவதியம்மையார் சிவனாரிடம் மெதுவாகக் கூற, கோபத்தால் குதித்து சிவனால், புராணீகா நான் ஆயிரமாண்டுகள் அன்னாகாரமின்றி பார்வதியுடன் படுத்தகினடந்ததாக ஓர் பெரும் புளுகு பேசினயே, அதைக் கேட்ட மக்கள் என்னைப்பற்றி எவ்வளவு கேவலமாக மதித்திருப்பார்கள், பார்வதியை எவ்வளவு பழித்திருப்பார்கள். இப்படியும் சொல்வதா! இது எம்மைப் போற்றும் முறையா? என்று கேட்க புராணீகள் பயந்து கீழே விழுந்து புரண்டு என் பிழை பொறுத்தருள்க! இனி நான் விட்டேன் இத்தொழிலை என்று வேண்டிக்கொண்டு நிற்கையில், இனிப் புராணங்களைக் கொளுத்தி அதிலே உன்னைப் போட்டுப் பொசுக்கும்படி உத்தரவிட்டுவிட்டேன்.

அதை மாற்றமாட்டேன் என்று சிவனால் சினந்து கூற சித்தம் சோர்ந்த புராணீகள் செய்வதெதுவெனத் தெரியாது மந்திமுகமும் ஆந்தை விழியுங்கொண்டு நின்றான்.

நிலைகுலைந்து நின்ற புராணீகள் அடியற்ற பனைபோல் அரனடியில் வீழ்ந்து மாபாதகமும தீர்த்த மகேசுவரா! மன்னித்தருள்க! என்று இறைஞ்ச, பிறைசூடி இடிபோல் சிரித்து, ஏடா! மூடா! தாயைப் புணர்ந்தோனை நன் மன்னித்தேனென்று புளுகி, மாபாதகம் கூறியதுமின்றி என் எதிரிலேயுமா கூறத் துணிந்தாய், இதோ பிடி சாபம் என்று கூவினார். இதற்குள் பூதகணங்கள் வந்து நின்றன.

தீ மூட்டிவிட்டீர்களா! என்று சிவனார் கேட்டார்.

தேவ தேவா! முப்புறமெரித்த காலையில் மூண்டதே போல் தீ மூண்டுவிட்டது என்றன பூதகணங்கள். முட்டாள்களே! முப்புறமாவது நான் எரிப்பதாவது, அதுவும் இந்த புராணீகள் கட்டிய கதை என்று கூறிவிட்டு, தூக்கிப் போடுங்கள் தீயில் என்றார்! ஆ! அய்யோ! அரகரா! மஹாதேவா! அய்யோ! என்று புராணீகர் அலரினார்.

லேகியம் லேகியம் என்று கூறிக்கொண்டு இந்த அபினைத் தின்று, மயக்கமுண்டாகி, இப்படி தெரு சிரிக்கும்படி, பிதற்றுகிறீரே மானம் போகிறது. எழுந்திருங்கள் என்று புராணீகரின் மனைவி, பிதற்றிய புராணீகளைத் தட்டி எழுப்ப, புராணீகன் எழுந்து, அட சனியனே! இவ்வளவும் களவுதானா! என்று கூறிக்கொண்டே சிரித்தான். என்ன கனவு? ஏன் சிரிக்கிறீர்கள்? என்று மனைவி கேட்க, புராணீகன், வேடிக்கையான கனவு கண்டேனடி வள்ளி! கைலாயம் போனது மாதிரியும், சிவபெருமான என் மீது கோபித்துக்கொண்டு, நெருப்பிலே தூக்கிப்போடும்படி பூதகணங்களை ஏவின மாதிரியும், கனவு கண்டு, கூவினேன் என்றார். எனக்குத் தெரியும், இதுவும் நடக்கும் இதுக்குமேலும் நடக்கும். ஊத்துக்காட்டாளுக்கப் போடவேண்டிய பூஜையைச் செய்யாத குற்றம் இது என்றாள் புராணீகன் மனைவி, ஓஹோ! புதுப்புடவைக்கு அடிபோடுகிறாயா, என்று கூறிவிட்டு, புராணீகர் புறக்கடை போனார்.

தீர்ந்ததா! இது என்ன கதையா, கட்டுரையா, கதம்பமா, காமிக்கா? என்று இதனைப் படித்து முடிந்த வீரனைக்

கேட்டேன்.

இது கதையல்ல! நான் மதுரையிலே அரங்கேற்றப் போகும் மதியேகதி என்னும் நூலிலே ஒரு பகுதி என்றான்

மதுரையிலே, நீ நூல் அரங்கேற்றுகிறாயா! இப்போது படித்தது மதியேகதி என்பதா? இது என்ன வீரா, விந்தை! என்கிறேன் நான்.

இது வித்தையோ! நானாவது புராணீகனின் புளுகை வெளிப்படுத்தி, ஒரு முழு முதற்கடவுளுக்கு இத்தகைய மூடக்கதைகள் பிடிக்காது என்பதை எடுத்துககாட்டி, ஆஸ்தீகத்தின் மூது படர்ந்துள்ள அழுக்கைப் போக்கும் அன்பு கலந்த நோக்குடன் இந்நூல் இயற்றினேன். உண்மையிலேயே, சிவனார், புராணீகளைக் கண்டால் சீறமாட்டாரா, நெருப்பிலிடுவென்றுரைக்காரா! உண்மையாகவே ஒவ்வோர் புரணீகரும், தாம் பாராயணம் செய்யும் நூல்கள், புளுகு மூட்டைகள் என்பதைத் தெரிந்து கொள்ளாமலா இருக்கிறார்கள்! என் நூலிலே வரும் புராணீகன் அபின் தின்பவன், ஆகவே கெட்ட கடவு கூறுகிறான்! எனவே இந்தப் புது நூல் இயற்கைக்குப் பொருத்தமானது, உண்மை ஆஸ்தீகத்தின் உறைவிடம், மதியே மக்களுக்குத் தேவை என்பதை விளக்குவது. இதற்கு நீ குறை கூறினால், நான் என்ன சொல்வது? கந்தபுராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், இராமாயணாதி, இதிகாசங்கள் ஆகிவைகளைக் காட்டிலும, நான் கூறினதிலே, ஆபாசமோ, அண்டப் புளுகோ இருபபதாக கூறினதிலே, ஆபாசமோ, அண்டப் புளுகோ இருப்பதாக எடுத்துக்காட்டுபவருக்கு ஆயிரம் ரூபாய் இனாம் அளிப்பேன் என்றான்.

கதையும் கற்பனையும் கிடக்கட்டும் காரியத்தைக் கூறு என்று கேட்க, வீரன் விளம்புகிறான்.

கேள் பரதா! மதுரையிலே ஆகஸ்ட் 1,2,3-ல் முத்தமிழ் மாநாடு கூட்டுகிறார்கள். இயல், இசை, சாடகம் என்று முப்பிரிவு. முத்தமிழ் கற்றோர் கூடுகின்றனர். அவர்களிடையே சென்று, நான் உனக்குப் படித்துக் காட்டிய நூலைப் படித்துக் காட்டி அய்யன்மீர்! எனது நூலுக்குச் சாற்றுக்கவி தருவீர் எனக்

கேட்கப்போகிறேன். இதற்கா! இது என்ன கேலிக் கூத்து என்ற கேட்பர். அப்படியானால் தரவேண்டாம். ஆனால், தமிழ் நூல்கள் என்ற, விள்க்கவுரை, விருத்தியுரை, அரும்பதவுரை, பொழிப்புரை என்ற ரூபங்களோடு வெளிவந்துள்ள புராணங்களை நீங்கள் ஓதுக்கித் தள்ள போகிறீர்களா என்று கேட்பேன். ஓங்காரச் சொரூபத்தின் ஓய்யாரத்தை மெய்யாரமாகக் கொண்ட அந்த நூல்களைக் குறை கூறலாகாதே என்றுரைப்பர்.

பழைய புராணத்தைக் கண்டித்து மக்களிடையே அவை பரவாது தடுக்காமுன்னம், முத்தமிழ் கற்றும், சித்திரத்தமிழ் தீட்டியும் பயன் இல்லையே! இதற்கு மாநாடு ஏன்? என்று கேட்கப் போகிறேன் என்று வீரன் கூறினான். சற்றுக் கோபத்துடன் சேச்சே! அதெல்லாம் கூடாது வீரா! முத்தமிழ் மாநாட்டார் பைந்தமிழ் பரவச் செய்யவே இத்தனை பாடுபடுகின்றனர் என்று நான் சமாதானம் கூறினேன். அப்படியானால் அவர்களுக்கு நீ சில யோசனைகள் கூறு. முத்தமிழ் மாநாடு பலன் தருமாறு ஏற்பாடு செய்! பழைய புராணத்தைப்பற்றிப் பேசிப்பாடி ஆடிடக் கூடுவரோல், நான் என் புதுப் புராணத்தைப் படித்து, பொற்காசு தாரும் என்று கேட்பேன், என்றான் வீரன். வீரனும் நானும் பிறகு கலந்து பேசினோம். கற்நோருக்கு முழு அன்புடன் இதனைத் தருகிறோம்.

முத்தமிழ்க் கற்ற வித்தகவே கேண்மின்! இன்று தமிழகத்திலே இயல, இசை, நாடகம் எனும் முப்பிரிவுகளிலும், மக்களிடை, மொத்தத்திலே பரப்பப்படும் அறிவு, கடவுள் கொள்கைக்கும், மார்க்க போதனைக்கும், மன எழுச்சிக்கும் ஏற்றதாகவோ, போற்றி வரவேற்கக் கூடியதாகவோ இல்லை என்பதை வீணில் மறுக்காதீர், மாநாட்டிலே விவாதிக்க மறுக்காதீர், உண்மையை ஊராரிடம் கூறாது மறைத்துவிடாதீர்!

இயல், இசை, நாடகம், மக்களுக்கு அறிவு வளர ஆர்வமூட்ட, மகிழ்ச்சி பிறக்க, நன்னெறியிலே நடக்க வைக்கப் பயன்படவேண்டும். வெளும் கற்பனை, வீண் கனவு, விபசீத புத்தி, வெறுக்கத்தக்க ஆபாசம், மூடத்தனம், கருட்டுக் அகாட்பாடு, கோணர் சேட்டைகளாகும். சடங்குகள், மிரட்சி, பீதி, மன மயக்கம் ஆகிய பீடைகள், பரவாதிருக்கும் சமுதாயமே, புத்துலகு கோருகிறது. முத்தமிழ் இதற்குப் பயன்படும்படி, இன்று உளதா என்பதை ஆராயுங்கள்

முக்கனிச் சாற்றைத் தங்க வட்டிலே ஊற்றி, சதங்கை குலுங்க நடந்து வந்துப் பருகிடத் தந்திடும் பைங்கிளியனையள் போல், கவிகள், தமது கவிதைத்திறனைக் காவியமாக்கித் தருவர், நாம் களிக்க, கனிரசம் பருகிக் கிளிமொழியாளுடன் கொஞ்சிடுதல் போல் கவிதைகள், காவியம் ஆகிய உயர் கலைகளைக் கற்று உள்ளம் குளிர்வோர் உலகோர்.

ஓட்டை மொந்தையிலே, ஈ மிதக்கும் புளித்த கள்ளை ஊற்றி, காரக் கருவாட்டைச் சுவைத்து இதனையும் பருகடா... கந்தா! என்றுரைத்து, கள்ளுக்கடைக்காரன், குடியனுக்குத்தர, அவன் அதனை ஆடிப்பாடிப் பருகி அண்டசராசரம் ஆடதண்ணே! ஆதிசேஷனும் இங்கே ஓடுதண்ணே! என்று கூத்தாடுவான், கெடுவான் அதுபோல் உலுத்துப்போன கொள்கைகளை, மட மடுவில் ஊறிப்போனவைகளை, புராணம் என்று கூறி, மக்களிடம் போதித்தால், பேதை கொண்டோராகி, புதுமை கண்டு மிரண்டு, பழமையில் நெளிந்து, பாசை பிடித்த மனத்தோராகி, மக்கள் பாழ்படுகின்றனர். கலை, மக்களின் அறிவுக்குக் கொலைக் கருவியல்லவே! மக்களின் மாண்புகளை வளரச் செய்யும் வாய்ப்பு! அறிவைத் துலங்க வைக்கும் சக்தி! ஆனந்தபுரிக்கு அமைந்ததோர் வாசல்! பண்பு எனம் பயிருக்கு நீர்! வாய்மை எனும் மரத்துக் வேர்! கற்றோருக்குக் கரும்பு! இளைத்தோரையும் எஃகு உளத்தோராக்கும் மருந்து! காலத்தை மீட்கும், காலத்தைப் புதுப்பிக்கும் வன்மையும் கொண்டது. கலை, இனத்தின் சிறப்புக்கோர் சித்திரச்சாலை! வஞ்சனைக்கு வலையல்ல! ஆபாச அலையாகாது! மூடத்தனம் குடிபுகும் வளையாக, உலுத்தர் அழைத்துக்கொள்ளும் உளையாக, பாம்பியல் பினருக்கோர் புற்றாக, சீலமற்றோரின் சிந்தனைச் சேறாக இருப்பின், அத்தகைய கலை, அதனைக் கற்கும் மக்களின் அறிவை நிச்சயம் கொலை செய்து, வஞ்சக வலையில் விழச் செய்துவிடும் என்பதனை எவர் மறுக்க முடியும்?

கலை வளர்ச்சியிலே கருத்துக் கொண்டோரே! கற்றோ! கூறுமின், இன்று நம் தமிழகத்திலே, இயல், இசை, நாடகமென்னும் துறைகளிலே, போதிக்கப்பட்டு வரும் விஷயங்கள். உன்னதமான கலையா, அன்றி அறிவுக் கொலையா என்பதனை.

ஆன்றோர் தந்தனர், அணியிலக்கணங்கண்டனர், அவைகளின் அழகை என்னென்பேன், உவமைகளின் உயர்வு எத்துணை, காட்சி வருணனை எவ்வளவு களிப்பூட்டுகிறது, நடை அழுகு

காணீர் - என்று கூறாதீர்! நஞ்சை, நவமணிப் பெட்டியிலிட்டுத் தந்தாலும், கோல்லுமேயன்றி, விடாது. நர்த்தனமாடிடும் நாகப்பாம்பின் பற்களிலே விஷமே காண்போம். நயவஞ்சகரின் நடை உடை காணக் காட்சியாகத்தானிருக்கம், நம்பிடிலோ, நாசமே வந்து நிற்கும். எனவே, நூல்களின் நடை அலங்காரத்தை விரித்துக்ட்டி, மற்றதை மறைப்பது, மக்களைக் கெடுப்பதாகும்.

நான் கூறுகிறேன், கேட்டுவிட்டுப் பிறகு பதில் கூறுமின், இன்றைய நிலையிலே முத்தமிழ் மூலம் மக்கள் கற்றிருப்பது, பலப்பல என்ற போதிலும், விரித்துப பிரித்துத் தொகுப்பின், மூன்று கருத்துக்கள் என்று சுருக்கமாகக் கூறலாம். மக்கள் இயல், இசை, நாடகம் மூலம் இன்று கற்றிருப்பது.

1. விதி

2. மேல் உலக வாழ்வு

3. குலத்துக்கோர் நீதி

என்பனவாகும். இல்லையா என்று கேட்கிறேன். இவன் யார், ஏதுங்கல்லாதான் என்று சினந்து கொள்ளாதீர்! தாண்டவமாடும் தயாநிதியின் இடது கால் தூக்கி நின்றாடும் பெருமையினைக் குறித்து, நீவிர் வெண்ப பாடுவீர், நானறிவேன்! நன் உங்களைக் கேட்பது உங்கள் கல்வியின் திறக் காட்டுங்கள் என்றல்ல! காட்டச் சொன்னால், காளமேகம் போல் வசைபாடி, இரட்டையர் போல் இடித்துக் கூறி, ஓட்டக்கூத்தர் போல் அதட்டி என்னை கம்பதாசனாகிறாயா, எமது கல்வித் திறனைக் கொண்டு உன்னைக் கண்டதுண்டமாக்கட்டுமா என்ற கேட்பீர் என்பது எனக்குத் தெரியும். நன் கேட்பது, உமது கல்வியின் திறமையையல்ல! கல்வியின் தன்மையை!!

எலும்பைப் பெண்ணுருவாக்கிய அற்புதத்தை, எழு சீரடியிலே எதுகை மோனை துலங்க எளிதில் விளங்கா பதங்கள் குலுங்க அமைத்து மக்களிடை வீசினாலும், எலும்பானால் என்ன? எண்ணினால் பெண்ணாகாதோ, பெருந்துறையான் பேறால்! என்று பதம் செய்து இசைபெய்து அளிப்பினும், அன்றி, டர்னிங்சீனும், தபேலா முழக்கமும், எலக்ட்ரிக் ஜோடனையும் கலந்து, நாடக ரூபமாக்கித் தரினும், எலும்பு பெண்ணுருவாயிற்று என்ற கருத்தை முத்தமிழிலே, எத்தமிழில் தருவதாயிருப்பினும், கொச்சைத் தமிழே தெரிந்த நான் சங்கத் தமிழ் கற்ற சான்றோரே! உம்மைக் கேட்கிறேன், மக்கள் கொள்ளக்கூடிய

கருத்து என்னவாக இருக்க முடியும். மூட நம்பிக்கையன்றி, இங்கே முத்தமிழ் தந்தது என்ன! இதனைச் சற்று ஆலோசியுங்கள்.

முத்தமிழ் மூலமும இன்று, மக்கன் வாழ்வுக்கும், தாழ்வுக்கும், சந்தோஷத்துக்கும் சஞ்சலத்துக்கும், பிறப்புக்கும், இறப்புக்கும், செல்வ வாழ்வுக்கும் செந்தேள் என கொட்டும வறுமை வாழ்வுக்கும், மாட மாளிகையிலே உலவும் மந்தகாசத்துக்கும், குடிசையிலே குளிர்காய்ச்சலால் குமுறும் கோலத்துக்கும், சுகதுக்கத்துக்கும் மக்களிடம் கூறப்படும் காரணம் என்ன? விதி! விதி! நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்தும், கையே தலையணையாய், கட்டாந்தரையே மெத்தையாய், காய்ந்த வயிறே தோழமை கொண்டு கஷ்டப்படும் பாட்டாளியின் பரிதாப வாழ்வுக்குக் காரணம் என்ன? விதி! அது தீருவதெப்படி? ஆண்டவனை பூஜி! அந்த முறை யாது? அந்தணருக்கு வேண்டுவன தந்து அவரடி தொழு! பலன் என்ன? பரமனின் திருவடிநிழல் கிடைக்கும்! பிறகு? வேலுலகம் மேன்மையாய் வாழுவாய்!

இதுதானே அய்யன்மீர், முத்தமிழ் இன்று மக்களிடையே போதித்திருக்கும் கருத்து! மக்களின் மனதிலே, இக்கருத்து வேரூன்றி இருப்பதற்குக் காரணம், இயல், இசை, நாடகமெனும் மூன்றின் மூலமும, ஓய்வின்றி இக்கருது திணிக்கப்படுவதனாலேயன்றோ! விதிவசத்தால், சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமனே, சிரமிழந்தான் பரமனே, பித்தனாகி பிக்சையெடுத்தான். பாற்கடலில் துயில்பவனே, பதினான்காண்டு காட்டிலே திரிந்தான் என்ற கருத்தைப் புகுத்திவிட்டீர்களே. மதுரை மில்லிலே மார் பிளக்க பாடுபட்டும், வயிறாற உணவின்றி வாடும் தொழிலாளியோ, பண்ணையிலே மாடென உழைத்து வாழ வழியின்றி வாடும் உழவரோ, தமது குறைதீர மருந்து எதுவென்றுணர, மார்க்கம் ஏற்படமுடியுமா! மார்கழி மாத நோன்பு முதற்கொண்டு மாரியம்மன் பண்டிகை வரையிலே கற்றுக்கொண்டு, வருகிற வருவாயிலும் பெரும் பகுதியை வஞ்சகருக்கு அளித்து வாட்டத்தை மேலும் பெற்று, காலுக்குச்

செருப்புமில்லை! கால் வயிற்றுக் கூழுமில்லை! வீணுக்கு உழைத்தோமடா என் தோழனே!! என்று அவர்கள் லாவணி பாட நாடகத்திலேயோ, பஜனைக் கூட்டத்திலேயோ, புராணீகனின் மாடத்திலேயோ, அத்தகைய பாட்டாளி மக்களைக் கூட்டி வைத்து யாரை விட்டதுகாண் விதிவசம்

எவரை விட்டதுகாண்

ஈசனை சிவகாமிநேசனை விட்டதா?

எம்பெருமான் ரகுராமனை விட்டதா?

யாரை விட்டதுகாண் விதிவசம்

என்று பாடி, அடக்கிட முத்தமிழ் மெத்தப் பயன்படுகிறது உண்டா, இல்லையா?

முத்தமிழ் என்று கூறி மக்களிடையே இன்று பரவச் செய்துள்ள கருத்தின்படி, பார்ப்பனர் என்ற குலம் உயர்ந்து, மற்றவை படிப்படியாகத் தாழ்ந்து குலத்துக்கோர் நீதி உண்டு. அது கோணிடில் உலகு கோணிடும் என்ற வண்ணமும், ஏற்பாடும் நிலைக்கச் செய்துவிட்டனர். ஒரு சிறு கூட்டம், பெரும்பான்மையினரை, இழிகுலமென்று இழித்துப பழித்துப் பேசி, அடக்கி ஒடுக்கி அழித்திடும் கொடுமை, இங்கன்றி வேறு எங்கேனும் உண்டா! இடி பலப்பட்டும் எழுச்சியின்றி ஏழை மக்கள் இருப்பதன் காரணம், என் செய்வது, எல்லாம் பிதிவசம் என்று அவர்கள் எண்ணும்படி செய்து வைத்த சூழ்ச்சியல்லவா! இந்தச் சூழ்ச்சிக்குத் தான் இன்று முத்தமிழ் படைக்கலமாக இருக்கிறது! நான் கூறுவது தவறா, விதி, மேலுலக வாழ்வு, குலத்துக்கோர் நீதி எனும் மூன்று மயக்கம் கலவாது முத்தமிழை இனியேனும் அளிப்பீர்கள் என்று கேட்கிறேன்.

பக்தன் பாடுபடுவான், இடபாவாகன ரூபராகப் பரமன் காட்சியளித்து, உன் கஷ்டம் தீர்ந்தது. இனி சிவரி வா என்று அழைப்பர். இதுதானே முத்தமிழில், மூலக்கருத்தாக மக்களிடை புகுத்தப்பட்டுபிட்டது. வாழ்வை மாயமென்றும், உலகை ஓர் கற்பனைப் பொருள் என்றும், சுகதுக்கத்துக்கு சித்ராபுத்திய சாசனத்தின்படி ஏற்கெனவே போட்டு வைக்கப்பட்ட தலையழுத்து

காரணம் என்றும், குல தர்மமே புண்ணியமென்றும், பிறவியே பாவமென்றம் இவ்வுலக வாழ்வே ஒரு கேடு என்றம், மேலுலக வாழ்வே மேம்பாடுடையதென்றும், முத்தமிழாலும் நித்தநித்தங்க கூறிவிட்டுப் பிறகோர் நாள் மக்களைப் பார்த்து மகாஜனங்களே நமக்குள் ஒற்றுமை வேண்டாமா? சக்தி வேண்டாமா, தைரியம் வேண்டாமா? சுயராச்சியம் வேண்டாமா? ஜனநாயகம் வேண்டாமா? சமதர்மம் வேண்டாமா? என்று முழக்கம் செய்து பலன் என்ன? அவன் ரயில்வே ஏற்பட்டும், இன்னமும், எத்தனை தூரமோ அறியேன் பண்டரிபுரம் என்றுதானே பாடுகிறான் பஜனைக் கூட்டத்திலே. ரயில்வே கைடு இருக்கிறது. பார்த்தால் பண்டரிபுரம் போக வேண்டிய இடத்திலிருந்து எவ்வளவு மைச், எவ்வளவு நேரத்திலே போகிறது; என்ன சார்ஜ், இவ்வளவும் தெரிந்துகொள்ளலாம்! செய்கிறானா! கிடையாது! பஜனைக் கூட்டத்திலே உட்கார்ந்துகொண்டு எத்தனைத் தூரமோ அறியேன் பண்டரிபுரம், கால்களும் நோகுதே, கடும் பசியாகுதே என்று கதறுகிறானே அத்தகைய மனப்பான்மைக் காரனிடம் போய், காலர்மார்க்ஸ் எழுதிய கேப்பிடலில், 14-ஆம் பக்கதிலே மூன்றாவது பாராவில் முதல் வரியிலே வர்க்கப் போராட்டத்தின், உண்மையை இன்னவிதமாக விவரித்திருக்கிறார். புரட்சி ஓங்குக. உலகத் தொழிலாளரே ஒன்றுபடுங்கள்என்று பேசினால், என்ன நினைக்கிறான்! பெரிய கூட்டம்! உரத்தக் குரலிலே பேசுகிறான். அடுத்த மாதம் ஸ்டிரைக் நடக்கும் என்று இலைகளை எண்ணிக்கொண்டு வீடு திரும்புகிறான். வழியிலே முச்சந்தி ப்ளிளையாருக்கு மூன்று தோப்புக்கரணம் போட்டுவிட்டு மரம் வைத்தவன் தண்ணீர் வார்க்காமல் போவானா? என்று எண்ணிக்கொண்டு வீட நுழையும்போது, எதிர் கடையிலே எம்.எஸ்.சுப்புலட்சுமியின் பிளெட் காட்டில் வளரும் பல போடி எயிரை, ஊட்டி வளர்ப்பவர்கள் யாரோ. . . என்று இசைவுடன் விதி எனும் எண்ணத்தை கலந்து இன்ஜெக்ஷன் கொடுக்க அவனைக் கண்ட மனைவி இப்போது கெவுளி சொல்லிற்று நீங்களும் வந்தீர்கள் என்ற கூற, இருவரும்

இன்றைக்கு இருப்பது போலவே கஷ்டம் இருக்கும். விடியாமல் போகுமா? என்று பேசிக்கொள்ள, மூத்தகுமாரன் சுகவாழ்வு துன்பம், தாழ்வு என்றும் சதம் என்று எண்ணலாமா? அரன் சோதனையினாலே மனதுயர்ப் படலாமா? தலைவிதி விட்டுப் போமா என்று பாடிக்கொண்டே உள்ளே நுழைகிறான். பாட்டாளியின் வாழ்க்கை இதுதானே!

சீழ்ச்சியுறு தமிழகமே எழுச்சி கேட்பாய் விசை ஓடிந்த தேகமே வன்மைகோரு! தாழ்ச்சி நீக்கி எழுச்சி பெறு. தடை எதிர்த்தொழிதது விடுதலை கோரு.

மூடமதியே விலகிநிலி! இருட்டுக் கொள்கையே எம்மை அண்டாதே, எட்ட நில்! மெய்யரிலே எம்மை ஆதரி!

விதிவிதி என்று விம்மாதே! கதி இலையே என்று கதறாதே. மதியிழந்து மனமயக்கில் ஆகாதே. என்னை உணரு! உன் கஷ்டத்தின் காரணத்தைக் கண்டு உலகைத் திருததி அமைப்பேன் என்று முழக்கம் செய்.

இங்கு வாழ்வேன் என்று இயம்பு! இவ்வுலகு மாயை எனில், எனக்கு மட்டுமோ, சிற்றரசர் சீமான்களுக்குமோ என்று கேள். மாயா உலகு அவர்கட்கு மகிழ்ச்சியும் எனக்கு வாட்டமும் தருவானேன்? வெட்டி வீழ்த்துவேன் வேதனை தரும் முறைகளை என்று கூறி வீரனாக வெளியே வா!

உறுதி! உறுதி! உறுதி! ஒன்றே ஒன்றே சமூகம் என்றெண்ணார்க்கு இறுதி! இறுதி! இறுதி! எனும் புரட்சி மொழி பேசு.

முத்தமிழே! இவைகளை என் தோழர்களுக்கு இனியேனும் நீ தரவேண்டும். இது என் விருப்பம். முத்தமிழ் கற்றோரே! திடுககிட வேண்டாம். விதி மேலுலக வாழ்வு என்றுரைக்கம் சரி, குலத்துககோர் நீதி கூறிடும். கெடுமதி, கந்தபுராணம், இதிகாசம், காவியம், கவிதை எதுவாயினுஞ் சரி, அவைகளை இயற்றினோர், கம்பன், கடம்பன், சிம்பன் என்றிருப்பினும் சரியே,. இந்த முழுமோச மூன்று கருத்துகளையும் கொண்ட எங்களை இனி மக்களுக்குத் தாரோம் என்று துணிகரமாக ஓர் துர்மானம் நிறைவேற்றுவீரா! வீரரையும் கோழையாக்கும் விபருதத் தன்மையும், ஆண்டவனை அநாகரீகச்

சேட்டைக்களாக்கிக் காட்டும ஆபாசத்தையும், மக்களின் மனவலிமையை மாய்க்கும் கோடுமையையும், பார்ப்பன குலத்துக்கே உயர்வு தந்து மற்றையக் குலத்தவரை அடிமையாக்கும் நேரத்தையும் இவ்வுலகம் பொய். அங்கிருப்பதே மெய் என்றுரைக்கு.ம் வஞ்சகத்தையும் எக்கஷ்டம் வரினும் அவனிருக்கிறான் ஆட்கொள்ள என்று கூறி, வழக்கைக் காலங் குறிப்பிடாது, வாய்தா போடும் வழக்கத்தையும் புகுத்தியுள்ளவை. இயலிலே, இசையிலே நாடகத்திலே எங்கக இருப்பினம் அவைகளை உள்ளடக்கிய வைகளை ஒழித்துவிடும் தீரம் உங்களுக்குப் பிறக்க வேண்டும்.

கலை போய்விடுமே! என்று கண்ணீர் விடாதீர்! அவைகளின் அழகு என்னே! என்னே! எனறு ஏங்காதீர்! ஏழாவது முறையாக இந்தக் காவியத்துக்கு இன்னவிதமான உரை என்டே முக்கால் ரூபாய் விலையில் 7600 காபிகள் அச்சிட்டு விட்டோமே, இப்போது எப்படி கலையிலே உள்ள கரைக்காக அத்தகைய காவியமே வேண்டாம் என்று கூறுவது என எண்ணிப் புத்துலகுக்கு எதிரிகளாகாதீர்!

நீங்கள், புதுக் கருத்துக்கள், சமுதாய நீதி, மக்கள் எழுச்சி ஆகியவைகளைக் கொண்ட காவியங்களை இயற்ற வல்லீர். கவிபாடிட அறிவீர். பண்ணமைக்க முடியும். நாடகம் தீட்டிட இயலும். பழைய கூளத்தைக் கட்டிக்கொண்டு ஆழுவதை நிறுத்திக் கொண்டு, மக்களின் இன்பவாழ்வுக்கு, விடுதலைக்கு, அறிவுக்கு, சமத்துவத்துக்குத் தேவையான புது நூற்களை கவிதைகளை, பண்களை, நாடகங்களை இயற்றும் சக்தி உமக்க உண்டு. ஆனால் பழைமையிலே புராணத்திலே உள்ள பக்தி, உமது சக்தியைச் சாய்க்கிறது. இது கேட்க கோபித்து சு.ம.வின் குயுக்தி வாதம் என்ற தூற்றிவிட்டுத் திருப்தி அடையாதுர் என்று நான் முத்தமிழ் கற்றோரைக் கேட்டுக் கொள்கிறேன். அவர்களை நான் மாறச் சொல்கிறேன். இணங்கினால் என் மகிழ்வு எவ்வளவோ இருக்கும். இளைஞர் உலகில் இருப்பவன் நான்! என் எள்ளம் அந்த உலகின் எண்ணம்! புத்துலகப் பூந்தோட்ட வாடை! அவர்கள் இணங்க மறுத்தால், இருகை கூப்பி அவர்களைத் தொழுது, இளைஞர் உலகம், பல

கற்ற பெரியோரே, உலக நிலை கற்க மறந்தீரே! இதோ உலகு மாறிக்கொண்டே இருக்கிறது. காணீர்! என்று கூறிவிட்டு இளைஞர் உலகம் வீறுகொண்டு எழும் என்பதிலே எனக்குச் சந்தேகமில்லை.

முத்தமிழ் வல்லோருக்கு நான் இத்தனையும் கூறினது. அவர்களின் மனம் மீண்டும் மீண்டும் புணத்திலே போய்ப் புதைந்து கொள்ளாமலிருக்க வேண்டும், அவர்கள் திறமை, துருப்பிடித்த புராணத்துக்குப் புதுமெருகிடும் பயனற்ற வேலையைவிட்டு, அவர்கள் புத்துலகு அமைக்கும் பணியிலே ஈடுபட வேண்டும் என்ற விருப்பத்தினால்! உலகெங்கும் ஊரெங்கும் புத்துணர்ச்சியும், புதுமலர்க்சியும் எற்பட்டு வருவதால்! விடவே மாட்டேனே! நான் அதனை விடவே மாட்டேனே! என்று கூறிக்கொண்டு நிற்கவும். புல்லாகிப் பூண்டாகி என்ற பதிகத்துக்கு விளக்கவுரை பதிப்பித்து டார்வின் கொள்கையைவிட இதிலே தத்துவ விசேடமுண்டு என்று தர்க்கித்தும் அவர்கள் தங்கள் காலத்தைக் கழிக்க விரும்பினால் நான் அவர்களைத் தடுக்க முடியாது. ஆனால் ஒரு திருப்தி, நம்பிக்கை, உறுதி எனக்கு. அவர்களின் காலம் தீர்ந்துவிட்டது. புதுக்காலம் பிறந்து கொண்டிருக்கிறது! அதன் ஒளி வீசத்தான் போகிறது! மணம் பரவித்தான் தீரும்!!

(திராவிடநாடு - 02.08.1942)

அச்சு முறிந்த வண்டி!

சேற்றில் சிக்கிக்கொண்ட வண்டி! என்று ஆச்சாரியார் காங்கிரசை வர்ணிக்கிறார். அதை வெளியே தள்ளிவிட்டு, மீண்டும் அதிலே ஏறிக்கொள்ளவே, இப்போது வண்டியை விட்டுக்கீழே இறங்கினாராம்! நமக்கிருக்கும் சந்தேகம், வண்டியைச் சேற்றிலிருந்து வெளியே தள்ளும் சக்தி ஆச்சாரியாருக்கு உண்டா இல்லையா என்பதன்று, இந்த முயற்சியே, ஆச்சாரியார் சேற்றிலே இறங்கிவிட்டால், அவரைச் சேற்றிலிருந்து வெளியே இழுத்துவிட வேண்டி நேரிடுமே! அதற்கு யார் இருக்கிறார்கள் என்பதேயாகும்.

உண்மையில் ஆச்சாரியார் கூறின உவமை சரியானதன்று, பொருந்தாது. காங்கிரஸ், சேற்றிலே இறங்கிய வண்டியன்று! அச்சு முறிந்தவண்டி, ஆகாத வண்டி! அதில் பூட்டப்பட்டிருக்கும் மாடு ஒரு சண்டி கொஞ்சம் அதற்குக் காலும் நொண்டி! காந்தியார் பிடிவாதக்காரர், பலமுறை போரிட்டுத் தோற்றிருக்கிறார். எனவே அவரைச் சற்றுக்கால் நொண்டியான சண்டி மாடு என்றுரைத்தோம்! வண்டியின் அச்சு முறிந்தது, பளுத்தாங்காத காலும், பாறை சரியில்லாததாலும், இரண்டரை வருட ஆட்சியிலே அந்த வண்டி ஏற்றிச்சென்ற மமதை மிகமிகப் பளுவான வஸ்து, இஸ்லாமியரையும் திராவிடரையும் ஏய்க்கவேண்டும் என்பதற்காக, காட்டு வழி சென்றது. எனவே காங்கிரஸ் வண்டியின் அச்சு முறிந்திருக்கிறது. அந்த அச்சு முறிந்த வண்டியிலே பூட்டப்பட்டிருக்கும் நொண்டி யான சண்டிமாடு, வண்டியை இழுத்துச் செல்கிறது. வெளியே வந்த ஆச்சாரியார், இதனைத் தெரிந்துகொள்ள வேண்டுகிறோம்.

காந்தியார் தமது புதுப்போராட்டத்தைத் துவக்கியே தீருவதென்று முடிவு செய்துவிட்டார். யுத்த முயற்சியைக் கெடுக்கத் துணிந்துவிட்டார். பாகிஸ்தானை எதிர்த்தே தீருவதென்றும் தீர்மானித்து விட்டார். இந்த இரண்டும் ஆச்சாரியார் போக்குக்கு நேர்மாறானவை, ஆச்சாரியார், யுத்த முயற்சியில் ஈடுபட்டாக வேண்டும் என்றும், பாகிஸ்தானிகளுடன் சமரசம் செய்து கொள்ளத்தான் வேண்டுமென்றும் கூறிவிட்டார். இனி எப்படி அந்த வண்டி ஆச்சாரியாருக்கு ஏற்றதாக முடியும்! ஏனோ இன்னமும் அவருக்கு இந்த மயக்கம்!!

இந்தப் புதுப்போர் பிரிட்டிஷாருக்கு எதிர்ப்பு என்ற பெயரில்

துவக்கப்பட்டாலும், உண்மையான நோக்கம் வேறு! காந்தியாரே தமது அறிக்கையிலே பிரிட்டிஷாரின் யுத்த முயற்சியைக் கெடுக்க வேண்டுமென்று நான் எண்ணவில்லை. அப்படி எண்ணினால், மூன்றாண்டுகளுக்கு முன்பே இதனைச் செய்திருப்பேன் என்று குறிப்பிடுகிறார்.

இப்போது இந்தத் தீயில் குதிக்கம் திருவிழா நடத்துவதற்குக் காரணம், முஸ்லீம் திராவிடர் ஆகியோரின் கேளிக்கைகளை, ஓரளவுக்குப் பிரிட்டிஷார் ஏற்றுக் கொண்டதால், மனம் வெதும்பி பிரிட்டிஷாரை மிரட்டி, இஸ்லாமிய திராவிடர்களின் கோரிக்கைகளை ஒழித்துவிட வேண்டும் என்ற எண்ணமேயாகும். இந்தப்போர், வகுப்புப் போராகவே வளரும் என்பதை அவர் அறிவார். ஆனால் அராஜகத்தை அணைத்துக் கொள்ளவும் தயாராகிவிட்டதாகத் தெரிவிக்கிறார்.

வகுப்புக் கலவரமாகவே இந்தப்போர் வளரும் என்பதற்கு சந்தேகமில்லை.

1930-34ல் காங்கிரஸ் சட்டமறுப்பு இயக்கத்தை நடத்தியதற்கு, காங்கிரசின் போக்கு முஸ்லிம்களால் கண்டிக்கப்பட்டது. சட்ட மறுப்பு இயக்கத்திலே சேராதவர்களைத், தேசத் துரோகிகள் என்றும், நாட்டைக் காட்டிக் கொடுப்பவரென்றும், வெள்ளைக்காரருக்குக் குலாம் என்றும் காங்கிரசார் தூற்றித், துவேஷப் பிரசாரம் செய்தனர். விஷயமறியாத மக்களிடம் சட்ட மறுப்பில் சேர மறுத்தவர்கள்மீது வீண் பழிசுமத்தி விரோத மனப்பான்மையை உண்டாக்கி வைத்தனர், ஆத்திரமூட்டினர். அதன் பலன் என்ன? நாடெங்கும் வகுப்புக் கலகம்! அமளி! கொலைகுத்து முதலியன தாண்டவமாடின. இதோ அந்தச் சமயம், சாந்த சொரூபியாம் காந்தியாரின் கைங்கரியத்தின் எதிரொலியாக விளைந்த விபரீதத்தின் விவரம் தருகிறோம், பாருமின் எவ்வளவு நெருக்கடி விளைந்தது என்பது விளங்கும். சமாதானம் நிலவி இருந்த காலத்திலேயே இத்தகைய கோரம் நிகழ்ந்ததென்றால், சமர் நடக்கும் இதுபோது, எதிரிகள் எப்பக்கம் பாயலாம், எப்போது தாவலாம் என்று எண்ணமிட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்திலே, கொடுமையும் கோரமும் எவ்வளவு பயங்கரமானதாகவும், நாட்டைக் கெடுக்கக்கூடியதாகவு மிருக்கும் என்பதைச் சற்று யோசியுங்கள். இதோ தகவல்!

சட்ட மறுப்புச் சமயத்திலே நடந்த வகுப்புக் கலவரங்களில் சில இவை.

ஜூலை 8ந் தேதி - வங்காளத்தில் ரங்கபூர் என்ற இடத்தில் கலவரம்.

ஜூலை 9ந் தேதி - வேலூரில் வேதனை.

ஜூலை 10ந் தேதி - லாகூரில் அடிதடி.

ஜூலை 11ந் தேதி - பம்பாயிலும், ஐக்கிய மாகாணத்தில் எட்டா என்ற இடத்திலும் வகுப்பு அமளி.

ஜூலை 12, 15 - வங்காளத்தில் மைமன் சிங் பகுதியில் கலகம்.

ஜூலை 17ந் தேதி - மதுரையில் மண்டை உடை திருவிழா. மத்திய மாகாணத்தில் அம்ரோடி நகரிலேயும் ஜபல்பூரிலேயும் அமளி.

ஜூலை 19ந் தேதி - கல்கத்தாவிலே கலவரம்.

ஜூலை 23ந் தேதி - சிந்து மாகாணத்திலே ஷிகார்பூரிலே கலவரம்.

ஜூலை 24ந் தேதி - பஞ்சாபில், லூடியானாவிலே கலகம்.

ஆகஸ்ட் 2ந் தேதி - பீகார் மாகாணத்தில் சம்பாரன் ஜில்லாவிலே கலகம்.

ஆகஸ்ட் 4 - 11 - சத்துரில் கலகம்.

ஆகஸ்ட் 12ந் தேதி - பஞ்சாபில் அமிர்தசரசில் அமளி.

ஆகஸ்ட் 22ந் தேதி - கராச்சியிலே கலவரம்.

ஆகஸ்ட் 24ந் தேதி - கோண்ட வகுப்பாரும் போலீசாரும் கை

கலந்தனர், மத்திய மாகாணத்திலே சோய்டுல் ஜில்லாவிலே.

ஆகஸ்ட் 31ந் தேதி - பம்பாயில், கெய்ரா ஜில்லாவிலே கலகம்.

செப்டம்பர் 1ந் தேதி - வங்காளத்திலே குங்னா ஜில்லா.

செப்டம்பர் 2ந் தேதி - கராச்சியில் கலவரம்.

செப்டம்பர் 4ந் தேதி - கிராமவாசிகள் போலீஸ் அடிதடி, பம்பாயில், சதாரா ஜில்லாவில் நடந்தது.

செப்டம்பர் 6ந் தேதி - நாக்பூரில் பம்பாயில் கலகம்.

செப்டம்பர் 7ந் தேதி - பம்பாய்.

செப்டம்பர் 12ந் தேதி - ஐக்கிய மாகாணத்திலே புலந்தகார்

ஜில்லாவில் கலகம்.

செப்டம்பர் 16ந் தேதி - மத்திய மாகாணத்தில் ரெய்ப்பூரில் கலகம்.

செப்டம்பர் 25ந் தேதி - பம்பாயில், பான்வெல் என்ற இடத்திலே அமளி.

செப்டம்பர் 26ந் தேதி - மொரதாபாத்தில் கலகம்.

செப்டம்பர் 30ந் தேதி - வங்காளத்தில் கோபிநாத்பூரிலும், மத்திய மாகாணத்தில் ரெய்பூரிலும் கலகம்.

அக்டோபர் 2ந் தேதி - கான்பூரில் கலவரம்.

அக்டோபர் 3ந் தேதி - வங்காளத்தில் மித்இபூர் ஜில்லாவில் கலகம்.

அக்டோபர் 4ந் தேதி - ஐக்கிய மாகாணத்தில் ரூர்க்கி என்ற இடத்

திலும், வங்காளத்தில் டாப்லுக் என்ற இடத்திலும் கலகம்.

அக்டோபர் 6ந் தேதி - மத்திய மாகாணத்தில் பண்டாரா ஜில்லா

விலே கலகம்.

அக்டோபர் 10ந் தேதி - அதே மாகாணத்தில் சியோனி ஜில்லாவில் கலகம்.

அக்டோபர் 17ந் தேதி - வங்காளத்திலே டிப்பேரா ஜில்லாவில் கலகம். அக்டோபர் 19ந் தேதி - நாசிக் அருகே கலகம்

அக்டோபர் 22ந் தேதி - வங்காளத்திலே திணாஜபூர் ஜில்லாவிலே

கலகம்.

அக்டோபர் 24ந் தேதி - மொரதாபாத்தில் கலகம்.

அக்டோபர் 26ந் தேதி - பம்பாயில் கலவரம்.

அக்டோபர் 28ந் தேதி - ஐக்கிய மாகாணத்தில் சண்டாசி ஜில்லாவிலே கலகம்.

அக்டோபர் 29ந் தேதி - டில்லியில் கலவரம்.

நவம்பர் 5ந் தேதி - பம்பாயில் கலகம்.

நவம்பர் 7ந் தேதி - பம்பாயில் கலகம்.

நவம்பர் 10ந் தேதி - பீகாரில் சந்தால் பிரதேசத்தில் கலகம்.

நவம்பர் 12ந் தேதி - மேற்படி இடத்திலேயே கலகம்.

மேலும் பலப்பல கலவரங்கள் நடைபெற்றன. விரிக்கின் வேதனையே மிகும். இத்தகைய குழப்பம், போர்க்காலத்தில் நடக்கப் பார்த்துக்கொண்டிருக்கப் பொதுவாகவே சர்க்காரோ சம்மதிக்க

முடியுமா? இத்தகைய குழப்பம் எதிரிக்கு உடந்தையாக இருக்கவேண்டுமென்று ... எண்ணக்காரர் தவிர மற்றையோர் செய்ய முன்வருவார்களா என்று கேட்கிறோம். காரிருள்! மின்னல்! இடி! கடலிலே வழிதவறி மரக்கலம் செல்கிறது கப்பலோட்டி, கலக்கத்தோடு, கமலையும் அலையைக் கண்டு இடை இடையே காணப்படும் பனிப் பாறைகளைப் பார்த்து, மரக்கலத்தைச் செலுத்துகிற வேலையிலே, கப்பலிலே உள்ள ஒரு குறும்பன், தன் திறமையைக் காட்ட வேண்டி, அடித்தட்டிலே, கோடாரி கொண்டு வெட்டினால், அவன் கடலிலே பசியுடன் உலவும் சுறாவுக்கு இரையாகும்படி, தூக்கிக் கடலிலே விசி எறியப்படுவான்! நாட்டுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ள நாளிலே, காந்தியார் இத்தகைய வகுப்புக் கலகமும் குழப்பமும் வரவேண்டுமென்ற உள் நோக்கத்துடன் கிளர்ச்சியைத் துவக்கினால், சர்க்காரும் மக்களும் அவரைச் சும்மாவாவிட்டு வைத்திருக்க முடியும் என்று கேட்கிறோம்.

திராவிட நாட்டைப் பொறுத்தமட்டிலே, காந்தியாரின் புதுப்போர், ஜஸ்டிஸ் கட்சியைத் தூற்றும் சந்தர்ப்பமாக, காங்கிரஸ்காரர்களால் உபயோகிக்கப்படுவதோடு, தீர்ந்துவிடும். காங்கிரஸிலிருந்து "கணிகண்ணன் போகிறான்... நீயும் உன் பைநாகப் பாயைச் சுருட்டிக்கொள்" என்று ஆச்சாரியார் கூறிவிட்டார். அவர் விலகியதும், பலர் காங்கிரஸிலிருந்து விலகி விட்டனர், விலகுகின்றனர், கடுமையான போர், கடைசிப்போர் என்று கிருபளானி கூறுவது கேட்டுச் சில காங்கிரசார், இந்த நேரத்திலே ஆச்சாரியார் படகு ஆபத்திராது, அதற்குப் போவோம் என்று கருதி, அவரைச் சூழ்ந்து நிற்கின்றனர். ஆச்சாரியார் இல்லாத காங்கிரஸ், பெட்ரோல் இல்லாத மோட்டாராகி, கரியில்

ஓடும் வண்டிபோலாகிவிட்டது. சில கொடி தாங்கிகளுக்கு, ஆச்சாரியார் விலகினது, காங்கிரசிலே தாம்பூலம் பெறும் இடத்தை வாங்கி வைத்ததால், அவை காங்கிரசைப்பற்றித் தமுக்கடிக்கின்றன. ஆச்சாரியாரின் பிரசார பலம் இல்லை என்பதோடு, காங்கிரஸ் சம தர்மிகள், பொது உடைமைக்காரர்கள் ஆகியோரின் பிரசார பலமும், காந்தீயப் போருக்கு இம்முறை கிடைக்கப் போவதில்லை. எதிர்க்கவும் போகிறார்கள். இந்நிலையிலே காந்தியாரின் போர் நடக்கையிலே துவண்டு கீழே வீழ்ந்துவிடும் என்றே நாம் கருதுகிறோம். இயக்கம், அரிஜன இயக்கம், இந்தி இயக்கம், கிராம தேவா இயக்கம் என்பனவற்றின் பேரால் இருந்துவரும், பாரதமாதாவின் சம்பளச்

சேனை, காந்தியாரின் போரிலே கலந்துகொள்ளும், கருத்தைவிடக் காசு பிரதானம் அவர்கட்கு!

காந்தியாருக்கே, இன்று தமது போர் நடத்தக் காங்கிரஸ் பயன்படாது என்ற எண்ணம் உண்டாகிவிட்டது. ஆகவேதான் அவர், மாணவர்களையும் தொழிலாளரையும் தமது இயக்கத்திலே சேரக்கோருகிறார். சமதர்மிகள், சோவியத் அன்பர்கள், பாசிச எதிர்ப்பாளர்கள், மாணவரிடையேயும், தொழிலாளரிடையேயும், காந்தியப் போரின் கபோதித் தன்மையை விளக்கிக்கொண்டு வருவதால், அந்த இடமும், காந்தியாருக்கு அதிக பயன்தரும் என்று கூறமுடியாது, எனவே, 'ஆள்பஞ்சம்' வெகுவிரைவிலே ஏற்பட்டு விடும். ஆனால் குழப்பத்தையே காந்தியார் நம்பியிருப்பதால், அதனைத்தடுக்கச், சர்க்காரும், காங்கிரசல்லாத மற்றக்கட்சியிலும் கூடி ஆலாசித்துத் தக்க முறையைத்தக்க சமயத்திலே எடுத்துக் கொள்ளவேண்டும்! எடுத்துக்கொள்வர்!

இதனை நன்குணர்ந்தே சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் அமெரிக்க மக்களுக்குத் தமது ரேடியோச் சொற்பொழிவிலே, காந்தியாரின் இயக்கம் அடக்கப்படும் என்று தெளிவாகத் தெரிவித்து இருக்கிறார்.

சர். கிரிப்ஸ், காந்தியாரின் மண் குடிசையிலே தங்கினார், கதர் அணிந்தார், கைராட்டை சுற்றினார், 'ஜனகணமன' பஜனையில்

கலந்துகொண்டார் என்றெல்லாம் கூறிப் பூர்த்த காங்கிரசார், சர். கிரிப்ஸ் காந்தியாரைப்பற்றி, அமெரிக்கருக்குக் கூறியிருப்பதனைக் கேட்டு, மனம் துவண்டு போயிருப்பர், பாவம்!

காந்தியாரின் குடிசைக்கு வருபவர்களிலே பலர், அவரையும் அவரது நிலையையும் நினைப்பையும் நடவடிக்கைகளையும் படமெடுக்கவே வருகிறார்கள் என்பதைக் காங்கிரசார் தெரிந்துகொள்ளாமல், வருகிறவர்கள் வணங்கவும் வாழ்த்தவும், சீடராகவும் சேவை புரியவுமே வருகிறார்கள் என்று நம்பி ஏமாந்து போகின்றனர்.

சர். கிரிப்ஸ், காந்தியாரின் அபிப்பிராயங்கள் எப்போதும் தெளிவாக விளங்கப்படுவதில்லை எப்போதும் முரணானதாக இருக்கும்.

இந்த மிகக் கஷ்டமான வேளையில் மிக அதீதமாக நிர்பந்தம் விளைவிக்கப்போவதாக மிரட்டுகிறார். காந்தியாரின் கோரிக்கைகளை மற்ற சக்திவாய்ந்த அரசியல் கட்சிகள் எதிர்க்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை" என்று கூறியிருக்கிறார்.

உண்மையான பேச்சு! எனவேதான் காங்கிரஸ் ஏடுகளின் உள்ளத்திலே, அவரது பேச்சு எரிச்சலைக் கிளப்பிவிட்டது.

"ஆங்கிலேயனே வெளியே போ!" என்று காந்தியப்போர் இருக்குமானால், "ஆரியரே, வெளியே போய் விடுங்கள்" என்பது பெரியார் தொடுக்கும் போராக இருக்கவேண்டும் என்று, நாம் முன்பே கூறினோம், அச்சமயம் கோயில்பட்டி, விருதுநகர் ஆகிய இடங்களிலே கூடிய நமது மாநாடுகளில், அத்தகைய போர் தேவை என்று ஆர்வமுள்ள இளைஞர்கள் துடித்தனர். ஜஸ்டிஸ் கட்சியினர் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் 9-ந் தேதி நடைபெறப் போகிறது. அங்கு, நிலைமைக்கேற்றது என்ன என்று தலைவர்கள் தீர்மானிப்பார்கள். கட்டளை பிறந்ததும், கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு வெளிவரத் திராவிட வீரர்கள் தயாராக உள்ளனர்!

முஸ்லீம் லீக் தலைவர் ஜனாப் ஜின்னா நிலைமையைப் பற்றிப் பரிசீலனைசெய்ய, கமிட்டியைக் கூட்டப்போகிறார். போட்டிப் போர் துவக்குவதா, என்பது பற்றி ஆங்கு பேசப்படும்.

ஆதித்திராவிடர் தலைவர் டாக்டர் அம்பேத்கார் அஞ்சா நெஞ்சுடன், “இந்த அமளியை அடக்கித் தீர்க்கவேண்டும் என்று கூறிவிட்டார். ஆறுகோடி ஆதித்திராவிடர்கள், தலைவர் கட்டளையை எதிர்பார்த்துக் கொண்டுள்ளனர். மற்றோர் ஆதித் திராவிடத் தலைவர், தோழர் ராஜபோஜர், காந்தியாரின் போருக்கு எதிரிடையாகப், போட்டிப்போர் துவக்கவேண்டுமென்று கூறிவிட்டார். சீக்கியத் தலைவர்கள், இச்சமயத்திலா இத்தகைய சண்டித்தனம்? என்று கேட்டுச் சீற்றத்தோடு அறிக்கை விடுத்துள்ளார். இந்துமகாசபைக்காரரும் இதுபோது இது கூடாது என்றுகூறி ஒதுங்கிக் கொண்டனர். எனவே, ஆச்சாரியாரும் அவரது சீடர்களும், பொது உடைமைக்காரர் முதலிய தீவிரவாதிகளும் அவர்களுடன் தொடர்புகொண்ட மாணவ, தொழிலாள வர்க்கத்தினரும், திராவிடரும், ஆதிதிராவிடரும், சீக்கியரும், இந்துமகா சபையினரும், கண்டிக்கும் ஒரு போராட்டத்தைக் காந்தியார் துவக்கிக் காணப்போவது என்ன? என்று கேட்கிறோம்.

காந்தியாரின் திட்டத்தைப்பற்றி சுதேசமித்திரன் 24ந்தேதி எழுதியது, “திட்டத்திற்குத் தியாகம் அஸ்திவாரம் தியாகம் செய்யப் பலர் பக்குவப்பட்டிருக்கின்றனர், எல்லாரும் பக்குவப்படவில்லை.” என்று காங்கிரசின் சக்திக்குறைவை எடுத்துக்காட்டி, “நாட்டிலோ குறைகளுக்குக் குறைவில்லை. கசப்பு மலிந்து கிடக்கிறது. கிளப்புவது எளிது, அடக்குவது எளிதல்ல. அடக்காவிட்டால் விஷப்பரீட்சையாக முடியும்” என்றுரைத்து, நாட்டு நிலைமையை விளக்கிவிட்டு, ஏழைநாடு, எளிய காலக்ஷேமம்கூட இன்றைக்குக் கஷ்டம்! என்று சஞ்சலத்தைக் காட்டி “மக்களிடையே பரஸ்பர நம்பிக்கையாவது இருந்தால் சற்றுத் தைரியம் கொள்ளலாம் அதுவுமில்லை. வகுப்புமாச் சர்யம் வலுவுற்றிருக்கிறது. நல்லது சொன்னாலும், செய்தாலும், பொல்லாததாகப்படுகிறது” என்று வயிற்றிலடித்துக் கொண்டு, காந்தியாரை எச்சரிக்கிறது!

இவ்வளவையும் கவனியாமல், காந்தீயர்கள் போர் துவக்கினால், நாட்டினருக்கு, அதை அடக்கும் சக்தி உண்டு என்பதைக் காட்ட முடியும் என்பதிலே நமக்குச் சந்தேகமில்லை. கடைசிப்

போரைக் காந்தியார் துவக்கி, அவர் அடைந்த தோல்வி அட்டவணையிலே இதனையும் குறித்துக்கொள்ளட்டும். தொட்டது துலங்காத தலைவர் அவர்! துவக்கப்படும் மற்றோர் போர், பெறட்டும் தோல்வி!

2.8.1942

வார்தா முனிவர் யாகம் செய்தால்...!

“ஓகோ! தூக்கமா? பக்கத்திலே இவன் தேவியும் இருக்கிறாள். தன்னை வெல்பவர் இல்லை என்ற மன நிம்மதியால், நன்றாக நித்திரை செய்கிறான். ஆ! நான் இவ்விதம் நிம்மதியாகத் தூங்கி எத்தனை நாட்களாகி விட்டன. படுக்கையில் புரண்டு புரண்டு நான் புலம்புகிறேன். இவனோ நிம்மதியாகத் தூங்குகிறான். சற்று விழி, பிறகு, என்றென்றும் விழித்துக்கொள்ள முடியாத பெருந் தூக்கத்திலே உன்னைக்கொண்டு போய்ச் சேர்க்கிறேன்.” என்று, முத்தநாதன். மனதிற்குள் கூறிக்கொண்டான்.

அவனெதிரிலே, மலரணைமீது மன்னன் மெய்ப்பொருள் நாயனார், தம் தேவியுடன் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான். வாயிற் காப்போரையும் மீறிக்கொண்டு உள்ளே நுழைந்த முத்தநாதன், மன்னன் துயில்வது கண்டு, மனதிலே பலப்பல எண்ணினான். பிறகு மன்னனை எழுப்பி, தான் வந்த காரியத்தை நிறைவேற்றிக்கொள்ளக் கருதினான். முத்தநாதன், உரத்த சத்தத்துடன் “அரகர மகா தேவ!” என்று கூவினான். மன்னன் விழித்துக்கொண்டான். “ஆகா! முகத்திலே என்ன பொலிவு! பக்தி ததும்பும் கண்கள்! நீறு பூசிய நெற்றி! உருத்திராக்க மாலை துலங்கும் கண்டம்! சிவ சொரூபமே, சிரம் தாழ்த்தினேன், உமது வரவு, எனது வினைகளை அறுத்தொழிக்குமென்றே நம்புகிறேன். அரனடியாரே எமக்கு ஆண்டவன். அடியேனை ஆட் கொள்க” என்று கூறி, கை கூப்பி நின்றான் மன்னன்.

முத்தநாதன், சிவனடியார்போல, காவிபூண்டு, உருத்திராக்க மாலை தரித்து, கட்டுக்கட்டாக நீறு பூசி அங்கு வந்திருந்தான். திருக்கோயிலூரை ஆண்டு வந்தவனும், திக்கெட்டிலும் தன்புகழ் பரப்பியவனும், இதே முத்தநாதனெனும் சிற்றரசனைப் பன்முறை முறியடித்தவனுமாகிய மன்னன் மெய்ப்பொருள் நாயனாருக்கு, சிவனடியார்களிடம் விசேஷமான பக்தி உண்டு. எனவே, முத்தநாதன் சிவனடியார்போல் வேடம்பூண்டு சென்று, மெய்ப்பொருள் நாயனாரைக் கொல்லவே, அன்று அவ்வேடத்தில் அங்கு வந்தான். அவன் எண்ணியபடியே மன்னனும், வேடத்தைக் கண்டு மயங்கி, முத்தநாதனைச் சிவனடியாரெனக் கொண்டு வணங்கிட, வஞ்சனை வெல்வது கண்டு முத்தநாதன் மகிழ்ந்து, புத்தகக் கவுளியைக் காட்டி, “மன்னா! நின்னிடம் தனித்திருந்து சில பேசி, மெய்ப்பொருள் உரைத்திட விழைகிறேன்” என்றுரைக்க, மன்னன், தேவியை அனுப்பிவிட்டு, தனித்திருந்து,

“திருமந்திர மெதுவென்று கூறுக” என்று கேட்க, புத்தகக் கவுளியைக் காட்டி, “மன்னா! நின்னிடம் தனித்திருந்து சில பேசி, மெய்ப்பொருள் உரைத்திட விழைகிறேன்” என்றுரைக்க, மன்னன், தேவியை அனுப்பிவிட்டு, தனித்திருந்து, “திருமந்திர மெதுவென்று கூறுக” என்று கேட்க, புத்தகக் கவுளியிலே மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து, மன்னனை முத்தநாதன் கொன்று, வஞ்சனைக்காரரை நம்பிடுபவர் உயிர் இழப்பர் என்ற மெய்ப்பொருளை நமக்கெல்லாம் உணர்த்தினான்.

முத்தநாதர்கள் இன்றும் உள்ளனர்!!

அவர்கள் இன்றும், யாரைக் கெடுக்க வேண்டும், அழிக்க வேண்டும் என்று எண்ணுகின்றனரோ, அவர்கள் எந்த வேடத்தைக் கண்டால் சொக்குவரோ, அதே வேடமணிந்து வருகின்றனர். தேசபக்த வேடத்தில் வரும் வஞ்சனைக்காரரின் வலையிலே வீழ்வோர், விபரீதமான விளைவுகளுக்கு ஆளாகித் தவிப்பர் என்பது திண்ணம்.

* * *

நிருபர் : காந்தியார் ஆரம்பிக்கப்போகும் இயக்கத்திலே நீங்கள் கலந்துகொள்ளப் போகிறீர்களா?

இராசகோபாலாச்சாரியார் : தாங்கள் கலந்துகொள்வதாக உத்தேசமோ?

நிருபர் : நான் காங்கிரஸ்காரனல்லவே!

ராஜ் : பிறகு, என்னை ஏன் கேட்கிறீர்கள்?

வார்தாவிலிருந்து திரும்பிய இராசகோபாலாச்சாரியாருக்கும் பத்திரிகை நிருபருக்கும் இத்தகைய பேச்சு நடந்ததாம். காங்கிரசல்லாத நீர் எப்படி, காந்தியார் துவக்கப்போகும் சத்யாக்கிரகப் போரிலே கலந்து கொள்ளப் போவதில்லையோ அதைப் போலவே, நானும், காங்கிரஸ்காரனல்ல. எனவே, நானும் அந்த, இயக்கத்திலே கலந்து கொள்ளப்போவதில்லை, என்பதே ஆச்சாரியார் பேச்சின் கருத்து, காங்கிரஸ்காரர் என்றுள்ளவர்கள், எல்லோரும் இந்தப்

போரில் கலந்து கொள்வார்களா என்பதே சந்தேகம். சிறை புகவேண்டும் என்றதும், எத்தனையோ “தேச பக்தர்களுக்குத்” திடீர் காய்ச்சலும், குலைவலியும் வருவதுண்டு. குடும்பத்திலே தொல்லை, பாகப் பிரிவினையாகவில்லை, புதுக்கலியாணம் செய்து கொண்டு ஆண்டு ஒன்று கூடச்சரியாக முடியவில்லை, என்று ஏதேதோ கூறுவர், சிறை புகுவதிலிருந்து தப்பித்துக்கொள்ள, உள்ளே புகுந்ததும், ஆஸ்த்மா, அல்லது அபெண்டிசிடிஸ், குன்மம் அல்லது குமட்டல் என்ற ஏதாவதோர் வியாதி இருப்பதாகக் கூறி, சிறையிலிருந்து ஆஸ்பத்திரி, பிறகு அங்கிருந்து வீடு, வந்து சேரும் வித்தையைச் சிலர் செய்வர்.

காங்கிரஸ்காரர் அனைவருமே போகிறார்களோ இல்லையோ என்பதே சந்தேகமாக இருக்கும்போது காங்கிரசல்லாதவர்கள் இந்தப் போரிலே கலந்து கொள்வார்களா, மாட்டார்களா என்ற கேள்விக்கே இடமில்லை. கேட்கவேண்டிய கேள்வியும் அதுவன்று.

நாட்டை எதிரிக்குக் காட்டிக்கொடுக்கும் கூட்டத்திலே நீர் சேருகிறீரா? என்பதே கேள்வி. மானமும் மதியும், நாணயமும் நற்குணமும் கொண்ட எவனும், எதிரிக்கு நாட்டைக் காட்டிக் கொடுப்பேன் என்று கூறமாட்டான்!

ஆனால், இந்த உபகண்டத்திலே, குறிப்பாகக், கங்கைக் கரைத் தீரத்திலே, காட்டிக் கொடுக்குங் கும்பல், (முத்த நாதர்கள்) பன்னெடு நாட்களாகவே வாசஞ் செய்து வருகிறது. கத்தி கேடயம் தாங்கத் தெரியாது அக்கூட்டத்துக்கு, காவி கமண்டலத்துடனோ, முப்பரி தர்ப்பையுடனோ காட்சிதரும் கபடக் கூட்டம், நெருக்கடியான நேரங்களிலே எதிரிகளுக்கு உளவு கூறியும், உள் நாட்டிலே கலக மூட்டியும், படை வரிசைகளிலே பீதி கிளப்பியும் பாமரரிடையே பேதம் விளைவித்தும், நாட்டை நாசமாக்கி வந்தன. நவநந்தர்கள் கால முதற்கொண்டு இந்த நாசகால வேலையைச் செய்து வந்ததற்குச் சான்றுகள் பலப்பல உண்டு.

ஐரோப்பாவிலே, நாஜிப்படைகள், திடீர்திடீரென வெற்றிகள் பெற்றதற்கு இத்தகைய துரோகிகளின் செயலே முக்கியமான காரணமாக இருந்ததென்பதை உலகறியும். இத்தகைய காட்டிக் கொடுக்கும் கும்பல், ஒவ்வோரிடத்திலே ஒவ்வோர் முறையைக் கையாளும். நாட்டு

மக்களுக்குள்ள இயற்கையான சுதந்திரதாகத்தை எடுத்துக்கூறி, அதையே சாக்காகக் கொண்டு, எதிரிக்கு இடமளிக்

கும் இழிசெயல் இங்கு கையாளப்படும் முறையாக இருக்கிறது.

பிரிட்டிஷாரே வெளியே போய்விடுவீராக என்ற மந்திரத்தை உச்சாடனம் செய்து சத்யாக்கிரக ஓமத்தை மூட்டுகிறேன், அதற்கு சமித்தும் சரகும் நெய்யும் நிவேதனப் பொருளும் சேகரியுங்கள் என்று வார்தா முனிவர் கூறிவிட்டாராம். வந்துவிட்டது சுயராச்யம் என்று கருதிக்கொண்டு ஒரு கூட்டம் இருக்கிறது. அந்தக் கூட்டத்தின் ஏமாளித்தனத்தை 'முதல்' எனக்கொண்டு தமது கடைசிச் சூதாட்டத்தை ஆடிப்பார்க்கப் போகிறாராம் காந்தியார். இவரது இந்தச் செயலை, வெளிநாடுகளிலே ஹிட்லருக்கு உடந்தையாக இருந்த உளவாளிகளின் செயலுடனும் பந்தியிலே பற்றுக் கொண்டிருந்த மெய்ப்பொருள் நாயனாரைக் கபடத்தால் கொன்ற முத்தநாதன் செயலுடனும் ஒப்பிட்டு நான் கூறுவது தக்க காரணத்தோடேயேதான், தகிடுதத்தமன்று. பிரிட்டிஷாரே வெளியே போ! என்று கூறுவது, ஜப்பானியரே உள்ளே வா! என்று அழைப்பதாக இருக்கமுடியுமே தவிர வேறென்னவாக இருக்க முடியும்! காந்தியார்களின் மனதிலே ஒரு தப்பெண்ணம் உண்டாகி விட்டது. அச்சுநாட்டுப் படைகளின் கை ஓங்கிவிட்டதாக அவை தீர்மானித்துவிட்டன. எனவே இந்தச் சமயத்திலே பிரிட்டிஷாரை வெளியே போ என்று கூறும் கிளர்ச்சியைத் துவக்கினால், ஹிட்லரும் டோஜோவும் களிப்படைந்து உச்சி மோருவர் என்று கருதுகின்றன. இது பித்துக்கொள்ளிப் போக்கின்றி மதியூகமாகாது. ஹிட்லரும், டோஜாவும் இந்தியாவுக்குள் நுழையவேண்டுமானால், பிரிட்டிஷ் படைபலத்தை எதிர்க்க வேண்டுமே என்று எண்ணி யோசிக்கின்றன. இந்த நேரத்திலே, உள்நாட்டிலே குழப்பம் விளைந்தால் உள்ளே நுழைய இது சரியான சந்தர்ப்பம் என்று எண்ணி அச்சுநாட்டுப் படைகள் குதூகலிக்கும். உள்ளே நுழைந்தால் எதிர்க்கப் படை ஏது! படை இல்லாதபோது பூர்ணகும்ப மெடுத்துக்கொண்டு பூர்ணைய்ய பரம்பரை, எதிர்கொண்டழைத்து வந்து "எமது மதத்தைப் பரிபாலித்து எம்மை இரட்சியும் பிரபோ!" என்று அஞ்சலி செய்து கெஞ்சும். மதத்தை ரட்சிக்க அச்சுநாடு தயங்காது! ஏனெனில் அதற்குத் தெரியும், இந்நாட்டுப் பேதம் பிளவு, ஜாதித் தொல்லை சாத்திரச்சண்டை, மூடத்தனம் முதலியன மதப்பிரசாதமே

என்பது. எனவே இத்தகைய மதத்திலேயே இந்த மக்கள் மூழ்கிக்கிடந்தால் தான், அடிமைகளாக்கிச் சவாரிசெய்ய சுலபமாக இருக்குமென்று தீர்மானித்துவிடும்! பார்ப்பனருக்கும் இது பரமதிருப்தி! யாரோ ஆளட்டும் நமக்கென்ன! நமது ஆட்சியிலே குறுக்கிடாதவரையிலே இலாபம் நமக்கு என்று எண்ணிவிடும். திதி உண்டு, கோயில் பூஜை உண்டு, வேதபாராயணம் உண்டு, விதவிதமான பிரசாத வகையறாக்கள் உண்டு. பூசச்சந்தனமும் சூடிக்கொள்ளப் பூவுமுண்டு, அடிமைவேலை செய்ய சூத்திரருண்டு, என்ற இந்த 'அரசு' நிலைத்துவிட்டால் மற்றவற்றைப்பற்றிப் பார்ப்பனர்களுக்கு என்ன கவலை? யார் ஆண்டாலென்ன? எத்தகைய ஆட்சியாக இருந்தால்தான் என்ன? என்றே எண்ணுவர். உண்மையிலேயே தோழர்களே, இதுவரை இந்த உபகண்டத்திலே எத்தனைவிதமான ஆட்சி ஏற்பட்டிருந்தபோதிலும், பார்ப்பனர்களின் ஆதிக்கத்திலே குறுக்கிடவில்லை யென்றால் அந்த ஆட்சியைப் பார்ப்பனர் குறை கூறுவதில்லை. தங்கள் ஆதிக்கத்துக்குக் குறைவு வருகிறதெனக் கண்டுகொண்டால் போதும், உடனே சதி செய்வர், எதிரியிடம் நாட்டைக் காட்டிக்கொடுக்க முனைவர். இது தொன்று தொட்டு நடந்துவரும் வழக்கம். 'இந்திரனே! எமக்கு நல்ல மழை கிடைக்கும்படி செய். எமது எதிரிகளான தஸ்யூக்களை நாசம் செய்" என்று ரிக் வேதகாலத்திலே கேட்ட ஆரியர்கள், இன்றும் அதே நோக்கத்துடனேயே வேலை செய்து வருகின்றனர், காட்டிக் கொடுத்திருக்கின்றனர். ஒவ்வோர் காலத்திலே ஒவ்வோர் விதமான முறையைக் கையாண்டுள்ளனர்.

நார்வே நாட்டைக் காட்டிக்கொடுத்த குவிஸ்லிங்கின் முறைக்கும், நாம் வாழும் இந்த உபகண்டத்தைக் காட்டிக் கொடுக்கக் கிளம்பியுள்ள குவிஸ்லிங் கூட்டத்தின் முறைக்கும் வித்தியாசமுண்டு. ஆனால் இருவரின் செயலும், துரோகத்தின் மீதே கட்டப்பட்டிருக்கிறது. இங்குள்ள குவிஸ்லிங் நாட்டுக்கு சுயராச்யம் கேட்கும் வேடத்தைப் புனைந்துகொண்டு நாற்புறமும் ஆபத்துச் சூழ்ந்துள்ள இந்த வேளையிலே நாட்டிலே குழப்பத்தை உண்டாக்கத் துணிந்து இந்தச் செயலை ஆதரிக்குமாறு மக்களிடமும் முறையிடக் காண்கிறோம். நாட்டுக்கு விடுதலை யார் வேண்டாமென்றார்கள்? யார் வேண்டாமென்று உரைப்பார்கள்? யார்தர மறுக்கிறார்கள்? தர மறுக்க யாருக்கு உரிமை உண்டு? விடுதலை என்பது பரிசன்று! கேட்டுப்பெற! அது ஒரு நிலை, நம்மைப் பக்குவப்படுத்திக் கொண்டால் அந்த நிலையை அடைதல் முடியும்!

பக்குவமடையா முன்போ, காலம் கனியா முன்னமேயோ, அதை அடையத் துடியாய்த் துடித்தாலும், ஆட்டமாடினாலும், ஆப்பசைத்த மந்தி அடைந்தது போன்ற அவதியே அடைய வேண்டி நேரிடும். இதனை உணர மறுப்போரின், உள்ளத்திலே இருப்பது உண்மையிலே நாட்டு விடுதலை என்னும் நோக்கமன்று, நயவஞ்சகம் குடிகொண்ட உள்ளமே அத்தன்மையோருடையது.

சுதந்தரம் சுந்தரமான கருத்துள்ளது! அதை பெற்றுத்தான் தீரவேண்டும். அதிலே சந்தேகமில்லை. ஆனால் இப்போதுள்ள காலநிலை, சுதந்திரத்தைச் சுவஸ்திக்கொடியோன் சூறையாடும் நேரம்! ஜப்பானியர் அழிக்கும் காலம். வீரப்பிரான்சும், வெஞ்சமர் புரியும் வல்லமை கொண்ட பெல்ஜியமும், நாடி நடுங்கா நார்வேயும், பிறவும் தமது சுதந்திரத்தை இழந்ததைக் கண்டு, உலகம் பதைக்கும் நேரம். ஏராளமான படைபலம் கப்பற்கூட்டபலம், விமானபலம், இவ்வளவுடன் மக்களின் மன அரண் எனும் பலம்பெற்று தயாராகவும், கஷ்டநஷ்டமேற்கும் திறனுடனும் உள் நாட்டிலே ஒற்றுமையுடனும் இருந்தாலன்றி, சுதந்திரம் அரைமணி நேரமும் நிலைத்திருக்க முடியாதென்பதைக் கடந்த இரண்டாண்டுச் சம்பவங்கள் நிரூபித்துக் காட்டிவிட்டன. இந்நிலையிலே சுதந்திரம் கேட்பவர் ஒன்று இன்றைய உலகிலே அதன் நிலை யாது? என்பதை அறியாதவராக இருக்க வேண்டும், இல்லையேல் அறிந்தும், எதிரியிடம் கைக்கூலிபெற்று நாட்டைக் காட்டிக் கொடுக்கத் துணிந்தோராக இருத்தல் வேண்டும்.

பேர் துவங்கினதும் காந்தியார் இந்தச் சமயத்திலே, சர்க்காருடன் பேரம் பேசக்கூடாது, அது இழி தன்மையாகும் என்று கூறியதையும், நேச நாடுகள் தோற்று இந்தியாவுக்குச் சுயராச்யம் கிடைத்துப் பயனில்லை என்றும், லண்டன் மீது குண்டு பொழிந்தால் தனது கண்களிலே நீர் வழியுமென்றும் கூறியதுடன் இந்த யுத்தத்திலே இந்தியா கலந்து கொள்வதானால், இன்ன தேதிக்குள் சுயராச்யம் தந்துவிடுகிறேன் என்று பிரிட்டன் வாக்குத் தரவேண்டும், அதற்கான இறுதி எச்சரிக்கையை, காங்கிரஸ், பிரிட்டனுக்கு விடல் வேண்டும் என்று சுபாஷ் சந்திர போஸ் கூறினபோது அதைக் குறை கூறினதும், பின்னர், யுத்தத்தை

எதிர்த்துப்பேச, பேச்சச் சுதந்திரம் வேண்டும் என்று கேட்டதும், அதைப்பெற, தனிப்பட்டவர்கள் சத்யாக்கிரகம் துவக்கியதும், அதிலே மந்திரிப்பிரதானாதியர் சிறை சென்றும், பட்டாளத்துக்கு ஆள் சேருவதோ, யுத்த நிதிக்குப் பணம் குவிவதோ ஒரு துளியும் பாதிக்கப்படாததையும், ஒரு முறை சிறை சென்றவர்கள், மீண்டும் போகமறுத்ததையும் கண்டு, சத்யாக்கிரகத்தை நிறுத்திக் கொண்டதையும், நன்கு தெரிந்து கொண்டுள்ளவர்கள், ஒரே வாரத்திலே போர், விறுவிறுப்பான போர், உக்கிரமான போர், உலகமே கண்டு அதிசயிக்கத்தக்க போர் என்றெல்லாம் விளம்பரப்படுத்தப்படும் இந்தப்போர், புறப்படும் போது வேகமாகவும், போதையிலேயே வழி தவறியும், இடையிலே இடுப்பு முறிக்கப்பட்டும், சடுதியிலே சாயும் என்பதையும் நன்கு அறிவர். எட்டு மாகாணங்களை ஆண்ட பேர்வழிகள், காந்தியாரின் இடக்கரம் வலக்கரம் சங்கு சக்கரம், கதை தண்டம் என்ற அடைமொழிகளக்கு இலக்காக இருந்தவர்கள் சிறை புகுந்தபோதே, பத்திரிகைச் சலசலப்பின்றி பிறிதொன்று மில்லாது, பலிக்காது போய் விட்டதே. இம்முறை மட்டும் இடம் பொருள் ஏவல் தெரியாத கூட்டம் துவக்கப் போவதாகக் கூறும் இந்தப் போர், என்ன பலனைத் தரப் போகிறது? முன்பு நடந்ததற்கும் இப்போது நடப்பதற்கும் ஒரு வித்தியாசம் காட்டலாம் என்று காங்கிரஸ் வட்டாரம் கருதுகிறது. அதாவது, ஆங்காங்கு வகுப்புக் கலகத்தை மூட்டி விடலாம் என்று கருதுகிறது. இது என்ன பலன் தரும்? வகுப்புக் கலகத்துக்கு ஆஸ்பதமான காரணங்கள் இங்கு மலிந்து கிடப்பதை உலகுக்கு எடுத்துக் காட்டுமே யொழிய, நாடு சுயராச்யத்துக்கு இலாயக்காக இருப்பதையா காட்டும்! ஏனோ இந்தக் கெடுமதியும் மடைச்சதியும்?

பிரிட்ஷாரை வெளியே போகச்சொல்லி விடுகிறீரே, ஜப்பானியப் பேராபத்துக்கு என்ன செய்வீர்? என்ற

கேள்விக்கு, “ஏதாவது செய்கிறோம்! ஒத்துழையாமையைச் செய்வோம்” என்று பதில் உரைக்கிறார்கள். என்னே பேதைமை! நம்மை ஒத்துழைக்கும்படி, ஜப்பான் கேட்டால்தானே, நாங்கள் ஒத்துழைக்க முடியாது என்று முடுக்காக இருக்க முடியும்! ஒத்துழைக்கும்படி, பிரிட்டிஷார் மட்டுமே கேட்பர்! ஆட்சியிலே பங்கும், அதிகாரத்திலே இடமும் தருவர், வட்ட மேஜை கூட்டினர் பிரிட்டிஷார், பிற நாட்டார், ஈட்டி முனையால் குத்துவர், உங்கள் நாடுதான், ஆனால் உங்களுக்குள் ஒற்றுமை பிறந்தால், ஆட்சியைத்தர அட்டியில்லை என்றுரைக்கின்றனர் பிரிட்டிஷார். பிறரோ, எமது வாள் வலியால் பெற்றோம், வாயைத் திறவாதீர், வாள் வலியிருந்தால், கிளம்புங்கள் பார்ப்போம் என்றே கூறுவர். இதுவரை, எத்தனை முறை, எத்தனை ஆயிரம் பேர்கள், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஒழிக என்று கூவியிருக்கிறார்கள், எவ்வளவு வன்மையான கண்டனங்கள், எவ்வளவு ஏளனமான பேச்சு, இவ்வளவுக்கும் இடந் தந்த பிரிட்டிஷ் இயல்பு போல, இனி வேறெந்த இயல்பும் இராது. ஒரு சமதர்ம பாட்லிவாலாவின் சொற் பொழிவைக்கேட்டுச் சகிக்காத ஆச்சாரியார், பாட்லிவாலாவைச் சிறையிலிடக் காணவில்லையா? சீராள சித்தி வலசாவில் தொழிலாளர் கிளர்ச்சி செய்தபோது துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டதைக் காணவில்லையா? மதுரையிலே தொழிலாளர் மண்டை உடையத்தடியடி நடந்ததையும் தொழிலாளர் தலைவர்கள் சிறையிலே தள்ளப்பட்டதையும் கண்டோம், ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழர் மொழிப்போருக்காகச் சிறையிலே தள்ளப்பட்டதைப் பார்த்தோம். இவ்வளவும் சாம்பிள் சுயராச்யத்திலே, பார்த்தோம்! இத்தகைய ஆட்சி நடத்தியவர்களிடம், பிரிட்டிஷாருக்கு இருப்பது போன்ற ஆட்சியும் அதிகாரமும், படை பலமும் இருந்திருக்குமானால், எழுதும் நானும், படிக்கும் நீங்களும், என்ன பாடு படவேண்டுமோ தெரியாது.

இத்தகைய பேர்வழிகள், இன்று வெள்ளையரை விரட்டுகிறோம் என்று கூறும் வேடத்தை அணிந்துள்ளது, வேறு எதற்குமன்று, வெள்ளையர் நமது இனத்தின் உரிமைகளையும், இஸ்லாமியரின் இலட்சியத்தையும் சற்று மதித்து, ஓரளவு ஆதரிக்கத் தொடங்கி விட்டார்களே என்ற காய்ச்சலும் கடுப்புமேதான், இதைத் தோழர்களே உணருங்கள்.

* * *

“சுயராச்யமா வேண்டும்? எங்கள் நாட்டுக் கிளைவ், பிளாசி யுத்தத்திலே, உங்கள் நாட்டவரைத் தோற்கடித்து இந்நாட்டைப் பிடித்தார். மற்றோர் பிளாசியிலே, எங்கள் படைகளைத் தோற்கடித்து உங்கள் நாட்டை மீட்டுக் கொள்ளுங்கள்” என்று ஒரு வார்த்தை, பிரிட்டிஷ் சர்க்கார் சொன்னால், என்ன செய்வார்கள் காங்கிரசார்? காந்தியார் என்ன செய்வார்? ஓடோடி வார்தா சென்று அந்தராத்

மாவை அழைத்து, வரம் பெற்று, சர்வ சித்தி யாகம் செய்வாரா? அந்த யாகத்தின் பயனாக, நாற்பது கோடி மக்களைக் காக்க முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும், கின்னரர், கிம்புருடர், சித்த வித்தியாதரர்கள், ஓடோடி வந்து நின்று, ஓங்காரச் சத்தமிட்டுப் போர் புரிவார்களா? தக்ளிகள் துப்பாக்கிகளாகி, சர்க்காக்கள் சப்மெரைன்களாகிவிடுமா? கதர் துப்பட்டிகள் பலூன் பாரேஜ் (பலூன் அரண்) ஆகிவிடுமா! வீடுகளிலுள்ள குழவிக்கற்கள் உலக்கைகள் முதலியவை, பீரங்கிகளாகி விடுமா! என்னப்பா நடக்கும் தேசியத் தோழர், கூறு கேட்போம். ஏதோ ஜனநாயகம், தேசீயம், மனிதாபிமானம் முதலிய கொள்கைகளைப் பிரிட்டன் பேசுவதால், நம்மைப் பார்த்து, “பிளாசியில் பிடித்ததை மற்றோர் பிளாசி ஏற்பட்டால்தான் மீட்டுக்கொள்ள வேண்டும்” என்று கூறவில்லை. அங்ஙனம் கூறி விட்டால், உமது வண்டவாளம் விளங்கி விடுமே, தம்பி! இதைப் பலமுறை யோசித்துப்பார்.

நாட்டிலே, பிரிட்டிஷார் வெளியேறிவிட்டால் குழப்பம் விளையுமே, சட்டமும் சாந்தியும் இராதே, என்றுரைப்போரிடம், சகலமும் தெரிந்தவர் போல், “வரட்டுமே! அந்த வேதனையையும்

பொறுப்போம்” என்று வீம்பு பேசுகிறார்கள் தேசீயத் தோழர்கள். அதன் விளைவு என்ன ஆகும் தெரியுமோ! மதியிருப்பின் யோசித்துப் பார்க்கட்டும்! பர்மாவிலே, எதிரியின் பிரவேசம் நேரிட்டதும், பிரிட்டிஷ் படை வாபசானதும், என்ன நடந்தது? பர்மாக்காரன் கத்திக்கும் இந்தியனின் கழுத்துக்கும் பொருத்தம் ஏற்பட்டது! இந்தியரின் கதிபற்றி, நடந்து வந்தவர்கள் கூறுவதைக் கேட்டுவிட்டுப் பிறகு சட்டமும் சமாதானமும் போனால்தான் என்ன என்றிருக்கும் போக்குச் சரியானதாகுமா என்று யோசித்துப் பார்க்கட்டும்!

எனது இனத்தவரைப் பற்றி நான் கவலைப்படவில்லை. அவர்கள் அம்சதூளிகா மஞ்சத்திலே படுத்துக்கொண்டு அப்சுர சுகிகளுடன் கொஞ்சிக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கவில்லை. அவர்கள் மீது துவேஷமோ, கோபமோ கொண்டவர்கள் இல்லை, ஒரு சிறு கூட்டத்திற்கு துவேஷ மிருப்பினும், அதுவெள்ளத்தின் மீது மிதக்கும் தோணி போல், சூறை மோதியதும் சுக்கு நூறாகி

விடும்! நான் குழப்பம் வேண்டாம், கொந்தளிப்பு வேண்டாம், சட்டம் சரிந்து சாந்தி சாய்ந்து விடக்கூடாது என்று கூறுவது, ஆரியத் தோழர்களையும், வடநாட்டிலே வாட்ட வருத்தமின்றி உலவும் ஆரியதாசர்களையும் மனதிலே எண்ணி, அவர்களிடம் பரிதாபங்

கலந்த பாசம் கொண்டேதான், வல்லமை பொருந்திய பிரிட்டிஷ் ஆட்சி, காந்தியர்களின் வாய்ப் பேச்சினாலே ஓடிவிட்டது என்ற நிலைமை உண்டானால், தேசியத் தம்பி பாகிஸ்தானமும், திராவிட நாடும் தேவை என்று கூறுவோர், என்னென்ன எண்ணுவர், ஏதேது செய்ய முனைவர் என்பதைப் பற்றியும் சற்று எண்ணிப்பார்! அதற்கு முன்பு, வல்லமையுள்ள பிரிட்டிஷாரும் வெளியே போய்விட்டனர், இனி உள்ளே நுழைவதிலே தடை இல்லை என்று ஜப்பானியர்கள் எண்ணாமலிருப்பார்களா என்பதையும் யோசித்துப்பார். பிறகு உனது போரைத் துவக்கு.

9.8.1942

மானங்கெட்டது!

“என்ன இருந்தாலும், இதை வெளியே சொல்லியிருக்கக் கூடாது.”

“மூடிவைக்க வேண்டுமா? உடந்தையாக இருக்க வேண்டுமா? நடந்த சேட்டை தெரிந்திருந்தும் நமக்கென்னவென்று இருந்திருக்க வேண்டுமா? வெகுநன்று! அவள் சோரநாயகனுடன் சோலையிலே சொகுசாக விளையாடிக்கொண்டிருந்ததை நான் கண்களால் கண்டேன், கண்டதை விண்டேன், இவள் இத்தகைய காதகி என்பது தெரியட்டும். ஊர் இவளுடைய நடத்தையை அறியட்டும் என்று, இது எப்படிக் குற்றமாக முடியும்? அவள் பூசிய மஞ்சளும், குங்குமப் பொட்டை கோணலின்றி வைத்ததும், நாணியதும் கோணியதும் நாடறியும். அண்டை வீட்டுக்காரனையோ எதிர் வீட்டுக்காரனையோ பார்த்துவிட்டால் பயப்படுவது போல், அவள் செய்த பாசாங்கு கொஞ்சமா? அந்த வேடத்தைக் கண்டநானே இதே கண்களால் அவள் முள்வெலியைத் தாண்டியதையும், கொஞ்சியதையும் குலுக்கியதையும், கொடிபோல அவனைத் தழுவிக்கொண்டதையும் கண்டேனே, கண்டதைக் கூறாதிருக்க என் மனம் இடந்தரவில்லை.”

“சரிதான்ப்பா! ஏதோ இலைமறை காயாக எதுவோ நடந்துவிட்டது, அதை வெளியே சொல்லிவிட்டாயே அவள் மானம் போயிற்றே, அதைக்கவனி.”

“போகட்டுமே, எனக்கென்ன.”

கள்ளப்புருடனைக்கூடிய ஒரு கள்ளி, வேடத்தால் பத்தினி, நடத்தையாலோ நாசகாலி, அவளது செயலைக் கண்டவன், ஊராரிடம் கூறிட அவன் நண்பன், இதை ஏன் வெளியே சொன்னாய், அவளுக்கு வேதனை உண்டாயிற்றே என்று கேட்கிறான் கள்ளியின் கபட வேடம் கலைக்கப்பட வேண்டும் என்பதற்காகவே கண்ணால் கண்டதைக் கூறினேன் என்று கூறுகிறான் நண்பன். இருவரின் உரை எங்ஙனமிருக்குமோ அதுவே முதலிலே நாம் தீட்டினோம்.

காங்கிரஸ் காரியக்கமிட்டியின் விவாதங்கள் அடங்கிய தஸ்தாவேஜுகளைச் சர்க்கார் கைப்பற்றி, அவைகளைத் தமது

குறிப்புரையோ விளக்க உரையோ கருத்துரையோ கலவாமல், அப்படியே பிரசுரித்து விட்டனர். இதுகண்ட காங்கிரஸ் தலைவர்களும், ஏடுகளும், கடகடவெனக் கீழே புரண்டழுவதம், தடதடவெனத் தலைமீது கைகளால் மோதிக் கொள்வதும், தகதிமி என்று குதித்துக் கூவுவதுமாக உள்ளன. கள்ளியின் கபடம் வெளியான கதைப் போலக், காங்கிரஸ் தஸ்தாவேஜு காங்கிரசின் உண்மையான உள்ளத்தை உலகுக்கு உரைத்துவிட்டது. கள்ளிக்குப் பரிந்து பேசியவன், “கண்ணால் கண்டாலும் வெளியே சொல்லி அவளுக்கு வேதனை மூட்டலாமோ” என்று வாதாடினதுபோலக், காங்கிரஸ் எடுகள், காங்கிரஸ் தாஸ்தாவேஜுகளைச் சர்க்கார் வெளியிட்டதுபற்றி, வாதாடுகின்றன.

காங்கிரசிடமிருந்து கைப்பற்றப்பட்டதாம் தஸ்தாவேஜுகள். ஆகவே அது திருட்டுச் சொத்தாம். எனவே, அதைச் சர்க்கார் வெளியிட்டது, திருட்டுச் சொத்தைக் கையாண்டது போலாகுமாம். இது காங்கிரசாரின் கோணல்வாதம். சர்க்கார் காங்கிரசின் வேடம் கலைந்து, மக்களும் உலகமும் அதன் உண்மைச் சொரூபத்தைச் சுரண்டும் என்றே இதனைச் செய்தனர்.

இதனால் தெளிவானது, ஒன்று, காந்தியாருடைய கோரிக்கையைக் காங்கிரஸ் தலைவர்களிலே பலர் மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாது திணறியிருக்கிறார்கள் என்பது. இரண்டாவது, காங்கிரசும் குறிப்பாகக் காந்தியாரும் ஐந்தாம் படை வேலையில் நாட்டங் கொண்டுள்ளனர் என்பது.

காந்தியாரின் இயக்கத்தைபற்றிய விவாதத்தின்போது, பண்டித நேரு, பச்சையாகவே இதனை எடுத்துக் காட்டிவிட்டார். அச்சுநாடுகள் வெற்றி பெறுமென்ற ஆபத்தான எண்ணத்தைக் காந்தியார் கொண்டுள்ளார் என்பதும், பிரிட்டிஷார் வெளி ஏறினதும், ஜப்பானியருடன் பேரம் பேசவும் அவர்களுக்கு உடந்தையாக இருக்கவும் காந்தியாரின் தீர்மானம் இடங் கொடுக்கிறதென்பதும், பண்டிதரின் கருத்து. இது விவாதத் தஸ்தாவேஜுக்களிலிருந்து நன்கு புலனாகி விட்டது.

இதனை வெளியிட்ட சர்க்கார், குறிப்பாக அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் ரஷியாவுக்கும் விரோதமாக வார்தா முனிவர் பெர்லின் பேயனுக்கும், டோக்கியோக் கபடனும் உடந்தையாக

இருக்கவும் துணிந்துவிட்டார் என்பதை உணர்த்தி விட்டனர். காங்கிரஸ் தேச பக்த வேடம், கள்ளியின் பத்தினிக் கோலத்தைப் போன்றதே யாகும் என்பது விளங்கிவிட்டது. இத்தகைய ஒரு கூட்டம் நாட்டிலே இருப்பதைப் போல, மானக்கேடு, ஆபத்து, அக்ரமம் வேறு இல்லை என்போம்.

சர்க்கார், இந்தத் தஸ்தாவேஜுகளை வெளியிட்டது "மானங் கெட்ட பிரசாரம்" என்று ஒரு மரமண்டை கொண்ட ஏடு கூறுகிறது. பிரசாரம், சர்க்கார் செய்யவில்லை! மானங்கெட்டதை, மக்களுக்கு எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். காங்கிரசின் மானம்கெட்டு விட்டது என்பதைத்தான் சர்க்கார் காட்டிவிட்டனர். ஆம்! மானங்கெட்ட அரசியல் விபசார மடமாகி விட்டது வார்தா! மக்களின் எதிர்காலத்துக்கு உலை வைக்கும். உலுத்தரின் இடமாகி விட்டது! ஜனநாயகத்தை மாய்க்கும் கொலைக்களம், வர்ணாஸ்ரமிகளின் வாசஸ்தலம், வடநாட்டு முதலாளிகளின் இருப்பிடம், கபட வேடதாரிகளின் காவற்கூடம், ஏமாளிகளுக்கு ஏதேதோ கூறி ஏய்க்கும் இயந்திரம் ஓயாது வேலை செய்யும் இடமாகிவிட்டது, வார்தா! எனவே தான், வார்தாவின் தீர்மானத்தை, டோக்கியாவும், பெர்லினும் வரவேற்கிறது. சர்க்கார் தக்க சமயத்தில் காங்கிரசின் கபட வேடத்தை கலைத்தது மிகச் சரியான காரியம்! மானங்கெட்டதே என்று கள்ளி கண் பிசைந்துகொண்டால் கவலை என்ன? சோலையிலே சோரநாயகனுடன் சொகுசாகத் திரிந்து, பிறர் கண்ணில் சொக்குப் பொடிவீசி, மஞ்சள் பூசி, நாணிக்கோணி நடந்து, உத்தமி என்று ஊரை ஏய்த்தது வருபவளின் கள்ளத்தனம் வெளிப்பட்டது, ஊருக்கு நல்லது தானே! வார்தா வனிதையும் இத்தகையவளே! அவளின் "சோர நாயகர்கள்" பெர்லின், டோக்கியோவில் உள்ளனர்! அது வெளியாகி விட்டது!!

9.8.1942

ஊரார் உரையாடல்

கதர்க்கடையிலே காகசஸ்!

இடம் : கதர்க் கடை.

பாத்திரங்கள் : சீனுவாச ஐயர், கந்தசாமிப் பிள்ளை, சுந்தர முதலியார்.

(ஐயர் வெளியே போயிருக்கும் நேரத்தில்)

கந்தசாமிப் பிள்ளை : சுந்தரம்! சாமி எங்கே போனாரு?

சுந்தரம்: எந்தச் சாமியைக் கேக்கறே?

கந்த: நம்ம ஐயரைத்தான்!

சுந்தரம்: அப்படிக்கேளேன். சாமி, சாமின்னு பூசை செய்வானேன். இப்படித் தூக்கித் தூக்கி வைத்தால், அவனுங்க தலை மேலே ஏறிக்கொள்கிறானுங்க, அதோ வாராரு, என்ன விசேஷம்?
(ஐயர் புன்சிரிப்புடனும், கையிலே பேப்பர்க்கட்டுடனும் வருகிறார்.)

சீனு: பிள்ளையவாளா! வாங்கோ, வாங்கோ. என்ன விசேஷம்?

கந்த: நீங்கதான் விசேஷம் சொல்லனும். பேப்பரு படிக்கிறீங்க. சண்டை சங்கதி எப்படி இருக்கு? ரஷியா விஷயம் என்னா நடந்தது?

சீனு: என்னா நடந்தது? அடிஅடின்னு அடிச்சுத் தள்றான். கோரமான சண்டை. இரத்தப்பிரவாகம். ரஸ்டாள் போய் விட்டதேன்னோ, மளமளவென்று, பாய்கிறான்.

சுந்தரம்: நாலு நாளாகக், கொஞ்சம் வேகம் மட்டுப் போலிருக்கே! நாஜிகளுக்கு ஏராளமான நஷ்டமாம்.

சீனு: நஷ்டந்தான்! ஆனாலும் இன்னும் வேகம் குறையக் காணோம். இன்னும் நான் பூராவும் படிக்கல்லே. நீ படித்தாச்சோ?

சுந்தரம்: காலையிலேயே படித்துவிட்டேன். எனக்கொன்றும்,

திகில் பிறக்கவில்லை.

சீனு:உனக்குப் பிறக்காது. நீ ரஷியாக்கட்சியாச்சே.

கந்த: அப்போ, சாமி என்னா, ஜெர்மன் கட்சியா?

சீனு: அடெடே! அதெல்லாம் இல்லைப்பா. வெளியே ஏதாவது பேசப்போனாலே வம்பாக இருக்கிறது. சுந்தரம், நம்ம சேர்மன் வீட்டுக்கு, உன்னை வரச்சொன்னார். போய்விட்டு வந்துவிடேன்.

(தன்னை வெளியே அனுப்பிவிட்டு, கந்தசாமிப் பிள்ளையிடம் வம்பளக்க ஐயர் கருதுவதைத் தெரிந்து கொண்ட சுந்தரம், ஐயரை முறைத்துப் பார்த்துவிட்டுச் சேர்மன் வீட்டுக்குப் போகப் புறப்பட்டு விட்டான். அவன் போனபிறகு ஐயர் ஆரம்பித்தார்.)

சீனு: ஹிட்லருடைய படைகள் மிக்க உக்கிரமாகச் சண்டையிடுகின்றன. காகசஸ், எண்ணெய்க் கிணறுகளுக்காச் சண்டை நடக்கிறது. பெட்ரோல் இல்லாமல் இந்தக் காலத்துச் சண்டை நடக்காது. அந்தப் பெட்ரோல் பிரதேசத்தைப் பிடித்துக்கொள்ளவே பெரிய போர் நடக்கிறது.

கந்த: ரஷியர்கள், எப்படிச் சண்டை செய்கிறார்கள்?

சீனு: அவர்களும் விடவில்லை. ரஷியத்தலைவர் ஸ்டாலின், இனிமேல் ஓர் அடிகூட பின்வாங்கக்கூடாது. எதிர்த்து நிற்க வேண்டும் என்று உத்தரவிட்டுவிட்டார். அதனாலே வீரமாகப் போரிடுகிறார்கள். ஆனால், ஜெர்மன் சேனை பிரம்மாண்டமானது. எத்தனை இலட்சம் பேர் இறந்தாலும் பரவாயில்லை என்று துணிந்து சண்டை போடுகிறார்கள்.

கந்த: ராஸ்டாவைப் பிடித்துவிட்டபிறகு, வேறே எந்த ஊரைப் பிடித்தார்கள்.

(சுந்தரம், வேலையை முடித்துக்கொண்டு வந்து சேருகிறான்.)

சீனு: வேறே ஓர் ஊரையும் பிடிக்கவில்லை. ஆனால், ரஸ்டாவ் பிடித்தது, பெரிய வெற்றி. ஏன் சுந்தரம், சரிதானே நான் சொல்றது?

சுந்தரம்: ரஸ்டாவிலே, ஜெர்மானியர் வெற்றி பெற்றார்கள் என்பது உண்மைதான். ஆனால், போன வருஷமும், ரஸ்டாவை ஜெர்மானியர் பிடித்தனர். என்ன நடந்தது? ரஷியச் சேனை சீறி விழுந்து மீண்டும் போரிட்டு, ரஸ்டாவைத் திருப்பிப் பிடித்தது. நீங்கள், ஜெர்மன் வெற்றியைச் சொல்கிறீர்களே தவிர, அதற்கு ஏற்பட்ட நஷ்டத்தைச் சொல்லவில்லை. டான் நதி, இரத்த ஆறாகிவிட்டது. ஜெர்மன் பிணங்கள், கருகிய விமானங்கள், தூளான மோட்டார், எவ்வளவு என்று எண்ணுகிறீர்கள்.

கந்த: ஏன் சாமி சுந்தரம் சொல்வதைப் பார்த்தா, ஜெர்மனி, இப்படிப் பலி கொடுத்து ரொம்ப நாளைக்குத் தாக்குப் பிடிக்காது போல் தோன்றுகிறதே.

சீனு: ஒரு விதத்திலே உண்மை தான் நீ சொல்வது. ஆனால்...

சுந்தரம்: ஆனால், என்ன? வார்னேஷ் களத்திலே, வாட்டி விட்டார்கள். ஜெர்மன் துருப்புகளை, லெனின் கிராட் களத்திலேயும், காலினின் களத்திலேயும், ரஷியரின் கைதான் ஓங்கி இருக்கிறது. காகசஸ் களத்திலே கூட இப்போது ரஷியர்கள் முன் காட்டியதை விடப் பலமடங்கு அதிதமான வீராவேசம் காட்டு

கிறார்கள். பல்கேரியர், ருமேனியர், வாங்கேரியர், போன்ற கூலிப்படைகளைக் காவு கொடுத்துக் கொண்டிருக்கிறது. நாஜி பூதம்.

கந்த: ஏனப்பா சுந்தரம்! ரஷியர்கள் வீரமாக போரிட்டு ஏன் தோற்கிறார்கள்?

சுந்தரம்: ஜெர்மன் முழுச் சக்தியும் ரஷியாமீது திரும்பி இருக்கிறது. நான் முன்னே சொன்னபடி பல அடிமை நாடுகளில் பலிக்கடாக் கிடைக்கிறது. வஞ்சகப் போரும் நடக்கிறது. ரஷியப் போர் வீரர்கள்போல உடை உடுத்திக்கொண்டு, ரஷியப் படை வரிசையிலே புகுந்து கொள்ளக்கூட நாஜிகள் முயன்றனர். விடவில்லை ரஷ்யர்கள். வேஷத்தைக் கண்டு பிடித்துவிட்டனர்.

சீனு: சேர்மன் வீட்டுக்குப் போன காரியம் முடிந்து விட்டதோ?

சுந்தரம்: திவ்யமா முடிந்துவிட்டது! அவர் இந்தத்தடவை ஜெயிலுக்குப் போகப்போகிற தில்லையாம். காரியக்கமிட்டி வற்புறுத்தினால், காங்கிரசிலிருந்தே ராஜிநமாச் செய்துவிடப் போகிறாராம்.

சீனு: சரி! இதை வெளியே எங்கேயும் வம்பளக்க வேண்டாம்.

சுந்தரம்: எனக்குத் தெரியாதே வம்பளக்க.

கந்த: எந்த ஊரு சேதி பேசறிங்க?

சுந்தரம்: நம்ம ஊரு சேதிதான்.

கந்த: இது கிடக்குது, தள்ளப்பா. அலை ஓயரது ஏது? தலை முழுகுவது ஏது? ரஷியா விஷயத்தைச் சொல்லு. ஐயரு சொல்றதைப் பார்த்தால், அடிவயிறு பகீரென்னுது.

சுந்தரம்: நிலைமை கஷ்டமானது தான். திகில் வேண்டியதில்லை. காகசஸ் பிரதேசத்தைப் பிடித்து விட்டு ரஷியாவிலே உள்ள மற்றப் பாகத்தோடு தொடர்பு இல்லாதபடி செய்துவிட

வேண்டுமென்பது நாஜிகள் எண்ணம். இரண்டு பிரிவாகப் பாய்கிறார்கள். பக்கு என்ற இடத்தின்மீது மோத ஸ்டாலின் கிராடு மீதும் நாட்டம். வான்பக் இருக்கிறாரே, ஜெர்மன் சேனாதிபதி அவருடைய போர்த்திறமைக்கு, ரஷிய சேனாதிபதி இருக்கிறாரே மார்ஷல் டிமோஷெங்கோ, அவருடைய தீரம் குறைந்ததன்று. தரையிலே சண்டை நடப்பதுபோலவே வானத்திலேயும் சண்டைதான்.

கந்த: அதுவும் நடக்குதா?

சீனு: ஜெர்மனிதானே விமான பலத்திலே கெட்டிக்காரன். லண்டனைப்போன வருஷம் தூளாக்கிவிட்டானே தெரியுமோ!

சுந்தரம்: அது பழையகதை. இப்போ, தலைகீழாக மாறிவிட்டது. பிரிட்டிஷ் விமானபலமே இப்போ முதல் தரம். ஜெர்மன் நகரங்களிலே இராத்தூக்கம் கிடையாது.

தொழிற்சாலைகள்மீது குண்டுமாரி பொழிகிறார்கள்.ரஷிய களத்திலே ஆகஸ்ட் இரண்டாந் தேதிக் கணக்குப்படி 286, ஜெர்மன் விமானங்கள் ரஷியரால் சுட்டு வீழ்த்தப்பட்டன. ரஷியாவுக்கு 201, விமானம் நஷ்டம். கடுமையான சண்டைதான் வானத்திலும் நடக்கிறது. 3000 சதுரமைல் பிரதேசம் போர்க்களம், இங்கு இனி ஒரு கெஜ தூரம்கூடப் பின் வாங்குவதில்லை என்ற உறுதியுடன் ரஷியப் படைகள் போரிடுகின்றன. வோல்கா, டான், க்யூபான் ஆகிய பிரதேசங்களிலே காசாக் என்ற வகுப்பினர் உண்டு. இவர்கள் குதிரைப் படையினர். உலகக் கீர்த்தி பெற்றவர்கள். இந்தக் காசாக் குதிரைப் படையினர் இப்போது கிளம்பியுள்ளனர். ஜெர்மன் துருப்புகளைத் துரத்தியடிக்கப் பத்துநாட்களாக வாரனேஷிலே எப்படி ஜெர்மனியரால் முன்னேற முடியவில்லையோ அதைப் போலவே காகசசிலும் முடியவில்லை.

கந்த: அப்படின்னா, கொஞ்சம் நம்பிக்கை இருக்குது.

சுந்தரம்: நிச்சயமாக நம்பிக்கை இருக்கிறது. முன்பு நாஜிப்படைகள் மாஸ்கோவரையில் வரவில்லையா?

கந்த: ஆமாம்! உலகமே ரஷியா போச்சு என்று சொல்லி விட்டதே. மழைகாலம் வந்துதானே நிலைமையை மாற்றி வைத்தது.

சுந்தரம்: அந்த மழைகாலம் வரத்தான் போகிறது. இப்போ ஆகஸ்ட் இந்த மாதம் தீர்ந்தால் செப்டம்பர் மழைகாலம், அப்போ மறுபடியும் ரஸ்டாவ், செபாஸ்டபூல் ஆகிய கோட்டைகளை ரஷியச் சேனை திருப்பிப் பிடித்துவிடும்.

சீனு: ரஷியா தீரமாகத்தான் சண்டை போடுகிறது. பிரிட்டிஷார்தானே கல்லுப்பிள்ளையார் போலே இருக்கிறார்கள். இரண்டாம் போர்முனை ஆரம்பிக்கப்படாதோ?

கந்த: அந்த யோசனை பலமாகிவிட்டதே. அமெரிக்க சேனாதிபதி ஜெனரல் மார்ஷல் இருக்கிறாரே, அவரை நேசநாட்டுப் படைத்தலைவராக நியமித்து, இரண்டாம் போர்முனையை ஆரம்பிப்பர்கள் என்று தெரிகிறது.

கந்த: ஆமாம், பாவம், ரஷியர்கள் எத்தனை நாளைக்குத்தான், இப்படிக் கஷ்டப்படுவது.

சுந்தரம்: சீனர்கள் இப்போ ஜப்பானியர் பிடித்துக்கொண்ட பூச்சௌ நகரைச்சுற்றி வளைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஜப்பானியரிடம் பிடிபட்ட எத்தனையோ நகரங்களை மீட்டுவருகிறார்கள். அவர்களின் நகரங்கள் நாசமாயின, வயல்கள் மேடு

களாயின, மக்கள் மாண்டனர், ஆனால் மனஉறுதி மட்டும் தளரவில்லை.

கந்த: நம்ம ஊர்மேலே பாயமாட்டானே இந்த ஜப்பான்காரன்?

சுந்த: தீர்மானமாகச் சொல்ல முடியுமா? இந்தியாவை அபகரிக்க வேண்டுமென்பது ஜப்பான் திட்டத்திலே ஒரு பாகம். சீனா சண்டை தீரவில்லை. இங்கு, படைபலமும் திரண்டுவிட்டது. காலை வைத்துவிட்டால், உளையிலே இறங்கிய மாதிரி ஆகிவிடுமோ என்று யோசிக்கிறான் ஜப்பானியன். அவனிடம் பிடிபட்ட பர்மாவிலே, பிரிட்டிஷ், அமெரிக்க விமானங்கள், அக்யாப் முதலிய தளங்களைத் தாக்கிக்கொண்டே இருக்கின்றன. ஆஸ்திரேலியாப்பக்கம் திரும்பினால், அங்கேயும் முஸ்தீப்பு பலமாக இருக்கு, இங்கே திரும்பினாலும், படைபலம் திரண்டு இருக்கிறது. எனவே, என்ன செய்வதென்று யோசிக்கிறான்.

சீனு: ரஷியாவைத்தாக்க ஜப்பான் பிளான் போடுகிறதாமே. மன்சூரியா பக்கமாக ஏராளமான துருப்புகளைக் குவித்திருக்கிறதாமே?

சுந்த: ஆமாம்! ஆனால், ஏராளமான ரஷியத் துருப்புகளும், அங்கே ரெடியாக இருக்கிறது தெரியுமோ.

கந்த: பரவாயில்லை, நம்ம காந்தி சமாசாரம் எப்படி இருக்கு?

சுந்த: அதைப்பற்றி ஐயரைக் கேளுங்கோ.

சீனு: அது என்ன சுந்தரம், உனக்குத் தெரியாதோ!

சுந்த: தெரியும், ஆனால் சொன்னால் உங்களுக்குக் கோபம் வரும், வம்பு வளரும்.

கந்த: அப்போ, அந்தப் பேச்சு வேண்டாமப்பா. உலக விஷயத் தோடே நிறுத்துவோம். நான் போய் வருகிறேன்.

புலியூர் புகுவதா!

காந்தியாரின் சிறைவாசம் இன்று ஐந்தாம் நாள் என்று பாரததேவி 13ந் தேதி கட்டம் அமைத்து எழுத்தலங்காரப் பிரசாரம் பதிப்பித்திருக்கும் பக்கத்திலே, அதை ஒட்டிக்கொண்டுள்ள ஒரு விளம்பரமும் பிரசுரித்திருக்கிறது. வழக்கப்படி வியாபாரம், சம்பூரண சாஸ்திரியாரின் ஜவுளிக்கடையில் என்பதாகும் அந்த விளம்பரம். சிறையிலே காந்தியார், கடையிலே சாஸ்தியார் என்பது இதனால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆம்! காந்தியார் சிறைப்பட்டார் என்பதற்காகக் கனபாடிகள் எவரும் தமது கருமத்தை மறந்துவிடவில்லை. சம்பூரண சாஸ்திரிகள் ஜவுளி வியாபாரத்தை நிறுத்தவில்லை! வழக்கம்போல் வியாபாரம் நடக்கிறது! வழக்கம்போலவே வக்கீல் பார்ப்பனர் கோர்ட்டுகளுக்குப் போகிறார்கள், சட்டம் பேசிப் பணத்தைத் தட்டிப் பார்த்து வாங்கி இட்ட தெய்வத்தை எண்ணி வீடு வருகின்றனர். பார்ப்பன டாக்டர்கள் தமது வைத்திய சாலைகளை மூடிவிடவில்லை. வழக்கப்படி நாடி பார்த்து, அதற்குமுன், வந்தவரின் பண நிதானத்தைச் சோதித்து வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள். இசை பாடிடும் பார்ப்பனர்கள், காந்தியார் சிறையிலிடப்பட்டாரே என்று ஏங்கி, லாவணி பாடிக்கொண்டில்லை, எப்போதும்போல, இராகத்தை ஆலாபனை செய்து, பணத்தைப் பாராயணம் செய்து வருகிறார்கள். வழக்கப்படி காப்பி ஓட்டல்களிலே பார்ப்பனர்கள் தமது வேலையைச் செய்கிறார்கள். வழக்கப்படி கோயிலிலே பார்ப்பனர் தமது சஹஸ்ரம நாம அர்ச்சனையைக்கூறி, பக்தர்கள் தந்திடும் காசை வாங்கும் வேலையைச் செய்து கொண்டுதான் வருகிறார்கள். குளத்தருகே வழக்கப்படி பார்ப்பனர்கள் தர்ப்பைக் கட்டும் கையுமாக இருந்து தமது “தபால் இலாகாவை” நடத்திக் கொண்டுதான் வருகிறார்கள். திதி நடக்கும் தேதியை வழக்கப்படி “ஐயா” கூறிவிட்டு, வழக்கப்படி தட்சணை தாம்பூலாதிகளையும் காய்கறி இலையையும் பெற்றுக் கொண்டுதான் வருகிறார். பார்ப்பனர்கள், தமது வேலையைப் பரிபூரணமாகச் செய்துகொண்டுதான் வருகிறார்கள்.

பாரததேவியிலே காணப்படுவதுபோல், “வழக்கப்படி வியாபாரம் நடக்கிறது.” யாருடைய வியாபாரம்? அக்கிரகார வியாபாரம்!

வேலை நிறுத்தம் செய்யுங்கள் - கடைகளை மூடுங்கள் -

என்றெல்லாம் காங்கிரஸ் கூறுவது கேட்கிறோம், அக்ரகாரம் அதை ஆதரிக்கக் காண்கிறோம். ஏன் ஆதரிக்கிறது என்பீரேல், எந்தச் சமயத்திலும் “வேலை நிறுத்தம்” அவர்களைப் பாதிப்பதில்லை.

கடைகள் மூடினால், நம்மவருக்கு நஷ்டம் - மில்களிலே வேலை நிறுத்தம் ஏற்பட்டால் நம்மவருக்கே கஷ்ட நஷ்டம், பள்ளி பகீஷ்கரிக்கப்பட்டால், நம்மவர்களுக்கே வாழ்க்கை வளைவு! அங்கு, எதுவும் அண்டாது! எனவேதான் அக்கிரகாரம் வேலை நிறுத்தங்களை அவ்வளவு ‘அன்புடன்’ ஆதரிக்கிறது.

1920-21ல் நடைபெற்றது போன்றது நடக்கும் என்று காந்தீயர்கள் கூறிவந்தார்கள். அது நடந்துவிட்டது. நாட்டிலே பல இடங்களிலே கலவரம், கல்வீச்சு, கடைகள்மீது மோதுதல், தீயிடல் முதலியன நடைபெற்றுவிட்டன. சர்க்காரும், 1920-21ல் நடந்தது போலவே, தடியடி, கசையடி, துப்பாக்கிப் பிரயோகம் ஆகிய அடக்குமுறையை நடத்துகின்றனர்.

பலர் உயிரிழந்தனர், பலருக்குப் படுகாயம் என்று தினசரிகள் தெரிவித்துள்ளன. பொருள் சேதமும் அதிகம், லாரிகள் கொளுத்தப் பட்டன, மோட்டார்கள் எரிக்கப்பட்டன, தந்திக்கம்பிகள் அறுக்கப்பட்டன, தபாலாபிசுகள் தாக்குண்டன, டவுன்ஹால் தீயில் பொசுங்கிற்று, பல இலட்ச ரூபாய் நஷ்டம், என்று பத்திரிகைகளில் பத்தி பத்தியாக வெளிவரக் கண்டோம். காங்கிரஸ் தோழர்கள், குறிப்பாக, உணர்ச்சியால் உந்தப்பட்ட வாலிபர்கள், மன எழுச்சி யினால் தூண்டப்பட்ட மாணவர்கள், இவைகளை ‘வெற்றிகள்’ என்று கருதலாம், களிக்கலாம். நாம், கண் கசிந்து இதனை எழுதுகிறோம். இவைகளின் விளைவுகள் துப்பாக்கிப் பிரயோகமும், தடியடியும் பிறவும்! மாணவர்களே! இவை பெறவா, நீர் பள்ளி புகுந்தீர். பள்ளியிலே பெற்ற பயிற்சி இதற்கா பயன்படுகிறது. கொடுமைகள் எவை? கோளாறுகள் யாவை? அநீதி எங்கே எவ்வண்ணம் தாண்டவமாடுகிறது? என்பனவற்றைக் கண்டுணரவும்,

உணர்ந்தபின்னர் இத்தன்மையான முறைகளால் பயன்படுபவர் யாவர் என்பதனைத் தெரிந்துகொள்ளவும், தெரிந்து தெளிந்தபின்னர், இம்முறைகளை மாற்ற எவை சரி என்பதனை ஆராயவுமே, படிப்பு, பயிற்சி. நீவிரோ, ஒருவாரம், பத்து நாட்கள், பள்ளி பகீஷ்காரம், கடைகள் முன் நின்று கலவரம் விளைவித்தல், வீதிவலம் வருதல், கல் வீசுதல், பொது ஸ்தாபனங்களைத் தாக்கதல் ஆகியவை செய்யின், நாட்டுக்கு விமோசனம் கிடைக்கும் என்று கருதி, வழி தவறிச்சென்று கஷ்டமடைகிறீர், உமது பெற்றோரைக் கலங்க வைக்கிறீர், நாட்டினர் நொந்திடச் செய்கிறீர், தோழரே! நீங்கள் பள்ளி புக, பயில, உமது பெற்றோர் செலவிடும் பணம், உம்மிடம் பேசக் கூடுமானால், என்னென்ன கூறும் தெரியுமோ! அவர் பட்டபாடு, கண்ட இடி கொண்ட கஷ்டம், எவ்வளவு! நீவிரோ, அவை யாவும் மறந்தீர், தெருவினிலே திரிந்தீர், பதட்டம் புரிந்தீர்! இதுமுறையோ?

தொழிலாளரே! உமது வாழ்க்கையின் வாட்டம் நாமறிந்ததே, உமது வாழ்வு நிலை உயர, நீர்செய்யும் கிளர்ச்சிகள் காணும்போதும் கேட்கும் போதும் “அவர் மீது குறையில்லை, அவரை இந் நிலைக்குள்ளாக்கிய முறையோ குறையுடைத்து” என்று கூறினோம். இன்றோ! பஞ்சம் பரவுகிறது, உணவுப்பொருள் விலைவாசி வக்கரித்துக் கொண்டிருக்கிறது, இந்நிலையிலே வேலை நிறுத்தம் செய்வது, உமது வாழ்வைத்தானே பாதிக்கும். ஏன் வீணில் வதைய முற்படுகிறீர்! நெருப்பிலே வெந்து, நீரிலே ஆழ்ந்து, வியர்வை சொட்டச் சொட்ட வேலை செய்து, கையே தலையணையாய் வானமே கூரையாய், மண்ணே மலரணையாய், வாட்டமே தோழனாய்க் கொண்டு வாடுநீர்! இத்தகைய நீவிர், காந்தீயக் கிளர்ச்சியிலே ஈடுபட்டு கண்டதென்ன? வாழ்க்கை உயரக் கண்டீரா? இல்லையே! தழும்பு எழ எழத் தடியடி, இருதயத்திலிருந்து இரத்தம் பீறிட துப்பாக்கிப் பிரயோகம் நடந்ததென்றால், யாருக்குத் தோழர்களே? சுயராஜ்யப் போர் என்றுரைத்திடும் பூசுரக் கூட்டத்துக்கா, உமக்கா? இதை எண்ணிடலாகாதா? தோழர்களே! மதுரையிலே நடந்த கலகத்தின் விளைவாக நேரிட்ட துப்பாக்கி பிரயோகத்திலே மாண்டவர் எவர் என்பதனைத் தெரிந்து கொண்டீரா? இதோ தகவல் படித்தறிமின். ஒரு துரைசாமி நாயுடு என்ற தமிழ் வாலிபர். நாராயணப்பிள்ளை என்ற ஒரு மலையாளி. அதுபோலவே ராஜபாளையத்திலே

குண்டடிப்பட்டவர்கள், கருப்பையா தேவர், பழனியாண்டிச் செட்டியார், பெருமாள் குடும்பன் என்பவர்களாம்.

நாயுடு, பிள்ளை, தேவர், செட்டியார், குடும்பர், என்னும் நம்மவருக்கே தொல்லைவந்தது. எல்லாம் தமிழர்களே!

பர்மா, மலாய் நாடுகளிலே ஜப்பான் குண்டுகளுக்கும் பர்மாக்காரரின் பதட்டத்துக்கும் ஆளாகி குடும்பம் கலகலத்து, குடல் நடுங்கி, கோவெனக்கதறி தாய் நாடு திரும்ப, காடுமலை வனம் வனாந்திரங்களைக் கடந்து காட்டு மிருகங்களுக்கும் காட்டு மிராண்டி மனிதர்களுக்கும் தப்பி, இங்கு வந்துள்ள இலட்சக் கணக்கான தோழர்கள் யார்? தமிழர்!

தேயிலை ரப்பர் தோட்டங்களிலே பாடுபட்டுக் கைகால் அலுத்து, காய்ச்சலும் கடுப்பம்கண்டு கலங்கி இன்று இங்கு வேலையுமின்றி வேதனையுடன் உள்ளவர் யார்? தமிழரே!

கோடிக்கணக்கான ரூபாய்களை பர்மா, மலாயாவில் கொட்டி வியாபாரம் நடத்தி, இதுபோது, உயிர் தப்பினால் போதும் என்று, சொத்து சுகம்விட்டு ஓடோடி இங்குவந்து, “கைமுதலும் போச்சே, கஷ்டப்படலாச்சே” என்று கதறும் தோழர்கள் யார்? தமிழர்தான்! என்றும் கஷ்டம் தமிழருக்குத்தானே! இதை எண்ணிடக்கூடாதோ என்று தமிழ் மாணவரை, தமிழ்த் தொழிலாளரை, தமிழ் வியாபாரிகளைக் கேட்டுக் கொள்கிறோம்.

இன்று நடைபெறும் கிளர்ச்சியினால் நேரிடும் சங்கடமும் சஞ்சலமும், கஷ்டநஷ்டமும், பெரும்பாலும் தமிழர் தலைமீதே வந்து வடிகிறது. மதுரையிலே மண்ணிலே வீழ்ந்தவர் தமிழர்! மற்றும் அல்லல் வந்தது தமிழருக்கே!

வழக்கப்படி அக்கிரகார வியாபாரம் குறைவின்றி நடக்கிறது.

தோழர்களே! டவுன்ஹால் கொளுத்தப்பட்டது. ரயில்வே ஸ்டேஷன் எரிக்கப்பட்டது. ரயில்வே வண்டிகள் சாம்பலாயின. தபாலாபீஸ்கள் சூறையாடப்பட்டன. தந்திக்கம்பிகள் அறுபட்டன, வீடுகள்மீது

கல்வீசப்பட்டன, மோட்டார் வண்டிகள் தகனம், என்று படிக்கிறீர்கள். இவைகள் எங்கே நடைபெற்றன! எந்த வெள்ளைக்காரனை ஓட்ட போர் நடத்துவதாக கூறப்படுகிறதோ, அந்த வெள்ளைக்காரன் நாட்டிலல்ல! இங்கு! இதனால் பல இலட்சம் செலவு, இந்தக் கிளர்ச்சியை அடக்கச் சர்க்கார் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகளுக்காகப் பல இலட்சம் செலவு, இவ்வளவும் யாருக்கு? வெள்ளைக்காரருக்கா? இல்லை, தோழரே, நமக்கு! இடிந்த கட்டடம் நம்முடையது, அதனைக் கட்டியது நம்முடைய பணத்தைக்கொண்டு இனி அதனைப் புதுப்பிக்க மீண்டும் நம் பணமே செலவிடப்படும்! இதனால் யாருக்கு நஷ்டம்? யாருக்கு வீண்செலவு? மக்கள் வரிப்பணத்திற்குத்தானே வீண்விரயம்? காலக்கோளாறு மிகுந்து, பணமுடை அதிகரித்து வாழ்க்கையை நடத்துவதே கஷ்டமாகி, பாட்டாளிகளாக, பரிதவிக்கும் இந்த வேளையிலே, இத்தகைய வீண்விரயம் செய்வது விவேகமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம்.

தீமூட்டுவது, தெருக்கலகம், குத்துவெட்டு, துப்பாக்கி வேட்டு முதலியன கண்டு மக்ககள் கலங்குகின்றனர். விமான படை எடுப்பு, வெடிகுண்டு, எரிகுண்டு வீச்சு, கோட்டை கொத்தளங்கள் இடிபடுதல், கும்பல் கும்பலாக மக்கள் மாளுதல், ஓடும் ரயிலின்மீது குண்டுவீசி, மூழ்கடித்தல், போர் வீரர்கள் பிணமாதல், ஊர் தீப்பிடித்து மக்கள் குய்யோ முறையோ என்று கூக்குரலிட்டு, மகனைக் காணோமே மகளைக் காணோமே, என்று தவித்து, அப்பா, அம்மா, அண்ணா என்று கதறியும், ஐயோ, அப்பா, என்று பதைத்தும், அல்லோகல்லோலப்பட்டு ஓடும், கனக்காட்சி உலகிலே இன்றுளது. இந்தியாவிலும் இத்தகைய கோரநிலைமை ஏற்படச் செய்யவேண்டும் என்பதே எதிரியின் எண்ணம். அச்சமயம், இன்று நடைபெறும் கலகமும் கூச்சலும், அலைகடல் மீதோர் துரும்பெனக் கருதப்படும் அளவினதாகக் கொள்ளப்படும். அத்தகைய அவதிக்கும் தயாராக இருக்கவேண்டிய மக்கள், இன்று நடைபெறும்

கலகத்தைக் கண்டுக் கலங்கிடத் தேவையில்லை. சென்ற மாதம், நாடு இருந்த நிலை என்ன? மக்கள் பதைத்து நகரங்களைவிட்டுக் கிராமங்களுக்கும் ஓடினர். இன்றோ, நாளையோ, ஜப்பான் படை எடுக்கப் போகிறது என்ற திகில் மக்களைப் பிடித்தாட்டிற்று. அதுபோல், ஏதேனும் படை எடுப்பு நேரிட்டிருந்திருக்குமானால், எத்தனையோ மடங்கு அதிகமான சங்கடத்திற்கும் சஞ்சலத்திற்கும் மக்கள் ஆளாகியிருந்திருப்பார்கள். எனவே, இன்று நேரிட்ட நடவடிக்கைகள் கண்டு நொந்திடுவதில் பயனில்லை. இனியேனும், தோழர்கள், காலநிலை, கருமத்திலே கண் எனும் கோட்பாடுகளை அறிந்து, நம் கையைக் கொண்டே நம் கண்களைக் குத்திக் கொல்வதுபோல, நமது! நகரங்களை நாமே நாசஞ்செய்வது, நமது சொத்துக்களை நாமே அழிப்பது, நமது மக்களை நாமே பதைக்கச் செய்வதெனும், முறைகள் வேண்டாமென ஒதுக்கித்தள்ளி, இந்த உள்ள எழுச்சியை, உணர்ச்சியை, உத்வேகத்தை, எதிரியின் படை எடுப்பு நேரிட்டால் அவனை விரட்டிவிட உபயோகிக்க வேண்டுகிறோம். ஆம்! தோழர்களே! ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை ஜப்பானியருக்கு எதிரிடையாக நடத்துவோம், ஜப்பானியர் நம் நாட்டிலே எங்கேனும் தங்கிடின், அந்தக் கட்டடத்தைச் சுற்றி வளைத்துக் கொள்வோம். இடிப்போம், கொளுத்துவோம். ஜப்பானியரின் மோட்டார்கள்மீது கற்களை வீசுவோம், நொறுக்குவோம். ஜப்பானியரின் முகாம்கள் ஏற்படின் அவற்றிலே தீயிடுவோம் என்று உறுதிகொள்ள வேண்டுகிறோம். நமது உணர்ச்சியும் உத்வேகமும் அதற்காகத் திரட்டப்பட வேண்டுமே யொழியே, நமது நா ட் டி லே நாமே ஓர் கொந்தளிப்பை உண்டாக்கப் பயன்படுத்துவது, தற்கொலைக் கொப்பாகும் என்பதை மறக்கக்கூடாது.

நாட்டிலே, இன்று வேகமான கிளர்ச்சியைத் தூண்டிவிடும் செயல், காங்கிரஸ் தலைவர்களுக்குக் களிப்பூட்டலாம். ஆனால்,

இந்த முறைதான், உரிமைகளைப்பெற அனுஷ்டிக்கப்பட வேண்டும் போலும் என்று, நாட்டிலே உள்ள நானாவிதமான இலட்சியக் காரரும் கருதுவதானால், நாட்டுக்கு எதிரியே வரத்தேவையில்லை. நாட்டு மக்களே ஒருவரை ஒருவர் வெட்டி மடித்துக்கொண்டுமாள நேரிடும்! பரிபூரண பொசுக்கல் ஏற்படும்! இது பிறகு, நோகாமல் நுழைய எதிரிக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும். 'பாரததேவி.' எண்ஜான் உடம்பு என்றேனும் வெந்து சாம்பலாகத்தானே போகிறது என்று எழுதி, தூபமிடுகிறது. எண்ஜான் உடம்புக்குச் சிரசே பிரதானம்! சிரசிலே இருக்க வேண்டியது எதுவோ, அதற்குக் குழப்பம் விளைவித்துக்கொள்ளும் காரியம், நடப்பது, தேவியின் விருப்பம் போலும்! "இந்த காலித்தனம் இலட்சியத்துக்கும் காந்தியாரின் விருப்பத்திற்கும் மாறானது. இது நிற்க வேண்டும்" என்று கூறி தோழர் ராஜகோபாலாச்சாரியார் ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார். இன்று அது, கலகக்காரரின் கண்களிலே படாது. வேகம் குறைந்து, வேதனை மிகுந்து, வீணுக்குச் செய்தோம் என்பதனை உணர்ந்து, மாணவர்களும் மற்றையோரும் அமரும்போது, ஆச்சாரியாரின் அறிக்கைபற்றி யோசிப்பர், சரியானதே அவர் கூறியது என்று தலையசைப்பர். சந்தடிமிக்க இந்த நேரத்திலே, இன்னும் எங்கெங்கே கலகம் நடந்தது என்று கேட்கவும் பேசவும் விரும்புவர் மக்கள். பின்னர், இதனால், நமது நாட்டுக்கு நாமே நலிவு தேடினோம் என்றுணருவர். அதுசமயம், மக்கள் நிச்சயமாக தூண்டி விட்டவர்கள், தூபமிட்டவர்கள், தட்டிக்கொடுத்தவர்கள், தலை உருண்டால் என்ன தம்பி என்று கூறி உசுப்பினவர்கள், இன்னம் இரண்டோர் இடங்களிலே கலகமூட்டு என்று ஏவினார்கள். சபாஷ் கூறிக் கைகொட்டினார்கள், ஆகியோர்மீது குற்றம் சாட்டுவர். சரிதத்திலே இந்தச் சம்பவம் மாணவர்களின் உணர்ச்சியையும் தொழிலாளரின் உத்வேகத்தையும், தூண்டிவிட்டு மிக்க நெருக்கடியான நேரத்திலே மிக மோசமான கலகத்தைத் தூண்டினர் தோற்றனர் என்றே எழுதப்படும்.

எனவே இத்தகைய வீண்கலகத்திலே ஈடுபடாது, ஒதுங்கி நிற்கும்படி திராவிடத் தோழர்களைக் கேட்டுக் கொள்கிறோம். நரியூரைக்கண்டு பயந்து புலியூர் செல்வதோ! நமது வீட்டிலே கொசுவும் பிறவும் இருப்பதைப்போக்க வீட்டைக் கொளுத்துவதோ! எண்ணிப்பார்க்கட்டும் தோழர்கள்! இன்றளவுவரை நடைபெற்ற கலவரத்தினால், சுயராஜ்யத்தின் பாதையைவிட்டு

சுய அழிவுப் பாதைக்கே நாம் வந்திருக்கிறோம் என்பதைத் தோழர்கள் உணர வேண்டுகிறோம், அடக்குமுறையை வீசச் சந்தர்ப்பங்களை உண்டாக்குவதன் மூலம், நாட்டிலே மேலும் பல சங்கடங்களை உண்டாக்க முடியுமே தவிர, மக்களுக்கு மேலும் பலப்பல கஷ்டங்களை விளைவிக்க முடியுமே தவிர, இன்று கிளர்ச்சி நெருப்புக்குத் நமது உடலை விறகுகளாக்குவோம், செந்நீரை நெய்யாக்குவோம் என்று வீரம் பேசும் மக்கள், காணப்போவது ஒன்றுமில்லை. ஓமகுண்டத்தைச் சுற்றி உட்கார்ந்து கொண்டுள்ள ஆரியத்தலைவர்களே பயன்பெறுவர், பிறகு.

தோழர்களே, உங்களின் தழும்புகள் மறையாது, அதைத் தடவுந்தோறும் தடவுந்தோறும், நாட்டு விடுதலைக்காக நாம் நடத்திய கிளர்ச்சியிலே பட்ட அடி இது என்று எண்ணி நீங்கள் மகிழ்வீர். ஆனால் இந்தத் தழும்புகளைக் காட்டி, துப்பாக்கி வேட்டு பாய்ந்த மக்களின் கணக்கைக் காட்டி, கருகிய கட்டடங்களைக் காட்டி, ஆரியத் தலைவர்களே பிறகு, ஆளுக்குக் கொஞ்சம் என்று அதிகாரத்தைப் பங்கிட்டுக் கொள்வர். இன்று நடைபெறும் அடக்கு முறைகளை அவர்கள் நொடியில் மறப்பர், வெள்ளையருடன் குதூகலமாகக் கை குலுக்குவர்.

“துப்பாக்கியிலே குண்டு இருக்கும் வரையில் சுட்டேன்” என்று கூறிய டயரின் கொடுமைப்பற்றி அவர்கள் பேசினரே தவிர, பிறகு, மந்திரிப்பதவிகள் கிடைத்தபோது, பஞ்சாப் படுகொலையை மறந்து, வெள்ளையருடன் உல்லாசமாகக் காலங்கழித்தனர் என்பதை மறக்கவேண்டாம். நீங்கள் சிந்தும் இரத்தம், ஆரியருக்கே அதிகார அபிஷேக நீராகப்போகிறது, இதை அறிமின்.

இயக்கம் சரியான வழியிலே செல்லாது, பலாத்காரச் செயல் மிகுந்துவிட்டால், என்னை உயிருடன் காண முடியாது என்று காந்தியார் கூறிப்போந்தார். அவர் அன்பர்கள் பலாத்காரச் செயலில் இறங்குவது சரியா! இதை யோசியுங்கள்.

16.8.1942

இஞ்சிபத்தனே மேல்!

பாண்டியனின் தேவியின் காற்சிலம்பைக் களவாடுகிறான் பொற்கொல்லன், வஞ்சிபத்தன், வஞ்சிபத்தனின் குமரியையே களவாடுகிறான் இஞ்சிபத்தன்! இவன் செய்யும் மற்றோர்செயல், மிகச்சாதாரணமானது அவனுடைய மொழிப்படி! கொடுப்பது பொன் பெறுவதுயித்தளை! அவனிடம் பான் கொடுப்பார் பித்தளைதான் பெறுகிறார்கள். அத்தகைய புரட்டிலே புரள்கிறான் இஞ்சிபத்தன்! விலாசமென்னவென்று கேட்காதீர்கள். நிஜத்திலில்ல இஞ்சிபத்தன், சினிமாப் படத்தில் கண்ணகியில்!

இந்த இஞ்சிபத்தன் காமிக் என் புகுத்தப்பட்ட என்று கொஞ்சநேரம் யோசித்தேன், பிறகு தெளிவாக எனக்கு அதன் காரணம் விளங்கிவிட்டது. தெளிவான எனக்கு அதன்காரணம் விளங்கிவிட்டது. இஞ்சிப்பத்தன் பொன் பெற்று, கொடுத்தோருக்கு பித்தளையைத்தந்து தான், கண்ணகி படக்காட்சியின் சூட்சமத்தை விளக்கும் யுக்தி என்று கண்டு கொண்டான்.

சேரன் செங்குட்டுவனின் தம்பி, இளங்கோவடிகளுக்கு செந்தமிழில், இயற்றிய சிலப்பதிகாரம் எனும் பொன் இளங்கோவன் எனும் புனைபெயர் பூண்ட தோழாரால், பித்தளையாக்கப்பட்டிருக்கிறது! சிலப்பதிகாரப் பொன்னை, சினிமாக்கதையெனும் பித்தளையாக்கிய இளங்கோவன், பொன்னைப் பித்தளையாகமாற்றித் தரும் பொற்கொல்லன் காமிக் மூலம், தம்மை அறிமுகப் படுத்திக்கொள்கிறார், என்னே பரிதாபம்!

கதை, சிலப்பரிகாரத்தைத் தழுவியது என்று விளம்பர படுத்தப் பட்டிருக்கிறதே அதையேனும் மாற்றிவிட வேண்டும், இல்லையேல் தோழராவது இளங்கோவன் எனும் தமதுபெயரை மாற்றிக்கொள்ள வேண்டும். இரண்டிலொன்று நடவாமுன்னம் நான் என்கருத்தை மாற்றிக்கொள்ளவதற்கில்லை என்பதைக் கூறித்தான் ஆகவேண்டி இருக்கிறது.

இளங்கோவன், உயிர்த்ததும்பும், உணர்ச்சிபொங்கும் வரை எழுதவல்லாத வெறும் எழுத்துக்கோர் பைத்தியக்காரராக இருப்பின், நான், பொருட்படுத்தியிருக்கமாட்டேன்,

இந்தக்குறை கூறலைத்துவக்கியுமிரேன் எத்தனையோ குப்பையிலே இதுவுமொன்று, சொத்தை பிடித்த அத்திப்பழத்திலே எந்தப்பாகத்தை நல்லதென்று கொள்ளமுடியும் என்றெண்ணி இருந்திருப்பேன். ஆனால், இளங்கவோன், சினிமா உலகத்திலும், செந்தமிழும், உயிர்நடையும் இருக்கமுடியும் என்பதையும், உரையாடலை ஊரார் ரசிக்கமுடியுமென்பதையும் மெய்ப்பித்தவர். எனவேதான, அவர்மீது, இம்முறை அவர் கண்ணகி கதை கோர்த்ததிலும், உரையாடல் தீட்டியதிலும், நான் குறைகாணவும், கண்டிக்கவும் முனைகிறேன். அவர் எழுத்து, தமிழகத்துக்குப் பயன்பட வேண்டுமென்பதற்காகவே, அவர் கொண்டுள்ள மனமாசு போக்கமுயல்கிறேன். அதிலே நான் வெற்றிபெற்றாலும் பெறாமற் போனாலும், நீங்கள் விஷய விளக்கம் பெறுவீர்கள், அதுபோதும் எனக்கு!

“மாதவியா! கண்ணகியா!! மாதவியானால் மடிமேல்வா கண்ணகியானால் கடுகிப்போ!” என்று, சங்கீதக்கோவலன், ஆர்மோனியக்காரரை முறைத்து, தபேலாக்காரரைக் காய்ந்து, சபையோர்முன் கைகூப்பி நின்று கதறுவதும், மாதவி கோவலனைப் படாதபாடு படுத்துவதும், கோவலன் செய்துதந்த தங்கச்சிலை, மாதவியை விளக்குமாறு கொண்டு அடிப்பதுமாக, காட்டப்படம், காணகடூரமும் கண்ணுக்குப்புண்ணுமாக இருக்கும், நாடகம். அந்த ஆபாசத்தை எண்ணுந்தோறும் மனம் வேகாதிருப்பதில்லை. எத்தகைய பாத்திரம் மாதவி, இளங்கோவடிகளின் சித்திரத் தமிழிலே! எவ்வளவு இழிந்தகுணத்தின் இருப்பிட மாக்கப்படுகிறாள் நாடகமேடையிலே!!

இசைவல்லவள், ஆடலழகி, அபரஞ்சிப்பதுமை உயிர்பெற்றதன்ன அமைப்பினள், நற்குணங்கள் கொண்டவள், கலையின் மணம், மாதவி! கோவலன் மீது அவள் கொண்ட காதல், காசுக்காக அல்ல! கோவலன் கொலையுண்டது கேட்டதும், துறவுபூண்டு விடுகிறான், தூய உள்ளம் படைத்த அத்தோகை

யாள்! உலகம் போற்றும், மணிமேகலையைப் பெற்ற மணி வயறுபடைத்தவள் மாதவி! அத்தகைய மாசிலாமணி, நாடகமேடையிலே, மோசக்காரியாக, நயவஞ்சகியாக, குடிகேடியாக, கோணற்

குணங்கொண்டோளாக, பணம் பறிக்கும் பேயரக, அன்பு என்பதையே அறியாத அக்ரமக்காரியாக, கோவலனைக்கொடுமை செய்து விரட்டிடும் விபசாரியாகக் காட்டி, மக்களின் மனதிலே மாதவி என்றதும், வெறுப்பும் கோபமும், கேலியும் கண்டனமும் பிறக்குமாறு செய்தனர், நாடகங்களை நடத்தியவர்கள். சிலப்பதிகாரத்தைச் சித்திரவதை செய்து விட்டனர். (மலர் முகத்தவளை மந்திமுகத்தினளாக்கி, புன்சிரீப்புக்காரியை முகாரி குடிகொண்ட முகத்தோளோக்கிடும், கோரம்போன்றது, அவர்கள் செய்த கலைக்கொலை!) தாசியின் மோசத்தை விளக்குவதையா, இளங்கோவடிகள் கருத்தாக அமைத்தார் தமது சீரியநூலிலே! இல்லையே! எத்துணை உயர்தரமான கருத்துக்களை உள்ளடக்கியது சிலப்பதிகாரம்!! அதன் நாடக்காரர்கள் எவ்வளவு கெடுக்கவேண்டுமோ அவ்வளவு கெடுத்து வைத்தனர்.

இந்தக் கலைக்கொலை, கண்ணகி படத்திலே இராது என்றே நான் எண்ணினேன்! என் எண்ணத்தை ஈடேற்ற முடியாது என்றுரைத்து விட்டார் இளங்கோவன் - பழயவரல்ல, புதியவர். மாதவியை, நாடக மேடையிலே சித்தரிப்பதுபோலச் செய்யவில்லை. அது வரை மகிழ்ச்சியே! ஆனால், இவர் தீட்டிடும் கதையிலும், மாதவியின் நடனம், மாலை வீடு படலம், கழுத்தில் விழுந்த மாலை கழற்ற முடியாது கோவலன் கஷ்டப்பட்டது ஆகிய காட்சிகள் உள்ளன. நான் கேட்கிறேன், இதுசிலப்பதிகாரமா? என்று 'நாடகமேடைக்' கோவலனுக்கும் நண்பர் தீட்டியதற்கும், அதிக வித்தியாசமில்லையே இதற்கு இவரின் எழுத்துப் பயன்படுவதுகண்ட நான், யாரை நோவது என்று தெரியாது தவிக்கிறேன்.

கண்ணகி ஒரு பத்தினி! மாதவி பரத்தை, ஆனால் அன்பு வயப்பட்டு, ஆழ்ந்த காதலால் கோவலனை அபிஷேகித்த அருங்குணவதி. பாண்டியன் நெடுஞ்செழியனின் மனைவி, கணவன் இறந்தது கண்டு மனம் உடைந்து மாண்ட மற்றோர் பத்தினி, இத்தகைய மூவரின், முக்குண விளக்கச் சித்திரம் சிலப்பதிகாரம்.

அவர் மாண்டபின் எனக்கேன் வாழ்வு! எனக்கு எது இன்பம்? எனக்கு எதற்கு அலங்காரம்? என்றாள் மாதவி.

மன்னன் மாண்டபின் மாநிலத்தில் நானிருப்பது முடியுமோ, முறையாகுமோ, அவர்சென்றவழி நானும் செல்வ÷ன், என்று கதறுகிறாள் கோப்பேருந்தேவி, பாண்டியனின் மனைவி.

அவர் இறந்தாரா? அவரைக் கொன்றறார்களா பழிக்கப்பழி! இரத்தத்துக்கு இரத்தம்; என்று கர்ஜனை புரிந்து, கணவன் கள்வனல்ல, களவனென்றுரைத்த மன்னனின் கோல் செங்கோலால்ல, என்பதை உலகுக்கு உணர்த்திய வீராங்கணை, கண்ணகி.

இளங்கோ வடிகள். தீட்டிய இம் முப்பெரும் மாதர்களின் இயல்புகள் எவ்வளவோ பாடங்களை உலகினோர் உணரவைக்க உதவுகின்றனர். ஆனால், கண்ணகி படத்தைக் கண்டவர்கள், என்ன பாடத்தைப் பெறமுடியும் என்று என்னைக்கேட்டால், நமது குடும்பங்களே பரவாயில்லே, ஆண்டவன் குடும்பத்திலே இருப்பதோ ஓயாததொல்லை, அதன் பயனாக மானிடர் படும்பாடு கொஞ்சமில்லை, ஆகவே உலகினோரின் கஷ்டம் குறையவேண்டுமானால், கடவுளின் குடும்பக்கோளாறு தீரவேண்டும், என்ற இவைகள் தான்!

கோவலன் வெட்டுண்டதும், பாண்டியன் கோல் கெட்டதும், கண்ணகி கஷ்டப்பட்டதும், இன்னோன்ன பிற இடுக்கண்கள் நேரிடக் காரணம் என்ன? இளங்கோவன் தீட்டியுள்ள கதையின்

படி பார்த்ததால், இவ்வளவு தொல்லைக்கும் துயருக்கும் காரணம் பரமசிவன் குடும்பத்திலே நேரிட்ட ஒருவம்புதான்! கடவுள் வீட்டு வம்பு, கோவலன் உயிருகுடிக்கும் பாம்பாகிறது! இதனை எந்தவிதமான நீதியிலே, சேர்ப்பதோ நானறியேன், தோழர்களே!

அன்றோர் நாள், அரன் உழையும், குமாரர்களும் காணா, காண்டமாடிக்கொண்டிருந்தார். தாண்டவத்தைக்கண்டு விநாயகரும் முருகரும் ‘சபாஷ்’ கூறுகின்றனர். பார்வதிக்கோ பொறாமை மேவிடுகிறது.

இதென்ன பரதா! கடவுளுக்குமா பொறாமை குணம் உண்டு? அதிலும் கணவனின் கீர்த்திக்கு மனைவி பொறாமைப்படுவது, மும்மலம் நீங்கப்பெற்றாத

முற்றரிவுகிட்டாத, மூலப்பொருளைச் சேவித்தே மோட்ச சாம்ராஜ்யம் செல்லவேண்டிய, சாமான்ய மக்களுக்குள்ளேயே இராதே, முழுமுதற் கடவுளின் மனைவிக்கு அவருஜடய தாண்டவத்தைக் கண்டு பொறாமை உண்டாகிவிட்டது என்றுரைக்கிறாயே கடவுளின் இலட்சணம் இதுவா? - என்று என்னை கேட்காதீர்கள். நான் இளங்கோவன், தீட்டியுள்ளதைத் தீட்டி, உம்மிடம் நீட்டுகிறேன், கைச்சக்கைக் தீட்டினேனில்லே.

சில சமயங்களிலே நான் எண்ணிக்கைக் கொள்வதுண்டு, நல்லவேளையாக நாம்மானிடக் குடும்பத்திலே பிறந்தோம், தேவகுடும்பத்திலே பிறந்திருந்தால் என்னென்ன பட்டிருப்போமோ, எத்தனை ஆபாச ஆட்டங்கள் ஆடியிருக்கவேண்டுமோ, என்று அவ்வளவு கோளாறுகள், கோணற்சேட்டைகள் தேவ குடும்பங்களிலே, ரிஷி ஆஸ்ரமங்களிலே, தபோதனர்களின் பர்ணசாலைகளிளே, கைலாயம், வைகுந்தம் பிரம்மலோகம் ஆகிய இடங்களிலே நடந்தனவென்று நமது புராணங்களிலே காணப்படுவது போன்ற அக்ரம நடத்தைகளை, இங்கு ரஸ்புட்டீன் செய்திருக்க முடியாது ஆல்கபோன் செய்திருக்க முடியாது. எத்தகைய காமுகனும் செய்திருக்க முடியாது, நான் நாத்தீகம் பேசவில்லை நண்பர்களே! ஆத்திதம் பேசுபவர் அளன்து கொட்டுகிறார்களே, அவற்றின் ஆபாசத்தை அறிந்தோர், அவ்விதமான ஆபாசலோகத்திலே பறவாமல், இங்கு பிறந்தோமே என்று எண்ணி அகம கிழ்வர் என்றே கூறுகிறேன். பாருங்கள், காகுரோத, மதமாச்சரியாதிகளையும் ராகத்துவேஷர்களையும், இந்திரியச் சேட்டைகளையும், கடந்த நிலையே யோகிகலும்; தபோதனர்களும், ரிஷிகலும் மகான்களும் மகாத்மாக்கலும் வேண்டுகின்றனர். இதற்காக நீர் நின்று தவஞ்செய்தோர், நெருப்பிலே படுத்து தவஞ் செய்தோர், தலைகீலாக நின்று தவம்புரிந்தோர், ஊசிமுனையின்மேல் நின்று ஓங்காரச் சொரூபத்தைக் காண தவமியற்றினோர், சதையை அறுத்து யாகத்தியில் இட்டோர், என்று எத்தனை எத்தனையோ விதவிதமான கோரமான தவங்களைச்செய்தனர். என்று புராண இதிகாசாதிகள் புகல்கின்றன. இவ்வளவு கடுந்தவம் இயற்றி, தேவலோக வாசம் பெறுகின்றனர். ஆனால் அங்கபோன பிறகு, எத்தகைய வாழ்க்கை! அதே புராணாதிகள் தேவவாழ்க்கையையும், அதனால் ஏற்படும் வக்கிர வரலாறுகளையும், கூறுவதைக் கூர்ந்து நோக்குவோர்,

எந்தக்காமக் குரோத மகாத்மாக்காரிங்களையும் இந்திரிய சேட்டைகளையும் விடுத்தால் வேவலோக வாசம் கிடைத்ததோ, அதேபேர் வழிகள், மதனலீலா விநோதர்களாகவம், ராஜதந்திர நிரணர்களாகவும், காமுகர்களாகவும், கபட வேட்தாரிகளாகவுமே வாழ்கின்றன என்பதையே காட்டுகிறது. இது பொறுத்தமானதாகுமா என்று உமது பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்த பாருங்கள். அக்ரமான கதைகளய்யா, தேவலோகத்து நடவடிக்கைகள்!

“ஏடா! பிரமனே! உனக்கு அவ்வளவு கவமா என் தலையிலே ஒன்றைக்கிள்ளி விடுகிறேன் என்று சிவனார் சினந்துகூறி, பிரமனின் சீரத்தை கொய்தது, எங்கே என்று எண்ணுகிறீர்கள்? பாபாத் மக்கள், பாமரர், வினையின் விளையாட்டுக்கருக்கள் சகடர் என்று கூறப்படும் மக்கள் வாழும் இந்த மாநிலத்திலே நடந்த தல்ல! சகலமும் உணர்ந்து, சராசரத்தைப் படைத்து, எங்கும் நிறைந்து, எதற்கும் காரணமாகி, எந்தக்காரியத்துக்கும் பொறுப்பாக உள்ள பரமபிதாவின் மண்டலத்திலே, இது நடக்கிறது நடந்ததா என்று என்னைத் திருப்பிக்கேட்க வேண்டாம். நான் கண்டேனில்லை. மானிடரிலே இவைகளைக் கண்டோரில்லை. கண்டோர் விண்டது மில்லை விண்டோர் கண்டதுமில்லை! நடந்ததாகப் புராணம் நாட்டிலே இருக்கிறது, கடிக்கின்றனர், பரம பக்குமான்கள் இதனை ரசிக்கின்றனர், பூரிக்கின்றனர், என்றோ அவர் பெருமை! என்று தொழுகின்றனர்.

காட்டிலேதிரியும் கள்ளர் கூட்டத்திலே, ஒருவர் தலையை ஒருவர் அறிவாளால் வெட்டுகின்றனர், கொல்லைச்சண்டை, கொண்டைக்காரியிடம் கொல்லையிலே கோழி கூவும் நேரத்திலே பேசியதால் வந்த சண்டை வரப்பு வாயக்கால் சண்டை, முதலியவற்றிலே தலை உருளக்கேட்டிருக்கிறோம். அத்தகையவர்களைக் காட்டுமிராண்டிகள் என்று தூற்றுகிறோம், கள் என்று ஏசுகிறோம், கொலைபுரியும் கொடுமை யாளர்கள் என்று பேசுகிறோம். சட்டம் தண்டிக்கிறது. இதோ, புராணத்தின் படிபார்த்தால், திருஷ்டி கர்த்தாவின் சிரத்தைச் சின்மயானந்த சொரூபி கிள்ளி எறிகிறார்! நமது கடவுள்களின் இலட்சணம் இதுவென்று புராணீதர்கள் தீட்ட, அதனைக்கெட்ட,

சாதுக்கள் என்ன ஊற்றிக்கழுவிச் சுத்தம் செய்வது, கூறுங்கள். நமது நல்ல வேலைதானே இத்தகைய கோரம குதிக்கும் இடத்திலே இல்லாது, கொலை கொள்ளை, களவு முதலியன புற்றில் அடங்கி இருக்கும் பாம்பு போல் பதுங்கிக்கொண்டுள்ள இடத்திலே இருக்கிறோம். என்று நான் எண்ணி மகிழ்வதுண்டு. ஒரு நாரதரிடம் நாம் சிக்கிக்கொண்டால் எவ்வளவு பாடுபட்டிருப்போம் எவ்வளவு பாடுபட்டார்கள் தேவர்களும், மவரும், அந்த பிரம்மச்சாரியின் கலக சுபாவத்தால்1 ஆஸ்ரமத்திலே இருக்கும் அகலிகையை, இந்திரன் கற்பழித்ததும், அதற்காகக் கோழியுருக் கொண்டு சுவியதும் பின்னர், உடலெங்கும் யோனிஆக என்று முனிவர் சாபமிட முழித்ததும், பின்னர் உனக்குமட்டுமே அந்தக்கோரம் தெரியும், மற்றவர்களுக்கு நீ ஆயிரங்கண்ணுடையோனாகவே இருப்பாய் என்று மாற்று பெற்றதுமாகிய கதைகளைப் படிக்கும் போது எவ்வளவோ, மேலப்பா, இந்த லோகம், இங்யே உடைக்கோ, மனைவிக்கோ, உருக்கோ, பேருக்கோ இத்தனை பெரியவர்கள் இத்தகைய ஆபத்து வருவதில்லை, என்று எண்ணி திருப்தி அடையாமலிருக்க மடியுமா, கூறட்டும் நமது ஆத்தீக ஆழியிலே அனுதினம் மூழ்கிடும் அன்பர் குழாங்கள்.

தேவலோக விஷயமாகக் கூறவந்தது, கண்ணகி கதைக்கு மூலமாக, இளங்கோவன் தீட்டியதை எடுத்துரைக்கத் தொடங்கியதால், மேலே கூறுவோம் கேளுங்கள். சிவனாரின் தாண்டவத்தைக் கண்டு பொறாமை கொண்ட பார்வதியார், “நிறுத்து உன் நர்த்தனத்தை” என்று சீறுகிறார். சிவனார் ஏன்? என்று கேட்கிறார். பேச்சு முற்றுகிறது. “சரி! சக்தி பெரிதா சிவன் பெரிதா? என்று உமை உக்கிரத்துடன் கேட்கிறார்.

பாருங்கள் தோழர்களே! ஆண்டவன் குடும்பத்திலே சதிபதி ஒற்றுமை இருக்கும் விதத்தை! யார் பெரியவர்கள் என்ற சண்டை நடக்கிறது, சகலமும் உணர்ந்தவரின் சன்னதியிலே.

சக்திதான் பெரிது! சிவமே பெரிது! இல்லை சக்தி பெரியது!,

இல்லை, இல்லை, சிவமே பெரிது! என்று சம்வாதம் நடக்கிறது. கோபச்சிரிப்பு வேறு! முடிவில், நீ ஆணவத்தால் என்னை அவமதித்தாய். நீ பூலோகத்திலே பிறந்து படாதபாடு பட்டு. பிறகு எம்மை வந்தடைவாய்" என்று சிவனார், சக்தியைத் தேசவாஷ்டம் செய்கிõறர். அந்த சக்திதான், கண்ணகி! இது இளங்கோவனின் கதை, இளங்கோவனுடையதல்ல! இது சினிமா அதிகாரம்! சிலப்பதிகார மல்ல! இது சிந்தனைக்குத் தேவையானதா, சிவசக்தி இலலட்சண விளக்கத்துக்கு அவசியமா, பகுத்தறிவுக்கு ஏற்றதா, பாமரரின் அறிவுக்கு விருந்தா, அன்றி அவர்களுக்கு அபினா, என்பதை அன்பர்களே, யோசித்துப் பாருங்கள்.

கண்ணகி பல கஷ்டமனுபவித்து, பாண்டியனை மாளச்செய்து, மதுரையை தீப்பிடிக்கச்செய்து, ஓய்ந்து நிற்கையிலே, சிவனார் கூப்பிடுகிறார், "சக்தி! ஏ! சக்தி!" என்று கண்ணகி விழிக்க, சிவனார் விளக்க, பின்னர் சக்தி, கண்ணகி உருவத்தை உலகோர் மறவாதிருக்க, சிவனார், சிலையாக்கி, "இதனை உலகோர்பத்தினிக்கடவுளாகக்கொண்டு வணங்குராக" என்று கட்டளைப் பிறப்பிக்கிறார். ஆரம்பத்திலே சக்தி சிவசம் வாதம் என்ற புராண ஆபாசத்தை இளங்கோவன் தீட்டவே, இறுதியிலும் ஆபாசத்துடனேயே முடிக்க வேண்டி நேரிட்டுவிடுகிறது. இடையிலேயும் இதனால், மாதவியைப்பிரித்து கோவலன், கண்ணகியிடம் வந்து சேர்ந்ததும், கண்ணகி கணவனைத் தொடவும் கூடாது என்று "தீண்டினால் திருநீலகண்டம்" என்றுகூறி விடுகிறான் கோவலன்! ஏன்? சக்தியே கண்ணகியாகத் தோன்றுவதாகக் கதைதுவக்கியதால், கைபடாத பத்தினியாகவே இருக்கச்செய்யவேண்டிய பொறுப்பும், கடைசீயில், சிவனாரிடம் சக்தியாகப் போய்ச்சேரச் செய்யும்

பொறுப்பும் கதை எழுதினோருக்கு ஏற்பட்டது! சேற்றிலே கால்வைத்தால், கழுவித்தானே தீரவேண்டும். செந்தேலைத் தீண்டினால், அது கொட்டித்தானே தீரும். அதுபோல், புராண ஆபாசத்துடனேயே முடிக்கவேண்டி நேரிடுகிறது. இளங்கோவடிகளின் செம்பொன்னை இளங்கோவன் பித்தளையாக்கித் தருகிறார் என்று நான் கூறுவதினாலே தவறா,

கூறுங்கள் கேட்போம்.

ஏன், கதையை இப்படி கோணலாக்கினார்கள்? சிலப்பதிகார ஆசிரியரின் சிந்தனையிலே கோளாறு கண்டுபிடித்து அதனைச் செம்மைப்படுத்த சிவலோகநாதனைப் பிடித்திழுத்து வைக்கவேண்டிய காரணம் என்ன? என்று கேட்பிர்கள். அதனை அறிய, ஆதியை விட அந்தத்திலிருந்து ஆரம்பிக்கவேண்டும் அன்பர்களே.

நான் கூறினேன், கதையின் கடைசீ கட்டத்திலே, சிவனார் தோன்றி, சக்தியை மன்னித்து கண்ணகிச் சிலையைத் தமது கடாட்சத்தால் உண்டாக்குவித்தார் என்று அந்தக் கட்டத்திலே இருக்கிறது சூட்சமம்! இங்கு “இளங்கோவன்” கலைக்கொலை மட்டுமல்ல இனக்கொலை செய்கிறார். அதை எண்ணும் போது இருதயம் துடிக்கிறது. கண்ணகியின் சிலை, இற்பட்டவிதம் என்ன, இலக்கியச் சான்றுப்படி? இளங்கோவன் எழுத்தின்படி எண்ணம்வேறு அவரது எழுத்துவேறு, சிலையைச் சிவனார் சிருஷ்டிக்கிறார். ஆனால், செந்தமிழ் பயின்றவரனைவரும் அறிவர், கண்ணகியின் வரலாற்றினைக் கேள்விப்பட்ட இளங்கோவடிகள் நூல் இயற்ற, இளங்கோவடிகளின் சகோதரர், சேரன் செங்குட்டுவன், அத்தகைய பத்தினிக்குக் கோயில் கட்டுவேன், சிலை அமைப்பேன் என்று கூறி, சிலைக்குக்கல் இமயத்திலேடுபேன் என்றுரைத்து இமயம் சென்று ஆங்கு எதிர்த்த கனகவிசயன் எனும் ஆரிய மன்னர்களைப் போரிலே வென்று, அவர்களின் தலைøமீது கல்கொணர்ந்து, பத்தினிக்குச் சிலையும் கோயிலும் அமைத்தான் என்பதை திராவிட மன்னன், திராவிடப் பெண்மணியின் திராவிடக் குணத்தை உலகு உணரட்டும் என்பதற்காகக் கோயிலமைக்க, ஆரிய மன்னரை முறியடித்து, அவர் தலைமீது கல்லை ஏற்றிக்கொண்டு வந்தான் என்ற இந்த இனச்சிறப்பை மறைக்க, மக்கள் தெரிந்துகொள்ளாதிருக்க, தெரிந்த சிலரும் திகைக்க, சிலை சிவனார் செய்தார், காரணம் சக்தியே கண்ணகியாக அவதரித்தது என்று புனைசுருட்டு புகுத்தப் பட்டிருக்கிறது. தோழர்களே இது கலைக்கொலையாக மட்டுமிருப்பின், தெரிந்தது அது தான் போலும் என்று பரிதாபப்பட்டு இருப்பேன், இலக்கியக் கொலையாக மட்டுமிருப்பின் இதற்குமேல் எதிர்பார்க்க முடியாது என்றெண்ணிச் சும்மா இருப்பேன், இது இனக்கொலை! திராவிடர் ஆரியர் என்ற இனப்பாகுபாடு, பூர்வகாலப்போர், திராவிடமேம்பாடு ஆகியவற்றை வேண்டுமென்றே மறைக்கச் செய்யும் சதி! இதனைத் தமிழகம்

தாங்குவதா! இலக்கியம் கற்றோரே. சிலப்பதிகார ஆராய்சியாளரே! சிந்தனைக்குச் சற்றே வேலை கொடுங்கள், இந்தச் சித்திரவதைக்கு நீங்கள் உடந்தையா? கண்டும் கேட்க மறுக்கும் போக்கு உதவுமா? எதற்காகச் சிலைசெய்த வரலாற்றை இங்ஙனம் தலைகீழாக மாற்றுவது என் இந்தத் தெகிடுதத்தம்? கேட்பார் இல்லையா? இந்நாட்டிலே இலக்கியக் காப்பாளர் எதெதற்கோ எவரெவர் மீதோ சீறுகின்றனரே, சிலப்பதிகாரத்தை இந்தச் சித்திரவதை செய்திருப்பதைக் கண்டு, சீற்றம் எழ வேண்டுமா? செந்தமிழ் நாட்டவரின் சிறப்புக்கு இத்தகைய பங்கம் விளைவிக்கத் துணியும் செயலைக் சண்மார்க்க முன்வர வேண்டாமா? தமிழர் இல்லையா, தமிழ் காதில்! சிலப்பதகாரத்தை அப்படியே படம் எடுக்க முடியுமா, சிற்சில மாற்றங்கள் சினிமாவுக்கேற்றபடி செய்யவேண்டாமா என்று வாதிடுவர். மாற்றம் தேவை என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் எத்தகைய மாற்றம் தேவை! இஞ்சிபத்தன் செய்வது போன்ற மாற்றமா! என்ன ஆச்சரியம்! என்று இஞ்சிப்பத்தன் அடிக்கடி கூறக்கேட்டேன் காட்சியிலே, இஞ்சிபத்தளாக வந்த தோழர் N.கு. கிருஷ்ணன். இதனைச் சிலப்பதிகாரத்தைத் தழுவியது என்றும், தீட்டியவர் பெயர் இளங்கோவன் என்றும் விளம்பரம் செய்கிறார்களே இது என்ன ஆச்சரியம்! என்று கூறவில்லையே தவிர அவர் மனதிலே அதே எண்ணந்தான் இருந்திருக்கும் என்று எண்ணுகிறேன்.

பழையகாவியம், சரிதம் ஆகியவற்றைத் திரைக்கு ஏற்றபடி மாற்றிக்கொள்வதை நான் தவறென்றுக் கூறுபவனல்ல. கண்ணகி படத்திலேயே, இஞ்சிபத்தன் காமிக்செருகல். ஆனால், அதன் சோபிதம் படத்தின் வெற்றிக்குக் காரணமாக இருக்கிறது. அறிவுக்கு பொருத்தமான மூலக்கருத்துக்கு மாறாகவில்லாதத் துணைச் சருத்தாகவோ, விளக்கமாகவோ, இருக்கும் கருத்தை புகுத்தி அதற்கேற்ற காட்சிகளை அமைப்பதை நான் வரவேற்கிறேன். மூலக்கருத்தையே கொலை செய்யும் விதத்திலே மாற்றம் இருப்பது, அடாத செயலென்பேன். இளங்கோவடிகள், ஒரு பத்தினியின் பேருங்குணத்தை ஒரு பாத்தையின் காதல் மகத்துவகை, ஒரு வணிகனின் வாழ்க்கையில் பலமாற்றங்களை, ஒரு வறசகனின் மோசத்தை ஒரு மன்னனின் அவசந்ததை

விளக்குகிறார், சிலப்பதிகார மூலம். கண்ணகி கதையிலே இந்த மூலமே முறியடிக்கப்பட்டு, இவ்வளவும் கைலாயத்திலே நேரிட்ட சிவ சக்தி சம்வாதத்தால வந்த தொல்லை என்று முடிக்கிறார், இளங்கோவன் ஜூனியர்! இது சரியா, முறையா! தகுமா? என்று கேட்கிறேன்.

அதிலும் சிலை உண்டான விதம்பற்றி அவர் திரித்திருப்பதைத் தமிழ் உணர்ச்சியுள்ள யாரும், மன்னிக்க மாட்டார்கள். சிலை உண்டானதற்கு, உண்மைக் காரணத்தைக் காட்டினால், ஏற்கனவே வீறுகொண்டெழுந்துள்ள தமிழருக்கு மேலும் வீரம் உண்டாகுமே, ஆரிய அதனை எங்கனம் செய்வார் என்று எவரேனும் வாதிடுவரேல் இது கூறுவேன், "உண்மையை உரைக்கும் நெஞ்சுறுகி பிறவாது போயினும், அண்டப்புளுகு கூறாமலாவது இருந்திருக்கலாம்." சிலைக்காட்சியையே விடுத்துவிட்டு, கண்ணகி களைத்து நின்ற முடித்து அடுத்த காட்சியாக பல வருடங்களுக்குப் பிறகு என்ற தலைப்புடன் ஒரு கோயிலைக் காட்டி கண்ணகியின் சிலையைப் பலர் தொழுவதாகக் காட்டி முடித்திருக்கலாம். ஆனால், வேண்டுமென்றே, சிலசமைத்த விஷயமாக உள்ள ஆரிய-திராவிடக் கிளர்ச்சியை மறைத்து, மாறாக ஒரு புராணம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. தெரிந்து, துணிவாக, தமிழரைத் துச்சமெனக் கருதி, செய்யப்பட்டது இது என்பேன்.

நான் படத்திலே உள்ள மற்றவற்றைக் குறை கூற முன்வரவில்லை. சினிமாத் துறையிலே ஈடுபட்டுள்ளவர்கள் கூறுவர்! கலை விஷயமாகவும், இன விஷயமாகவும், செய்யப்பட்டுள்ள, சகிக்கமுடியாத, மன்னிக்க முடியாத, கொலையை மட்டுமே நான் இங்குக் குறிப்பிட்டேன்.

கோவலனின், "சாந்தி முகூர்த்தத்தன்று" மாதவி நடனம் என்றிருக்கும் ஆபாசத்தையோ, இந்திரவிழாவுக்கு கோவலனும் மாதவியும் போனபோது, கற்பாறைகளும், விணையை எடுத்துத்தர வந்த பணிப்பெண் இரவரும் தவிர, விழாவிற்க பேறு யாரும் வரதிருந்த விந்தையையும், மாதவிக்கு அண்ணனாக ஒரு ஸ்திரி வந்திருந்து "மாமனாக" இருக்கும், கோரத்தையும் எடுத்துக் கூறுவது, என் வேலையாது நான் கொள்ளவில்லை. படத்திலே காணப்படும். இந்தச் சில்லறை ஆபாசங்கள் அத்தனையும், கண்ணகியாக வரும் தோழியர் கண்ணாம்பாவின்

நடிப்பிலே, அடித்துத்த தள்ளப்படுகிறது. எனவே, படத்தின் மற்றப் பகுதி பற்றியோ, இளங்கோவனின் நடைபற்றியோ குறைகூறுகிறேன். ஆனால் இந்த இனக்கொலையை நான் மறவேன்.

ஆம்! நான் அந்தப்படத்தைக் தயாரித்திருந்தால், கதை தீட்டியிருந்தால், ஆரம்பம், எதுவாக இருக்கும்! சிவனும் சக்தியுமா வருவார்கள்! அவர்கள் கைலாயத்திலே இருப்பார்கள், கதையிலே தலைமீது கல்லை சுமந்துகொண்டுவரும் கனக விசுயரைக் காட்டுவேன். “தமிழ் மன்னனை எதிர்த்ததும் போதும், தலை சரிச்சல் கண்டதும் போதும்” என்று அவர்களைக்கூறச் செய்திருப்பேன். கண்கிக்குக் கற்சிலை செய்யும் வரலாறும், அகலிகை கல்லான வரலாற்றும், ஒப்பிடும் பேச்சை, கனக விசயனுக்கும், தமிழ்க மன்னனுக்கும் நடக்குமாறு செய்வேன்! ஆரியர் கொட்டம் அடக்கப்பட்டதை அக மகிழ எடுத்துரைப்பேன்.

மதுரை தீப்பற்றி எரிந்ததையும், மாயா சக்தி என்றுரைத்திரேன். மன்னன், இருதயத்துடிப்பினால் மாண்டான் என்று கூறுவேன். மன்னனின் மரணத்தையும் கண்கியின் கோலத்தையும் கண்டமக்கள், பொல்லாத வங்சிபத்தனாலல்லவா, இவ்வளவும் நேரிட்து என்று கோபித்து அவன் வீட்டில் தீவைக்க, அச்சிமயம் பெருங்காற்று அடித்துத் தீபரவ, பத்யத்தினியின் வாக்கினாலேயே தீ பரவிற்று என்று மக்கள் பயந்தோட, தீ அணைப்பாரற்று, மதுரையே அழிந்தது என்று விளக்கமுரைப்பேன். இத்தகைய மாற்றங்கள் இருக்குமேயன்றி இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரத்தை, சினிமா-அதிகாரம் பெற்றதனால், சித்ரவதை செய்திருக்கமாட்டேன்.

சர்க்கா நம்மிடமிருப்பின், கண்ணகி படத்திலே, முதல் ரீல், கடைசி ரீலை, இரண்டையும் சென்சார் போர்டார் நீக்கிவிட்டிருப்பர் என்றும் கூறுவேன். தமிழரின் முற்காலச் சிறப்பை மறைக்கச் செய்யப்படும் சதி, திரையிலுமா என்று சென்சார் போர்டார் சீறுவர். ஏன் மறைக்க வேண்டும் உண்மையை? என்று கேட்டார்.

பிரபாத் கம்பெனியார் சில ஆண்டுகளுக்குமுன்பு தயாரித்த அடிவானத்துக் கப்பால் என்ற படத்திலே ஆரியர் -அநாரியர் என்ற விஷயம், ஆரியர் மகத்தின் பேரால் அநாரியரைக்

கொடுமைப்படுத்தி வஞ்சித்த வரலாறு, ஆரிய அநாரிய பேதம் காதலை மாய்த்த கோரம், ஆரிய குரு மக்களை ஆட்டிப்படைத்தது ஆகியவற்றை பச்சையாகவே படமெடுத்துத்தான் காட்டினார்கள்! அந்ததத் துணிவு, கண்ணகி படமெடுத்தவர்களுக்கு வரமாற்போனாலும், திரித்துக்காட்டுவதாவது இல்லாமல் இருக்கக்கூடாதா என்று கேட்கிறேன்.

தமிழரின் துரைத்தனம் இருந்தால் இத்தகைய செயல் நடக்காது என்று நான் கூறுவதை, வீண் மிரட்டல் என்று கருதாதீர். சில ஆண்டுகளுக்கு முன்பு "சிவாஜீ" படக்காட்சியை வடநாட்டிலே தயாரித்தார்கள். சிவாஜியின் வாழ்க்கை காட்டவேண்டிய பாடம், வீரம், உழைப்பு, தந்திரம், தீரம், இறுதியில், வைதிகத்துக்குப் பலியான கோரம், இவைகளே! படமெடுத்தவர்கள், இதற்கு நேர்மாறாக, சிவாஜியின் வெற்றிகளுக்குக் காரணம், ராமதாசர் ஆசீர்வாதம் என்றும், சிவாஜி, ராதாசரின் பாரதபூசை செய்தே பெரிய வெற்றி பெற்றார் என்ற கருத்தைக் கொண்டதாக அக்காட்சியைத் தயாரித்தனர். எங்கனம், கணணாகி படமூலம் பத்தினியின் பண்பு வெளிப்படுவதை விடச் சக்தி சில சம்வாதத்தால் நேரிட்ட சங்கடமே வெளிப்படுகிறதோ அதுபோலவே சிவாஜி படக்காட்சி மூலம், சிவாஜியின் வீரப்பிரதாபம் வெளிப்படுவதை விட ராமதாசரின் சக்தியே வெளிப்பட்டது. மராட்டியர்கள் இதனைத் தமது இனத்தைக் இழித்துக்காட்டும் படமெனக் கண்டுகொண்டனர். கிளர்ச்சி நடந்தது. கோலாப்பூர் மன்னர் முன்வந்தார். "இந்தப்படத்தை நமது சமஸ்தானத்திலே கொண்டுவரக்கூடாது" என்று தடை உத்திரவு பிறப்பித்தார். மராட்டியர் இருந்த இடமெங்கும் இந்த உத்திரவு போற்றப்பட்டது. பல இடங்களிலே படத்துக்குக் கண்டனம். படமுதலாளிகள் பட்ட கஷ்ட நஷ்டம் சொல்லிமுடியாது.

கோலாப்பூர் சமஸ்தானம் செய்ததை, தமிழரசு, செய்ய முடியாதா? அந்தவாழ்வு ஏந்தநாள் வரும், என்ற எண்ணமே மேலிடுகிறது, இத்தகைய சமயங்களிலே!

கண்ணகி எனும் அந்தத் தமிழ்ப்படக்காட்சியைக் கண்டதற்கு, வஞ்சிபத்தனைவிட இஞ்சிபத்தன், பலேகைகாசு ஆசாமியாக இருக்கிறார் என்று எண்ணினேன். கதைப்போக்கையும், கலைக்கொலை, இனக்கொலை ஆகியவைகளைக் கண்டபிறகு, இஞ்சிபத்தனே மேல்! இளங்கோவன், செய்ததைவிட,

இஞ்சிபத்தன் செய்ததுபரவாயில்லை என்றும் எண்ணினேன். என்ன ஆச்சரியம், தமிழ்ப்படநிலைமை இப்படி இருக்கிறது, ஏன் செய்வது!

(திராவிடநாடு - 16.08.1942)

24 மணி நேரத்தில் சுயராச்யம்!

சுயராஜ்யம்தானே வேண்டும்?

ஆமாம்! நிச்சயமாக அதுதான் வேண்டும்.

சரி! 24 மணி நேரத்திலே சுயராஜ்யம் கிடைக்கும்வழி இருக்கிறது.

என்ன? ஒரே நாளிலே சுயராஜ்யமா?

ஆமாம், தோழனே! ஒரே நாளிலே சுயராஜ்யம். ஓடும் ரயில்மீது கல்வீசத் தேவையில்லை! ரயில்வே ஸ்டேஷனைக் கொளுத்தத் தேவையில்லை! தடியடியும் துப்பாக்கிப் பிரயோகமும் நடக்கும்படி நிலைமையை உண்டாக்கத் தேவையுமில்லை., தபாலாபீசைச் சூறையாடத் தேவையில்லை. நாட்டிலே சஞ்சலமும் சங்கடமும், உண்டாக்கத் தேவையில்லை. இவைகளின்றி, மிக மிகச் சாதாரணமாக 24 மணி நேரத்திலே சுயராஜ்யம் பெற வழி இருக்கிறது.

நான் நம்பமாட்டேன். அது எப்படி முடியும்? காங்கிரஸ் எத்தனையோ விதமான போராட்டங்களை நடத்திற்று. எத்தனையோ ஆயிரம் பேர் சிறை புகுந்தார்கள். அதனாலெல்லாம் வராத சுயராஜ்யம், 55 ஆண்டுக் கிளர்ச்சியினால் வராத சுயராஜ்யம், 25 வருட காந்தீயத்தால் வராத சுயராஜ்யம், 24 மணி நேரத்திலே அமளியின்றி, அல்லலின்றி எப்படி பரதா! வரமுடியும்?

“தம்பீ கேள்! நீ சொன்னாய், காங்கிரஸ் எத்தனையோ போராட்டங்களை நடத்திற்று, ஆனால் சுயராஜ்யம் வரவில்லை என்று, அதிலேதான் சூஷமம் இருக்கிறது. தெரிந்துக்கொள். காங்கிரஸ் ஒன்றுமட்டும் காரியத்தை நடத்தினால், பலன் கிடைக்காது. நாடு செய்ய வேண்டும். நாட்டு மக்களின் ஏகோபித்த ஒற்றுமையான கிளர்ச்சி வேண்டும். திராவிடரும் முஸ்லீம்களும், கலந்துத் தமது கையொப்பத்தை இடாமுன்னம், அந்தக் கிளர்ச்சிக்கு நாட்டு மக்கள் நடத்தும் கிளர்ச்சி என்ற பெயர் ஏற்படமுடியாது. காங்கிரஸ் நடத்தும் கிளர்ச்சியிலே விறுவிறுப்பு இருக்கலாம், மக்களை மருட்டவும் செய்யலாம் சர்க்காரைச் சங்கடத்துக்குள்ளாக்கலாம் சுயராஜ்யத்திற்கு

இவை அறிகுறியாகாது. காங்கிரஸ் மட்டுமே கிளர்ச்சி செய்து வெள்ளையரை மிரட்டி விரட்டிவிடுகிற தென்றே வைத்துக் கொள் தோழா, அது ஏற்றும் வெற்றிக்கொடி நெடுநாட்களுக்கு பறக்க முடியாது. அது கையாண்ட முறை களையோ, அன்றி அதைவிடக் கடுமையான முறைகளையோ, இன்றோ, பிறகோ, இஸ்லாமியரும், திராவிடரும், கைக்கொள்வார்கள். அது சமயம் சங்கடமும் சஞ்சலமும் இன்றுள்ள அளவினதாக இராது. அதை மறக்காதே.

ஒற்றுமை வேண்டாமென்று நாங்கள் சொல்லவில்லையே! எவ்வளவோ பாடுபட்டோம் அதற்காக முடியவில்லை என் செய்வது?

பாடுபட்டால் பலன் ஏற்படாது போயிருக்குமா? இதோ இன்று நாட்டிலே காங்கிரசார் நடத்தும் கலகம் பலன் தரும் என்று நம்புகிறாயே, இதற்குச் செலவிடப்படும் சத்தியமும் நேரமும், சுறுசுறுப்பும், நாட்டிலே ஒற்றுமையான திட்டம் ஏற்பட செலவிடப் படவில்லை. யோசித்துப் பார். உனக்கு என்ன வேண்டும்? சுயராஜ்யம் தானே!

ஆமாம்!

வெள்ளைக்காரன், சுயராஜ்யம்தர முடியாதென்று கூறிவிட்டானா?

இல்லை.

தருவதாகத்தானே சொல்லுகிறான்?

ஆமாம், ஆனால் சால்ஜாப்பு செய்கிறான்.

அது சகஜந்தானே தம்பி! என்ன சொல்கிறான்?

முஸ்லீம் லீகும், இதர கட்சிகளும் சம்மதிக்கட்டும் என்று கூறி விடுகிறார்கள்.

முஸ்லீம் லீக், நீதிக் கட்சி, முதலிய எந்தக்கட்சியாவது சுயராஜ்யம் வேண்டாமென்று கூறினதுண்டா?

இல்லை.

பிறகு, அந்தக்கட்சிகளின் சம்மதத்தையும் சேர்த்துவாங்கி, வெள்ளைக்காரர் முன்பு வீசி எறியத்தடை என்ன?

அந்தக்கட்சிகள், ஏதேதோ கூறுகின்றன. பாகிஸ்தான் திராவிடஸ்தான் என்று கேட்கின்றன.

அதிலே தவறு என்ன? நாம் சுயராஜ்யம் தேவை என்று சொல்வது தப்பா? அதைப்போலவே அவரவர்கள் ஒவ்வோர் இடத்தை ஆளுவோம் என்று கேட்பது எப்படித் தப்பாக முடியும்?

நாட்டைப் பிளந்தால், ஒற்றுமை இராது, எதிரிகள் சுலபத்திலே அழித்து விடுவார்கள்.

இது அசல் பிரிட்டிஷ் வாதமல்லவா? அவனும், சுயராஜ்யம் கொடுக்க எனக்கு இஷ்டந்தான். ஆனால் கொடுத்தால் காப்பாற்றிக்கொள்ளும் சக்தி உங்களுக்கு உண்டா என்று தான் பயப்படுகிறேன் என்று பேசுகிறான். நீங்களும், அவரவர்கள் உரிமை கேட்பது சகஜந்தான், நியாயந்தான், ஆனால் பிரித்துக்கொடுத்து விட்டால் ஆபத்து என்கிறீர்கள். சுயராஜ்யம் எங்கள் பிறப்புரிமை, அதைக்கொடு, நாங்கள் எப்படியோ ஆண்டு கொள்கிறோம். எப்படியோ எங்களை நாங்களே காப்பாற்றிக்கொள்கிறோம், என்று நாம் வெள்ளைக்காரரைப் பார்த்துச் சொல்கிறோமே, அதே நியாயம், பாகிஸ்தானிகளுக்குப் பொருந்தாதோ!

எப்படியோ நடக்கட்டும். முதலிலே சுயராஜ்யம் வந்து விடட்டும். பிறகு பாகிஸ்தான் திராவிடஸ்தான் உரிமைகள் விஷயமாகக் கவனித்துக் கொள்வோம்.

தம்பி! நீ எப்படி, இஸ்லாமியருக்கும் திராவிடருக்கும் “வாய்தா” போடுகிறாயோ, அதைப்போலவேதான், வெள்ளைகாரன், இந்த யுத்தம் முடியட்டும், உடனே சுயறாஜ்யம் தருகிறேன் என்று “வாய்தா” போடுகிறான். சுயராஜ்யத்துப் பிறகு சமரசம் என்ற பேச்சை விட்டுவிட்டு இப்போதே சமரசம் செய்து கொள். 24 மணி

நேரத்திலே சுயராஜ்யம், கிடைக்கிறது பார்!

ஒற்றுமை இல்லையே!

நான் சொன்னதைத்தானே மறுபடியும் நீ சொல்கிறாய். சரி இதோ இரு. ஆமாம்! இந்தப் பாட்டைக் கேள் சற்றுநேரம்.

பாட்டுக் கேட்கவா நான் வந்தேன்?

பாட்டு மட்டுமில்லை. இதிலே பேச்சுமிருக்கிறது. கேள் கொஞ்சம்.

இது, என்.எஸ். கிருஷ்ணன் காமிக்! சகுந்தலை படம். ஆயிரம் தடவை கேட்டிருக்கிறேன்.

இப்போ ஒரு தடவை கேள். கேட்கவேண்டிய இடம் இதுதான்.

என்னாடா, நமக்குள்ளே ஒத்துமை வேணாமாடா.

நீ என்னை மோசம் செய்யலாமாடா.

நீ இதிலே பங்கு கேக்கலாமாடா.

அப்ப ஒண்ணு செய்வோமாடா.

என்ன மாடா?

ஆளுக்குப் பாதியா அறுத்து எடுத்துக்குவோம்.

ஆ! எனக்கு முழு மீனுதான் வேணும்.

முழுமீனு வேணும்னா நான் புடுங்கி தண்ணீலே போடறேன்.

நீ மட்டும் தண்ணிலே போடு, உன் தலையைக் கிள்ளித் தண்ணிலே போடப் போகிறேன்.
போதும்! இதைத்தான் தம்பி நீ கேட்கவேணும். நாடு, இந்த நிலையில்தான் இருக்கிறது. இதற்கு வழி கண்டுபிடிக்காமல்

நாம் வாழமுடியாது. ஜுரம் அடிப்பதைப் போக்க, குளிர்ந்த நீரிலே உட்கார்ந்து உடம்பைக் குளிரச் செய்துவிட முடியாது. ஈரத்துணியை உலரவைக்க அதை எறிகிற நெருப்பிலே போட்டு எடுக்கவும் முடியாது.

இதெல்லாம் வெறும் பேச்சு! இந்த ஜின்னா, நாயக்கர் கூட்டமெல்லாம் ஜெயிலுக்கு வராது.

அப்படி எண்ணாதே தோழனே. பெரியார் எட்டு முறை ஜெயிலுக்கு போயிருக்கிறார்.

ஜின்னா விஷயம் என்ன?

அதைத்தான் சொல்ல வந்தேன். இதோ கேள், அவருடைய அருமையான அறிக்கையை, அவர்தான் 24 மணி நேரத்திலே சுயராஜ்யம் பெறமுடியும் என்று கூறியிருக்கிறார். இதோ நான் படிக்கிறேன், கவனமாகக்கேள்.

ஜனாப் ஜின்னா தெரிவித்த விவரம்.

பம்பாய், ஆக. 16-

“உடனே முஸ்லீம் லீகுடன் ஒரு முடிவைச் செய்துக்கொண்டு அதன்மூலம் நிரந்தரமாக ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்படும்படி செய்யும் பட்சத்தில் நானே இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தை நடத்துவேன், மகாத்மா காந்தியுடன், சிறை செல்வதில் நான் முதல்வனாக விருப்பேன்” என்று முஸ்லீம் லீக் தலைவரான ஜனாப் எம்.ஏ. ஜின்னா பம்பாய் காங்கிரஸ் தலைவர் ஒருவரிடம் தற்கால அரசியல் நிலைமைபற்றி விவாதித்தபோது கூறினார். உடனே சுதந்திரம் வேண்டுமென்பது முஸ்லிம் லீகின் கோரிக்கையென்றும் ஆனால் இதற்குக் காங்கிரஸ் தடையாயிருக்கிறதென்றும் ஜனாப் ஜின்னா வற்புறுத்தினார்.

இந்தியாவின் சுதந்திரத்துக்காக நடத்தப்படும் எந்தப் போராட்டமும் வெற்றிபெற வேண்டுமாயின் அதற்கு ஒற்றமை இன்றியமையாதென்றும் முஸ்லீம் லீகின் பாகிஸ்தான் கோரிக்கைக் கிணங்குவதாலேயே அந்த ஒற்றுமை ஏற்படும் என்றும் அவர் அபிப்பிராயப்படுகிறார்.

24 மணி நேரத்தில் சுதந்திரம்.

ஜனாப் ஜின்னா மேலும் தெரிவித்ததாவது:

ஒற்றுமை ஏற்பட்டவுடன், முஸ்லீம்கள் காங்கிரஸுடன் சேர்ந்து பிரிட்டிஷாரிடமிருந்து பரிபூர்ண சுயேச்சை வேண்டுமென்று கோருவார்கள். பிரிட்டன் இதை மறுக்கமுடியாது. 24 மணி நேரத்தில் நாம் சுதந்திரத்தைப் பெறுவோம். இல்லையாயின் இதர முஸ்லீம் தலைவர்களுடன் விடுதலைப் போராட்டத்தில் நான் முன்னணியில் நிற்பேன்.

பாகிஸ்தான் பிரச்னைபற்றி முடிவுசெய்ய அரசியலை அமைக்கும்போது இந்திய முஸ்லிம்களிடையே ஓட்டு எடுக்கலாமென்று ஜனாப் ஜின்னா கூறுகிறார். ஆனால் காங்கிரஸ் மேற்சொன்னவாறு தெளிவான முறையில் அறிவித்து முஸ்லிம்களின் சந்தேகத்தை நிவர்த்திக்க வேண்டும், என்று அவர் கூறியுள்ளார்.

முஸ்லீம் முதலாளிகளோ அல்லது ஹிந்து முதலாளிகளோ செல்வத்தில் செழிப்படையும்படி செய்வது என் நோக்கமல்ல. சரி, முஸ்லீம்களாயினும் சரி, பாமர மக்களின் பொருளாதார அபிவிருத்திக்காக சேவை செய்யவேண்டுமென்பதே என் திட்டமான நோக்கம். ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையின்றி இது சாத்தியமில்லை.

இப்போது என்ன சொல்கிறாய்? அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலே தோழர் ஜெகத் நாராயண் பாகிஸ்தானை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார். அதை ரத்து செய்துவிட்டு, சமரசம் உண்டாக்கி விட்டால், சுதந்திரப் போராட்டம் நடத்த நான் தயார் என்று ஜனாப் ஜின்னா கூறுகிறார். பாகிஸ்தான் அமைக்கும்போது, முஸ்லீம்களிடையே ஓட் எடுக்கலாம் என்றும் கூறுகிறார். இதைக் காங்கிரஸ் ஏற்றுக் கொண்டால், சிறைபுகவும் தயார் ஜின்னா! தோழனே! நாட்டிலே ஒற்றுமை உண்டாகவும், சுதந்திரப் போரை நாட்டு மக்கள் ஒன்றுகூடி நடத்தவும் இதைவிட அரிய சந்தர்ப்பம் இராது.

* * *

நாட்டு விடுதலையில் நாட்டங்கொண்ட காங்கிரஸ் தோழர் ஒருவருக்கும் எனக்கும் நடந்த சம்பாஷணை, நான் மேலே

தந்தது. ஜனாப் ஜின்னாவின் அறிக்கையை நான் விளக்கினேன், வாதிட்டேன், வீண் கலவரத்திலே விருப்பம் வைத்துப் பயனில்லை என்று சொன்னேன். என் நண்பரின் நினைவு பூராவும், நாட்டிலே நடைபெற்று வரும், நானாவிதமான கலவரங்களிலே ஓடிற்றே யொழிய, நான் சொன்னவற்றால் திருப்தி அடையக் கூடிய நிலையில் இல்லை. ஆனால் ஒன்று நானறிவேன். இந்த வேகம் குறைந்து, என் தோழர்கள் ஆர அமர யோசிக்கும் சமயம் வந்து கொண்டு இருக்கிறது. அதுபோது, இது போன்ற யோசனை எழப்போவது உறுதி. இல்லையேல், இந்தக் கலவரங்களினால் நாடு ஒரு களமாகும், காட்டு ராஜாக்கள் கிளம்பும் காலம் போன்றிருக்கும், கையில் வலுத்தவனின் காரியம் நடக்கும், வெள்ளையனை ஓட்டும் கிளர்ச்சி என்று எண்ணி இன்று மகிழ்வோரும், மருண்டு, தலைமீது மோதிக்கொள்ளும்படி, சொத்து சூறையாடலும், குத்து வெட்டுகளும், கொள்ளை கொடுமைகளும், நடைபெற்று அமைதி அழிந்து, போகமார்க்கம் தோன்றக் கூடுமேயன்றி, நாட்டுக்கு விமோசனம் எழாது என்பதுறுதி. நாட்டு விடுதலையில் நாட்டங்கொண்டோரின் நல்லெண்ணங்கள் இன்று சந்தேகிக்கப் படலாம். ஆனால் உண்மை ஒரு நாள் வெளிவந்தே தீரும்.

சர்தார் குல்பீர் சிங்: “சரி! தோழனே! அஹ்ரார்கள் செல்வாக்கு எந்த இடத்திலே வளர்ந்தாலும், உடனே, முஸ்லீம்கள் இந்துக் கடைகளைப் பகீஷ்கரிக்கிறார்கள்? புதிய முஸ்லீம் கடைகள் திறக்கப்படுகின்றனவே? இது என்ன?

அ ப் ஜா ல் ஹக்: இது சகஜந்தானே தோழனே! ஒரு சமுதாயத்துக்கு அறிவூட்டினால் அது, தன் நிலைமையை உணர ஆரம்பிக்கிறது, தனக்கிருக்கும் சங்கடம், சஞ்சலம் ஆகியவற்றுக்குக் காரணம் என்ன என்று யோசிக்கிறது. இவ்விதம் யோசிக்கும்படி அஹ்ரார் இயக்கம் தூண்டுகிறது. இவ்விதம் முஸ்லீம்கள் யோசிக்கும்போது, தங்களுக் கிருக்கும் வேதனைக்குக் காரணம், வெள்ளைக்காரனை விட இந்துக் களாலேயே அதிகம் என்று ஏற்படுகிறது, ஆகவே முஸ்லீம் சமுதாயம் விழிப்படைகிறது. தன்னைத் தீண்டாதவனாகப் பாவிக்கும் இந்துவின் ஆதிக்கத்தை அறுத்துவிட முனைகிறது. இது சகஜந்தானே.

சர்தார் குல்பீர் சிங்: உண்மைதான்! இந்து சமுதாயம் அப்படித்தான் செய்கிறது. என் செய்வது? என்று தீருமோ இந்தக்

குறைபாடுகள்?

இந்தச் சம்பாஷணை ராவல்பிண்டி சிறைச்சாலையிலே இரு வாலிபருக்குள் நடந்தது. ஒருவர் முஸ்லீம், மற்றொருவர் இந்து. சர்தார் குல்பீர்சிங் என்ற இந்து சாமானியமானவரல்லர். சர்க்கார் தாசரல்லர், பகத்சிங்கின் சகோதரர்! அப்ஜால் ஹக் என்ற முஸ்லீமும் காங்கிரஸ் வைரியல்ல அஹ்ரர் இயக்கத் தலைவர். காங்கிரசை ஆதரிப்பவர். இந்திய பாதுகாப்புச் சட்டத்தின்படி கைது செய்யப்பட்டவர். சிறையிலே, நாட்டின் பிரச்னைகளையே பற்றி சிந்தித்தவர், பாகிஸ்தான் கோரிக்கை பற்றிப் பன்னிப்பன்னிப் பேசியும் விவாதித்தும் விளக்கம் பெற்றவர். அவர் இந்துக்கள் முஸ்லீம்களைத் தீண்டாதவர்போல் நடத்துவதை முஸ்லீம் சமுதாயம் வெறுக்கிறது என்ற விஷயத்தை, பகத்சிங்கின் சகோதரரிடம் ராவல்பிண்டி சிறையிலே பேசினார். பாகிஸ்தானமும் தீண்டாமையும் என்ற ஓர் புத்தகத்தை 1940ஆம் ஆண்டு ராவல்பிண்டி சிறையிலேயே எழுதினார். அதிலே இருக்கிறது நான் மேலே தீட்டிய உரையாடல். அதுமட்டுமல்ல இந்து முஸ்லீம் இனவேற்றுமை பற்றி பல அரிய, அனுபவபூர்வமான உதாரணங்களும் உள்ளன.

பாகிஸ்தான் கேட்கும் மனப்பான்மைக்குக் காரணம் என்ன வென்று கேட்போர், இந்து, முஸ்லீம் இனத்தின் பேதமும், இரு இனத்திற்கு இருந்துவந்த, இருந்துவரும், இருக்கக்கூடிய தொடர்பு எத்தன்மையது என்பதையும் தெரிந்துகொள்ள மறுக்கிறார்கள். அவர்கள் நாட்டிலே உள்ள சமுதாயத்தை மறந்து ஏட்டிலே உள்ள சித்திரத்தை மட்டுமே கண்டு, ஏங்கி, எட்டா பழத்திற்குக் கொட்டாவி விடுகிறார்கள். அவர்களுக்கு ஜனாப் ஜின்னா, விளக்கம் ஏற்பட, சென்ற வாரம், ஒரு அமெரிக்கப் பத்திரிகை நிருபரிடம் பேசுகையில், முஸ்லீம், இந்து, இனவேறுபாடு பற்றிக் கூறியிருக் கிறார். ராவல்பிண்டி சிறையிலே, பாதுகாப்புச் சட்டப்படி கைதாகி யிருந்த அஹ்ரர் அப்ஜால் ஹக் கூறினதற்கும் காயிதே அஃலம் கூறுவதற்கும் மாறுபாடு இல்லை. முஸ்லீம்களை இந்துக்கள் தீண்டாத ஜாதி போலவே கருதுகிறார்கள் என்பதை ஜனாப் ஜின்னா அமெரிக்க நிருபரிடம் தெளிவுபடக் கூறினார் “என் கையால் தொடப்பட்ட ஜலத்தை இந்து சாப்பிடமாட்டார். அவருக்கு அது ஆச்சாரக் குறைவு” என்று ஜனாப் ஜின்னா கூறினார். இதைக் கூறுகையில், அவருடைய மனம் எவ்வளவு வேதனையுடன் இருந் திருக்கும். யாவரும் சமம் என்ற மெய்ஞ்ஞான போதகராம் நபிகள் நாயகத்தைப்பின் பற்றும் ஜனாப் ஜின்னா, எங்ஙனம் இத்தகைய

பேதத்தைக்கண்டு சகிக்கமுடியும்! அறிவுள்ள எவர்தான் இந்த அக்ரமத்தைப் பொறுத்துக் கொள்ள முடியும்? ஆனால், அதோ ரயிலைக் கவிழ்த்தும் தபாலாபீசைத் தீக்கிரையாக்கியும், தண்ட வாளத்தையும் அகற்றியும், சுயராஜ்யம் தேடும் தோழர்கள், இதனை உணர மறுக்கிறார்கள். தம்முடன் சேர மறுப்பவரை, சர்க்கார் கூலிகள் என்றும், சுயராஜ்யத்தை வேண்டாதவர்கள் என்றும் தூற்றுகின்றனர்.

சுயராஜ்யம் வேண்டுமா? என்று என்னைக் கேட்டால், "ஆம்! நிச்சயம் வேண்டும். விரைவில் வேண்டும்" என்றுதான் கூறுவேன், உரிமை வேண்டா மென்று கூறிடும் உலுத்தன் எவன் இருக்கமுடியும்? என்னுடைய இரத்தத்தில், வீரமும் விறுவிறுப்பும், ஓடுகிறதோ, எவனுடைய இருதயத்திலே சுதந்திர எண்ணம் கொந்தளிக்கிறதோ, அவன் சுதந்திரத்தை வேண்டாமென்றுரைக்க மாட்டான். நாமார்க்குங் குடியல்லோம் என்று மார்தட்டியே நிற்பான். நமது நாட்டை மற்றொருவன் ஆள்வதா என்று சீறுவான். என் உடலம், பருந்துக்கும் நரிக்கும் இறையாகட்டும், கவலையில்லை என்றே கர்ஜிப்பான். இந்த எண்ணம் இயற்கை! இது அடக்க, அழிக்க, மறைக்க மறுக்க, மறக்க முடியாது. நம்மை ஆள்வோராகிய வெள்ளையரும் இதனை மறுக்கத் துணியார். மறுக்கவில்லை. அவர்கள் ஒரு காலத்தில் ரோம் நாட்டு ராணுவ ஆட்சியின் கீழ் இருந்தனர். அவர்கள் நாட்டு ராணி பொப்பிஷியாவை, மரத்திலே கட்டிவைத்து அடித்தார்கள் என்று கதை உண்டு. அவர்கள் தங்கள் சுதந்திரத்துக்காகப் பட்ட கஷ்டம் கொஞ்சமல்ல. அவர்கள் நாட்டு சரிதம் நானறியாததன்று. அதை வெள்ளையர்கள், நாம் படித்துணரவும் செய்துள்ளனர். எனவே சுதந்திரத்தை நான் மறவேன, நீதிக்கட்சி, குடியேற்ற நாட்டு அந்துஸ்து போதும் என்ற கொள்கையை விட்டு, நாட்டுக்குப் பூரண சுயேச்சை தேவை என்ற தீர்மானத்தை ஏற்று, பெரியாரின் தலைமையின் கீழ் நின்று பொது உடைமை திட்டமோ என்று மூர்த்திகளும் சாஸ்திரிகளும் கூறி, சர்க்காரிடம் சாடிசொல்லவேண்டிய அளவு தீவிரமுள்ள வேலைத் திட்டத்தையும் கட்சி ஏற்றுக்கொண்டபிறகு, அக்கட்சியிலே, இருக்கும், எவரும் சுதந்திரத்தை மறுப்பவராக இருக்கமுடியுமா? சுதந்திரத்தையே ஜீவநாடியாகக் கொண்டுள்ள இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவிய எட்டு கோடிக்கு மேற்பட்ட நமது முஸ்லீம் தோழகள் சுதந்திரத்தை மறுப்பவர்களா? காங்கிரசின் வயப்பட்ட வர்கள். நம்மையும், இஸ்லாமியரையும், சுதந்திர எதிரிகள் என்று கூறுவது துளியும் பொருந்தாது. உரிமைப்போர்

நடத்த இந்த இரு இனமும் என்றும் தயார்! இன்றும் சரியே! நான் கூறுகிறேன் காங்கிரஸ் தோழர்களுக்கு, உரிமைச் சாசனம் தயாரித்துக் கொள்வோம், பிறகு போர்த்திட்டம் அமைப்போம், போரில் இறங்குவோம். சம்மதமா? என்று கேட்கிறேன். இதோ நான் தீட்டும் சாசனம் காங்கிரஸ் தோழர்கள் கூர்ந்து நோக்கவேண்டுகிறேன்.

1. வெள்ளையர் ஆட்சி நீங்கி நாட்டு ஆட்சி நம்மிடம் ஒப்படைக்கப்படும்.

2. இந்து, முஸ்லீம் இனங்கள், மதம், கலை, நாகரிகம், இலட்சியம் முதலிய அடிப்படையான கருத்துகளிலேயே மாறுபட்டும், முரண்பட்டும், ஒன்றின் மீதொன்று மோதக் கூடியதாகவும், இருப்பதால், ஒரே குடும்பமாக வாழ, கூட்டாக ஆள இயலாது ஆகையால், அவரவர்கள் பெருவாரியாக உள்ள இடங்களிலே, அவரவரின் சுயேச்சையான ஆட்சி ஏற்படுத்திக் கொள்ள உரிமை வேண்டும்.

3. அரிய, திராவிட, கலை நாகரிக இலட்சிய வேறுபாடு, விரோதத்தையும் துவேஷத்தையும் மூட்டுவதாக இருப்பதால், திராவிடர் பெருவாரியாக உள்ள நாட்டிலே ஆரிய ஆதிக்கம் ஏற்பட முடியாதபடி, அங்கு திராவிட ஆட்சி அமைத்துக் கொள்ளத் தனி சுதந்திர அரசுரிமை அமைக்கப்பட வேண்டும்.

4. நாட்டுப் பழங்குடி மக்களைத் தீண்டாதார் என்று கூறி உரிமையை மறுக்கும் கொடுமை களையப்பட்டு, பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை, பேதம் காட்டப்படமாட்டாது என்று சட்டம் ஏற்படுத்திவிட வேண்டும்.

5. தொழிலாளர், முதலாளி பிணக்கு ஏற்படவும், அதைத் தீர்க்க முறைகள் பல கையாளப்படுவதுமான தொல்லைகள் களையப்பட, பொருளாதார நீதி ஏற்பட, சர்க்காரே, தொழிற்

சாலைகள், பெருவாரியான பண நடமாட்டமுள்ள உற்பத்தி ஸ்தாபனங்கள் ஆகியவற்றை ஏற்று நடத்திவரவேண்டும்.

6. சமுதாய சமத்துவம், பொருளாதார நீதி ஆகியவற்றைக் குலைக்கக்கூடிய கருத்தைக்கொண்ட மதம், தடுக்கப்பட

வேண்டும்.

இவைகள் நான் விரும்பும் உரிமைகள், இதோ கேண்மின் ஜனாப் ஜின்னாகூவதை “முஸ்லீம் முதலாளிகளோ அல்லது இந்து முதலாளிகளோ செல்வத்தில் செழிப்பதைபோல் செய்வது என் நோக்கமன்று. இந்துக்களாயினும் சரி, முஸ்லீம் களாயினும் சரி, பாமர மக்களின் பொருளாதார அபிவிருத்திக்காகச் சேவை செய்ய வேண்டுமென்பதே என் திட்டமான நோக்கம்.”

இந்த வாசகத்திலே உள்ள உணர்ச்சியை மறக்க முடியுமா?

சுதந்திரப்போர் நடத்த, சமதர்மத்தை நிருவ, ஜனாப் ஜின்னா தயார்!

போருக்குப்பிறகு பிரிட்டன் சுயராஜ்யம் தராமல் ஏமாற்றும்போது, அங்ஙனம் நடக்குமாயின், நமக்கு பிரிட்டனை எதிர்த்தே சுயராஜ்யம்பெறும் சக்தி போர் முடிந்ததும் ஏற்பட்டு விடும்!

நேசநாடுகள் அதுசமயம் நம்மை ஆதரிக்கும். சுயராஜ்யத்தை எந்தக் கட்சியும் வேண்டாமென்று கூறவில்லை. எல்லா கட்சிகளும் சுயராஜ்யம் கோருகின்றன. எந்தக் கட்சிக்கும் வெள்ளையரிடம் காதல் கிடையாது. எல்லா கட்சிகளுக்குள்ளும் ஒற்றுமை ஏற்படவேண்டும்.

அதற்கு இன உரிமைகள் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும்.

இன உரிமைதான் பாகிஸ்தான் திராவிடஸ்தான் கோரிக்கைகள் போர் முடிந்து ஏற்படும் புதிய அரசியலில் இவை இருக்கலாம் என்று காங்கிரஸ் கூறினால், இன்று சமரசம் ஏற்பட்டுவிடும்.

சமரசம் ஏற்பட்டதும், வெள்ளையரை, நாடு நிமிர்ந்து நின்று என்ன சொல்லுகிறாய் என்று கேட்கும்.

உங்களுக்குள் ஒற்றுமை ஏற்பட்ட பிறகு, நான் சுயராஜ்யத்தை மறுக்கமுடியாது. சுயராஜ்யத்தைத் தருகிறேன். நான் போகட்டுமா? என்று வெள்ளையர் கேட்பர். 150 ஆண்டுகளாக எங்களை நிராயுதபாணிகளாக வைத்துக்கொண்டிருந்தாய், எங்கள் நாட்டைப் பாதுகாப்பதாகக் கூறினாய், எங்கள் நாட்டு

வரிப்பணம் கோடி கோடியாக ராணுவத்திற்காகத் தந்தோம் இத்தனை ஆண்டுகளாக. ஆகவே எதிரியைத் தோற்கடிக்கும் பொறுப்பு, கடமை, உன்னுடையது. அதை வெற்றிகரமாகச் செய்துவிட்டுப் போ, என்று நாடு கூறும்.

நேசநாடுகளின் பக்கம் நம்நாடு! நேச நாடுகள் எவை! நமது இருதயத்தைக் கொள்ளை கொண்ட, இனத்தில் இன்பம் உண்டு, எவருக்கும் உண்டு, என்ற சித்தாந்தத்தின் சிங்காரச் சோலை, ஜெகம் புகழும் வீரர் கோட்டம், பாட்டாளியின் பரிபாலன பூமி, வேலை இல்லை, கூலி இல்லை, என்ற பேச்சு எழாத பெருமித ஆனந்தபுரி, சோபிதமிக்க சோவியத் ரஷியா சிதையா வீரத்தின் சிகரமாக விளங்கும் சீனா, இவைகள் உள்ளன!

இதைத்தெரிந்து, தெளிவுகொள்ள வேண்டும் தோழர்கள்.

வாசலிலே உள்ள பூனையை விரட்ப்போகிறோம்! புறக்கடைக் கதவு திறந்திருக்கிறது. அங்கோர் ஓநாய், இரத்த வெறியுடன் நிற்கிறது! அது உள்ளே நுழையக்கூடாதே!

எதிரியின் எக்காளம், வங்கக்கடல் அலையுடன் கலந்தடிக்கிறதே, இந்த வேளையிலா, நாட்டிலே இந்த வேதனைமிகும் விளைவுகள்?

23.8.1942

1942-ல் மாஸ்கோ!

“மறுபடியும், 1947ல் மாஸ்கோ சென்று வர வேண்டுமென பேராவாக் கொண்டிருக் கிறேன்” தோழர் சக்லத் வாலா, 1934 ஆகஸ்ட் 12ந் தேதியிலே கூறினார். ஒருமுறை மாஸ்கோவைக் கண்டேன். மீண்டும் அதைக் காண அவாக் கொள்கிறேன். மாநிலம் முழுவதுமே மாஸ்கோ மணம் பரவச் செய்ய வேண்டும் என்ற மனம் எழுச்சி பெறுவதும் மதத்தை அறை கூவிய நகரமல்லவா மாஸ்கோ. உண்ணும் உணவுக்கும், உடுக்கும் உடைக்கும், உடலைக் கசக்கிப் பிழிந்து சாறாக்கி பிறருக்கு பனி நீர் தரும் இன்ப வெள்ளத்தை, வாழ்க்கையிலே வறியராய் ஓட்டிய வயிறும், உலர்ந்த உதடும், காய்ந்த தலையும் பஞ்சடைந்த கண்களும், குழி விழுந்த கன்னங்களும் கொண்டோராய் உள்ள பாட்டாளி மக்களை வாழ்க்கையின் கூட்டாக்கி கோழை களை வீரர்களாக மாற்றி, கொடுங்கோலுக்கு உட்படுத்தப்பட்டு குலை நடுங்கிக் கொண்டிருந் தோர் தம் பயம் போக்கி உரிமைக்குப் போராடும் நெஞ்சர்களாக, புனல் சொரியும் கண்களில் கனல் எழச் செய்து கூப்பிய கரங்களை மடக்கி, மாhர் தட்டச் செய்து, ஆமை போல் அஞ்சியவர் ஆண்மையாளராக்கி, சாவுகோரி நின்றவர்களை ஜாரின் எடுபிடி ஆடகளாக இருந்த விரட்டிடும் வீரர்களாக்கி, அன்றெழுதியதை முடியும் கான்பதனை உலகுக்கு விளக்கி, வீரம் கொள்ள வெற்றி வெண்பா பாடி, விருதுகள் வாங்கு வதன்றோ மாஸ்கோ! ஜாரின் படைகள்... நடமாடும் ஒருபுறத்திலே குட்டிக் குபேரர் கூத்தாடுவர் மாளிகையிலே... சாலை ஓரத்தில கிடப்பர் பஞ்சைகள். தூக்கு மேடையிலே உருவங்கள்.. குடி ஒரு புறம், மடி மற்றும் மடமை ததும்பும், எங்கும் இடி, எவர்க்கும் தடியடி மாஸ்கோ மக்களை கசக்கியபடி இருந்தது, குபேரர்களின் குச்சு வீடு, ஜாரின் ஆணவக் கூடம், ரஸ்புடீனின் இல்லம் பாதிரிகளின் பாதகச் சாலை, ராணுவத்தினரின் விளையாட்டு வெளியாக இருந்தது மாஸ்கோ. அதனை மாபெரும் புரட்சிக் களமாக்கி, தனி உடமையை தகர்த்த தலம் மாஸ்கோவை மூன்றாவது முறையாக, மீண்டும் காண வேண்டும் என்கிறார், சக்லத் வாலா.

``மாஸ்கோ நகரமானது ஐரோப்பா கண்டத் திற்கே தலைநகராக விளங்காவிட்டாலும், மற்ற நகரங்கள் அதைப் பின்பற்றி நடந்துகொள்ளக் கூடிய ஒரு வழிகாட்டியாக எல்லோராலும் ஒப்புக் கொள்ளத் தக்க நிலையை அடையும் என்று நான்

உறுதியாக நம்புகிறேன்.

ஒற்றுமை, வலிமை முன்னேற்றம் ஆகியவைகளைக் கற்றுக் கொள்வதற்கு எல்லா தேசத்து மக்களும், மாஸ்கோ நகருக்குச் செல்ல வேண்டியதான யாத்திரை ஸ்தலமாகவும் அது சீக்கிரத்தில் விளங்கும்'' என்று சக்லத்வாலா கூறினார்.

அந்தத் தலத்துக்குச் சென்ற வாரம், பிரிட்டிஷ் முதலமைச்சர் மிஸ்டர் சர்ச்சில் சென்றிருந்தார், ஸ்டாலினைக் கண்டார், கலந்து பேசினார், உயர் தர அதிகாரிகள் உடனிருந்தனர். நம் உபகண்டத்தின் படைத் தலைவராக உள்ள ஜெனரல் வேவல் உடனிருந்தார்.

மாஸ்கோவில், சர்ச்சில்! சோவியத் தலைவ ருடன் பிரிட்டிஷ் முதலமைச்சர்! எவ்வளவு விந்தையான மாறுதல்! எத்தகைய இன்பகரமான மாறுதல்! நெஞ்சை அள்ளும் நிகழ்ச்சி!

மாஸ்கோ மக்கள் சென்ற ஆண்டு மனம் பதறினார்கள், அவர்களின் வாயிலிலே வந்து நின்று நாஜிகள் கொக்கரித்தனர், அரசாங்க நிலையங்கள் கூட வேறு இடத்துக்கு மாற்றப்பட்டு விட்டன. ஒரு கையிலோ சுழல் துப்பாக்கி மற்றோர் கரத்திலே சுவஸ்திகக் கொடி தாங்கி, வந்தேன், கண்டேன், வென்றேன் என்று பாடலுடன், நாஜிகள் வாயலிலே நின்றனர். மாஸ்கோ. மக்கள், தங்கள் மார்புகளையே மதில்களாகக் கொண்டு, தெருக்களையே களங்களாக்கி, வீடுகளைக் கோட்டைகளாக்கி, ``தயார்'' என்றனர். மாஸ்கோ நகருக்கவர இருந்த ஆபத்து, பறந்தது! மாஸ்கோ, மீண்டும் உலகின் வீரமணியாக விளங்கலாயிற்று. அத்தகைய மாஸ்கோவிலே, பிரிட்டிஷ் முதலமைச்சர் சென்று தங்கியதும், கலந்துரையாடியதும், சரிதச் சம்பவங்களிலே முக்கியம் வாய்ந்ததாகும்! ஸ்டாலினும், சர்ச்சிலும், ஒருவர் பக்கத்திலொரு வர் அமர்ந்தபோது, கண்ட மக்களின் மனதிலே என்னென்ன கருத்துக்கள் தோன்றியிருக்கும். கம்யூனிஸ்ட் ஸ்டாலின் தந்த தீக்குச்சி கொண்டு கன்சர்வெடிவ் கட்சித் தலைவர்

தமது சுருட்டைப் பற்ற வைத்திருப்பார், ரஷ்ய நாட்டு மக்களின் பிரியமான பானமான `வோட்கா'வை, ஸ்டாலின் தர சர்ச்சில் ருசி பார்த்திருப்பார், இவையல்ல, நாம் வியந்திடுபவை. புரட்சியின் உருவம் ஸ்டாலின்! சர்ச்சிலோ, சட்ட திட்டம், கட்டுப்பாடு, விவாத விளக்கம் ஆகிய முறைகளைக் கொண்ட இறையின் பிரதிநிதி! தீப்பொறி ஒன்று! தீட்டுகோல் மற்றொன்று! இருவரும் வீரர்! இருவரும் இடுக்கணிலே சிக்கியுள்ள இருண்ட உலகின் விளக்குகள், வழிகாட்டிகள். இருவரின் எண்ண மும், பெர்லினிலே கிளம்பியுள்ள பேயனை வீழ்த்த வேண்டும் என்பதாகும். தணலிலே வெந்த தங்கம் இலண்டன் மண்ணை இரத்தக் குழம் பாக்கியும், மருட்சியடையாத மனப்பான்மையின் சித்திரம் மாஸ்கோ, மாவீரர் இருவரும் கூடிப் பேசியது, விரைவினில், `இரண்டாம் போர்முனை இதோ' என்று பீரங்கி வேட்டு மூலம், வெடிகுண்டு வீறிடுவதன் மூலம், வீரர்கள் முழுக்கம் செய்வதன் மூலம் உலகினோரின் செவிகளிலே கேட்கும் நிலையை உண்டாக்க வேண்டும். உலகு அதைத்தான எதிர்பார்க்கிறது.

சோவியத் நாடு சொல்லொணாக் கஷ்டங் களை அனுபவித்தது. சோர்வின்றி, துணையின்றி, செயலாற்றி வருகின்றது. மாஸ்கோ; வெனின் கிராட் வயர்னேஷ், காலினின் முனைகளிலே, சோவிய படைகள் வெற்றிகள் கண்டன என்பது உண்மையே!

மே மாதம் 15ந் தேதியிலிருந்து ஆகஸ்ட் 15-ந் தேதி வரையிலே, சோவியத் களத்திலே, 77,000 ஜெர்மன் வீரர்கள் கைது செய்யப்பட்டனர். 480,000 ஜெர்மானியர் வெட்டி வீழ்த்தப் பட்டனர். 3390 ஜெர்மன் டாங்கிகள் நொறுக்கப்பட்டன, 4000 பீரங்கிகள் பாழ்பட்டன; 4000 விமானங்கள் வீழ்த்தப்பட்டன.

இத்தகைய பிரம்மாண்டமான பலி கொடுத்துத் தான் ஜெர்மனி, ரஷ்யாவிலே சில பிரதேசங்களைப் பிடித்தது. ஆனால், ரஷியப் படைபலம் குன்றவில்லை. மார்ஷல் வரஷிலாவ், புதுப்புதுப் படைகளைத் திரட்டுகிறார், பயிற்சி தருகிறார், பாய்வதற்கு அவை தயாராக உள்ளன.

யுக்ரேனையிழந்து ரஸ்டான், செபாஸ்ட பூலையிழந்து

காகச்சை எதிரி கண்ட துண்ட மாக்குவதைத் காணும் கஷ்டத்தை அனுபவிக் கிறது. கலங்கவில்லை. கல்லும் கரையும் அந்த மக்கள் படும் பாடு வெல்லும் வகையறிவர் அம்மக்கள். வீர நெப்போலியனை மிரட்டிய காதை அறிவர். அம்மக்கள். வீழ்வோம், அதுவே கதியாயின் ஆனால் பணியோம் என்பதை அவர் தம் பரணி. ஆம், ஆனால் இன்னும் எத்தனை நாட்களுக்குச் சோவியத் நாடு, ஜெர்மனி, பின்லந்து, ருமேனியா, பல்கேரியா, இத்தாலி, பணிந்த பிரான்சு, சாகசம் செய்யும் ஸ்பெயின் ஆகிய நாட்டுப் பட்டாளங்கள், பிரான்சிலே, ஜெர்மனியிலே, போலந்து பெல்ஜியம், நார்வே, டென்மார்க் ஆகிய நாடுகளிலே உள்ள தொழிற் சாலைகள் செய்து குவிக்கும் ஆயுதங்களுடன் தாக்குவதைத் தாங்குவது! வீரத்தை உலகுக்கு மெய்ப்பித்துக் காட்டிய மாஸ்கோவை கேரிலே கண்ட சர்ச்சில், ஸ்டாலினுடன் நேரடியாகப்ப் பேசிய சர்ச்சில், ரஷியாவின் நிலைமையை நன்கு தெரிந்து கொண்டிருப்பார் என்று நாம் நிச்சயமாக நம்புகிறோம். எனவே, விரைவில் இரண்டாம் போர்முனையைத் துவக்குவார்கள் என்று எதிர் பார்க்கிறோம்.

வீரர் கோட்டமாக உள்ள மாஸ்கோவை 1947ல் காணவிரும்பிய சக்லதத்வாலா காணமுடி யாதபடி, மறைந்துவிட்டார். இரண்டாம் போர் முனை துவக்கி, ஜெர்மனியைத் தாக்கி, சோவியத் நாட்டின் நெருக்கடியைப் போக்கி, நாஜி ஆதிக்கத்தை ஐரோப்பாவிலிருந்து நீக்கி, நேச நாடுகளின் வெற்றிக்கொடி பறக்க, பிரிட்டன், முனையுமேல், சக்லத்வாலா காண விரும்பி, ஆனால் காணமற் போன, மாஸ்கோவை 1947ல், உலகின் பல பாகங்களிலிருந்தும், பல அறிவாளி கள் கண்டு, புத்தறிவு கொண்டு, சமதர்ம உளம் பெற்று, உலகைப் புன்னகைப் பூந்தோட்டமாக்க முடியும்! முதலாளித் தத்வம் எனும் கொந்தளிக்கும் கடலிலே, சிக்கித் தவிக்கும் `அரசு' எனும் மரக் கலத்தை, அமைதி, ஆனந்தம் எனும் துறைமுகத்திலே வந்து தங்குமாறு அழைத்த கரங்களை விளக்கு மாஸ்கோ! அந்த விளக்கு சோவியத் மக்களின் இரத்தத்தை எண்ணெய்யாக ஊற்றி அவர்களின் நரம்பு களைத் திரியாக அமைத்து, இலட்சியம் எனும் தீக்குச்சி கொண்டு, புரட்சி வீரர், புத்துலகச் சிற்பி, பாமரரின் ரட்சகர், பாட்டாளி மக்களின் தந்தை, வாலிப

உள்ளத்தின் கர்த்தா, லெனின், ஏற்றி வைத்தார்!

மாஸ்கோ புதுமையை வரவேற்று உபசரிக் கும் சமதர்மச் சித்திரம்! அதனை மண் மேடாக்கி, அதன் மீதோர் மட அரசு அமைக்கத் துடிக்கும் மதிகேடரை மண் கவ்விடச் செய்ய, மாவீரர் அனைவரும், தோள் தட்டி, கச்சையை வரிந்து கட்டி நிற்கின்றனர். இரண்டாம் போர் முனை யிலே இறுதிப் போர் நடத்திடத் தீர்மானித் துள்ளனர். திக்கெட்டும் திகைக்கிறது இன்று! தீரமான போரிடத் துடிக்கின்றது. இதனை உணர்ந்து பிரிட்டன், இரண்டாம் போர் முனையை உடனே துவக்க வேண்டும், சர்ச்சிலின் மாஸ்கோ விஜயம், பலன் இரண்டாம் போர்முனையாகத் தான் இருக்க வேண்டும்.

- திராவிட நாடு - 23-8-1942

குளிர்ந்த காற்று!

வசந்தம் வீழ்கிறது, மாரி மலர்கிறது! இடியும் மின்னலும், மழையும் புயலும்தரும் மாரிக்காலத்தை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். காதலை மாதரைப் புகழ்ந்துரைக்கும் கவிவாணரின் கருத்துக் கிசைந்த வசந்தகாலத்தைப் 'போ' என்கிறோம். ஈதென்ன புதுமை என்று கேட்பர். புதுமையன்று. வசந்தம், வாட்டத்தைத் தரும் செய்திகளையே நமக்குத்தந்தது, மாரி, மனமகிழ்ச்சி பிறக்கும் செய்திகளைக் கூறிற்று. கடந்த வசந்தத்தின்போது வஞ்சக நாஜிகள் மாஸ்கோவரை பாய்ந்தனர், மருண்டோம், மனங்குழம்பினோம். மாரி பிறந்தது, இடியோடு இடியாகக் கிளம்பிற்று. சோவியத் படை ஒலி, புயல்போல் புறப்பட்டது செஞ்சேனை, மழைகண்டு மிரண்டோடும் மாதுபோல் ஓடிற்று நாஜிக்கும்பல், மாரிக்காலம் மனதிற்குகந்ததான 'ரஷிய வெற்றிகளை'த்தரக் கண்டோம், களித்தோம். இந்த வசந்தமோ, செபாஸ்டபூல், ரஸ்டாவ் வீழ்ச்சி, காகசசுக்குள் நுழைவு, மெய்காப் அழிவு என்ற செய்திகளையும், டோப்ரூக் வீழ்ச்சியையும், மலாய், பர்மா எதிரிவசமானதையும், சீனாவில் சித்திரவதையையும், செய்திகளாகத் தந்தன, சோகித்தோம். எனவே வசந்தமே போ! மாரியே வா! என்றழைக்கிறோம். மாரிவரும் பின்னே, மனமகிழ்ச்சி வரும் முன்னே என்ற புதுமொழி போன்று ரஷியாவிலிருந்து செய்தி வெளிவந்திருக்கிறது. மத்தியப் போர்முனையிலே, கடந்த 15 நாட்களாக நடந்துவந்த கடும் போரிலே ரஷியர்கள் முக்கியமானதோர் வெற்றியைப் பெற்றனராம். நாஜிப்படைகள் பல நாசமாயினவாம். 32 மைல் பின்வாங்கி ஓடினவாம், பிடித்த பிரதேசத்தை இழந்தனவாம்! 610 இடங்களுக்குமேல் நாஜிகளிடமிருந்து விடுவிக்கப்பட்டனவாம்! ரிஜாவ் கோட்டையை நோக்கி, சோவியத் படைகள் பாய்கின்றன. ரிஜாவுக்குக் கிழக்கே பத்தாவது மைலில் உள்ள ஜுப்ஸ்டாவ் நகரத்தை ரஷியப்படை பிடித்துவிட்டது.

ஸ்டாலின் கிராட் நாஜிகளின் தீவிரமான தாக்குதலில் இருக்கிறதென்பது உண்மையே! ஜெர்மன் டாங்கிப்படை டான் நதியைக் கடந்து மிக மூர்க்கமாகப் போரை நடத்துகிறது. ஸ்டாலின் கிராட், ரஷிய ராணுவ ஜீவநாடி. பெரிய டாங்கித் தொழிற்சாலை உள்ள இடம். ரஷியாவின் முக்கியமான பாதைக்குக் காவற்கூடம். பெயர், பொருளழகு வாய்ந்தது. அதற்கு

ஆபத்து அதிகரிக்கிறது என்பது மனதை மருட்டத்தான் செய்கிறது. பல்லாயிரக்கணக்கான படையினர் மட்டுமல்ல, ஸ்டாலின் கிராடிலே உள்ள தொழிலாளர்கள் பல ஆயிரவர், சமரிடத் தயாராகி விட்டனர். ஸ்டாலின் கிராடுக்கு அருகாமையிலுள்ள குக்கிராமங்கள் காலிசெய்யப்பட்டு அங்கெல்லாம் வீதிக்கு வீதி களமாக்கிப் போரிட ரஷியர் உறுதிகொண்டுள்ளனர். இதைப்போலவே வட காகசசில் கோர்ஜினி எண்ணெ பிரதேசத்திலே மோப்பம் வைத்து நாஜிகள் பாய்கின்றனர். அங்கு, குன்றுகளிலே, மலைச்சரிவுகளிலே வழிநெடுக வீரர்கள் உள்ளனர். மண்ணில் குருதி கொட்டி மாற்றானைத் தடுக்க காசாக் வீரர்கள் குதிரை மீதேறிக் காவல் புரிகின்றனர். கடந்த ஜெர்மன் சண்டையிலே கோரமான கட்டம், வேர்டேன் போர் என்பர். அதற்குச் சமமாகக் கூறப்படுகிறது ஸ்டாலின் கிராடுக்காக நடக்கும் போர். இங்குள்ள நிலைமைகண்டு நொந்திடும் நமக்குக் குளிர்ச்சிதரும் செய்தியை மத்தியப் போர்முனை தந்திருக்கிறது. இராணுவ நிபுணர்கள், இதனை, மாரிக்கால ஆரம்பத்தைக் கருதி ரஷியர் நடத்தும் எதிர்த் தாக்குதலின் முதல் கட்டம் என்று கூறுகின்றனர். இதைத் தொடர்ந்து மாரி முழுவதும், வெற்றிமேல் வெற்றி பெறும் போரை ரஷியப் படைகள் நடத்தும் என்று தெரிவிக்கின்றனர். செப்டம்பர் பிறந்தது. செஞ்சேனையின் வெற்றியும் பிறந்தது என்ற செய்தியைக் கேட்க உலகப் பாட்டாளி மக்கள் துடிக்கின்றனர். மாரிக்காலம் இந்த மகிழ்ச்சியைப் பெய்யவேண்டும்! சீனாவிலிருந்தும், சிந்தைக்கினிய செய்திகள் கிடைக்கின்றன. வீரச்சியாங்கின் படைகள் நோக்கியாங் மாகாணத்திலிருந்து ஜப்பானியரை விரட்டி அடிக்கின்றனர். அமெரிக்கக் கடற்படை சாலமன் தீவுகளில் உள்ள ஜப்பானிய தளங்களைத் தாக்கிப்பிடித்து எதிர்த்த ஜப்பானிய கப்பல்களை மூழ்கடித்தன. பிரான்சுக் கரையோரத்திலே பிரிட்டிஷ் படை டாங்கிகளுடன் இறங்கி ஜெர்மன் படைகளின் நாடியைப் பிடித்துப் பார்த்தன. பிரிட்டிஷ் அமெரிக்க விமானப் படையோ, விடாது ஜெர்மனியைத் தாக்குகின்றன. ஆப்பிரிக்காவிலோ ரோமலின் படைகள் ஆகின்லெக் அணைக்கண்டு அடங்கிவிட்டன. பெர்லின்மீது வட்டமிட்டன ரஷிய விமானங்கள் கடந்த புதனன்று, ஜெர்மன் ரேடியோவே இதைக் கூறிவிட்டது. மாரி பிறக்கும் முன்னம் நமது மனதுக்கு ரம்மியமான இந்தக் குளிர்ந்த காற்று வீசிடக் காண்கிறோம். மாரியே வருக! மாற்றாரை மருட்டுக! நேசநாடுகளுக்கு வெற்றி பொழிக!!

30.8.1942

ஐந்து அரசுகள்

பெரியார்: ‘திராவிட நாடு’ தனி அரசாக அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைபற்றி தங்கள் கருத்து என்ன?

கோதவரிமிஸ்ரா: நியாயமான கோரிக்கையே! அந்தந்த இனம் தங்களின் தனி ஆட்சி கோருவதிலே தவறு என்ன இருக்கமுடியும்?

பெரியோர்: காங்கிரஸ் தலைவர்கள் மறுப்பதன் நோக்கம் என்ன?

மிஸ்ரா: அவர்கள் மறுக்காதது எது? எங்கள் கதையைக் கேட்டால், என்ன சொல்வீரோ?

பெரியார்: என்ன? என்ன?

மிஸ்ரா: ஏன் கேட்கிறீர்கள் அந்த வயற்றெரிச்சலை, எனக்கும் வார்தாவுக்கும் சண்டை ஏற்பட்ட இரகசியம் என்ன தெரியுமோ? எல்லாம் நீங்கள் கேட்கிறது போல, என் மாகாண மக்களுக்கு நியாயம் வழங்கும்படி கேட்டதுதான்.

பெரியார்: என்ன கேட்டீர்கள்? ஏன் மறுத்தார்கள்?

மிஸ்ரா: விவரத்தைக் கேளுங்கள். ஓரிசா மாகாணம் பதியது. இதற்கென ஏற்பட்டுள்ள எல்லைக் கோடு சரியல்ல. அதனால் பலதொல்லை. எல்லையைத் திருத்தி அமைத்தால், மாகாணத்தின் செல்வநிலை விருத்தி அடையும்.

பெரியார்: ஓரிசாவுக்குச் சொந்தமாக ஏதேனும் இடம், இன்னமும் ஓரிசாவில் சேர்க்கப்படவில்லையோ?

மிஸ்ரா: ஆமாம்! ஜெம்ஷெட்பூர் பிரதேசம் இருக்கிறதே, அது பீகாருக்குச் செல்வமாக இருக்கிறது, ஆனால் இது பெருவாரியும் ஓரியாமக்களே உள்ள இடம், ஓரிசாவுக்கே சொந்தம், அதை பீகாரிலே சேர்த்து விட்டனர். அதை ஓரிசாவிலே சேர்க்க காங்கிரஸ் தீர்மானிக்க வேண்டுமென்று கெஞ்சினேன், வார்தா வரந்தர மறுத்துவிட்டது.

பெரியார்: ஏன்?

மிஸ்ரா: ஒருக்காலும் ஜெம்ஷெட்பூர் பிரதேசத்தை, பீகாரிலிருந்து பிரிக்கக்கூடாது என்று பாபு ராஜேந்திரபிரசாத் கூறிவிட்டார், வார்தாவிலே. பீகாருக்கு வருமானம்கெட்டுவிடும். அது பிரசாதுக்குப் பிடிக்கவில்லை. பிரசாதுக்குப் பிடிக்காதது காந்தியாருக்குப் பிடிக்கவில்லை. காந்தியாருக்குப் பிடிக்காதது காங்கிரசுக்குப் பிடிக்குமோ! ஆகவே எனக்கு வரம் இல்லை! இதுமட்டுமா? சிட்டகாங் பிரதேசமிருக்கிறதே, அங்கே பெருவாரியான மக்கள் ஓரியர்கள். ஆகவே அந்த இடமும் ஓரிசாவுடனே தான் இணைக்கப்பட்டாக வேண்டும். இதைச் செய்யுங்கள் என்று கேட்டோம் இதையும் மறுத்துவிட்டனர்.

பெரியார்: இதற்கு யார் தடை சொன்னது?

மிஸ்ரா: சுபாஷ் சந்திரபோஸ் இதைப் பலமாக எதிர்த்தார். சிட்டகாங், வங்காள மாகாணத்திலே இப்போது இருக்கிறது. அதை இழக்கமாட்டேன் என்று கூறிவிட்டார். அப்போது அவர் காந்தியாரின் செல்லப் பிள்ளைகளில் ஒருவராக இருந்தார். ஆகவே எனக்கு “இல்லை” தான் கிடைத்தது!

பெரியார்: போசுக்கு சிட்டகாங்மீது அவ்வளவு ஆசை பிறக்கக் காரணம் என்ன?

மிஸ்ரா: காரணமா? வங்களாத்திலே இந்துக்களும், முஸ்லீம்களும், இருக்கும் விதம் தெரியுமே உங்களுக்கு முஸ்லீம்கள் மெஜாரடி என்ற போதிலும் அதிகமான மெஜாரடியல்ல. 56% முஸ்லீம், 44% இந்து என்ற அளவு இருக்கும். சிட்டகாங், ஓரியர்கள் வாழும் இடம், இந்துப்பிரதேசம். இதை வங்கத்திலிருந்து பிரித்துவிட்டால், வங்கத்திலே முஸ்லீம்களே மிக மெஜாரடி! பஞ்சாபிலுள்ளது போன்றாகிவிடும். இந்து ஆதீக்கம் குறையும், எண்ணிக்கையும் குறையும், இது சுபாஷுக்கு இஷ்டமில்லை, சிட்டகாங் போய்விட்டால், வங்காளத்திலே, இந்துக்களின் ஆதிக்கம் ஏற்படவே முடியாது. வங்காளமோ ‘வந்தே மாதரம்’ பிறந்த இடம். எனவே வம்புக்கு நிற்கிறது முஸ்லீமுடன் சச்சரவிடுவதற்காக, இந்து எண்ணிக்கையை அதிகமாகக் காட்ட, சிட்டகாங்கைவட மறுக்கிறார்கள் வங்க இந்துத் தலைவர்கள்.

பெரியார்: இப்படியா இருக்கிறது? பிறகு உங்கள் மாகாணத்தின் கதிதான் என்ன?

மிஸ்ரா: இப்போது பூரி ஜகன்னாதர்தான்! எங்கள் கிளர்ச்சி வலுத்து ஓரியர்கள் பெருவாரியாக உள்ள இடம், ஓரிசாவுக்கு என்ற திட்டம் நிறைவேறினால் ஓரிசா மாகாணம் முன்னுக்கு வரமுடியும்.
***

மிகப்பழய, மிகச்சிறிய மாடிவீட்டிலே, இந்த சம்பாஷனை நடந்தது, சிலமாதங்களுக்கு முன் நமது ஆசிரியரும் உடனிருந்தார் அன்று. பண்டிட் கோதாவரி மிஸ்ரா, ஓரிசா மாகாண மந்தியாவதற்கு ஒருவாரத்திற்கு முன்பு நடந்த உரையாடல். அன்று ஓரிசாவின் நிலைமை விளக்கப்பட்டது போலவே ஒவ்வோர் மாகாணத்திலும், (சிந்து, எல்லைப்புறம் தவிர இந்தப் பிரிவினைக்கிளர்ச்சி சம்பந்தமாக பல நிபுனர்கள் இங்கும் இந்தக்கதிதான்! என்று முறையிட்டனர்.

பஞ்சாப்! இங்கு மக்கள் பஞ்சாபிகள், ஆனால் சூத்திரக்கயறு, வியாபாரம், ‘பாம்பே வாலாவிட்டம் இருக்கிறது. என்று லாகூரிலே ஒரு பிரபல வியாபாரி கூறினார். அவரும் வெளிமாகாணத்தாரே!

அசாமிலே ஒரு சிமிட்டிக் கம்பெனியின் ஆரம்ப விழா! அதை ஆதரிக்கும்படி வெளியிடப்பட்ட அறிக்கையிலே, கம்பெனியின் விசேஷ குணங்களை விளக்கியிருந்தது. கம்பெனியின் திறமையை விளக்குவதை விட, அசாமின் நிலைமை நன்குவிளங்கிற்று அந்த அறிக்கை மூலம்! இந்தக் கம்பெனியின் டைரக்டர்கள், மிக்கதிறமைசாலிகள். ஐந்துபேர் வங்களர்கள் இருவர் ஐரோப்பியர், என்று அறிக்கை தெரிவித்தது அசாமிய நாட்டுக்கம்பெனிக்கு வங்க, ஐரோப்பிய முதலாளிகள்!

பம்பாயில் ஒருபகுதி, மத்திய மாகாணத்திலே சில இடங்கள், ஆகியவற்றினைக் கொண்டு விதாபம் என்ற மாகாணத்தை அமைக்கவேண்டுமென்பது ஆனே அவர்களின் கருத்து. அதற்கான கிளர்ச்சியும் இருந்து வருகிறது.

பீகாரிலே, வெளிமாகாணத்தாரின் ஆதீக்கத்தையும் உயர்ந்த ஜாதிக்காரர் என்போரின் ஆளுகையை கிழித்து பீகாரின் பூர்வகுடிகளுக்கு உரிமை ஏற்பட பீகாரிலே அவர்களின் ஆட்சியை அமைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஆதிபாசி இயக்கம் இருக்கிறது. (ஆதிவாசி, பூர்வகுடிகள், என்பதன் ஆதிபாசி என்பது) இதனைப் பக்குவமாக நடத்திக் கொண்டு வருகிறார்கள்.

நாட்டிலே இன்றுள்ள உணர்ச்சியை, நாட்டின் பெரியகட்சி என்று பாத்யதை கொண்டாடும் காங்கரஸ்குறைக்கப் பார்க்கிறது என்ற போதிலும், பிரிவினை உரிமை, எனும் எண்ணம், எங்கும் தோன்றியுள்ளது. 'திராவிடநாடு' தனிநாடாக வேண்டுமென்ற நமது கிளர்ச்சி, இதிலே ஒருபகுதி.

பிரோஸ்தான் நூள். அலிகார் பல்கலைக்கழக மாணவர் கூட்டத்திலே பேசுகையில், இந்தியா.

1. எல்லைப்புறம், பலுசிஸ்தானம் பஞ்சாப்

2. வங்காளம், அசாம்

3. ம. மாகாணம், ஐக்யமாகாணம்

4. பம்பாய்

5. திராவிடநாடு (சென்னை)

என ஐந்து அரசுகளாகப் பிரித்து அமைக்கப்பட வேண்டும் என்று கூறியிருக்கிறார். வெளிநாட்டுப் படை எடுப்பு ஏற்பட்டால் என்ன செய்வதென்று பேசுவாரின் வாயை அடக்கவும் வழியொன்று கூறியிருக்கிறார் இந்த ஐந்து அரசுகளும் அனுப்பும் பிரதிகளை கொண்ட மத்தயசர்க்கார், பாதுகாப்பு, நாணயகர் முறை ஆகியவற்றை நடத்தி வரலாமென்றும் கூறியிருக்கிறார்.

நியூஜிலாந்து, ஆஸ்திரேலியா, தென் ஆப்ரிக்கா ஆய்வர்கள் தனி அரசுகளாக இருந்தார் சாத்யமாகி இருக்கிறதே இங்கு, ஐந்து அரசுகள் ஏற்படுவதிலே என்ன தவறு இருக்க முடியும் என்று கேட்கிறார். ஐம்பத்தாறு அரசுகள் இருந்தனவாம், இந்து ஆட்சிக் காலத்திலே, புராண இதிகாசாதிகளும், ஆரம்பகால கவிதைகளும் இதனை வலியுறுத்துகின்றன. ஐம்பத்தாறு அரசுகள் கொண்ட பூபாகத்திலே இன்று சர். நூன்

கூறும்விதமான ஐந்து அரசுகளும்கூட இருக்க ஐந்துத் தலைவர்கள் சம்மதிக்காதது விந்தைதான்! இதற்குக்காரணம் முன்னாளிலே இருந்த ஐம்பத்தாறு அரசுகளும் ஆரியக் கூடங்கள்! ஆகவே அந்தநிலை, பாரத மாதாவை வெட்டுவதாகத் தோன்றவில்லை. இப்போது தனி அரசுகள் ஏற்பட்டால், ஆரிய ஆதீக்கம் அழிந்தொழியும். எனவேதான், இன்று, தனி அரசுகள் அமையக் கூடாதென்று ஆர்ப்பரிக்கின்றனர்.

எவ்வளவு கடுமையான கூக்குரலைக் கிளப்பினாலுஞ் சரியே இந்தப்பிரிவினைக் கிளர்ச்சி அடங்காது. வேரூன்றி விட்டது. முறைகள், திட்டங்கள், பலப்பல வெளியிடப் படக்கூடும். சர். நூன் கூறும் மத்திய அரசு என்பதை, இந்திய நேசநாடுகளின் கூட்டு அமைப்புக் கழகம் என்ற அளவிலே மட்டுமே நாம் ஏற்றுக் கொள்கிறோம். திட்டங்களிலே பலவிதம் விவாதக்கப்படுவது சகஜமே. ஆனால் அடிப்படையான கோட்பாடு. இனிமாய்க்க முடியாததாகி விட்டதைக் இவர்கள் உணர மறுப்பது ஏனோ! யார் மறத்தாலும் இந்த கிளர்ச்சி அடங்கிவிடப் போவதில்லை. அறிவாளிகளின் இந்தக் கிளர்ச்சி பற்றி அலட்சியமாக இருந்துவிட முடியாது. “காகிஸ்தான் பிரிட்டிஷாரால் தரமுடியாது முஸ்லீம்கள் அடையவும் முடியாது” என்று முப்புரிதரித்த முதியோர் ராமஸ்வாமி சாஸ்திரியார் கூறுகிறார். காலப்போக்கையும் கருத்து கிளரிச் சியையும் உணர மறுக்கும் உன்னதமான உரிமையை அவர் பெற்றிருக்கிறார் போலும்! பலபல ஆண்டுகளுக்கு முன்பு “எதிரி எப்படி வருவான் எடுத்துவீச துளசியை எங்கும்” என்று கூறினாராமே தஞ்சை மன்னனுக்கு ஒரு கனபாடி, அந்த வாழையடிவாழையாக வந்த திவான்பகதூருக்கு இத்தகைய உரிமை நிச்சயம் உண்டு! கிடக்கட்டும், இத்தகைய விழியிருந்தும் வழிதெரியாத வித்தகர்கள் ஒருபுறம்!

சர். நூன் போன்றாருக்கு நாம் நமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறோம். வைசிராய் நிர்வாகசபை மெம்பரும், இஸ்லாமிய உலகின் மணிகளில் ஒருவரும், சிலமாதங்களுக்கு முன்புவரை. இலண்டனிலே உயர்பதவியிலிருந்தவருமான சர். நூன், உலகநிலை, மக்கள் மனநிலை, சர்க்காரின் போக்கு ஆகியவற்றினை நன்கு உணர்ந்தவர். எனவே, அவர், ‘திராவிடநாடு’ தனிநாடாக அமைதல் வேண்டும் என்று குறிப்பிட்டது, மகிழ்ச்சிக்குரியது. இத்தகைய அறிவாளிகளின் உள்ளதை வென்ற திட்டங்கள் வெற்றிபெறுவது உறுதி என்று கூறவும் வேண்டுமா!

டாக்டர் அம்பேத்கார் சென்றவாரத்திலே தமது சொற்பொழிவிலே எடுத்துக்காட்டியுள்ளபடி, நமது கிளர்ச்சிக்குரல், வெளிநாடுகளிலும் கேட்குமாறு செய்யவேண்டும். எந்தத் திட்டம் வந்தாலும், எத்தனை அரசுகள் அமைக்கப்பட்டாலும், இயற்கை, சரிதம், இனப்பண்பு, இலக்கியம், இன்றைய நிலைமை முதலிய எந்த ஆதாரதைக்கொண்டு அரசுகள் அமைப்பதானாலும், நர்மதை ஆற்றங்கரையிலிருந்து கன்னியாகுமாரி வரையிலே “திராவடநாடு’ அமைக்கவேண்டும் என்பதே நமது கோரிக்கை.

(திராவிடநாடு - 30.8.1942)

நன்றி

இக்கட்டுரைகள் வெளியான
விடுதலை, திராவிட நாடு இதழ்கள்
tamildigitallibrary.in